

# கருகலான சத்தியம்

## Part-2


Rev. Dr. A. சேவியர் B.Sc.M.A(Theo).D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)


faith brings success / விசுவாசம் வெற்றியைத் தரும்

# கருகலான சத்தியம்

## (பாகம் 2)


ஆசிரியர்

Rev. Dr. A. சேவியர் B.Sc., M.A, (Theology), D.D.

(சுவிசேஷகர், போதகர், எழுத்தாளர்)



2016

வெளியீடு

"கடைசிகால விடுதலை ஊழியம் டிரஸ்ட்"

எண். 3, 27வது தெரு, சிவசக்தி நகர்,

சி-பிரிவு, அண்ணனூர், சென்னை - 600 109.

போன்: 044-26375758, 26841363

செல் : 9444979822, 9444873848, 9444184648

facebook:- endtimedeliveranceministry; youtube:- endtimetrust

www.endtimedeliverance.com; e-mail:-info@deliverance.com

**கருகலான சத்தியம்**

**பாகம் 2**

First Edition : 2016
Total Copies : 1000
Book Serial No : 09/11

**Copy right :**

End Time Deliverance Ministry Trust

காணிக்கை : ₹ 100/-

**Printed by :**

**Saravan Printers**

New 91, Old 44, V.M. Street (Near BSNL Quarters)
Royapettah, Chennai - 600 014.
Email : saravanprinters@gmail.com

# முன்னுரை

**விசுவாசம் வெற்றியைத் தரும்**

**அடியேனுக்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்ட இந்த கருகலான சத்தியங்கள், வாசிக்கும் அனைவருக்கும் பிரயோஜனமாயிருந்து, வருகைக்கு ஆயத்தப்பட வாஞ்சிக்கிறேன். நான் விரும்புகிறதற்கும், வேண்டிக் கொள்கிறதற்கும் மேலாய் செய்கிற தேவன் இவரன்றோ!**

*வாசியுங்கள் ! விசுவாசியுங்கள் !*
*ஆசீர்வாதம் பெறுங்கள் !*
*இயேசு சீக்கிரம் வருகிறார் !*
*ஆயத்தமாவோம் !! ஆயத்தமாக்குவோம் !!!*

சென்னை.
பிப்ரவரி 2016

**– ஆசிரியர்**

**குறிப்பு :**

இது குறித்து எந்த சந்தேகமோ, கேள்வியோ இருந்தால், தயவுசெய்து ஆசிரியரிடம் எப்போதும் கேட்கலாம்; அவர் நடத்தும் கூட்டங்களில் கேள்விகளோடு வரலாம்; மாத இதழுக்கும் எழுதி அனுப்பலாம்.

# பொருளடக்கம்

## பாகம் - 2


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | அண்ணகர்களுக்கு சபையில் மரியாதை கொடுக்கலாமா? | 34 |
| 2. | "அந்நிய பாஷை" குழப்பங்கள் | 102 |
| 3. | அந்திகிறிஸ்து எங்கிருந்து வருவான்? | 153 |
| 4. | அந்திக்கிறிஸ்து காலத்தில் இரட்சிப்பு உண்டா? | 161 |
| 5. | அதிசயங்களும் அடையாளங்களும் ஏன் நடக்கவில்லை? | 182 |
| 6. | அந்நிய பாஷை எப்போது ஓய்ந்துபோம்? | 205 |
| 7. | அக்கினியால் உலகம் அழியுமா? அப்போது என்னென்ன நடக்கும்? | 287 |
| 8. | ஆவியானவர் டிக்டேட் பண்ணி எழுதப்பட்டதுதான் வேதமா? | 143 |
| 9. | ஆவியும் ஆத்மாவும் அழியுமா? | 26 |
| 10. | ஆறாவது அறிவைக் கொடுக்கும் அவயம் எது? | 52 |
| 11. | ஆவிக்குரிய சபையில் சேராதவர்களின் நிலை என்ன? | 167 |
| 12. | ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும் எதற்கு? | 203 |
| 13. | ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் எப்போது? | 281 |
| 14. | இயேசுவை கொல்ல கற்களை தூக்கியது ஏன்? | 150 |
| 15. | இயேசுவின் வருகை மொத்தம் இரண்டா? மூன்றா? | 123 |
| 16. | இயேசுவின் நாமத்தில் பவுலும் பேதுருவும் ஞானஸ்நானம் கொடுத்தார்களா? | 67 |
| 17. | இயேசு உயிர்த்தது எப்போது? எப்படி? எந்த நாள்? | 87 |
| 18. | இயேசுகிறிஸ்து எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்? | 114 |
| 19. | இரட்சிக்கப்படாமல் மரித்தவர்களுக்கு மறுபடியும் இரட்சிப்பு உண்டா? | 137 |
| 20. | "இடிக்கப்பட்டுப் போகும்" என்று இயேசு சொன்ன தேவாலயம் எது? | 156 |
| 21. | இயேசு சிருஷ்டிக்கப்பட்டவரா? | 159 |
| 22. | இடுக்கமான வாசல் எது? எப்படி உட்பிரவேசிப்பது? | 172 |
| 23. | இயேசு அந்நிய பாஷை பேசினாரா? | 213 |
| 24. | இயேசு தன்னை தேவனென்று சொன்னாரா? | 225 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 25. | இயேசு மாம்ச சரீரத்தோடு பூமிக்கு வருவாரா? | 237 |
| 26. | இஸ்ரேலருக்கு தேவன் ராஜ்யத்தை கொடுத்துவிட்டாரா? | 249 |
| 27. | இரட்சிப்பும் மீட்பும் | 270 |
| 28. | உத்தரிக்கிற ஸ்தலம் உண்டா? | 9 |
| 29. | உலகிலுள்ள எல்லா சபைகளிலிருந்தும் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்களா? | 56 |
| 30. | உயிர்த்தெழுதலும் மறுரூபமாதலும் பாவிகளுக்கு உண்டா? | 83 |
| 31. | எது மீதமான சபை? | 100 |
| 32. | எதை நிலை நிறுத்த எதை நீக்கிப் போட்டார்? | 240 |
| 33. | ஒரே நேரத்தில் / ஒரே காரியத்தில் / ஒரே வசனத்தில் → ஒரே தேவன் ← இருவராய் / மூவராய் | 147 |
| 34. | ஓய்வு என்பது வேறு; ஓய்வுநாள் என்பது வேறு | 95 |
| 35. | "கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்" – இது சரியா? | 141 |
| 36. | காயீனுக்கு மணவாட்டி எங்கிருந்து வந்தாள்? | 117 |
| 37. | கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி என்ன? | 273 |
| 38. | கிறிஸ்தவ சபை பற்றிய தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டில் உண்டா? | 276 |
| 39. | கிறிஸ்தவ சபைதான் மணவாட்டியா? | 278 |
| 40. | குழந்தை பிறப்பது ஆசீர்வாதமா? பிறக்காதது சாபமா? | 228 |
| 41. | கொல்லுகிற எழுத்து எது? உயிர்ப்பிக்கிற ஆவி எது? | 291 |
| 42. | சிறைச்சாலைக்காரரின் குழந்தைகளும், செங்கடலைக் கடந்த குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றார்களா? | 92 |
| 43. | சைவமும் வைணமும் கிறிஸ்தவமா? | 297 |
| 44. | சேஷ்ட புத்திரபாகம் உண்டா? | 19 |
| 45. | ஜென்ம சுபாவமும் ஜென்ம பாவமும் | 22 |
| 46. | ஜெயம் தருவது ஜெபமா? விசுவாசமா? | 252 |
| 47. | தசமபாகம் கொடுப்பது நியாயப்பிரமாண கிரியையா? | 72 |
| 48. | தாவீது ஜெபித்தது சரியா? | 268 |
| 49. | திறப்பின் வாசலும் திறந்த வாசலும் | 265 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 50. | திரித்துவமா? திரியேகமா? | 242 |
| 51. | திரித்துவம் உண்டா? அது எப்படி இருக்கிறது? | 244 |
| 52. | தீராத வியாதியோடு ஊழியம் செய்யலாமா? | 48 |
| 53. | தேவன் நம்மைவிட்டு எப்போது விலகுவார்? | 134 |
| 54. | தேவன் நம்மோடா? நமக்குள்ளா? | 110 |
| 55. | தேவதூதர்கள் உடலுறவு கொண்டார்களா? | 119 |
| 56. | தேவனின் நாமத்தை தரித்துக் கொள்வது எப்படி? | 129 |
| 57. | நம் கண்ணீர் பரலோகத்தில்தான் துடைக்கப்படுமா? | 132 |
| 58. | நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துவது எப்படி? | 17 |
| 59. | நியாயப்பிரமாணம் ஒன்றா? இரண்டா? | 31 |
| 60. | நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது? | 221 |
| 61. | நித்திய சுவிசேஷமும் ராஜ்யத்தின் சுவிசேஷமும் ஒன்றா? | 207 |
| 62. | நித்திய ஜீவன் இயேசுவில்தான் உண்டு என்பதற்கு சாட்சிகள் உண்டா? | 220 |
| 63. | நோவா, ஆபிரகாம் போன்றோரின் பலி எதற்கு? | 304 |
| 64. | பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும் ஒன்றா? | 175 |
| 65. | பழைய ஏற்பாட்டு நம்பிக்கையும், புதிய ஏற்பாட்டு நம்பிக்கையும் வேறு வேறா? | 10 |
| 66. | பரலோகத்திற்கு ஏறினவர் யார்? | 186 |
| 67. | பரலோகிலுள்ளவைகள் நம்மோடு இணைந்து ஊழியமா? | 200 |
| 68. | பாவம் செய்தால், வரமும் வல்லமையும் அதிகாரமும் இல்லாமல் போகுமா? | 64 |
| 69. | பாபிலோன் அழிந்ததா? அழியுமா? | 189 |
| 70. | பாதாளத்திலுள்ள ஆவிகளுக்கு இயேசு பிரசங்கித்தாரா? | 232 |
| 71. | பின்மாரி ஊற்றப்போவது எப்போது? | 180 |
| 72. | பின்மாரி இனிமேல்தான் சபையில் ஊற்றப்படுமா? | 285 |
| 73. | பிர. 1:5 – விஞ்ஞானத்திற்கு விரோதமா? | 46 |
| 74. | பிதாவின் சித்தம் என்ன? | 164 |
| 75. | பின்னிட்டு விழும் கலாச்சாரம்... ஜாக்கிரதை! | 300 |

| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 76. | புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் குறைவுள்ளதா? | 192 |
| 77. | பூமியானது அழியுமா? நிலைத்திருக்குமா? | 89 |
| 78. | பெரிய ஓய்வு நாள் எது? | 80 |
| 79. | பெயர்க் கிறிஸ்தவ சபைகளிலும் தீர்க்கதரிசனம் உண்டா? | 125 |
| 80. | மன்னிக்கும் அதிகாரம் நமக்குண்டா? | 294 |
| 81. | மனுஷகுமாரனுடைய அடையாளம் என்ன? | 42 |
| 82. | மனுஷகுமாரன் வரும்போது வானில் காணும் அடையாளங்கள் | 195 |
| 83. | முதலில் பரீட்சையா? இல்லை பாடமா? | 37 |
| 84. | மோசேக்குமுன் நியாயப்பிரமாணம் இருந்ததா? | 258 |
| 85. | யாருக்கு முன்னால் முழங்காற்படியிட வேண்டும்? | 14 |
| 86. | யோவான் ஸ்நானன் கொடுத்த ஞானஸ்நானமும்,<br>நாம் பெற்ற ஞானஸ்நானமும் ஒன்றா? | 61 |
| 87. | யோசுவாவின் நாட்களில் 24 மணி நேரமா கூடியது? | 211 |
| 88. | விசுவாசம் வெளிப்பட வேண்டுமா? எப்படி? | 170 |
| 89. | விசுவாசமா? கிரியையா? எது தேவை? | 216 |
| 90. | வேதம் சொல்லும் கலப்புத் திருமணம் | 261 |
| 91. | லூசிபர் நரகத்தில் தள்ளப்பட்டாயிற்றா? | 76 |
| 92. | 3ம் ஆபத்து எப்போது நடக்கும்? என்ன நடக்கும்? | 256 |

# பாகம் - 2

## ‘உத்தரிக்கிற ஸ்தலம்” (PURGATORY) உண்டா?

வேதத்தில் பரலோகம், பரதீசு, நரகம், பாதளம் என்று தான் உள்ளது. மற்றப்படி “உத்தரிக்கிற ஸ்தலம்” என்று எங்குமே இல்லை. வேதத்திலே எழுதப்பட்ட மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, முழுக்கு ஞானஸ்நானம், பரிசுத்த ஆவி பெறுதல் போன்ற அடிப்படை - மூல உபதேசத்தை (எபி.1,2) கைக் கொள்ளாமல், வேதத்தில் சொல்லப்படாத “உத்தரிக்கிற ஸ்தலம்” என்று ஒன்றை நம்பி, மாயையை ரோமன் கத்தோலிக்க சபையார் போதிக்கிறார்கள். வெளி.22:18, 19 வசனங்கள் இவர்களுக்கு எச்சரிப்பு. அற்பபாவம் செய்தவர்களை மரித்த பின் தற்காலிக ஆக்கினை உடைய உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு அனுப்பி, அங்கிருந்து ஒரு நாள் மோட்சம் கொண்டு செல்வாராம் தேவன். வேதத்திலே 1 யோ.5:16ன் படி இரண்டே பாவங்கள் தான் உள்ளன. இரண்டாம் மரணமாகிய நரகத்திற்கு ஏதுவான பாவம்; நரகத்திற்கு ஏதுவல்லாத பாவம். யார் நரகத்திற்குரியவர்கள்? ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டதாக காணப்படாதவர்கள் தான் (வெளி.20:15). யாருக்கு ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்படும்? இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்றும் இரட்சகர் என்றம் ஏற்றுக் கொண்டவர்களுக்குத்தான். இவர்கள் ஏற்றுக் கொள்ளச் செய்ய வழி நடத்துபவர் ஆவியானவர் (யோ. 16:8,9). இப்படி நடத்துகிற ஆவியானவருக்கு விரோதமான பாவம் தான் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படாது (மத்.12:32); மற்ற எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும். ஆக, அற்ப பாவம் என்றோ, அது மன்னிக்கப்படாத நிலையிலோ ஏதுமில்லை. சகல பாவங்களையும் நிவர்த்தி செய்த கிருபாதார பலி அவரே! எனவே மரித்த - இரட்சிக்கப்பட்டு, ஜீவபுஸ்தகத்தில் பெயருள்ள எந்த ஆத்மாவும் பரதீசக்குத்தான் போகுமே ஒழிய உத்தரிக்கிற ஸ்தலத்திற்கு போவதே இல்லை; அப்படி ஒரு ஸ்தலமும் இல்லவே இல்லை. இயேசுவோடு சிலுவையில் தொங்கி இரட்சிப்பை பெற்றுக் கொண்ட கள்ளனும், பரதீசுக்குத் தானே செல்வான் என்று இயேசு சொன்னார் (லூக்.23:43).

உத்தரிக்கிற ஸ்தலத்தில் உள்ள ஆத்மாக்களுக்காக விசேஷ MASS பண்ணுகிறார்களாம்; அது அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிற தாம்; இதை அந்த ஆத்மாக்களே வந்து சொன்னார்களாம். இது வேடிக்கையாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவைத் தவிர மரித்த பின் ஒருவனும் உலகிற்கு வந்து காட்சி

கொடுக்கவில்லை மரித்த யாருடைய கல்லறையும் இன்று வரை திறக்கப்படவுமில்லை; இயேசு உயிர்த்த போது எருசலேம் கல்லறையிலிருந்து சில பரிசுத்தவான்களின் கல்லறை திறக்கப்பட்டு வெளியே வந்து காட்சி கொடுத்தார்கள். வேறு எவரும் இதுவரை காட்சி அளிக்கவும் இல்லை. உத்தரிக்கிற ஆத்மாக்களுக்கான ஜெபத்தை அன்னை பாத்திமா, காட்சியில் கற்றுத் தந்தாராம்! யார் அந்த பாத்திமா? காட்சிகளை நம்பி கர்த்தரின் வசனத்தை அறியாமல் போகிறார்கள்! வேதத்துக்கு விரோதமாய் இப்படி காட்சிகள் தருவதெல்லாம் பிசாசின் கிரியைகள். சாமுவேலின் ஆவியை அஞ்சனக்காரி எழுப்பினாள் என்று இன்றும் நம்பும் பெந்தகொஸ்தேகாரர்கள் இருக்கும் போது, வேதமறியா கத்தோலிக்கர் இப்படி இருப்பது ஆச்சரியம் இல்லையே! இவர்களுடைய ஜெபத்தாலும், பூசைகளாலும், மரித்த ஆத்மாக்கள் ஆறுதல் பெறுவதும், இயேசு, மோட்சத்திற்கு கொண்டு போகவும் கூடுமானால், "அவனவன் செய்த கிரியைகளுக்கேற்ற பலன் என்னோடு கூட வருகிறது" (வெளி.22:12) என்ற வசனம் பொய்யல்லவா! எபி.9:27 தேவையில்லை அல்லவா! சிந்தியுங்கள். நாமும் இவர்கள் நினைக்கும் அற்ப பாவங்களை செய்து விட்டு, மன்னிப்பு பெறாமல் மரித்து, நமது உறவினர்களை ஜெபம் செய்யச் சொல்லி பரலோகம் போய் விடலாமே! அப்படி ஒரு நிலை இருக்குமானால், பைபிள் தவறு? இயேசுவின் இரத்தம் எதற்கு? சபை, ஆராதனை எதற்கு? சாட்சி வாழ்க்கை எதற்கு? சிந்தியுங்கள்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வசனமே உனக்கு ஜீவன். வசன ஆதாரமில்லாத எந்த சொல்லும், செயலும் விசனமானது; அது பிசாசின் செயல். வானத்திலிருந்து இறங்கி தேவ தூதனே சொன்னாலும் நம்பக் கூடாது. (கலா.1). இப்படிப்பட்ட எண்ணம் எல்லோருக்கும் வர ஜெபிப்போம்! விசேஷமாய் அடிப்படை மூல உபதேசமில்லாத ரோமன் கத்தோலிக்கரின் பாரம்பரியம், ஹீரோயிசம் மாற ஜெபிப்போம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## பழைய ஏற்பாட்டு நம்பிக்கையும், புதிய ஏற்பாட்டு நம்பிக்கையும் வேறு வேறா?

தேவ பிள்ளையே! இன்றைக்கு கள்ள உபதேசங்கள் பரவி கர்த்தரின் வார்த்தைகள் கெடுக்கப்படுகின்றன. ஏமாந்தவர்கள் இருக்கும் வரை, ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்றிக் கொண்டுதான் இருப்பார்கள். கடைசி நாட்களில்

இப்படி நடக்கும் என்று மத்.24ல் 2015 ஆண்டுகளுக்கு முன்பே சொல்ல வில்லையா? பழைய ஏற்பாட்டு மக்களுக்கும், புதிய ஏற்பாட்டு மக்களுக்கும் தேவன் ஒருவரே! அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் (எபி.13:8; சங்.110:1-3; 45:6; 1 சாமு.15:29). அவருடையநோக்க மெல்லாம் பக்தியுள்ள சந்ததியை உருவாக்குவது தான் (மல்.2:15). அந்த சித்தத்தை நிறைவேற்ற வேண்டி, மனிதர்களின் இருதயக் கடினத்தினிமித்தம், விட்டுக்கொடுத்து, விட்டுக் கொடுத்து ஆதிகாலம் முதல் அறியாமையின் காலம், மனச்சாட்சியின் காலம், பழைய ஏற்பாட்டுக் காலம், புதிய ஏற்பாட்டு காலம் என்றெல்லாம் செயலாற்றிக் கொண்டு வருகிறார். அவர் நினைத்தால் ஒரே நொடியில் இந்தப் பாவ பூமியையும், பாவிகளையும் ஒழித்திருக்கலாம். அவர் அன்புள்ள தேவன், தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோ.4:8). இந்த தேவன், பூர்வ காலம் முதல் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், பிதாக்களுக்கு தீர்க்க தரிசிகள் மூலமாய் திருவுளம் பற்றினவர், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் திருவுளம் பற்றினார் (எபி.1:1,2). அப்படியிருக்க, பழைய ஏற்பாட்டு போதனையின் நம்பிக்கையும், விசுவாசமும், அதற்கு முன்னுள்ள போதனையின் நம்பிக்கையும், புதிய ஏற்பாட்டுப் போதனையின் நம்பிக்கையும் விசுவாசமும், வேறு வேறாய் இருக்குமா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

எபி.11ல் சொல்லப்பட்ட ஆபேல் முதலான விசுவாசிகளின் பட்டியலைப்பாருங்கள். விசுவாசம் - நம்பிக்கை என்பது எபி.11:1-3ன்படி ஆதி முதல் தேவனின் பார்வையில் ஒன்று தான். அந்த தேவன் தரும் விசுவாசத்தில் - நம்பிக்கையில் நற்சாட்சி பெற்றவர்கள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவை - மேசியா மூலமாய் வரும் விசேஷித்த நன்மைகளை - அடையாமற் போனார்கள்; அவ்வளவுதான். நாமோ, அதே விசுவாசத்தினாலே அவைகளை அடைந்திருக்கிறோம். அனுபவிக்கிறோம். அல்லேலூயா! (எபி.11:39;40). ஆக, விசுவாசம் - நம்பிக்கை என்பது அனைவருக்கும் ஒன்றுதான் என அறிகிறோம். அந்த விசுவாசத்தை துவக்கி நடத்துகிற இயேசுவை நோக்கி தொடர்ந்து ஓட வேண்டும் என்று எபி.12:1 சொல்கின்றது.

பழைய ஏற்பாட்டு நம்பிக்கையும், புதிய ஏற்பாட்டு நம்பிக்கையும் வேறு வேறு என்பதற்கு - சில போதகர்கள் கொடுக்கும் வசனம் மத்.9:16, 17 ஆகும். "புதிய ஏற்பாடு புதிய கோடித்துண்டாம்; புது திராட்சை ரசமாம், பழைய ஏற்பாடு பழைய வஸ்திரமாம் (துண்டாம்); பழந்துருத்தியாம், இரண்டையும் இணைக்கக்கூடாதாம்; பழைய ஏற்பாட்டு நம்பிக்கை - விசுவாசம் என்பது

வேறாம்; புதிய ஏற்பாட்டு நம்பிக்கை - விசுவாசம் என்பது வேறாம்" - இது அவர்களின் விளக்கம். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இயேசு வாழ்ந்த காலம் பழைய ஏற்பாட்டுக்காலம்; அப்போது அவர் புது உடன்படிக்கையை உருவாக்கவில்லை (மத்.26:28). அவரின் மரணத்தின் போதுதான் புதிய உடன்படிக்கை - புதிய ஏற்பாடு - உருவானது. அப்படியிருக்க, அவர் பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயே இப்படிச் சொல்லியிருப்பாரா? சிந்தியுங்கள்.

இயேசுகிறிஸ்து தமது ஊழியக் காலத்தில் ஒரு போதும் பழைய ஏற்பாட்டு நம்பிக்கையை - முறைமைகளை - குறைத்துப் பேசவோ, குலைத்துப்போடவோ இல்லை.அவைகளை அழிக்கிறதற்கு அல்ல; நிறை வேற்றவே வந்தேன் என்றும் சொன்னவராயிற்றே! (மத்.5:17). பழைய ஏற்பாட்டு நம்பிக்கைகளை - முறைமைகளை - விசுவாசத்தை. அவர் எதிர்த்துப் பேசியிருந்தால், அவரை சிலுவையில் அறைந்தது சரிதானே! சீனாய் மலையிலே மோசே மூலம் கொடுத்த 10 கற்பனை களடங்கிய நியாயப் பிரமாணத்தின் நம்பிக்கைக்கு விரோதமாய், அதைக் கொடுத்த அவரே (அப்.7:53, 38; கலா.3:19; யாக்.4:12) புதிய ஏற்பாட்டு புது விசுவாசம் - நம்பிக்கை என்று மாறாய் பேசியிருந்தால் இது மாபெரும் தவறல்லவா! நம்தேவன் பரிசுத்தரல்லவா! அவரின் 31/2 ஆண்டு போதனைகளை வாசித்தால், பழைய ஏற்பாட்டு பிரமாணங்களை விட இன்னும் அதிகமான, மேன்மையான கருத்துக்களைத் தான் நமக்குச் சொல்லியிருக்கிறார் என அறியலாம். மத்.28:20; யூதா 17; ரோ.6:17 போன்ற வசனங்களின் படி இயேசுவின் உபதேசத்தையும், அப்போஸ்தலருடைய உபதேசத்தையும் நம்பிக்கையாய்க் கொண்டதே புதிய ஏற்பாடு. இந்த நம்பிக்கை, பழைய ஏற்பாட்டு நம்பிக்கையோடு இசைந்தது; ஆனால் அதிலும் மேலானது. பழைய ஏற்பாட்டு பிரமாணங்களை, தேவன் விரும்பும் நம்பிக்கையோடு - விசுவாசத்தோடு கைக்கொள்ளாமல் , சட்டப்படி செய்ததைததான். பழைய ஏற்பாட்டிலும் தேவன் கண்டித்தார். இயேசுவும் கண்டித்தார். அவர்களும் மேசியாவுக்காக - பரலோகிற்காக - பரிசுத்தத்திற்காக - செழிப்பான வாழ்வுக்காகத்தானே நம்பி செயல்பட விரும்பினார்கள்! ஆனால், அவர்களுடைய கிரியைகள் விசுவாசத்திற்கடுத்ததாய் இல்லை. சிந்தியுங்கள்.

அப்படியானால் மத்.9:16, 17ன் அர்த்த மென்ன? லூக்.5:36ஐ வாசித்தால் இது உவமை என்று புரியும். உவமையை தேவன் சொல்லும்போது அதற்கு முன்னும் பின்னும் உள்ள வசனங்களையும், அதற்கு ஈடான ஜோடி வசனத்தையும் வாசித்து தியானித்துத்தான் சரியான கருத்துக்கு வரவேண்டும். ஆயக்காரரோடும் பாவிகளோடும் இயேசு

பந்தியிருக்கிறதைக் கண்டு வேத பாரகரும், பரிசேயரும் அவரிடம் கேள்வி கேட்கிறார்கள்; இயேசு பதில் கூறின உடனே, இயேசுவின் சீஷர்கள், யோவான் ஸ்நானன் மற்றும் பரிசேயரின் சீஷர்களைப் போல உபவாசம் இருப்பதில்லையே என்றும் கேள்வி கேட்கிறார்கள்.. அதற்கும் பதில் கூறின உடனே இயேசு அவர்களுக்கு இந்த உவமையைச் சொல்கிறார். ஆக, இந்த உவமையின் விளக்கம் மேற்கண்ட இரண்டு கேள்விகளுக்குமே பொருந்தும என்று நிதானிக்கலாம்.

**ஒரு அர்த்தம் :-** இரட்சிக்கப்பட்ட பாவிகள் - புதுசிருஷ்டியானவர்கள் (2 கொரி.5:17, 18; எபே. 4:23, 24; கொலோ.310) பரிசுத்தமானவர்களோடு தான் இணைய வேண்டும். பாவிகளோடு இணையக்கூடாது. (சங்.1:1:2) இணைந்தால், பழைய பாவி - அதாவது புதுசிருஷ்டி - கெட்டுப்போக வாய்ப்புண்டு; அல்லாமலும், சில நேரங்களில் புதியவர்களைக் கண்டு பாவிகளும் பின்னிட்டு ஓடிப் போக வழியுண்டு. அதுபோல, புதிய துண்டை பழைய துண்டோடும், புதிய திராட்சை ரசத்தை பழைய துருத்தியோடும் சேர்க்கக் கூடாது.

**இன்னொரு அர்த்தம்:-** யோவான் ஸ்நானன் மற்றும் பரிசேயரின் சீஷர்கள் பாரம்பரியமாய் உபவாசிக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டதற்கு மிகவும் அதிகமாய், பிரமாணக்கிரியை களினாலே நீதி உண்டாகும் என்றெண்ணி. அடிப்படை விசுவாசம் இல்லாமல் செயல்படுகிறார்கள்; தாங்களின் இந்தக் கிரியையை எல்லோரும் கைக் கொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். இந்தப் பாரம்பரியமாகிய பழைய துண்டோடு, தேவன் விரும்பும் விசுவாசப் பரிசுத்தர்கள் (புது சிருஷ்டிகள் - புதுத்துண்டுகள்) இணையக் கூடாது. இந்த பழைய துருத்தியோடு, புது திராட்சை ரசத்தை வைக்கக்கூடாது. வைத்தால் புதியவர்கள் பின்மாற்றமடைய - சிதறிப்போக - வீணாய் போக வாய்ப்புண்டு மட்டுமல்ல... புதியவர்களின் திடமான நடக்கையால், பழையவர்கள் ஓடிப் போகவும் - இழந்து போகவும் - வாய்ப்புண்டு.

இந்த உவமானத்தால், இரட்சிக்கப்பட்ட பாவிகள். பழைய பாவிகளோடு சேரவே கூடாது என்று அர்த்தம் அல்ல; ஐக்கியம்தான் கூடவே கூடாது (no communication). "எங்களுடைய ஐக்கியம். பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" (1 யோ 1:3) என்ற யோவானின் அறிக்கை வேண்டும். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பழைய ஏற்பாட்டின் (யூதர்களின்) நம்பிக்கையை இயேசு கண்டிக்கவில்லை; மாற்றவில்லை. "பாரம்பரியத்தினாலே தேவனுடைய

கற்பனைகளை அவமாக்கக்கூடாது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் ஆராதனை செய்யக்கூடாது" மத்.15;3,9) என்றுதான் இயேசு கண்டிக்கிறார். ஆதி முதல் - நியாயப் பிரமாணமுள்ள யூதர்கள் முதல் நியாயப்பிரமாணமில்லாத கிறிஸ்தவர்கள் வரை, தேவன் துவக்கிய, நடத்திக் கொண்டிருக்கிற நம்பிக்கை - விசுவாச - ஓட்டம் ஒன்றே ஒன்றுதான். யூதர்களுக்கு கொடுக்கப்பட்ட வார்த்தைகளின் நம்பிக்கையும், கிறிஸ்தவர்களுக்கு கொடுக்கப்பட்ட வார்த்தைகளின் நம்பிக்கையும் அடிப்படையில் ஒன்றுதான்; வேறு வேறல்ல. பிரமாணங்கள் - கிரியைகள் - முறைமைகள் மட்டுமே வேறு வேறு.

❖ ❖ ❖

## யாருக்கு முன்னால் முழங்காற்படியிட வேண்டும்?

சென்னை மாநகரில், பாஸ்டர். சுந்தரம் என்ற பெரிய பாஸ்டர் இருந்தார். எந்த ஒரு ஊழியக்காரரையும் அவர் கணிப்பது எப்படி தெரியுமா? அந்த ஊழியக்காரரின் முட்டி எந்த அளவிற்கு காய்ப்புக் காய்த்திருக்கிறது என்பதைக் பொறுத்துத் தான். ஆக, தேவனுக்கு முன்பாக முழங்காற் படியிடுதல் மிகவும் இன்றியமையாததாய்த் தெரிகிறது. ஆனால் இன்றைக்கு பல விசுவாசிகள், போதகர்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும், அற்புதம் செய்கிறேன் என்று சொல்வோருக்கும், பிசாசுகளை விரட்டுவோருக்கும் முன்பாக முழங்காற்படியிடுகிறார்கள்; அப்படிப்பட்ட ஊழியர்களும், விசுவாசிகளை தங்களுக்கு முன்பாக முழங்காற்படியிடச் சொல்லி, தாங்கள் மட்டும் நின்று கொண்டே ஜெபிக்கிறார்கள். இப்படிச் செய்கிறது சரிதானா? ஆவியானவர் தாமே விளக்குவாராக!

**ஒரு போதகர் இப்படியாய் செய்தி கொடுத்தாராம்:-** "நீ ஊழியக்காரனாய் இருந்தால், உலகிலுள்ள அத்தனை கலெக்டர்களும், மந்திரிகளும் பணக்காரர்களும், பெரியவர்களும் உனக்கு முன் முழங்காற் படியிடுவர்; அந்த அளவிற்கு நீ உயர்ந்திருக்கிறாய்" என்று. முழங்கால் யாவும் தேவனுக்கு முன்பாய் முடங்கும் என்று வேதம் சொல்லியிருக்க (ரோ.14:11; பிலி.2:10) ஊழியக்காரர்கள் முன் முடங்குமா? அப்படி முடங்கத்தான் வேண்டுமா? மாம்சத்தில் வெளிப்பட்ட கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாக, போர்ச் சேவகன், குஷ்டரோகி, சந்திரரோகம் பிடித்தவனின் தந்தை, பொருளாசை நிறைந்த வாலிபன், போன்ற பலர் முழங்காற்படியிட்டனர் (மத்.17:14; 27:29; மாற்.1:40; 10:17). இயேசுவின் சாயலுக் கொப்பாய் நாம்

மாற வேண்டும் என்பது தேவசித்தம் (ரோ.8:29). அதற்காகவே ஆவியிலே மறுரூபமான நாம், தினந்தோறும் ஆத்மாவில் மறுரூபமாகிறோம் (யோ.3:3, 5:2 கொரி 5:17; ரோ.12:2). 100சதவீதம் மறுரூபமானால் தான், நாம் இயேசுவைப் போலானாவர்கள்; அப்போது தான் அவருக்குக் கிடைத்த முழு மகிமையும் நமக்குண்டு. மற்றப்படி, அவருக்கு முன்பாக மனிதர்கள் முழங்காற் படியிட்டது போல நமக்கு முன்பாக - அதிலும் விசேஷமாய் ஊழியர்களுக்கு முன்பாக முழங்காற் படியிட வேண்டியதே இல்லை. ஊழியர்களின் ஊழியங்களே தேவனுக்கு மகிமை கொண்டு வரத்தானே ஒழிய, தங்களுக்கு அல்ல.

ஆதி அப்போஸ்தலர் காலத்தில் பேதுரு. பவுல் போன்ற ஊழியர்கள் தான், தேவனுக்கு முன்பாக முழங்காற் படியிட்டார்களே ஒழிய (அப்.7:60; 9: 40;20:36:21:5; எபே.3:15) அவர்களுக்கு முன்பாக யாரும் முழங்காற் படியிட்டதாக ஏதுமில்லை. இயேசு கூட பிதாவிடம் தான் முழங்காற்படியிட்டார் (லூக்.22:41, 42). முழங்காற்படியிடுதல் என்பது சரண் அடைவதை - கீழ்ப்படிவதை - தாழ்த்துவதை - காட்டுகிறது. எஜமானுக்கு விரோதமாய் இருக்கிற வேலைக்காரனுக்கு புத்திபுகட்ட முழங்காற் படியிட வைப்பதும்இதே காரணத்திற்குத்தான். நமது வீட்டிலேயும் இந்த முழங்காற் படியிடும் தண்டனை உண்டே! இந்த தண்டனை பிறரின் ஆதிக்கத்தால் வருவது; ஆனால் நாம் முழங்காற்படியிடுவதோ நாமே நம் சுயசித்தத்தால், தேவன் பேரில் உள்ள மரியாதைக்கு அடையாளமாய்ச் செய்வதாகும்.

"பாஸ்டர், போதகர், தீர்க்கதரிசி போன்றோர் தேவனின் ஊழியக்காரர்கள்; அவர்கள் தேவனுடைய பார்வையில் விசேஷித்தவர்கள்; அவர்களுக்குள் தேவ பிரசன்னம் இருக்கிறது. எனவே அவர்கள் முன் முழங்காற்படியிட வேண்டியது கட்டாயம்; அது தேவனுக்கு மகிமையாயிருக்கிறது" என்று வாதிடுவோரும் உண்டு. இவர்கள் 1 பேதுரு 2:9ஐ வாசிப்பதில்லை. இந்த ஊழியர்கள் மட்டுமல்ல; இரட்சிக்கப்பட்ட அனைவருமே ராஜரீக ஆசாரியக் கூட்டம்; மத்.28:18-20ன் படி இரட்சிக்கப்பட்ட சீஷர்களாகிய விசுவாசிகள் அனைவரும் உலக மெங்கும் செல்லும் ஊழியக்காரர்கள்; வெளி.19:10ன் படி, விசுவாசிகள் அனைவருமே உலகமெங்கும் செல்லும், தீர்க்கதரிசன ஆவி உடைய தீர்க்கதரிசிகள். இவ்வளவு மகத்துவமான விசுவாசிகள் முன்னால் மட்டும், மற்றவர்கள் முழங்காற் படியிடக் கூடாதா? சிந்தியுங்கள். "சபையானது கறை திரையின்றி, பூரண புருஷராகி வருகையிலே சேர்வதற்காய் 5 விதமான ஊழியங்களை உருவாக்கி, ஊழியர்களை நடத்திச் செல்கிறார் தேவன் என்பதால், இவர்கள்

விசுவாசிகளை விட விசேஷித்தவர்கள்" என்பது ஒருவாதம். இவர்கள் சபைக்குள்ளே ஊழியர்கள்; ஆனால் விசுவாசிகளோ உலகமெங்கும் ஊழியர்கள். இது ஒருவருக்கும் புரியவில்லை. ஆவியானவரே விளங்க வைப்பாராக!

அதிகாரம் உள்ளவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள், அதிகாரம் உள்ளவர்களை வணங்குவது இயற்கையானது. ஆனால் மத்.28:18-20ன் படி தேவனின் அதிகாரம் முழுவதையும் - அதுவும் இழந்து போன ஆதி.1:28லுள்ள 5 அதிகாரங்களையும் - பெற்றிருக்கிற கிறிஸ்தவர்கள் எல்லோரும், ஒருவருக்கொருவர் தலைகுனிந்து வணங்குவதோ அல்லது தாழவிழுந்து வணங்குவதோ கூடாது. அது அறியாமை. இது போன்ற அறியாமையினால் தான் தேவ பிள்ளைகள் சங்காரமாகிறார்கள்; பிசாசுக்குள் சிறைப்பட்டுப் போகிறார்கள் (ஓசி 4:6; ஏசா.5:13). அப்படிச் செய்கிற ஒவ்வொருவனும், இன்னும் அடிமைத்தன ஆவி உள்ளவன்; விடுதலை இல்லாதவன்; 1 யோ.4:4; யோ.1:12 போன்ற வசனங்களின் படி இருக்கும் தன் நிலையை உணராதவன்; 1 கொரி.6:19ன் படி சரீரமாகிய ஆலயத் திற்குகளங்கம் பிறப்பிப்பவன். மட்டுமல்ல... தேவனுக்குரிய மரியாதையை பெற்றுக் கொள்ள விரும்பி விசுவாசிகளை முழங்காற் படியிட வைக்கின்றனர். இது தேவனைப் புறக்கணிக்கும் அந்தி கிறிஸ்துவின் ஆவியின் கிரியை என்பதை மறவாதீர். நம் தேவனை அறியாத - புரியாத - தெரியாத - புறஜாதியார் வேண்டுமானால், நம்மீது - நமது ஊழியர் மீது தேவமகிமை இருக்கிறது என்றும் - தேவனே நாமென்றும் - எண்ணி, தாழவிழலாம். அப்படிப்பட்ட அறியாமையின் செயலைக் கூட அறிய வைத்து அவர்கள் தாழவிழவிடாமற் பண்ண வேண்டியது நம் செயல்: இது தேவ நாம மகிமைக்குரியது. அப்.14:13-15ஐ வாசித்து தியானியுங்கள்.

யோவானே பயத்தினால் - அறியாமையினால் - தன்னைப் போன்ற ஒரு ஊழியக்காரனின் பாதத்தில் விழுந்த போது. "இப்படி செய்யாதபடிக்கு பார்... நானும் ஒரு ஊழியக்காரன், தேவனைத் தொழுதுகொள்" என்று கூறியதை நினைவு கூருங்கள் (வெளி.19:10). இப்படியே இன்னொரு முறை பாதத்தில் விழும் போதும் யோவானுக்கு இதே வார்த்தை கூறப்பட்டது. (வெளி.22:8). இதிலிருந்து நாமறிவது என்ன? தேவனுடைய பாதம், நாம் விழுந்து வணங்க - முழுங்காற்படியிட - தகுதியானது. மற்றப்படி எந்த - எப்பேர்ப்பட்ட ஊழியக்காரனாயிருந்தாலும் அவன் முன் முழங்காற் படியிடுவது தேவனை அவமதிப்பதாகும். அது வசனத்திற்கு விரோதமான பாவம். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! உன் நிலை எப்படியிருக்கிறது?

அறியாத காலங்களை தேவன் அறியாதவர் போலிருக்கிறார் (அப்.17:). இன்றோ நீ அறிவிக்கப்பட்டு இருக்கிறாய். போ, இனிப்பாவம் செய்யாதே! பெருமையின் ஆவி தேவனுக்குச் சமமான மேட்டிமையின் ஆவி - இப்போதே கிறிஸ்தவ ஊழியர்களின் மத்தியிலே ஓடிப்போகட்டும் இயேசுவின் நாமத்தினால்! அடிமைத்தனத்தின் ஆவி இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளை விட்டு ஓடிப்போகட்டும் இயேசுவின் நாமத்தினால்! ஆமென்.

❖ ❖ ❖

## நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்துவது எப்படி?

தலைப்பைப் பார்த்த உடனே என்னை ஒரு மாதிரி பார்க்க ஆரம்பிப்பீர்கள் என்று அறிவேன். ஆனால் சற்றுப் பொறுமையோடு வாசியுங்கள். 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் சிலுவையிலே இயேசுவோடு ஒழிந்தது (எபி.2:14,15; கொலோ.2) என்ற சத்தியத்தை ஆணித்தரமாக இதுவரை கேட்டுக் கொண்டிருந்த உங்களுக்கு இந்த தலைப்பு அதிர்ச்சியை கொடுப்பதிலே ஆச்சரியமில்லை. ரோ.3:31ல் விசுவாசத்தினாலே நியாயப் பிரமாணத்தை நிலை நிறுத்துகிறோம் என்று பவுல் எழுதுகிறான். அப்படியானல் விசுவாசமுள்ள கிறிஸ்தவன் நியாயப் பிரமாணப்படி நடக்க வேண்டுமா? இது கேள்வி. இந்த கேள்விக்கான பதில் சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ரோ.3:10-12 ன் படி நியாயப்பிரமாணத்தின் படி இஸ்ரேலரில் நீதிமான் ஒருவனுமில்லை; ஒருவனாகிலும் இல்லை; பாவத்தை அறிகிற அறிவு இஸ்ரேலருக்கு நியாயப்பிரமாணத்தால் வந்தாலும், யாருமே நியாயப் பிரமாணக் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படவில்லை; விசுவாசத்தினாலே தான் தேவன் நீதிமானாக்குகிறார். நியாயப்பிரமாணம் இஸ்ரேலருக்கு கொடுக்கப்பட்டதே நீதிமானாக வாழவே! (யாத்.19:5-8). அவர்களோ அதை விசுவாசமில்லாமல் தேடினார்கள்; நியாயப் பிரமாணக் கிரியைகளால் தேடினார்கள். அவர்களுக்கு அது கிடைக்கவில்லை. ஆனால் எபி.11ல் சொல்லப் பட்டவர்களோ விசுவாசக்கிரியையால் தேவநீதியைப் பெற்றார்கள்; நியாயப் பிரமாணத்தை அவமாக்காமல் பெற்றார்கள். அப்படியானால் நாமும் நியாயப் பிரமாணத்தோடே விசுவாசக் கிரியையால் தேவநீதியைப் பெறலாமா? இதுகேள்வி.

இப்போது ரோ.2:14, 15ஐ வாசியுங்கள். சுபாவத்தின் படியே, புறஜாதிகள் நியாயப் பிரமாணப்படி செய்கிறார்களாமே அது என்ன? ஓய்வு நாள் ஆசரிப்பா?

இல்லையே!... விருத்தசேதனம் செய்வதா? இல்லையே! பலி முறைகளை கைக்கொள்வதா? இல்லையே! பண்டிகை நாட்களை அசரிப்பதா? இல்லையே!... பின்னை எது சுபாவமாய் நியாயப்பிரமாணப்படி செய்வது? **பொதுவாக நாமெல்லாரும் அறிந்தது, நியாயப் பிரமாணமானாலும், புதிய ஏற்பாட்டுப் பிரமாணமானாலும் அடிப்படை, அன்பு தான்.** நியாயப் பிரமாணத்தின் இரு அடிப்படை அன்பை இயேசு மத்.22:35-40ல் சொல்லியிருக்கிறார். அதிலும் மேலான தெய்வீக அன்பை - இயேசுவின் அன்பை - புதிய ஏற்பாட்டு அன்பை, கைக்கொள்ள நமக்கு யோ.13:34; 15:12ல் சொல்லியிருககிறார். ஆக நியாயப் பிரமாணம் அன்பை வெளிப்படுத்துகிறது. இந்த அன்பைத் தான் சுபாவத்தின்படி புறஜாதிகளும் கைக் கொள்கிறார்கள் என்று பவுல் சொல்லுகிறான்; நாமும் கண்கூடாய் உலகிலே பார்க்கிறோம். அன்னை தெரசாகூட அப்படிப்பட்ட அன்பையே காட்டினார். யாக்கோபும் இந்த அன்பைத்தான் ராஜரீகப் பிரமாணம் என்று எழுதுகிறான் (யாக்.2:8).

இந்த அன்பை வெளிப்படுத்த வேண்டியவன் யாக்.4:11ன் படி இருக்கக் கூடாது; இந்த அன்பை ஓய்வு நாள் ஆசரிப்பு, விருத்தசேதனம், சுகாதாரப் பிரமாணம், தேச சட்டம் (civil law) பலிமுறைகள், ஆசரியப் பிரமாணம் போன்ற பலதரப்பட்ட பிரமாணங்களால் காட்ட இஸ்ரேலர்கள் முனைந்தனர்; விசுவாசக்கிரியையில்லாமல் நியாயப் பிரமாணக் கிரியைகளை வெளிக் காட்டினர். நீதிமான் ஒருவனுமில்லாமல் போயினர். ஆனால் விசுவாசக் கிரியைகளை வெளிப்படுத்தியவர்களோ எபி.11ல் பட்டியலிடப்பட்ட நீதிமான்களாயினர். எந்த விசுவாசக் கிரியையை காட்டினார்கள்? "Agappe" என்ற தெய்வீக அன்பை வெளிக் காட்டி, வரப்போகும் மேசியா நம்முடைய பாவங்களையும், பாவங்களுக்கான தண்டனைகளையும் சுமந்து தீர்த்து நம்மை நீதிமானாக்குவார் என்ற அன்பின் விசுவாசக் கிரியையை காட்ட நியாயப்பிரமாண செயல்பாடுகளை உபயோகித்தனர். புறஜாதிகளோ, இந்த அன்பின் விசுவாசக்கிரியை மாத்திரமே - இயேசுவின் பலியை அறியாமலே- வெளிக்காட்டினர். அப்படியே இயேசுவை ஏற்றுக் கொண்ட நாமும், இயேசுவின் புதிய ஆவியின் அன்பின் பிரமாணத்தை விசுவாசிக்கும் போது நீதிமானாக்கப்படுகிறோம்; அதை செயலிலே - கிரியை களிலே - காட்டும் போது நீதிமானென்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறோம். (யாக்.2:20-25). மத்.5:39-48 மலைப் பிரசங்கம் இதுதானே! இப்படிச் செய்யும் போது, அன்பை அடிப்படையாகக் கொண்ட ராஜரீக நியாயப்பிரமாணத்தை - அன்பின் பிரமாணத்தை - நாம் நிலைநிறுத்துகிறோம். அல்லேலூயா! இதற்கு நியாயப்பிரமாண கிரியைகள் தேவையில்லை; அன்புப் பிரமாண விசுவாசக் கிரியையே தேவை. ஆமென்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நியாயப்பிரமாணத்தை நிலைநிறுத்த - புறஜாதிகளைப் போல சுபாவப்படி ஆசரிக்க நமக்கு தேவை விசுவாசப் பிரமாணமே! விசுவாசமே! இந்தவிசுவாசத்தால் தேவ நீதி வருகிறது: (ரோ.3:27-30) இந்த விசுவாசப் பிரமாணத்தை கிரியைகளில் காட்டும் போது தேவ நீதிநமக்குள்ளே உறுதிப்படுகிறது. ஆக புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய நாம் இன்று முதல் நியாயப் பிரமாணத்தின் அடிப்படையை நிலைநிறுத்தும் பிள்ளைகளாய் செயல்படுவோம்! அதுவே தேவனுக்குப் பிரியமானது! ஆமென்.

❖ ❖ ❖

## சேஷ்ட புத்திரபாகம் உண்டா?

தேவனுடைய பிள்ளையே! தலைப்பைப் பார்த்த உடனே "ஒரு வேளைப் போஜனத்துக்காக தன் சேஷ்டபுத்திர பாகத்தை தம்பிக்கு விற்றுப் போட்ட ஏசா" ஞாபகம்தான் எல்லோருக்கும் வரும். (எபி.12:16). ஆனாலும் சேஷ்டபுத்திர பாகம் என்றால் என்ன? அது யாருக்கு உண்டு? இது நியாயப் பிரமாண சட்டமா? கிறிஸ்து இயேசுவின் ஆவியின் பிரமாணத்தை (ரோ.8:2) உடைய புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களாகிய நமக்கு உண்டா? அதை அனுபவிப்பது எப்படி? இப்படிப்பட்ட கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே நமக்கு விளக்குவாரா!

சேஷ்ட புத்திரபாகம் என்றால் (Birthright) பிறப்புரிமை என்று பொருள். நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் முன்பே, சுபாவப்படி மனிதர்களுக்குள்ளே இந்த உணர்வும், செயல்பாடுகளும் இருந்தன. இது தேவனின் அநாதி தீர்மானம் என்பதால் ஆதி முதலே வழி வழியாய் இது மனிதனின் ஆவியில் நிறைந்திருக்கிறது. எப்படி "அன்புப் பிரமாணம்" ஆதி முதல் சுபாவமாய் மனிதர்களுக்குள்ளே இருக்கிறதோ அப்படிப்போல. (ரோ.2:14,15) ஆமென். **இந்த சேஷ்ட புத்திரபாகத்தால் என்னென்ன பலா பலன்கள் உண்டு என்று பார்போம்:-** (1) குடும்பத்தின் முழுச்சொத்துக்கும் உரிமை கிடைக்கிறது (ஆதி.25:5) (2) குடும்பத்தின் தலைமையேற்று முழுக் குடும்பத்தையும் ஆள முடிகிறது (ஆதி.24:65; 25:5; 27:29, 37) (3) அப்பா தரும் ஆசீர்வாதம் கிடைக்கிறது (ஆதி.27:4, 27-38) (4) ஆவிக்குரிய தலைவனாய், குடும்ப - சமுதாய - ஆசாரியனாய் இருக்க முடிகிறது. (ஆதி.26:25; 35:3-7) (5) விசேஷித்த வாழ்விடம் கிடைக்கிறது (ஆதி.26:3) (6) மேசியா பிறக்கும் வழி கிடைக்கிறது (Father of messiah) (ஆதி.12:3;

21:12; 22;17) (7) யோகோவா தேவனைப் பெற்று, அவர் மூலமாய் வல்லமையும், அதிகாரமும், ஆசீர்வாதமும், நித்திய ஜீவனும் பெற முடிகிறது (ஆதி.17:5-8:28:15; 12:7; 28: 4; 22:17; 27:29). இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம்.

இந்த சேஷ்ட புத்திரபாகம் ஆதி முதல் முதற்பிள்ளைக்குத் தான் இருக்கிறது. அவன் வெறுக்கப்பட்டவனாயிருந்தாலும் அவனக்கு உண்டு. இந்த முதற் பிள்ளைக்கு வரும் சேஷ்ட புத்திரபாகம் இரண்டு மடங்காக இருக்கும். இதை நியாயப் பிரமாணத்தில் தேவன் இஸ்ரேலருக்கு சட்டமாய் இணைத்திருக்கிறார் (உபா.21:15-17). இந்த சட்டம் கொடுக்கப்படும் முன்பே ஏசாவுக்கு, சேஷ்ட புத்திரபாகம் இருந்தது என்றும், அதை யாக்கோபு வாங்கிக் கொண்டு, மேலே சொன்ன பலா பலன்களை எல்லாம் பெற்றான் என்றும் நாமறிவோம்! இந்த சேஷ்ட புத்திரபாகத்தை அபகரித்த - பெற்றுக் கொண்ட யாக்கோபை வேதம் குற்றவாளியாய் பார்க்கவில்லை; ஏசாவைத் தான் வேசிக் கள்ளன் என்றும், சீர் கெட்டவன் என்றும் வேதம் சொல்கின்றது. ஏசா போல நாம் விற்றுப் போடக் கூடாது என்று நமக்கு எச்சரிப்புக் கொடுக்கின்றது. இதனால், சேஷ்ட புத்திர பாகத்தின் அருமையையும், பலா பலன்களையும், அனுபவிக்க, வாஞ்சித்து கிரியைகளில் ஈடுபட்ட யாக்கோபின் விசுவாசம் உயர்த்தப்படுகின்றது. இந்த சேஷ்ட புத்திர பாகத்தை விற்றுப் போடவும் எல்லோருக்கும் சுயாதீனமுண்டு ஏசாபோல, இது தேவனின் தீர்மானப்படியே நடக்க முடியும் (ஆதி.25:23-34; ரோ.9:12,13; 1 ராஜா. 2:15; 1 நாளா. 26:10). மேலும், பாவத்தால் இந்த பாக்கியம் எடுத்துக் கொள்ளப்படவும் வாய்ப்புண்டு. எப்படியெனில் ரூபன் என்பவன், சேஷ்ட புத்திர பாகத்தை உடையவன். ஆனாலும் அவனின் பாவத்தால், அது யோசேப்புக்கு மாறியது (1 நாளா. 5:1,2) அல்லேலூயா!

புதிய ஏற்பாட்டு மக்களாகிய நமக்கு இந்த சேஷ்ட புத்திரபாகம் உண்டா என்பது ஒரு கேள்வி. ஆதி முதலே மனிதர்களுக்குள்ளே அங்கீரிக்கப்பட்டு வழி நடத்தப்பட்ட இந்த கொள்கை நமக்கு இல்லாமல் போகுமா? ஆதி. 3;15ன் படி பிசாசானவன் இயேசுவுக்கும், இயேசுவின் பிள்ளைகளுக்கும் அவர்கள் முன்னேறாதபடி - சுவிசேஷ பணிகளுக்கு ஆயத்தமாயிராதபடி - எதிர்ப்பை தெரிவித்துக் கொண்டே இருக்கிறான். மேலே சொன்ன சேஷ்ட புத்திர பலாபலன்கள், முதற்பிள்ளைக்கு கிடைக்கும் என்றறிந்து, ஆபேல் முதற் கொண்டு முதற் பிள்ளைகளை கொன்றான்; ஏசா போல விசுவாசத்தைக் கெடுத்து விற்றுப்போட வைத்தான்; ரூபன் போல பாவம் செய்ய வைத்து இல்லாமலாக்கினான். எல்லாவற்றுக்கும் மேலாக, முதல் பிள்ளை மூலமாய்

முழு அதிகாரமும், வல்லமையும் கொண்ட மேசியாவாகிய இயேசு பிறப்பதற்கே தடைகளை வருவித்தான்; பிறந்த பின்னும் அவரின் வளர்ச்சிக்கு - இரட்சிப்பளிக்கும் காரியத்திற்கு - தடை செய்தான். இன்றும் கூட அந்த சேஷ்ட புத்திர பாகமுடைய இயேசு - முதற்பேறான இயேசு (ஆதி.3:16) நமக்குள் பிறக்கவும் தடை செய்து கொண்டிருக்கிறான். இந்த தலைப்பில் ஒரு செய்தியை பழைய முழக்கத்தில் ஏற்கெனவே எழுதியிருக்கிறேன். அதை வாசியுங்கள்.

ஆபிரகாமிடம் சொல்லப்பட்ட சந்ததி கிறிஸ்து (கலா.3:16; ஆதி.13:14-17; 2217,18). அந்த கிறிஸ்துவின் சந்ததி, அவரை ஏற்றுக் கொண்ட - இரட்சிக்கப்பட்ட - புதிய ஏற்பாடு கிறிஸ்தவர்களாகிய நாம். அந்த முதற்பேறான - சேஷ்ட புத்திரபாகமுடைய - இயேசு கிறிஸ்துவின் சந்ததி அனைத்துமே சேஷ்ட புத்திரபாக சந்ததிதானே. இதிலே முந்தினோர். பிந்தினோர் என்றில்லை. எல்லோருமே சேஷ்ட புத்திர பாகமுடையவகள் தான். அதனால் தான் கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன்; அவனே கிறிஸ்து என்று சொல்லத்தக்க தான பெயர் நமக்கு அந்தியோகியாவிலுருந்து ஆரம்பமாயிற்று (அப்.11:26). ஆமென். இந்த இயேசுவுக்கு யாருடைய சேஷ்ட புத்திர பாகம் கிடைத்தது? மரியாள் - யோசேப்புடையதா? இல்லையே.... அவர்களே ஏழ்மையில் இருந்தவர்கள். நம் தேவாதி தேவனின் முதற்பேறு இயேசு; (யோ.3:16) ஒரே மகன் இயேசு; (ஆபிரகாமுக்கு ஈசாக்கு போல). அந்த தேவனின் சேஷ்புத்திர பாகம் இயேசுவுக்குக் கிடைத்தது - உயிர்த்தெழுந்த ஆண்டவருக்குக் கிடைத்தது. இதைத்தான், "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத்.28:18) என்று இயேசு சொன்னார். இந்த அதிகாரமும் வல்லமையும் நமக்கு கொடுத்திருக்கிறார் இயேசு. அதனால்தான் அவரிலும் மேலான காரியங்களை நாம் செய்ய முடியும் என்று இயேசு சொல்கிறார் (யோ.14:12). இயேசுவின் சேஷ்ட புத்திர பாகம் நம் எல்லாருக்கும் இலவசமாய் - விசுவாசமார்க்கத்தாருக்கு - கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால், கிறிஸ்து இயேசுவினாலே புறஜாதிகளான நமக்கும் ஆபிரகாமின் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் முழுவதுமுண்டு (கலா.3:7,9,14; எபே.1:3). அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! "ஆபீசிலே இந்து; சபையிலே கிறிஸ்தவன்" என்று இயேசுவை - இயேசுவின் நாமத்தை மறுதலித்து, கேவலம் இந்த உலக சலுகைக்காய் ஏசாவைப் போல் சீர்கெட்டவனாய் (அக்கிரம செய்கைக்காரனாய் மத்.7:21) சேஷ்ட புத்திரபாகத்தை உதறிப்

போடுகிறாயா? இன்றே உன்னை ஆராய்ந்து பார்! உடனே கெஜட்டில் மாற்று, கெஜட்டில் மாற்றினாலும், ரூபன் போல சகலவிதமான பாவங்களால் மீள முடியாமலிருந்து சேஷ்ட புத்திர பாகத்தை இழந்து போயிருக்கிறாயா? தைரியமாய் கிருபாசனத் தண்டைக்குள் வர இயேசு அழைக்கிறார். 1 யோ.1:8-10 வசனங்கள் உனக்காகவே! இன்றே அறிக்கையிடு; பாவ மன்னிப்பைப் பெற்றவனாய் சேஷ்ட புத்திர பாகத்தை மறுபடியும் ஏந்திக்கொள்! ஏராளமான ஆசீர்வாதங்களை இம்மைக்கும் மறுமைக்கும் தாராளமாய் பெறுவாய்! சேஷ்ட புத்திர பாகமுள்ளவனே குமாரனுடைய சாயலுக் கொப்பானவன் (ரோ.8:29) அவனே பரலோகத்திற்குள் பிரவேசிக்க தகுதியுள்ளவன். ஆமென்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

# ஜென்ம சுபாவமும் ஜென்ம பாவமும்

ஜென்ம சுபாவம் என்றால் பிறவிக்குணம் என்றும், ஜென்ம பாவம் என்றால் பிறவிப் பாவம் என்றும் நாமறிவோம். அப்படியானால், மனிதனுக்குள்ளே இருக்கிற பிறவிக்குணம் என்ன? பிறவிப் பாவம் என்ன? இப்படிப்பட்ட தான சுபாவமும், பாவமும் இருப்பது நல்லது தானா? இது தீமையானது என்றால் இவைகளிலிருந்து விடுதலை உண்டா? இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்தவையா வேறுவேறா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

வேதத்தின் படி மனிதன் மூன்று வகையாய் பிரிக்கப்படுகிறான். **(1) இயற்கையான மனிதன்;** அதாவது Natural மனிதன்; ஆதாமிய மனிதன் (Adamicman). யோ. 3:3,5ன் படி மறுபிறப்படையாத - மறுரூபமாகாத மனிதன் (யாக். 3:15; யூதா 19). **(2) ஆவிக்குரிய மனிதன்.** அதாவது Spiritual man; மறுபிறப்படைந்தவன்; தேவனோடு ஐக்கியம் கொண்டு, ஆவியானவர் தரும் வார்த்தைப்படி நடப்பவன் (எபே.5:18-20) **(3) மறுபடியும் பிறந்து இரட்சிக்கப்பட்டிருந்தும், மாம்சீகப் பிரகாரமாய் நடப்பவன்;** அதாவது நிரந்தரமான ஆவிக்குரிய வார்த்தைகளை நிதானிக்க முடியாமல் அழிந்து போகிற காரியங்களை, வார்த்தைகளை சிந்திக்கிறவன் (1 கொரி.3:1-4). முதலாவது வகையான மனிதன் நல்லவனாய் இருக்கலாம்; நன்மை செய்பவனாய் இருக்கலாம்; சன்மார்க்க ஜீவியம் செய்யலாம். ஆனால் வேத வார்த்தைகள் அவனுக்கு மறைந்திருக்கிறது. மூன்றாவது

வகையான மனிதனோ வேதத்தின் ஆழமான சத்தியங்களை அறிந்து கொள்ள திராணியற்றவனாய் இருப்பான். இந்த முதலாவது வகையான மனிதன் தான் ஜென்சுபாவம் - பிறவிக் குணம் - உடைய ஆதாமிய மனிதன். ஏன் ஆதாமிய மனிதன் என்று சொல்கின்றோம்?

ஏதேனிலே உண்டாக்கப்பட்ட ஆதாமுக்கு தேவன், ஆதி. 2:17ல் சொல்லப்பட்ட வார்த்தை மறைக்கப்பட்டிருந்தது. பிசாசு சொன்னதை நம்பினான்; தேவ வார்த்தையை மறந்தான்; மட்டுமல்ல... மறுதலித்து செயல்பட்டான், பிசாசின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். முடிவோ.... சாபமும் தண்டனையும். இது பிறவியிலேயே ஆதாமுக்கு இருந்த ஜென்ம சுபாவம், ஒவ்வொரு மனிதனுக்கும் தேவன் சுயாதீனத்தைக் கொடுத்திருக்கிறார் (யாக்.1:25; 2:12); நம் தேவன் சர்வாதிகாரி அல்ல. மனிதன் தன் ஜென்ம சுபாவத்தின்படி அவனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள் (நீதி.14:12). மனிதனின் ஜென்சுபாவப் படி நடக்கும் செயல்பாடுகள் எல்லாமே செம்மையாய் இருக்காது. மனிதன் குறைவுள்ளவன். தான் நினைத்ததை செய்யும் பல காரியங்களில் தீமை சம்பவிப்பது சர்வசாதாரணமாகிறது. மோசே தனக்கு தெரிந்தபடி எகிப்தியனை கொன்றான். முடிவோ.. பயந்து ஓட வேண்டிய நிலை. ரெபேக்காள், யாக்கோபுக்கு ஆசீர்வாதம் கிடைக்க தனக்கு விருப்பமானபடி செய்தாள். முடிவோ.... அண்ணன் தம்பி தகராறு; ஆடு மேய்க்கும் வேலை. இப்படி ஏராளம் சொல்லலாம். இதனால் தான் சுயாதீனத்தை - ஜென்ம சுபாவமாய் கொடுத்த தேவன், மனிதனுக்கு வழிகாட்டியாய், விளக்காய் வேதத்தைக் கொடுத்து (நீதி.6:23) விசுவாச ஓட்டத்தை நடத்துகிறார். (ரோ.10:14; எபி.12:2) விசுவாச ஓட்டத்தில் காலடி வைத்தாலே, ஜென்ம சுபாவத்தை நாம் சாராமல், தேவனை - தேவ வார்த்தையை சார்ந்து நடப்போம். முடிவோ சந்தோசமும் சமாதானமும். இந்த நிலை தான் இரட்சிப்பின் நிலை. இந்த நிலைக்கு வந்தாலே நம் ஆவி, தேவ ஆவி சொல்லுகிறதைக் கேட்டு, நமது உலக சிந்தனையாகிய - மனமாகிய - ஆத்மாவுக்கு கட்டளை கொடுக்கும் (சங்.103:1-3). அதன் படி சரீரம் நன்மையே செய்யும். இப்படி ஆதாமின் ஆவி செயல்படாமல், தன் ஜென்ம சுபாவத்தில் நடந்து, (அப்படி நடக்க வைப்பவனே சாத்தான்) பாவம் செய்தான். அது தான் ஜென்ம சுபாவத்தில் செய்த ஜென்ம பாவம். (விலக்கப்பட்ட கனியை விசுவாசிமில்லாமல் பிசாசின் சொற்படி புசித்தான்)

இந்த ஆதாமின் ஜென்ம சுபாவத்தால் வந்த ஜென்ம பாவத்தால் சாபமும் வந்தது; தண்டனையும் வந்தது. சாபம் ஆதாமே தேடிக் கொண்டது

(உபா.11:26-28; 30:15, 19). இது தலைமுறை தலைமுறையாய், மனுக்குலத்தை தொடர்ந்து வருகிறது. அதனாலே, ஒன்றான மெய்த் தேவனையும், அவர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்காமல் (யோ.17:3) ஜென்ம சுபாவப்படியே, பிசாசின் ஆளுகையில் இருந்து மனிதன் கொல்லப்படுகிறான்; அழிக்கப் படுகிறான்; திருடப்படுகிறான் (யோ.10:10).

இந்த ஜென்மசு பாவம் எப்போது மாறும்? கர்த்தராகிய இயேசுவை - இயேசுவாகிய வார்த்தையை, ஆவியாகிய இருதயத்தில் விசுவாசித்து அறிக்கை இடும்போது தான், ஜென்ம சுபாவம் மாறி தேவ சுபாவம் - திவ்விய சுபாவம் வருகிறது (2 பேது.1:4) தேவ சுபாவத்தை ஆவியாகிய இருதயத்திலே பெற்றவன் ஒருக்காலும் அந்நிய சாமியை தொழவோ, அதன் படி செய்யவோ போகவே மாட்டான். இது சத்தியம். மனுஷ சுபாவத்தால் - மிருகம், பறவை, ஊரும்பிராணி, நீர் வாழும் ஜந்து ஆகிய அனைத்தின் சுபாவங்களையும் அடக்க முடியும். (யாக்.3:7) ஆனால் இந்த ஜென்ம சுபாவம் தனித்து செயல்படும் போது தேவ ஞானமின்றி, லௌகீகம் கலந்து, பேய்த்த தனத்திற்குரியதாயிருக்கும் (யாக்.3:15 ; யூதா.19); தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளாது (1 கொரி2:14); அது அவர்களுக்கு பைத்தியமாய்த் தோன்றும். ஆதாமின் சந்ததியான அத்தனை பேருக்கும் இந்த ஜென்ம சுபாவம் உண்டு. குழந்தையாயிருக்கும் போது இந்த சுபாவத்தின் தாக்கம் குழந்தைக்கு தெரியாது; குழந்தை வளர்ந்து வளர்ந்து, "அறியாப் பிள்ளை" என்ற நிலையிலிருந்து, அறிகின்ற, சிந்திக்கின்ற நிலை வரும் போது தான் அது தெரியும். அது தான் age of accountability. இது அவரவரின் உடல் மனக் கூறுப்படி வயது வித்தியாசப்படும். குழந்தைக்கும், பைத்தியக்காரனுக்கும் இந்த புரிகின்ற நிலை இல்லை. இப்படிப்பட்ட அறியாத காலத்திலே இருப்பதையும் (இருப்பவர்களையும்) தேவன் நியாயத்தீர்ப்புக் கென்று கண்டு கொள்வதில்லை (அப். 17:30). எனவே குழந்தைகளுக்கு ஆதாமின் ஜென்ம சுபாவம் இருப்பதால், நியாயத் தீர்ப்பு பற்றியோ, பாதளம் - நரகம் பற்றியோ கவலைப்படத் தேவையில்லை. எல்லாக் குழந்தைகளும் அறியாப் பிள்ளைகள். அந்த பிள்ளைகளைப் போல நாம் மாற வேண்டும் என்று விரும்புகிறவர் நம் தேவனல்லவா! அப்படிப்பட்ட சிறு பிள்ளைகளை நேசிப்பவர் அவரல்லவா! (மத். 18) எனவே சிறு பிள்ளைகள், இந்துவோ கிறிஸ்துவோ முஸ்லீமோ யாராயிருந்தாலும் தேவனால் நேசிக்கப் படுபவர்கள். அவர்கள் ஜென்ம சுபாவமுள்ள அறியாப் பிள்ளைகள். அவர்களுக்கு பாதாளம், நரகம் என்ற ஆக்கினைத் தீர்ப்பே இல்லை. ஆமென்.

ஆதாமுக்குள்ளான ஜென்ம சுபாவம் தொடர்வது போல, அவன் தன் சுபாவத்தினால் தேவனின் வார்த்தையை தள்ளிவிட்டு, பிசாசின் சுபாவத்திற்கு இணைந்து செயல்பட்டதால் வந்த பாவமும், அந்த பாவத்திற்குரிய தண்டனையும் மனித குலத்தை தொடர்ந்து வருகிறது (ரோ. 5:12). இந்த பாவம் தான் ஜென்ம பாவம்; அதனால் சாத்தானுக்கும் ஏவாளுக்கும், ஆதாமுக்கும் தண்டனைகள் கொடுக்கப்பட்டன (ஆதி. 3:14-19). இவைகள் சாபமல்ல; சாபமாயிருந்தால் இயேசுவின் சிலுவை மரணத்தோடு விசுவாசிப்பவர்களுக்கு அது ஒழிந்திருக்குமே! (கலா.3). இந்த தண்டனையின் உச்ச கட்டம் தான் உலகிலே சரீர மரணம்; ஒருவனாலே பாவம் பிரவேசித்து அதற்கான தண்டனையும் வந்தது போல, கிறிஸ்து என்னும் ஒருவராலே பாவமும் நீக்கப்பட்டு, தண்டனையும் மாறியது (ரோ.4:15-18). அல்லேலூயா! இதை விசுவாசித்து இரட்சிப்புக்குள் வருபவனுக்கு மரண பயமே இல்லை (எபி.2:14). இந்த மரணத் தண்டனையை ஏதேனிலே கொடுத்தவர் தான் மாற்ற முடியும். முதலில் அவர் மனிதனாய் வந்து மரணத்தை ஜெயித்தார். அவரை விசுவாசிக்கும் நமக்கு, அவரின் இரகசிய வருகையிலே அவரே மாற்றுவார் (1 கொரி.15:55-57). மற்றவர்களுக்கோ, 1 கொரி.15:26; வெளி.20:14ன் படி வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்போடு மாறும்.மரண தண்டனையைக் கொடுத்தவரே மாற்றும் வரை, ஆதாமின் ஜென்ம பாவமும், அதனால் கொடுக்கப்பட்ட தண்டனையும், கருவிலிருக்கும் குழந்தை முதற் கொண்டு அனைவருக்கும் உண்டு. மேலும் இந்த ஜென்ம பாவமுள்ள மனுஷன், அறிகின்ற நிலை வந்த பின்னும் ஜென்ம சுபாவத்தோடு தொடர்ந்து வாழ்ந்தால், தன்னுடைய கிரியைகளினாலே பாவம் செய்கிறான். ஆக, Age of Accountability வந்த பின்னும் ஜென்ம சுபாவமுள்வனுக்கு (தேவ - திவ்விய சுபாவம் இல்லாதவனுக்கு, இரட்சிக்கப்படாதவனுக்கு) ஆதாமின் ஜென்ம பாவமும், தான் செய்த கர்மப் பாவமும் (சரீரக் கிரியைப் பாவமும்) பிடித்துக் கொள்கின்றது. ஜென்ம பாவத்திற்கு தண்டனை சரீர மரணம்; கர்மப் பாவத்திற்கு தண்டனை நித்திய மரணம். 2ம் மரணம்; நரகம்; ஆக்கினைத் தீர்ப்பு (வெளி.22:12; ரோ.8:1). இரண்டிலிருந்தும் விடுதலையாக ஒரே வழி இரட்சிக்கப்படுதல் (ரோ.24:13; மாற்.16:16).

இதை வாசிக்கும் தேவப்பிள்ளையே! குழந்தைகளிடமுள்ள ஆதாமின் ஜென்ம சுபாவம், அந்த சுபாவம் இருப்பதை அறிந்து ஒப்புக் கொடுக்கும் போது தான் தேவகிருபையின்படி மாறுமே ஒழிய (எபே.2:8; 2 பேது 1:) ஞானத்தாய், ஞானத் தந்தையாலோ, குழந்தை ஞானஸ்தானத்தாலோ மாறாது.

ஒருவனுடைய சுபாவத்தை தேவனின்றி, வேறு எந்த ஒரு மூன்றாவது ஆளாலும் முழுமையாய் மாற்ற முடியாது; அப்படியே மாற்றும் போது, சம்பந்தப்பட்ட மனுஷனும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். பால் மனம் மாறா பச்சிளம் குழந்தை அப்படிச் செய்வதை ஏற்றுக் கொள்கிறதா? தேவனும் அப்படிச் செய்யச் சொல்லி வேதத்தில் சொல்லியிருக்கிறாரா? சிந்தியுங்கள். மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்றுதான் ஞானஸ்நானம் (அப்.2:38); விசுவாசமுள்ள வனாகித்தான் ஞானஸ்நானம் (மாற்.16:16). இதுவே தேவனின் மரணத்திற்கும், உயிர்த்தெழுதலுக்கும் அடையாளம். இஃதல்லாமல் குழந்தை ஞானஸ்நானம் கொடுத்து தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்வதெல்லாம், தேவனக்கு விரோதமானது; ஜென்ம சுபாவமுள்ளது (1 கொரி. 2:14). மேலும், ஆதாமின் ஜென்ம பாவத்தினால் வந்த ஆவிக்குரிய மரணத்தை (ஆதி. 2:17) ஒருவர் அறியாத நிலையில் இருக்கும் வரைக்கும், அதை தேவன் அறியாதவராகவே செயல்படுவார் (அப். 17:30). அது குறித்து கவலைப் படத் தேவையில்லை. தேவன் தந்த சரீர மரண தண்டனைப்படி (எபி. 9:27) எல்லோரும் மரித்தே ஆக வேண்டும். அதிலிருந்து குழந்தை ஞானஸ்நானமானது குழந்தைகளையும் தப்புவிக்காது. சரீர மரணத்திற்குப் பின்னே 2ம் மரணம் இருக்கிறதே அதுதான் நரகம். இது ஜென்ம சுபாவமுள்ள, ஜென்ம பாவத்தை புரியாத குழந்தைகளுக்கு அல்லவே அல்ல. ஜென்ம சுபாவமுள்ளவர்களும், ஜென்ம பாவத்திலிருந்து விடுதலையாகி தன் கர்மப் பாவத்தில் நிலைத்திருப்போரும் போக வேண்டிய இடம்தான் அது. எனவே, வேத வார்த்தைகளை தியானிக்காமல், பாரம் பரியமாய் தாம் செய்ததையே செய்து கொண்டு வேத வார்த்தைக்கு விரோதமாய்ப் போகும் மக்கள் மேல் கோபாக்கினை வந்து விடக்கூடாதே என்ற ஆதங்கத்தால் இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவரின் ஒத்தாசையோடு எழுதுகின்றனே. மேலும் தியானியுங்கள். ஆவியானவர் இன்னும் அதிகமாய் விளக்குவார்! அல்லேலூயா!

❖ ❖ ❖

## ஆவியும், ஆத்மாவும் அழியுமா?

இது குறித்து ஏப்ரல் 2002 முழக்கம் 107ல் எழுதியிருக்கிறேன். கள்ள உபதேசங்கள் பெருகி வரும் தற்காலத்தில் இது குறித்து இன்னும் விளக்கமாய் எழுத ஆவியானவர் ஏவுகிறார். தயவு செய்து வாசியுங்கள்.. தியானியுங்கள், மற்றவர்களுக்கு விவரித்து சொல்லுங்கள்.

ஆத்மா அழியும் என்று சொல்பவர்கள் யார் தெரியுமா? "ஆவியும் ஆத்மாவும் வேறு வேறல்ல; ஒன்றுதான், மூலபாஷையில் ஆவி என்பது காற்றைக் குறிக்கிறது - அதாவது சுவாசத்தைக் குறிக்கிறது" என்று சொல்பவர்கள்தான். ஆவியும், ஆத்மாவும் சுவாசம் என்றால், சுவாசத்திற்கு உணர்வு உண்டா? உயிருண்டா? சிந்தனை உண்டா? யோபு 32:8; நீதி.20:27; சங்.18:28; (யடடைநேபேடளைா) மத்.11:29; 26; 38; யோ.12:27; உபா.6:5; 1 சாமு 18:1; யோபு 14:23; சங். 42:6; 84:2; நீதி 24:14; 2:10 போன்ற வசனங்களின் விளக்கம் என்ன? 1 தெச. 5:23ல் இயேசு கிறிஸ்து வரும் போது நம் ஆவி, ஆத்மா, சரீரம் முழுவதும் குற்றமில்லாது இருக்க வேண்டுமே, அப்படியானால், ஆவியும் ஆத்மாவும் சுவாசமா? சுவாசம் பாவம் செய்யுமா? சிந்தியுங்கள். (ஆசிரியரின் தெரிந்துக் கொள்ளுங்கள் என்ற நூலில் உள்ள "ஆவி - உயிர் - ஆத்மா" என்ற செய்தியை வாசியுங்கள்) 2 கொரி 4:16ன் படி உள்ளான மனுஷன் எது? படைபபின் இரகசியம் தெரியாதவனுக்கு இது புரியாது. புறம்பான மனுஷனாம் சரீரத்தை மண்ணினால் உண்டாககினார் (ஆதி.2:7); சிருஷ்டிக்க வில்லை. சிருஷ்டிப்பு என்றால் (creation) ஒன்றுமில்லாமையிலிருந்து படைப்பது. உள்ளான மனுஷனை உண்டாக்கினாரா? சிருஷ்டித்தாரா? ஆதி.1:26-27ஐ வாசியுங்கள். தேவன் தம்முடையசாயலின்படியும் (குணாதிசயம் - Character - likeness) தம்முடைய ரூபத்தின்படியும், (Image - Figure) மனிதனை சிருஷ்டித்திருக்கிறார். ஆணும், பெண்ணுமாய் சிருஷ்டித்தார். ஆணின் தேவசாயலும், ரூபமும், பெண்ணின் தேவ சாயலும் ரூபமும் ஒன்றே. புறம்பான சரீரமாகிய ஆணின் ரூபமும், பெண்ணின் ரூபமும் ஒன்றா? இல்லையே? அப்படியானால் அது என்ன? தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை; தேவன் ஆவியாயிருக்கிறார் (1 தீமோ.6:16; யோ.4:24). 1 கொரி.15:40, 41; 1 யோ.3:2 போன்ற வசனங்களின்படி ஆவிக்குரிய மேனி உண்டு; ஆனால் அதை ஒருவனும் இந்த மாம்சீக கண்களால் காண முடியாது. அந்த தன்னுடைய காணக் கூடாத ரூபத்தின்படியே - ஆவியாயிருக்கிற தேவன், ஒன்றுமில்லாமையிலிருந்து ஆணையும், பெண்ணையும் ஆவியாய் சிருஷ்டித்தார். அதுதான் ஜீவனுள்ளது; உணர்வுள்ளது; சிந்தனையுள்ளது. இந்த ஜீவ ஆவியைத் தான் ஆதாமின் சரீரத்திற்குள்ளே தேவன் செலுத்தினார். இந்த ஜீவ ஆவி போனதாலே, மண்ணால் உருவாக்கப்பட்ட மற்ற ஜீவராசிகளைப்போல் (ஆதி.2:) அறிவு - மனது - ஆத்மாவை கொண்டிருந்த மனிதன், ஜீவ (தேவ) ஆவியாய் மாறினான். ஆமென். அல்லேலூயா! அன்று முதல் ஆவியும், ஆத்மாவும் பிரிக்க முடியாத ஒன்று என்று எபி.4:12 கூறுகிறது. இப்படி இணைந்திருக்கிற

ஆவியும் ஆத்மாவும்தான், மண்ணான சரீரத்தை விட்டுப் பிரிகிறது என 2 பேது.1:13 - 14; பிலி.1:23-24 சொல்கின்றது (please refer யோபு.12:10; 34:14; சங்.32:2; 1 ராஜா. 17:21; 1 கொரி.14:14; யோ.19:30; பிர.12:7; சங்.63:1; 42:1; 103; 1-2; 3 யோ. 2; மத்.10:22; லூக்.12:20).

அழியாமை (Immortal) உள்ள ஆவியாயிருக்கிற தேவனின் சாயலின் படியும், ரூபத்தின்படியும், சிருஷ்டிக்கப்பட்ட மனிதனின் ஆவியும், அதே அழியாமை நிலைக்குரியதாகத்தானே இருக்க வேண்டும்! அந்த மனித ஆவியோடு இணைந்துள்ள ஆத்மாவும் ஆவியிருக்கும் வரை அழியாமை நிலையில் தான் பிரியாமல் இருக்க வேண்டும்! இங்கே அழியாமை என்பது வேறு; சாவு - மரணம் என்பது வேறு என்று அறிய வேண்டும். யோ.10:10ஐ வாசித்தால் பிசாசு கொல்லவும், அழிக்கவும் வந்திருக்கிறான் என்பதால், கொல்லுதல் - அதாவது சாவு, மரணம் என்பதும், அழித்தல் (perish) இல்லாமல் ஆக்குதல் என்பதும் வேறு வேறு என்று உணர வேண்டும். மரணம் என்றால் cessation of comunication - தொடர்பு அற்று போதல் என்று பொருள். ஆவியாயிருக்கிற தேவன் தன்னைப் போலவே ஆவியாய் உள்ளான மனிதனைப் படைத்ததே, மனிதன் ஆவியாயிருக்கிற தேவனோடு தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். இந்த பாக்கியம் மனிதனுக்கு மட்டுமே உண்டு. இது தேவ தொடர்பு அற்றுப் போனால் உள்ளான மனுஷனாகிய ஆவி மரித்துப் போய் விட்டது என்று பொருள் உள்ளான மனிதன் அழிந்துப் போகவில்லை; மரித்துப் போனான். இதைத் தான் ஆவியின் மரணம் - ஆவிக்குரிய மரணம் என்கிறோம். இந்த மரணம்தான் எபே.2:1ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த மரணம்தான் ஆதாம், ஏவாள் பெற்ற மரணம் (ஆதி.2:17 See மத்.8:22; எபே.5:14). இந்த மரணத்திற்குப் பின்னும் மனிதன் வாழ்கிறானா? ஆம். உள்ளான மனுஷனாகிய ஆவி மரித்த பின்னும் உள்ள இந்த வாழ்வு எப்படிப்பட்டது? **உலகிலே 3 ஆவிகள் உள்ளன.** (1) ஆவியாகிய தேவன்.(2) ஆவியாயிருக்கிற பிசாசு. (3) ஆவியாகிய மனுஷனை உடைய மனிதன். உள்ளான மனுஷனாகிய நமது ஆவி, தேவ ஆவியோடு தொடர்பின்றி மரித்துப் போனால், பிசாசின் ஆவியோடு தொடர்பு கொண்டு வாழும். இந்த வாழ்வுதான் பாவ வாழ்வு - பாவி வாழ்வு. இவர்களைத்தான் மரித்தோர் என்று வேதம் கூறுகிறது (எபே.15:14; மத்.8:22). இந்த பாவ வாழ்வில் உள்ள உள்ளான மனுஷனுக்கு வார்த்தையாகிய இயேசு வரும்போது - அந்த வார்த்தையை ஏற்றுக் கொள்ளும்போது, அந்த உள்ளான மனுஷன் ஜீவனடைகிறான். தேவ தொடர்பு உருவாகிறது. ஆவியிலே ஜீவ

தண்ணீராகிய வசனத்தைக் கொண்டு மறுபிறப்படைகிறான்; புது சிருஷ்டியாகிறான்; இரட்சிப்படைகிறான் (யோ.3:3,5; 1 பேது.1:24; யாக்.1:18; எபே.2:8; ரோ.10:9,10). ஆக, இந்த சரீரம் இருக்கும் வரை உள்ளான மனுஷனாகிய ஆவிக்கு அழிவில்லை.

சரீரம் மரித்த பின் நிலை என்ன? சரீரத்திற்கு no action; புறம்பான மனுஷன் ஒன்றும் அறியான் (see பிர.9:9; 10:4,5; சங்.146:4; 115:17) உள்ளான மனுஷனின் நிலை என்ன? அழியாமை உள்ள தேவனைப் போலவே படைக்கப்பட்ட ஆவியாகிய உள்ளனா மனுஷனும், அழியாமையில் தான் இருக்க வேண்டும்! எங்கே இருக்க வேண்டும்! பிர.12:7; யாக்.2:26; 1 இராஜா 17:21; லூக்.12:20ன் படி உள்ளான மனுஷன் சரீரத்தை விட்டு பிரிகிறான். உள்ளான மனுஷன் ஜீவனோடு - கிறிஸ்துவோடு, பூமியில் வாழ்கிற போது ஜீவித்திருந்தால் பரதீசுக்கு போவான் (2 கொரி. 12:1-4; லூக்.16:19-31;23:43). தேவ தொடர்பு அற்றுப் போய் பூமியில் மரித்து - பிசாசோடு பாவியாய் ஜீவித்திருந்தால் பாதாளம் போவான் (லூக்.16:26; சங்.16:10; 1 பேது.3:18-20; எபே. 4:9; வெளி.1:18). சரீரம் மரித்த பின்னும் உள்ளான மனுஷனாகிய ஆவி, ஆத்மாவுடன் வாழ்கிறது என்று வெளி.6:9-11; மத்.22:31; லூக்.16:31; ஏசா.14:9-11; மாற் 9:43-48; 2 கொரி.5:6-8; பிலி.1:21-23 போன்ற வசனங்களால் அறியலாம். இயேசுவும் பாதாளத்திலிறங்கி 3ம் நாள் உயிர்த்தெழுந்தார். ஆக, தேவசாயலின் படியும், ரூபத்தின்படியும் உள்ளான மனுஷனாகிய ஆவியைப் படைத்துள்ளதால் தேவனைப் போலவே அது அழியாமை உள்ளது. அதோடு இணைந்துள்ள ஆத்மாவும் அதே நிலைதான். ஆமென்.

உள்ளான மனுஷன்தான் அழியாமை உள்ளது. தன் நிலைக்கேற்ப எங்கேயோ வாழும். ஆனால், புறம்பான மனுஷனாகிய சரீரம் அழியக் கூடியது (Mortal). இது ஆதாம் செய்த பாவத்தால், தேவன் கொடுத்த தண்டனையால் வந்தது (ஆதி.3:19) ரோ.2:5; 1 தீமோ.1:10 போன்ற பல வசனங்களின்படி அழியாமையை இயேசு வெளியரங்கமாக்கினார் என்று வாசிக்கிறோம். எப்படி? சுவிசேஷத்தினாலே.

எது சுவிசேஷம்? 1 கொரி.15:1-4. இயேசு நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு 3ம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதே நற்செய்தி. இப்படி இயேசு உயிர்த்ததால் நமக்கு கிடைக்கப் போகும் ஆசீர்வாதங்கள் ஏராளம். ஆனால், நமது ஆராய்ச்சிக்கேற்ற ஒன்றை எடுத்துக் கொள்வோம். இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையிலே அழிந்துப் போகிற

சரீரம் மாறி அழியாமையை தரித்துக் கொள்வோம். (1 கொரி.5:51-54). இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் நடப்பது (1 கொரி.15:14, 15) இதற்கு இணையான 1 தெச.4:16-18ஐயும் வாசியுங்கள். ஒரு இமைப் பொழுதிலே மரித்திருந்த சரீரம் உயிரடையும். இது எப்படி? பரதீசிலுள்ள உள்ளான மனுஷன் புறம்பான மனுஷனில்இணைகிறான். உள்ளான மனுஷன் இல்லாவிட்டால் புறம்பான மனுஷன் வெறும் சரீரக்கட்டுதான்; பிணம்தான் என்று முந்தி அறிக. உயிரடைந்த சரீரம் மறுரூபமாகும். சாவுக்கேதுவான சரீரம் சாவாமையை தரித்துக் கொள்ளும்: ஆமென். சரீரத்திற்குத் தான் அழிந்து போகிற தண்டனையை தேவன், ஆதாமின் பாவத்தினால் கொடுத்தார் என்று முந்தி அறிக. இந்த சரீரம் அழிந்துப் போகிற தண்டனை ஆதாமின் பாவத்தால் உருவானது: அதிலிருந்து விடுதலை கொடுத்து, நமது சரீரத்தை - மேனியை - கூடாரத்தை மறுரூபமாக்கி, அழியாமை நிலைக்கு ஆக்கவே நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மனித சரீரத்தில் வந்து இரட்சிப்பருளினார் (ரோ. 4:16-18). மனித சரீரச் செயல்களுக்கு ஏற்றப்படிதான் எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு (வெளி. 22:12). இந்த சரீரச்செயல்களுக்கு மூலக்காரணம் உள்ளான மனுஷனாகிய ஆவிதான். இருதயமாகிய ஆவியிலே (1 பேது. 33:4) இரட்சிக்கப்பட்டிருந்தால் (ரோ. 10:9-10) தேவ வார்த்தை - கற்பனை அதில் எழுதப்பட்டிருக்கும் (எபி. 8:10). அந்த வார்த்தையினாலே பெலனடைந்த ஆவி, அதனோடு கூட உள்ள ஆத்மாவுக்கு கட்டளை கொடுக்கும் (சங்.103:1-3). உடனே ஆத்மா - மனம் - எண்ணம் - சிந்தனை - உணர்வு, சரீரத்திற்கு சொல்ல, சரீரம் செயல்படும். ஆக, சரீரம் அழியாமையைத் தரிக்க, ஆத்மா வசனத்தால் வாழ வேண்டும்; வளர வேண்டும்; மறுரூபமாக வேண்டும் (2 யோ. 2; யாக்.1:20; ரோ.12:2). ஆத்மா வசனத்தால் வளர, ஆவி மறுபிறப்படைய வேண்டும்; இரட்சிக்கப்பட வேண்டும்.

உண்மை இப்படியிருக்க, யாராவது ஆவியும், ஆத்மாவும் இல்லை என்று சொன்னால் அவர்கள் படைத்தவரை தூஷிக்கிறார்கள என்றும்; ஆவியும் ஆத்மாவும் அழியும் என்று சொன்னால், தேவன் அழியாமை உள்ளவர் என்பதை அவமதிக்கிறார்கள என்றும் தைரியமாய், வசனத்தோடு பதில் சொல்லுங்கள்; இன்னும் தியானியுங்கள்.

❖ ❖ ❖

# நியாயப்பிரமாணம் ஒன்றா? இரண்டா?

தேவனுடைய பிள்ளைகளே! தானி.9:11 போன்ற வசனங்களை வைத்துக் கொண்டு, தேவனுடைய நியாயப்பிரமாணம் என்று ஒன்றும், மோசேயின் நியாயப்பிரமாணம் என்று மோசேயின் நியாயப்பிரமாணம் என்று ஒன்றும், இரண்டு நியாயப்பிரமாணங்கள் உள்ளன என்று ஒரு கூட்டம் போதிக்கிறது. இது போன்ற வசனங்களை மேலோட்டமாய்ப் பார்த்தால், இரண்டு நியாயப்பிரமாணங்கள் இருப்பது போலத் தான் தோன்றும். இதற்கு ஆதாரமாக, உபா.31:26ஐ சொல்லி, உடன்படிக்கைப் பெட்டிக்கு வெளியே வைத்த நியாயப்பிரமாணப் புஸ்தகம் மோசேயின் நியாயப்பிரமாணம் என்றும், உடன்படிக்கைப் பெட்டிக்குள்ளே உள்ள 10 கற்பனைகள் தேவனின் நியாயப்பிரமாணம் என்றும், அதிலே மோசேயின் நியாயப்பிரமாணம் கொலோ.2:14ன் படி சிலுவையிலே ஒழிந்தது என்றும், 10 கற்பனை இன்றும் இருப்பதால், அதில் உள்ள 4ம் கற்பனைப்படி சனிக்கிழமையாகிய ஓய்வு நாளை கைக்கொள்ளாதவன் அந்தி கிறிஸ்துவாகிய போப்பின் முத்திரையைக் குத்தியிருக்கிறான் என்றும் போதிக்கின்றனர். யாத்.20 முதல் 24 வரையில் தேவன் சொன்ன 10 கற்பனை முதலான அனைத்து பிரமாணங்களையும், புஸ்தகத்தில் எழுதி பழைய உடன்படிக்கை பண்ணியதால் (யாத்.24:7,8) அந்த புஸ்தகத்தில் 10 கற்பனையும் உண்டு என்றும். 10 கற்பனையோடு கூடிய நியாயப்பிரமாணப் புத்தகத்திலுள்ள எல்லாமே எபே.2:14, 15ன் படி இயேசுவின் சரீரத்தோடு சிலுவையில் ஒழிந்தது என்றும், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நம்மை மத்.28:20 மற்றும் ரோ.6:17, யூதா.17 போன்ற வசனங்களின்படி இயேசுவின் உபதேசமும் அப்போஸ்தலர்களின் உபதேசமும் வழி நடத்துகிறது என்றும் தீர்க்கமாக பழைய முழக்கங்களிலும், ஆராய்ச்சிப் புத்தகங்களிலும் நான் எழுதியிருக்கிறேன். ஆனாலும் இன்னும் இந்த கருகல் விளங்கவில்லையே! ஆவியானவர் விளக்குவாராக!

பழைய ஏற்பாட்டில் வேதம் (law) என்றால் என்ன என்று தெரிய வேண்டும்? யோ.5:39ன் படி, இயேசுவைக் குறித்து சாட்சி கொடுக்கிற வேதம் (Law) 10 கற்பனையா? மோசே எழுதிய 10 கற்பனைகளடங்கிய முழு நியாயப்பிரமாணப் புஸ்தகமே இயேசுவைக் குறித்து சாட்சி சொல்கிற நியாயப் பிரமாணமாகும்; வேதமாகும். ஆமென். ஏசா.5:24ல் சொல்லப்பட்ட கர்த்தருடைய வேதம் (Law) எது? ஏசா.5:1 முதல் வாசித்தால், ஐயோ! ஐயோ! என்றும் சிறை என்றும், பாழ் என்றும் வருகிறதற்கான குற்றங்களெல்லாம் 10 கற்பனையா? தங்கள் எண்ணத்திற்கு புத்திமான்களும், பார்வைக்கு

ஞானியுமாய் இருப்பது பாவம் என்று சொல்வது 10 கற்பனையா? தேவனைப் பற்றிஅறிகிற அறிவில்லாமல் போனால் சங்காரமாகும் என்று சொல்வது 10 கற்பனையா? 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணம் உள்ளிட்ட அனைத்து வேதப் புத்தகங்களிலுள்ள வசனங்களை மீறுவதே பாவமாகும்; அது தான் வேதம். மேலும் மத்.12:5ல் சொல்லப்பட்ட வேதச் சட்டம் 10 கற்பனை அல்லவே! லேவி 26:3ல் சொல்லப்பட்ட கட்டளைகளும் கற்பனைகளும், 10 கற்பனை மட்டுமல்லாது நியாயப்பிரமாணப் புஸ்தகத்தில் சொல்லப்பட்ட எல்லாம் தானே!

எது மோசேயின் பிரமாணம்? மோசே மூலமாய் சொல்லப்பட்டது எல்லாமே மோசேயின் பிரமாணம் தான். உபா.5:1-6:2 வரை மோசே சொன்ன பிரமாணங்கள், 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணமாய் இருப்பதால் மோசேயின் பிரமாணத்தில் 10 கற்பனையும் சேர்ந்தது தான்! இந்த மோசேயின் பிரமாணம் தேவனின் பிரமாணமா? "ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும், என் தாசனாகிய மோசேக்கு நான் கற்பித்த நியாயப்பிரமாணமாகிய கட்டளைகளையும், நியாயங்களையும் நினையுங்கள்" (மல்.4:4). இதன்படி மோசே எழுதிய நியாயப்பிரமாணப் புத்தகத்திலுள்ள அத்தனை பிரமாணங்களும் தேவனின் பிரமாணம் தான் என்று அறிகிறோம். மேலும் தானி.9:11ல் சொல்லப்பட்டபடி எந்த தேவனின் நியாயப்பிரமாணத்தை இஸ்ரேலர்கள் மீறினார்கள்? தானி.9:9 தான் இதற்கு பதில். "அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம் பண்ணி, அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரரைக் கொண்டு எங்களுக்கு முன்பாக வைத்த அவருடைய நியாயப் பிரமாணங்களின்படி நடக்கத் தக்கதாக நாங்கள் அவருடைய சத்தத்துக்கு செவி கொடாமற் போனோம்" ஆக தேவனுடைய தாசனாகிய மோசே போன்ற எத்தனையோ தீர்க்க தரிசிகள் மூலமாய் தேவன் சொன்ன நியாயப்பிரமாணத்தை இஸ்ரேலர்கள் மீறி நடந்தார்கள். அதனால் மோசேயின் புஸ்தகத்தில் எழுதப்பட்ட சாபங்கள் அவர்களுக்கு வந்தது. ஆக, மோசேயின் நியாயப் பிரமாணமும், மற்ற தீர்க்க தரிசிகளின் பிரமாணங்களும், தேவனின் நியாயப் பிரமாணம் தான் என்று உணர முடிகிறது. எனவே இது வேறு அது வேறு என்று பிரிப்பது வேத விரோதம். மத்.15:4ஐ வாசித்தால் 10 கற்பனையிலுள்ள 5ம் கற்பனையும், அதை மீறுகிறவனைக் கொல்ல வேண்டும் என்ற இரண்டுமே தேவன் கற்பித்த நியாயப் பிரமாணம் என்று உணர்க. சகல கற்பனைகளும், நியமங்களும் கர்த்தரிட்ட பிரமாணங்கள் தான் என்று லூக்.1:6ல் உள்ளதை வாசியுங்கள்.

லூக்.2:23, 24ஐ எழுதுகிறேன். வாசியுங்கள். "முதற்பேறான எந்த ஆண் பிள்ளையும். கர்த்தருக்குப் பரிசுத்தமான தென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கவும், கர்த்தருடைய நியாயப் பிரமாணத்தில் சொல்லியிருக்கிற படி ஒரு ஜோடி காட்டுப் புறாவையாவது. இரண்டு புறாக் குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்தவும் அவரை எருசலேமுக்கு கொண்டுபோனார்கள்." இந்த கர்த்தரின் நியாயப் பிரமாணங்கள் ஒரு சிலர் போதிக்கிறபடி 10 கற்பனையிலா இருக்கிறது? இல்லையே! 10 கற்பனைகளடங்கிய மோசே எழுதிய நியாயப்பிரமாணத்தில் தானே இருக்கிறது. (லேவி. 27:26; 12:8). எனவே கர்த்தரின் நியாயப் பிரமாணமும் மோசே எழுதிய நியாயப் பிரமாணமும் ஒன்று தான் என அறியலாம். மட்டுமல்ல... மத் 5:17, 18ல் வாசித்தால் அங்கு வரும் நியாயப் பிரமாணம் 10 கற்பனை என்று போதிக்கும் கள்ளப் போதகர்களே, மத்.5:21-48 வரை சொல்லப்பட்ட பிரமாணங்கள் எல்லாமே 10 கற்பனையில் இல்லையே! (பல்லுக்குப் பல், சத்துருக்களை பகைப்பாய், தள்ளுதற் சீட்டு போன்றவை). மோசே எழுதிய 10 கற்பனைகளடங்கிய முழு நியாயப் பிரமாணப் புத்தகத்தில் இவைகள் உள்ளன. அப்படியானால் இவைகள் எல்லாமே தேவனின் நியாயப் பிரமாணங்கள் தானே! மத்.5:18ஐ வாசித்தால், இந்த நியாயப் பிரமாணங்கள் நிறைவேறினால் மட்டுமே இவைகள் ஒழிந்து போகுமாம். ரோ.10:4ன் படி கிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். கிறிஸ்துவோடு இந்த நியாயப் பிரமாணங்கள் ஒழிந்தன. இந்த நியாயப் பிரமாணங்களை அறிந்தவர்கள் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு, நியாயப் பிரமாணம் அவர்களை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்திய உபாத்தியாய் இருக்கிறது. விசுவாசம் வந்த பின்பு அவர்கள் உபாத்திக்குக் கீழானவர்கள் அல்ல (கலா.3:24, 25). ரோ.7:1-6ன் படி இஸ்ரேலர்கள் அழிந்து போன நியாயப் பிரமாணப் புருஷனிடத்திலிருந்து விடுதலையாகி, இயேசுவாகிய புருஷனுக்கு மனைவியாயிருக்கிறார்கள். ஆமென்.

இரண்டு பிரமாணமல்ல; ஒன்று தான் என்றால், ஏன் தேவன் எழுதிய 10 கற்பனையை உடன்படிக்கைப் பெட்டிக்குள் வைக்க வேண்டும்? இது கேள்வி, உடன்படிக்கைப் பெட்டிக்குள், தேவனே உண்டாக்கிக் கொடுத்த மன்னா, ஆரோனின் தளிர்த்த கோல், 10 கற்பனைப் பலகைகள் எல்லாம் ஏன் வைக்கப்பட்டன? இன்னும் இது பரலோகில் இருக்கிறதே ஏன்? (வெளி.11:19). இஸ்ரேல் மக்களின் விடுதலையையும், வனாந்திர யாத்திரையையும் அழியாத ஞாபகமாய் வைக்கப்பட்டு இஸ்ரேல் மக்கள் நினைவு கூரவே. மோசே எழுதிய நியாயப் பிரமாணப் புஸ்தகத்திலுள்ள

அத்தனைப் பிரமாணங்களுக்கும் அடிப்படை 10 கற்பனை என்பதால், தேவனே அதை எழுதிக் கொடுத்து உடன்படிக்கை பெட்டிக்குள் வைக்கச் செய்தார். மட்டுமல்ல... வேதத்திலுள்ள எல்லாப் பிரமாணங்களுக்கும் பிரதானமான பிரமாணங்கள் இரண்டு தான் என்று யாக்.2:8; மத். 22:36-40 சொல்கின்றது. இந்த பழைய ஏற்பாட்டு வேதத்தில் சொல்லப்பட்ட ராஜரீகப் பிரமாணங்களை விட, யோ.13:34; 15:10, 12ல் இயேசு சொன்ன புதிய கற்பனையே புதிய ஏற்பாட்டு மக்களாகிய நம்மால் கைக்கொள்ள வேண்டியது. ஆமென்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! யார் மூலமாய் பிரமாணங்கள் கொடுத்தாலும் அவைகள் தேவனுடைய பிரமாணங்கள் என்றும், மோசேயின் பிரமாணம், தேவனின் பிரமாணம் என்று, இரண்டு வகையான பிரமாணங்கள் இல்லை என்றும், பழைய ஏற்பாட்டு வேதப் பிரமாணங்கள் இயேசுவோடு ஒழிந்தது என்றும், புதிய ஏற்பாட்டுப் பிரமாணம் இயேசுவால் கொடுக்கப்பட்டு அபபோஸ்தல உபதேசத்தால் உணர்த்தப்பட்டிருக்கிறது என்றும் அறியுங்கள்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்.

❖ ❖ ❖

## அண்ணகர்களுக்கு சபையில் மரியாதை கொடுக்கலாமா?

அண்ணகர் என்றால் "EUNUCH" அதாவது நாம் சொல்கின்ற அலி என்று பொருள். அலி என்றால் குழந்தை பிறப்பிக்க இயலாத நிலையில் உள்ளவர்கள் என்று நாமறிவோம். ஆண்களாய் இருப்பவர்கள் தங்களின் குணாதிசயங்கள் மற்றும் செயல்பாடுகள் எல்லாம் பெண்ணின் குணாதிசயத்திற்கு வந்து விடுவார்கள். ஆனால் இவர்கள் குழந்தை உற்பத்தித்திறன் என்ற முறையில் ஆணென்றும்மில்லை, பெண்ணென்று மில்லை. சமுதாயத்திலே இப்படிப்பட்ட அலிகள் ஒடுக்கப்படுகின்றனர். இவர்களுக்கு அறிவிருந்தும் படிப்பிருந்தும் பணமிருந்தும் சமுதாயத்திலே தள்ளப்பட்டவர்களாய் காணப்படுகின்றனர். பெரும்பாலும் இவர்கள் பாலியல் விஷயத்திற்கே உபயோகிக்க உலகம் நினைக்கிறது. அண்ட சராசரங்களையும் படைத்த தேவன், அகில உலக மக்கள் இரட்சிக்கப்பட ஜீவனைத் தந்த தேவன் இவர்களுக்கும் தேவனல்லவா! இவர்களும் மனிதர்கள் தானே! யோ.3:16 இவர்களுக்கும் உண்டல்லவா! இவர்களைப் பற்றி வேதம் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம்.

**இயேசு கிறிஸ்து சொன்னார்:-** உலகிலே 3 விதமான அண்ணகர்கள் உண்டு என்று. ஒன்று பிறவியிலேயே அண்ணகர்களாகப் பிறந்தவர்கள். இரண்டு, மனுஷர்களால் அண்ணகர்களாக்கப்பட்டவர்கள். மூன்று பரலோக ராஜ்யத்தினிமித்தம் தங்களை அண்ணகர்களாக்கிக் கொண்டவர்கள் (மத்.19:12). அந்த மூன்றாவது நிலையிலிருந்தவர்கள் தான், எலிசா, எலியா, இயேசு கிறிஸ்து போன்றோர். இவர்களுக்கெல்லாம் குழந்தை பிறப்பிக்க முடிந்தாலும் (Productivity) அதை கண்ட்ரோல் பண்ணி - கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள். தற்காலத்தில் சி.பி.எம். கிருபாசனம் போன்ற சபைகளில் உள்ள திருமணம் முடிக்காத ஊழியர்கள் இந்த லிஸ்டில் வருவார்கள். ஆதி காலத்தில் புறஜாதி சாமியார்கள் இப்படியாய் அண்ணகர்களாகாமல், தங்களின் குழந்தை பிறப்பிக்கும் உறுப்பை தறித்துப் போட்டு அண்ணகர்களாய் வாழ்வதும் உண்டு. பெரிய பெரிய அரண்மனைகளிலே ராஜாக்கள் ஏராள மனைவிகளை வைத்திருக்கும் போது, அங்கே பாதுகாப்பிற்கு உள்ள ஆண் மக்களை அண்ணகர்களாக அறுவை சிகிச்சை மூலம் ஆக்கிக் கொள்ளும் பழக்கம் இருந்தது. இது பெரும்பாலும் புறஜாதிகளிடம் இருந்தது. (2 ராஜா.8:6; 9:32; ஏசா.39:5-8). இது தான் இரண்டாவது நிலை. சுவிசேஷகன் பிலிப்புவிடம் ஞானஸ்நானம் பெற்ற காந்தேகயின் மந்திரியும் அண்ணகர் தான் (அப்.8:27) தாவீது, சாலமோன், எசேக்கியா காலங்களிலும் இப்படிப்பட்ட அண்ணகர்கள் உபயோகிக்கப் பட்டனர் (1 நாளா 28:1; ஏசா.56:3-4). இப்படி அறுவை சிகிச்சை மூலம் அண்ணகர்களாக்கப்படுவதை வெறுப்பவர் நம் தேவன் (See உபா.25:11, 12) முதலாவது வகை அண்ணகர்கள் பிறவியிலேயே அப்படிப் பிறப்போர். அது முன்னோரின் பாவமோ, சாபமோ, பிசாசின் கிரியையாகவோ இருக்கலாம்.

3வது வகையை தேவன் வெறுப்பதில்லை; 2ம் வகையை வெறுக்கிறார்; அது கூடாது. முதல் வகை அண்ணகர்களைத் தான் "அரவாணிகள்" என்று உலகம் சொல்கிறது. இந்த அரவாணிகளின் உடல்வாகு மாறாதா? அவர்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேரலாமா? சபையிலே அவர்களுக்கு மரியாதை கொடுக்கலாமா? நமது முன்னாள் முதல்வர் கலைஞர் கூட இவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு, ஆண்பால், பெண்பால் என்பதோடு இவர்களை மூன்றாவது பாலாக்கி, இவர்களுக்கென்று நல வாரியம் உருவாக்கி, வேலை ஸ்தலங்களிலும் இவர்களுக்கு சலுகைகள் வழங்கி இருக்கிறார். யாக்.1:17ன் படி எல்லா நன்மையான ஈவும் நம் தேவனிடமிருந்து தான் வருவதால் இந்த நன்மைகளும் நம் தேவன் தந்ததே! பிறவிக் குருடர்களையும்,

சப்பாணிகளையும், செவிடர்களையும், ஊமையர்களையும் சுகமாக்கிய தேவன், இவர்களை சுகமாக்க முடியாதா? மரணத்தையே ஜெயித்த ஆண்டவர் இதிலிருந்து விடுதலை கொடுக்க மாட்டாரா? ஆபிரகாம் - சாராளின் செத்துப் போன சரீரத்திற்கே ஜீவன் கொடுத்தவர் அண்ணகர்களின் (அரவாணிகள்) உள்ளம் மற்றும் உடல்நிலையை மாற்றமாட்டாரா? ஏசா.35, 32ஐ எல்லாம் வாசித்தால், 1000 வருட ஆட்சியிலே வாழப் போகும் குடி மக்களின் எல்லாக் குறைகளும் நிறைவாகும் என்று அறிகிறோமே அங்கு தான் இந்த அரவாணிகளின் குறையும் நிறைவாகுமா? இது கேள்வி.

"அண்ணகர்கள் இரட்சிப்புக்குள் வரவேண்டும்; தேவ ராஜ்யத்தில் இணைய வேண்டும்; மத்.6:33ன் படி அதிகப்படியான ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும்" என்ற ஆதங்கத்தில் தானே எங்கோ இருந்த சுவி.பிலிப்பை அழைத்து, சத்தியம் சொல்லி காந்தேகேயின் மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுக்க வைத்தார் தேவன். தேவனுடைய ராஜ்யத்துக்குள் வந்தவன் எல்லாவற்றிலும் ஆசீர்வாதமாயிருப்பானல்லவா! எனவே முதலாவது இந்த அண்ணகர்களுக்கு சுவிசேஷம் சொல்லி, சத்தியத்திற்குள் கொண்டு வரவேண்டும்; சத்தியம் அவர்களை விடுதலையாக்கும். இதற்கெல்லாம் அரவாணிகளும் ஒத்துழைப்பதில்லை; அவர்களை அழைக்க ஊழியர்களும் அத்திபூத்தாற்போல் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் தான் எழும்பியிருக்கிறார்கள். ஏன்? உலக பயமும் சொந்த பயமும் இரண்டு வட்டத்தாரையும் மேற் கொள்கின்றன. முதலாவது அண்ணகர்களை கிறிஸ்தவர்களாக்குவோம்! "அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் பார்க்கிலும், உத்தம இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன்; என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்" (ஏசா.56:5) என்று தேவன் சொல்கிறார். அல்லேலூயா! இந்த வார்த்தைப்படி ஊழியர்கள் சபைகளிலே அண்ணகர்களை பரிபாலிக்க வேண்டும். அவர்களின் ஆத்மா வளர வளர, அவர்கள் எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருப்பார்கள் (3 யோ 2). "அண்ணகனும்! இதோ நான் பட்ட மரம் என்று சொல்லானாக" (ஏசா.56:3) என்று தேவன் சொல்வது உங்கள் காதில் விழுகிறதா? அவர்களைப் பற்றி தேவன் எவ்வளவு கரிசனை கொண்டிருக்கிறார் பார்த்தாயா? உன்னை நம்பித் தானே நம் தேவன் தன் ஊழியத்தை விட்டு விட்டுப் போயிருக்கிறார்! நீதானே அதை செயல்படுத்த வேண்டும்!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! அதிசயங்களாலும் அடையாளங்களாலும் தேவனுடைய வசனத்தை - வசனமாகிய இயேசுவை

- ஜீவனுள்ளதாய் உறுதிப்படுத்தும் தருணம் வந்து விட்டது (மாற்.16:20). இயேசுவிலும் மேலான காரியங்களை செய்யும் காலம் கனிந்து விட்டது (யோ.14:12). இன்றே ஒப்புக் கொடு! அரவாணிகளின் உள்ளமும் உடல் கூறும் உன் ஊழியத்தால், தேவனின் பெரிதான கிருபையோடு மாறட்டும்! அவர்களுக்கு செழிப்பான கிருபையோடு மாறட்டும்! அவர்களுக்கு செழிப்பான, மேன்மையான, நல்வாழ்வு கிடைக்கட்டும்! இந்த சமுதாயமே இரட்சிக்கப்படட்டும்! கலா.3:13ன் படி அவர்கள் மூதாதையரின் சாபங்களால் குறைகள் வந்திருந்தால் அது நிறைவாகும் என்று விசுவாசவரம் அவர்களுக்குள் உருவாகட்டும்! சபைகளிலே அவர்களை மேன்மைப் படுத்துவோம்; கீர்த்தனம் பண்ணுவோம். தேவ சித்தம் நம் மூலம் நிறைவேறட்டும். ஆவியான வரைச் சார்ந்து கொள்; வசனத்தைப்பிடித்துக் கொள்; தோல்வியைக் கண்டு துவளாதே! வெற்றி உனக்குத் தான்! அரவாணிகள் நம்மைப் போல் ஆகப் போகிறார்கள். ஆமென்! இந்த ராஜாக்கள் கையை வைத்தால் அது ராங்காய் போவதில்லை (மாற்.16:17). விசுவாசிப்போம்! விசுவாசம் வெற்றியைத்தரும்! ஆமென்!

❖ ❖ ❖

## முதலில் பரீட்சையா? இல்லை பாடமா?

தேவனுடைய பிள்ளைகளே! நான் ஒரு ஊழியர் கூடுகைக்குப் போயிருந்தேன். அங்கே ஒருவர், “பள்ளிகளில்தான் முதலில் பாடம் நடத்துவார்கள்; அதற்குப் பின் பரீட்சை நடக்கும். ஆனால் தேவனோ முதலில் பரீட்சை வைத்து, பரீட்சையிலே பாஸ் பண்ணியவர்களுக்கு தன்னுடைய பாடத்தை, வேதத்தின் மூலம் கற்றுக் கொடுக்கிறார்” என்று கூறினார். உடனே வந்திருந்த ஊழியர்கள் எல்லாம் ஆமென்; அல்லேலூயா என்று குரல் கொடுத்தார்கள். இது, அறிந்து, உணர்ந்து, வந்த குரலாக எனக்குத் தெரியவில்லை. தற்காலத்திலே, செய்தி கொடுப்பவரின் அந்தஸ்து, நடை உடை பாவனை, உணர்ச்சி வசப்பட்ட நிலை, அழுதல் - சிரித்தல் - பாடுதல் போன்ற செயல்கள் என்கின்ற காரியங்களை வைத்து, அவர் என்ன சொன்னாலும் ஓகே என்று சொல்லுகின்ற நிலை கிறிஸ்தவ வட்டாரத்தில் இருக்கின்றது. நல்ல வேளை இந்தப் பிரசங்கியார் முதலில் சோதனை என்று சொல்லாமல், பரீட்சை என்று சொன்னார். ஆனாலும் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சோதனையையும், பரீட்சையையும் ஒன்று என்றே கணிப்பதால் அப்படி

அவர் "பரீட்சை" என்று சொன்னாரோ தெரியவில்லை. தேவன் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

முதலில் "சோதனை வேறு" பரீட்சை வேறு என்று தெரிய வேண்டும். சோதனை என்றால் Tempt - பொல்லாங்கான காரியங்களை கொடுப்பது. பரீட்சை என்றால் Test - நன்மைக்கானது, நன்மையானது. யாக்.1:13ன் படி தேவன் பொல்லாங்கினால் சோதிப்பதே இல்லை. பொல்லாங்கினால் சோதிப்பதே இல்லை. பொல்லாங்கினால் சோதிக்கிறவன் பிசாசு. எபி.2:18ஐ வாசித்தால் "ஆதலால் அவர் (இயேசு) தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்" என அறிகிறோம். ஆக, சோதனையை இயேசுவுக்கு தந்தவன் பிசாசு என்றும், பிசாசின் பொல்லாதவைகளினால் சோதிக்கப்பட்டு பாடுபடுபவர்களுக்கு உதவி செய்து, விடுதலை பெற்று ஜெயங் கொள்ள தேவன் செயல்படுகிறார் என்றும் அறிகிறோம். 1 கொரி.10:13 லும் இதே கருத்துத் தான் சொல்லப்பட்டிருக்கிறது. சோதிக்கப்பட்டு வருகிற பாடுகளிலே கூட, கிறிஸ்து வினிமித்தம் - கிறிஸ்துவின் சுவிசேஷத்தினிமித்தம் - வருகிற பிசாசு கொடுக்கிற பாடுகள் வேறு; நமது பாவத்தாலும், சாபத்தாலும், பிசாசின் செயலாலும் வருகிற பாடுகள் வேறு. இந்தக் காரியம் தெரிந்தால் போதும் கிறிஸ்தவன் பதறான்; வீழ்ந்து போகான்; எழுந்து நடப்பான்; வெற்றி கொள்வான்.

"தேவன் சோதனையை கொடுப்பதில்லை; தேவன் சோதிக்க அனுமதிக்கிறார்" என்று சொல்லும் ஊழியர்களும் உண்டு. ஒரு அப்பா, தன் மகனுக்கு பணத்தை தன் கையினாலே கொடுக்காமல், தன் பர்சிலோ, பாக்கெட்டிலோ, பேங்கிலோ எடுத்துக் கொள் என்று அனுமதிக்கிறதும் கொடுப்பது தானே! பிசாசானவன் திருடவும், கொல்லவும்,. அழிக்கவும் ஆதி முதலே வந்திருக்கிறான்; ஆதி முதலே தேவன் அவனது காரியத்தைத் தடை செய்யவில்லை. அவனது செயல் தொடர்ந்து கொண்டு தானிருக்கிறது. இது இந்த பூமியின் ஆரம்ப நாடகளிலிருந்து வந்தது. நம் தேவனாகிய கிறிஸ்துவோ, நமக்கு ஜீவனுண்டாயிருக்கவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவும் செயல்படுகிறார் (யோ.10:10). இவரே ஒவ்வொருவருக்கும் பொல்லாத சோதனையை அனுமதித்தால், அதன் பின் அதிலிருந்து விடுதலை பெறவும் வழிவகுத்தால், இவர் பிள்ளையையும் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டி விடும் நாரதர் வேலையைச் செய்பவராக ஆகி விடுவாரே! ஆதி முதலே பிசாசு பொல்லாங்கான சோதனையைச் செய்கிறான் என்று முதலில் அறிய வேண்டும். யோபு விஷயத்தில் தேவன் அனுமதித்தார் என்று நம்பும் கிறிஸ்தவர்கள் ஏராளம். இது குறித்து விளக்கமாய் பல செய்திகள் ஆசிரியரின்

ஆராய்ச்சிப் புத்தகத்தில் எழுதப்பட்ருக்கின்றன. வாசியுங்கள். யோபு விஷயத்தில் தேவன் யோபுவை பாதுகாத்தாரே ஒழிய - இரட்சித்தாரே ஒழிய - சோதிக்க அனுமதிக்கவே இல்லை. நன்மை செய்வதே நம் தேவனின் குணாதிசயம் (எபே.2:10); நன்மை செய்கிறவராகவே மனிதனாயிருக்கும் போதும் சுற்றித்திரிந்தார் (அப்.10:38); நன்மையான ஈவே தேவனுடையது (யாக்.1:17). அவர் கிருபையும், இரக்கமும், மனதுருக்கமும் உடையவர். நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்று புதிதான கட்டளையை கொடுத்த அன்பாயிருக்கிற தேவனவர் (யோ.13:34; 1 யோ.3). உண்மை இப்படியிருக்க, பிசாசின் பொல்லாத சோதனைகளை கொடுத்தார் என்றோ, கொடுக்க அனுமதித்தார் என்றோ சொல்வது அறிவில்லாமை (ஓசி.4:6); அதனால்தான் கிறிஸ்தவன் சங்காரமாகிறான்; பிசாசு செய்வதை தேவன் செய்கிறார் என்று வாய்புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று கிறிஸ்தவன் சொல்லித் திரிகிறான்.

ஆதி.22:1ஐ வைத்துக் கொண்டு, ஆபிரகாமை தேவன் சோதிக்கவில்லையா என்று கேட்போர் உண்டு. பல இடங்களில் மொழி பெயர்ப்புப் பிழைகள் இருப்பதால் சோதனையை பரீட்சை என்றும், பரீட்சையை சோதனை என்றும் வார்த்தைகள் மாறி வேதத்தில் காணப்படுகின்றன. ஆதி.22:1ல் உள்ள சோதனைக்கு மூல பாஷையில் "Nacah" - to test, to prove என்று உள்ளது. ஆபிரகாமை நீதிமான் என்று வெளிக்காட்ட - உறுதிப்படுத்த - தேவன் பரீட்சை பார்த்தார். இதிலே உள்ள நரபலி என்பது பொல்லாங்கானதாய்த் தோன்றினதால், அதை ஆபிரகாமை செய்ய விட வில்லை (ஆதி.21:12). பொல்லாங்கான காரியத்தை நம் தேவன் நம் மூலமாய் செய்யவோ - நாம் அனுபவிக்கவோ விடவேமாட்டார். அல்லேலூயா! லாசரின் கல்லறையின் மேலுள்ள கல்லை புரட்டிப் போடாமலே லாசருவை வெளியே கொண்டு வர தேவனால் முடியும். ஆனாலும் விசுவாசத்தை பரீட்சை பார்க்க கல்லைப் புரட்டச் சொன்னார். இது பொல்லாங்கானது அல்ல. உடன்படிக்கைப் பெட்டியோடு வெள்ளம் பொங்கி வரும் யோர்தனை கடக்க, வெள்ளத்தில் கால்வைக்கச் சொன்னதே அவர்களுக்கு தேவன் வைத்த விசுவாசப் பரீட்சை. இந்த பரீட்சையில் பொல்லாங்கு நடக்க தேவன் விடவில்லையே! ஆக, விசுவாசப் பரீட்சை தான் தேவன் தரும் பரீட்சை என்றும், அது வெற்றிக்காகத் தானே ஒழிய, பொல்லாங்கான காரியங்கள் நடந்து அதன் பின் நன்மைகள் செய்ய அல்ல என்றும் அறிகின்றோம்.

இந்த வசனத் தெளிவோடு, செய்தித் தலைப்புக்கு வருவோம். தேவன் நம்மை பரீட்சை பார்ப்பது முதலிலா? பாடம் கற்பிப்பது முதலிலா? "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது அதனால் உமது பிரமாணங்களைக் கற்று கொள்கிறேன்" (சங்.119:71) என்ற தாவீதின் வசனத்தை வைத்து, "உபத்திரவம் - பாடுகள் - போன்ற பரீட்சை தான் முதலில் உண்டு; அதற்குப் பின் தான் பாடங்கள் - பிரமாணங்கள் கற்றுத்தருதல்" என்று நினைக்கிறார்கள். தாவீது சொல்லுகிற உபத்திரவம் எது? தேவன் கொடுத்த பரீட்சையா? சங்.119:67ஐ தியானியுங்கள். உபத்திரவப்படுவதற்கு முன் தாவீது வழி தப்பி நடந்தான். தாவீது தவறாய் நடந்ததால் உபத்திரவம் வந்தது. தவறாய் நடக்க தேவனா வழி நடத்துவார்? இல்லை. பிசாசு தான் நடத்துவான். அப்படியானால் தாவீதுக்கு வந்த உபத்திரவம் தேவனால் வரவில்லை; பிசாசால் வந்தது. ஆமென். தேவன் கொடுத்த வழியை விட்டு (ஏற்கெனவே பாடம் புகட்டப்பட்ட வழியை விட்டு) தப்பி, பிசாசின் வழியில் போனான்; உபத்திரவப்பட்டான்; பிசாசால் அடிபட்டான்; அடிபட்ட பின் தான் அவனுக்குப் புத்தி வந்தது. அதன்பின் தான் பிரமாணங்களைக் கற்றுக் கொள்கிறான்; காத்து நடக்கிறான். இப்படியாய் பிசாசின் மார்க்கத்திற்குப் போய் பாடம் கற்றுக் கொள்ள தேவன் விரும்பவில்லை; முதலிலே அவரே பாடம் - வசனம் - கற்றுக் கொடுக்கிறார்; வெற்றிக்கான - நன்மையான - பரீட்சை வைக்கிறார்; வெற்றிமேல் வெற்றியைப் பெற வைக்கிறார்; பிசாசுக்கு இடங்கொடுக்க வழியில்லாமல் ஆக்குகிறார். அல்லேலூயா! இப்படியாய் பாடம் முதலில் கற்றுக் கொடுத்து, பரீட்சை வைக்கும் தேவனின் ஒரு சில காரியங்களைச் பார்க்கலாம்.

ஆதி.22ல் தேவன் ஈசாக்கை பலியிடச் சொல்லி பரீட்சை பார்க்கிறார். 100 வருடங்களுக்குப் பின், தன் சரீரமும் சாராயின் கர்ப்பமும் செத்துப் போன பின்னும் பிறந்தவனை பலியிடச் சொன்னபோது மனைவியிடம் கூடச் சொல்லாமல் புறப்படுகிறானே எப்படி? "நானும் பிள்ளையாண்டானும் அவ்விடமட்டும்போய், தொழுது கொண்டு, உங்களிடத்திற்குத் திரும்பி வருவோம்" (ஆதி.22:5) என்று விசுவாசத்தோடே ஆபிரகாம் சொன்னானே எப்படி? தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்று கேட்ட ஈசாக்குக்கு, தேவன் பார்த்துக் கொள்வார் (வச.8) என்று விசுவாசத்தோடே சொன்னானே எப்படி? ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, ஈசாக்கைக் கட்டி, கட்டைகளின் மேல் கிடத்தினானே, தன் குமாரனை வெட்ட தன் கையை நீட்டி கத்தியை எடுத்தானே, இந்த விசுவாசம் எல்லாம் எப்படி வந்தது? வேதம்

சொல்லுகிறது:- "விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று (ரோ.10:17). அப்படி என்ன தேவனுடைய வசனத்தைக் கேட்டு ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனானான்? ஆதி.17ல் சாராளுக்குப் பிறக்கும் ஈசாக்குக்கும், இவனுக்குப் பின் வரும் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கை ஏற்படுத்தி; ஈசாக்கு மூலமே பெரிய ஜாதி உருவாகும் என்ற வசனத்தை சொல்லி, ஆபிரகாமுக்கு விசுவாசத்தை வளர்த்ததால் தான், ஈசாக்கைப் பலியிட தைரியமாய் கொண்டு போனான்; அவன் பலியானாலும் திரும்ப தேவன் உயிர் பெற வைப்பார்; **"தேவன் சொன்னதைச் செய்கிறவர்; செய்கிறதை மாத்திரமே சொல்லுகிறவர்"** என்ற விசுவாசம் தேவன் தந்த வசனப் பாடத்தால் வந்திருக்கிறது. எபி.11:18,19ம் இதையே விவரிக்கிறது. ஆக, வசனப்பாடத்தை முதலில் கொடுத்து, விசுவாசத்தில் வளர்த்து, அதன் பின் அந்த விசுவாசத்தில் எந்த அளவுக்கு அவன் நிற்கிறான் என்றே தேவன் பரீட்சை பார்த்தார். பரீட்சையிலே வென்றான். இந்தக் கிரியையினாலே நீதிமான் என்று உறுதிப்பட்டான் (யாக்.2:20-24). ஆமென்.

யோர்தானைக் கடந்தால் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசம். இந்த யோர்தானைக் கடக்கும் போது தான் அங்கே பெரும் வெள்ளம். இந்த வெள்ளத்தில் ஆசாரியரின் கால்கள் பட வேண்டும் என்று தேவன் பரீட்சை பார்க்கிறார். (யோசு.13:8;15). கரைபுரண்டு போகும் யோர்தான் தண்ணீரிலே கால் வைக்க விசுவாசம் எப்படி வந்தது? யோசுவா 3ம் அதிகாரம் மற்றும் 40 வருடங்களாக தேவன் கானானனுக்கு செல்வது பற்றி சொன்ன வசனப் பாடங்கள், எல்லாமே அவர்களுக்கு விசுவாசத்தை தந்தது. "மடிந்து போக மாட்டோம்; தேவன் சொன்னபடியே கானானுக்குள் கொண்டு போவார்" என்று கேட்ட வசன விசுவாசத்தை செயல்படுத்தி, பரீட்சையிலே பாஸ் பண்ணுவார்களா என்பதிலே அவர்கள் வெற்றி பெற்றார்கள். பரீட்சையிலே ஜெயித்து விசுவாச வீரராகி. வெற்றி வாழ்க்கையில் செழித்திருக்க முதலில் தேவை வசன விசுவாசப் பாடமே!

இதை வாசிக்கும் தேவ பிள்ளைகளே! இதே போல் எத்தனையோ நிகழ்ச்சிகளை வேதத்தில் காணலாம். அழைத்த தேவன். முதலில் வசனத்தால் பாடம் புகட்டி விசுவாசத்தை வளர்க்கிறார்; விசுவாசத்தில் உறுதியாய் இருக்கிறானா என்று வசன விசுவாசப் பரீட்சை வைக்கிறார்; பரீட்சையின் முடிவோ அவனுக்கு வெற்றியை மாத்திரம் அல்ல; சாட்சி ஜீவியத்தை உலகிற்கு காட்டுகிறது. மட்டுமல்ல... பொல்லாத பிசாசின் பெரும் சோதனைகள் வந்தாலும் ஜெயிக்க வலிமையும், தைரியமும் வந்து

விடுகிறது.. எனவே முதலில் தேவன் தரும் வசன விசுவாசப் பாடத்தைப் படிப்போம்; பரீட்சையிலே வெல்வோம்; ஆசீர்வாதம் பெறுவோம்; பிசாசின் சோதனையை தூள் தூளாக்குவோம்! அல்லேலூயா! ஆமென்!

❖ ❖ ❖

## மனுஷகுமாரனுடைய அடையாளம் என்ன?

தேவனுடைய பிள்ளையே! "அப்போது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷ குமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமை யோடும் வானத்தின் மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் (மத்.24:30)" என்ற வசனத்தை வைத்துக் கொண்டு, மனுஷ குமாரனுடைய அடையாளம் என்ன என்று ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையார் பலர் ஆராய்ச்சியில் இறங்கி தங்கள் தங்கள் உலக அறிவுக்கேற்றபடி விளக்கங்கள் தந்து சத்தியத்தை மாறுபாடாக்குகிறார்கள். இதனால் விசுவாசிகளின் விசுவாசம் வேத வசனத்தின்படி இல்லாமல், இந்த பெரியவர்களின் வார்த்தைப்படியே மாறி விடுகின்றது. ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

முதலில், வருகை இரண்டு உண்டு என்றும், முதலாம் வருகை முடிந்து விட்டது என்றும், 2ம் வருகை வரப்போகின்றது என்றும், இந்த இரண்டு வருகையும், இந்த பூமிக்கு இயேசு வருவது என்றும் அறிய வேண்டும் (எபி.9:28) இந்த 2ம் வருகைக்கு 7 ஆண்டுகளுக்கு முன்பதாக மத்திய ஆகாயத்திலே இயேசு வந்து சபையாரைக் கூட்டிக் கொண்டு போகின்ற இரகசிய வருகை Secret Rapture - நடக்கும் என்றும் உணர வேண்டும் (1 கொரி.15:51; தெச.4:16-18). இந்த இரகசிய வருகை பழைய ஏற்பாட்டிலோ, இயேசு கிறிஸ்துவாலோ சொல்லப்படாமல் இரகசியமாய் வைக்கப்பட்டிருந்தது. பவுல் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருப்பதால் (1 கொரி.5:51) மத்தேயு 24, 25 போன்ற அதிகாரங்களில் சொல்லப்பட்ட வருகையெல்லாம் 2ம் வருகை தான் என்று உணர வேண்டும். பூமியை நியாயந்தீர்க்க ராஜாதி ராஜவாய், கர்த்தாதி கர்த்தாவாய், இயேசு கிறிஸ்து வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வருவார் என்றும், அது கண்டு, பூமியிலுள்ளோர் - கைவிடப்பட்டு அந்தி கிறிஸ்து ஆட்சியில் வாழ்வோர் - அழுது புலம்புவார்கள் என்றும் அறிகின்றோம். இந்த விளக்கத் தெளிவோடு மத்.24:30ஐ தியானிப்போம்.

வேதத்திலே மோசேக்கு, கிதியோனுக்கு, எசேக்கியாவுக்கு, யூதர்களுக்கு, யோசுவாவுக்கு என்று பலருக்கும் அடையாளங்கள் சொல்லப் பட்டிருக்கின்றன. வரப்போகும் அந்தி கிறிஸ்துவின் வருகைக்குக் கூட அடையாளம் உண்டாம்! (2 தெச.2:9) இந்த கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளத்தை முழுமையாய் நாம் காணாவிட்டாலும் அவைகளின் முன்னோட்டம் போல ஒரு சில வற்றை தற்போது நாம் நேரிடையாகவே பார்க்கின்றோம். அதுதான், கள்ள உபதேசங்களும், கள்ள தீர்க்கதரிசனங் களும் கள்ள கிறிஸ்துக்களும். அதுதான் குழந்தை ஞானஸ்நானமும், ஈஸ்டர், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளும். அது தான் விக்ர ஆராதனைகளும், அந்நிய நுகப்பிணைப்புகளும். அப்படியே மனுஷகுமாரன் பூமிக்கு வருமுன்னும் அநேக அடையாளங்கள் நடக்கும். அந்த அடையாளங்களைத் தான் சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள் (மத்.24:3) அதைத் தான் இயேசு விளக்கமாய் சொல்லி வருகின்றார் மத்.24ல். ஏராளமான அடையாளங்கள் இயேசு கிறிஸ்து சொல்லியிருக்க மத்.24:30ல் சொன்னதை மாத்திரம் பெரிதுபடுத்தி கிறிஸ்துவ வட்டாரம் பலவாறாகச் சொல்கின்றது. அவைகளில் ஒன்றிரண்டைப் பார்க்கலாம்.

பூமியிலே ஏராளமான அடையாளங்கள் காணப்பட்டாலும், வானத்திலும் அடையாளம் காணப்படுமாம். இயேசு வரும் முன்னாலே வானத்திலே அது தென்படுமாம். ஒரு சில ஆவிக்குரிய சபை பிரசங்கிமார் அந்த அடையாளம் இயேசு தொங்கிய சிலுவை என்றும், அந்த சிலுவையை வானத்திலே காண்பார்கள் என்றும் சொல்கிறார்கள். ஏஞ்சல் TV சாது சொல்கிறார்:- "இயேசு வரும் போது சிலுவை போல தெரியும். எப்படியெனில் நடுவில் இயேசு நிற்கிறார். வலதுபுறமும் இடதுபுறமும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் தனித்தனியே இருப்பர். மேல்பகுதியில் தூதர்கள் இருப்பார்கள்". ஆக எல்லாருமே சிலுவைக்கு முக்கியத்துவம் கொடுத்தே விளக்கமளிக்கின்றனர். சிலுவை ஓர் அவமான சின்னம் என்று அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. மகாகொடியவர்களும் மாபாவிகளும் தொங்குகின்ற அந்த சிலுவையில் தொங்கினதால் தானே இயேசு சபிக்கப்பட்டவரானார்! நாம், தொங்கிய நம் இயேசு கிறிஸ்துவுக்கே மரியாதை கொடுக்க வேண்டும். வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்பட்டதால் தியாகியானார். மகாத்மா காந்தி, இந்திரா காந்தி போன்றோர் துப்பாக்கியினால் இரத்தம் சிந்தினர். இரட்சிக்கப்படாத மனுஷன் கூட அந்த தலைவர்களுக்கு மரியாதை கொடுக்கும் போது தூக்குக் கயிறுக்கோ, துப்பாக்கிக்கோ மரியாதை

செலுத்துவதில்லை, அவைகளை மேடைகளில் வைப்பதும் இல்லை. அவர்கள் தங்கள் தலைவர்களை மதிக்கும் அளவுக்குக் கூட தேவாதி தேவனாம் நம் இயேசுவுக்கும் நம்மவர்கள் மரியாதை தராமல், "சிலுவை ஓர் புனித சின்னம்....." என்று பாடுகிறார்கள். உயிரற்ற, உணர்வற்ற, கேவலமான மரக்கட்டையை புனிதமாக்கவா இயேசு இரத்தம் சிந்தினார்? இயேசுவின் இரத்தம், ஆவி-ஆத்மா-சரீரமுடைய நம்மைத்தானே புனித மாக்கும்! இந்த பகுத்தறிவு இல்லாமல் 2ம் வருக்கைக்கான அடையாளம் கூட சிலுவைதான் என்று ஏன் தான் சொல்கிறார்களோ தெரியவில்லை. அம்மா மரியாள் இல்லாமல் இயேசு இல்லை என்று மரியாளுக்கு மகிமை தரும் ரோமன் கத்தோலிக்கரின் ஆவியும், சிலுவைக்கு மகத்துவமும் மரியாதையும் தரும் இவர்களின் ஆவியும் ஒன்றுதானே! சிந்தியுங்கள்.

சிலுவையிலே மரித்து உயிர்த்தெழப்போகும் இயேசுவிடம் வேதபாரகரும், பரிசேயரும், அடையாளத்தைக் கேட்ட போது அவர் சிலுவையைக் காட்டவில்லை. மத்.12:40,41ஐ வாசியுங்கள். யோனா இரவும் பகலும் மீனின் வயிற்றில் 3 நாள் இருந்தது போல, மனுஷகுமாரனும் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்ற யோனாவின் அடையாளத்தையே கொடுத்தார்! அல்லேலூயா! அவருடைய மரணமும், உயிர்த்தெழுதலும் அவ்வளவு விலையேறப் பெற்றது. அதற்கு அடையாளம் தானே ஞானஸ்நானம் என்பது. மத்.16:1-4ஐ வாசியுங்கள். பரிசேயரும், சதுசேயரும் வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள். வானத்திலிருந்து அடையாளம் கேட்டாலும், யோனா தீர்க்கதரிசியின் அடையாளம் தான் இயேசுவினால் கொடுக்கப்பட்டதேயன்றி, சிலுவை அடையாளம் கொடுக்கப்படவில்லை. சிந்தியுங்கள்.

மத்.24:30ல் வானத்தில் மனுஷகுமாரனுடைய அடையாளம் காணப்படும் என்று உள்ளது. தேவன் ஏன் வானத்தில் அடையாளம் காட்டவேண்டும்? எரே 10:20 வாசியுங்கள். வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குவார்கள்ளாம். புறஜாதியாரின் மனநிலை அப்படி! இயேசுவின் 2ம் வருகையின் போது பெரும்பாலான உலக மக்கள் புறஜாதியர் தானே! எனவே அவர்களை கலங்கடிக்கும்படியாய், அந்த நியாயத் தீர்ப்பின் நாளான அந்த கொடியநாளன்று வானத்திலே அடையாளம் காட்டப்படும். கர்த்தருக்கு தோத்திரம்! அந்த நாளில் நாம் இருக்கப் போவதில்லை. ஆமென்! இப்படிப்பட்ட புறஜாதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஆபிரகாமுக்குக்கூட அவனின் சந்ததி எப்படி இருக்கும் என்பதைக்காட்ட "வானத்தை அண்ணாந்துபார்; நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால்

அவைகளை எண்ணு... உன் சந்ததி இவ்வண்ணமாயிருக்கும்" (ஆதி.15:5) என்று கூறி அவனைப் பிரமிக்கப் பண்ணியதை நினைவு கூறுங்கள். பெரும்பாலும் புறஜாதி மனிதர்கள், காற்று, வான், மழை, நெருப்பு (இடி, மின்னல்), பூமி, போன்ற ஐம்பெரும் பூதங்களைக் கண்டு பயப்படுகின்றனர். இவைகளில் அனைத்துமே ஆகாயம் - வானம்- சம்பந்தப்பட்டவை. வானம் சம்பந்தப்பட்டவைகளை கண்டு கலங்கும் மனிதர்கள் இயேசு வரும்போது வானத்திலே அடையாளம் காணப்பட்டால் - அந்த அடையாளம் கலக்கமடையும் அடையாளமாயிருந்தால், மத்.24:30ல்சொன்னபடி பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள் அல்லவா! அப்படி என்னதான் அடையாளம் வானத்திலே உண்டாகும்? அப்படி என்னதான் அடையாளம் வானத்திலே உண்டாகும்? சிலுவை காணப்பட்டால் அதைக் கண்டு மனுஷன் கலங்குவானா? சிலுவையில் தொங்கிய இயேசுவையே ஏற்றுக் கொள்ளாமல் அசட்டை பண்ணியவனுக்கு சிலுவையைக் கண்டா பயம் வரும்?

யோவேல் 2:30, 31ஐ வாசியுங்கள். "வானத்திலும் பூமியிலும் இரத்தம், அக்கினி புகை ஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன்; சூரியன் இருளாகவும், சந்திரன் அக்கினியாகவும் மாறும்." சுனாமியையும், சூறாவளிக் காற்றையும், நிலநடுக்கத்தையும் கண்டு தினந்தோறும் கலங்கிக் கொண்டிருக்கும் மனிதன், இதுவரை காணாத - கேள்விப்படாத - இப்படிப்பட்ட அதிசயங்களை - அடையாளங்களைக் காணும் போது எப்படியிருக்கும்? யோசியுங்கள். மட்டுமல்ல. லூக்.21:11, 25, 26 போன்ற வசனங்களை வாசியுங்கள். "வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும். சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இதயம் சோர்ந்து போகும்." இப்போதே சூரியன் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்றும், சூரியனில் ஓட்டை விழுந்திருக்கிறது என்றும் வானத்திலே காணும்போது, மனிதன் என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று கலங்குகிறான் அல்லவா! இந்த பயங்கரமான புதுமையான நிகழ்வுகள் மாத்திரமல்ல, மத்.24:31ல் சொல்லியபடி தேவதூதர்கள் வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடு வானத்திலிருந்து இறங்கி வருவதையும் மனிதர்கள் காண்பார்கள். இப்படிப்பட்ட அடையாளங்களை கண்டு உலகத்தார் கலங்குகின்ற - புலம்புகின்ற காலம் வரப் போகின்றது. ஆமென். இயேசு கிறிஸ்து மத்.16:2,

3ல் சொல்வதை வாசியுங்கள். உலக மனிதர்கள் வானத்திலே காணப்படும அடையாளங்களை வைத்து, வரப் போகும் காரியத்தை நிதானிக்கத் தெரிந்தவர்கள் என்று சான்று கொடுக்கிறார். இயேசு கிறிஸ்து, யூதராஜா வாய்ப் பிறந்திருக்கிறார் என்று வானத்தில் காணப்பட்ட நட்சத்திர அடையாளத்தைக் கண்டு தானே உலக சாஸ்திரிகள் அறிந்து வந்தார்கள் (மத்.2:1,2). அவர்கள் வந்தது நன்மையைத் தேடி! கடைசி நாட்களில் காணப்போகும் அடையாளங்களோ வரப்போகும் மகா பயங்கரமான நியாயத் தீர்ப்புப்பற்றி! அந்த நாள் மகாகொடிய நாள்! இந்த பூவிலுள்ளோர் யாவரும் நடுங்கும் நாள்!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பிசாசின் வெளிப்பாடுகளையும், அடையாளங்களையும், அற்புதங்களையும், தீர்க்க தரிசனங்களையும் நம்பி, மயங்கிப் போகும் காலமிது (மத்.24:24) எச்சரிக்கையாயிரு! இது கடைசி காலம்! வேதமே உனக்கு வெளிச்சம்! வசனமே உனக்கு வழிகாட்டி! வெளுத்ததெல்லாம் பாலல்ல! ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப் பார்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்.

❖ ❖ ❖

## பிர. 1:5 விஞ்ஞானத்திற்கு விரோதமா?

"சூரியன் உதிக்கிறது, சூரியன் அஸ்தமிக்கிறது. தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிரிக்கிறது" (பிர.1:5) என்ற வசனத்தை மேலோட்டமாய்ப் பார்த்தால் சூரியன் ஒரு இடம் நகர்ந்து, சுற்றிக் கொண்டு இருப்பது போல தெரிகிறது. இதன்படி "சூரியன் எதையும் சுற்றுவதில்லை, பூமி தான் தன்னையும், சூரியனையும் சுற்றுகிறது" என்ற விஞ்ஞான கண்டு பிடிப்புக்கு தேவ வசனம் விரோதமாயிருக்குமோ என்று சிலர் எண்ணுகின்றனர். வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது (2 தீமோ.3:16-17). எனவே வேதம் குறைவற்றது. (சங்.19:7) வேத வார்த்தை விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், வானவியில் போன்ற எல்லாவற்றாலும் ஒத்துக் கொள்ளக் கூடியது. நமது வேதம் சத்தியமாயிருந்தால் (சங்.119:142) இதிலுள்ள ஒரு வாக்கியமும் பொய்யாயிருக்க முடியாது. மயக்க மருந்து, டி.வி, குளிர்சாதனம் போன்றவற்றைக் கண்டு பிடித்த விஞ்ஞானிகளுக்கெல்லாமே வேத வசனமே வெளிப்பாடாய் இருந்ததால், பிர.1:5 ஒருக்காலும் விஞ்ஞானத்திற்கு விரோதமாய் இருக்காது. ஆமென். இந்த வசனத்தை கொஞ்சம் விசாலமாயப் பார்ப்போம். இந்த பூமியிலே, சூரியனுக்குக் கீழே நடப்பவை எல்லாம் ஒன்றும்

புதிதானவை அல்ல என்றும், முன் இருந்ததே - நடந்ததே திரும்பவும் மாறி மாறி நடக்கின்றது என்றும் ஞானி கூறுகின்றான். **அதற்கு உதாரணமாய் 4 காரியங்களைச் சொல்கின்றான்.** (1) என்றைக்கும் நிலைத்திருக்கும் இந்த பூமியிலே ஒரு சந்ததி போகிறது. மறுசந்ததி வருகிறன்றது. எல்லாமே cyclic order. (2) சூரியன் உதிக்கிறது, மறைகிறது. பின் உதித்த இடத்திலேயே உதிக்கிறது. மாற்றமில்லை. எல்லாமே cyclic order. (3) காற்று சுழன்று சுழன்று அடித்து, தான் சுற்றின இடத்திற்கே திரும்பவும் வருகிறது. (4) எல்லா நதிகளும் சமுத்திரத்திலே விழுகின்றன. ஆனாலும் மறுபடியும் தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே போகின்றன. சூரியன் உதித்த இடத்திற்கே திரும்பவும் வருகிறது என்பதால் அது சுற்றுகிறதே என்று கேட்கிறவர்கள், கடலில் போய் சேர்ந்த நதி எப்படி மறுபடியும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பவும் வருகின்றது என்பதை எப்படி நம்புகிறார்கள்? நதியே பின்னோக்கிப் போகிறதா? இல்லையே! கடலில் சேர்ந்த நதியின் தண்ணீர், சூரியனால் ஆவியாகி மேகங்களால் மழை பெய்யும் போது, மறுபடியும் நதி உற்பத்தியாகிறது என்பது தான் விஞ்ஞானக் கருத்து. அந்த அடிப்படையில் தான் சாலமோன் எழுதியிருக்க வேண்டுமே ஒழிய, மற்றப்படி வேறொன்றும் இருக்க இயலாது. அப்படியே கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் மறைகிறது. மறுபடியும் கிழக்கில் உதிக்கிறது என்பது சூரியன் நகர்ந்து போய் திரும்பவும் வரவில்லை என்றும், பூமியானது தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனையும் சுற்றுவதால் இப்படி நடக்கிறது என்றும் உணர்ந்தால் போதும்; வேதத்தின் சிந்தனை வார்த்தைகள் எல்லாமே, விஞ்ஞான கருத்துக்கு ஒத்துத் தான் எழுதப்பட்டிருக்கிறது என்று உணரலாம்.

மேலும், பிர.1:5ஐ மறுபடியும் வாசியுங்கள். "தான் உதித்த இடத்திற்கே அது திரும்பவும் தீவிரிக்கிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது. அதாவது சூரியனின் ஒளி, ஒளிக்கற்றை, தான் உதித்த கிழக்கிலிருந்தே மறுபடியும் **தீவிரிக்கிறது** - வெளிப்படுகிறது, has teth - painteth என்று பொருள். பூமியின் சுழற்சியினால் இப்படி நடக்கிறது என்பது வெள்ளிடை மலை அன்றோ!

இது சம்பந்தமாய் சங்.19:4-6ஐ வாசிப்போம். "சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிந்து புறப்படுகிற மணவாளனைப் போலிருந்து, பராக்கிரமசாலியைப் போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது. அது வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனை வரைக்கும் சுற்றி யோடுகிறது. அதின் **"காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை"** சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்துமே தமக்கு நியமித்த பாதையில் ஓடுகின்றன

என்பது விஞ்ஞான உண்மை. தேவனின் கிருபையால் அவைகள் எல்லாமே சீராக சரியாக ஓடுகின்றன. ஒன்றையொன்று மோதிக் கொள்வதில்லை. இது வரைக்கும் சங்கீதக்காரன் சொன்னது சரியாய்த் தோன்றுகிறது. வச.19:6 தான் பலருக்கும் சந்தேகத்தை வருவிக்கிறது. சூரியன் கிழக்கிற்கும், மேற்கிற்கும் சுற்றுகிறதா என்பது தான் கேள்வி, "அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை" என்ற வசனமே அதற்குப் பதில். சூரியன் கிழக்குக்கும், மேற்குக்கும் சுற்றியோடவில்லை. சூரியனின் காந்தி - ஒளிக்கற்றை - Rays-Heat Rays - தான் அப்படி சுற்றியோடுகின்றது. எனவே பூமியின் சுழற்சியினால் அவைகள் மறையாமல் தெரிகின்ற போது பகலென்றும், கிழக்கு திசையிலிருந்து ஒளிக் கதிர்களை வெளிக்காட்டும் போது சூரியன் மேற்கிலே நிற்பது போலவும், பூமியின் சுழற்சியில் ஒரு பகுதிக்கு சூரியனின் காந்தி தெரியாத போது இரவென்றும் நாம் சொல்கின்றோம். இப்படிப்பட்ட காரியங்கள் உருவாவதெல்லாமே, சூரியனின் காந்தியை, ஒளிக்கற்றைய Heat raysஐ வைத்துத் தான் சங்கீதக்காரனும், பிரசங்கியும் எழுதியிருக்கிறார்களே ஒழிய, மற்றப்படி சூரியன் இடம் விட்டு இடம் நகர்வதாக எழுதவே இல்லை. அப்படி எழுதவும் ஆவியானவர் இடம் கொடுக்கமாட்டார். ஆக, வேத வாக்கியங்கள் எல்லாமே விஞ்ஞானம், புவியியல், சரித்திரம் போன்ற எல்லாவற்றுக்குமே ஒத்துப்போகும் என்பதிலே கிஞ்சித்தும் ஐயமில்லை அல்லேலூயா!

❖ ❖ ❖

## தீராத வியாதியோடு ஊழியம் செய்யலாமா?

1 யோ.3:8ன்படி இயேசு கிறிஸ்து பிசாசின் கிரியைகளை அழித்துப் போட்டார். பொல்லாத - தீமையான கிரியைகள் எல்லாமே பிசாசின் கிரியைகள், கிறிஸ்து சிலுவையில் எதையெல்லாம் சுமந்து தீர்த்தாரோ அதெல்லாம் பிசாசின் கிரியைகள். வியாதியை சுமந்து தீர்த்தார். (மத்.8:17); வறுமையை சுமந்து தீர்த்தார் (2 கொரி.8:9); சோதனைகளை ஜெயித்தார் (எபி.2:18); வேதனையை வென்றார். இதை விசுவாசித்து, உண்மையாய் அறிக்கையிட்டு, செயல்படும் ஒவ்வொரு வரும் இயேசுவைப் போலவே ஜெயிப்போம். ஆமென். அப்படியிருக்க, கிறிஸ்தவ விசுவாசிக்கும், ஊழியருக்கும் மாறாத- தீராத - வியாதிகள் ஏன் இருக்க வேண்டும்? "வாதை (வியாதி - நோய்) உன் கூடாரத்தை அணுகாது" என்ற வசனம் பொய்யாகாதே! கிறிஸ்தவனுக்கு வியாதி வரக்கூடாது என்பது தேவ சித்தம்; அப்படி வந்தாலும் இயேசுவின் தழும்புகளினால் சுகமாகிறான். நம் தேவனால்

சுகமாகாத வியாதி உலகில் ஒன்றுமே இல்லை. அப்படியிருக்க, தீராத வியாதியோடு ஊழியக்காரர் ஊழியம் செய்வது எப்படி? அந்த வியாதிக்கார ஊழியர் "இயேசு சுகமளிக்கிறார்; அற்புத சுகம்" என்று மக்களை அழைத்து ஊழியம் செய்து, ஒரு சிலர் சுகமாகிப் போனாலும், ஒரு சிலர், "இவன் வியாதி சுகமாக்கப்படவில்லை; இவன் வந்து மற்றவர்களுக்கு சுகமளிக்கும் ஊழியம் செய்கிறான்" என்று கேலியும் கிண்டலும் பண்ண மாட்டார்களா? இதனால் தேவ நாமம் தூஷிக்கப்படடாதா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

வியாதியுள்ள ஊழியக்காரர் ஏன் சுகமாக வில்லை? குறைபாடு இவரிடத்திலா அல்லது தேவனிடத்திலா? இப்படிப்பட்ட குழப்பங்களை உலகத்தார் மத்தியில் உருவாக்க சாத்தான் தந்திரமாய் காரியமாற்றுவது பலருக்கு புரியவில்லையே! புரியாமலே அவர்கள் சொல்வது "பவுல் வியாதியோடு ஊழியம் செய்ய வில்லையா?" என்பது தான். பவுலுக்கு வியாதி இருந்ததா என்பது கேள்வி (இது குறித்து, "வியாதியா? மரணமா?" என்ற ஆராய்ச்சிப் புத்தகத்திலுள்ள செய்திகளை வாசியுங்கள்) அப்படியே அவனுக்கு வியாதியிருந்தால், நமக்கும் தீராத வியாதி இருக்க வேண்டுமா? நமது வாழ்க்கைக்கு மாதிரி பவுலா? இயேசுவா? பவுல் பிராத்தனை பண்ணி மொட்டையடித்தானே நாமும் அடிக்கலாமா? (அப்) பவுல் நியாயப் பிரமாணப்படி சுத்திகரித்துக் கொண்டானே, நாமும் அப்படிப் பண்ணலாமா? சிந்தியுங்கள். மேகம் போன்ற திரளான விசுவாச சாட்சிகள் ஆபேல் முதல் இருந்தாலும், விசுவாச ஓட்டத்தைத் துவக்குபவரும், முற்றிலும் நிறைவேற்றுகிற வருமாகிய இயேசுவை நோக்கித் தானே நாம் ஓட வேண்டும். (எபி.12:1) பவுலுக்கு இருந்தது வியாதியானால், அந்த வியாதி தீர வேண்டுமென்று மூன்று முறை ஜெபித்தும் தேவனால் சுகமாக்க முடியவில்லையா? அல்லது அந்த வியாதியோடே ஊழியம் செய் என்று தேவன் சொன்னாரா? இது கேள்வி. வியாதியோடே ஊழியம் செய்ய அவர் வாஞ்சித்தால், அவர் ஏன் சிலுவையிலே காயப்பட்டு அந்த காயங்களின் தழும்புகளால் நமக்கு சுகம் கொடுக்க வேண்டுமா? சிந்தியுங்கள். வசன அறிவு - வேத அறிவு - இல்லாமையினால். பல கிறிஸ்தவர்கள் - அதிலும் பெரிய பெரிய உலகப்பிரகாரமான ஊழியக்காரர்கள் தற்காலத்தில் ஓசி.4:6 போல ஆகிறார்கள்.

பவுலின் நிலைமையை சற்று சிந்திப்போம். இவர் மூன்றாம் வானம் வரை சென்று, பரதீசைக் கண்டு வந்த மேன்மையான காரியங்களை உலகிற்கு சொல்வதால் அவருக்கு மேன்மை வருகிறது; பவுலின் ஊழியம்

பெருகுகிறது; ஆத்மாக்கள் அதிகம் சேருகின்றனர்; பவுல் மென்மேலும் உயர்ந்த நிலைக்கு வருகிறான். இதை அறிந்த சாத்தான். பவுல் மேலாக உயராதபடிக்கு, அவனை குட்டிவைக்க ஒரு முள்ளை அவன் சரீரத்திற்கு கொடுக்கிறான். சாத்தான் தரும் முள், நம்மோடே இருக்கட்டும் என்று தேவன் சொல்வாரா? அப்படிச் சொன்னால் அவர் தேவனா? சிந்தியுங்கள். இது விலக வேண்டும் என்று 3 முறை ஜெபித்தான். பவுலின் பிலி.4:6, 7ஐ வாசியுங்கள். வசன விசுவாசத்தோடு ஒரு முறை தேவசித்தமறிந்து ஜெபிக்க வேண்டும்; அதன் பின் நாம் முதலில் கேட்டதை பெற்றுக் கொண்டோம் என்று ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டே இருக்க வேண்டும். அப்போது எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானம் கிடைக்கும். உண்மை இப்படியிருக்க மூன்று முறையும் அதையே ஜெபித்த பின், "உன் பலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்" என்று தேவன் சொன்னால், பெலவீனமாகிய வியாதியிலே தேவனுடைய பெலன் இணைந்து பவுலின் வியாதி பூரணமாய் வெளிப்படும் என்றா அர்த்தம்? அல்லது தேவ பெலன் இணைந்து, பவுல் வியாதி மறைந்து, தேவனின் பலன் - Power - வல்லமை விளங்கும் என்று அர்த்தமா? சிந்தியுங்கள். 2 கொரி.13:3,4 ஐ வாசித்தால். இயேசு பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தாராம். பலவீனம் என்றால் வியாதி எனில், வியாதியாலா சிலுவையில் அறையப்பட்டார்? அந்த வசனங்களை படித்தால் மனுஷீக வல்லமை - சரீர வல்லமை - அவரிடம் இல்லாமலிருந்ததால் யூத போர்ச் சேவகர்களை சரீரத்தால் எதிர்த்து நிற்க முடியவில்லை என்று அறியலாம் (அவரிடமிருந்த தேவனுடைய வல்லமையை மத்.26:53, 54ல் அவரே சொன்னதை நினைவு கூறுங்கள்) சாத்தான் சரீரத்தில் பவுலுக்குத் தரும் முள்ளை, பவுல் சரீர பலவீனத்தால் எதிர்க்க இயலாமல் தேவனிடம் முறையிடுகிறான். கிதியோனுக்கு கொடுத்தது போல, கோலியாத்தின் முன் தாவீதுக்கு தந்தது போல, தேவ பெலன் பவுலுக்கு கொடுக்கப்பட்டு, பூரணமாய் ஊழியம் செய்ய தேவன் வழி வகுக்கிறார். இந்த முள்தான் என்ன? எண்.33:35; யோசு.23:13; எசே.28:24ஐ வாசித்தால்இந்த முள்ளானது சரீரப்பிரகாரமாய் பவுலின் ஊழியத்திற்கு விரோதமாய் பிசாசினால் எழுப்பப்பட்ட சரீரத்திற்கடுத்த எதிர்ப்புகள் -பகைமைகள் - என்று புரியும். இதை ஜெயிக்க தேவபெலன் அவனுக்கு பூரணமாய் இருந்தது. அவனும் ஊழியப்போராட்டத்தை வெற்றியோடு முடித்தான்; கீரிடம் அவனுக்கு காத்திருக்கிறது.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! பாரம்பரியமாய் கேட்டவைகளை உண்மை என்று நம்பி, வசனத்தை அவமாக்க வேண்டாம் (மத்.15:3,9).

தீராத வியாதியினால் ஊழியம் செய்வது சரியல்ல. “நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து” என்று இயேசு சொன்னதைதியானித்து செயல்படுங்கள். (லூக்.22:32) வசன விசுவாசத்தால் வியாதியிலே, வறுமையிலே, பிசாசின் வேறு சில கட்டுகளிலே இருந்து முதலில் குணப்பட வேண்டும்; பிறகு ஊழியத்திலே, இது போன்ற கட்டுகள் உடையவர்களை உடைக்க வேண்டும். அதுவே இயேசு ஜீவிக்கிறார் என்ற சாட்சியுள்ள ஊழியம். இது பரிசுத்த ஆவியைப் பெற்று பெலனடைந்து. ஊழியம் செய்யும் போது நடக்கும் (அப்.1:8) ஆமென். “உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோ , பட்டயமோ - இவை எல்லா வற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே” என்ற பவுலின் விசுவாச ஊழியம் வெற்றி ஊழியம் - தான் தேவை. இயேசு ஏழையாய்ப் பிறந்தார்; ஏழ்மையில் ஊழியம் செய்யவில்லை. இயேசுவே நமக்கு வழி காட்டி. எந்த பிசாசின் கிரியைகளை இயேசு சிலுவையில் ஒழித்தாரோ அதிலிருந்து நாம் விடுதலையாகி, அந்த பிசாசின் கிரியைகளில் அகப்பட்ட யாவரையும் இயேசுவின் நாமத்தால் விடுவிக்க ஊழியம் செய்வோம் (அப்.10:38) இதுவே விசுவாச ஊழியம். குருடருக்கு வழிகாட்டுகிற குருடராய் இருக்கக் கூடாது. குருடனுக்கு குருடன் வழிகாட்டலாமா? (மத்.15:14) தியானியுங்கள்.

“அப்படியானால் குருடனும், முடவரும், ஊழியம் செய்யக்கூடாதா? வறுமையிலுள்ளவர்கள், கடன் பிரச்சனையில் உள்ளவர்கள் ஊழியம் செய்யக்கூடாதா? இப்படிப்பட்டவர்கள் செய்யும் ஊழியத்தில் அற்புதங்கள் நடக்கின்றனவே!” - என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது. மத்.7:22,23ஐ தியானியுங்கள். இயேசுவின் நாமத்தினாலே தீர்க்க தரிசனம் சொல்லலாம்; பிசாசுகளை துரத்தலாம்; அநேக அற்புதங்கள் செய்யலாம். ஆனாலும் உங்களை அறியேன்; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று இயேசு ஏன் சொல்ல வேண்டும்? அற்புதங்களை - தீர்க்கதரிசனங்களை வைத்து ஊழியர்களை எடை போடாதீர்! கிரமம் X அக்கிரமம் = Lawlessness. அதாவது வேத வசனத்திற்கு விரோதமானவர்கள் அக்கிரமச் செய்கைக்காரர்கள். உதாரணமாக, குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பது அக்கிரமச் செயல்; அந்நிய நுகத்தோடு ஊழியத்திலும் இணைவது அக்கிரமச் செயல்; பிசாசின் பொல்லாத செய்கையிலிருந்து இயேசுவின் தழும்புகளால், இரத்தத்தால், வசனத்தால் விடுதலையாகாமல் மற்றவர்களுக்கு விடுதலையை - இரட்சிப்பை பிரசங்கிப்பது அக்கிரமச் செயல்.

மோசே திக்குவாயனாக ஊழியம் செய்ய வில்லையா? இது கேள்வி. ஊழியத்திற்கு அழைக்கும் போதே அவனது திக்குவாய் மாறித்தானே ஊழியம் செய்ய தேவன் விரும்பினார் (யாத்.4:12) மோசே. அதை விசுவாசிக்காதால் அவன்மேல் அவர் கோபப்பட்டு அவனுக்கு உதவியாய் ஆரோனை ஏற்படுத்தினார். அன்றைக்கே தேவசித்தத்தை மோசே உணர்ந்து செயல்பட்டிருந்தால் அவன் திக்குவாயும் மாறியிருக்கும்; அவன் ஊழியம் இன்னும் வல்லமையாய் இருந்து கானான் வரைக்கும் போயிருப்பானே! (ஆசிரியரின் இதே ஆராய்ச்சிப் புத்தகத்திலுள்ள "மோசேயின் திக்குவாய், ஏன் மாறவில்லை" என்ற செய்தியை வாசியுங்கள்) "மோசே போலத் தான் நானும் திக்குவாய் போன்ற பிசாசின் கிரியைகளிலிருந்து விடுதலை ஆக மனதின்றி ஊழியம் செய்வேன்" என்று செய்தால் செய்யுங்கள். அதனால் தேவ நாமம் மகிமைப்பட்டால் அது தொடரும். மோசேயைப் போல கானான் போகாத நிலை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படிப்பட்ட ஊழியத்திற்கு அறிவு பெருகிப் போயிருக்கிற தற்காலத்தில், தேவ அழைப்பு உண்டா என்பதை முதலில் உறுதிப்படுத்திக் கொண்டு செயல்படுங்கள். (2 பேது.1:10) வீணே தேவனை - தேவனின் வார்த்தையை பரீட்சை பார்க்க வேண்டாம்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீயும் நானும் பெற்ற இரட்சிப்பை - விடுதலையை - அன்பை - சந்தோசத்தை - சுகத்தை மற்றவர்களுக்குச் சொல்லி, அவர்களையும் அந்த வழிக்குக் கொண்டு வரத்தானே உன்னையும் என்னையும் தேவன் அழைத்திருக்கிறார்! கர்த்தர் நல்லவர் என்பதை நீயே ருசித்துப் பார்க்காமல் மற்றவர்களை ருசித்துப் பார்க்க சொல்ல உனக்கு என்ன தகுதியிருக்கிறது? முதலில் நாம் மாறுவோம். பிறகு மற்றவர்களையும் மாற்றுவோம் இயேசுவின் நாமத்தினால். உலகப் பிரகாரமாய் சாட்சிக்கோடு வரக்கூடிய காரியங்களிலே முதலில் வெற்றி பெற்று - தேவ ஆசீர்வாதத்தையும் அனுபவித்து - அதன் பின் மற்றவர்களை அனுபவிக்க இயேசுவின் நாமத்தினாலே வழிகாட்டுவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## ஆறாவது அறிவைக் கொடுக்கும் அவயம் எது?

இது விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட மெய்ஞ்ஞான ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சி, நம்முடைய வேதவசனங்களை முழுமையாய் விசுவாசித்து செயல்பட மிகவும் உறுதியாயிருக்கும். இதை அடிப்படை ரீதியில் சிந்தித்த

விஞ்ஞானி ஐன்ஸ்டின் சொல்வதைப் பாருங்கள்: "Science without religion is lame and Religion without science is blind" (வேதமில்லாத விஞ்ஞானம் முடம் போன்றது; விஞ்ஞானமில்லாத வேதம் குருடு போன்றது). நம் வேதம் முடமுமல்ல; குருடுமல்ல, அல்லேலூயா! இதனால் தான் நான் அடிக்கடி, "நம் வேதம் விஞ்ஞானம். சரித்திரம், பூகோளம், வானவியல், கணிதம். வியாபாரம் போன்ற எல்லாவற்றாலும் ஒத்துக் கொள்ளக் கூடியது" என்று சொல்வேன். இந்த கண்ணோட்டத்தில் ஆறாவது அறிவு உண்டா, அதைக் கொடுக்கும் அவயம் எது, அந்த அறிவு எதற்குத் தேவை என்று பார்ப்போம்.

தமிழறிஞர் தொல்காப்பியர் கூறுகிறார்:- "மாவும் மாக்களும் ஐயறிவனவே" (1531), "மக்கள் தாமே ஆறறிவுயிரே" (1552) என்று. அப்படியானால் அந்த ஆறுவகையான உயிரினங்கள் எவை?

(1) **ஓரறிவு உள்ள ஜீவராசிகள்:-** தொடு உணர்வை அறிபவை. உடல் - மெய் - மட்டும் கொண்டவை. மரம், செடி, கொடிகள் இப்படிப்பட்டவை.

(2) **ஈரறிவு உள்ள ஜீவராசிகள்:-** தொடு உணர்வோடு, சுவையுணர்வை அறியும் வாயையும் கொண்டவை. மண்புழு இப்படிப்பட்டது.

(3) **மூவறிவு உள்ள ஜீவராசிகள்:-** தொடு உணர்வு, சுவையுணர்வோடு, நுகர்வுணர்வை அறியும் மூக்கையும் கொண்டவை. எறும்பு இப்படிப்பட்டது.

(4) **நாலறிவு உள்ள ஜீவராசிகள் :-** மேற்சொன்ன மூன்றறிவோடு, காட்சியை அறியும் கண்களை உடையவை. நண்டு, தும்பி போன்றவை இப்படிப்பட்டவைகள்.

(5) **ஐந்தறிவு உள்ள ஜீவராசிகள்:-** மேற்சொன்ன நான்கறிவோடு, கேள்வியை அறியும் செவிகளை உடையவை. விலங்குகள், பறவைகள் இதற்கு உதாரணம்.

(6) **ஆறறிவு உள்ள ஜீவராசிகள்:-** மேற்சொன்ன 5 அறிவோடு பகுத்தறிவையும் கொண்டவைகள். மனிதர்கள் தான் இப்படிப்பட்டவர்கள்.

முதல் 5 அறிவுகளை கொடுப்பது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் 5 அவயவங்களே: அப்படியானால் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை கொடுக்கும் அவயவம் எது? இது கேள்வி. அதை அறியும் முன்னே பகுத்தறிவு என்றால் என்ன என்று அறிய வேண்டும். வேதத்தின்

படி, ஆகாதவைகளை அறிதல் பகுத்தறிவு (யோ.6:30); தேவ சித்தத்தை அறிவது பகுத்தறிவு (ரோ.12:2); மற்ற ஆவிகளைப் பகுத்தறிவது பகுத்தறிவு (1 கொரி.12:10); நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிவது பகுத்தறிவு (எபி.5:14); நரகப் பாதையிலிருந்து விடுவித்து இரட்சிப்புக்குள் நடத்துவது பகுத்தறிவு (யூதா 22). அப்படியானால் இந்த பகுத்தறிவு, ஐந்தறிவுள்ள ஜீவராசிகளுக்கு இல்லையா? ஒரு மாடு கல்லைத் தின்னுமா? புலி புல்லைத் தின்னுமா? தின்னாது. அவைகளுக்கு அறிவு உள்ளதல்லவா? நாய்கள் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கிறது; ஆற்றங்கரைகளில் நடப்படும் மரங்களின் வேர்கள் தண்ணீரை நோக்கியே ஓடுகின்றனவே! கன்றுக்குட்டிக்கு பால் கொடுக்க வேண்டும் என்ற தாயுள்ளம் பசுவிற்கு உண்டே! கோடை காலத்தில் சேர்த்து வைக்க வேண்டும் என்ற அறிவு எறும்புகளுக்கு உண்டே! இப்படிப்பட்ட அறிவு, மனிதனுக்கும் உண்டு. இப்படிப்பட்ட உலகிற்கடுத்த சிந்தனை, எண்ணம், ஏக்கம், உணர்வு, உணர்ச்சி போன்றவை பிறக்குமிடமாக "ஆத்மா" - உள்ளம் - மனம் - என்பது எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு என அறிகிறோம். இந்த ஆத்மாவானது அவைகளின் சரீரத்தோடு ஒட்டியிருக்கும் ஒன்று. இதை மெய், வாய், கண், மூக்கு, போல, பார்க்க முடியாது; உணர முடியும், காற்றைப் போல தேவனைப் போல. இதை தேவன் மண்ணினால் உருவாக்கவில்லை; ஒன்றுமில்லா மையிலிருந்து சிருஷ்டித்து வைத்திருக்கிறார். ஆனால் இவைகளுக்கு மேலாய், தேவனைத் துதிக்கும் அறிவு, இரட்சிப்புக்குள் நடத்தும் அறிவு, தேவசித்த மறிந்து செயல்படும் அறிவு மனிதனுக்கு மட்டுமே உண்டு. காளைக் கன்றுக்கு பாலூட்டி தாயுள்ளம் காட்டும் தாய்ப்பசுவிடமே, வளர்ந்த பின் உடலுறவு கொண்டு கன்றுக் குட்டியை காளைகள் உருவாக்குவதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட ஜீவராசி, ஆறறிவுள்ள மனிதன் அல்ல. ஆனாலும் இயற்கையாகவே மேலான தெய்வீக குணமுள்ள மனிதர்களிலும் பலர் நன்மையும் உண்மையும் உள்ளவர்களாயில்லை. (சங்.119:25) இப்படிப்பட்டவர்கள் ஆறாவது அறிவு உடையவர்கள் அல்லர்; இவர்கள் விலங்குகளோடு சேர்ந்தவர்கள் என்று, தொல்காப்பியர் கூறுகிறார் ("மாவும்மாக்களும் ஐயறிவினவே").

வேதம் மனிதனுக்கு ஆவி- ஆத்துமா - சரீரம் என்ற மூன்று உள்ளது என்று கூறுகின்றது (1 தெச.5:23). சரீரம் என்பது புறம்பான மனுஷன். (2 கொரி.4:14) ஆவி என்பது உள்ளான மனுஷன். தேவன் தன்னுடைய சாயலின் படியும், ரூபத்தின் படியேயும் ஏதேனில் படைக்கப்பட்டு (ஆதி.1:26,27) மண்ணினால் செய்யப்பட்ட ஆத்மா நிறை சரீரத்திற்குள்

வைக்கப்பட்டதுதான் அந்த உள்ளான மனுஷன் (ஆதி.2:7) மனிதனின் ஆவியும், ஆத்மாவும் இணைந்திருப்பதால் (எபி.4:12). தேவனின் சாயலின்படி படைக்கப்பட்ட ஆவியிலே உள்ள ஒரு சில இயற்கை குணாதிசயங்கள்... அதோடு இணைந்துள்ள ஆத்மாவிற்கு சேர்வதால், மனிதனின் ஆத்மா, மற்ற ஜீவராசிகளின் ஆத்மா போல - சிந்தனை - எண்ணம் - உணர்ச்சி போல இல்லாமல் தெய்வீகம் சார்ந்து இருக்கிறது. நாத்திகனாய் இருந்தாலும், பல நல்ல குணாதிசயங்கள் அவனுக்குள் இருக்கின்றன. இயற்கையாக இசைந்திருக்கும் அந்த தெய்வீக குணம் கொஞ்சமும் இல்லாத மனிதர்களைத் தான் ஆறறிவு - பகுத்தறிவு - இல்லாத மாக்கள் என்று கூறப்படுகின்றது. ஆக ஆவியின் மூலமே ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு மனிதனுக்கு வருகின்றது என்று அறிகின்றோம். இந்த ஆவி என்பது உயிர் அல்ல. "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; உள்ளான மனுஷனாகிய ஆவியின் உயிர் தேவவார்த்தையில் இருக்கிறது" என்று முந்தி அறியுங்கள்.

ஆக தேவவார்த்தை பெருகப் பெருக. மனிதனுடைய ஆவி தேவனுக்குள் முழுமைஅடைந்து பகுத்தறிவில் பழுக்கிறது. இப்படிப்பட்ட ஆவி என்ற ஒன்று எந்த ஜீவராசிகளுக்கும் கிடையாது. தேவன் ஆவியாயிருக்கிறார்; ஆவியாயிருக்கிற தேவனோடு தொடர்பு கொள்ள - ஐக்கியமாக ஆவியால் தான் முடியும். வேறு மண்ணோ, கட்டையோ ஆவியோடு இணையுமா? மனிதனை இப்படிப்பட்ட தொடர்புக்காவேதேவன் படைத்திருப்பதால், மனிதனுக்கு மட்டுமே ஆவி கொடுக்கப்பட்டு அது உள்ளான மனுஷன் என்று அழைக்கப்படுகிறது (2 கொரி.4:14) அந்த உள்ளான மனுஷனோடு ஆத்மா சேர்ந்துள்ளதால், மற்ற 1 முதல் 5 அறிவு உள்ள ஜீவராசிகளுக்கு இல்லாத பகுத்தறிவு - தெய்வீக ஞானம் - தேவ செயல்கள் - எல்லாம் ஆத்மாவாகிய மனதின் மூலம் - உள்ளத்தின் மூலம் - எண்ணப்படுகின்றது. இப்படிப்பட்டவன்தான் ஆறறிவுள்ள மனிதன்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மெய், வாய், கண், மூக்கு, செவி எல்லாமே சரீரம் சம்மந்தப்பட்டது என்றும், இவைகளால் அதிக அளவு ஐந்தறிவுதான் உருவாகும் என்றும், மற்றபடி, உள்ளான மனுஷனாகிய ஆவிதான் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவை - தெய்வீக அறிவை - தேவனிடமிருந்து பெற்று சரீரத்திலே செயல்படவைக்கிறது என்றும் அறிகிறோம். அதுவும் ஆவியானது நேரிடையாக சரீரத்தை இயக்காமல், சரீரத்தை ஆளுகின்ற ஆத்மாவின் மூலம் இயக்குகின்றது. இதனால் தான், "என் ஆத்மாவே! கர்த்தரைத் தோத்தரி! என் முழு உள்ளமே அவருடைய

பரிசுத்த நாமத்தை தோத்தரி; என் ஆத்மாவே கர்த்தரைத் தோததரி! அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே!" (சங்.103:1-3) என்ற ஒரு ஜெபத்தை மனிதன் செய்து திருப்தியடைகின்றான்; வெற்றியும் பெறுகின்றான். இப்படியாய் "தோத்தரி", "தோத்தரி" என்று யாருக்கு யார் கட்டளையிடுகிறது? மனிதனுடைய ஆவி, தேவனின் வல்லமை நிறை வசனத்திலே தெளிந்து, மனம் - உள்ளம் சிந்தனையாகிய ஆத்மாவை ஆட்கொண்டு, சரீரத்தில் செயல்பட வைக்கிறது. அல்லேலூயா. இப்படிப்பட்ட உள்ளான மனுஷனாகிய ஆவி தான், ஆறாவது அறிவைக் கொடுக்கும் அவயமாகும். 6வது அறிவுள்ளவன், தினந்தோறும் உத்தமனாக, நல்லவனாக, பகுத்தறிவுள்ளவனாக, தெய்வீக சிந்தனையுவனாய், தேவனைப் போல மாறிக் கொண்டேயிருப்பான்; மறுரூபமாகிக் கொண்டேயிருப்பான்; எனவே தான் எல்லா மனிதனும் தன் இருதயமாகிய ஆவியிலே வசனத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட வேண்டும் என்று வேதம் சொல்கின்றது (ரோ.10:9,10; 1 பேது.1:23; யோ.3:3,5). வசனமில்லாத ஆவி உடையவர்கள் பகுத்தறிவு இல்லாதவர்கள்; மாக்கள், இது குறித்து இன்னும் அறிய ஆசிரியரின், "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற புத்தகத்திலுள்ள "ஆவி - உயிர் - ஆத்மா" என்ற புத்தகத்திலுள்ள ஆவி - உயிர் - ஆத்மா என்ற செய்தியையும், பழைய முழக்கங்களிலுள்ள "படைப்பின் இரகசியம்" என்ற தொடர் செய்திகளையும் படியுங்கள்.

❖ ❖ ❖

## உலகிலுள்ள எல்லா சபைகளிலிருந்தும் வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்களா?

தேவனுடைய பிள்ளையே! கிறிஸ்தவ சபை என்ற பெயரில் உலகில் எத்தனையோ சபைகள் இருக்கின்றன. அவைகள் எல்லாமே கிறிஸ்தவசபைகளா? சபையாரை எடுத்துக்கொள்ள இயேசு மத்திய ஆகாயத்தில் வர இருக்கிறார் (1 தெச.4:16-18). அப்போது இந்த எல்லா சபைகளிலிருந்தும் உத்தமர்களை - நல்லவர்களை- சன்மார்க்கரை தேவன் எடுத்துக் கொள்வாரா? இந்த கேள்விகளுக்கு ஆவியானவர் தாமே போதித்து வழி நடத்துவாராக! (யோ.16:13)

எது சபை என்று முதலில் பார்ப்போம். பழைய ஏற்பாட்டில் சர்ச் - சபை (எக்ளிசியா - பிரித்தெடுக்கப்பட்டவர்கள்) என்று ஏதுமில்லை. இஸ்ரேல் சபையானது Assembly, Congregation (கூட்டம், குழுமம்) என்று தான்

அமைக்கப்பட்டது. இந்த நமது புதிய ஏற்பாட்டு சபை - மணவாட்டி சபை - சீஷர்கள் நிறைந்த சபை - இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் (அப்.11:26: 2:47). பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் ஒருவருக்கும் வெளிப்படுத்தப்படாமல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்து, பவுல் மூலமாய் இது வெளிப்பட்டது! (எபே. 2:19-3:3). மணவாளன் ஆதாம் அயர்ந்த நித்திரைக்குள்ளானபின், மணவாட்டி ஏவாள் வெளிப்பட்டது போல், மணவாளன் இயேசுவின் மரணத்திற்குப் பின் தான் மணவாட்டியாகிய சபை வெளிப்பட்டது. அல்லேலூயா! "நீ பேதுருவாய் இருக்கிறாய்; இந்தக் கல்லின் மேல் என்சபையைக் கட்டுவேன்" (மத்.16:18) என்று இயேசு சொன்னதை வைத்துக் கொண்டு பலர், இந்த - சபை பேதுருவின் மேல்கட்டப்பட்டது என்கின்றனர். அது தவறு. கிரேக்க மூலபாஷையிலே பேதுரு என்பதை Petros "ஒரு கல்" என்று போடப்பட்டுள்ளது. மத். 16:18ல் உள்ள "கல்" என்ற வார்த்தையோ "Petra" - பெரிய பாறை என்று போடப்பட்டுள்ளதால், peros என்ற பேதுருவாகிய ஒரு கல்லின் மேல் சபை கட்டப்படாமல், கற்பாறை - petra - வாகிய இயேசுவின் மேல் இது கட்டப்பட்டிருக்கிறது என்று அறிகிறோம். (1 பேது.2:4-8; எபே.2:20: சங்.118:22) தள்ளப்பட்ட கல்லாகிய இயேசு மூலைக் கல்லானார். அந்த பாறையாகிய கல்லின் மேல் - அஸ்திபாரத்தின் மேல் கிறிஸ்தவ சபை கட்டப்பட்டிருக்கிறது (மத்.7:24; 1 கொரி.3:11)

இந்த கிறிஸ்தவ சபையில் உறுப்பினர் யார்? இரட்சிக்கப்பட்ட (ரோ.10:910; 1 கொரி.6:11; 1 பேது.1:23; யோ.3:3,5; யாக்.1:18; எபே.2:8; அப்.2:47) 1 கொரி.12:12 - 13ன் படி ஒரே சரீரத்திற்குள்ளாக ஞான ஸ்நானம் பண்ணப்பட்டு ஒரே ஆவிக்குள்ளாவே தாகந் தீர்க்கப்பட்ட பிள்ளைகள் தான் (யோ.1:12) உறுப்பினர்கள். கிறிஸ்துதான் இந்த சபைக்கு தலைவர். (எபே.1:22,23). தேவன் தங்கும் ஆலயம் இந்த சபை தான் (எபே.2:21,22; 1 கொரி.3:16). கிறிஸ்துவோடு ஒரே சரீரமாயிருக்கிறது இந்த சபை (எபே.5:30, 31) இதற்குள்ளும் கோதுமை மணிகளும் பதறுகளும் இருக்கலாம். இப்படிப்பட்ட சபையின் உறுப்பினர்கள் கற்புள்ள கன்னிகையாக கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்காய் ஜீவிக்க வேண்டும். அதனால் தான் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பதில்லை என்று (எபி.12:14) வேதம் கூறுகின்றது.

இப்படிப்பட்டதான கிறிஸ்தவ சபை எது? கிருபாசனம், A.G., A.C.A. விடுதலை கிறிஸ்துவின் சபை, சி.பி.எம். S.D.A. சர்ச் ஆப் கிரைஸ்ட், இயேசுவின் நாமக்காரர், I.P.C. யோகோவா விட்னஸ். R.C. லூத்தரன்,

சி.எஸ்.ஐ போன்ற சபைகளா? நிச்சயமாய் இந்த சபைகளுக்கெல்லாம் தலைவர் உலக மனிதர்தான், ஸ்தாபித்ததும் உலக மனிதர் தான்; நடத்திச் செல்வதும் உலக மனிதர்கள் தான். **ஆனால் ஆவிக்குரிய கண்ணோட்டத்தோடு பார்க்கும் போது, இந்த சபைகளை ஸ்தாபித்ததோ, நடத்திச் செல்வதோ கிறிஸ்து என்று வேத வசனத்தின்படி தென்பட்டால் மாத்திரமே இவைகள் எல்லாம் ஆவிக்குரிய சபைகளாகும்;** அவைகள், கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையின் - ஒரே சபையின் - ஒரே மந்தையின் - உறுப்புகளாககும்; பிரிவுகளாகும். இப்படிப்பட்ட உறுப்புகளை உடைய, இயேசுவின் மேல் கட்டப்பட்ட ஆவியின் சபையை அழைக்கவே இயேசு சீக்கிரம் வருகிறார். ஆமென்.

**அப்படியானால் உலகினுள்ள எந்த சபைதான் இயேசுவின் மேல் கட்டப்பட்ட ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையின் அங்கம்?** இரட்சிக்கப் பட்டவர்கள் இருப்பது தான் கிறிஸ்தவ சபை (அப்.2:47). அஸ்தி பாரமாகிய - மூல உபதேசங்களான - அடிப்படைச் சத்தியங்களான "மனந்திரும்புதல், தேவன் பேரில் வைக்கும் விசுவாசம், ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம், கைகளை வைக்குதல், மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு" என்பவைகள் இருக்கும் சபைதான் கிறிஸ்தவ சபை (எபி.6:1,2). இந்த அஸ்தி பாரத்தில் ஒன்று தவறினாலும் அது ஆவிக்குரிய சபையாய் வளர வாய்ப்பில்லை; வெறுமனே பெயர்க் கிறிஸ்தவ சபையாக மட்டும் இருக்கலாம். பல சபைகளில் மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, இரட்சிப்பு போன்றவை இல்லாமல், பால் மணம்மாறா பச்சிளம் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கின்றனர். இந்த சபைகள், கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம். தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம். பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் போன்ற ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம் இல்லாதவர்கள்; இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் அவமதிக்கிறவர்கள், இப்படிப்பட்ட சபைகள் ஆவிக்குரிய கிறிஸ்தவ சபைகளே அல்ல. இவைகள் வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் சபைகள் அல்ல. அப்படியே இயேசுவை, ஜெநிப்பிக்கபட்டவர் என்றும், திரித்துவம் இல்லை என்றும்; பரிசுத்த ஆவியானவர் ஒரு சக்தி என்றும், 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும், பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை அல்ல என்றும், கிறிஸ்துவுக்கே நிழலாட்டமான பஸ்கா, அறுப்பின் பண்டிகை, பெந்தகொஸ்தே பண்டிகை போன்றவை களையும் வேதத்தில் சொல்லப்படாத பாரம் பரியமான மனுஷரின் கற்பனைப் படியான பண்டிகைகளையும் கொண்டாடலா

மென்றும் போதித்து; மரியாள் தான் மக்களுக்காய் பரிந்து பேசுகிறார்; "மரியாளிடமும் மரித்த பரிசுத்த வான்களிடமும் ஜெபிக்கலாம் என்றும் கிரியைகளிலே காட்டி விசுவாசிக்கும் சபைகள் எல்லாமே வசனத்திற்கு விரோதமான சபைகள், கடைசி நாளில் வசனம் தானே நியாயந் தீர்க்கும்!"

**இப்படிப்பட்ட சபைகளிலும், இரட்சிக்கப்பட்டவர்கள் இல்லையா?** முழுக்கு ஞானஸ்நானம் எடுத்தவர்கள் இல்லையா? அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவி பெற்றவர்கள் இல்லையா? சன்மார்க்கர்கள் இல்லையா? இப்படியெல்லாம் கேள்விகள் எழலாம். இந்த காலம் கடைசிக் காலம். அறிவு பெருகிப் போன காலம் (தானி.12:4). இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷர்களுக்கும் கட்டளையிடும் காலம்; அறியாமல் உள்ள காலமல்ல இது.(அப்.17:30) இந்த காலத்தில் வாழ்வோர் அப்.2:38ன் படி இரட்சிக்கப்பட்டிருந்தால் (யோ.3:3, 5; 1 பேது. 1:23; ரோ.10:9-10; 1 கொரி.6:11; யாக்.1:18), அப்.2:40ன் படி மாறுபாடான சபையை விட்டு, சத்திய மாறுபாடு (வசன மாறுபாடு), ஜீவிய மாறுபாடு உள்ள சபையை விட்டு வெளி வந்திருக்க வேண்டுமல்லவா! அப்படி வெளி வந்து தங்களைத் தாங்களே இரட்சித்துக் கொண்டிருந்தால். அஸ்திபாரமுள்ள ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையின் அங்கங்களாகக் இருக்கும் ஏதோ ஒரு சபையில் இணைந்திருப்பார்கள் அல்லவா! மரித்தோரை விட்டு, இரட்சிக்கப்படாத கூட்டத்தை விட்டு - அடிப்படைச் சத்தியமில்லாத சபையை விட்டு - அந்நிய நுகத்தை விட்டு வெளியே வந்திருக்க வேண்டுமல்லவா! (எபே.5:14; 2 கொரி.6:14- 17) ஏன் வரவில்லை? பாரம்பரியம் இழுக்கிறது; மனுஷருடைய கற்பனை தடுக்கிறது. சமாரியஸ்திரியிடம் தண்ணீர் கேட்டவரின் சிந்தை நமக்கு இருக்க வேண்டுமே! சத்தியத்திற்காக - உலக வாழ்வைப் பற்றிக் கவலைப்படாத குமாரனின் சாயல் நமக்கு இருக்க வேண்டுமே! சிந்தியுங்கள்.

**இயேசுவின் மேல் கட்டப்பட்ட ஆவிக்குரிய கிறிஸ்துவ சபையில் அங்கங்களாய் இருக்கும் சபைகளில் எல்லாம் உபதேசங்கள் சரியாக இருக்கின்றனவா?** இது கேள்வி. மூல உபதேசம் - அஸ்திபாரம் - சரியாய் இருந்தால் போதும்; அதன் மேல் கூரை வீடும் கட்டலாம்; மெத்தை வீடும் கட்டலாம். அந்த வீடுகளில், கதவு ஜன்னல்கள், விளக்குகள் இல்லாமலும் இருக்கலாம். எபி.6:1,2ன் படியான அஸ்திபாரம் இருப்பதால் அந்த வீட்டில், அந்த சபையில் இருப்போரின் விசுவாசப்படி அவர்களுக்கு ஞானம் வரும்; அந்த ஞானப்படி அவர்கள் அதே சபையிலும் இருக்கலாம்; அதை விட

மேலான வசன அந்தஸ்துடைய சபைக்கும் போகலாம். கர்த்தர் புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்; அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார் (சங்.23:2) இப்படியான அவர்களின் வசன விசுவாசக் கிரியைகளின் படி பரலோகில் பலதரப்பட்ட கீரிடங்கள் கொடுக்கப்படும்.

**கற்பாறையாம் இயேசுவின் மேல் கட்டப்பட்ட கிறிஸ்தவ ஆவிக்குரிய சபையில் அங்கங்களாய் இருக்கும் சபைகளில் எல்லாம் உத்தமமாய் - ஒழுக்கமாய் நடக்கிறார்களா?** இது கேள்வி. சன்மார்க்கர்கள் இந்துவிலும் உண்டு; முஸ்லீமிலும் உண்டு; பாரம்பரிய கிறிஸ்துவ சபையிலும் உண்டு. உத்தமமாய் வாழ்ந்தாலே பரலோகம் கிடையாது. காந்தி, அன்னை தெரசா, புத்தர் போன்றோரெல்லாம் உத்தமரில்லையா? சிந்தியுங்கள். பரலோகம் போக வழியை நிக்கோதே முக்கு இயேசு சொன்னதை மறந்தீர்களா? இரட்சிக்கப்பட்டால் பரலோகம் நமக்குண்டு, இரட்சிப்பு என்பது நுழைவுத் தேர்வில் வெற்றி பெறுவது போல்; வெளிநாடு செல்ல பாஸ்போர்ட்ட போல் ஆமென். ஆனாலும் அந்த இரட்சிப்பில் முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவனுக்கே பரம இரட்சிப்பு; பரலோகம் (மத்.24:13), விசா இல்லையேல் வெளிநாடு போக முடியாது; கல்லூரியில் பாஸ் பண்ணினால் தான் பட்டம். ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றிலும் குற்றமற்றவர்களாக இருக்க வேண்டும் (1 தெச.5:23) இரட்சிக்கப்பட்டவன் ஆவியிலே புது சிருஷ்டி; ஆவியிலே வசனத்தால் வளரும் போது ஆத்மாவாகிய மனம் மறுரூபம் ஆகிறது; இயேசு வரும்போது சரீரம் மறுரூபமாகும். (2 கொரி.5:17; ரோ.12:2; 8:23). ஆவியிலேயே மாறாதவனுக்கு பரலோகம் எப்படி உண்டு? அப்படியே மாறினாலும், பவுலைப் போல, பெர்க்மான்ஸ் போல என்னைப் போல வெளியே வராவிட்டால் பரலோகம் எப்படி உண்டு? இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ எங்கே இருக்கிறாய்? உன்னை நீயே சீர்தூக்கிப்பார்! இயேசு சீக்கிரம் வருகிறார். கைவிடப்படவா நீ கிறிஸ்தவனானாய்? மாறுபாடுள்ள சந்ததியை விட்டு வெளியே வந்து ஆவிக்குரிய சபையிலே இணைந்து ஆராதிக்க கற்றுக்கொள்; ஊழியம் செய்ய ஆரம்பி! மோசே எகிப்தை விட்டு ஏன் வந்தான் தெரியுமா? மோசேயை தேவன் கொல்லப் பார்த்தது ஏன்? (யாத்.4:22-24) சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!....

நீ ஆவிக்குரிய சபையிலிருந்தால் பரலோகம் உனக்குண்டு.

❖ ❖ ❖

# யோவான் ஸ்நானன் கொடுத்த ஞானஸ்நானமும் நாம் பெற்ற ஞானஸ்நானமும் ஒன்றா?

தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கும் முறையானது யோவான் ஸ்நானன் காலத்திலிருந்து தான் ஆரம்பமானது. அதற்கு முன் வேதத்தில் இல்லவே இல்லை. 1 கொரி. 10:2ல் இஸ்ரேலர்கள் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்று பவுல் எழுதியது, நமக்கு திஷ்டமாய் விளக்குவதற்காகத் தானே ஒழிய இஸ்ரவேலர்கள் ஞானஸ்நானம் பெறுகிற காரியம் அவர்களுக்கும் தெரியாது; வழி நடத்திய மோசேக்கும் தெரியாது. அவர்கள் அப்படி வழிநடத்தப்பட்டது நமக்கு விளக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவு தான், யோவான் ஸ்நானன் "மனந்திரும்புங்கள்; பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது" என்று பிரசங்கித்தான், பாவங்களை சுமந்து தீர்க்கப் போகிற தேவாட்டுக் குட்டியாகிய இயேசுவின் முதலாம் வருகையை வெளிப்படுத்தினான். அவனுடைய பிரசங்கம் கேட்டு பரிசேயரும், சதுசேயரும் அவனிடத்தில் வந்து பாவங்களை அறிக்கையிட்டார்கள். இவனால் சொல்லப்பட்ட மேசியாவை கண்டு விசுவாசித்து, மனந்திரும்ப நாங்கள் தயார் என்று சொல்லி வந்தார்கள். வருங்கோபத்திற்கு தப்பித்துக் கொள்வதற்காய், அவனிடம் வருபவர்கள் உண்மையிலேயே "மனந்திரும்புவேன்" என்று கூறும் அறிக்கைக்கு ஏற்ற கனிகளைத் தர வேண்டும் என்று அவன் கட்டளையிட்டதாலே பல பாவ அறிக்கை வெளிவந்தது. இயேசுவை - இயேசுவின் இரட்சிப்பை, போதனையை - விசுவாசித்து மனந்திரும்புவோம் என்று அவர்கள் அறிக்கையிட்டதற்கு அடையாளமாய் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். (மத்.3) அப்படி அவர்கள் பாவ அறிக்கை இட்டதாலோ, தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றதாலோ அந்த பழைய ஏற்பாட்டு மக்களின் பாவங்கள் அழிக்கப்படவில்லை; எப்போதும் போல மூடப்பட்டுக் கொண்டே தான் இருந்தது. காளை, வெள்ளாட்டுக் கடாவின் இரத்தமல்ல; இயேசுவின் இரத்தமே பாவத்தை அழிக்கும். ஆமென்.

நாம் பெறுகிற ஞானஸ்நானம் என்ன? 1 கொரி.10:2 ஐ மறுபடியும் வாசியுங்கள். மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றார்களாம். மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் இரண்டு ஞானஸ்நானம் பெற்றார்களாம். எபே.4:5ன் படி ஒரே ஞானஸ்நானம் தான் உண்டு; ஒரே கர்த்தர் தான் உண்டு. ஆனால் ஒரே கர்த்தர் (LORD) பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று 3 ஆள்தத்துவமாயிருக்கிறார். அப்படியே ஒரே ஞானஸ்நானம் 3 பிரிவுகளாய் இருக்கின்றன. எபி.6:1,2 உள்ள மூல உபதேசத்தில்

"ஸ்நானத்திற்கு அடுத்த உபதேசம்" என்று போடாமல், "ஸ்நானங்களுக் கடுத்த உபதேசம்" என்று பன்மையில் போடப்பட்டதை தியானியுங்கள். எனவே ஒரே ஞானஸ்நானம் (1) கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம். (2) தண்ணீர் முழுக்கு ஞான ஸ்நானம். (3) பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்று மூன்று பிரிவுகளாயிருக்கின்றது. மோசே இயேசுவுக்கு முன்னடையாளமானவன். எனவே தான், இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவது போல மோசேக் குள்ளாக பெற்றதாக பவுல் எழுதுகிறான்; மோசேக்குள்ளாக மேகத்தினால் ஞானஸ்நானம் பெற்றது போல, நாமும் கிறிஸ்துவுக்குள்ளாக ஜலமாகிய வசனத்தினால் ஆவியிலே - ஆவி யானவரைக் கொண்டு ஞானஸ்நானம் பெறுகிறோம். மறுபிறப்படைகிறோம்; இரட்சிக்கப்படுகிறோம். (யோ.3:3,5; 1 பேது.1:23; 1 கொரி.6:11; யாக்.1:18; ரோ.10:9,10, கலா.3:27; ரோ.6:3; கொலோ.2:11,12). இப்படி இஸ்ரவேலர் பெற்றது போல தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகின்றோம். (1 பேது.3:21; மாற்.16:16; மத்.28:19). அதன் பின் பரிசுத்த ஆவியினால் நாம் மட்டும், அந்நியபாஷை அடையாளத்தோடு, ஞானஸ்நானம் பெற சிலாக்கியம் பெற்றிருக்கிறோம் (அப்.1:4 மத்.3:11) ஏனெனில்நம்மோடு நமக்குள்ளேயே நிரந்தரமாய் இருப்பது போல பரிசுத்த ஆவியானவர் அப்போது அருளப்படவில்லை (யோ.7:38)

யோவான் கொடுத்த தண்ணீர் ஞானஸ்நானமும் நாம் பெற்ற தண்ணீர் ஞானஸ்நானமும் ஒன்றா? இரண்டுமே தண்ணீருக்குள் ஞானஸ்நானம் தான்; ஆனால் இரண்டும் ஒன்றல்ல. நாமோ அப்.2:38ன் படி மனந்திரும்பி - மறுபடியும் பிறந்து, அதாவது பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று, புது சிருஷ்டியாகி (வசனத்தினால் உண்டாகும் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்று) பாவத்திற்கு மரித்து நீதிமானாய் ஆக்கப்பட்டோம் என்ற விசுவாசத்தோடு, இயேசுவின் நாமம் தரித்து சீஷராக்கப்பட்டு அதற்கு அடையாளமாய் தண்ணீர் ஞானஸ்நானம் பெறுகிறோம். இயேசுவின், பாவத்திற்கு மரித்த மரணம், அடக்கம், நீதிக்கு உயிர்தெழுதல் என்பதற்கு அடையாளமாய் நாம் ஆகிவிட்டோம்; தேவனின் பிள்ளையாய் மாறிவிட்டோம் என்பதை ஊருக்கும் உலகிற்கும் பிசாசுக்கும், தேவனின் நாம மகிமைக்காய் தெரியும்படி தண்ணீர் ஞானஸ்நானம். இப்படி தண்ணீருக்குள் மூழ்கி வரும் போதல்ல பாவமன்னிப்பு. பாவமன்னிப்பு பெற்றுவிட்ட பிறகே இந்த தண்ணீர் ஞானஸ்நானம். யோவான் ஸ்நானனோ, மனம் திரும்புவோம் என்ற உறுதியோடு (மனந்திருந்தி விட்டோம் என்றல்ல) மனந்திரும்புதலுக்கு ஏற்ற தண்ணீர் ஞானஸ்நானம் கொடுத்தான்.

மனந்திரும்பியபின் ஞானஸ்நானம் எடுத்த நாம் நிலைத்திருக்கிறோம்; மனந்திரும்புதலுக்கு ஏற்ற ஞானஸ்நானம் பெற்ற இஸ்ரேலர் விசுவாசத்தில் நிலைத்திராமல் இயேசுவை விட்டு விலகி விட்டனர்; மனந்திரும்புவேன் என்று சொன்னவர்கள் மனந்திரும்பாலே போய்விட்டனர். நாம் பெற்ற ஞானஸ்நானம் எவ்வளவு விசேஷமானது என்பதை சிந்தியுங்கள்.

மட்டுமல்ல.... நமது ஞானஸ்நானத்தின் மூலமாய், தேவனோடு உடன்படிக்கை பண்ணுகிறோம் (1 பேது.3:21); நிச்சயதார்த்தம் பண்ணப் படுகிறோம்; அவரே மணவாளன் என்று உறுதி கொள்கிறோம். ஆக்கினைத் தீர்ப்பாகிய நரகம் இல்லாதபடி, இந்த உலகை விட்டு பாதுகாக்கப்பட்டு சொர்க்கத்திற்கு செல்ல மீட்கப்படுகிறோம் (மாற்.16:16). ஆமென். தேவனின் கட்டளையை நிறைவேற்றுகிறோம் (மத்.28:18-20). இதனால் அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெறுகிறோம். (அப்.2:38, 39)

அப்.19:1-6ஐ வாசியுங்கள். பரிசுத்த ஆவி பெறாதவன் - பரிசுத்த ஆவியை அறியாதவன் - பெறுகிற ஞானஸ்நானம் மனந்திரும்புதலுக்கேற்ற யோவான் ஸ்நானனின் ஞானஸ்நானம். அந்த ஞானஸ்நானம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்கின்ற திரித்துவ தேவனின் நாமத்தில் கொடுக்கப்படுவது அல்ல. எனவே தான், பவுல் அந்த எபேசு மக்களுக்கு மறுபடியும் இயேசு கட்டளையிட்டபடியே ஞானஸ்நானம் கொடுத்தான். எபேசிய மக்களும் இயேசுவின் நாமம் தரித்து (கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நான அனுபவத்திற்குப் பின்) அந்த இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். இது மனந்திரும்பிய பின் பெறுகின்ற ஞானஸ்நானம். இதைப் பெற இயேசுவை ஆண்டவரென்றும், பாவத்தை தீர்க்கிற இரட்சகரென்றும் இருதயமாகிய ஆவியிலே விசுவாசித்து வாயினாலே அறிக்கையிட்டு இரட்சிப்பைப் பெறவேண்டும் (ரோ.10:9,10); யோ.16:8,9ன் படி இயேசுவை விசுவாசிக்காத மாபெரும் பாவத்திலிருந்து விடுதலை பெற வேண்டும்; பிசாசின் - உலகின் - மாம்சத்தின் பக்கமிருந்தமனது. இயேசுவின் பக்கம் திரும்பினாலே, அது வரைக்கும் செய்த எல்லா பாவங்களிலிருந்தும் முழுமையான விடுதலை கிடைக்கிறது. எனவே யோவான் ஸ்நானன் ஞானஸ்நானத்தின் போது செய்தது போல பாவ அறிக்கை செய்யத் தேவையில்லை. அந்தப் பாவ அறிக்கையினால் பாவம் கழுவப்பட வில்லையே!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தையும் மனந்திரும்பி - புது சிருஷ்டியாகி - பெறுகிற ஞானஸ்நானத்தையும் தியானித்துப்பார், புதிய ஏற்பாட்டுக கிறிஸ்தவர்களாகிய

நமக்கு தேவன் கொடுத்திருக்கிற சிலாக்கியத்தை - பெரும் பாக்கியத்தை - எண்ணிப் பார்! பழைய ஏற்பாட்டு யோவான் ஸ்நானனின் ஞானஸ்நானத்தை விட நாம் எவ்வளவு பெரிய ஞானஸ்நானம் என்று சிந்தித்துப்பார்! அல்லேலூயா!

❖ ❖ ❖

## பாவம் செய்தால் வரமும் வல்லமையும், அதிகாரமும் இல்லாமல் போகுமா?

பாவம் செய்யாமல், உத்தமனாய் வாழ்கின்ற கிறிஸ்துவனுக்குத்தான் வரமும், வல்லமையும், அதிகாரமும், கிரியை செய்யுமென்றும், பாவம் செய்கின்றவனுக்கு, இவைகளெல்லாம் எடுப்பட்டுப் போகும் என்றும் போதிக்கப்படுகின்றன; நம்பப்படுகின்றன. ஒருவர் அற்புதங்களை செய்தால், பிசாசை விரட்டினால் தீர்க்க தரிசனங்களை சொன்னால் அவர் நீதிமானென்றும், பெரிய தேவ மனுஷர் என்றும் கிறிஸ்தவ வட்டாரம் நம்பி மத்.7:21-23 ஐ சிந்திக்காமல் இருக்கின்றது. இவைகளைக் குறித்ததான சத்தியத்தை ஆவியானவர் மலரச் செய்வாராக. (யோ.16:13)

முதலில் வரம், வல்லமை, அதிகாரம் பற்றி முழுமையாய் அறிய வேண்டும். 1 கொரி.12:8-10ல் 9 விதமான வரங்கள் சொல்லப்பட்டுள்ளன. இந்த வரங்களை ஆவியானவர் தமது சித்தத்தின்படியே பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரி.12:11). நமது திறமையை வைத்தோ, உண்மை உத்தமத்தை வைத்தோ வரங்கள் கொடுப்பதில்லை. இந்த அனுக்கிரகம் நமது ஊழியப் பிரயோசனத்திற்கென்று அளிக்கப்படுகின்றது. இது கிருபையாய் கிடைப்பது. ஆதி 1:28ல் 5 விதமான அதிகாரங்களை தேவன் பாவமில்லாத மனிதனுக்கு தந்தார். அவனோ பாவம் செய்ததன் பயனாக, இந்தப் பூமியைக் கீழ்ப்படுத்தி, ஆண்டு கொள்ளத்தக்கதான அதிகாரம் இல்லாமற்போயிற்று (ஆதி.9:2; லூக்.4:4-6). இயேசு கிறிஸ்துவோ, சகல அதிகாரங்களையுமுடைய தம்மை விசுவாசித்து மத்.28:18-20ன்படி செயல்படும் போது எல்லா அதிகாரங் களையும் விசுவாசிகளுக்குத் தரத் தயாராயிருக்கிறார். வல்லமையிலே இரண்டு வகை உண்டு. ஒன்று வரங்களிலே ஒன்றான அற்புதங்களைச் செய்யும் சக்தி: இது தேவனே தருவது (1 கொரி.12:10) மற்றொன்று நாம் உபவாசத்தோடு சரீரத்தை ஒடுக்கி, ஆவியை உயர்த்தி தேவனோடு தொடர்பு கொண்டு ஆவியிலே நாமே பெற்றுக் கொள்ளும் வல்லமை. இதைத்தான் மத்.17:21ல் இயேசு சொன்னார்.

நாம் பாவம் செய்தால்ஆவியானவர் தந்த வரம் நம்மைவிட்டு எடுபட்டுப் போகுமா? இது கேள்வி. அக்கிரமச் செய்கைக்காரனான பொருளாசைக்காரன் பிலேயாமின் தீர்க்கதரிசனவரம், அவன் பாலாக்கிடம் வந்த போதும் கிரியை செய்தது (எண்.22:38; 23:16,26) தாவீதைக் கொல்ல அலைந்த - ராஜ அபிஷேகம் எடுபட்டுப் போன - பாவி ராஜா சவுல், ராமாவுக்கு அருகில் போய் தீர்க்க தரிசனம் சொன்னான் (1 சாமு. 19:20-24) வரம் எடுபட்டுப் போகவில்லை. அக்கிரமச் செய்கைக்காரனாய் காய்பா இருக்கும் போது கூட, இயேசுவைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை அவன் சரியாய் சொன்னான் (யோ.11:49-52). எண். 11:24-27 ஐ வாசித்தால், மோசேயோடு சபைக்கு வராத 2 பேருக்கும் வரம் கிரியை செய்ததை அறியலாம். பாவிகளாயிருக்கும் போதும், வரங்களெல்லாம் கிரியை செய்கிறது. ரோ 11:29ன் படி தேவன் தந்த கிருபை வரம் எந்த நிலையிலும் எடுபடாது. தேவன் கிருபையாய் கொடுப்பவர் மாத்திரமே; எடுப்பவர்அல்ல. தற்காலத்தில் கூட, இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் அவமதிக்கும் குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கின்ற பாவத்திலிருப்போரும், சத்திய மாறுபாடு, ஜீவிய மாறுபாடுள்ள (அப்.2:40) சந்ததியை விட்டு வெளிவராத பாவிகளும், லேவி. 23ல் சொல்லப்பட்ட நிஜமாகிய கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான பண்டிகைகளை கிறிஸ்து வந்த பின்பும் கொண்டாடி அவரின் முதல் வருகையை இழிவுபடுத்தும் அக்கிரமக்காரர்களும், தீர்க்கதரிசனம் சொல்வதையும், வியாதிகளை குணமாக்குவதையும், ஞானமாய்ப் போதிக்கிறதையும், (அதாவது வரங்கள் கிரியை செய்கிறதும்) நாம் கண்கூடாய்க் காண்கிறோமே! இயேசு கிறிஸ்துகூட நமக்காய்ப் பாவமாக்கப்பட்டு பாவியாய் சிலுவையில் தொங்கிய போதும் (2 கொரி.5:21) பகிரங்க வருகையில் தன்னைச் சேர்த்துக் கொள்ள கள்ளன் வேண்டிய போது அவருக்குள்ளிருந்த தீர்க்கதரிசன வரத்தினால், "இன்றைக்கே என்னோடுகூட பரதீசிலிருப்பாய்" என்று சொன்னதை நினைவு கூறுங்கள். வரம் எப்போதும் மாறாது; எடுபடாது. இதை வாசிக்கும் தேவபிள்ளையே! எந்த வரங்களை வைத்தும் யாரையும் எடைபோடாதே! பரலோகமும் நரகமும் கனிகளை வைத்துத் தானே ஒழிய, வரங்களை வைத்து அல்ல. வரங்களை தேவன் அளிப்பதும் கனிகளை வைத்து அல்ல. அல்லேலூயா!

ஒரு பதவியிலோ, ஒரு ஸ்தானத்திலோ இருக்கும் வரைக்கும் தான் ஒருவன் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்; அதை விட்டு தாழ்ந்து விட்டால் அதைப் பயன்படுத்தவே முடியாது. தற்கால மந்திரிகளுக்கும், எம்.எல்.ஏ, எம்.பிக்களுக்கும் இந்த நிலை தானே! ராஜகிரீடம்

இல்லாதவனுக்கு ராஜ அதிகாரம் இல்லை அல்லவா! தேவன் தந்த அதிகாரத்தை பிசாசுக்கு ஒப்புக் கொடுத்ததால் அல்லவோ மனிதன் இன்றைக்கு இந்த பூமியையும், பூமியிலுள்ளவைகளையும் கீழ்படுத்தி ஆளமுடியவில்லை; பிசாசானவன் உலகை ஆளுகின்றான். அவனுக்கு அடிமையாய் மனிதன் இருக்கிறான்; அதிகாரம் இழந்து நிற்கிறான். பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் பெற்றிருந்த இயேசு, (மாற்.2:10) சிலுவையிலே பாவியாய்த் தொங்கியதாலல்லவோ, இஸ்ரவேலர்களின் பாவங்களை மன்னிக்க முடியாமல், பிதாவை மன்னிக்கும் படி வேண்டினார். அதிகாரமும் வல்லமையும் இரண்டு கண்கள்; இரட்டைக்குழல் துப்பாக்கிகள். எவ்வளவு தான் அதிகாரம் இருந்தாலும் வல்லமை இல்லையேல் பிரயோஜனமில்லை.

டிராபிக் போலீஸ் தனக்குள்ள அதிகாரத்தினாலே, ரோட்டிலே கவர்னர் வந்தாலும் நிறுத்த முடியும். ஆனால் அதே போலீஸ் அதிகாரத்தோடே ஒரு ரௌடியைப் பிடிக்கப் போக வேண்டுமென்றால், ரௌடிக்கு மேலே வல்லமை அந்த போலீசுக்கு இருக்க வேண்டும். அப்போது தான் ஜெயிக்க முடியும். பிசாசை ஜெயிக்க, இயேசு என்ற நாமத்தின் அதிகாரத்தோடு வல்லமையும் தேவை. இயேசு கூட வல்லமை இழந்தவராய் சிலுவையிலே அறையப்பட்டிருந்தார் (2 கொரி.13:14) ஆனாலும் தேவ வல்லமையினாலே உயிர்த்தெழுந்தார். நசரேய விரதம் பூண்டு தேவ வல்லமையை பெற்றிருந்த சிம்சோன், தெலீலாவினால் தலைமுடி சிரைக்கப்பட்ட உடனே வல்லமை இழந்து போனான்; பெலிஸ்தரை ஜெயிக்க முடியாமல் கைதியானான்; கண்பார்வை இல்லாமலாக்கப்பட்டான். அவனுக்கு வல்லமை கொடுக்கப்பட்ட போதோ எதிரிகள் அனைவரையும் அழித்தான் (நியா.16:28-30).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நாம் பாவம் செய்யும் போது - தேவனை விட்டு விலகியிருக்கும் போது - பிசாசின் இருளுக்குள் நிற்கும் போது - பாவியாய் ஆகும் போது, நம்மிடம் இருக்கும் அதிகாரமும் வல்லமையும் நம்மைவிட்டு மாறிப்போகும்; அகன்று போகும். வல்லமைப் பிசாசை எதிர்க்கவோ - விரட்டவோ - நம்மால் ஒன்றும் முடியாற் போகும். பிசாசின் கிரியைகள் நம்மில் வெளிப்பட ஏதுவாகும். ஆனால், தேவன் தந்த கிருபை வரமோ எப்போதும் மாறவே மாறாது. எனவே வரங்களை வைத்து யாரையும் வல்லவர் - நல்லவர் - நீதமான் - உத்தமர் என்று எண்ணாதே! எடை போடாதே! இயேசுவே, "அறியேன்" என்று சொல்வராமே! (மத்.7:22,23) கனிகளை வைத்துத் தான் நமக்குப் பரலோகம்! இயேசு

சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!!! ஆயத்தமாக்குவோம்!!! அதிகாரமும் வல்லமையும் மாறாமல் காத்துக் கொள் இயேசுவின் வசனத்தால்; நாமத்தால்!

❖ ❖ ❖

## இயேசுவின் நாமத்தில் பவுலும் பேதுருவும் ஞானஸ்நானம் கொடுத்தார்களா?

"இயேசுவின் நாமக்காரர்கள்" பல பிரிவுகளாய் செயல்படுகிறார்கள். அதிலே மிகவும் பிரபலமான - மூன்று கூட்டத்தாரை தெரிந்து கொள்ளுங்கள். (1) "இயேசு தான் பிதா; இயேசு தான் பரிசுத்த ஆவி. மூன்று ஆட்தத்துவம் என்பது இல்லை" என்று சொல்லும் கூட்டம் (2) "பிரன்ஹாம் இயேசு வருகிறார்" என்று சொல்லி பிரன்ஹாமின் உபதேசத்தைப் பின்பற்றும் ஒரு கூட்டம் (3) "ஒரே தேவன் மூன்று ஆள்தத்துவமாய் இருக்கிறார். ஆனால் ஞானஸ்நானம் மட்டும் இயேசுவின் நாமத்தில் கொடுக்க வேண்டும்" என்று ஒரு கூட்டம். எல்லாக் கூட்டங்களுமே ஒருமித்துச் சொல்கிற முழக்கம்:- "இயேசுவின் நாமத்தில் தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்; பவுலும் பேதுருவும் அப்படித் தான் கொடுத்தார்கள்" என்பதாகும். இவர்களின் கள்ளப் போதகத்திற்கு விளக்கம் தெரியாத பல பெந்தகொஸ்தே ஊழியர்கள். "அப்படியும் கொடுக்கலாம்" என்கின்றனர். ஒரு சில பிரபல ஊழியர்கள் இயேசுவின் நாமத்திலும் ஞானஸ்நானம் கொடுக்கும் இவர்களிடம் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்களாம். தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத் தக்கதான இந்த பொல்லாத உபதேசத்துக்கான மறுப்பை ஆராய்ச்சிப் புத்தகங்களில் பல செய்திகளாக வெளியிட்டிருக்கிறேன். இன்னும் ஆவியானவர் விளக்குவதைப் பார்ப்போம்.

**முதலில் நாமம் என்றால் என்ன என்று தெரிய வேண்டும்.** "நாமம்" என்றால் பெயர் என்று மட்டுமல்ல. பெலிஸ்தன் முன்னாலே தாவீது சொல்வதைப் பாருங்கள். "கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" என்கிறான். அப்படியானால் கர்த்தரின் பெயர் "தாவீதா?" இல்லையே (1 சாமு.17:45) "என் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள்.." என்று 2 நாளா 7:14ல் வருகிறதே அப்படியானால் எல்லா ஜனங்களுக்கும் கர்த்தருடைய பெயர் தான் இடப்பட்டுள்ளதா? உபா.28:10; எரே.14:9 போன்ற வசனங்களையும் வாசியுங்கள். இங்கே நாமம் என்றால், மகிமை, வல்லமை, மாட்சிமை, அதிகாரம் போன்ற அர்த்தங்களில் வருகின்றன என்பதை தியானியுங்கள்.

தேவனின் வல்லமையோடும், அதிகாரத்தோடும், தைரியத்தோடும் தாவீது பெலிஸ்தனிடம் சென்றான்; வென்றான். அல்லேலூயா!

**நம் ஒரே தேவனுக்கு பெயர் உண்டா?** பெயர் யாருக்கு வைக்கப்படுகின்றது? ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இருக்கும் போது அவர்களுக்குள்ளே அடையாளம் கண்டு கொள்ள பெயர் இடப்படுகின்றது. ஒரே பிதா நமக்குண்டு. அவருக்குப் பெயர் தேவையா? ஒரே குமாரன் - வார்த்தையானவர் - நமக்குண்டு. அவருக்குப் பெயர் தேவையா? ஒரே பரிசுத்த ஆவியானவர் நமக்குண்டு; அவருக்குப் பெயர் தேவையா? அப்படிப் பெயர் தான் உண்டா? இந்த கேள்வியைத் தான் சாலமோன் ஞானி நீதி.30:4ல் கேட்கிறான். அதற்குப் பதிலிருந்தால் அவன் சொல்லியிருப்பானே! பிதா, குமரன் (வார்த்தை), பரிசுத்தஆவியானவர் என்று அழைப்பதெல்லாம் அவர்களின் குணாதிசயங்களைக் கொண்டு அழைப்பதாகும். எல்ஷடாய், யோகோவா, கர்த்தர், கன்மலை, அதிசயமானவர், சமாதானப்பிரபு, நித்திய பிதா, இயேசு, இரட்சகர் என்றெல்லாம் பல பெயர்கள் நம் தேவனுக்கு உண்டு. இவைகள் எல்லாம் அந்தந்த சமயத்தில், அவர்களின் செயல்பாடுகள் மற்றும் குணாதிசயங்களை வைத்து அழைக்கப்படுவதாகும். இந்த பெயர்களையெல்லாம் தேவனே அவ்வப்போது மனிதர்களிடம் சொல்லி தன்னை வெளிப்படுத்துகிறார். இயேசு என்று குமதாரனுக்குப் பெயர் வைத்ததே அவர் நம்மைப் போல மனிதனாய் வந்த போது தான். கர்த்தர், கன்மலை, யோகோவா போன்ற பெயர்களெல்லாம் இம்மூவருக்குமே பொருந்தும்.

**மூவர்** என்று சொன்ன உடனே பலருக்கு என்மீது கோபம் வரலாம். வேதத்தில் உள்ள ஒரு சில வசனங்களை சொல்கிறேன் கேளுங்கள்:-

(1) மனிதனாய் வந்து, இயேசு என்ற மனிதப்பெயரோடு யோர்தானிலே ஞானஸ்நானம் எடுக்கும் போது, வானத்திலிருந்து "இவர் என் நேசகுமாரன்" என்ற பிதாவின் சத்தம் கேட்டது. பரிசுத்த ஆவியானவர் புறா வடிவில் இறங்கி வந்தார். ஆக, மூன்று ஆட்தத்துவமாய் தேவன் வெளிப்பட்டார் (மத.3:16,17)

(2) பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" என்று 1 யோ. 5:7ல் பகிங்கரமாகவே எழுதப்பட்டுள்ளது. இந்த வசனம் அடைப்புக்குறிக்குள் உள்ளதால் மூலபாஷையில் இது இல்லை என்று சிலர் வாதாடுகிறார்கள். அப்படியானால் மூலபாஷையில் இல்லாத வசனம் அவர்கள் பைபிளில் ஏன் இருக்கிறது? கிழித்துப் போட பயமா? சைபிரியன், விஜிலியஸ் போன்ற வேத

வல்லுநர்கள் இதை யோவான் எழுதினான் என்று உறுதிப்படுத்துகின்றனர். "மூவரும் ஒன்றாயிருக்கிறார்க்ள" என்றால் மூவரும் ஒரே ஆள் என்றல்ல; அப்படியிருக்கவும் முடியாது. யோ.17:11, 21-23 போன்ற வசனப்படி மூவரும், மகிமை, மாட்சிமை, வல்லமை அன்பு ஆகிய எல்லாவற்றிலும் ஒன்றாயிருக் கிறார்கள் என்பதாகும். உபா.6:4ஐ ஆங்கிலத்தில் தியானியுங்கள்.

(3) தேவன் : நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்கினார். (ஆதி.1:26). இங்கே நமது என்பது பன்மை. தேவன் - God என்பது எபிரேயத்தில் ELOHIM - ஏலோகிம் என்றுள்ளது. அதாவது இரண்டுக்கும் மேற்பட்ட ஆட்தத்துவம் என்று பொருள். ஆக படைப்பின் போதே ஒரே தேவன் 3 ஆட்தத்துவமாயிருந்தார்.

(4) இயேசு ஞானஸ்நானம் கொடுக்க சொன்ன கட்டளையில், "பிதா, குமாரன். பரிசுத்த ஆவியின் நாமத்தில்" என்ற மூன்று காரணப் பேரையும் ஒருமையில் சொல்லி "நாமம்" - அதாவது வல்லமை, மகிமை, மாட்சிமை, அதிகாரம் - என்ற அர்த்தத்தில் முடித்திருக்கிறார். (மத்.28:18-20) அல்லேலூயா!

மேற்சொன்ன ஒருசில கருத்துக்களோடு சத்தியத்திற்கு வருவோம். மரியாள், கானாவூர் கல்யாணத்திலே வேலைக்காரர்களிடம் "அவர் உங்களுக்கு என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள்" (யோ.2:5) என்று சொன்னபடியே வேலைக்காரர்கள் செயல்பட்டனர்; வெற்றி கண்டனர். ஆனால் கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்று தம்பட்டம் அடிப்பவனோ, இயேசு மத்.28:19ல் என்ன சொன்னாரோ அதன்படி செய்யாமல் இயேசுவின் வார்த்தைக்கு விரோதமாய் - மரியாளின் வேண்டுகோளுக்கு விரோதமாய் - செயல்பட ஆரம்பிக்கின்றான். யோ.5:43:14:26 போன்ற வசனங்களில் வரும் "நாமம்" என்பதை பெயர் என்று எடுத்துக் கொண்டு, அந்த பெயர்தான் "இயேசு" என்று சொல்லி, இது தான் பிதாவின் பெயரென்றும், பரிசுத்த ஆவியானவரின் பெயரென்றும் சொல்லி வசனதியானமின்றி குழப்புகிறார்கள். பிதாவுக்கு இயேசு என்று பெயர் வைத்தது யார்? எப்போது? யோ.14:23; அப்.7:55, 56; 1 யோ. 2:1 போன்ற வசனங்களில், இரண்டு ஆள்தத்துவமானவர்கள் தான் பிதாவும் குமாரனும் என்று புரியவில்லையா? சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றாவாளனை பிதா தருவார் என்று இயேசு சொன்னதன் அர்ததம் விளங்கவில்லையா? (யோ.14:16) மூன்று ஆள்தத்துவமாய் செயல்படும் தேவன் ஒரே தேவனாய் நமக்கிருக்கிறார். The LORD (கர்த்தர் - யோகோவா) our God (ஏலோகிம் - தேவன்) is one Lord"

(உபா.6:4) என்ற உண்மை முதலில் புரிய வேண்டும். (திரித்துவம் பற்றி ஆசிரியரின் ஆராய்ச்சிப் புத்தகங்களில் உள்ள பல செய்திகளை காணலாம்). ஆக இயேசு கட்டளையிட்டபடி "பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே" தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும் என்று அறிகிறோம். அவன்தான் கிறிஸ்துவின் சீஷன்.

பவுலும், பேதுருவும் எந்த நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்ற வசனமே வேதத்தில் இல்லை. அவர்கள் மத்.28:18-20க்கு மாறாகக் கொடுத்திருந்தாலல்லவோ இருந்திருக்கும்! அப்.2:38ல், இயேசுவின் நாமத்தினாலே பெற்றுக் கொள்ளுங்கள் என்பது பேதுருவின் கோரிக்கை. அப்படியே அப்.19:5ல் எபேசியர் தான் இயேசுவின் நாமத்தினாலே பெற்றுக் கொண்டார்கள். இவை இரண்டும் ஞானஸ்நானம் கொடுப்பதல்ல; பெற்றுக் கொள்வது. கொடுப்பது இல்லாமல் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது கேள்வி. இவையரண்டுமே கொடுப்பதற்கான விதியல்ல; பெறுவதற்கான விதி.

**பெறுவதற்கான விதி:-** மனந்திரும்பி பாவமன்னிப்புப் பெற்றவர்களுக்கு, விசுவாசிகளுக்கு, மறுபடியும் பிறந்தவர்களுக்கு, சீஷர்களுக்கு, புதுசிருஷ்டியானவர்களுக்கு, பரிசுத்தவான்களுக்கு, நீதிமான்களுக்குத்தான் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும்; அவர்கள்தான் கிறிஸ்துவாகிய இயேசுவைத் தரித்துக் கொண்டவர்கள்: இயேசுவின் நாமத்தினால் கழுவப்பட்டவர்கள்; இயேசுவின் "நாமம்" தரித்தவர்கள்: இயேசுவின் பெயரை மாத்திரமல்ல. பெயருக்கேற்ற மகிமை, மாட்சிமை. வல்லமை, அதிகாரம் பெற்றவர்கள்; விடுதலை பெற்றவர்கள் (யோ.3:3, 5; 1 பேது. 1:23; 1 கொரி.6:11; கலா.3:27; ரோ.13:14; யோ.1:12; ரோ.10:9,10; 1 கொரி.15:17; 1 சாமு.7:45; 2 நாளா 7:14) இயேசுவின் நாமம் தரித்தவன் - தான் தரித்த இயேசுவின் நாமத்திலேயே ஞானஸ்நானம் பெற வேண்டும்.

**கொடுப்பதற்கான விதி:-** சீஷராக்கப்பட்டவனுக்கு - இயேசுவின் நாமம் தரித்து, தான் தரித்திரிக்கிற நாமத்தோட ஞானஸ்நானம் பெற வந்திருக்கும் இரட்சிக்கப்பட்ட நீதிமானுக்கு, இயேசு கட்டளையிட்டபடி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். இப்படியாய் ஞானஸ்நானம் கொடுத்தால் தான் இயேசுவின் நாமந்தரித்து - அந்த நாமத்தினாலேயே ஞானஸ்நானம் பெறுபவனுக்கு, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி பற்றியும், அவர்களின் பணிபற்றியும் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு; அப்.19ல் உள்ள எபேசு மக்கள் போல் பரிசுத்த

ஆவியைக் கேள்விப்படாத நிலை வராது; அப்.2:38ன் படி பரிசுத்த ஆவியின் வரங்களைப் பெற்றுக் கொள்ள வாஞ்சை வரும்; பெறவும் முடியும்.

பேதுருவின் வழியைப் பின்பற்ற வேண்டும் என்று சொல்வோர் அறியட்டும்! இன்னொரு இடத்தில் பேதுரு கர்த்தருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்க கட்டளையிட்டான் (அப்.10:48); இயேசுவின் நாமத்தினால் அல்ல. கர்த்தர் என்பது குணாதிசயங்களை மற்றும் செயல்பாடுகளைச் சார்ந்த நாமமானாலும், என்றென்றும் சொல்லப்படும் கர்த்தரின் நாமமாவது:- “பிதாவாகிய கர்த்தர்; குமாரனாகிய கர்த்தர்; ஆவியானவராகிய கர்த்தர்” என்பதாகும். எனவே இயேசு சொன்னபடி பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே தான் அன்று ஞானஸ்நானம் கொடுத்திருக்க வேண்டும் (அப்.10:48; 8:36-38). லீதியாள், ஜெயிலர் மற்றும் கொரிந்தியருக்கு எந்த நாமத்திலும் பவுல் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை: பிலிப்பு, காந்தேக மந்திரிக்கு எந்த நாமத்திலும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை (அப்.9:17, 18; 16:15, 38). அது போல நாமும் இருக்கலாமா? சிந்தியுங்கள். நமக்கு வழிகாட்டி அப்போஸ்தலர் களல்ல; இயேசு தான் (எபி.12:1) அப்பமும் ரசமும் கொண்டு மரணத்தை நினைவு கூறுங்கள் என்று இயேசு சொன்னார் (மத்.26:26-28). ஆனால் அப்.2:46; 20:7ன் படி அப்பம் மட்டும் பிட்டார்கள் என்று இருப்பதால், நாமும் அப்பம் மட்டும் பிட்கலாமா? இயேசுவின் வார்த்தைதானே நமக்குத் தேவை. ஆதி அப்போஸ்தலர்கள் வீடுகள் தோறும் அப்பம் பிட்டனர்; பவுல் ஓய்வு நாளில் அப்பம் பிட்க கூடினான் (அப்.2: 20:7). நாம் எப்போது எங்கே எப்படி செய்வது? இயேசு சொன்னபடி அவர் மரணத்தை எப்போதும் நினைவு கூற வேண்டும் (1 கொரி.11:24,25) ஆமென். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! கிறிஸ்துவாகிய இயேசுவின் நாமம் தரித்து அந்த இயேசுவின் நாமத்தினாலேயே, பிதா,குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். பெறுகிற விதியை, கொடுப்பவர் எடுக்கக் கூடாது; கொடுக்கிற விதியை, பெறுகிறவர் எடுக்கக்கூடாது. அனைத்தையும் கிரமத்தோடு - வசனத்தோடு (Lawfull) செய்ய வேண்டும். இல்லையேல் அக்கிரமக்காரன் (Lawlessness) - வசனப் படி செய்யாதவன் - என்ற பழி வரும். என்ன தான் நீ அற்புதம் செய்து, தீர்க்கதரிசனம் சொல்கிறவராய் இருந்தாலும். அக்கிரமச் செய்கைக்காரர் என்று சொல்லி “அறியேன்” என்று தேவன் சொல்லும் நிலை வரும் (மத்.7:21, 22) ஜாக்கிரதை!

❖ ❖ ❖

# தசமபாகம் கொடுப்பது நியாயப்பிரமாண கிரியையா?

"நியாயப்பிரமாணக் கிரியைக்காரர் யாவரும் சாபத்திற்குட்பட்டவர்கள்" (கலா.3:10) என்று வேதம் சொல்வதால், நியாயப் பிரமாணச் சட்டமான தசமபாகம் கிறிஸ்தவனுக்கு தேவையில்லை என்று பெரும்பாலான பெந்தகொஸ்தே சபைகளில் போதிக்கப்படுகின்றன. இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

"தேசத்திலே நிலத்தின் வித்திலும் விருட்சங்களின் கனியிலும் தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது; அது கர்த்தருக்கு பரிசுத்தமானது" (லேவி.27:50) என்று சொன்னது நியாயப் பிரமாணம் தான். மல். 3:10ம் நியாயப்பிரமாணச் சட்டம் தான். நியாயப் பிரமாணம் கிறிஸ்தவனை ஆள்கிறதில்லை. ரோ.7:1ன்படி நியாயப் பிரமாணத்தினின்று விடுதலையாகி கிறிஸ்துவுக்கு உட்பட்டிருக்கிறான் கிறிஸ்தவன்" இப்படியெல்லாம் வேதம் திட்டமும் தெளிவுமாய்ச் சொல்லியிருக்க, இன்னும் ஏன் தசமபாகம் கொடுக்க வேண்டும்? 2 கொரி.9:7ல் "அவனவன் விசனமாயுமல்ல கட்டாய மாயுமல்ல: தன் மனதில் நியமித்த படியே கொடுக்கக் கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" என்று சொல்லியிருக்க, ஏன் பத்தில் ஒரு பங்கை மாத்திரம் கொடுக்க வேண்டும்? அதிகமாகத் தானே கொடுக்க வேண்டும்? என்று கேள்விகள் ஏராளமாய் எழும்புகின்றன. இந்தக் கேள்விகளை அப்படியே வாசிக்கும் போது சரியாய்த் தோன்றும். ஆனால், ஆவியானவரின் ஒத்தாசையோடு தியானிக்கும் போது உண்மைச் சத்தியம் விளங்கும்.

2 கொரி.9ஐ வாசித்தால், இங்கு தசம பாகத்தைப் பற்றி சொல்லவில்லை என்றும், பரிசுத்தவான்களுக்குச் செய்ய வேண்டிய தர்மகாரியத்தைக் குறித்து சொல்கிறது என்றும் அறிந்து கொள்ளலாம். 2 கொரி 8 ஐ வாசித்தால், தரித்திரத்திலே இருந்த மக்கெதோனியா நாட்டு மக்கள் உதாரத்துவமாய் கொடுத்த தர்மகாரியத்தை உதாரணப்படுத்தி, கொரிந்தியருக்கு பவுல் எழுதுகிறார் என்று அறியலாம். இங்கே சொல்லப்படுவது காணிக்கையைப் பற்றி. காணிக்கை வேறு; தசம பாகம் வேறு என்பது தெரியாத வரைக்கும் கருகலான சத்தியம் துளிர் விடாது. மல்.3:2-10ஐ தியானியுங்கள். லேவி.27:50ல் சொல்லப்பட்டபடி வருமானத்தில் 10ல் ஒரு பங்கு கர்த்தருக்குரியது: அது தான் தசம பாகம். மற்றபடி மீதமுள்ள 90 சதவீத வருமானத்தில் கொடுப்பது தான் காணிக்கை. காணிக்கையைத் தான் உற்சாகமாய் கொடுக்க பவுல் ஏவுகிறான்.

மல்.3:10ஐ வாசியுங்கள். தசமபாகத்தை எங்கே கொண்டு வர வேண்டும்? பண்டசாலையில் அதாவது Godownல்; Store yardல். எதற்காக? ஆலயத்தில் - சபையில் - ஆகாரம் உண்டாகும்படி. அதாவது ஆவிக்குரிய மற்றும் சரீர ஆகாரம் உண்டாகும்படி சபையிலிருந்து வசன ஆகாரம் புறப்பட்டுப் போக வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். எங்கெல்லாம் வசன ஆகாரம் புறப்பட்டுப் போகிறதோ, அந்த பண்டக சாலைக்கு தசமாபாகத்தைக் கொடுங்கள். அப்படிக் கொடுத்தால் என்ன ஆசீர்வாதம் உண்டு? வானத்தின் பல கணிகளைத் திறந்து இடங் கொள்ளாமற் போகுமட்டும் ஆசீர்வாதம். அல்லேலூயா! இந்தஆசீர்வாதம் இஸ்ரேலர் களுக்குத் தான் சொல்லப்பட்டது. இந்த ஆசீர்வாதம் நியாயப் பிரமாணக்காரர்களுக்குத் தான் சொல்லப்பட்டது. ஆனால் கலா.3:7,9,11,14ஐ வாசித்தால், ஆபிரகாம் மூலமாய் இஸ்ரேலர்களுக்கு வந்த ஆசீர்வாதங்கள் அனைத்தும், கிறிஸ்தவர்களாகிய நமக்கு உண்டல்லவா! தசம பாகம் கொடுக்க வேண்டாம் என்று வாதிடுவோரே, இந்த புத்தாண்டு ஆராதனையில் நீங்கள் கொடுத்த வாக்குத்தத்த அட்டையில் உள்ள வசனம் - ஆசீர்வாத வசனம், நியாயப் பிரமாணக்காரர்களுக்கு உரியது தானே! பழைய ஏற்பாட்டு மக்களுக்கு உரியது தானே! அந்த ஆசீர்வாதம் எப்படி உனக்கு வரும்? வெறுமனே கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்தினாலேயே வந்து விடுமா?

ஆசீர்வாதமும் சாபமும் நிபந்தனைக்குட்பட்டது என்று தெரியுமா? உபா.11:26-28;30:15, 19; 28:1-2,15 போன்ற வசனங்களை வாசியுங்கள். தேவன் சொல்லும் வார்த்தைப்படி நடந்தால் மட்டுமே இந்த ஆசீர்வாதங்கள் நமக்கு உண்டு. அப்படியானால் இடங்கொள்ளாமற் போகுமட்டும் ஆசீர்வாதங்களைப் பெற தசமபாகம் செலுத்தியாக வேண்டுமல்லவா! "தசமபாகம் செலுத்தும் நியாயப் பிரமாணக் கிரியை எனக்கு வேண்டாம்; விசுவாசத்தினால் இலவசமாய் இயேசு கிறிஸ்து மூலமாய் கிடைக்கும் ஆசீர்வாதம் போதும்; இதற்கு எந்த கிரியையும் தேவையில்லை விசுவாசமே போதும்; விசுவாசத்தினால் தான் இரட்சிப்பு என்ற ஆசீர்வாதம் வந்தது?" என்று சொல்வோர் உண்டு. அவர்களுக்கு சொல்கிறேன்:- எபே.2:8ன் படி ஆரம்ப இரட்சிப்பு விசுவாசத்தினால் தான்; கிரியையால் அல்ல. ஆனால் மத்.24:13 ன் படியான இறுதி இரட்சிப்பு விசுவாசத்தால் மட்டுமல்ல; விசுவாசக் கிரியைகளால் தான். வெளி.22:12ல் சொல்லப்பட்டது என்ன? அவனவனுடைய கிரியைகளுக்கு ஏற்ற பலன் இயேசுவோடு வருகிறது. யாக்.2:19ன் படி கிரியையில்லாத விசுவாசம் செத்தது. ஆக, கிரியை இல்லாமல், விசுவாசத்தால் இரட்சிக்கப்பட்ட ஒரு மனுஷன், இம்மையிலே நூறத்தனையாய் ஆசீர்வாதங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும்

பெற வேண்டுமென்றால், விசுவாசக் கிரியை கண்டிப்பாய் தேவை. ஆசீர்வாதம் நிபந்தனைக்குட்பட்டது (conditional) என்ற தேவ சித்தம் நேற்றும் இன்றும் என்றும் மாறாது ஆமென்.

விசுவாசக்கிரியை என்பது என்ன என்று யாக்.2:21-26ல் உள்ளதை வாசியுங்கள். நியாயப்பிரமாணக் கிரியைக்காரர்களும், நியாயப்பிரமாண கிரியையோடு மட்டும் நின்றிருந்தால் எபி11ல் வந்திருக்கவே மாட்டார்கள். அவர்களுக்கு பரலோகம் கிடைக்காது. நியாயப் பிரமாணக்கிரியைக் காரர்களுக்கும், விசுவாசக்கிரியை கண்டிப்பாய் தேவைப்பட்டது. அதுவே தேவசித்தம். அந்த விசுவாசக் கிரியை உள்ளவர்களைத் தான் தேவன் நியாயப் பிரமாண காலத்திலும், அதற்கு முன் இருந்த காலத்திலும், தற்கால புதிய ஏற்பாட்டு சபையிலும் தேவன் எதிர்பார்க்கிறார். அல்லேலூயா! ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததினால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (ஆதி.15:6) ஆனால் அவனது விசுவாசம், ஈசாக்கைப் பலியிட விழைகிற விசுவாசக் கிரிபையினாலே பூரணப்பட்டது. அல்லேலூயா! மட்டுமல்ல.... ராகாப் என்ற வேசி யேகோவா தேவன் மேல் - யேகோவா தேவ மனுஷர் மேல் - உள்ள விசுவாசத்தை, கிரியையினால் காட்டியதாலன்றோ நீதிமானாக்கப்பட்டாள்; அவள் வழியே இயேசு வந்தார். விசுவாசம் என்பது சரீரம் என்றும், விசுவாசக்கிரியை என்பது ஆவி என்றும், ஆவியில்லாத சரீரம் செத்தது போல, விசுவாசக் கிரியையில்லாத வெறும் விசுவாசம் செத்தது என்றும் யாக்.2:26 சொல்வதை தியானியுங்கள்.

அப்படியானால், மல்.3:10ல் உள்ள ஆசீர்வாதத்தைப் பெற அந்த வசனத்தை விசுவாசித்து அதை கிரியையிலே காட்ட வேண்டியது கட்டாயமல்லவா! சிந்தியுங்கள். நீங்கள் கேட்கலாம் "இந்த ஆசீர்வாதத்தைப் பெற ஏன் நியாயப் பிரமாண சட்டமாகிய தசம பாகத்தை கொடுக்க வேண்டும்" என்று. நான் முன்பே எழுதியிருக்கிறேன் "நாம் நியாயப் பிரமாணத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல; அது நம்மை ஆளாது" என்று, பின்பு ஏன் தசமபாகம் கொடுக்க வேண்டும்? பொய், திருடு, கொலை, விபச்சாரம் போன்றவை செய்யக்கூடாது என்பது நியாயப்பிரமாண சட்டம் தானே! அதை மட்டும் கைக்கொள்ளலாமா? இவைகள் நியாயப் பிரமாணத்தில் இருந்தாலும் இவைகளை ஏன் கைக்கொள்கிறோமென்றால், இவைகள் ஆதி முதல் - ஆதாம் முதல் - தேவன் வெளிப்படுத்திய காரியங்கள். அல்லேலூயா! அப்படித்தான், நியாயப் பிரமாணம் கொடுக்கப்படும் முன்பே, ஆபிரகாம் தசமபாகம் கொடுத்தான்; யாக்கோபு கொடுக்க பொருத்தனை பண்ணினான் (ஆதி.14:20; 28:22); அதுவும் தேவனுக்கு - தேவ மனுஷர்களுக்கு. இது

தேவசித்தம். இந்த சித்தத்தை நியாயப் பிரமாணம் வரும் முன்னே நமது விசுவாச தகப்பன் செய்து காட்டினான்; அதனாலே அவன் ஆசீர்வாதமாய் வாழ்ந்தான் (ஆதி.34:25) அப்படியே தேவசித்தத்தை, ஆபிரகாமின் விசுவாசத்தைப் போல கிரியைகளிலே காட்டுவோம்; பொருளாதார ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வோம்.

நிறைய விசுவாசிகளும், ஊழியர்களும் இந்த பொருளாதார ஆசீர்வாதத்தை விசுவாசிக்கிறார்கள் (2 கொரி.8:9). அதைப் பெறுவதற்காக விசுவாசக் கிரியைகளை செயல்படுத்தாமல் போகிறார்கள். அதனாலே அவர்கள் இன்று வரை தரித்திரத்திலும், கடன் பிரச்னையிலும் பொருளாதாரக் குறைவிலும் இருக்கிறார்கள். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உன் விசுவாசத்தில், தேவனுக்குரியதை - கோயில் பணத்தை - வஞ்சிக்காதே (ரோ.2:22); ஆசீர்வாதத்தைப் பெறாமல் சாபத்தை குவித்துக் கொள்ளாதே!

அந்தப்படியே, விருத்தசேதனம் என்பது நியாயப்பிரமாணச் சட்டம் தான். அதுவும் ஆபிரகாமுக்கு நியாயப்பிரமாணத்திற்கு முன்பே கொடுக்கப்பட்டது. ஆபிரகாம், தேவ சித்தமான விருத்தசேதனத்தைகைக் கொண்டபடி, அவனின் விசுவாச சந்ததியான நாம் அதை ஏன் கைக்கொளள்வில்லை? விருத்தசேதனம் என்பது ஒரு பெரிய சர்ச்சைக்குரியதாய் ஆதி அப்போஸ்தல சபையில் மாறி, ஜாதி - இன- வம்சப் பேதங்கள் உருவானதால், "விருத்தசேதனம் ஒன்றுமில்லை விருத்தசேதமில்லாமையும் ஒன்றுமில்லை தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளுகிறதே காரியம்" என்று (கலா.6:15; 1 கொரி.7:19) தேவன் நமக்கு வெளிப்படுத்தினார். எனவே இந்தக் கிரியையினாலே எந்த ஆசீர்வாதமும் வரப் போவதில்லை; சுகாதாரத்திற்கு அடுத்ததாய் வேண்டுமானால் இதை வைத்துக் கொள்ளலாம். ஆனால் தசம பாகம் பற்றி அன்றைக்கு சர்ச்சையே இல்லை, "தசப பாகம் கொடுத்தாலும் கொடுக்கலாம்; கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை" என்று தேவன் நமக்கு வெளிப்படுத்தவே இல்லை. எனவே தேவன் தசமபாகம் கொடுத்து - விசுவாசக் கிரியையினாலே - ஆபிரகாம் போல் ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்று விரும்பியதை நாம் செயல்படுத்துவோம். என்னை சோதித்துப்பார் என்று தேவன் சொன்னதை தியானிப்போம்.

புதிய ஏற்பாட்டில் தசமபாகம் கொடுப்பது பற்றி போடப்பட்டுள்ளதா? இது கேள்வி. எபி.7:4-8ஐ வாசித்தால், "இங்கே, மரிக்கிற மனுஷர்கள் தசமபாகம் வாங்குகிறார்கள" என்று பவுல் திட்டமும் தெளிவுமாய் எழுதியிருக்கிறான். ஆதி

அப்போஸ்தல சபையில் தசமபாகம் கொடுக்கும் முறை வழக்கத்திலிருந்த தென்றால். இன்றைக்கு ஏன் மாற்றம்? தேவசித்தம் மாறுமா? மட்டுமல்ல... லேவியின் வம்சமே ஆசாரிய வம்சம் அன்று. இன்றோ கிறிஸ்தவர்கள் எல்லாருமே ராஜரீக ஆசாரியக் கூட்டம் (1 பேது.2:9) ஆமென். அப்படியானால் அன்றைக்கு ஆபிரகாமின் அரையில் இருந்த லேவியன் தசமபாகம் கொடுக்கும் போது, இன்றைக்கு ஆசாரியர்களாக்கப்பட்ட விசுவாசக் கிறிஸ்தவ கூட்டம் தசமபாகம் கொடுத்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடாதா? நமக்கு வரும் ஆசீர்வாதங்களைத் தடை செய்யும் பக்க வழியாய் சபைக்குள் வந்த பிசாசுக் கூட்டங்கள் ஓடியே போகட்டும் இயேசுவின் நாமத்தினாலே! ஆமென். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று மத்.23:23ல் சொல்லிப் போனதை மறந்து போனீர்களா?

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மல் 3:10ன் படி இடங்கொள்ளாமற் போகுமட்டும் பொருளாதார ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள, விசுவாசத்தோடு கிரியையிலே காட்டு; ஆபிரகாமைப் போல செல்வச் சீமானாய் வாழு! இயேசுவுக்குச் சாட்சியாயிரு! ராஜாவீட்டுப் பிள்ளை நீ! அல்லேலூயா!

❖ ❖ ❖

## லூசியர் நரகத்தில் தள்ளப்பட்டாயிற்றா?

சாத்தான் நரகத்தில் இருக்கிறானென்றும், மரித்த பாவிகள் நரகத்தில் கதறித் தவிக்கிறார்கள் என்றும், போட்டோக்கள், திரைப்படங்கள் மூலமாய் கிறிஸ்தவ வட்டாரம் விளம்பரப்படுத்துவதைப் பார்த்திருக்கிறோம். பிளசிங் டிவி ஆலன் பால், ஜாய்ஸ் மேயர் போன்றோர் நரகத்தைப் போய் பார்த்து அங்கே பிசாசுகளும், பாவிகளும் அலறுவதை கேட்டு விட்டு வந்ததாகவும் பிரசங்கம் பண்ணுகிறார்கள், எழுதுகிறார்கள். நரகத்தையோ பாதாளத்தையோ நம்பாத 7ம் நாள் சபையிலுள்ள பலர், சாத்தானை தேவன் பாதாளத்தில் தள்ளிவிட்டார் என்றும் நம்புகின்றனர், போதிக்கின்றனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில், "சாத்தான் எங்கே இருக்கிறான்? அவன் நரகத்திற்குப் போய் விட்டுப் போய் விட்டு பூமிக்கு வருகிறானா? நரகம் அவன் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறதா அல்லது தேவன்தான் அவனை இப்படி அலைக்கழிக்கிறாரா? நரகத்திலே அவன் துன்பப்படுகின்றானா?" போன்ற பல கருகலான சத்திய விளக்கங்களை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

ஏசா.14:4-23ல் பாபிலோன் ராஜா பற்றியும், எசே.28:12-19ல் தீருராஜா பற்றியும் தேவன் சொல்லிய தீர்க்கதரிசனங்களிலே, பிசாசைப் பற்றி - லூசிபரைப் பற்றி - சொல்லப்பட்ட ஒரு சில தீர்க்கதரிசன வசனங்களை நாம் எடுத்துக் கொள்கிறோம். அதை வைத்துக் கொண்டு, அவன் பரலோகிலே ஆராதனை மண்டபத்திலே இசை ராஜவாய் இருந்து தேவனைத் துதித்தான் என்றும், ஏதேனைத் தலைநகராய்க் கொண்டு ஆண்ட ஒரு ராஜா என்றும், கொலோ. 1:16ன் படி இவனைப் போன்ற ராஜாக்களுக்கு வார்த்தையாகிய தேவன் தலைவராய் இருந்தாரென்றும், இவர் மேல் பொறாமையினால், மேட்டிமை கொண்டு, இவருக்கும் மேலே போய் சக்கரத்தியாவேனென்று எண்ணினானென்றும், அதனாலேயே அவன், தன்னைப் போன்ற தூதர்களோடு கீழே தள்ளப்பட்டானென்றும் நிதானிக்கிறோம். அப்படி ஏதேன் பூமியில் விழுந்தவன்தான் உக்கிரம் கொண்டு, கலவரம் பண்ணி பூமியை ஒழுங்கின்மையாக்கினானென்றும், தேவன் ஜலப்பிரளயத்தில் கோபாக்கினையை வெளிப்படுத்தி, பூமியை வெறுமையாக்கி அழித்தாரென்றும் ஆதி.1:1,2; 2 பேது.3:5,6 போன்ற வசனங்களில் அறிகிறோம். அதன் பின் தேவன் பூமியையும், வானத்தையும் சரி செய்து, 7 நாட்களுக்குள் மிருகங்கள், மனிதர்கள் எல்லாம் படைத்தார் என்றும் அறிகின்றோம். அப்போது ஒவ்வொரு நாளும், தான் உண்டாக்கிய அல்லது படைத்த காரியங்களை கண்டு "நல்லது" என்றார். ஆனால் ஆகாய விரிவை உண்டாக்கிய 2ம் நாளிலே அது நல்லது என்று அவர் சொல்லவில்லை. ஏன்? எபே.6:12ஐ வாசித்தால், அந்த வான மண்டலத்தில் தான் பிசாசும் அவனது தூதர்களும், தலைமையகமாக கொண்டு, இந்த பூமியை திருடி, கொன்று அழித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அறிவோம். எனவே தான் அவன் தாபரிக்கும் இடம் உருவான அன்றைக்கு தேவன் "நல்லது" என்று சொல்லவில்லை என்று நான் விசுவாசிக்கிறேன். அல்லேலூயா!

தானியேல், தான் கண்ட தரிசனத்திற்கு பதிலை 21 நாள் கழித்து தேவ தூதன் மூலமாய் பெற்றான். ஏன் என்றால், "அந்த 21 நாள் வரை வானத்திலிருந்து பதிலோடு வந்த தேவதூதனை பிசாசானவன் எதிர்த்திருக்கிறான்; மிகாவேல் தூதன் உதவி செய்து அழைத்து வந்திருக்கிறான்" என்று தானி.10:13ன் மூலம் அறிகிறோம் (பெர்சியா ராஜாவை பிசாசுக்கு உவமானமாய் சொல்லப் பட்டுள்ளது) ஆக பரலோகிலிருந்து வரும் வழியில் பிசாசின் கூட்டங்கள் - தலைமையகம் - இருக்கின்றது என அறிகிறோம். வேதத்திலே 3வானங்கள் இருப்பதாய் 2 கொரி.12:2ன் மூலம் அறிகிறோம். முதல் வானம், நாம் காண்கிற சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இருக்கும் வானம். 3ம் வானம் பவுல் அப்போஸ

தலன் கண்ட பரதீசு மற்றும் அதைச் சார்ந்த பரலோகம் (எபி.12:22-24) ஆக 2ம் வானத்தில் தான் பிசாசுவாசம் பண்ண வேண்டும் என்று அறிகிறோம். அங்கிருந்து தான் இப்பிரபஞ்சத்தின் அதிபதியான - தேவனான அவன் ஆளுகிறான் என உணர்கிறோம். மேலும், வெளி.12:7-13ஐ வாசித்தால், இயேசு கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்கு முன்னர், மகா உபத்திரவ காலத்தின் போது - அதாவது யாக்கோபின் இக்கட்டு காலத்தின் போது (எரே.30:7) - இந்த 2ம் வானத்திலே தேவ தூதர்களுக்கும் பிசாசின் கூட்டத்தாருக்கும் யுத்தம். ராஜாதி ராஜாவுக்கு, கர்த்தாதி கர்த்தாவுக்கு, தேவாதி தேவனுக்கு, நியாயாதிபதிக்கு வழியை ஆயத்தம் பண்ணும் காரியம் இது. பிசாசின் கூட்டம் 2ம் வானத்திலிருந்து பூமிக்கே தள்ளப்படும். வானத்திலிருந்து கொண்டே பூமியில் இவ்வளவு காரியங்கள் செய்யும் சாத்தான். பூமிக்கே வந்தால் "ஐயோ" அல்லவா! ஆக, மேற் சொன்ன காரியங்களிலிருந்து நாமறிவது என்ன வென்றால் சாத்தான் 2ம் வானில் இருந்து கொண்டு தன் ஆட்சியை நடத்துகிறான் என அறிகிறோம்.

அவன் நரகத்திலோ, பாதாளத்திலோ தேவனால் தள்ளப்பட்டிருந்தால் அங்கிருந்து வெளியே வந்து, ஆதாம் - ஏவாளை எப்படி கெடுக்கமுடியும்? 40நாள் உபவாசத்திற்குப் பின் இயேசுவை எப்படி கெடுக்க வந்திருக்க முடியும்? சிந்தியுங்கள். இயேசு கிறிஸ்து பூமியிலே ஊழியம் செய்த போது, "இயேசுவே, தேவனுடைய குமாரனே எங்களுக்கும் உமக்கும் என்ன? காலம் வரும் முன்னே எங்களை வேதனைப்படுத்த இங்கே வந்தீரோ?" (மத்.8:29 மாற்.5:7 லூக்.8:28) என்று பிசாசு கேட்டது. லூக். 8:13ஐ வாசித்தால், "தங்களைப் பாதாளத்திலே போகக் கட்டளையிடாதபடிக்கு அவைகள் அவரை வேண்டிக் கொண்டன" என அறிகிறோம். தேவனும் அவைகளை நரகத்தில் தள்ளவில்லை. ஆக, பிசாசுக்கு தெரிகிறது, "ஒரு நாள் வரும் அப்போது தேவன் பிசாசுகளை நரகத்தில் தள்ளுவார்" என்று, ஆனால் ஊழியம் செய்கிறேன் என்று சொல்லும் வேத விற்பன்னர்களுக்கோ இந்த சத்தியம் புரியவில்லை. இப்பொழுதே பிசாசுகள் நரகத்தில் உள்ளன என்றும், தாங்கள் பார்த்தாகவும் பிரஸ்தாபப்படுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்களின் மனக்கண்கள் திறக்கப்படட்டும் (1 கொரி.4:4) அல்லது பிரகாசம் அடையட்டும் (எபே.1:19)

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இப்படியாய் வேதத்திற்குப் புறம்பாய் பேசுகிறவர்கள், பாதாளம் வேறு, நரகம் வேறு என்று அறிவார்களா? எபிரேயு பாஷையில் Sheol, Sahenna மற்றும் கிரேக்க பாஷையில் Hades, Geenna போன்றவை பாதாளம், நரகம் என்ற வார்த்தைகளுக்கு ஏற்றவையாய் உள்ளன. பல மொழி பெயர்ப்புகளில் சில இடங்களில் பாதாளம்

என்பதை நரகம் என்றும், நரகம் என்பதை பாதாளம் என்றும் தவறாய் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. பாதாளம் என்பது இரட்சிக்கப்படாத - பாவிகளின் ஆவியும், ஆத்மாவும் இருக்குமிடம். ஐஸ்வரியவான், இயேசு போன்றோர் சென்ற இடம். இது பூமியின் தாழ்விடங்களில் இருக்கிறது (அப்.2:31; எபே.4:9) இதை சோவியத் விஞ்ஞானிகள் பூமியைத் தோண்டும் போது 9 மைல் ஆழத்தில் 2000° F வெப்பத்தில் கண்டதாக Weeklyworld news April / 1990ல் வெளி வந்திருக்கிறது. இதில் உள்ளவர்களுக்கு 2ம் உயிர்த்தெழுதல் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பின் போது உண்டு. மத்.25:41 வெளி.20:10, 14,15 போன்ற வசனங்களின் படி நரகம் என்பது பிசாசுக்காவும், அவன் தூதர்களுக்காவும் ஆயத்தம் பண்ணப்பட்டு கொண்டிருக்கிறது என்றும், இதுவரை ஒருவரும் அங்கே போகவில்லை என்றும், இயேசுவின் பகிரங்க வருகையில் முதன் முதலாக, அர்மெகதோன் பள்ளத்தாக்கிலிருந்து அந்திக் கிறிஸ்துவும் கள்ளத்தீர்க்கத் தரிசியும், வெள்ளாடுகளைப் போன்ற பாவிகளும், உயிரோடே தள்ளப்படுவார்கள் (வெளி. 20:10) இறுதியில் பாதாளத்திலுள்ளோர், வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பில் 2ம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரியும் நரகத்தில் உயிர்த்தெழுந்த சரீரத்தோடு தள்ளப்படுவர். சொர்க்கத்திற்கு எப்படி இயேசுவைத் தவிர யாரும் இதுவரை போகவில்லையோ அப்படியே நரகத்திற்கும் ஒருவரும் போகவில்லை. ஆமென்.(யோ.3:13)

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நரகத்தைக் கண்டேனென்றும், அங்கே பிசாசுகளும் மனிதர்களும் அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருக்கிறார்களென்றும் யாராவது சொன்னால் நம்பாதேயுங்கள் "மத்.18:18ன் படி பிசாசே உன்னைக் கட்டி நரகத்திலே தள்ளுகிறேன். You satan go to hell" என்று யாராவது சொன்னால் நம்பாதேயுங்கள். சாத்தானைக் கட்டவோ, நரகத்திலே தள்ளவோ நமக்கு அதிகாரமில்லை இந்த பூமியில். இயேசு ஒருவர் மாத்திரமே கட்டமுடியும் (வெளி.20:1,2). நமக்கோ பிசாசை விரட்ட மட்டுமே அதிகாரமுண்டு இயேசுவின் நாமத்தினால் (மாற்.16:17) கொடுத்த அதிகாரத்தை விட்டு விட்டு கொடுக்காத அதிகாரத்தை அதிகப்பிரசங்கியாய் செய்பவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடையாதபடி அவர்களுக்கு ஜெபியுங்கள். சாத்தானைப் பற்றிய வேத வார்த்தையை அறிந்து உணராமல் யார் யாரோ சொல்வதை நம்பி ஏமாந்து போகாதீர்! சாத்தான் சிரிக்கிறான்! சர்வ வல்லவருக்கு சந்தோசம் உண்டாக்க மாட்டாயா? இது கடைசி காலம்!

❖ ❖ ❖

# பெரிய ஓய்வு நாள் எது?

தேவன் தம்முடைய படைப்பின் கிரியைகளை எல்லாம் முடித்தபின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். (ஆதி.2:2). நாட்களின் கணக்குப்படி ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் முதல் நாள் என்றால், 7ம் நாள் சனிக்கிழமை தான். மாதக்காலண்டர்களிலும், உலக கணிப்புகளிலும் சனிக்கிழமை தான் 7ம் நாள். நமது கிறிஸ்தவ சமுதாயம் கூட ஞாயிற்றுக்கிழமையாகிய வாரத்தின் முதல் நாளைத்தானே உயிர்த்தெழுந்த நாள் என்று கூறுகின்றது. இந்த சனிக்கிழமை 7ம் நாளை தேவன் ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார் என்பதால் (ஆதி.2:3) தேவன் உண்டாக்கிய மற்ற 6 நாட்களும் பரிசுத்தமில்லாத, அசுத்தமான, கெட்ட நாட்களா? புறஜாதியார் சொல்கின்றபடி அவைகள் நல்ல நாட்கள் இல்லையா? ஆதி 1:31ன் படி தேவன் உண்டாக்கிய எல்லாமே மிகவும் நன்றாயிருக்கிறதென்றால் இந்த 6 நாட்களும் நல்ல நாட்கள் தானே! அப்படியானால் 7ம் நாளை பரிசுத்தமாக்கினார்என்பதன் அர்த்தமென்ன? மூல பாஷையில் பரிசுத்தம் என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. (1) **Setapart** - தனிமைப்படுத்தப்படல்; பிரித்தெடுக்கப்படல்; பிரத்தியேகம் பண்ணப்படல். (2) **Holiness** தூய்மை. இங்கே ஆதி. 2:3ல் Setapart என்ற அர்த்தத்திலே வந்துள்ளது. ஆக தேவன் 7ம் நாளை பிரத்தியேகப்படுத்தி வைத்தார். தான் படைப்பிலிருந்து ஓய்ந்திருந்து பிரத்தியேகம் பண்ணப்பட்ட இந்த 7ம் நாளை இஸ்ரேல் மக்களுக்கு வனாந்திரத்திலே ஓய்வு நாளாய்க் கட்டளையிட்டார் (யாத்.16:23). அதை ஓய்வு நாள் கற்பனையாய் சீனாய் மலையில் கொடுத்தார் (யாத்.20:8; நெகே.9:13, 14). இந்த ஓய்வுநாள் ஆசரிப்புதான் இஸ்ரேலருக்கும் தேவனுக்கும் அடையாளமாயிருந்தது. இந்த ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவில்லை என்று தான் வேதத்திலே தேவன் இஸ்ரேலரைக் கடிந்து கொண்டார். அவர்களுக்கு சாபங்கள் வந்தன. எருசலேம் நகரமும் அழிந்தது. (See நெகே.13:17,18). இஸ்ரேலர் இந்த 7ம் நாள் ஓய்வு நாள் ஆசரிப்புக்குத் தான் அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். இயேசுவைக் கூட இதை வைத்துத் தான் குற்றப்படுத்தினர் (மத்.12; யோ.5:18).

இந்த 7ம் நாளாகிய ஓய்வு நாள் அல்லாமல், வேதத்திலே லேவி 23ல் சொல்லப்பட்ட பண்டிகைகளுக்கடுத்த ஓய்வு நாட்களும் இருந்தன. இந்த பண்டிகைக்கடுத்த ஓய்வு நாட்கள், வாரத்தில் எந்த நாளும் வரலாம். வேதத்திலே எங்கேயும் பெரிய ஓய்வு நாள் என்றோ, பெரிய ஓய்வுநாள் ஆசரிப்பு என்றோ தேவன் கொடுத்தாக இல்லை. ஆனால் யோ.19:31ல் மட்டுமே இயேசு மரித்த அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்த

நாளாயிருக்கிறது என்று எழுதப்பட்டுள்ளது. இந்தப் பெரிய ஓய்வு நாள் தான், பஸ்காப் பண்டிகைக்கு அடுத்தபடியாய் வரும்புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் முதல் நாளான ஓய்வு நாள் என்று DAKES பைபிளிலும் விளக்கப்பட்டுள்ளது; ஒரு சில ஊழியர்களும் நம்புகின்றனர் (லேவி.23:6,7; யாத்.12:16). இந்த புளிப்பல்லா அப்பப் பண்டிகையின் முதல்நாள் தான் பெரிய ஓய்வு நாளா? இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

யோ.19:31ல் பெரிய ஓய்வு நாள் என்று நேரிடையாக போடாமல், அந்த ஓய்வு நாள் ஒரு பெரியநாள் - for that sabbath day was an high day என்று போடப்பட்டுள்ளது. அதுவும், அடைப்புக்குறிக்குள் போடப்பட்டுள்ளது. அதுவும், அடைப்புக்குறிக்குள் போடபப்ட்டவைகள் எல்லாமே மூல பாஷையில் இருக்கிறதா இல்லையா என்று ஆராய்ச்சிக்குரிய விஷயமாயிருக்கிறது என்று நாமறிவோம்! ஆனாலும் அந்த அடைப்புக்குள்ளிருப்பதையும் எடுத்துக் கொண்டு, வேத வாக்கியங்களை ஆராய்வோம்.

Dakes பைபிள் போன்ற மற்றவர்களின் கருத்துப்படி, இயேசு புதன் மாலை மரித்தார் என்றும் அதுதான் Good Wednesday என்றும், வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் பெரிய ஓய்வு நாள் என்றும், சனிக்கிழமை வாரத்தின் ஓய்வு நாள் என்றும் அந்தநாள் முடிந்து இயேசு 4ம் நாள் உயிர்த்தார் என்றும் வாதிடுகின்றனர். இவர்கள் வாதப்படி பார்த்தாலும் "பஸ்காவுக்கு அடுத்த ஒருநாள் தான் ஓய்வு நாள்; இரண்டு நாள் ஓய்வு நாளில்லை" என்பதால் (லேவி.23:7) அவர்கள் வாதம் தவறாகிறது. மேலும் லூக்.9:22; 18:33; 24:7; 46 மத்.16:21; 21; 17:23;20:19; மாற்.9:31; 10:34 போன்ற வசனங்களின்படி அவர் 3ம் நாள் தான் உயிர்த்தார்; 4ம் நாளில் அல்ல என்று அறிகிறோம். மேலும் 1 கொரி.15:4ல் பவுலும், அப்.10:4ல் பேதுருவும் 3ம் நாளில் உயிர்த்தார் என்று தான் கூறுகின்றனர். 4ம் நாளில் உயிர்த்ததாக வசனமே இல்லை. அவர்கள் சொல்லும் வசனங்கள் மத்.12:40; மாற்.8:31. இவைகள் யோனாவையும், இயேசுவையும் இணைத்து உவமானமாய் சொல்லப்பட்டவைகளே ஒழிய நேரிடையான சாட்சி வார்த்தைகள் அல்ல.

இது குறித்து இந்த நூலில் உள்ள "மூன்று நாள் இயேசு கல்லறையில் இருந்தாரா?" என்ற செய்தியை வாசியுங்கள். இந்த வசனங்களில் சொல்லப்பட்ட இராப்பகல் 3 நாள் (யோனா 1:17) என்ற மூலபாஷையின் வார்த்தை ஒரு மரபு வாக்கியமாகும். பேச்சு வாக்கியமாகும். அதாவது Idiomatic - expression. சரியாய் 3 நாள் X 24 மணி = 72 மணி நேரம் என்று

அல்ல. "இரவும் பகலும்" என்ற வார்த்தை சரியான 24 மணி நேரக்கணக்கில் வராது என்று 1 தெச.2:9; 2 தெச.3:8; 1 தீமோ 5:3 போன்ற வசனங்களை தியானித்தால் புரியும். "Day Duty பார்த்தேன்" என்று சொன்னால் 12 மணி நேரம் Duty என்று அல்ல என்றும், ஒதுக்கப்பட்ட 8 மணி நேரப்பணி தான் அது என்றும் விளங்குகிறதல்லவா! அப்படிப் பார்த்தால் வெள்ளி மாலை 3 மணிக்கு மரித்தார். அது முதல் நாள், சனி 2வது நாள், ஞாயிறு 3ம் நாள். அந்த 3ம் நாள் உயிர்த்தார் என்று பொருள். உவமானங்களை அப்படியே எடுத்துக் கொண்டால், யோனா மீனுக்குள் உயிரோடே போனபடியே இயேசுவும் பூமிக்குள் உயிரோடே போனாரென்று சொல்லலாமா? சிந்தியுங்கள்.

மேலும், தேவனின் பார்வையில் படைப்பை வெளிப்படுத்தும் 7ம் நாளாகிய ஓய்வு நாள் தான் பெரிதே ஒழிய - அதை அனுசரித்துத்தான் அவரைப் படைத்தவர் என்று காட்ட வேண்டுமே ஒழிய - பண்டிகைகளில் வரும் ஓய்வு நாட்கள் பண்டிகைகளுக்குடுத்ததே அன்றி, படைப்புக்கடுத்தவை அல்ல. எனவே அந்த ஓய்வு நாட்கள் பெரிய ஓய்வு நாட்கள் அல்ல. யோ.19:31ஐ மறுபடியும் வாசியுங்கள். "அந்த நாள் பெரிய ஓய்வு நாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வு நாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு....." இந்த பெரிய ஓய்வுநாள் புளிப்பில்லா அப்பப் பண்டிகையான முதலாம் நாள் ஓய்வு நாளாயிருந்தால், இந்த ஓய்வு நாள் ஆசரிப்புக்கு, ஆயத்தநாள் (Preparation Day) பஸ்கா பண்டிகை அல்லவே! அந்த பஸ்கா பண்டிகையான ஆபிப் மாதம் 14ம் தேதி மாலை 3மணிக்கு பஸ்கா பலி செலுத்தும் வேளையில் தானே இயேசு சிலுவையில் மரித்தார். வேதத்தை நன்கு வாசித்தால், ஆயத்தம் பண்ணும்நாள். 7ம் நாள் ஓய்வு நாளுக்கு முதல் நாளாகிய வெள்ளிக் கிழமை என்று நாம் அறிவோம்! (See நெகே 13:19-22). இவர்கள் கருத்துப்படி "புளிப்பில்லா அப்பப்பண்டிகை ஓய்வு நாள் மற்றும் 7ம் நாள் ஓய்வு நாள்" என்று இந்த இரண்டு ஓய்வு நாட்களிலும் சிலுவைகளில் யாரும் தொங்கக் கூடாது என்றால், "உடல்கள் அந்த ஓய்வு நாளிலே" என்று ஒருமையிலே போட்டிருப்பதால், ஒரே ஒரு ஓய்வு நாள் தான் என்று நாமறியலாம். மேலும், லூக்.23:56ல் "ஓய்வு நாள்" என்று ஒருமையில் உள்ளதால், கலிலேயா ஸ்திரிகள் ஒரு நாள் தான் - அதுவும் 4ம் கற்பனைப்படி தான் ஓய்ந்திருந்தார்கள் என அறிகிறோம். அன்றியும் "ஓய்வு நாட்கள் முடிந்து" என்று பன்மையில் போடாமல், "ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதல்நாள் விடிந்து வருகையில்" என்று மத்.28:1ல் போட்டிருப்பதால் ஒரு ஓய்வு நாள் ஆசரிப்பு தான் நடந்திருக்கிறது என்று தீர்க்கமாய் சொல்லலாம். மேலும் ஓய்வு நாள் முடிந்து வாரத்தின் முதல் நாள்

என்று உள்ளதால், இது 7ம் நாளாகிய சனிக்கிழமை ஓய்வுநாள் என்றும் அதற்கு முந்தின நாளான வெள்ளிக்கிழமை தான் பஸ்காவாக இயேசு மரித்தார் என்றும் அறிகிறோம்.

அப்படியானால், "பெரிய ஓய்வு நாள்" என்ற வார்த்தை எப்படி வந்தது? இது சரியான கேள்வி. லேவி.23:6,7ன் படி பஸ்காவுக்கு மறுநாள் ஆரம்பமாகும் புளிப்பில்லாத அப்பப் பண்டிகையின் முதல்நாள் பண்டிகை ஓய்வு நாளாகும். இந்த ஓய்வு நாள் இயேசு மரித்த நாளுக்கு மறுநாளில் வருகிறது. அந்த மறுநாள் என்பது, வாரத்தின் முதல் நாளுக்கு முந்தின நாளான சனிக்கிழமையாகிய 7ம் நாள் ஓய்வு நாளாய் அந்த ஆண்டில் இருந்திருக்கிறது. ஆக, அந்த நாள், பண்டிகை ஓய்வு நாளாகவும், 10 கற்பனையின்படியான 7ம் நாள் ஓய்வு நாளாகவும் இயேசு மரித்த அந்த வருஷத்தில் ஆகிவிட்ட படியால், இரண்டு ஓய்வுநாட்களை கைக்கொள்ள வேண்டிய அந்த நாள் "பெரிய ஓய்வு நாள்" என்று அழைக்க வேண்டியதாயிற்று. அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆபிப்மாதம் 14ம் தேதி வெள்ளி மாலை 3 மணிக்கு மரித்தாரென்றும் வாரத்தின் முதலாம் நாள் (மூன்றாம்நாள்) உயிர்த்தாரென்றும், இடையிலே பண்டிகை ஓய்வு நாளும் 4ம் கற்பனை ஓய்வுநாளும் பெரிய ஓய்வுநாளென்று அழைக்கப்படலாயிற்று என்றும் அறியுங்கள்! இந்த இரண்டு ஓய்வு நாட்களுமே "வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றியது" என்று பவுல் விளக்குவதால் (கொலோ.2:16, 17) நிஜமாகிய இயேசு வந்தபின்னே, நிழலாகிய இந்த ஓய்வு நாட்கள் ஆசரிப்பு, புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நமக்குத் தேவையில்லை என்றும் அறியுங்கள். ஆமென்! அல்லேலூயா! இயேசு சீக்கிரம் வருகிறார்! அயத்தமாவோம் ஆயத்தமாக்குவோம்!!

❖ ❖ ❖

## உயிர்த்தெழுதலும் மறுரூபமாகுதலும் பாவிகளுக்கு உண்டா?

மரணம் என்ற ஒன்று இருந்தால்தான் உயிர்த்தெழுதல் என்ற ஒன்று இருக்கும். **மரணத்திலே மூன்று வகை உண்டு.** (1) ஆவிக்குரிய மரணம். (2) சரீர மரணம். (3) நித்திய மரணம். மரணம் என்றாலே "cessation of communication" தொடர்பு அறுபட்டுப் போதல் என்று பொருள். ஆவிக்குரிய

மரணம் என்றால் ஆவியாயிருக்கிற தேவனோடு தொடர்பு, நம் ஆவியிலே துண்டிக்கப்படுவதாகும். இந்த நிலை தான் ஆதாம் பாவம் செய்த போது மரித்துப் போனான் - கர்த்தரின் சந்நிதிக்கு விலகி ஒளித்துக் கொண்டான் - தேவ தொடர்பு அற்றுப் போனான் என அறிகிறோம். (ஆதி.2:17; 3:8) இந்த நிலையில்தான் நீங்களும் நானும் இரட்சிக்கப்படாததற்கு முன்பு இருந்தோம் (எபே.2:1) ஆவிக்குரிய மரணமடைந்த மக்களை உயிர்ப்பிக்கவே - மறுபடியும் பிறப்பிக்கவே இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டது. அதனாலே நீயும் நானும் உயிரடைந்திருக்கிறோம் - மறுபடியும் பிறந்திருக்கிறோம் (எபே.2:5; யோ.3:3,5; 1 பேது.1:23; யாக்.1:18). இந்த உயிர்த்தெழுதல் விசுவாசிக்கிற எல்லோருக்கும் உண்டு.

சரீர மரணம் என்பது ஆதாம் - ஏவாள் செய்த பாவத்தினாலே மனுக்குலத்திற்கு தேவன் கொடுத்த தண்டனை (ஆதி.3:19). சரீரத்திற்கு ஒரே தரம் தான் மரணம் உண்டு. இது பாவிகளுக்கும் உண்டு; பரிசுத்தவான் களுக்கும் உண்டு; பாவமறியா பச்சிளம் குழந்தைகளுக்கும் உண்டு. ஒரே தரம் மரிக்கிற எல்லா சரீரத்திற்கும் நியாயத்தீர்ப்பு என்ற ஒன்று இருப்பதால் (எபி.9:27) நிச்சயம் எல்லோருக்கும் உயிர்த்தெழுதல் உண்டு. இதில் நல்லவன், கெட்டவன் என்ற பாகுபாடே இல்லை. 1 கொரி. 15ஐ முழுமையாய் வாசித்தோ மானால் "இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தது நிச்சயம் என்று விசுவாசிக்கிற போது, எல்லாருக்கும் அப்படியே உயிர்த்தெழுதல் உண்டு" என்று பவுல் விளக்குவதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த சரீர உயிர்த்தெழுதலில் முதலாம் உயிர்த்தெழுதல் என்று ஒன்று எழுதப்பட்டுள்ளதால் (வெளி.20:5,6) இஃதல்லாத 2ம் உயிர்த்தெழுதலும் நிச்சயம் இருக்க வேண்டும் அல்லவா! முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும், பரிசுத்தவானுமாயிருக்கிறானாம். இவன்தான், கிறிஸ்து வோடுகூட 1000 வருடம் அரசாளுவானாம். யார் இவர்கள்? தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாய் ஆக்கப்பட்டவர்கள் (வெளி.5:10; 3:21; 1 பேது.2:9) இவர்கள் தான் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள். இவர்கள் தான் மறுபடியும்பிறந்த - இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்கள் தான் இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்டவர்களும் (1 தெச.4:16-18; 1 கொரி. 15:51-54) அந்தி கிறிஸ்துவின் ஆட்சியில் இரத்தசாட்சியாய் மரித்தவர்களும் (வெளி.20:4) ஆவார்கள். இவர்களுக்கு இனி மரணமில்லையாம் (1 கொரி.15:55) அப்படியானால் இவர்களின் உயிர்த்தெழுந்த சரீரம் பழையபடி மண்ணாகவே இருக்கக் கூடாதல்லவா! அவர்கள் தேவனுடைய வாசஸ்தலத்துக்குப் போக வேண்டுமென்பதால், மாம்சமும் இரத்தமுமாய்

அந்த சரீரம் இருக்காதல்லவா! (1 கொரி.15:50) ஆம்! அந்த சரீரம் மறுரூபமாக்கப்பட்டு அழியாமை தரிக்கப்பட்டு - மகிமையின் மேனியாக்கப்படும். அல்லேலூயா! இயேசு கிறிஸ்துவோடு ஒன்றித்து வாழ்ந்த யோவானுக்கே. இந்த மேனி எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. தேவன் இருக்கிற வண்ணமாகவே அது இருக்கும் என்று யோவான் எழுதுகிறான். (1 யோ. 3:2). ஆக, முதலாம் உயிர்த்தெழுதலுக்கு உட்பட்ட நம்மைப் போன்றவர்களுக்கு மறுரூபம் உண்டு என திட்டமாய் அறிகிறோம்.

முதலாம் உயிர்த்தெழுதலுக்கு உட்படாதவர்கள் பாவிகள் - இரட்சிக்கப்படாதவர்கள் - பிதாவின் சித்தப்படி செய்யாத அக்கிரம செய்கைக்காரர்கள் (Lawlessness). இப்படிப்பட்ட நிலையில் மரித்தவர்களுக்கும் உயிர்த்தெழுதல்உண்டு என்று ஏற்கனவே பார்த்தோம். இவர்கள் - பாவிகள் - உயிர்த்தெழுவது எப்போது? இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் முறை பூமிக்கு வரும் வருகை முடிந்து, 1000 வருட அரசாட்சிக்குப் பின்வரும் வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பின்போது இது நடக்கும் (வெளி.20:11). எந்த மனித சரீரத்தில் மரித்தார்களோ அதே மனித சரீரத்தில் உயிர்த் தெழுவார்கள். ஆனால், பரிசுத்தவான்கள் போல மறுரூபமாக்கப்படப் போவதில்லை. ஏன் தெரியுமா? மனிதனுக்கு ஆவி, ஆத்மா, சரீரம் என்று மூன்று உண்டு. அவனவனுடைய கிரியைகளின் படியே நியாயத்தீர்ப்பு உண்டு என்பதால் (வெளி.22:12; 2 கொரி.5:10) சரீர மரணமடைந்த பாவிகளின் ஆவியும் ஆத்மாவும் மரித்த உடனே பாதாளம் போய் வேதனைப் படுகின்றது. சரீரம் உயிர்த்த பிறகு, ஆவியும் ஆத்மாவும் இணைந்து மண்ணான மனுஷனாய் பழையபடி மாறுகிறது. தேவனுடைய பிள்ளைகளின் முதலாம் உயிர்த் தெழுதலில் மண்ணான சரீரத்திற்கு பலனாக மறுரூபமாக்கப்பட்டு, பரலோகம் கொண்டு செல்லப்படுவது போல (யோ.14:14) பாவிகளின் உயிர்த் தெழுந்த மண்ணான சரீரமும், அக்கினியும் கந்தகமும் எரியும் கடலாகிய நரகத்திற்கு தள்ளப்படும். இது இரண்டாம் மரணம் என்று வெளி.22:14 கூறுகிறது. முதலாம் மரணம் - ஆவிக்குரிய மரணம் - தேவனோடு தொடர்பு அற்றுப் போவது என்று பார்த்தோம். அப்படியே இந்த இரண்டாம் மரணமும், தேவனோடு தொடர்பு அற்றுப் போகிற நிலையில்தான். முதலாம் மரணம் இரட்சிக்கப்படும்வரை தொடரும். இரண்டாம் மரணமோ நித்தியம் நித்தியமாய் தொடரும். மறுரூபமாகி பரலோகம் போகும் பரிசுத்தவான்களுக்கு நித்திய ஜீவன் இருப்பது போல, மறுரூபமாகாமல், மண்ணான மேனியோட நரகம் தள்ளப்படும் இவர்களுக்கு நித்திய ஆக்கினை உண்டு (மத்.25:46). எனவே தான் இதை நித்திய மரணம் என்று சொல்கின்றோம்.

இந்த மண்ணான மேனியோடு நரகத்திற்குள் போனால் ஒரு நொடிப் பொழுதிலே சாம்பலாக மாறமாட்டார்களா? பின்பு எப்படி இதை நித்தியம் என்று சொல்ல முடியும்? இது கேள்வி. ஒரே ஒரு காரியத்தை மாத்திரம் சொல்கிறேன் கேளுங்கள்:- இயேசு கிறிஸ்துவின் 2ம் வருகையில், அர்மகதோன் பள்ளத்தாக்கிலே அந்தி கிறிஸ்துவும் கள்ள தீர்க்கதரிசியும் உயிரோடே அக்கினிக் கடலில் தள்ளப்பட்டார்கள் அல்லவா (வெளி.19:20). அதன்பின் 1000 வருட அரசாட்சி முடிந்து, கோகேமாகே யுத்த முடிவில், பிசாசும் அதே அக்கினிக்கடலில் தள்ளப்பட்டு அவர்கள் மூவரும் சதா காலங்களிலும் வாதிக்கப்படுவார்கள் என்று வெளி.20:10 சொல்லுவதால், நரக அக்கினியிலே 1000 வருடம் மட்டுமல்ல, நித்தியம் இருந்தாலும் சாம்பலாக மாட்டார்கள்; வாதைகள்தான் பெருகும் என்று அறிகிறோம். அப்படி என்ன தான் அக்கினி அது? இந்த நரக அக்கினியை நம் தேவன் சரீரத்தை அழிக்கவும் உபயோகிக்க முடியும்; அதனால் தான் மத்.10:28ல், தேவனின் வல்லமையைப் பற்றி இயேசு சொல்லும் போது, தேவனால் நரகத்திலே ஆத்மாவையும் சரீரத்தையும் கூட அழிக்க முடியும் என்று சொல்கிறார். ஆனாலும் பாவிகளின் உயிர்த்தெழுந்த சரீரத்தை நாளுக்கு நாள் வேதனைப் படுத்தி சதாகாலமும்வாதிக்கப்படவே தேவன், பிசாசுக்காய் உருவாக்கப்பட்ட நரகத்தில் தள்ளுகிறார் என அறிகிறோம் (மத்.25:41) அங்கே சரீரமாயிருக்கிற மனிதனுக்கும் வேதனை: ஆவியாயிருக்கிற பிசாசுக்கும் வேதனை. என்னே தேவனின் நரகப் படைப்பு! முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினியால் முட்செடி வெந்து போகவில்லை என்பதையும் சிந்தியுங்கள் (யாத்.3:2).

மகிமை நிறை நம் தேவனை ஒருவனும் இந்த மனிதக்கண்களால் காணமுடியாது (1 தீமோ:16) கண்ட பவுலின் கண் குருடானது என்று நாமறிவோம் (அப்.22:11). அப்படியிருக்க, வல்லமையோடும் மகிமையோடும் நியாயந்தீர்க்க வரும் இயேசு கிறிஸ்துவை எப்படி பாவிகள் மண்ணான உயிர்தெழுந்த சரீரக் கண்களால் பார்க்க முடியும்? இது ஒரு கேள்வி, வெள்ளை சிங்காசன நியாத்தீர்ப்பு மகிமை நிறைதேவனால் நடத்தப்படுவது அல்ல. அப்.17:31 ஐ வாசித்தால், பிதாவாகிய தேவன், தான் நியமித்த மனுஷனாம் இயேசுவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார் என்று உள்ளதால். இயேசு கிறிஸ்து மனிதனாயிருந்து தான் நியாயந் தீர்ப்பார் என்றும், நியாயாதிபதியின் மகிமையோடு தான் காட்சியளிப்பார் என்றும், தேவமகிமையோடு அல்ல என்றும் மனிதர்கள் அவரை சொந்தக் கண்களால்காண முடியுமென்றும் நாமறிகிறோம். (See. மத்.24:30)

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மறுரூபமாகி பரலோகம் போவதுதான் தேவையே ஒழிய, உயிர்த்து மறுரூபமாகாமல் மண்ணான சரீரத்தோடு நரகம் போகும் பாவியாய் இருக்கக்கூடாது. ஆமென். இயேசு சீக்கிரம் வருகிறார். ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!!

❖ ❖ ❖

## இயேசு உயிர்த்தது எப்போது? எப்படி? எந்த நாள்?

கையிலிருக்கும் வேதத்தைப் படித்து தியானிக்காமல், யார் யாரோ சொல்லிக் கொடுத்ததை நம்பி, பாரம்பரியமாய் இருக்கும் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு தங்களை அறியாமலே பிசாசுக்கு ஓட்டுப் போடும் தற்கால ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் மத்தியில் இந்தச் செய்தி எற்புடையது என்று கண்டு தேவன் எழுத வைத்தார்.

இயேசு, மதியம் 3 மணிக்கு மரித்தார்; அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது; ஓய்வு நாளும் ஆரம்பமாயிற்று (லூக்.23:44-54) வாரத்தின் 7ம் நாளாகிய சனிக்கிழமை தான் ஓய்வுநாள் என்பதால், இயேசு மரித்தது வெள்ளிக்கிழமை ஆகும். ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில், மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள் (மத்.28:1) கல்லறையில் இயேசு இல்லை. ஆக, வெள்ளிக்கிழமை மரித்தார். சனி போய், ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் பார்க்கும் போது அவர் இல்லை. அப்படியானால்எப்போது, எப்படி, எந்த நாளில் உயிர்த்தார்? இயேசு 3ம் நாளாகிய வாரத்தின் முதல் நாளாம் ஞாயிற்றக்கிழமை தான் உயிர்த்தார் என்று லூக்.9:22; 18:33; 24:7, 46: மத்.16:21; 17:23; 20:19, மாற்.9:31; 10:34 போன்ற பல வசனங்கள் சொல்கின்றன. பேதுருவும் அப்.10:40ல் 3ம் நாள் உயிர்த்தார் என்று சாட்சி கூறுகிறார். பவுலும் 1 கொரி. 15:4ல் அப்படித்தான் சொல்கின்றான். ஆக 3 நாள் முடிந்து 4ம் நாள் இயேசு உயிர்க்கவில்லை என்றும், 3ம் நாள் தான் உயிர்த்தார் என்றும் அறிகிறோம். (“மீன் வயிற்றில் 3 நாள் யோனாவா?” “3 நாள் இயேசு கல்லறையில் இருந்தாரா?” என்ற செய்திகளை ஆசிரியரின் இதே நூலில் வாசித்தறியுங்கள்).

அப்படியானால் 3ம் நாள் - வாரத்தின் முதல் நாள் - ஞாயிற்றுக்கிழமை எப்படி உயிர்த்தார்? **“கல்லறை திறந்திடவே, கடும் சேவகர் பயந்திடவே, வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே, வல்ல பிதாவின் செயலிதுவே”**

**"பார் அதோ கல்லறை மூடின பெருங்கல் புரண்டு உருண்டோடுது பார். அங்கு போட்ட முத்திரை காவல் நிற்குமோ, தேவபுத்திரர் சந்நிதி முன் ஆ.ஆ......கீதம்......."** என்றெல்லாம் பாடல்கள் பாடி முத்திரை போட்டு மூடிய கல்லைப் புரட்டிப் போட்டு இயேசு வெளியே வந்தார் என்று நம்புகின்றனர். அப்படி அவர் முத்திரையை உடைத்து வெளியே வந்திருந்தால், அவருடைய சீஷர்கள் அவரின் சரீரத்தைத் திருடிக் கொண்டு போனார்கள் என்று சொல்ல வாய்ப்பு உண்டல்லவா? சீஷர்கள், மேல்வீட்டிலே இருந்தபோது பூட்டிய அறைக்குள் நுழைந்த உயிர்த்தெழுந்த ஆண்டவர், முத்திரை போட்ட கல்லையும் கடந்து வர முடியாதா? கடல் மேல் நடந்தவருக்கு, மரணத்தை ஜெயித்தவருக்கு, இதெல்லாம் சர்வ சாதாரணமில்லையா? சிந்தியுங்கள். இப்படியாய் பாடல்களைப் பாடி தேவனின் மகிமையை, மகத்துவத்தை வல்லமையை மட்டுப்படுத்த பிசாசு முனைகிறான். நம்மவர்கள் அறியாமலே அவனோடு இணைகிறார்கள்.

மூடியிருந்த கல் புரப்பட்டது எப்போது? மத்.28:2-7 வசனங்களை வாசியுங்கள். ஸ்திரிகள், வாரத்தின் முதல் நாள் கல்லறையைப் பார்க்க வந்தபோது, வானத்திலிருந்து தேவதூதன் இறங்கி வந்து, கல்லைப்புரட்டி, "இயேசு உயிர்த்தெழுந்தார்; இங்கு இல்லை" என்று சொன்னான். இதற்குப் பிறகு தான், காவல் சேவர்கள் பிரதான ஆசாரியரிடம் விபரத்தைச் சொன்னார்கள் (மத்.28:11) ஏற்கனவே கல்லறையின் வாசலிலிருந்த கல் இயேசு உயிர்த்த போதே புரட்டப்பட்டிருந்தால், அப்போதே காவலர்கள் விபரத்தைச் சொல்லியிருப்பார்கள் அல்லவா! ஆக, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து வெளியேறியது யாருக்கும் தெரியாது என்றும், அப்போது கல்லறையின் கல் புரட்டப் படவில்லை என்றும் நாமறிகிறோம். மேலும், மரித்த இயேசுவின் சரீரத்தை சுற்றியிருந்த சீலைகளெல்லாம் கல்லறைக்குள்ளே கிடந்தன என்பதால் (லூக்.24:12; யோ.20:4-7) இயேசுவின் சரீரத்தை யாரும் திருடிக் கொண்டு போகவில்லை என்றும், அவரே உயிர்த்து வெளியேறினார் என்றும் திட்டமாய் சொல்ல முடியும். ஆமென். சரீரத்தை திருடுபவன் கட்டியிருந்த சீலைகளோடே தானே கொண்டு போயிருப்பான்!

இயேசு உயிர்த்தெழுந்தது எப்போது? வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே ஸ்திரிகள் மூலம் வரும் முன்னே இயேசு உயிர்த்தெழுந்து விட்டார். (யோ.20:1; லூக்.24:1; மத்.28:1). அதாவது அதிகாலையிலோ அன்று இரவோ உயிர்த்தெழுந்திருக்கலாம். இஸ்ரேலரின் நாட்கணக்குப்படி சனிக்கிழமை அதாவது ஓய்வுநாள் - மாலை 6 மணிக்கு

சூரியன் அஸ்தமிக்கும் போதே வாரத்தின் முதல் நாள் பிறக்கிறது என்று பொருள். அதாவது தற்கால கணக்கின்படி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேலேயே இயேசு மரித்த 3ம் நாள் பிறந்து விட்டது. 3ம் நாள் உயிர்த்தார் என்பதால், தற்காலக் கணக்கின்படி சனிக்கிழமை மாலை 6 மணியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை அதிகாலைக் குள்ளேயே இயேசு உயிர்த்திருக்க வேண்டும் (தற்கால ரோமர் காலண்டர்படி மாலை சூரியன் அஸ்தமிக்கும் போது அடுத்த நாள் பிறக்காமல், இரவு 12 மணிக்கு தான் அடுத்த நாள் பிறக்கிறது என்று முதலில் அறிக). மாற்கு 16:9 சொல்கின்றது:- "வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் இயேசு எழுந்திருந்த பின்பு, மகதேலேனா மரியாளுக்கு முதல் தரிசனமானார்." இந்த வசனப்படி ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலே ஸ்திரிகள் கல்லறைக்கு வருவதற்கு முன்பு தான், இயேசு உயிர்த்தெழுந்தார் என்று திட்டமும் தெளிவுமாய்ச் சொல்லலாம். ஆமென்.

❖ ❖ ❖

## பூமியானது அழியுமா? நிலைத்திருக்குமா?

கேள்விக்களுக்கான பதிலை ஆவியானர் வசனத்தின் மூலம் விளக்கும் முன்பாக, இந்த பூமி எப்போது படைக்கப்பட்டது என்று அறிய வேண்டும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஆதி 1ல் சொல்லப்படும் முதலாம் நாள் அல்லது 2ம் நாள் பூமி படைக்கப்பட்டது என்று போதிக்கிறார்கள். அப்படியானால் இந்த பூமி படைக்கப்பட்டு 6015 ஆண்டுகள் தான் ஆகின்றனவா? புவியியல் ஆராய்ச்சியாளர்களின் கணக்குப் படி பார்த்தால் இந்த பூமியானது படைக்கப்பட்டு கோடா கோடி வருடங்கள் ஆகின்றது என்று அறிகிறோம். அப்படியானால் வேதம் பொய் சொல்லுமா? ஆதி.1:1ஐ வாசியுங்கள். ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். ஆதியிலே என்றால் "In the begining" என்று பொருள். அதாவது "Dateless past" மிகவும் பழைமையான - கோடாகோடி வருஷத்திற்கு முற்பட்டது என்பதாகும். இதைத்தான் யோ:1:1ல் ஆதியிலே வார்த்தை இருந்தது என்று எழுதப்பட்டுள்ளது. (See யோபு.38:4-7) ஆக நமது வேதம், பூகோளம், சரித்திரம், விஞ்ஞானம் எல்லாவற்றுக்கும் முரண்பாடனாதல்ல என்று அறிகிறோம்.

இந்த பூமியை எதற்காய் படைத்தார்? ஏசா.45:18ன் படி குடியிருப்புக்காகப் படைத்திருக்கிறார் என அறியலாம். எது வரை குடியிருப்புகள் இருக்குமோ அது வரை இந்த பூமி தேவையல்லவா?

குடியிருப்புக்காக ஆதியிலே படைக்கப்பட்ட பூமி ஒழுங்கின்மையும் வெறுமையாய்ப் போயிற்று என்று ஆதி.1:2ன் மூலம் அறிகிறோம். அப்படியானால் ஆதி 1:1க்கும் 1:2க்கும் நீண்ட இடைவெளி உண்டு என்று வேதவல்லுநர்கள் கணிப்பது சரியே. எசே.28:12-19; ஏசா.14:12ன்படி சாத்தான் தள்ளப்பட்ட உடனே, ஆதிகால பூமியில் குடியிருப்புகள் இருந்த ஒழுங்கை அவன் குலைத்ததாலே, தேவனின் கோபாக்கினையால் அந்த பூமி வெறுமையாய் ஆக்கப்பட்டது என அறியலாம். ஆக பூமி, அழியவில்லை; பூமியிலிருந்த ஜீவராசிகள், பூமியின் பழக்கவழக்கங்கள் மட்டும் அழிந்திருக்கின்றன. இப்படிப்பட்ட அழிவு, 2 பேது.3:6ல் சொல்லப்பட்ட ஜலப் பிரளயத்தால் ஏற்பட்டது என அறியலாம். இந்த ஜலப்பிரளயம் நோவாவின் ஜலப் பிரளயம் அல்ல. எப்படியெனில் நோவாவின் ஜலப்பிரளயத்தில் பூமியிலுள்ளவைகள் எல்லாமே வெறுமையாக வில்லையே! ஆக, ஆதி.1:1ல் சிருஷ்டிக்கப்பட்ட அந்த பூமி தான் இன்றும் நிலைத்திருக்கிறது என அறியலாம்.

**இதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது:-** "இந்த பூமியானது 3 பிரத்தியேகப்பட்ட காலங்களை கடந்து, நிலைத்திருக்க நியமிக்கப்பட்டுள்ளது" என்பதாகும். இதைக் கொஞ்சம் விஸ்தாரமாய்ப் பார்ப்போம்.

**முதல் காலம்:** சீரும், சிறப்புமாய் படைக்கப்பட்டு, 2 பேது. 3:6ல் சொல்லப்பட்ட ஜலப் பிரளயத்தால் அழிவுக்குட்பட்டு நிலைத்திருக்கிற பூமியின் காலம்.

**2ம் காலம்:** ஆதாம் - ஏவாள் காலத்திலே சீராக்கப்பட்டு, நோவா கால ஜலப்பிரளயத்திலும் நிலைநின்று, அக்கினிக்கு இரையாக வைக்கப்படும் வரையிலான தற்போதுள்ள பூமியின் காலம் (2 பேது.3:7)

**3ம் காலம்:** இரகசிய வருகைக்குப் பின்வரும் அந்தி கிறிஸ்துவின் 7 ஆண்டு ஆட்சிக்குப்பின் இருக்கும் பகிரங்கவருகை முடிந்து உள்ள 1000 வருட அரசாட்சிக்குப் பின் தேவன் அக்கினியால் பூமியை அழிப்பார் என்று நாமறிவோம். 2 பேது. 3:10-13 வசனங்களை வைத்து பலர் வானமும் பூமியும் வெந்து உருகிப்போகும் என்றும், புதிய வானமும், புதிய பூமியும் சிருஷ்டிக்கப்படும் என்றும் போதிக்கிறார்கள். மூலபாஷையில் வாசித்தால் "heavens shall pass away with agreat noise, and the elements shall melt with fervent heat, the earth also and the works that are there in shall be burned up" என்று உள்ளது. வானம் என்பது சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் உள்ளவானம் என்றும், நாம் காணகின்ற மேகம் நிறைந்தவானம் என்றும் மூலபாஷையில் உள்ளது. அந்த வானமும், இந்த

பூமியும் "Pass away"... அதாவது ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு அக்கினியால் மாறுமே ஒழிய, ஒழிந்து (Annihilation) போகாது என்று உள்ளது. வெந்து உருகிப் போயிருக்கும் இதே வானமும் பூமியும் புதுப்பிக்கப்பட்டு, சிருஷ்டிக்கப்படமாட்டாது: உண்டாக்கப்படும். அந்த புதிதாக்கப்பட்ட பூமியிலும் குடியிருப்புகள் இருக்கும் ஆமென்.

இந்த மூன்றாவது கால நிலையிலுள்ள பூமி நித்திய நித்தியமானதாகும். இந்த 3வது நிலைக்குப் பின்னும் பூமி எந்த நிலைக்கு மாறுமென்று வேதம் சொல்லவில்லை. எந்த நிலை மாறினாலும், ஆதி.1:1ல் சிருஷ்டிக்கபட்ட அதே பூமி தொடர்ந்து நிலைத்திருக்கும். இதைத் தான் பிர.1:4ல் "ஒரு சந்ததி போகிறது: மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது" என்று ஞானி எழுதுகிறான். இந்த அர்த்தத்தில் தான் சங்.104:5; 9:1; 96:10; 1 நாளா 16:30 போன்ற வசனங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்த வசனங்களை மேற்போக்காக படித்து விட்டு. "பூமியானது நகராது; சுற்றாது; நிலைத்து ஒரே இடத்தில் தானிருக்கும்" என்று ஒரு சிலர் புரிந்து கொண்டு, பூமி தன்னைத் தானேயும், சூரியனையும் சுற்றுகிறது என்ற விஞ்ஞான அறிவுக்கு எதிராக வேதம் இருக்கிறது என்று கருதுகிறார்கள்; எழுதுகிறார்கள். அவர்களின் மனக்கண்கள் பிரகாசமாக ஜெபிப்போம். (எபே. 1:19).

உபா.7:9 ஐ வாசியுங்கள் :- "ஆகையால் உங்கள் தேவனாகிய கர்த்தரே தேவன் என்றும் தம்மில் அன்பு கூர்ந்து தமது கற்பனைகளைக் கைக் கொள்ளுகிறவர்களுக்கு அவர் ஆயிரம் தலைமுறை மட்டும் உடன்படிக்கையையும் தயவையும் காண்கிற உண்மையுள்ள தேவன் என்றும்...... நீ அறியக்கடவாய்" (See also 20:6) ஆக, இஸ்ரேவேல் மக்களுக்கு 1000 தலைமுறை மட்டும் தயவு செய்கிற தேவன் என்பதால், கிட்டத்தட்ட 35000 ஆண்டுகள் வரை நிச்சயம் இஸ்ரேலர்கள் இந்த பூமியில் கற்பனைகளைக் கைக்கொண்டு கண்டிப்பாய் வாழ்வார்கள் என்று அறிகிறோம். எனவே இந்த பூமி முழுவதுமாய் அழியாது; அல்லது அழிக்கப்படாது; நிலைத்து நிற்கும் என்று உறுதியாய் அறிகிறோம். பூமியின் நிலையானது காலங்களுக்கேற்றாற் போல, மேலே சொன்னபடி மாறலாமே ஒழிய, பூமியானது இல்லாமல் போகவே போகாது!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ இந்த பூமியிலே வாழும் நாளிலாவது கர்த்தருக்கேற்ற காரியங்களைச் செய்து, அவருக்கென்று ஒரு கூட்டத்தை ஆயத்தம் பண்ணு! இயேசு சீக்கிரம் வருகிறார்.

❖ ❖ ❖

# சிறைச்சாலைக்காரரின் குழந்தைகளும் செங்கடலைக் கடந்த குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்றார்களா?

இன்றைக்கு குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கும் சபையில் அங்கம் வகிக்கும் ஊழியர்களோடு ஆவிக்குரிய சபை ஊழியர் பலர் அறிந்தோ, அறியாமலோ இணைந்து ஊழியம் செய்வதால் "குழந்தை ஞானஸ்நானம் கொடுக்கலாம்; வயதுக்கு வந்த பிறகு முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம்" என்ற சொல்கின்ற அளவிற்கு வந்திருக்கிறார்கள். ஊழியத்திலும் அந்நிய நுகப்பிணைப்பு கூடாது என்று படித்திருந்தும் (யாத்.4:24-26; 2 கொரி. 6:16-18) பேருக்காகவும், புகழுக்காகவும், பணத்திற்காகவும், கூட்டத்திற்காகவும் இணைந்து விட்டதாலே ஆவிக்குரிய சபையார் பலருக்கு "அந்த ஆவி" பிடித்து விட்டது போல் தெரிகிறது. இதனால் தானே பெந்தகொஸ்தே மாமன்ற (Synod) விழாவிலே, Dr. பால் தினகரனை செய்தி கொடுக்க வைத்திருக்கிறார்கள்.

ஒரு முறை நானும் என் மனைவியும் திராவிட (தமிழர்) சமயம் பத்திரிக்கை ஆசிரியர் அவர்களை சந்தித்த போது குழந்தை ஞானஸ்நானம் பற்றிய விவாதம் வந்தது. "குழந்தை ஞானஸ்நானம் வேதத்தின்படி சரிதான் என்று ஒரு புத்தகம் எழுதியிருக்கிறேன்; இது குறித்து பெந்தகொஸ்தே முதலான ஊழியர்கள் கலந்து கொண்ட வட்டத்தில் பகிர்ந்து கொண்டேன்; அவர்களெல்லாம் ஒத்துக் கொண்டனர். இந்த செய்தியைக் கேள்விப்பட்ட A.C.A. சபை தலைமைப் போதகர் சாம் சுந்தரம் அவர்கள், நான் எழுதியதை ஒத்துக் கொள்வதாகவும், அதைப் புத்தகமாக வெளியிட்டால் அவர்களின் போதனைகள் தவறாகிவிடும் என்பதால், பிரசுரிக்க வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டதால் நான் வெளியிடாமலிருக்கிறேன்" என்று அவர் சொன்னதைக் கேட்டு நான் திடுக்கிட்டேன். யார் என்ன சொன்னாலும், கர்த்தரின் வார்த்தை என்றும் உண்மையுள்ளது என்பதால் இந்த செய்தியை ஆவியானவர் எழுத என்னை ஏவினார்.

குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பது இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் அவமதிப்பாகும் என்று பழைய முழக்கங்களிலும், ஆராய்ச்சிப் புத்தகங்களிலும் ஆதாரத்தோடு பல செய்திகள் எழுதியிருக்கிறேன். வாசியுங்கள். "பெத்தேலின் எக்காளம்" (ஆக '09) என்ற ஆவிக்குரிய பத்திரிக்கையில் உள்ளதை எழுதுகிறேன் கேளுங்கள்.... "அவன் (சிறைச் சாலைக்காரன்) வீட்டில் குழந்தைகள் இருந்திருப்பின்

அச்சிறுவர்கள் கிறிஸ்துவுக்குள் வளர்ப்பதற்குத் தான் உத்திரவாதம் அளித்திருக்கலாம். ஒரு வேளை அவன் ஏற்றுக் கொண்ட உத்திரவாதத்தின் அடிப்படையில் ஞானஸ்நானம் கொடுத்திருக்கலாம். இனறைக்கோ அப்படி இல்லையே! ஒழுங்காக ஆலயத்திற்கு செல்லாத, குடும்ப ஜெபம் தனிஜெபம் இல்லாத, வேத வாசிப்பற்ற, பல தீய பழக்கங்களுக்கு அடிமையாயிருக்கிற பெற்றோரைப் பற்றி நன்றாக அறிந்திருந்தும், அவர்கள் தங்கள் சபையின் அங்கத்தினர் என்ற ஒரே காரணத்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு ஞானஸ்நான சடங்கைச் செய்து வைக்கிறார்களே!" இதைப் படிக்கும் போது, குழந்தைகளை நன்கு கிறிஸ்துவுக்குள் வளர்ப்பேன் என்று சிறைச்சாலைக்காரன் உத்திரவாதம் அளித்த அடிப்படையில், பவுல் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கலாம் என்பது வேத சத்தியத்திற்கு விரோதமானது அல்லவா! மேலும், தற்காலத்தில் அப்படி உத்திரவாதம் அளிக்கும் நல்ல பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம் என்றல்லவா தெரிகிறது! அதற்காகத்தான் பாரம்பரிய சபைகளிலே ஞானத்தாய், ஞானத்தகப்பன் என்று வைக்கிறார்களோ!

உலகில் ஆவிக்குரிய சபையார் கடைசி நாட்களில் எப்படிப் பேசி நடந்தாலும், வேதம் சொல்வதைப் பார்ப்போம். ரோ.10:9; யாக்.1:18; 1 கொரி. 6:11; 1 பேது. 1:23; 2: யோ. 3:3,5; கலா. 3:27 போற் வசனங்களின் படி, ஜலமாகிய - வார்த்தையாகிய கிறிஸ்துவுக்குள், ஆவியாகிய இருதயத்தில் மறுபடியும் பிறந்தவர்கள் தான் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றவர்கள்; மறுபிறப்படைந்தவர்கள்; இரட்சிக்கப்பட்டவர்கள், நீதிமானாக்கப்பட்டவர்கள். இப்படி இரட்சிக்கப்பட்டவர்கள் பெறக்கூடிய அடுத்த காரியம் தான் தண்ணீருக்குள் ஞானஸ்நானம் (அப்.2:38 ㎭.16:16; மத்.28:18-20; அப்.8:35-38). இந்த வசன ஆதாரத்தோடு, அப்.16:29-33ஐ தியானியுங்கள். சிறைச் சாலைக்காரன் கேட்ட கேள்வி "இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டும்?" 'பவுலின் பதில்: கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி: அப்பொழுது நீயும்உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். அவர்களுக்கு விசுவாசம் வர பவுல் செய்தது என்ன? அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தான். "விசுவாசம் கேள்வியினால் வரும். கேள்வி தேவனுடைய வார்த்தையினால் வரும் (ரோ.11:17). வீட்டிலுள்ளவர்கள் வசனத்தைக் கேட்டார்கள். ஜலமாகிய வார்த்தையினால் அவர்களுக்கு ஆவியானவரைக் கொண்டு விசுவாசம் வந்தது; விசுவாசம் வந்தவர்கள் தேவநீதியைப் பெற்றார்கள்; இரட்சிப்புக்குள் வந்தார்கள். இந்த நிலைக்கு பச்சிளம் குழந்தைகள்

வர முடியுமா? சிந்தியுங்கள். இரட்சிப்புக்குள் வந்த சிறைச்சாலைக்காரன் வீட்டார் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். உண்மை இப்படியிருக்க குழந்தைகள் எப்படி ஞானஸ்நானம் எடுத்திருக்க முடியும், சிந்தியுங்கள்.

மேலும் 1 கொரி.10:2ஐ வைத்துக் கொண்டு, செங்கடலைக் கடந்த போது, குழந்தைகளும் கடந்ததினால், குழந்தைகளும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் என்று போதித்து, குழந்தை ஞானஸ்நானம் சரி என்று வாதிடுவோரும் உண்டு. இவர்களுக்கு ஒரு கேள்வி: "செங்கடலைக் கடந்தவர்கள் குழந்தைகள் மட்டுமல்ல, இஸ்லேரோடு உடன் வந்த எகிப்தியர்கள் மற்றும் ஆடு, மாடு போன்ற மிருக ஜீவன்கள்"". அப்படியானால் குழந்தைகள், எகிப்தியர்கள் மற்றும் ஆடு, மாடு போன்ற மிருக ஜீவன்கள் ஆகிய எல்லாமே ஞானஸநானம் பண்ணப்பட்டனவா? சிந்தியுங்கள். கிறிஸ்தவனின் ஒரே ஞானஸ்நானம் (எபே.4:5) எப்படி (1) கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் (கலா.3:27; ரோ.6:3-7:1 கொரி.12:13; கொலோ. 2:12). (2) தண்ணீர்ஞானஸ்நானம் (மத். 28:19; மாற். 16:16; அப்.2:38-11). (3) ஆவியானலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் (மத். அப்.10:44-48) என்று மூன்று பிரிவுகளாய் இருக்கிறதோ, அப்படியே அங்கே ஞானஸ்நானம் பெற்றவர்கள். (1) மோசேக்குள்ளாக ஞானஸ்நானம். (2) சமுத்திரத்தால் ஞானஸ்நானம். (3) மேகத்தினால் ஞானஸ்நானம் என்ற மூன்று அனுபவத்திற்கு வந்திருக்கிறார்கள். மேலே நாம் பார்த்தபடி இந்த மூன்று அனுபவங்களும் குழந்தைகளுக்கு அல்ல என்றும், விசுவாசமுள்ளவனாகி இரட்சிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே நடந்திருக்க முடியும் என்றும் அறியுங்கள். இதற்கு ஆதாரமாய் ஒன்றிரண்டு வசனங்களைப் பார்ப்போம்.

1 கொரி. 10:1ஐ வாசித்தால் "பிதாக்கள் எல்லாரும் மேகத்திற்கு கீழாயிருந்தார்கள்; சமுத்திரத்தின் வழியே நடந்து வந்தார்கள்" என்று பவுல் எழுதுவதால், பிதாக்களுக்கு - பெரியவர்களுக்கு - நன்மை தீமை அறிந்த - இஸ்ரேலர்களுக்கு (கூட வந்த எகிப்தியர்களுக்கு அல்ல) நடந்த சம்பவத்தைத்தான் விளக்குகிறார் என அறியலாம். (2) இப்படியாய் ஞானஸ்நான அனுபவம் பெற்றவர்கள், இச்சித்தார்களாம் விக்ரக ஆராதனைக்காரர்களானார்களாம்; வேசித்தனம் பண்ணினார்களாம்; கிறிஸ்துவை பரீட்சை பார்த்தார்களாம்; முறுமுறுத்தார்களாம்; இந்தக் காரியங்களை குழந்தைகளா செய்தன? இஸ்ரேலின் பிதாக்கள் தானே செய்தனர். எனவே இங்கே ஞானஸ்நான அனுபவம் பெற்றவர்கள் குழந்தைகளல்ல, பெரியவர்களே என்று அறுதியிட்டுச் சொல்ல முடியும்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இந்த கருகலான சத்தியம் துளிர் விட்டதற்காகய் தோத்திரம். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவமாக்கும் கள்ள கிறிஸ்துக்களின் சாத்தானிசம் சங்காரமாகட்டும். ஆவிக்குரிய சபையாருக் குள்ளும் ஒரு பெரிய எழுப்புதல் உருவாகட்டும். "குழந்தை ஞானஸ்நானம்" கொடுக்கும் சபையிலே இருந்து கொண்டு ஊழியம் செய்யும் அந்நிய நுக ஊழியக்காரரோடு ஒருக்காலும் ஆவிக்குரிய சபை சேராதிருக்கட்டும்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## "ஓய்வு" என்பது வேறு; 'ஓய்வு நாள்' என்பது வேறு (Sabbath - Sabbath Day)

தேவன் படைப்பின் கிரியை முடித்து, ஓய்ந்திருந்த ஏழாம் நாளை அவர் ஆசீர்வதித்து பரிசுத்தமாக்கினார் (ஆதி.2:2,3) அப்படியானால் வாரத்தின் மற்ற ஆறு நாட்களும் பரிசுத்தமில்லாதவைகளா? கெட்ட நாட்களா? ஆதி.1:31ன் படி அவர் உண்டாக்கின எல்லாமே நல்லவைகள் தான். அப்படியானால் இங்கே சொல்லப்பட்ட "பரிசுத்தம்" என்பது தூய்மை அல்ல. Setapart - தனிமைப் படுத்தி வைத்திருந்தார்; பிரத்தியேகம் பண்ணப்பட்ட நாளாய் வைத்திருந்தார். இப்படி வைக்கப்பட்ட இந்த 7ம் நாளை, முதன் முதலில், வானத்திலிருந்து மன்னா பொழியும் போது மோசே மூலம் இஸ்ரேலருக்கு சொல்லி, செயல்படச் சொன்னார் (யாத்.16:23). அதைத் தொடர்ந்து சீனாய் மலையில் தேவன் எழுந்தருளி, 10 கற்பனைகளை தம் வாயினால் சொல்லும் போது, 4ம் கற்பனையாய் "ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" என்று கூறினார். அதன் படி இந்த 4ம் கற்பனை இணைந்த 10 கற்பனையை நியாயப் பிரமாணப் புத்தகத்தில் சேர்த்து இஸ்ரேலருக்குக் கொடுத்தார் (யாத். 24:3-8); பழைய உடன்படிக்கை உருவாயிற்று. புதிய உடன் படிக்கையை சிலுவையிலே இரத்தம் சிந்தி உருவாக்கும்போது, ஓய்வு நாள் ஆசரிப்பு கற்பனையோடு கூடிய 10 கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் அவருடைய சரீரத்தோடே ஒழிந்தது (எபே.2:14,15; ரோ.10:4; கொலோ.2:13-17) இனி 7ம் நாளாகிய ஓய்வு நாள் ஆசரிப்பு தேவையே இல்லை. இன்னும் 7ம் நாளாகிய ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்று முழக்கமிடும் ஏழாம் நாள் சபையார். "சீனாய் மலையிலிருந்து அல்ல; ஆதாம் - ஏவாள் உருவான நாள் முதலே 7ம் நாளாகிய ஓய்வு நாள் ஆசரிக்கப்பட்டது" என்று

வாதிடுகிறார்கள். இது உண்மைதானா? கருகலான சத்தியத்தை ஆவியானவர் விளக்குவாராக!

ஆதி.26:4ஐ வைத்துக் கொண்டு, "ஆபிரகாம் கற்பனைகளைக் கைக்கொண்டான்" என்று இருப்பதால் 10 கற்பனையைக் கைக் கொண்டு, அதிலுள்ள ஓய்வு நாளாகிய 7ம் நாளையும் ஆசரித்தான் என்று பிரசங்கிக்கிறார்கள. வேதத்திலே "கற்பனை" என்ற வார்த்தை வந்தாலே அது 10 கற்பனையைக் குறிப்பதில்லை என்று முந்தி அறியுங்கள். (நீதி.6:20; 1 கொரி.14:37; மத். 5:19; 1 தீமோ.1:5; 1 யோ.2:7-8; 2 யோ.5). கற்பனை என்றாலே தேவனின் வார்த்தை - சட்டம் - Commandment - என்று பொருள்.

ஈரோட்டிலுள்ள ரஞ்சித் என்ற சகோதரர், சீனாய் மலைக்கு முன்னமேயே ஓய்வு நாள் ஆசரிப்பு உண்டு என்று என்னோடு பேசி. அதற்கு ஆதாரமாக, யாத். 5:5ஐச் சொன்னார். இதிலே மோசே, இஸ்ரவேல் மக்களை ஓய்ந்திருக்கச் செய்தான் என்று உள்ளது. இங்கே "ஓய்வு" என்பது "Rest" என்று ஆங்கிலத்தில் உள்ளது. தினமும் 8 மணி நேரம் வேலை செய்து 1 மணி நேரம் 2 மணி நேரம் ஓய்வெடுக்கிறார்கள். கோர்ட்டுக் கூட விடுமுறை நாட்கள் உண்டு. சவுதி அரேபியா போன்ற முஸ்லீம் நாடுகளில் வெள்ளிக் கிழமைதோறும் வாராவாரம் ஓய்வெடுக்கிறார்கள்; இந்தியா போன்ற நாடுகளில் ஞாயிறுதோறும் வாராவாரம் ஓய்வெடுக்கிறார்கள். இவைகளை எல்லாம் ஓய்வு நாள் ஆசரிப்பு என்று சொல்ல முடியாது. சனிக் கிழமையாகிய ஓய்வு நாளை தேவன் சொன்னபடி ஆசரிப்பது தான், ஓய்வு நாள் ஆசரிப்பாகும். மற்றப்படி இவைகள் எல்லாம் ஓய்வு எடுப்பதாகும்; Rest எடுப்பதாகும். மனிதன் ஏற்படுத்திய ஓய்வாகும்.

யாத்.5:5ல் உள்ள "ஓய்வு- Rest" என்ற வார்த்தையை "Sabbath" என்று மட்டுமே மூல பாஷையில் போட்டிருப்பதால், ஓய்வு நாள் ஆசரிப்பு என்று (Sabbath day) அதை எடுத்துக் கொள்ள முடியாது. யாத். 16:23ல் உள்ள கர்த்தருடைய "ஓய்வு நாள்" என்ற வார்த்தை "Shabbathown" என்று போடப்பட்டுள்ளது. இதன் பொருள் "sabbatism or special holiday - a rest, sabbath" என்று இருப்பதால், யாத். 16:23ல், சொல்லப்பட்டுள்ளது கற்பனையின் ஓய்வு நாள் பற்றியது என்று எடுத்துக் கொள்ளலாம். ஆக, யாத்.5:5ல் உள்ளது ஓய்வு பற்றியது மட்டுமே. இந்த அறிவு - உண்மை - புரியாத வரைக்கும் கருகலான சத்தியம் மலராது; துளிர்க்காது. கிரேக்க பாஷையில் கூட, Rest என்பதற்கு "Sabbatismos-keeping of the sabbath, (keeping of the sabbath day அல்ல), rest from toils & troubles in the

life to come" என்றும் "katapausis - cessation from labor so that the wearly body may be rested and refreshed" என்றும் உள்ளது. 7ம் நாளாகிய ஓய்வு நாள் ஆசரிப்பு என்று இல்லை.

மட்டுமல்ல ..... எபி.4:9 ஐ வைத்துக் கொண்டு, தேவனுடைய பிள்ளைகளுக்கு, ஓய்வு நாள் ஆசரிப்பு உண்டு என்று செவன்த்டே சபையார் போதிக்கிறார்கள். தமிழில் "ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது" என்றும், ஆங்கிலத்தில் "There remaineth therefore a rest to the people of God" என்றும் உள்ளது. இங்கே "ஆகையால் - Therefore" என்று உள்ளதால் இதன் முழு அர்த்தத்தையும் அறிந்து கொள்ள முன்னும் பின்னும் உள்ள வசனங்களை தியானித்தாக வேண்டும். எபி.3,4 அதிகாரங்களில், 4 விதமான ஓய்வு பற்றி (Rest - Sabbath) எழுதப்பட்டிருக்கிறது.

(1) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானில்கிடைக்கும் இளைப்பாறுதல் - ஓய்வு

(2) தேவன் தரும் இளைப்பாறுதல் - Rest - ஓய்வு (எபி.4:1-3)

(3) ஏழாம் நாளாகிய ஓய்வு நாள் இளைப்பாறுதல் (எபி.4:4)

(4) மறுமையிலே உள்ள நித்திய இளைப்பாறுதல் (எபி.4:11)

மத்.11:28-30ல் வரும் தேவன் தரும் இளைப்பாறுதலில் பிரவேசித்தால் - அதாவது இரட்சிக்கப்பட்டால் - நற்செய்தியை, வசனத்தை விசுவாசித்தால் - கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றால் - மறுபடியும் பிறந்தால் - தேவ நீதியைத் தரித்தால் - புது சிருஷ்டியானால் மாத்திரமே உலகத்திலுள்ள கானானுக்குள்ளும் போக முடியும்; நித்திய இளைப்பாறுதலாகிய பரலோகத்திற்கும் போக முடியும்; ஆமென். இஸ்ரேலர் அன்றைக்கு தேவன் தரும் இளைப்பாறுதலில் பிரவேசிக்க வில்லை. எனவே கானானுக்குள்ளும் போகவில்லை; பரலோக இளைப்பாறுதலையும் இழந்து போனார்கள். இதைத் தான் பவுல் எழுதுகிறார்.

"7ம்நாளைக் குறித்து ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்" என்று எபி.4:4ல் பவுல் எழுதி, எபி.4:10, 11ல் ஒரு விளக்கம் தருகிறான். அதாவது, தேவன் தரும் இளைப்பாறுதலில் - இரட்சிப்பில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்தது போல, (7ம் நாளில்) தானும் தன் கிரியைகளை முடித்து - உலக வாழ்க்கைக் கிரியைகளை முடித்து - நித்திய இளைப்பாறுதலில் பிரவேசிப்பான். 7ம் நாளில் படைப்பின் கிரியை முடித்து ஓய்ந்தது போல - அதற்குப் பிறகு படைக்காமலே இருந்தது போல - மனிதனும் மரித்து உலக கிரியைகளை விட்டு - இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்க

வேண்டுமென்று பவுல் அழுத்தம் திருத்தமாய் எழுதுகிறான். எபி.4:6-8 வசனங்களை தியானித்தால், இந்த இளைப்பாறுதல், இந்த ஓய்வு, Rest (See தானி.12:13) விசுவாசிக்கு இனிவரக் கூடிய ஒன்று எனப் புரியும். அதனால் தான் எபி.4:9ல் இந்த இளைப்பாறுகிற காலம் இனிவருகிறது என்று எழுதப்பட்டுள்ளது. இந்த இளைப்பாறுதலுக்கு உதாரணம் சொல்லும் போது, "தேவன் படைபபின் கிரியைகளை முடித்து 7ம் நாளில் ஓய்ந்திருந்தது போல" என்று பவுல் விளக்குகிறான். அதற்குப்பின் படைப்பே இல்லையே அப்படிப்போல.

எபி.4:9ல் உள்ள "Remaineth" என்ற வார்த்தை நிகழ்காலத்திலிருந்து எதிர்காலம் வரை நடக்கும் - நிகழும் - வரும் - வைக்கப்பட்டுள்ள காரியங்களை, இப்போதே வைக்கப்பட்டுள்ளது அல்லது நடக்கிறது என்ற அர்த்தத்தில் எழுதப்பட்டுள்ளதாகும். உதாரணத்திற்கு ஒன்றிரண்டு பார்ப்போம். "Remaineth" என்பதற்கு "apoleipo" என்று கிரேக்க பாஷையில் உள்ளது. இந்த மூல வார்த்தை உள்ள எபி.10:26ல் "there remaineth no more sacrifice for sin" பாவங்களிலிருந்து செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இராமல் என்ற பொருளில் வருகிறது. அதே மூல வார்த்தை உள்ள எபி.4:6ல் "There fore it remaineth that some must - enter into it" "ஆகையால் சிலர் அதில் பிரவேசிப்பது இன்னும் வரப்போகிற காரியமாயிருக்கிறபடியினாலும்" என்ற பொருளில் வருகிறது. அப்படிப் போல, எபி.4:9ல் "There remaineth, therefore a rest to the people of God" ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது என்ற பொருளில் வருகிறது. மற்றப்படி, 7ம் நாளாகிய ஓய்வு நாள் ஆசரிப்பு தேவனுடைய பிள்ளைகளுக்கு இருக்கிறது - வைக்கப்பட்டிருக்கிறது என்ற அர்த்தத்தில் இந்த வசனம் இல்லை. இது சம்பந்தமான ஆதி.8:22; யாத். 19:5 போன்ற பல வசனங்களையும் தியானித்து அறியுங்கள்.

லேவி.23ல் சொல்லப்பட்ட முதல் பண்டிகையான ஏழாம் நாள் ஓய்வு நாள் பண்டிகை முதல், கூடாரப் பண்டிகை வரை உள்ள எல்லாப் பண்டிகைகளும் கிறிஸ்துவுக்கு நிழலாட்டம். நிஜமான கிறிஸ்து வந்த பிறகு நிழல் எதற்கு? (கொலோ.2:16,17) 10 கற்பனையில் உள்ள 7ம் நாள் ஓய்வு நாள் மற்றும் லேவி.23ல் சொல்லப்பட்ட பண்டிகைகளுக்கான ஓய்வு நாட்கள் எல்லாமே கிறிஸ்துவுக்கு நிழலாட்டம் போன்றவை. நிஜமான கிறிஸ்து வந்த பிறகு நிழல் எதற்கு? (கொலோ. 2:16ல் 'ஓய்வு நாட்கள்' என்று பன்மையில் எழுதியிருப்பதால் இது 7ம் நாள் ஓய்வு நாளல்ல, பண்டிகை ஓய்வு நாட்கள்

என்று வாதிடுவோரே, எசே.20ல் பன்மையிலேயே "ஓய்வு நாட்கள்" "ஓய்வு நாட்கள்" என்று உள்ளதெல்லாம் 7ம் நாள் ஓய்வு நாள் இல்லையா? சிந்தியுங்கள். (மேலும் KJVல் கொலோ.2:16, "Sabbath days" என்று பன்மையில் உள்ளது. மற்றப்படி Scofield பைபிள், NIV, Thompson student பைபிள் போன்றவற்றில் "a Sabbath day" என்று ஒருமையில் உள்ளதை கவனியுங்கள்) நிழலையே இன்னும் விசுவாசித்து செயல்படுத்திக் கொண்டிருப்போமானால், இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையை அவமதிக்கிற பாவியாகி விடுவோம், ஜாக்கிரதை!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மூல பாஷையில் Sabbath என்று வருவதெல்லாம் 7ம் நாளாகிய ஓய்வு நாளைக் குறிக்கவில்லை என்றும், Rest, இளைப்பாறுதல், ஓய்வு, என்ற அர்த்தத்தில் தான் வருகிறது என்றும் முந்தி அறிக. மூல பாஷையில் "Sabbath day" என்று எங்கெல்லாம் வருகிறதோ அது தான் 7ம் நாளாகிய ஓய்வு நாளைக் குறிக்கிறது என்றும் முந்தி அறிக. ஓய்வில்லாமல் அடிமையாயிருந்த இஸ்ரவேலரை அழைத்து வந்து, தான் ஓய்ந்திருந்த ஏழாம் நாளை அவர்களுக்கு ஓய்வு நாளாய் ஆசரிக்க கட்டளை கொடுத்தாரே அல்லாமல், புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்துவர்களாகிய நமக்கல்ல (See உபா.5:5; எசே.20:12-24; யாத். 31:13). 10 கற்பனைகளடங்கிய நியாய பிரமாணம் முழுவதும் சிலுவையிலே ஒழிந்திருக்க, 4ம் கற்பனையை மாத்திரம் தூக்கிப் பிடிப்பது வசனத்திற்கு விரோதமால்லா! ஓய்வு நாள் மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டது (made) சீனாய் மலையில் தான். தேவனுக்காக சிருஷ்டிக்கப்பட்டது தான் (Created) 7ம் நாளில், தேவன், தமது பரிசுத்த ஓய்வுநாளை தெரியப்படுத்தியது இஸ்ரவேலர்களுக்கு சீனாய் மலையில் தான் என்று நெகே.9:13,14 சொல்வது புரியவில்லையா? இப்படியாய் இஸ்ரவேல் மனுஷருக்காய் உண்டாக்கப்பட்ட - தெரியப்படுத்தப்பட்ட (not created) அந்த 7ம் நாள் ஓய்வு நாளுக்கே அவர்கள் அடிமையாய் இருக்கக் கூடாது; அதிகாரியாய் இருக்க வேண்டும் என்று அவர்களுக்கு இயேசு போதித்தது விளங்கவில்லையா? ஓய்வு நாளுக்கு அடிமையாய் இஸ்ரேல் மனுஷர் இருக்கிறார்கள் என்பதால், அந்த அடிமைத்தளையை முறிக்கவே இயேசு "ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிறேன்; என்னைப் பின்பற்றிவா" என்று முழக்கமிட்டது காதில் விழவில்லையா? (மாற்.2:27-28) இந்த ஓய்வு நாளுக்கும் ஆண்டவரான இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தில் - கற்பனையில் - வசனத்தில் - சட்டத்தில் நிலைத்திருப்போம் (மத்.28:20). அவர் சொல்லித் தந்த புதிய கற்பனையை கைக்கொள்வோம் (யோ.13:34; 15:10-12). அதுவே புதிய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் அடிப்படை.

கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும், தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும். குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தை கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலு மிருங்கள். 'அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்' (2 யோ.9-11) ஆமென்.

❖ ❖ ❖

## எது மீதமான சபை?

வெளி.12:17ல், ஆங்கிலத்தில் சொல்லப்பட்ட மீதானவர்கள், இயேசுவைக் குறித்து சாட்சியை உடையவர்கள் என்பதால் இவர்கள் மீதமான கிறிஸ்தவ சபையார் என்று பலர் எண்ணுகின்றனர். இதனால், இன்றைக்கு ஒரு சில கிறிஸ்தவ சபைகள் நாங்கள் தான் மீதமான சபையார் என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிலே சி.பி.எம். சபையாரும், ஏழாம் நாள் சபையாரும் அடங்குவர். வேதத்திலே மீதமான சபை Remnent Church - என்று எங்காவது இருக்கிறதா? ஆவியானவர் தாமே வெளிப்படுத்துவாராக.

Church - சபை என்பது எக்ளிசியா என்ற மூலபாஷைகளிலிருந்து வந்ததாகும். இதை இயேசு கிறிஸ்து கற்பாறையாகிய (ஞநவசய) தன் மேல் காட்டினார். தேவன் தம் சுயஇரத்தத்தினால் சம்பாதித்தது நமது கிறிஸ்துவ சபை (அப்.20:28). இந்த சபை பற்றிய வெளிப்பாடு ஆதி முதல் பவுல் வரை ஒருவருக்கும் இல்லாமல் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. இந்த சபை பற்றிய இரகசியத்தை பவுல் தான் வெளிப்படுத்துகிறான் (எபே.2:19-3:6). பவுலுக்கு முன்னும், பின்னும் வேதத்திலே மீதமான சபை என்று எங்குமே சொல்லப்படவில்லை. ஆனால் மீதமானவர்கள் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டிலிருநதே வந்து கொண்டிருக்கிறது. வெளி 12:17ஐ ஆங்கிலத்தில் பார்ப்போம்- "And the dragon, keep angry with the woman, and went to make war with the remnent of the seed, who keep the commandments of God and have ther testimonyof Jesus Christ". "இதிலே சொல்லப்பட்ட ஸ்திரி இஸ்ரேல் சபையை குறிக்கிறது என்று" வெளியரங்கமாகாத தீர்க்க தரிசனங்கள் என்ற ஆராய்ச்சி நூலில்

விளக்கியிருக்கிறேன். மேலும் இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படும் கிறிஸ்துவ சபையானது வெளி 4:1க்குப் பின் பூமியில் இல்லை என்பதால், வெளி.18 வரை சபையைப் பற்றிய தீர்க்க தரிசனம் உள்ளது என்று சொல்ல நியாயமே இல்லை. மட்டுமல்ல... இங்கே ஸ்திரிஎன்பது இஸ்ரேல் சபையைக் குறிப்பதால், இஸ்ரேல் சபையில் மீதமானவர்கள் (remnent of her seed) என்று இதை எடுத்துக் கொள்வதிலே தவறில்லை. மொத்த இஸ்ரவேல் சபையில் அந்தி கிறிஸ்துவின் மகா உபத்திரவ காலத்தில் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்டு, வாழப்போகும் ஆவிக்குரிய இஸ்ரவேலரையே மீதமானவர்கள் என்று காட்டப்பட்டுள்ளது. இந்த வகையில் பார்த்தாலும் இஸ்ரேல் சபையை மீதமான சபை என்று சொல்ல முடியாது. இஸ்ரேல் சபையிலுள்ள மீதமானவர்கள் இவர்கள் என்று சொல்லலாம்.

எலியாவின் நாட்களில், ஆவிக்குரிய 7000 இஸ்ரேலரை தேவன் மீதியாக வைத்தார் என்று வேதம் கூறுகிறது (ரோ.11:4; ராஜா 19:18). ஏசாயாவின் நாட்களிலும் கொஞ்சம் ஆவிக்குரிய இஸ்ரேலரை மீதியாகி வைத்திருந்தார். (ஏசா.1:9) இஸ்ரேலர்கள் பாபிலோனில் சிறைப்பட்ட காலத்திலும், எஸ்தர், மொர்தகாய், எசேக்கியேல், தானியேல்., சாத்ராக், மேஷாக், ஆபெத் நெகோ போன்ற மீதமான இஸ்ரேலர்களை தேவன் வைத்திருந்தார். 70 வருட சிறைக் காலத்திற்கு இறுதியிலும், எஸ்றா, நெகேமியா போன்றோரின் தலைமையில் மீதமானோர் திரும்பி வந்தனர். இயேசுவின் முதலாம் வகையிலும், மீதமான ஆவிக்குரிய இஸ்ரேலர்களான யோவான்ஸ்நானன். சிமியோன், அன்னாள் போன்றோர் இருந்தனர். (லூக்.2:38 in English) கிறிஸ்துவ சபையின் இந்த காலத்திலும் விசுவாசமுள்ள யூதர்களை தேவன் மீதமானவர்களாய் வைத்திருக்கிறார். அந்தி கிறிஸ்துவின் நாட்களிலே 1,44,000 பேரை தேவன் மீதமானவர்களாய் வைத்திருந்து (வெளி.7) பரலோகிற்கு எடுத்துக்கொள்வார் (வெளி.14). அப்படியே மகா உபத்திரவ காலத்திலும், வெளி.12:17ல் சொல்லப்பட்ட மீதமான இஸ்ரேலரை பாதுகாக்கிறார்.

இப்படியாய் இஸ்ரேல் சபையிலே மீதமானவர்கள் இருக்கும்போது, கிறிஸ்தவ சபைக்குள்ளும் ஆவிக்குரிய மீதமான சபையார் என்ற ஒரு தனிப்பிரிவு இருக்கும் எனப் பலர் நம்புகின்றனர். இப்படிப்பட்டவர்கள் ஒரு முக்கியமான காரியத்தை சிந்திப்பதில்லை. இஸ்ரேல் சபை (Assembly, congregation) என்றாலே இரட்சிக்கப்பட்டவர்கள் என்று பொருளல்ல, மாம்சப் பிரகாரமாய் வந்தயாக்கோபின் சந்ததியார்கள் அவர்கள்; மாம்சப்பிரகாரமான விருத்த சேதனத்தால் ஊர்ஜிதம் பண்ணப்பட்டவர்கள். அவர்களிலே ஒருசில

விசுவாச வீரர்களை (எபி.11) - இரட்சிக்கப்பட்டவர்களை - ஆவிக்குரிய (இருதயத்திலே) விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களை, தேவன் எல்லாக் காலங்களிலும் காத்து இருக்கிறார். அவர்களே மீதமானவர்கள், ஆனால் தேவன் உருவாக்கிய கிறிஸ்தவ சபையே ஆவிக்குரிய சபை தான்; இதிலே இரட்சிக்கப்பட்டவர்கள் மாத்திரமே சேர்க்கப்படுகிறார்கள் (அப்.2:47). எனவே கிறிஸ்தவ சபையின் உறுப்பினர்கள் அனைவருமே இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரியவர்கள்தான்; ஆவிக்குரிய இஸ்ரேலர் தான்; அனைவருமே தேவபிள்ளைகள்தான்; அதிலே மீதமானவர்கள் என்று ஒதுக்க வாய்ப்பில்லை. அவர்களின் தகுதிகளில் வேண்டுமானால் பிதாக்கள், வாலிபர்கள், பிள்ளைகள் என்று இருக்கலாமே ஒழிய (1 யோ.2:13,14) மற்றப்படி அனைவருமே கிறிஸ்தவ சபையார்தான்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே, மீதமான சபை - மீதமானவர்கள் என்று சொல்லி, தேவன் எங்குமே கிறிஸ்தவ சபையில் பிரிவுபடுத்தி வைக்கவில்லை. இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகள் (யோ.3:3,5; ரோ.10:9,10) எல்லாருமே நாளுக்கு நாள் மறுரூபமாகி, தேவனோடு இணைகிற பிள்ளைகள் தான். அல்லேலூயா. மீதமான சபை என்று தேவன் எங்குமே பிரிவுபடுத்தி உருவாக்க வில்லை என்று முதலில் அறிந்து கொள்வோம். ஆவிக்குரியவனாய், இரட்சிக்கப்பட்டவனாய் இருப்பவனே கிறிஸ்தவ சபையான்; 1 தெச.5:23 ன் படி வாழ்ந்து இரகசிய வருகையில் சேர்பவனே கிறிஸ்துவ சபையான். மற்றப்படி வருகையில் கைவிடப்படுபவர் அத்தனைபேரும் கிறிஸ்தவர்களும் அல்ல. அவர்களெல்லாரும் சபையிலே வளரும் களைகள்; பதறுகள். தேவனால் "கிறிஸ்தவர்கள்" என்று பெயர் வைத்து அழைக்கப்படாதவர்கள். மாம்ச இஸ்ரேலர் கூட இவர்களோடு இணைந்தவர்கள் அல்லர். இவர்கள் புற ஜாதியைப் போன்றவர்களே. எனவே மீதமான சபையார்என்றில்லாமல், கிறிஸ்தவ சபையார் அனைவருமே அழைக்கப்பட்ட ஆவிக்குரிய நிலையிலேயே நிலைத்து நிற்போம் (மத்.24:13) இயேசு சீக்கிரம் வருகிறார் ஆமென்.

❖ ❖ ❖

## "அந்நிய பாஷை" குழப்பங்கள்?

"பரிசுத்த ஆவியானவர்" என்ற ஒரு ஆள் தத்துவமான தேவன் இல்லை என்று ஒரு சாராரின் வாதம், "இயேசுதான் ஆவியானவராய் வந்தார்; ஆவியானவர் என்ற ஒரு தனிப்பட்டவர் இல்லை" என்று ஒரு சாராரின் வாதம். இரட்சிக்கப்பட்ட போதே பரிசுத்த ஆவியைப் பெற்றாயிற்று

என்று ஒரு சாராரின் வாதம், "பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷையல்ல; ஆவியின் கனி-நீதியின் கனியாகிய நற்கனிகள் தான்" என்று ஒரு சாராரின் வாதம். "அர்த்தம் சொல்லாமல் பேசுவதும், அசுத்த நிலையில் இருந்துக் கொண்டே அந்நிய பாஷை பேசுவதும் பிசாசின் செயல்" என்று ஒரு சாராரின் வாதம். இப்படியாய் பலதரப்பட்ட வாதங்களை எழுப்பி, கிறிஸ்தவத்துக்குள்ளேயே குழப்பங்களை உருவாக்குகிறான் பிசாசு; இதற்கு துணைபோய், பிசாசின் கையில் யோபு இருந்தது போல (யோபு.1:12; 42:10) தானும் இருந்து, யோபு அலப்பியது போலவே (யோபு.42:3) அலப்ப ஆரம்பிக்கிறான் நவீன கிறிஸ்தவன். வேத ஞானம் இல்லாமல் - வசன தியானமும் வெளிப்பாடும் இல்லாமல் - சுயஞானத்தை நம்பி பாரம் பரியத்தைச் சார்ந்து கண்டபடி பேசுகிறான்; கவிதையும் எழுதுகிறான். மணக்கண் பிரகாசமடைய மறுக்கின்றான் (எபே.1:17).

இப்படிப்பட்டதற்கு; முழுமுதற் காரணம், அந்நியபாஷை பேசுகிற ஆவிக்குரிய சபை என்று சொல்வோரின் கிரியைகளும், உபதேசங்களும் தான்; உபதேசங்களும், கிரியைகளும் ஒத்துப் போகாமல் ஒன்றுக் கொன்று வித்தியாசமாய் இருப்பதால் தான். இந்த அந்நியபாஷைக் குழப்பங்கள் ஒவ்வொன்றாய் தியானிக்கலாம்.

**(1) பரிசுத்த ஆவியை யார் பெறுவர்?** இரட்சிக்கப்படாத உலக மக்களுக்கு தேவன் தந்த ஈவு இயேசுகிறிஸ்து. அதே போல இரட்சிக்கப்பட்டவர்களுக்கு தேவன் தரும் ஈவு பரிசுத்த ஆவியானவர். எலியேசர், ரெபேக்காளை, ஈசாக்குக்கு வழி நடத்தியது போல, ஆவியானவர் உலகத்தாரை இரட்சிப்புக்குள் - கிறிஸ்துவுக்குள் - நடத்துகிறார். இதுதான் ஜலமாகிய வார்த்தையைக் கொண்டு, ஆவியானவரால் மறுபடியும் பிறக்க வைக்கிற அனுபவம் (யோ.3:3,5; ரோ.10:9,10; 1 பேது.1:23); இது தான் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் (கலா.3:27; 1 கொரி.12:13; ரோ.6). இந்த அனுபவம் தான் கொர்நேலியு வீட்டிலே பேசிய பேதுருவின் வார்த்தைகளால், அந்த வீட்டாருக்கு ஏற்பட்டது. அவர்கள் ஆவியான வரைப் பெற்றார்கள் (அப்.10:34-48). பேதுருவோடு சேர்ந்த 120 பேரும் இரட்சிப்பின் அனுபவத்தோடுதான், பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள் (யோ.14:17) அப்.2:38; யோ.7:37-39 வசனங்கள் சொல்வதும் இது தான். தமஸ்குவுக்கு போகும் வழியிலேயே இரட்சிக்கப்பட்டு, அனனியாவால் சகோதரர் என்று அழைக்கப்படுமளவுக்கு விசுவாசியான பவுல், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்படிக்கு அனனியா வீட்டிற்கு வந்ததை நினைவு கூருங்கள் (அப்.9:17).

**(2) பரிசுத்த ஆவியைப் பெறுவது எப்போது?** இரட்சிக்கப்படும் போதே, விசுவாசியாய் மாறும் போதே பரிசுத்த ஆவியைப் பெறுகின்றோம் என்று எபே.1:13ஐ வைத்து பலர் தவறாய் எழுதுகிறார்கள்; போதிக்கிறார்கள். மேலே உள்ளதை மறுபடியும் வாசித்தால், இரட்சிக்கப்படும் போது ஆவியானவர் நம்மோடு இருக்கிறார். இரட்சிப்புக்கு வழி நடத்துகிறார் - என்றும், அப்போது அல்ல பரிசுத்த ஆவியைப் பெறுவது என்றும் புரியும்.

எபேசிய மக்களைப் பற்றி எழுதும் போது பவுல் இப்படியாய் எழுதுகிறார் (எபே.1:13). இதை ஆங்கிலத்திலும், மூல பாஷையிலும் வாசித்தால் உண்மை புரியும். "In whom ye also trusted after ye heard the word of truth, the gospel of your salvation; in whom also after ye believed ye were sealed with that Holy Sprit of promise" (KJV). இங்கே "at the time of belief" அல்ல (விசுவாசிக்கும் போது அல்ல); "after ye believed" விசுவாசியாய் ஆன பிறகு தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். இது யோ.7:39ல் இயேசு சொன்னபடியே நடந்திருக்கிறது. இதற்கு ஆதாரமாய் அப்.19:1-6 வசனங்களை வாசித்தால், எபேசு மக்களின் சரித்திரப்பூர்வ உண்மையை உணர முடியும். எபேசு மக்கள் விசுவாசிகளான போது, பரிசுத்த ஆவியைப் பெற்றீர்களா என்று பவுல் கேட்ட போது, அவர்கள் பரிசுத்த ஆவி உண்டென்பதை கேள்விப்படவே இல்லை என்கின்றார். இதிலிருந்து நாமறிவது என்ன? எபேசு மக்கள் விசுவாசி களான போது பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்றம், எபே.1:13ன் தமிழ் மொழி பெயர்ப்புதான் தவறு என்றும் அறிகிறோம். பவுல் அவர்களுக்கு மனந்திருந்திய பின் (அப்.2:38) இயேசுவின் நாமந் தரித்து இயேசுவின் நாமத்தினாலே, மத்.28:19ல் சொல்லப்பட்டபடி பிதா - குமாரன் - பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான். அதன்பின், அவர்கள் மேல் கைகளை வைத்தான்; அப்போது தான் அவர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். **ஆக, இரட்சிக்கப்படும் போதே - விசுவாசியான போதே - பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டேன் என்று எழுதுவது, பேசுவது எல்லாமே, பிசாசுக்கடுத்த காரியமாகும்.**

**(3) பரிசுத்த ஆவியானவரின் மூன்று அனுபவங்கள் என்ன?** நம்மை இரட்சிப்புக்குள் நடத்தி, நம்மோடு இருக்கும் பரிசுத்த ஆவியானவர் தரும் அனுபவம் தான் **முதலாவது அனுபவம்.** "Holy Sprit is with us", நம்மோடு இருந்தவர் நமக்குள் வந்து தங்குகிற அனுபவம் தான் Holy Spirity is in us - **2வது அனுபவம்.** இந்த அனுபவத்தைத்தான் பரிசுத்த ஆவியைப் பெறுகின்ற அனுபவம் என்று நாம் சொல்லுகின்றோம். பரிசுத்த

ஆவியானவரால் நிரப்பப்படுதல் - பரிசுத்த ஆவியானவர் நம் மேல் இருத்தல் - (Filled with Holy Sprit) என்ற அனுபவம் தான் **3வது அனுபவம்** Holy spirity is upon us இந்த அனுபவம் இயேசுவுக்கு, மரியாளுக்கு, எலிசபெத்துக்கு தாவீதுக்கு, சவுலுக்கு இருந்தது. (லூக்.1:14, 35; ஏசா.61:1-3) பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். அவர்களிடம் முதலாம் அனுபவமும் 3ம் அனுபவமும் இருந்தன. (3ம் அனுபவம் உள்ளவர்கள் மூலம் அதிசயங்களும், ஆச்சரியங்களும் நடக்கும்). 2ம் அனுபவம் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு மட்டுமே கிடைத்ததாகும். 2வது அனுபவம் பெற முதலாம் அனுபவம் கண்டிப்பாய் தேவை. ஒரு குறிப்பிட்ட தேவகாரியங்களுக்குத்தான் இந்த 3வது அனுபவம். அந்த காரியம் முடிந்தபின், அந்த அனுபவமும் முடிந்து விடும். எனவே தான் அடிக்கடி தேவ ஆவியால் நிரப்பப்பட்டு, அவர் நம் மேல் இருந்து ஆட்கொள்ளும் அனுபவம் தேவை என கிறிஸ்தவன் விரும்புகிறான். இதைத்தான் "அபிஷேகம்" என்று சொல்கின்றோம். 2வது மற்றும் 3வது அனுபவம் தான் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியாலும் ஞானஸ்நானம் (மத். 3:11). 2வது மற்றும் 3வது அனுபவங்கள் நிறைந்து காணப்பட்டதுதான் அப்.2ம் அதிகார நிகழ்ச்சி (See அப்.1:8; யோ 14:16,17 - all in English).

**(4) எப்போது நீ தேவனின் ஆலயம்?** நம்மோடு கூட இருந்து நம்மை இரட்சிப்புக்குள் வழிநடத்திய ஆவியான வரை நாம் பெற்றுக் கொள்கிற அனுபவம் தான், அவர் நமக்குள் வந்து வாசமாயிருக்கும் அனுபவம். அப்போதுதான் நமது சரீரம். தேவனாலே பெற்றும் நம்மில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய ஆலயமாய் மாறுகிறது. (1 கொரி.6:19). அப்போது தான் 1 யோ. 4:4 நூற்றுக்கு நூறு நம்மில் பலிக்கும். இப்படிப்பட்ட ஆலயங்களெல்லாம் ஒன்றாய்ச் சேரும் போது அது பேராலயம்; தேவாலயம்; சபை (1 கொரி. 3:16). மற்றப்படி கற்களால் கட்டப்படுவது ஆலயமல்ல. நமக்குள் வந்து விட்ட ஆவியானவர், நாம் என்ன குற்றங்கள், அநீதிகள், அக்கிரமங்கள், அநியாயங்கள், பாவங்கள் செய்தாலும் நம்மை விட்டு விலக மாட்டார். நமக்குள்ளே இருந்து துக்கப்படுவார் (எபே.4:30). No Divorce at all. **ஆவியானவரைப் பெறுகின்ற இந்த அனுபவத்தினால் நடக்கும் முழுமுதற் காரியம்:** "சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார்; புதிதாய் ஒன்றும் போதிக்காமல், இயேசுவின் வார்த்தைகளையே விளக்குவார்" (யோ.16:13, 14). இயேசுவின் இரகசிய வருகை மட்டும் நமக்குள்ளிலிருந்து வழிநடத்துவார். இது புதிய எற்பாட்டு விசுவாசிகளுக்கு மட்டுமே கிடைத்துள்ள பாக்கியம்; இந்த ஆவியானவர் அப்.2ம் அதிகாரத்தில் பூமிக்கு வந்து நிரந்தரமாய் பூமியிலேயே இருக்கிறார். அவரைப் பெற்றுக்

கொள்ள வாஞ்சை கொண்ட விசுவாசிகளுக்குள் வாழ்கிறார். மற்றப்படி யோ.16:8,9ன் படி உலகத்தாருக்கு "இயேசுவை விசுவாசிக்காததுதான் பாவம்" என்று உணர்த்தி இரட்சிப்புக்குள் நடத்தி, இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுடன் உலாவுகிறார். காதலியாய் இருப்பவள் மனைவியாய் மாறுவது எப்படி ஒரு பெரிய அனுபவமோ, அதற்கும் மேலாக, விசுவாசியோடு இருப்பவர், விசுவாசிக்குள் வருவது பெரிய சிலாக்கியமல்லவா, அல்லேலூயா!

**(5) பரிசுத்த ஆவியைப் பெற்று நமக்குள் தங்க வைத்ததற்கு ஏதாவது அடையாளம் உண்டா?** பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கிற 4 நிகழ்ச்கிளை அப். நடபடிகளில் பார்க்கலாம். (1) முதன் முதலில் ஆவியானவர் பூமிக்கு வந்து இயேசுவின் வருகை வரை நிலைத்திருப்பது, பெந்தகொஸ்தே நாளில் நடந்தது. அப்.(2) (பழைய ஏற்பாட்டிலெல்லாம் வருவார்; போவார். நிரந்தரமாய் இருபபதில்லை). அப்போது 120 பேர் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டனர். அங்கே அவர்களுக்கு 2ம் அனுபவமும், 3வது அனுபவமும் கிடைத்தன. ஆபிரகாமின் சந்ததியாகிய மாம்ச சந்ததியாகிய இஸ்ரேலருக்கான பிதாவின் வாக்குத் தத்தம் (யோவேல் 2:28) இயேசு கிறிஸ்துவின் மூலமாய் புதிய ஏற்பாட்டு மக்களுக்கு அன்று தான் கிடைக்க ஆரம்பித்தது (அப்.2:39,33 கலா.3:7,9,11). இந்த வாக்குத்தத்தம் பூமியிலுள்ள அனைத்து தேவ பிள்ளைகளுக்கும் உண்டு. **விசுவாசமுள்ளவன் பெற்றுக் கொள்கிறான்; விசுவாசமில்லாதவன் விதண்டா வாதம் பண்ணுகிறான்.** அப்.2ல் 120 பேர் பரிசுத்த ஆவியைப் பெறுகிறதை மக்கள் கண்டார்கள். கேட்டார்கள் (அப்.2:33). ஆவியானவர் முதன் முதல் வானிலிருந்து இறங்கி வருவதை கண்டார்கள் (அப்.2:2,3); 120 பேரும் பெற்றுக் கொண்டதை வெவ்வேறு பாஷைகளிலே பேசியதால் கண்டார்கள் (அப்.2:4). ஆக ஆவியானவரைப் பெறும்போது அந்நிய பாஷைகளில் பேசப்பட்டது என அறிகிறோம். (2) கொர்நேலியு வீட்டிலே பரிசுத்த ஆவியானவரைப் பெறும் போதும் பல பாஷைகளைப் பேசினார்கள் (அப்.10:44-46) (3) எபேசு மக்களும் பரிசுத்த ஆவியைப் பெறும்போது அந்நிய பாஷை பேசினார்கள் (அப்.19:6) (4) ஞானஸ்நானம் பெற்றிருந்த சமாரியர் பரிசுத்த ஆவியானவரைப் பெறவில்லை என்று பேதுரு கண்டாராம் (அப்.8:15) எப்படி? அவர்கள் மேல் பேதுருவும், யோவானும் கைகளை வைக்கையில், பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள். இதை இரட்சிக்கப்பட்ட மாயவித்தைக்காரன் சீமோன் கண்டான். நிச்சயமாய் பெந்தகொஸ்தே நாளில் நடந்தது போல அவர்களும் அந்நிய பாஷை பேசியிருக்க வேண்டும். ஆமென்.

**(6) அந்நிய பாஷை ஒருவருக்கும் புரியாதா?** பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு - பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்றதற்கு - தேவனுடைய

ஆலயமாக மாறினதற்கு - அடையாளம் அந்நியபாஷை என்று பார்த்தோம். இந்த அந்நிய பாஷை எல்லாருக்கும் புரியுமா? புரியாவிட்டால் இந்த பாஷை எதற்கு? இது சரியான கேள்வி. அப்.8ல் சமாரியர் பரிசுத்த ஆவியைப் பெறவில்லை என்று பேதுரு எப்படிக் கண்டான்? அடையாளமாகிய அநநியபாஷை அவர்களிடமிருந்து வெளிப்படாதது தானே. ஆக பரிசுத்த ஆவி பெற்றவன், தான் பெற்றிருக்கிறேன் என்பதை அந்நியபாஷை மூலம் தான் வெளிப்படுத்துகிறான். எனவே இந்த பாஷை தேவை தான். இவன் இன்ன ஸ்கூலில் படிக்கிறான். இன்ன கம்பெனியைச் சார்ந்தவன்; இவர் போலீஸ், பைலட், இராணுவ வீரர் என்று அறிவதற்கு யூனிபார்ம் இருப்பதுபோல, அந்நிய பாஷை என்பது பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளமாகும். பவுலும் கூட 1 கொரி. அடையாளமாகும். பவுலும் கூட 1 கொரி 14:18ன் படி அதிக பாஷைகளைப் பேசி பரிசுத்த ஆவியைப் பெற்றான் என்று சாட்சி கூறுகிறான். இப்படி அடையளமாகிய அந்நிய பாஷையில் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறான். எனவே பேசுகிறவன் அறியாத மனுஷரிடத்தில் பேசாமல். தேவனிடம் இரகசியங்களைப் பேசுகிறான். (1 கொரி.14:2). இரகசியம் பேசுபவனுக்கு அந்நிய பாஷை வரிக்கு வரி புரியாவிட்டாலும் "தான் என்ன பேசுகிறேன்; எதற்காக பேசுகிறேன்; தன் கருத்தை தேவன் அங்கீகரிக்கிறாரா?" என்றெல்லாம் நிச்சயம் உணர்ந்து தான் பேசுவான். (1 கொரி.14:28) இப்படி உணராமல் ஆவிக்குரிய சபையார் பலர் பேசுவதால் தான், அந்நியபாஷைக் குழப்பங்கள் வருகின்றன. அந்நிய நுகங்களெல்லாம் அஞ்ஞானக் கவிதைகளை - கருத்துக்களை - அநாகரிகமாக எழுதுகின்றன. பேசுகின்றன.

மேலும் ஆவியிலே அந்நிய பாஷையில் பேசும் போது மற்றவன் பக்திவிருத்தி அடைய மாட்டான். தனக்குத் தானே பக்தி விருத்தி உண்டாக பேசுகிறான் (1 கொரி.14:4). தனக்குத் தானே பக்திவிருத்தி உண்டாக வேண்டுமென்றால் - தேவனோடு, ஒருவனுக்கும் தெரியாமல், பிசாசுக்கும் கூட தெரியாமல் இரகசியங்களை பேச வேண்டுமென்றால், இந்த அடையாளமாகிய அந்நிய பாஷை தேவை தான். **இதை சுவைத்துப் பார்ப்போருக்குத் தான் புரியுமே ஒழிய, சும்மா பாரம்பரிய கிறிஸ்தவர்களுக்கு, வசனத்தை தியானிக்காதவர்களுக்கு, தேவனைப் பற்றிய அறிவு இல்லாதவர்களுக்கு தங்களின் அறியாமையை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவர்களுக்கு இது புரியாது.** 1 கொரி.13:1 ன்படி தூதர் பாஷைகளைப் பேசினாலும், ஒரு மனிதனுக்கும் புரியாது. ஆவியானவரைப் பெற்று விட்டோம் என்பதற்கான அடையாளமாகிய அந்நிய பாஷையை இயேசு தருகிறார் (மத்.3:11; யோ.14: ) இதை அலட்சியம் பண்ணுகிறவன் இயேசுவையே அலட்சியம் பண்ணுகிறான்.

**(7) மற்றவருக்குப் புரியாத அந்நிய பாஷையை சபையில் ஏன் பேச வேண்டும்?** இதை அறியும் முன்னே, அடையாளமாகிய அந்நியபாஷை, வரமாகிய அந்நிய பாஷை என்று இரண்டு விதமான பாஷைகள் உண்டு என அறிய வேண்டும். 1 கொரி.12:10ல் "அந்நிய பாஷையும், பாஷையை வியாக்கியானம் பண்ணுதலும்" வரங்களாக சொல்லப்பட்டுள்ளது. வேதத்தின் படி வரங்களெல்லாம் ஆத்ம ஆதாயம் செய்யவே தேவன் தருகிறார். அதனால் தான் வரமாகிய அந்நிய பாஷை அவிசுவாசிகளுக்காகவே கொடுக்கப்படுகிறது (1 கொரி.14:22) இந்த வராகிய அந்நியபாஷை பெந்தகொஸ்தே நாளிலே கொடுக்கப்பட்டதால் 3000 பேர் இரட்சிக்கப்பட்டனர். வரமாகிய அந்நிய பாஷை என்பது உலகத்திலுள்ள பாஷை தான். 1 கொரி. 12ல் சொல்லப்பட்ட வரங்கள் எல்லாமே எல்லாருக்கும் கொடுக்கப்படுவது இல்லை. எனவே தான் இந்த வரமாகிய அந்நியபாஷை எல்லோருக்கும் இல்லை. வரங்களைப் பற்றியும் வரங்களோடு கூடிய ஊழியங்களைப் பற்றியும் பவுல் எழுதும் போது எல்லாரும் அப்போஸ்தலர்களா என்று கேட்கிறார். இல்லை என்பதே பதில். எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எல்லாரும் குணமாக்கும் வரங்களை உடையவர்களா? இல்லை என்பதே பதில். அப்படியே, எல்லாரும் அந்நிய பாஷைகளைப் பேசுகிறார்களா? இல்லை. எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? இல்லை (1 கொரி.12:29, 30) ஆக, இங்கே சொல்லப்படும் அந்நிய பாஷையும், வியாக்கியானமும், "**வரங்கள்**" என்று அறிய வேண்டும். இதற்கு உறுதிப்படுத்தித்தான். "இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்" என்று பவுல் முடிக்கிறான் (1 கொரி. 12:31). இந்த வரமாகிய அந்நிய பாஷையைப் பற்றி விளக்கம் தர 1 கொரி. 14ல் பவுல் சொல்ல விழைவதற்குமுன், அடையாளமாகிய அந்நியபாஷையை 2-4 வசனங்களில் விளக்கிவிட்டு, வரமாகிய அந்நிய பாஷையைப் பற்றியும், அது எப்படி சபைகளில் தவறுதலாக கையாளப்படுகின்றது என்பது பற்றியும் 1 கொரி. 14ல் விளக்குகிறான். முடிவில், சபைக்கு தீர்க்க தரிசன வரம் தேவை என்றும், அந்நியபாஷை பேசுவதை தடுக்காதீர் என்றும் கூறுகிறான் (1 கொரி. 14:39; 23, 22, 24)

சபைக்குள்ளே கிரியை செய்யும் வரமாகிய அந்நிய பாஷைக்கு வியாக்கியானம் இல்லாததாலும், வியாக்கியானம் இல்லாதபடி பேசப்படும் அடையாளமாகிய அந்நிய பாஷையும் சபையில் இருந்ததாலும், அந்நிய பாஷைக்குழப்பம் ஆதி அப்போஸ்தலகால கொரிந்து சபையிலேயே இருந்திருக்கிறது. **இதிலிருந்து விடுதலை பெற ஒரே வழி:** "அந்நிய

பாஷையில் சபையாரெல்லாம் ஒரு மித்துப் பேசக்கூடாது; 2,3 பேர் ஒவ்வொருவராய்ப் பேச வேண்டும். அதற்கு அர்த்தம் சொல்ல வேண்டும். அர்த்தம் சொல்கிற வரமுள்ளவன் இல்லாவிட்டால், அது எந்த அந்நிய பாஷையாயிருந்தாலும் சபையிலே பேசக்கூடாது" (1 கொரி. 14:27, 28). **இந்த பவுலின் அறிவுரைகளை தற்கால ஆவிக்குரிய சபைகளில் கைக் கொண்டால் குழப்பங்கள் தீர்ந்து விடும்.** பாரம்பரியமாய் சபையிலே ஒட்டு மொத்தமாய் அர்த்தமில்லாமல் அந்நிய பாஷையைப் பேசிப் பழக்கப்பட்ட கிறிஸ்துவர்களுக்கு, பவுல் சொன்ன வழியை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. பவுல் சொன்னபடி பேசவைக்க ஆரம்பித்தால் பெரும்பாலான சபைகளில் அந்நியபாஷைகள் பேசுவதே இருக்காது. இதனால் அந்த சபையைவிட்டு வசன வெளிப்பாடு இல்லாத விசுவாசிகள் வெளியேற வாய்ப்புண்டு. எனவே **இப்படிப்பட்ட பாரம்பரிய விசுவாசிகளை தக்க வைத்துக் கொள்ள, சபைகளிலே பவுல் கூறியதற்கு மாறாக அந்நிய பாஷை செயல்பாடுகள் இருக்கின்றன.**

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! சத்திய வசனம் தான் சாட்சியாய் மாற வேண்டுமே ஒழிய, சாட்சிகளை வைத்து, காண்பவைகளை வைத்து சத்தியத்தை எடை போடாதீர். உலகமெங்கும் பொதுமொழி இருப்பதாலும், பல மொழிகளை மனிதன் அறிந்திருப்பதாலும், வரமாகிய அந்நியபாஷை தற்காலத்தில் அதிகம் தேவைப்படாது. எனவே தான் பெரும்பாலோருக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுகிறவரும் அருளப்படவில்லை. ஆனால், பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கான அடையாளமாகிய அந்நிய பாஷை கண்டிப்பாய் தேவை. அது இருந்தால் தானே மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாய் ஆவியானவரை பெற்றிருக்கிறான் என்று சொல்லி தைரியமாய் சகல சத்தியத்திற்குள்ளும் நடந்து, பிசாசை எதிர்த்து வெற்றிவாகை இம்மையில் சூட முடியும். மறுமையில் நித்திய ஜீவனைப் பெற முடியும்.

இல்லாவிட்டால், ஆரம்பத்தில் அடையாளமாகிய அந்நியபாஷை பெற்று அனுபவித்துவிட்டு, பிற்பாடு பெந்தகொஸ்தேயின் அநநியபாஷையே தவறானது என்று விளக்கம் சொல்லி ஆராயும் ஜாமக்காரன் ஆசிரியர் புஷ்பராஜ் போல மாறி விடுவோம். (நானும் கூட அந்நிய பாஷை தேவையே என்பதற்கான விளக்கங்களை அவருக்கு அனுப்பியிருக்கிறேன்) தவளைகளின் சத்தம் இது என்று சொல்லும் செவசன்த்டே சபையாரைப் போலாகி விடுவோம். சென்ற மாதம் இதழில் 12ம் பக்கம் நான் எழுதிய ஒரு வரிக்காக என்னை - என் சொந்தக்காரியங்களை - திட்டித் தீர்த்த பாடகர்

வியாசர் லாரன்ஸ் போலாகி விடுவோம். **நான் யாருடைய சொந்தக் காரியங்களையும் குறை சொன்ன சரித்திரமே இல்லை. ஆவிக்குரிய கிறிஸ்தவ பத்திரிக்கை ஆசிரியனான நான், சத்தியத்திற்காகத்தான் வாழ்கிறேனே அல்லாமல்.... கேவலம் அழிந்து போகிற உலகப் பொருளுக்காக அல்ல. என் உயிரினும் மேலான சத்திய வார்த்தைகளை யார் குறைத்துப் பேசினாலும் அங்கே உயிரைப் பணயம் வைத்து முதற் குரல் - எதிர்ப்புக் குரல் கொடுத்து, கடிந்து புத்தி சொல்பவன் நான் ( ) அந்நிய பாஷை** பற்றியும், அதைப் பேசும் ஆவிக்குரிய மக்களைப் பற்றியும் தரக்குறைவாக ஒருவர் பகிரங்கமாய் எழுதலாமாம்... நான் மட்டும் அப்படி அவர் எழுதுவதோ பேசுவதோ தவறு என்று வசன ஆதாரத்தோடு கூறுவது மகாதவறாம்... என்னே நியாயம்! என்னே ஞானம்!

வரமாகிய அந்நியபாஷையோ, மற்ற வரங்களோ யாரையும் பரலோகம் கொண்டு போகாது; கனியுள்ள வாழ்வுதான் பரலோகம் கொண்டு சேர்க்கும் (மத்.7) கனியுள்ள வாழ்வு தேவ வசனத்தால் தான் வருகிறது (யோ. 15:3; 17:7; நீதி.6:23) தேவ வசனம் ஆவியானவரால் கிடைக்கிறது (யோ.16:13; 14:26) எனவே ஆவியனாவரை ஒவ்வொரு கிறிஸ்தவனும் பெற்றுக் கொண்டாக வேண்டும். அவர் நமக்குள்ளிருந்து வழி காட்ட வேண்டும். அவரைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதற்கு அடையாம் தான் அடையாளமாகிய அந்நியபாஷை. இது அனைவருக்கும் தேவை. இந்த அடையாளமாகிய அந்நிய பாஷையைப் பேசுவதினால் நமக்குள்ளிருக்கும் ஆவியானவரைத் துக்கப்படுத்தாமல் வசனப்படி நடக்க வேண்டுமென்று உத்தமாய் வாழ்பவர்களும் உண்டு. அந்நிய பாஷை பேசிக்கொண்டே ஆவியான வரைத் துக்கப்படுத்துபவர்களும் உண்டு. இரண்டாமவர்கள் தான் அதிகம் என்பதால், முதலாவது காரியம் என்றைக்கும் பொய்யாகாது. சாட்சிகளை வைத்து சத்தியத்தை எடை போடாதே!

❖ ❖ ❖

## தேவன் நம்மோடா? நமக்குள்ளா?

1 கொரி.10:4ல், 40 வருடம் வனாந்திரத்திலே இருந்த இஸ்ரவேல் மக்களோடு வார்த்தையாகிய தேவன் கூட இருந்தார்; கூடச்சென்றார் என்று எழுதப்பட்டுள்ளது. 1 யோ.4:4ல் “உலகத்திலிருக்கிறவனிலும் உங்களில் இருக்கிறவர் பெரியவர்” என்று எழுதப்பட்டுள்ளது. ஒன்றில் நம்மோடு இருக்கிறார் என்றும், இன்னொன்றில் நமக்குள் இருக்கிறார் என்றும் உள்ள இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

கிறிஸ்மஸ் பண்டிகையை கோலாகலமாக கொண்டாடி முடித்திருக்கும் பெரும்பாலான பண்டிகைக் கிறிஸ்தவர்கள் மத்தியிலும் இந்த செய்தி ஒரு பெரிய எழுப்புதலை உருவாக்கும் என்று கர்த்தருக்குள் நம்புகின்றேன். ஆதி முதல் கர்த்தர் ஆதாமோடு இருந்தார்; ஆபிரகாமோடு இருந்தார். மோசேயோடு, தாவீதோடு இருந்தார். அவர்களோடு பேசினார்; சொன்னபடியே செய்து காட்டினார். ஆனாலும் அந்த தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை (1 தீமோ.6:16; யோ. 5:37). மோசே கூட, அவரது பின் புற மகிமையை மட்டுமே கண்டான்; பவுல், அவரது மகிமையைக் கண்ட மாத்திரத்திலேரயே அவனதுகண் குருடாய்ப் போனது (அப்.22:11). 40 வருடமாய் இஸ்ரேலரோடு கூடச் சென்றவர்கள் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். நாம் ஆவியானவரைக் கொண்டு, கிறிஸ்துவுக்குள்ளாயும், தண்ணீருக் குள்ளும் ஞானஸ்நானம் பெறுவது போல (யோ. 3:3,5; கலா.3:27; ரோ.4; 1 பேது.2:21) அவர்கள் ஒரே ஞான போஜனத்தைப் புசித்தார்கள்; நாம் வசனத்தால் மறுபடியும் பிறந்து (1 பேது.1:23) வசனத்தையே புசித்துக் கொண்டிருப்பது போல. இப்படியாய் அவர்கள் இருந்தும், தேவனிடத்திலே பிரியமில்லாதவர்களாய் இருந்து அழிந்து போனார்கள்.

**கூடவே இருந்த தேவ பிரசன்னத்தை உணர்ந்த பிதாக்கள் அப்படி என்ன தான் தேவனுக்கு விரோதமாய் குற்றம் செய்தார்கள்?** (1) பொல்லாங்கானவைகளை இச்சித்தார்கள் (2) விக்ரக ஆராதனைக் காரர்களானார்கள். (பொருளாசை, அந்நிய நுகப்பிணைப்பு ) (3) வேசித்தனம் பண்ணினார்கள் (4) கிறிஸ்துவைப் பரிட்சை பார்த்தார்கள் (5) முறுமுறுத்தார்கள். தேவன் அவர்களோடே இருந்தும் இப்படியாய் அக்கிரமங்கள் செய்தார்கள். இன்றைக்கு புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களில் பலரும் இப்படித்தான் இருக்கிறார்கள். இந்த நிலையிலிருந்து விடுதலை உண்டா என்று தேவன் சிந்தித்தார். அதற்கான முடிவைத் தான், ஏசாயா மூலம் தீர்க்கதரிசனமாய் சொல்ல வைத்தார், "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" (ஏசா. 7:13). கூடச் சென்ற கிறிஸ்து, மாம்சத்திலே வெளிப்பட்டு அவர்களை நல்வழிப்படுத்த எண்ணி (1 தீமோ.3:16; பிலி.2:6-7) 2015 ஆண்டுகளுக்கு முன்னே கன்னி மரியாள் வயிற்றில் மனிதனாக வெளிப்பட்டார். அவருக்கு 'இம்மானுவேல்' என்று பேரிட வேண்டும் என்ற ஏசாயாவின் வார்த்தையை யோசேப்பிடம் தேவதூதன் கூறுகின்றான் (மத்.1:23) இமானுவேல் என்றால் "தேவன் நம்மோடு" என்று பொருள். அவர் பிறக்கும் வரை அவர் ஆதிப் பிதாக்களோடே இல்லையா? இருந்தார். ஆனால்

2000 வருஷத்திற்கு முன்போ, நம்மைப் போல மனுஷ ரூபத்தில் வெளிப்பட்டு இஸ்ரேலரோடு சஞ்சரித்தார்.

ரூபம் காட்டாமல் சஞ்சரித்த போதும் வனாந்திரத்தில் பாவங்களை செய்து சாபங்களைப் பெற்றனர். தேவ ரூபத்தை மகிமையை - விட்டு, மனித ரூபத்தை எடுத்து இயேசுவாக வந்த போதும், மகா பெரிய பாவத்தை செய்தனர். மரணத்துக்கு ஏதுவான (1 யோ.5:16) இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்க முடியாத (மத்.12:31) ஆவியானவருக்கு விரோதமான பாவத்தைச் செய்தனர். அதாவது ஆவியானவர் உணர்த்தும் மகா பெரிய பாவமாகிய, இயேசுவை விசுவாசிக்காத பாவத்தை (யோ.16:8,9) செய்தனர். அதனாலேயே அவரை சிலுவையிலே கொன்று போட்டனர். ஆதி முதல் தேவ பிரசன்னம் அவர்களோடு இருந்தும் பிசாசின் பிள்ளைகளாய் இருந்தார்கள்; உலகத்திலே பல காலம் அடிமைகளாகவே ஜீவித்தார்கள். 'இமானு வேல்' - தேவன் நம்மோடு - என்று சொன்னபடியே, மனிதனாய்ப் பிறந்த பின்னும், அவரைக் கொன்றனர். "தேவன் நம்மோடு" என்ற தாற்பரியத்தை அவர்கள் உணராமல், இப்படித்தான் பாவியாயிருப்பார்கள் என்பதால் தானோ என்னவோ அவருக்கு, இமானுவேல் என்று பெயர் சூட்டாமல், இயேசு என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்! எபிரேய மொழி வழக்கில், இந்த இம்மானுவேல் என்ற வார்த்தை ஒரு பெயரை (Title)க் குறிக்காமல், ஏசா.9:6; 1:26 போன்றவற்றில் வரும் பெயர்கள் குணாதிசயங்களையே குறிப்பதாக இருப்பதால் தான், அப்படிப் பெயரிடவில்லை என்று வேத வல்லுநர்கள் வியாக்கியானம் தருகிறார்கள். தேவனாகிய இவர் நம்மோடு இருப்பதால் தான், நம்முடைய பாவங்களை மன்னிக்கிற இரட்சகர் என்ற அர்த்தத்தில் இயேசு என்று பெயரிடப்பட்டது. அல்லேலூயா!

இன்றைக்கு வருடா வருடம் டிசம்பர் 25ல் தேவன் நம்மோடு என்று சொல்லி அவரின் பிறப்பைக் கொண்டாடும் பாரம்பரிய பெயர்க் கிறிஸ்தவர்களும், பழைய ஏற்பாட்டு இஸ்ரேலரைப் போலவே பாவிகளாகவே இருக்கிறார்களோ? மறுபடியும் அவரைச் சிலுவையில் அறைகிறார்களோ? (எபி.6:4-6; 2 பேது.2:20-22) கர்த்தரே அறிவார்! இப்படியெல்லாம் நடக்கும்எ ன்று அறிந்து தான், இயேசு, "நீங்கள் என்னிலும் என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருக்க வேண்டுமென்று பிரசங்கித்தார் (யோ.15:7). நாம் அவருக்குள்ளும், அவரின் வார்த்தை நமக்குள்ளும் இல்லாமல், வெறுமனே "இம்மானுவேல்" - இயேசுநம்மோடு - என்று சூரிய தேவதையின் பண்டிகை நாளில் கிறிஸ்மஸ் கொண்டாடி என்ன பயன்? **புராட்டஸ்டண்டு என்றும்**

**பெந்தகொஸ்தே என்றும் சொல்லிக் கொண்டே, பழைய போப் உருவாக்கின பண்டிகையிலேயே நிலைத்திருப்பது ஏன்?** எப்படி நாம் அவருக்குள்ளும், வார்த்தையாகிய தேவன் நமக்குள்ளும் இருக்க முடியும்என்பதை உலக அறிவுப்படி யோசித்துப் பார்த்தால் ஜீரணிக்கவே முடியாது.

ஆனாலும், **இரண்டு உதாரணங்களைச் சொன்னால் புரியுமென்று நினைக்கிறேன்.** வழக்கத்திலே சொல்வார்கள். "குரங்குப்பிடி; பூனைப்பிடி" என்று, இந்த இரண்டு பிடிகளும் இணைந்தது தான் நாம் அவருக்குள்ளும் அவரின் வார்த்தை நமக்குள்ளும் இருக்கும் நிலை,. குரங்குக் குட்டிகள் தாயை இறுகப்பிடித்துக் கொள்ளும்; தாய்க் குரங்கு மரத்திற்கு மரம் தாவிக் குதித்தாலும், குரங்குக் குட்டி விழவே விழாது. இது ஒருவிதமான பிடி, பூனையோ, தன் குட்டியை தானே வாயில் கௌவிப் பிடித்துக் கொண்டு வீடுவீடாய் ஏறிக் குதிக்கும். பூனை தன் குட்டியை ஒருக்காலும் விடாது. இது ஒருவிதமானபிடி, இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உனக்கு இந்த இரண்டு பிடிகளும் ஆவிக்குரிய ரீதியில் தேவை. தேவனாகிய வார்த்தை - வார்த்தையாகிய இயேசு - நம்மோடு இம்மானுவேலாக இருப்பதல்ல இந்தப் பிடிகள்; நமக்குள் இருப்பதே இந்தப் பிடிகள். நமக்குள் இருக்க வேண்டுமென்றே இயேசுவாகிய வார்த்தை விரும்புகின்றது; தேவன் விரும்புகிறார். ஒரு வாலிப சகோதரனும்சகோதரியும் காதலர்களாக ஒருவரோடொருவர் பழகுவது ஒரு அனுபவம். இது தான் "தேவன் நம்மோடு" அனுபவம்; காதலர்கள் திருமணம் முடித்து, புருஷனும் மனைவியுமாய் இரத்தத்தின் இரத்தமாய், எலும்பில் எலும்பாய், சதையின் சதையாய் இருப்பது தான் ஒருவருக்குள் ஒருவராய் இருக்கிற அனுபவம். இந்த அனுபவம் உள்ளவன்பாட வேண்டிய பாட்டு:- "நான் அவர் ஆலயம்; எனக்குள்ளே இயேசு" என்பதாகும். எப்போது நாம் தேவனுடைய ஆலயமாய் மாறுகிறோம்? 1 கொரி. 6:19ல் சொல்லப்பட்டபடி ஆவியாகிய தேவன் நமக்குள் தங்கியிருக்கும் போது. அவரிருக்கும் போது இயேசுவாகிய வார்த்தையை நம் ஆவியில் அவரே இருக்கச் செய்வார்! அல்லேலூயா!

ஆதியாகமம் முதல் இமானுவேலாய் பிறக்கும் வரை நிழலாய் கூட இருந்தவர், இமானுவேலாய் பிறக்கும் போது நிஜமாய் கூட இருந்தவர், பரிசுத்த ஆவியைப் பெற்ற இயேசுவின் பிள்ளைகளாகிய நமக்குள்ளே தற்போது வாழ்கிறார். இது தான் 1 யோ. 4:4ல் சொன்ன "உலகத்திலிருக்கிறவனிலும் எனனிலிருக்கிறவர் பெரியவர்" என்ற வார்த்தையாகும். ஆக, இந்த நிலை வேண்டும் என்று விரும்பித்தான்

யோ.14:16-17ல் ஆவியானவர் உங்களுக்குள்ளே இருக்க வழி செய்கிறேன் என்று சொல்லி விட்டு போனார் (see in English :- For he (Holy Spirit) dwelleth with you and shall be in you). நமக்குள் இருக்கும் இந்த தேவன் தான் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார் (யோ.16:13); இந்த சத்தியத்தை - வார்த்தையை, வசனத்தை அறிந்தால் தான்; அந்த வசனமே நம்மை சகல கட்டுகளிலிருந்தும் விடுதலையாக்கும் (யோ.7:17; 8:32) பாவ கட்டுகளிலிருந்து வியாதி, வறுமை, அகால மரணம், தோல்வி, சமாதானமின்மை போன்ற கட்டுகளிலிருந்து விடுதலை கிடைக்கும். ஆமென். தேவன் நம்மோடு நிழலாய் இருந்த போதோ, நிஜமாய் நம்மோடு மனுஷ ரூபத்தில் இருந்த போதோ அல்ல; அவர் நமக்குள் இருக்கும் போது தான் நூறு மடங்கு விடுதலை, அல்லேலூயா! அப்போதுதான் இம்மையிலே 100 மடங்கு ஆசீர்வாதம் (மாற்.10:29:30)

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! வீணே "தேவன் நம்மோடு" (இம்மானுவேல்) என்று சொல்லி வருடாவருடம் கிறிஸ்மஸ் கொண்டாடி, இம்மையில் நூறத்தனையாய் ஆசீர்வாதம் பெறாமலும், மற்றவர்கள் முன்னால் சாட்சியாய் வாழாமலும் ஏன் இருக்கிறாய்? "தேவன் நம்மோடு அல்ல; தேவன் நமக்குள்" என்று சொல்லும் புதிய ஏற்பாட்டு யுகம் உன்னில் உதிக்கட்டும். எழும்பி பிரகாசி! ஒளி வந்தது உனக்குள்ளே! (ஏசா.61:1) இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## இயேசு கிறிஸ்து எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்?

இந்தக் கேள்வி கிறிஸ்தவ வட்டாரத்திலேயே கேட்கக்கூடிய கேள்வி. இதற்கு வசன ஆதாரம் உண்டா? நேடையாய் வசனம் ஒன்றுமே இல்லையே பின் எப்படி, இயேசு 33 ½ ஆண்டுகள் வாழ்ந்தார் என்று கிறிஸ்தவர்கள் சொல்வதை ஒத்துக் கொள்வது? இதுவும் நல்ல கேள்விதான். ஜெபமே ஜெயம் என்று எங்காவது வசனம் உண்டா? இல்லையே! முழுக்கு ஞானஸ்நானம் என்று எங்காவது வசனம் உண்டா? இல்லையே! இரகசிய வருகை என்று எங்காவது வசனம் உண்டா? இல்லையே! அப்படியானால் இந்த சத்தியங்களெல்லாம் பொய்யா? அல்லவே! வேதத்தின் பல வசனங்களை சேர்த்து தியானிக்கும் போது, இவைகளை நாம் விசுவாசிக்க வேண்டி வருகிறதல்லவா! அப்படியே, இயேசு கிறிஸ்து எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதற்கான வேத வசனங்களை ஆவியானவரின் ஒத்தாசை யோடு தியானித்தால், தேவன் நிச்சயம் வெளிப்படுத்துவார்.

இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெறும் போது வயது 30 என்று அறிகிறோம் (லூக் 3:23) அவர் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியைப் பெற்று 40 நாள் உபவாசமிருந்து. வல்லமையைப் பெற்றுக் கொண்டு தான் ஊழியத்திற்குப் போனார் (அப்.10:38) ஊழியம் எத்தனை ஆண்டுகள் செய்தார் என்பதற்குத் தான் வேத வசனங்களை தியானித்து ஆதாரங்களைத் தேடுகிறோம். ஒருசில ஆதாரங்களைப் பார்க்கலாம்.

(1) லூக் 13:6-9 வசனங்களில் இயேசு சொல்லும் உவமையை தியானியுங்கள். மூன்று வருஷமாய் அத்திமரத்தில் கனியைத் தேடுகிறேன், கிடைக்கவில்லை, வெட்டிப் போடலாம் என்று உரிமையாளர் சொல்கிறான். இந்த வருஷமும் இருக்கட்டும் என்று வேலைக்காரன் பதில் கொடுத்ததால், நாலாம் வருஷம் வரை உரிமையாளர் கனிக்காக கவனித்துக் கொண்டே இருக்கிறான். இந்த உவமைப்படி பார்த்தால், கனிகொடாத இஸ்ரேலரோடு இயேசு கிட்டதத்த $3^1/_2$ ஆண்டுகள் எருப்போட்டு, நீர்ப்பாய்ச்சி, ஊழியம் செய்திருப்பார் என்று DAKES பைபிள் நிதானிக்கிறது. (This illustrates the period of the Lord's ministry of 3 years, upto now, so this year would indicate the 4th year) (See லேவி.19:23,24)

(2) E.L.S. Concordanceல், கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டுள்ளது:- இயேசு முதலாம் வருஷம் யூதேயாவிலும், 2ம் வருஷம் கலிலேயாவிலும் கடலோரத்திலும் ஊழியம் செய்தார். மூன்றாம் வருஷம் அவ்விடம் விட்டுப் போய் யூதேயா மற்றும் பெரிய நாடுகளில் உபதேசித்தார். கடைசியாய், 4ம் வருஷம் பஸ்கா பண்டிகையன்று சிலுவையில் மரித்தார். இந்த கருத்தின் படி இயேசு கிறிஸ்து $3^1/_2$ ஆண்டுகள் ஊழியம் செய்தார் என்று நிதானிக்கலாம். இந்த E.L.S. Concordanceன் கருத்தை, 4 சுவிசேஷங்களிலும் உள்ள இயேசு கிறிஸ்துவின் ஊழிய வரலாற்றை கவனமாய்ப் படிக்கும்போது, அவரின் ஊழியம் $3^1/_2$ ஆண்டுகள்தான் என்று அறியலாம்.

(3) சில கள்ள உபதேச சபைகள் தானி.9:27ஐ வைத்துக்கொண்டு, 31/2 வருஷம் இயேசு ஊழியம் செய்தார் என்று பிரசங்கிக்கின்றன. தானி.9:27ல் போடப்பட்ட பிரபு தானி.9:25ல் உள்ள பிரபுவாகிய மேசியா அல்ல; கி.பி.70ல் எருசலேமை அழித்துப் போட்டார்களே ரோமர்கள், அவர்களின் வரப்போகிற பிரபுவாகிய அந்திகிறிஸ்துவாகும் (தானி.9:26). அதாவது வெளி.13ல் காயப்பட்ட - வீழ்ந்துபோன - 4வது ரோம சாம்ராஜ்யம், மறுபடியும் 10 ராஜாக்களை கொண்டு எழும்பும் மிருகமும் (தானி.7:2) அந்த 10 கொம்பிலிருந்து ஒருசின்னக் கொம்பாகிய பாழக்குகிற அருவருப்பாகிய அந்திகிறிஸ்துவும் வெளிப்படப்போகிறதே அதைப்பற்றிய தீர்க்கதரிசனம் தான்

தானி.9:27. அந்த மிருகம் தான் 7 வருஷத்திற்கு இஸ்ரேலருக்கு உடன்படிக்கையை உறுதிப்படுத்துவான். ஆனாலும் $3^1/_2$ வருஷத்திலேயே பலிகளையும் காணிக்கைகளையும் ஒழித்து, தன்னைத்தானே தேவனென்று வணங்கச் சொல்லுவான். (2 தெச.2:4) அப்படியானால் தானி.9:27ல் அவர் என்று தமிழில் எழுதப்பட்டுள்ளதே ஏன் என்று கேட்கலாம். அது மொழி பெயர்ப்புத் தவறு. மூலபாஷையிலும், King James versionலும், HE என்று Capital Letterல் போடாமல், he என்று சிறிய எழுத்துக்களில் போடப்பட்டுள்ளதால், இது வரப் போகிற அந்தி கிறிஸ்துவைத்தான் குறிக்கிறது எனலாம். மேலும் இயேசு, 7 வருஷம் தன் உடன்படிக்கையை உறுதிப்படுத்த வில்லை. வியாழனன்று இராப்போஜனத்தில் புது உடன்படிக்கை என்று சொன்னார் (மத்.26:28) வெள்ளிமாலை தன் இரத்தம் சிந்தி அதை உறுதிப்படுத்தி நிறைவேற்றிக் காட்டினார். ஆமென். இயேசு பலியையும் காணிக்கைளையும் ஒழிக்கவில்லை. நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தார் (மத். 5:17; ரோ 10:4). இயேசுவின் பலியோடு அது தானாய் அழிந்துபோயிற்று (எபி.8:13; எபே.4:14-16; ரோ.7:4). எனவே தானி.9:27ஐ வைத்து, இயேசு $3^1/_2$ ஆண்டுகள் ஊழியம் செய்தார் என்று மெய்யாகவே சொல்ல முடியாது. (4) கி.பி. 3ம் நூற்றாண்டில் வாழ்ந்த இயேசு பியஸ் என்ற வேத வல்லுநர், “அற்புதங்களைச் செய்து, இயேசு பிரசங்கித்த காலம் $3^1/_2$ ஆண்டுகள் ஆகும். சுவிசேஷகனாகிய யோவான் எழுதிய புத்தகத்தை கருத்தாய் வாசிக்கிறவர்கள் இதைப் புரிந்து கொள்ளலாம்” என்று கூறுகிறார். (Quoted in A New Analysis of Chronology Vol. I page 94 by Dr. William Hales) இதை வைத்துப் பார்த்தால், இயேசு ஊழியம் செய்ய ஆரம்பித்த பின் 4 முறை பஸ்காவிற்காய் எருசலேமுக்கு சென்றிருக்கிறார் என்றும், 4வது பஸ்கா பண்டிகையின் போதுதான் அவர் சிலுவையில் அறையப்பட்டார் என்றும் உறுதியாகிறது (யோ.2:13; 6:4; 11:55). கி.பி.27ல் இலையுதிர் காலத்தில் இயேசு ஞானஸ்நானம் பெற்றார். (அப்போது வயது 30) அதற்குப் பின் அவர் ஆசரித்த முதல் பஸ்காவனாது கி.பி.28ல் வசந்த காலத்தில் வந்திருக்கும்; 2வது பஸ்கா கி.பி. 29லும் 3வது பஸ்கா கி.பி. 30லும், 4வது பஸ்கா கி.பி31 லும் வந்திருக்கும். இந்தக் கண்கின்படி பார்க்கும் போது $3^1/_2$ ஆண்டு கால ஊழியத்திற்குப் பின் இயேசு மரித்தாக திட்டமும் தெளிவுமாக தெரிகிறது. அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இயேசுவுக்கு எதிரான அந்திகிறிஸ்துவின் தீர்க்கத் தரிசன வசனங்களை ஆண்டவருக்குப் பொருத்தி மோசம் போகாதிருங்கள்! வசனம் தரும் விளக்கத்தால் நிறைந்திருங்கள்!

இயேசு வாழ்ந்தகாலம் $33^1/_2$ ஆண்டுகள் தான் என்பதில் உறுதியாய் இருங்கள்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!!

❖ ❖ ❖

## காயீனுக்கு மனைவி எங்கிருந்து வந்தாள்?

தேவபிள்ளையே இந்த கேள்விக்கான பதிலை பழைய முழக்கங்களில் கேள்வி நேரம் பகுதியில் சுருக்கமாய் விளக்கியிருக்கிறேன். ஆனாலும் இன்னும் பல கிறிஸ்தவர்களுக்கு இது கருகலாகவே இருக்கிறது. காயீனுக்கு மனைவி எங்கிருந்து வந்தாள்? (ஆதி. 4:17) என்ற கேள்வி மட்டுமல்ல... "ஒரு தனி மனிதன் காயீன் பெரிய பட்டணத்தை எப்படிக் கட்டினான்? என்னைக் கண்டு பிடிக்கிறவன் எவனும் என்னைக் கொன்று போடுவானே என்று சொல்வதால் அவனைக் கண்டு பிடிக்க யார் இருந்தார்கள்?" (ஆதி. 4:14) போன்ற பல கேள்விகள் பலருடைய உள்ளத்தில் எழும்பிக் கொண்டே இருக்கின்றன. இதற்கான பதிலை யாரிடம் கேட்பது? அப்படிக் கேட்டால் நம்மை என்ன நினைப்பார்கள் என்று எண்ணி காலங்களை கடத்துவோர் ஏராளம், இதிலே ஊழியர்களும் உண்டு. கருகலான இவைகள் எல்லாவற்றுக்கும் மான பதிலை ஆவியானவர் தாமே மலர வைப்பாராக!

மல்.2:15ன்படி தேவன் ஆதாம் என்ற ஒரே மனிதனைத்தான் சிருஷ்டித்தார், அவன் மூலமாகத்தான் மனித குலமே இந்த பூமியில் உருவாக்கி கிட்டத்தட்ட 6015 ஆண்டுகள் ஆகின்றன. சத்தியம் இப்படியிருக்கும்போது தான் மேற்கண்ட கேள்விகள் எழுகின்றன. இப்படிக் கேள்விகளுக்கு சாத்தான் தன்னுடைய சாதுரியத்தின்படி ஒருசில கள்ள உபதேசங்களை விதைத்து, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மூலமாயும் அறுவடை செய்கிறான். **அதிலே ஒன்று:** ஏதேனில் தான் ஆதாம் ஏவாளை தேவன் உருவாக்கினார். மற்றப்படி ஏதேன் தோட்டம் அல்லாத மற்ற உலகங்களில் மனித ஜீவ ராசிகள் ஏற்கெனவே வாழ்ந்து வருகின்றன. ஆதாம் பாவம் செய்து மன்னிப்புக் கேட்டு ஒப்புரவாக தருணம் கொடுத்தும், கீழ்ப்படியாததால் ஏதேன் தோட்டம் பூட்டப்பட்டது. அதன் பின் ஆதாமின் குடும்பமும் மற்ற உலகத்தாரோடு கலந்துவிட்டது. **அதிலே இன்னொன்று:** ஏதேன் தோட்டம் 2ம் வானத்தில் இருந்தது. அதில்தான் ஆதாம் ஏவாள் படைக்கப்பட்டனர். அப்போது பூமியிலே மனித ஜீவராசிகள் வாழ்ந்து வருகின்றன. ஆதாம் பாவம் செய்தபின் ஏதேனை விட்டு விரட்டப்பட்டு பூமிக்கு

தள்ளப்பட்டான். அதன்பின் ஆதாமின் குடும்பமும் பூமியிலிலுள்ள உலகத்தாரோடு கலந்துவிட்டது.

இதுபோல் பல கள்ள உபதேசங்கள் உருவாகியிருக்கின்றன. இவைகளை மேற்போக்காக, உலக அறிவோடு பார்க்கும்போது, மிகவும் சரியாகத்தான் தோன்றும். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற நிலையில் இருப்பவர்கள், மேற்கண்ட கேள்விகளுக்கு, வேத ஆதாரமில்லாத இந்த கள்ள உபதேசங்களை வைத்தே பதில் கூறிதிருப்தி அடைகின்றனர். தென்கொரியா ஊழியர் லீஜேராக் என்பவரே மேற்சொன்ன இரண்டாவது கொள்கையை உடையவர் என்பதும், அவரின் பணம், பவுசு, கூட்டம் போன்றவற்றிற்காக, அவரை உயர்த்திப் பிடித்து ஊர்வலம் நடத்தி கூட்டங்கள் போட்டும் நமது ஊழியர்கள் செயல்படுகிறார்கள் என்பதும் வேதனைக் குரியதாயிருக்கிறது.

**படைப்பைப் பற்றி அங்குலம் அங்குலமாக விவரித்துச் சொல்லும் ஒரே புத்தகம் நம் வேதம்தான்.** தேவனின் படைப்பின் இரகசியம் மட்டும் தெரிந்துவிட்டால், வேதக் காரியங்களை ஆவியானவர் வெளிப்படுத்தும் போது புரிந்து கொள்வது சுலபமாயிருக்கும். இதனால்தான் அடியேனை தேவன் "படைப்பின் இரகசியம்" என்ற செய்தியை எழுதி "உங்களுக்குத் தெரியுமா?" என்ற ஆராய்ச்சி நூலில் இணைத்து வைத்திருக்கிறார். மொத்த உலகமே (பூமியே) ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது (ஆதி.1:2). பூமி முழுவதுக்கும் மேல் ஜலம் இருந்தது (ஆதி.1:2,4) இந்த பூமியைத் தான் வெட்டாந்தரையாக்கி (ஆதி.1:10) அதன் மேல் ஒரு பகுதியில் ஏதேனை உருவாக்கி, ஆதாமைப் படைத்து அவனைப் பலுகிப் பெருகி பூமியை நிரப்பு (ஆதி.1:28) என்று அதிகாரம் கொடுத்தார். ஆக, இந்த பூமியில் உள்ள எல்லா மனித ஜீவ ராசிகள் முழுவதும் ஆதாம் மூலம் உருவானவை தான் என்பது வேதம் சொல்லும் சத்தியம். அல்லேலூயா! அப்படியானால் மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில்கள் என்ன?

நமது வேதத்தில் பரம்பரையை எழுதும்போது, ஆண்பிள்ளைகள் பெயர்தான் எழுதப்படுமே ஒழிய பெண்பிள்ளைகள் பெயர்கள் எழுதப்படுவதில்லை. இயேசுவின் வம்ச வரலாற்றைக் கூட மத்.1, லூக்.3ல் வாசியுங்கள். நாளாகமம் போன்ற புத்தகத்திலும் வம்ச வரலாறுகளை அறியலாம். ஒருசில இடங்களில் குழந்தைப் பாக்கியம் இல்லாத - வம்சமில்லாத ஆண்கள் பெயரைக் குறிப்பிடுவதில்லை. இப்படியே ஆதாமுக்கு காயீன், ஆபேல் என்ற ஆண் பிள்ளைகள் பிறந்து எழுதப்பட்டுள்ளது. ஏராளமான பெண் பிள்ளைகள் பிறந்திருக்க வாய்ப்புண்டு. அக்காலம் எந்த

ஒரு சட்ட திட்டமும் இல்லாத காலமாதலால் உடலுறவு யாரோடு வேண்டுமானாலும் செய்து கொள்ளவும், குழந்தைகளைப் பிறப்பிக்கவும் வாய்ப்பு உண்டு என்பதை முதலில் அறிய வேண்டும். ஆபேலின் மரணத்துக்குப் பின் தான் சேத் என்ற ஆண் மகன், ஆதாமைப் போல பிறந்தான் (ஆதி.4: 25, 5,3) சேத் பிறக்கும்போது ஆதாமுக்கு வயது 130. இந்த 130 வருஷத்துக்குள்ளே அவனுக்கு எத்தனையோ பெண் பிள்ளைகள் பிறந்திருக்கும். இந்த 130 வருடத்திற்குள்ளேயே, ஆதாமின் ஜனத் தொகை, மக்கள் கணக்கெடுப்பு விதியின்படி குறைந்தது 500,000 பேராக ஆகியிருக்க வேண்டும். நோவா காலம் வரைக்கும் மனிதர்களின் ஆயுசு நாட்கள் மிகவும் அதிகமாய் இருந்ததால் இந்த 130 வருடத்திற்குள்ளே மரணம் மிகமிகமிகக் குறைவாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஜனனம் மிகுதியாக இருந்திருக்க வேண்டும். ஆதி.4:17ன் படி காயீனே ஒரு நகரத்தைக் கட்டினான் என்றால், அவனுக்கு நிறைய மக்கள் தேவைப்பட்டிருக்குமல்லவா? பிறந்த ஒவ்வொரு மனுஷனுக்கும் குமாரர்களும் குமாரத்திகளும் இருந்தார்கள் என்றும், ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய வம்சத்தை பெருக்கினார்கள் (ஆதி.4:15-24: 5:1-32; 6:12) என்றும் அறிகிறோம். எனவே, காயீனுக்கு மனைவி கிடைத்தது, அந்த 5 லட்சம் பேரில் ஒருவராய் இருக்கலாம். அவன் நகரத்தைக் கட்ட இவர்களில் சிலரை அவன் உபயோகித்திருக்கலாம், இந்த மக்களில் யாராவது காயீனைக் கொல்லலாம் என்று அவன் பயந்திருக்கலாம். (ஆதி.4:14).

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நம் வேதம் கட்டுக்கதையல்ல; புராணமல்ல; உண்மைப் பெட்டகம். இது விஞ்ஞானம், சரித்திரம், புவியியல், வானவியல், மருத்துவம், பொருளாதாரம் போன்ற எல்லாவற்றாலும் ஏற்றுக் கொள்ளக் கூடியது. அல்லேலூயா! இப்படிப்பட்ட வேதத்தை நமக்குக் கொடுத்த தேவாதி தேவனுக்கு நன்றி செலுத்துவோம்!

❖ ❖ ❖

## தேவதூதர்கள் உடலுறவு கொண்டார்களா?

ஆதி.6:1,2 வசனங்களை வைத்து தேவகுமாரர் என்றால், தேவதூதர்கள் என்று விளக்கம் கொடுத்து, தேவதூதர்கள் மனுஷ குமாரத்திகளோடு உடலுறவு கொண்டார்கள் என்றும், தேவதூதர்களுக்குப் பிறந்தவர்கள் தான் இராட்சதர் என்றும் பல ஆவிக்குரிய சபையார் விளக்கம் கொள்கின்றனர். பெந்தகொஸ்தே ஊழியர்கள் பெரிதாய் மதிக்கும் Dakes பைபிளும் அப்படித்தான் விளக்குகின்றது. இந்தக் கருகலான கேள்விகளுக்கு

பழைய முழக்கங்களிலும், கருத்தரங்குகளிலும் அடியேன் விளக்கி யிருக்கிறேன். ஆவியானவர் தாமே இந்தச் செய்தி மூலமாய் முழுமையாய் மலரவைப்பாராக!

முதலில் தேவதூதர்களைப் பற்றிப் புரிய வேண்டும். இவர்கள் ஆவியாயிருக்கிறார்கள் (சங்.104:4, எபி.1:14) மனிதர்களைப் போல ஆண்பாலோ, பெண்பாலோ ஆவியாயிருக்கும் அவர்களுக்கு இல்லை. ஆனாலும் தேவனை ஆண்பாலிலேயே அழைப்பது போல, தேவதூதர் களையும் ஆண்பாலிலேயே அழைப்பது வேதத்தில் பழக்கமாகிவிட்டது. தேவதூதர்களுக்கு மனிதர்களைப் போல, கொடுப்பனையும் இல்லை (மாற்.12:25, மத்.22:30) அதாவது உடலுறவே கொள்வதில்லை. இது இயேசு கிறிஸ்து வெளிப்படுத்திய சத்தியம். மனித வடிவில் காட்சியளிக்கத் தக்கதான வல்லமை அவர்களுக்கு உண்டு (ஆதி.19:1, யாத்.3:2, எண்.22:20 - 31, நியா.22:1). ஆனாலும் அவர்கள் ஆவிகள், ஆவியாயிருக்கும் தேவதூதர்கள் மனிதர்களைப் போல காட்சி கொடுத்தாலும், அது மண்ணாலுண்டான மனித சரீரமாகாது. இயேசுவைப் போல வானிலிருந்து வந்தது. ஸ்திரியின் வயிற்றிலும் பிறப்பதில்லை. அப்படிப் பிறந்திருந்தாலாவது மனுஷீகமும் உண்டு என சொல்லாம். உலகிலே பலர் சொல்வது போல, அவைகளின் கால்கள் தரையில் பதிந்திருக்காதாம். லூக்.24:39, மத்.28:9ஐ தியானியுங்கள்.

மண்ணாலுண்டான மனுஷ குமாரத்தியோடு உடலுறவு கொள்ள வேண்டுமானால், அதேபோன்ற சரீரமுள்ள ஒரு மனுஷன் தேவை. உள்ளான மனுஷனாகிய ஆவியையும், ஆத்மாவையும் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள் (ஆதி.1:26-28) என்று அதிகாரம் கொடுத்தார் தேவன். ஆவியாயிருப்பவர்கள் உடலுறவு கொள்ளவும்முடியாது, பிறப்பிக்கவும் முடியாது என்பதால்தான், ஆதி.2:7ல் மண்ணில் புறம்பான மனுஷனை உருவாக்கி உள்ளான மனுஷனை அதற்குள் வைத்து, அவர்களை பலுகி பெருகவைத்தார். படைப்பின் இரகசியமே இப்படியிருக்க, ஆவியாயிருக்கிற தேவதூதர்கள், மனிதரூபம் எடுத்தாலும், ஆவியும் - மண்ணாலான மனுஷியின் உருவமும் உடலுறவு கொள்ள முடியுமா? முடியாதே! ஆவியான தேவதூதர்கள் ஆண்பாலும், பெண்பாலும் இல்லாமல், கொள்வினைக்கும் கொடுப்பனைக்கும் தகுதியல்லாத நிலையிலிருக்கும்போது, எப்படி தேவதூதர்கள் உடலுறவு கொள்ள முடியும்? சிந்தியுங்கள். பால்வகையே (Gender) இல்லாத தேவ தூதர்களுக்கு, பிறப்பிக்கும் வித்து - Sperm - உயிரணு - எப்படி இருக்கும்? அதுவும் கூட மண்ணான மனித சரீரத்திலிருந்து தானே உருவாக வேண்டும் மண்ணான மனிதனைப்

பிறப்பிக்க! எனவே மனுஷ குமாரத்திகளோடு தேவதூதர்கள் உடலுறவு கொள்ள முடியாது என்றும், ஆணின் வித்து அவர்களிடம் இல்லை என்பதால் மனித இனத்தை பிறப்பிக்க முடியாது என்றும், பிறப்பிக்கும் அதிகாரம் மனுஷனுக்கு மட்டுமே தேவன் கொடுத்திருக்கிறார் (ஆதி. 1:28) என்றும் அறிக!

அப்படியானால் ஆதி.6:1,2ல் சொல்லப்பட்ட தேவகுமாரர்கள் யார் என்பது கேள்வி. தேவகுமாரர் என்றால் தேவனுடைய பிள்ளைகள் என்று பொருள். யோ.1:12ன் படி இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் எல்லாரும் தேவனுடைய பிள்ளைகள், ரோ 8:14ன் படி தேவனுடைய வார்த்தையினாலே நடத்தப்படுபவர்கள் தேவனுடைய புத்திரர்களாகும். இப்படியாய் அந்த நாட்களில் தேவனுடைய பிள்ளைகளாய் இருந்தவர்கள, சௌந்தர்யத்தில் மயங்கி, அந்நிய பெண்களோடு உடலுறவு கொண்டிருக்கிறார்கள். இந்த பெண்களை, மனுஷ குமாரத்திகள் என்று சொல்லியிருப்பதால் இவர்கள் தேவனுக்குள் வராதவர்கள். தேவகுமாரத்திகள் என்று சொல்ல தகுதியில்லாதவர்கள். அந்நிய, நுகப்பிணைப்பு ஆதிமுதல் தேவன் திருமணத்திலும் ஊழியத்திலும் வெறுக்கிற ஒன்று (2 கொரி.6:14-17, யாத். 4:24-26). ஞானி சாலமோனிடம் தேவன் கண்டித்து உணர்த்தியதும் இதுதானே! (1 ராஜா 11) இந்த நிலை அன்று இருந்ததால்தான் கர்த்தர் விசனப்பட்டார் (ஆதி..6:1-7) ஆதாமின் 2 மகன்களில் நல்லவன் மரித்துப் போனான். காயின் கெட்டவன், ஆதாமுக்கு 130 வயதான போதுதான் சேத் பிறந்தான். (ஆதி.5:3) சேத் வழியில்தான் தேவகுமாரர்கள் வந்திருக்க வேண்டும். எனவே சேத் பிறந்து அவனுக்கு 105 வயதாகும் வரை (ஆதி.15:5) தேவபிள்ளைகளே இருந்திருக்க வாய்பிப்பில்லை. ஆக, இந்த காலகட்டத்தில் மனுஷ குமாரத்திகளோடு உடலுறவு கொண்டவர்கள் தேவதூதர்கள் தான் என்று வாதிடுவோரும் உண்டு. **இவர்கள் அறிய வேண்டியது ஒன்று:**- சேத் வழியில் இயேசு கிறிஸ்து பிறந்தார் என்பதற்காகத் தான் சேத்தின் பிறப்பு எழுதப்பட்டிருக்கிறதே ஒழிய, அவன் வழியில் வந்தவர்கள் அத்தனை பேரும் தேவ பிள்ளைகளாக நிலை நிற்கவில்லை. நிலைமை இப்படியிருக்க, சேத் பிறக்கும் வரை இருந்த கிட்டத்தட்ட 5 லட்சம் மனுஷர்களில் (See இதற்கு முன்னுள்ள செய்தி) தேவனுடைய பிள்ளைகள் இருந்திருக்க வாய்ப்பே இல்லையா? வாய்ப்பு உண்டே! நாம் எல்லோருமே ஆதாமின் வம்சம்தான்! அந்த தேவனுடைய பிள்ளைகள்தான் - தேவகுமார்கள்தான் - இப்படி அந்நிய நுகப்பிணைப்பு செய்திருக்கிறார்கள்.

மட்டுமல்ல, ஆதி.6ம் அதிகாரம் ஆரம்பிக்கும் போது, ஆதாம் உயிரோடு இருந்திருக்கிறான். ஆதி.6:3ல் மனுஷனோடே என்ற பதத்திற்கு,

ஆதாமோடே என்று மூல பாஷையில் உள்ளது. இந்த வசனத்திற்குப்பின் ஆதாம் வாழப்போகிறது 120 வருஷம் தான் என்று தேவன் சொல்வதால், அப்போது அவனுக்கு வயது 810 இருந்திருக்கும் (930-120=810). இந்த 810 வது வயதில், தேவகுமாரர் மனுஷகுமரத்திகளோடு உடலுறவு கொள்வது நடந்திருக்கிறது என்பதால், சேத்துக்கு மகன் பிறக்கும் போது ஆதாம் வயது 235 (130+105) ஆனதை வைத்து. ஆதாமின் 810-235=575 வருஷத்திலிருந்து சேத் வழியாகவும் தேவ பிள்ளைகள் பிறக்க வாய்ப்புண்டே! எப்படியோ அந்நிய நுகப்பிணைப்பு தேவன் விரும்பாத ஒன்று என்று நமக்கு திருஷ்டாந்தமாய் எழுதப்பட்டுள்ளது. அல்லேலூயா!

**அடுத்து இராட்சதர்கள் பற்றி:-** இராட்சதர்கள் தேவகுமாரர்களுக்கும் மனுஷகுமாரத்திகளுக்கும் பிறந்தவர்கள் என்று வசனமே இல்லை. ஆதி.6:4ஐ வாசித்தால் அந்நாட்களில் இராட்சதர் பூமியில் இருந்தார்கள். பின்பு தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளோடே கூடுகிறதினால், இவர்கள் அவர்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றபோது, இவர்களும் பூர்வத்தில் பேர் பெற்ற மனுஷராகிய பலவான் களானார்கள் என்று உள்ளது. ஆக, இந்தப் பரம்பரை வேறு. இராட்சதர்களும் மனிதர்கள் தான்; மனிதர்களைப்போல ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறப்பவர்கள்தான். இவர்களின் உருவம், குணாதிசயம், வல்லமை எல்லாமே நம்மை விட வித்தியாசமாய் இருக்கும். இது, உருவாக்குகிற ஆண் பெண்ணாலும், அவர்களின் கருத்தரிக்கும் தன்மைகளாலும், சூழ்நிலை, காலம், இனம், இடத்தாலும் உண்டாகிறது. Inter Caste Marriage செய்தவர்களுடைய பிள்ளைகள் கூட அறிவிலும் உடலமைப்பிலும் சற்று வித்தியாசமாய் இருப்பதைப் பார்க்கிறோம். நம் சமுதாயத்தில் கூட 6 விரல்கள், பெரிய கால்கள், பெரிய தலை உள்ள பிள்ளைகள் பிறப்பதை காண்கிறோம். இப்படி வித்தியாசமாய்ப் பிறக்கிறவர்களில் மிகவும் கடூரமாய் காணப்படுகிறவர்கள் இராட்சதர்கள். இவர்களுக்கும் குழந்தைகள் பிறக்கும். அவைகள் எல்லாமே இராட்சதர்களாய் இருக்க கட்டாயமில்லை. கோலியாத்தே இராட்சதன்தான்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! தேவதூதர்களுக்கு பலுகிப்பெருகும் அதிகாரம் இல்லை என்றும், தேவ பிள்ளைகள்தான் இங்கே சொல்லப்பட்ட தேவகுமாரர்கள் என்றும் உணர்வோம்! உலகிற்கு சொல்வோம்! வசனத்தெளிவு உண்டாகட்டும்!

❖ ❖ ❖

# இயேசுவின் வருகை மொத்தம் இரண்டா? மூன்றா?

"இயேசுவின் வருகை சமீபம்" என்று சொல்வோரும் உண்டு. "1965ம் ஆண்டு, தேவனின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டாயிற்று; இயேசு வந்துவிட்டார்" என்று சொல்வோரும் உண்டு. "இயேசுவின் வருகை 3 என்றும் 4 என்றும்" சொல்வோரும் உண்டு. "இரகசிய வருகை என்றும் பகிரங்க வருகை" என்றும் "பல வருகைகள் உண்டு" என்றும் சொல்வோரும் உண்டு. இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் நமக்கு விளக்குவாராக!

எபி.9:28ன்படி "இயேசு ஒருதரம்சிலுவை மரணத்தோடு உலகுக்கு வெளிப்பட்டார்; இன்னும் ஒரு தரம் பாவமில்லாமல்தரிசனம் ஆவார்" என்று எழுதப்பட்டுள்ளது. இந்த இரண்டு தரிசனங்களும் இந்த பூமியில்தான். ஆக, வருகை என்பது, இந்த பூமிக்கு வருவதுதான் என்பது ஊர்ஜிதமாகிறது. இந்த பூமிக்கு வருகிற இந்த இரண்டு வருகையைத் தவிர வேறெந்த வருகையும் பூமிக்கு வருவதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. இந்த 2ம் வருகையில் தான் மகிமை நிறைந்தவராய், ராஜாதிராஜவாய், நியாயந்தீர்க்கிறவராய் வெளிப்படுவார் என்றும், இது பகிரங்கமான நிகழ்ச்சி என்றும், மத்.24:30, வெளி. 19:11-21 போன்ற வசனங்கள் சொல்கின்றன. அவர் ஒலிவமலையில் கால்வைத்து இறங்குவதும் இது தான் (சக.14:4,5). இந்த 2ம் வருகைக்கு முன்பாகவோ அல்லது அதற்கு பின்பாகவோ இயேசுகிறிஸ்து பூமிக்கு வருவார்என்று வசனமே இல்லை. இந்த வருகையின் போதுதான் நியாயத்தீர்ப்பு உண்டென்றும், அந்திகிறிஸ்து அழிக்கப்படுவான் என்றும், 1000 வருட அரசாட்சி பூமியில் நடக்கும்எ ன்றும் வேதம் சொல்கின்றது. (வெளி.19,20). இந்த வருகை தான் ஏனோக்கு சொன்ன வருகை (யூதா.14:15) இந்தவருகையில்தான் பரிசுத்தவான்களும் இணைந்து பூமிக்கு வருவார்கள். (சக.14:5, யூதா.14:15) அல்லேலூயா! **இந்த வருகை சம்பந்தமாய் ஆசிரியரின் விடுதலை முழக்க கீதங்கள் - பாகம் 2ல் "வாராரே வாராரே இயேசு ராஜா"** என்ற பாடலைக் கேளுங்கள்.

இந்த வருகையில் இணைந்து வரும் பரிசுத்தவான்கள் எப்போது தேவனிடம் - பரலோகம் - போனார்கள் என்பது கேள்வி. யோ.14:1-3ஐ வாசித்தால், பரிசுத்தவான்களாகிய நமக்கு ஒரு ஸ்தலத்தை பிதாவின் வீட்டில் ஆயத்தம் பண்ணின பின்பு, இயேசு வந்து கூட்டிக் கொண்டுபோவார் என அறிகிறோம். எப்படிக் கூட்டிக் கொண்டு போவார் என்பதை 1 தெச.4:16-18, 1 கொரி.15:51-53 போன்ற வசனங்களில் விளக்குகின்றது. இயேசு கிறிஸ்து வானத்தில் மேகத்தில் மேலிருப்பார். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்

முதலாவது உயிர்த்தெழுந்து, பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் மறுரூபமாக அவருக்கு எதிர்கொண்டு போய், மேகங்கள் மேல் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். இதிலே இயேசு பூமிக்கு வரும் வருகையில் சேர்க்கவே முடியாது. இந்த காரியங்கள் நடக்கும்போது பூமியிலுள்ள, எடுத்துக் கொள்ளப்படாத பாவிகளைப் பற்றி ஒன்றுமே சொல்லப்படாததால், இது கர்த்தருக்கும் விசுவாசிகளுக்கும் - பரிசுத்தவான்களுக்கும் - மட்டுமே தெரிய நடப்பது என்பது உறுதியாகின்றது. இதனால் இதை இரகசிய வருகை என்று சொல்கின்றோம். இந்த இரகசிய வருகையில் அவர் ராஜாதி ராஜாவாய், மகிமை நிறைந்தவராய் வரப்போவதில்லை. மாறாக, சாதாரண மனுஷ குமானாகவே வருவார். மணவாட்டியாகிய பரிசுத்தவான்களை அழைத்துக் கொண்டு பரலோகம் போனபின்தான், ஆட்டுக் குட்டியானவரின் கல்யாணம், ராஜா அபிஷேகம் போன்றவை எல்லாம். இது 7 ஆண்டுகளில் நடக்கும். அந்த 7 ஆண்டு முடிவில்தான் மணவாட்டியோடு பூமிக்கு மணவாளன் வருவார். ஆமென். அதுதான் 2ம் வருகை.

ஒருசில ஆவிக்குரிய சபையார் இந்த இரகசிய வருகையையும் ஒரு வருகை என்று போதிப்பதால் தான் சில கள்ள உபதேசங்கள் பிறக்கின்றன. 7ம் நாள் அட்வெந்த்சபை போன்றவர்கள் இந்த வருகை பூமிக்கு வருவது என்றும், அப்போதே அந்திகிறிஸ்து அழிக்கப்படுவானென்றும், கிறிஸ்தவர்கள் அல்லாத மற்றவர்கள் அழிக்கப்படுவர் என்றும்,1000 வருடம் இந்த பூமி வெறுமனே பிசாசின் பிரசன்னத்தோடுகிடக்குமென்றும், 1000 வருட ஆட்சி பரலோகத்தில்தான் என்றும், 1000 ஆண்டுகள் பரலோகில் பரிசுத்தவான்கள் இருப்பார்கள் என்றும் போதிக்கின்றனர். அதன்பின் 3ம் முறையாக இயேசு பூமிக்கு வந்து இந்த பூமியை அழித்து புதிய பூமியை உருவாக்கி, சாத்தானை கொன்று போட்டு, புதியவானம், புதிய பூமி என்ற புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என்றும் போதிக்கின்றனர். இவைகளெல்லாம் வேத ஆதாரம் இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஒரு சில வசனங்களை எடுத்துக் கொண்டு போதிக்கப்படும் கள்ள உபதேசம் என்று நாமறியலாம். ஆக, பூமிக்கு இயேசு வரும் வருகை மூன்று அல்ல என்றும், இரண்டு மட்டுமே என்றும் வேதம் விளக்குவதை அறிகிற மனதை உடையவர்கள் பாக்கியவான்கள்.

ரெபேக்காளை எலியேசர் மணவாட்டியாய் ஊராருக்கு - உறவினருக்கு - தெரிய கொஞ்ச தூரம் கொண்டு செல்கிறார். அதன்பின் யாருக்கும் தெரியவில்லை. எதிரிலே நிற்கும் ஈசாக்கோடு இணையும்போது ஊரார் - உறவினர் - யாருமில்லை. அப்படியே தான் ஆவியானவர் நம்மை மணவாட்டியாய் ஆயத்தப்படுத்தி நடத்திக் கொண்டிருப்பதை ஊரும் உலகமும்

தற்போது காண்கின்றது. ஆனால் அவரோடு இணையும்போது ஒருவரும் காணப்போவதில்லை. அது இரகசியமாய் நடக்கும். இந்த இரகசிய வருகையில் பங்கெடுக்க நாம் ஆயத்தமானால்தான், வெளியரங்கமான 2ம் வருகையிலே அவரோடுகூட பூமிக்கு வந்து பூமியை ஆளுவோம். (வெளி.5:10; ரோ.517) இந்த Secret Rapture - இரகசிய வருகையையும், வெளியரங்கமான 2ம் வருகையையும் ஒன்றாகவே இணைத்து அறிய இயலாமல் பேதுரு எழுதியது போலவே (2 பேது.3:10-14) தற்கால ஆவிக்குரிய ஊழியர்களும் எழுதுவதால், பாடுவதால், போதிப்பதால் கள்ள உபதேசம் பெருக வாய்ப்பு அதிகம் வருகிறது. இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இரகசிய வருகை அதிசீக்கிரம் நடக்கப் போகிறது. அதிலே பங்குகொண்டால் தான் 2ம் வருகையில் இயேசுவோடு பூமிக்கு வர முடியும். எனவே இரகசிய வருகைக்கு ஆயத்தமா?

❖ ❖ ❖

## பெயர்க்கிறிஸ்தவ சபைகளிலும் தீர்க்கதரிசிகள் உண்டா?

மத்.16:18ன் படி இயேசுவாகிய - வார்த்தையாகிய - கல்லின் மேல் கட்டப்பட்ட ஜீவமார்க்கம் தான், புதிய ஏற்பாடு கிறிஸ்தவ சபை. எபி.6:1, 2ன் படி இந்த சபைக்கு ஆறு மூல உபதேசங்கள் உண்டு. இதுதான் கிறிஸ்தவ சபைக்கான அடிப்படை உபதேசம். இதிலே ஒரு அடிப்படை மூல உபதேசம் இல்லாமல் போனாலும் அது கிறிஸ்தவ சபையல்ல. அவைகளெல்லாம் பெயர்க் கிறிஸ்தவ சபைகள், பாரம்பரிய சபைகள், உதாரணத்திற்கு ஒரு மூல உபதேசத்தைபார்ப்போம். எபி.6:1ல் "ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்" என்ற ஒன்று உண்டு. இங்கே "ஸ்நானம்" என்று இல்லாமல் ஸ்நானங்கள் என்று பன்மையில் போடபபட்டுள்ளது. எபி.4:5ல் ஒரே ஞானஸ்நானம் என்று ஒருமையாய் சொல்லியிருக்க, ஸ்நானங்கள் என்று பன்மையில் எப்படிச் சொல்வது? இது கேள்வி. அதே எபி.4:5,6ல் "ஒரே கர்த்தர்" - ஒரே தேவன் - என்று சொல்லியிருக்க பிதா, வார்த்தை, பரிசுத்தஆவியானவர் என்று மூன்று ஆள்தத்துவங்கள் உண்டல்லவா! 1 யோ.5:7ன் படி இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். பிதாவாகிய கர்த்தர், வார்த்தையாகிய கர்த்தர், ஆவியானவராகிய கர்த்தர் என்று மூன்று ஆள் தத்துவமாயிருந்தாலும், கர்த்தர் ஒருவரே என்ற வார்த்தைக் குள்ளே இம்மூன்றும் அடங்குகின்றன. அப்படியே, "ஒரே ஞானஸ்நானம்" என்ற போர்வையில் "ஸ்நானங்கள்" என்று பன்மையில் மூன்றாய் உள்ளது.

**அவையாவன : (1) கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம்** இதுதான் ரோ.10:9,10; யோ.3:3,5; 1 கொரி.6:11, யாக்.1:18, 1 பேது.1:23 போன்ற வசனங்களின்படி பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைக்கிற அனுபவம்; புது சிருஷ்டியாகிற அனுபவம்; மறுபடியும் பிறக்கிற அனுபவம். இதைத்தான் இரட்சிப்பு என்கிறோம். இதுதான் கிறிஸ்துவாகிய வார்த்தைக்குள்ளான ஞானஸ்நானம் (கலா.3:27) (2) **தண்ணீரினால் ஞானஸ்நானம்:** இதுதான் மாற்.16:16ன் படி விசுவாசமுள்ளவனாகி பெறுகிற ஞானஸ்நானம்; அப்.2:38ன் படி மனந்திரும்பிய பின் எடுக்கப்படும் ஞானஸ்நானம்; காந்தேகே மந்திரி எடுத்த ஞானஸ்நானம். இது உலகிற்கு நம்மை வெளிப்படுத்தும் அனுபவமாகும். (யோ.1:31). தேவனோடு பண்ணுகிற நல் மனச்சாட்சியின், உடன் படிக்கையாகும் (1 பேது. 3:21); மணவாளனோடு நடக்கப்போகும் கல்யாணத்திற்கென்று நிச்சயதார்த்தம் பண்ணுவதாகும். முதலாம் ஞானஸ்நானம் பெற்றவனே தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறமுடியும். இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்தவை. இவை இரண்டுக்கும் உட்பட்டவர்களின் பெயர்தான் ஜீவபுஸ்தகத்தில் இருக்கும். இவர்களே மோட்ச லோகத்திற்கு சொந்தக்காரர்கள். (3) **ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம்:** இது முதலாவது ஞானஸ்நானம் பெற்றவர்களும், முதலிரண்டு ஞானஸ்நானம் பெற்றவர்களும் பெறுகின்ற அனுபவம். இந்த அனுபவத்தை கொடுப்பவர் இயேசுகிறிஸ்து (மத்.3:11). இது நமது ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கும், மற்றவர்களின் - இரட்சிக்கப்படாதவர்களின் - மனந்திரும்புதலுக்கும், வளர்ச்சிக்கும் பிரயோஜனமாயிருக்கும். (கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்திற்கு வழி நடத்துபவர் ஆவியானவர் என்பதையும் அறிக.) (1 கொரி.12:13; யோ.16:8,9).

இப்படியாய் ஸ்நானங்களைப்பற்றிய உபதேசம் இருக்க. பாவமறியாத பச்சிளம் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாமா? இயேசுகிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவமதிக்கலாமா? பாவ மன்னிப்பை, இயேசுவின் இரத்தத்தை உதாசீனப்படுத்தலாமா? இப்படி செயல்படுகிற சபைகள் கிறிஸ்தவ சபைகள் அல்ல; அவைகள் தான் பாரம்பரிய - பெயர்க் கிறிஸ்தவ சபைகள், இதுபோல ஆறு மூல அடிப்படை உபதேசங்களையும், அவமாக்கி, உதாசீனப் படுத்துகிற சபைகள் ஏராளம் இன்றைக்கு இருக்கின்றன. இன்றைய செய்தியின்படி இப்படிப்பட்ட சபைகளிலிருந்தும் தீர்க்கதரிசிகள் உண்டா? ஆவியானவர் விளக்குவாராக!

உங்களுக்கு ஒரு காரியம் சொல்கிறேன். பிலேயாம் என்ற ஒரு தீர்க்கதரிசி இருந்தான். இவன் இஸ்ரேல் சபையைச் சார்ந்தவன் என்று

கணிக்கும் ஆவிக்குரிய சபைகளும் உள்ளன. இவன் 430 வருஷம் அடிமையாக கிடந்து, மோசேயின் தலைமையில் விடுதலையாகி, கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்திற்கு ஒப்பனையான செங்கடலைக் கடந்து வந்தவன் அல்ல. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வழியாய் வந்த தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியைச் சேர்ந்தவனல்ல. மொசொப் பொத்தாமியாவின் ஊராகிய பேத்தோரிலிருந்த போயோரின் குமாரன் (உபா.23:4), மோவாபிய ராஜாவான பாலாக்கின் மீதியானிய சந்ததியாருடைய தேசத்தின் நதியருகே இருந்தவன் (எண்.22:4,5) இவனுடைய தேவனும் நம்முடைய கர்த்தரே (See எண் 22:8-10). ஆனாலும் தெரிந்து கொள்ளப்பட்ட - பிரித்தெடுக்கப்பட்ட - சந்ததியைச் சார்ந்தவனல்ல (1 பேது. 2:9). இவனைப் போலவே, கிறிஸ்தவ சபை என்ற போர்வையில், கிறிஸ்துவை தெய்வம் என்று சொல்லிக் கொண்டு, கிறிஸ்தவப் பெயர் - பைபிள் - பாடல் - எல்லாம் வைத்துக் கொண்டு, மூல அடிப்படை உபதேசமில்லாத கிறிஸ்தவ சபையைச் சார்ந்தவர்கள் இன்றைக்கு ஏராளம், ஏராளம். இவர்கள் தெரிந்த கொள்ளப்பட்ட இஸ்ரேலர் போல, ஆதி அப்போஸ் தலகாலத்திலிருந்து வந்தவர்களல்ல. பிலேயாமைப் போல இடையிலே - பக்கவழியாய் வந்தவர்கள், நுழைந்தவர்கள் (யூதா.4). அதாவது கத்தோலிக்க சபை, ரோமன் கத்தோலிக்க சபை, புராட்டஸ்டண்டு சபை என்று புதிது புதிதாய்க் கிளம்பிய காளான்கள்.

இவர்களிடத்திலும் பிலேயாமைப்போல வரங்கள் கிரியை செய்யும். தீர்க்கதரிசனம் பிறக்கும். வரங்கள் கொடுக்கப்படுவது பரலோகம் போக அல்ல; ஆவியானவர் தம் சித்தத்தின்படி பகிர்ந்தளிக்கிறார். (1 கொரி.12:11) வரமானது அவரவருடைய நீதியால், உத்தமத்தால்கிடைப்பதல்ல. இயேசுவை கொன்ற அசாரிய கூட்டத்தான் காய்பாவுக்கும் தீர்க்க தரிசன வரம் கிரியை செய்தது (யோ.11:49-52) அஞ்சனக் காரியிடம் போன சவுலிடமும் தீர்க்கதரிசன வரம் வெளிப்பட்டது (1 சாமு. 19:23) தேவன் இரட்சிக்கப்படாத பார்வோனையும் தமக்கென்று பயன்படுத்தினார் என்று நாமறிவோம் (ரோ.9:17) பரஸ்திரிக்கு பிறந்து சபைக்கு உட்படலாகாத யெப்தாவை இரட்சகனாய் தேவன் பயன்படுத்தினார் என்று நாமறிவோம் (நியா.11) வரங்களெல்லாம் கிருபையாய் தேவன் தருவது. இது மாறாதவை; கொடுத்ததை திரும்ப எடுக்கவே மாட்டார் (ரோ.11:29) பிலேயாமைப் பாருங்கள், கேவலம் லஞ்சம் வாங்கி தன்வரத்தை வீணாக்க முயல்கிறான். ஆனாலும் தேவன் கிருபையாயக் கொடுத்ததை திரும்ப எடுக்கவில்லை. அவனோ அந்தவரத்தில் ஆசீர்வதித்தான். இன்றைக்கும் பலர் வரங்களை வைத்து பலரை எடைபோட்டு

தூக்கிப்பிடிக்கிறார்கள். ஆட்களைப் பார்க்கிறார்கள். ஆண்டவனின் வார்த்தையைப் பார்ப்பதில்லை. மத்.7:21, 22 ஐ தியானியுங்கள். வரமல்ல நம்மைப் பரலோகம் கொண்டு போவது. "அக்கிரமச் செய்கைக்காரன் - Lawlessness" அதாவது கிரமமாய் - சட்டப்படியாய் - வசனப்படியாய் நடக்காதவன்; அவனை அறியேன் என்பார் தேவன். அதனால்தானே பிலேயாமைப்பற்றி 2 பேது.2:15; யூதா. 11: வெளி.2:14 போன்ற இடங்களில் நமக்கு எச்சரிப்பு வரும்படியாய் எழுதப்பட்டுள்ளது. இந்த தீர்க்கதரிசி பிலேயாமின் முடிவு என்ன? தேவனால் தெரிந்து கொளளப்பட்ட இஸ்ரேல் மக்கள், பெயரளவில், பாரம் பரியமாய் கர்த்தரை வழிபட்ட பிலேயாமை கொன்று போட்டார்கள். (எண்.31:8) (தீர்க்கதரிசி என்று பழைய ஏற்பாட்டில் சொல்பவர்கள் எல்லாம்வருங்காரியங்களைச் சொல்கிற தீர்க்கதரிசிகள் மட்டுமல்ல. எபே.4:13ல்உள்ள 5 விதமான ஊழியங்களையும் செய்பவர்களே என்று பழைய முழக்கத்தில் நான் எழுதியதை வாசியுங்கள்.)

மோசேயின் மாமன் ரெகுவேல் கூட ஆசாரியன்தான்; ஆனாலும் அவனை விட்டுப் பிரித்து மோசேயை தேவன் அழைத்தாரல்லவா! ஆசாரியனின் மகளோடு ஊழியத்திற்கு வந்தும் கூட தேவன் கொல்லப் பார்த்தாரே ஏன்? (யாத்.4:24-26) பாரம்பரிய - பெயர்க்கிறிஸ்தவர் களெல்லாம், புறஜாதி மக்களென்றே தேவன் தீர்வையிடுகின்றார். அதனால்தான் 1 கொரி.10:33ல் உலகிலே, யூதஜாதி என்றும் புறஜாதியென்றும், தேவ சபை - கிறிஸ்தவ சபையாகிய தேவ ஜாதி யென்றும் மூன்று இருப்பதாய் சொல்லப்பட்டுள்ளது. மூல அடிப்படை உபதேசமுள்ள தெரிந்து கொள்ளப்பட்ட சபையாரே கிறிஸ்தவர்கள்; மற்றப்படியான பாரம்பரிய - பெயர்க் கிறிஸ்தவ சபையாரெல்லாம் புறஜாதியார்தான். ஆமென். ஒரு முறை வனாந்தரத்திலே ரெகுவேலின் மகன் ஓபா என்பவனை, தங்களோடு - தங்களின் தெரிந்து கொள்ளப்பட்ட ஜாதியோடு - சேர்ந்து கொள் என்று மோசே நற்செய்தி சொன்னதன் அடிப்படை காரணமென்ன (எண்.10:29-32)? பெயர்க்கிறிஸ்தவ சபையான் ஆவிக்குரிய சபையாரோடு இணையாத வரைக்கும் அவன் என்ன நிலையில் வாழ்ந்தாலும், உலகப்பிரகாரமான - இளைப்பாறுதல் தரும் கானான் தேசத்திற்கும் போகமுடியாது (யோசு.1:13; மத்.11:28) நித்திய ஜீவன் தரும்பரமகானானுக்கும் போக முடியாது. அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! அற்புதங்களையும், தீர்க்தரிசனங்களையும்,பிசாசு விரட்டுதலையும்கண்டு ஏமாந்துபோகாதே! அப்படிச் செய்பவர்கள் சார்ந்திருக்கும் சபைகளை கொஞ்சம் சிந்தித்துப் பார்!

பெயர்க்கிறிஸ்தவ - பாரம்பரிய சபை யாரைவிட்டு விலகு! அவர்களோடு ஐக்கியமும் வேண்டாம்; தொடர்பும் வேண்டாம்! கானானுக்குள் நுழையும் தெரிந்து கொள்ளப்பட்ட ஜாதிகளுக்கு தேவன் சொன்ன அறிவுரை இதுதானே! இதிலே நிலைத் திருந்தால் பிழைத்திருப்பார்கள்; நிலைத்திராததால் இன்றுவரை சமாதானமும் சந்தோசமும் இல்லாதநிலைதான். அறியாமையினாலே அவர்களோடு சேர்ந்து தீர்க்கதரிசனம், வரம் போன்றவற்றைக் கண்டு மதிமயங்கி, வசனத்தை விட்டு வழிவிலகிப் போய் விடாதே! இது சிந்திக்கும் காலம்! செயல்படும் நேரம்! மௌனமாயிருக்காதே! உலக வாழ்வில் நீ நடப்பதைப் பொறுத்துத் தான் நித்தியவாழ்வு. ஆவியின்கனி, நீதியின் கனியே உனக்குத் தேவை! ஆட்களைப் பாராதே! கூட்டத்தை பவுசை, பதவியை, இனத்தை, ஜாதியை, பணத்தை, கிருபை வரத்தைப் பாராதே! ஆண்டவனை - ஆண்டவனின் வார்த்தையையே பார்! இதுவே தகுதியும் நீதியுமானது!

❖ ❖ ❖

## தேவனின் நாமத்தை தரித்துக் கொள்வது எப்படி?

நம் தேவன் ஒருவரே (God ஏலோகிம்); ஒரே தேவன் மூன்று ஆள்தத்துவமாயிருக்கிறார் (1 யோ.5:7; 1 தீமோ.2:5; எபே.4:5,6). தேவன் ஒருவர் என்பதால் அவருக்கு தனிப்பட்ட பெயர் இல்லை என்றும், தேவையில்லை என்றும், ஏற்கெனவே பழைய முழக்கங்களிலும், ஆராய்ச்சிப் புத்தகங்களிலும் எழுதியிருக்கிறேன். ஆனால், மூன்று ஆள்தத்துவமான ஒரே தேவனுக்கு, பல காரணப் பெயர்கள் உள்ளன. யோகோவா, கர்த்தர், பிதா, எல்ஷடாய், இமானுவேல், இயேசு, வார்த்தை, அதிசயம், பரிசுத்த ஆவியானவர் போன்ற பல பெயர்கள் வேதத்தில் காணப்படுகின்றன. இந்த நாமங்களில் ஏதாவது ஒன்றை விசுவாசிகளாகிய நாம் தரித்துக் கொள்ள வேண்டுமா? அல்லது நாமம் என்றால் வேறு ஏதாவது அர்த்தம்உண்டா? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே வெளிப்படுத்துவாராக!

நியாயப் பிரமாணத்தில் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் பற்றி தேவன் சொல்லும்போது, ஆசீர்வாதம் இஸ்ரேலருக்கு வரும் போது "…. கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்." (உபா.28:10) என்று எழுதப்பட்டுள்ளது. அப்படியானால், ஆசீர்வாதத்தைப் பெறும் அத்தனை

இஸ்ரேலருக்கும் கர்த்தருடைய நாமம் - பெயர்தான் வைக்கப்பட்டிருக்குமா? அப்போதிருந்த மோசே, ஆரோன், மீரியாம், யோசுவா போன்றோருக்குள்ள பெயரெல்லாம் தேவனின் நாமமா? இல்லையே! ஆகையால், நாமம் தரிக்கப்பட்டது என்றால் பெயர் தரிக்கப்படுவது என்று அர்த்தம் இல்லை அல்லவா!

தாவீது கோலியாத்துக்கு முன்னே சொன்ன வார்த்தைகளைப் பாருங்கள்:-

"....... நானோ, நீநிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன்" (1 சாமு. 17:45) அப்படியானால், தாவீதின் நாமம் தான் கர்த்தருடைய நாமமா? இல்லையே! தாவீது கர்த்தருடைய நாமத்தில்-பெயரில்வரவில்லை என்றால், அவன், கர்த்தரின் நாமத்திலே வருகிறேன் என்று சொன்னதன் அர்த்தம் என்ன?

சாலமோனிடத்திலே கர்த்தர் தரிசனமாகி சொன்னவார்த்தையைக் கேளுங்கள்:- "என் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி....." ( 2 நாளா. 7:14) இஸ்ரேல் தேசமக்கள் எல்லாரும் கர்த்தரின் நாமத்தை - பெயரைத் தரித்திருக்கிறார்களா? இல்லையே! அப்படியானால் "என் நாமம் தரித்த ஜனங்கள்" என்றால் அர்த்தமென்ன?

**கடைசி காலத்தில் நடக்கும் ஒரு காரியத்தை இயேசு கிறிஸ்து சொல்வதைப் கேளுங்கள்:** "ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்". (மத். 24:5; மாற்.13:6; லூக். 21:8) அப்படியானால், கடைசிகாலத்தில்எழும்புகிற கள்ளக் கிறிஸ்துகளும், கள்ள தீர்க்கதரிசிகளும், கள்ளப்போதகர்களும் இயேசு என்ற பெயரை - நாமத்தை தரித்துக் கொண்டா வருவார்கள்? இல்லையே! பாலாசீர்லாறி, பிரன் ஹாம், எலன் ஜி ஒயிட், போன்றோ ரெல்லாம் இயேசுவின் பெயரைத் தரிப்பிக்க வில்லையே! அப்படியானால் "என் நாமம் தரித்துக் கொண்டு" என்பதன் அர்த்தமென்ன?

யோ.5:43ல், "நான் என்பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை" என்று இயேசு சொல்கிறாரே, பிதாவின் நாமம் - பெயர் - இயேசுவா? இல்லையே? 2015 ஆண்டுகளுக்கு முன்னாலே கன்னிமரியாளிடம் வார்த்தையாகிய தேவன் பிறந்தபோது, அவருக்கு தேவதூதன் மூலமாக, தேவன் வைக்கச் சொன்ன பெயர்தானே இயேசு என்பது, அதற்கு முன்னாலே இயேசு என்ற பெயர் யாருக்கும்

வெளிப்படுத்தப்பட வில்லையே! அப்படியானால் "நான் என் பிதாவின் நாமத்தினாலே வந்திருந்தும்" என்பதன் அர்த்தமென்ன?

வெளி.14:1ல் வரும் 1,44,000 பேரின் நெற்றிகளில்பிதாவின் நாமம் எழுதப்பட்டிருந்தாமே! பிதாவின் நாமம் என்றால் பெயரா? இல்லையே! "பிதாவின் நாமம்தான் என்ன? அதை அறிவாயோ?" என்று சாலமோன் ஞானி, நீதி.30:4ல் கேட்பது புரியவில்லையா?

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இப்படியாய் ஏராளமான காரியங்களை சொல்லிக் கொண்டே போகலாம். இவைகளிலிருந்து நாமறிவது என்ன? "நாமம்" என்றால் பெயர் என்று மட்டும் அர்த்தமல்ல, பெயர் ஒருவருக்குத்தான் வைக்கப்படும், அழைக்கப்படும். எல்லோருக்கும் தேவனின் காரணப் பெயர்களை மாத்திரமே வைக்க முடியாது; அழைக்கவும் முடியாது; அப்படி அழைக்கவும் தேவகட்டளை இல்லை. யோ.1:12ஐ வாசித்தால், அவருடைய நாமத்தின் மேல்விசுவாசமுள்ளவன் தான் கிறிஸ்தவன் என்று அறிகிறோம். என்ன விசுவாசம்? நாமத்தின் மேல் விசுவாசம்! நாமம் என்றால் இயேசு என்று மட்டுமல்ல. அவரின் மகிமை, மாட்சிமை, மகத்துவம், வல்லமை, அதிகாரம், அன்பு போன்றவற்றைக் குறிக்கிறது. இவைகளை விசுவாசித்து ஏற்றுக் கொள்பவனே தேவனுடைய பிள்ளை. ஆமென். அல்லேலூயா! கோலியாத்துக்கு முன்னால் தாவீது சொன்னது:- சேனைகளின் தேவனாகிய கர்த்தரின் வல்லமையோடு, அதிகாரத்தோடு, மகிமையோடு வந்திருக்கிறேன் என்று பொருளாகும். அப்படியே, என் நாமம் தரித்த ஜனங்கள் என்றால், இஸ்ரேலர் எல்லாரும் தேவனின் மகிமை மாட்சிமை, அன்பு, மகத்துவம், வல்லமை, அதிகாரம் போன்றவற்றைத் தரித்திருப்பவர்கள் என்று பொருள். பிதாவின் நாமத்தினால்வந்திருக்கிறேன் என்றால், பிதாவின் வல்லமையோடு அன்போடு, அதிகாரத்தோடு, மகிமையோடு இயேசு வந்திருக்கிறார் என்று பொருள். கள்ள தீர்க்க தரிசிகளும், இயேசுவின் வல்லமையை, அதிகாரத்தை தரித்துக் கொண்டு அநேக அற்புத அடையாளங்கள் செய்து, தீர்க்க தரிசனமும்சொல்வார்கள் (மத்.7:21,22).

வெளி.14:1ல்வரும் 1,44,000 பேரின் நெற்றிகளில், அதாவது அவர்களின் சிந்ததனைகளில் உணர்வுகளில், mind-ல் பிதாவின் மகிமை, வல்லமை, அதிகாரம் எல்லாம் ஊடுருவிக் கிடக்கின்றது என்பதுதான், நாமம் தரித்தல் என்பதாகும்.

"என் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவார்கள்" (மாற்.16:17) என்றால், இயேசுவின் நாமத்திலே இருக்கும் அதிகாரம், வல்லமையினாலே பிசாசுகளை துரத்துவார்கள் என்று பொருள். ஆக, கிறிஸ்தவன் என்றாலே,

தேவனின் காரணப்பெயர்களை மாத்திரம் தரித்துக் கொள்பவன் அல்ல; அந்த பெயர்களுக்குள்ளே - நாமத்திற்குள்ளே - இருக்கிற மகிமையை, மாட்சிமையை, வல்லமையை அதிகாரத்தை தரித்துக் கொண்டு செயல்படுபவனே கிறிஸ்தவன். இவைகளை நாம் தரித்துக் கொள்ளும்போது, உபா.28:10ல் சொன்னபடி உலகம் நம்மை ஆச்சரியமாய்ப் பார்க்கும்; யோ.14:12ல் இயேசு சொன்னபடி அவரிலும் மேலான காரியங்களை செய்ய முடியும். அதனால் தான், உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அவருடைய அதிகாரத்தை யெல்லாம் விசுவாசிக்கிறவர்களுக்கு கொடுத்துவிட்டுப போனார் (மத்.28:19) தம்முடைய சமாதானத்தை வைத்துவிட்டுப் போனார்; அன்பை நம்மேல ஊற்றிருக்கிறார் (ரோ.5:5) வல்லமையை பெற்றுக் கொள்ள வழியையும் காட்டியிருக்கிறார். (மத்.17:21) அவருடைய இப்படியான நாமம் தரித்தவர்களாயிருக்க வேண்டும் என்று தான் நம்மை மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டி (Praise, Honour & Glory) அவருடைய கரத்தின் கிரியைகளின் மேல் அதிகாரியாக வைத்து, சகலத்தையும் நமக்கு கீழ்ப்படுத்தினார் (எபி.2:7) அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இப்படியாய் தேவ நாமத்தை தரித்துக் கொள்ள வழி என்ன? பவுல் சொல்வது போல, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், எப்படியாயினும் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கும் வசனத்தின் மூலமாய் தினந்தோறும் தேற வேண்டும். எதுவரையில் தேறியிருக்கிறோமோ அது முதல் ஒரே ஒழுங்காய் நடந்து, ஒரே தேவசிந்தையாய் இருக்க வேண்டும் (பிலி.2:10,16) இப்படியிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவ நாமம் தரிக்கப்பட்டவன் என்று பொருள். அவன் பிசாசை, உலகை, பாவத்தை, மாமிசத்தை ஜெயித்து வெற்றி நடைபோடுவான். அவனைக் கண்டு பிசாசு ஓடியே போகும்! கிறிஸ்துவுக்கு சாட்சியாயிருப்பான்! ஆமென்!

❖ ❖ ❖

## நம் கண்ணீர் பரலோகத்தில்தான் துடைக்கப்படுமா?

நிறைய கிறிஸ்தவர்களின் உள்ளத்திலே "இந்த உலக வாழ்க்கை கண்ணீரும் கவலையும் தான், பரலோகில்தான் கண்ணீர் மாறும்" என்று

எண்ணிக் கொண்டு கஷ்டத்தின் மத்தியிலே தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்கிறார்கள். பாவம், அறியாமையினாலே தேவ ஜனங்கள் சங்காரம் ஆகிறார்கள் (ஓசி.4:6) உலகத்தில் உபத்திரவம் உண்டு. உண்மைதான். ஆனால் "திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோ.16:33) என்று சொன்ன தேவனின் ஆறுதல் வார்த்தையை ஏன் மறக்கிறார்கள். தேவன் உனக்காகத்தானே உலகத்தை ஜெயித்தார். பின்னே ஏன் உனக்கு கண்ணீர்? விசுவாசித்தால் தேவனுடைய மகிமையை காண மாட்டாயா? (யோ.11:40) கெட்ட குமாரன் திரும்பி தன் அப்பாவிடம் வந்த பின்னும், முன்பு போல கண்ணீரோடும், கவலையோடும் இருந்தானா? வந்த அன்றே அவனுக்கு உயர்ந்த வஸ்திரம்; கைக்கு மோதிரம்; காலுக்கு பாதரட்சை; கொழுத்த கன்று; ராஜ உபசரிப்பு (லூக்.25:22,23) அப்படியானால் ராஜாதி ராஜா வீட்டுப் பிள்ளை ஏன் கலங்க வேண்டும்? கலங்காதே! திகையாதே என்று தேவன் சொன்ன வார்த்தையை விசுவாசிக்க வில்லையா? இயேசு தன்னுடைய தேவ சமாதானத்தையே உனக்கு வைத்து விட்டுப் போயிருக்கிறாரே மறந்து போனாயா?

**"மேகங்கள் நடுவினிலே என் நேசர் வரப் போகிறார்.**

**கரம்பிடித்து அழைத்துச் செல்வார், இயேசு கண்ணீரெல்லாம் துடைப்பார்"** என்ற பாட்டை வைத்து, வருகைக்குப்பின் தான் கண்ணீர் மாறும் என்று நினைக்கிறாயா? அதே சகோ. பெர்க்மான்ஸ் பாடிய

**"கடன் தொல்லை கஷ்டங்கள் நீக்கிடுவார்**
**கண்ணீர்கள் அனைத்தையும் துடைத்திடுவார்"**

என்ற பாட்டின் அர்த்தமென்ன? முன்னுக்குப் பின் முரணாய் அவர் பாடுவாரா? இல்லையென்றால் அதன் பொருள் என்ன? இயேசு உன்னோடேஇருக்கிறார். உன் கடன், வியாதி, பாவம், சாபம் எல்லாம் அவர் நீக்கி இவ்வுலகிலேயே கண்ணீர்கள் துடைக்கிறார். அப்படியென்றால் பரலோகில் துடைக்கும் கண்ணீர் எது? வியாதியோடு இருப்பவனுக்கு பரலோகில் போய்தான் வியாதி மாறி கண்ணீர் தீருமா? இல்லை. இல்லை... பூலோகிலே சிலுவையிலே நம் எல்லாருடைய கண்ணீருக்கும் முற்றுப் புள்ளி வைத்து விட்டார். வெளி.7:9-17ஐ வாசியுங்கள். வெள்ளை அங்கி தரித்து, குருத்தோலை பிடித்து, பரலோக சிங்காசனத்தில் நிற்கும் மிகுந்த உபத்திரவத்திலிருந்து பரலோகிற்கு இரத்த சாட்சியாய் மரித்தவர்களின் கண்ணீரை தேவன் துடைப்பார். ஏன் அவர்களுக்கு கண்ணீர்? இரத்த சாட்சியாய் கூட மரிக்க வேண்டிய கட்டாய மென்ன? நீயும் நானும் மனம் திரும்பி பாவ மன்னிப்பைப் பெற்று இயேசுவின் பிள்ளையாய் வசனப்படி ஜீவிக்கும்படி வழி நடத்த தேவனால்

அனுப்பப்பட்ட ஊழியக்காரர்களாகிய இவர்கள், உனக்காகவும் எனக்காகவும் தானே கண்ணீர் விட்டு கதறியிருப்பார்கள; அதனால்தானே ஊழியத்தில் இரத்த சாட்சியாய் மரித்திருப்பார்கள். அவர்கள் பரலோகிலே உன்னையும் என்னையும் கண்டு ஆனந்த மடைவார்களே! அப்போது தான் அவர்கள் கண்ணீர் துடைக்கப்படும். இப்படியாய் நீயும் உன் நண்பர்களுக்காய், உறவினர்களுக்காய் தினமும் அழுதால், அதன் பலனை பரலோகில் நீ காண்பாய்; எதிர் பாராதவர்கள் பரலோகில் இருக்கக் கண்டு நீ மகிழ்வாய். உன் கண்ணீ ரெல்லாம் துடைக்கப்படுகிறது. மற்றபடி உன் உலக ரீதியான கண்ணீரெல்லாம் இங்கேயே துடைக்கப்படும்.

❖ ❖ ❖

## தேவன் நம்மை விட்டு எப்போது விலகுவார்?

நாம் பாவம் செய்தால் கர்த்தர் நம்மை விட்டு விலகுவார் என்ற போதனைகள் கிறிஸ்தவ சபைகளிலே ஊடுருவிக் கிடக்கின்றன. இதை நம்பி, அறிந்தோ அறியாமலோ பாவம் செய்துவிட்ட விசுவாசிகள். “கர்த்தர் என்னை விட்டு விலகிவிட்டார்; நான் அனாதையாய் பாதுகாப்பின்றி நிர்வாணியாய் நிற்கின்றேன்” என்று அங்கலாயப் பதை கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படியானால் தாவீது பத்சபாளுடன் பாவம் செய்த போது அவனை விட்டு விலகாமல், நாத்தான் மூலமாய் தேவன் சந்தித்து நல்வழிக்குக் கொண்டு வந்தார் என்பது தவறான கருத்தாகுமா? பாவம் செய்த கொலைகாரன் காயீனை விட்டு தேவன் விலகவில்லையே ஏன்? “நான் உன்னை விட்டு விலகுவது மில்லை, கைவிடுவதும் இல்லை” என்று யோசுவாவிடமும், “பூமியின் கடைசி பரியந்தம் உன்னோடு இருப்பேன்” என்று சீஷர்களிடமும் சொல்லிய தேவன் மனம் மாறுவாரோ? “சொன்னதைச் செய்கிறவர், செய்வதைச் சொல்லுகிறவர்” என நாம் மார்தட்டி அறிக்கையிடுவது பொய்யாகுமா? தேவன் தாமே விளக்குவாராக!

யாத். 14:19,20ல் “தேவ தூதனானவர் விலகினார்” என்று உள்ளதை வைத்துக் கொண்டு, கர்த்தர் எப்போதும் விலகுவார் என்று சிலர் சொல்கின்றனர். பாவம் செய்யும் போது விலகுவார் என்று சொன்னவாய், அன்றைக்கு இஸ்ரேல் மக்கள் அந்த செங்கடலில் என்ன பாவம் செய்தார்கள் என்று சொல்ல முடியுமா? பின்னாலே வருகின்ற பார்வோனின் சேனையினின்று பாதுகாக்கவே, முன்னாக நடந்த தூதனானவர், வார்த்தையாகிய தேவன் - விலகி அவர்களுக்குப் பின்னாக நடந்தார் என்ற வசனத்தை வாசிக்கவிடாமல், அவர்களின் மனக்கண்களை பிசாசானவன்

குருடாக் கினானனோ தெரியவில்லை! அப்படியே, “கர்த்தாவே திரும்பி வாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பிர்” (சங்.90:13) என்று மோசே கூறுவதை வைத்து, கர்த்தர் இஸ்ரேலரை விட்டு விலகிப் போனார் என்று போதிப்பவர்கள் உண்டு. தேவனுடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு (சங்.30:5) ஆமென். “அற்ப காலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன். ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்” (ஏசா.54:8) என்ற வசனத்தை தியானித்தால் விபரம் புரிந்து விடும். தன்னுடைய பிள்ளைகள், பிடரியை கடினப்படுத்தி, வணங்காக் கழுத்துள்ளவர்களாகி, வசனத்திற்கு விரோதமாய் தொடர்ந்து பாவம் செய்யும் போது - பாவத்தில் நிலைத்திருக்கும் போது, தேவனுக்கு கோபம் வருகிறது. அதுவும் அற்பகால கோபம், அதுவும் ஒரு வினாடி (ஏசா.54:7) இந்த ஒரு இமைப்பொழுதிலும் கூட ஒரு வினாடியில் தான் மோசே சங்.90:13ல் “திரும்பி வாரும்” என்கிறான். மற்றப்படி தேவன், “தன் தாய் பாலகனை மறந்தாலும், நான் மறவேன்” என்று சொன்னவர் உண்மையுள்ளவர். பாவம் செய்த பிள்ளை திருந்த வேண்டும் என்று நினைக்கும் இரட்சகர் தானே நம் ஆண்டவர். அதற்காகத்தானே விண்ணிலிருந்து அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலாகி பூமிக்கு வந்தார். (பிலி.2:6-8) அல்லேலூயா!

“என் முகத்தை மறைத்தேன்” என்று தேவன் சொல்வதாக ஏசா.54:8ல் எழுதியிருக்கிறான். தேவன் தான் மறைக்கிறாரா என்று பார்ப்போம், ஏசா.59:2ஐ வாசியுங்கள். “உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது” ஆக, நம்முடைய பாவத்தாலேயே அவருடைய முகம் நமக்கு மறைக்கப்படுகிறது. மற்றப்படி தேவன் நம்மை நோக்கிக் கொண்டே தான் இருக்கிறார். அவர் எதைக் கொண்டும் தம்மை மறைப்பதில்லை. உங்களுக்குத் தெரியுமா “கர்த்தர் உன் வலது பக்கத்திலே நிழலாய் இருக்கிறார்” என்று (சங்.127:5) அப்படியானால் இருட்டிலே இருக்கும் போது நிழலாய் இருக்கும் ஆண்டவர் இல்லாமல் போகிறாரா அல்லது மறைத்துக் கொள்கிறாரா அல்லது மறைந்து போகிறாரா? சிந்தியுங்கள். பாவ இருள் நம்மை மூடும்போது நிழலாயிருக்கும் ஆண்டவரை நாம் காண முடிவதில்லை. அவ்வளவுதான். மற்றப்படி வசன ஒளி வீசும்போது அவரைக் காண முடிகின்றது. இங்கே முகத்தை காண்பதாய் என்று சொல்வது உண்மையான தேவனின் முகத்தையா? அல்ல... அல்ல... நம் தேவன் ஆவியாயிருக்கிறார். (யோ.4:24) ஆவியான தேவனை இந்த

மாம்சக் கண்களினால் ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. (1 தீமோ.6:16) தரிசனமோ, கனவோ என்றாலும் கூட அதுவும் சுயத் தோற்றமல்ல (2 பேது.1:20) அப்படியானால் முகத்தைக் காண்பது என்றால் தேவ பிரசன்னத்தை காண்பது, உணர்வது, அனுபவிப்பது ஆகும். ஆமென். உபா.31:17, 18: 32:20, ஓசி 5:6 போன்ற வசனங்களையெல்லாம் மேற்சொன்ன வேத வெளிப்பாட்டோடு தியானித்து அறியுங்கள். "என் ஜனங்கள் அறியாமை யினாலே சங்காரமாகிறார்கள்" (ஓசி.4:6) என்ற வசனம் கிறிஸ்தவ சபையில் நிறைவேறக்கூடாது. ஏனென்றால், இயேசு கிறிஸ்து மூலமாய் நமக்கு கிருபையும், சத்தியமும் வந்தது (யோ.1:17) அதனாலே "வெளியாக்கப்படாத மறை பொருளுமில்லை, அறியப்படாத இரகசிய முமில்லை" (லூக்.12:2) நாம் பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை விட மேலானவர்கள். அல்லேலூயா! (எபி.11: 39,40) யோபு. ஆபிரகாம் போன்றவர்களை விட்டும் தேவன் விலகினார் என்று பிரசங்கிக்கிற மேதாவிகளும் உண்டு. அப்படிப்பட்டவர்களின் மனக்கண்கள் பிரகாசமாகட்டும் (எபே.1:19).

புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாகிய நாமோமணவாட்டி; அவரோ மணவாளன். நமது மணவாழ்க்கையில் விவாகரத்தே - Divorce - கிடையாது. ஆமென். தேவன் இணைத்ததை ஒருவனும் பிரிக்க முடியாது. இப்படிப்பட்ட விசுவாசத்தோடே வாழும்கிறிஸ்தவனும் தவறுவதற்கு - இடறுகிறதற்கு - பாவம் செய்வதற்கு வாய்ப்புண்டு. அப்பொழுதும் கூட மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாய்ப் பெற்ற பரிசுத்த ஆவியானவர் நம்மை விட்டு விலகுவது மில்லை, கைவிடுவதும் இல்லை. நமக்குள்ளே இருந்தே துக்கப்படுவார் (எபே.4:30) இப்படிப்பட்ட சிலாக்கியம் பெற்ற கிறிஸ்தவ ஜனம் பாக்கியமுள்ளது. அல்லேலூயா! பெற்ற தகப்பனையே உதறித்தள்ளி விட்டு ஓடிப்போனான் கெட்டகுமாரன், ஆனாலும் அவனை தகப்பன் தண்டிக்கவில்லை. பொல்லாங்கினால் சிட்சிக்கவில்லை. அவனின் மனமாற்றத்திற்கான வழியை உருவாக்கினார் (ஆண்டவர்). மனந்திருந்திய மைந்தனுக்காய் காத்திருந்தார் அப்பா! கண்டுகளி கூர்ந்தார். இந்தக் கதையை சொல்லிக் கொடுத்த நம் ஆண்டவர் எப்படியிருப்பார் என்று யோசித்துப் பாருங்கள். தேவனை அறிந்திருக்கிறான் கிறிஸ்தவன், ஆனால் தேவனைப் பற்றி அறியவில்லை. அதனால் தான் இப்படிப்பட்ட குழப்ப போதனைகள்.

அப்படியானால் நம் தேவன் நீதிபரர் அல்லவா! நீதியைச் சரிக்கட்டமாட்டாரா? என்ன பாவம் செய்தாலும் விலகவே மாட்டாரா? என்று

நீ கேட்கும் கேள்வி என் ஆவியில் ஒலிக்கிறது. 40 ஆண்டுகள் விக்கிரக ஆராதனை, அந்நிய நுகப் பிணைப்பு போன்றவற்றில் திளைத்திருந்த இஸ்ரேல் மக்களோடும் கடைசிவரை கூட இருந்தவர் நம் ஆண்டவர். பல நேரங்களில் அவர்களின் பாவங்களின் சாபங்களினாலே அவர்களே மடிந்து போனார்கள். தேவ நாமம் - தேவமகிமை - அடியோடு அற்றுப் போகும் நிலைவரும் போது தான் ஒரு சில நேரங்களில் நம் தேவனின் தண்டனை வெளிப்பட்டது. இது சரித்திர நியாயத்தீர்ப்பு, மற்றவர்களுக்கு எச்சரிப்பு உண்டாவதற்காய், இதைத்தான் 1 தீமோ.5:24ல் பவுல் எழுதுகிறான். இன்றைக்குக் கூட உனக்காகவும் எனக்காகவும் பிதாவிடத்தில் பரிந்து பேசுகின்றார் என்றால் நம் தேவனின் அன்பைப் பாருங்கள் (1 யோ.2:1) நம் தேவன் அன்பாகவே இருக்கிறார். சீயோன் குமாரத்தியாயிருந்து மணவாட்டியாகி, பின் சோரம்போன இஸ்ரேல் சபையிலும் மனம் மாறி வருபவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களை விசுவாச வீரர்களாய் கிறிஸ்துவுக்குள் நடத்தி, இரகசிய வருகைக்கென்று ஆயத்தம் பண்ணுகிற ஆண்டவர். நமது மணவாட்டி சபையாரை எப்படியாய் நடத்தவார் என்று ஒருகணம் சிந்தித்துப் பாருங்கள். உங்களின் இந்த சிந்தனை சுய அறிவால் அல்ல. உலக அறிவால் அல்ல, வசன அறிவால் - வேத அறிவால் - மட்டுமே இருக்க வேண்டும்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உன்னைக் கரம் பிடித்த ஆண்டவர் உன்னைவிட்டு எப்போதும் விலகமாட்டார். மணவாளனைப் போல, மணவாட்டியாகிய நீயும் வசனவிசுவாசத்தில் நிலைத்திருந்து அவரைவிட்டு விலகாதிருப்பாயாக! காலம் கடைசிகாலம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! அல்லேலூயா!

❖ ❖ ❖

## இரட்சிக்கப்படாமல் மரித்தவர்களுக்கு மறுபடியும் இரட்சிப்பு உண்டா?

1 பேது.3:19,20; 4:6; 1 கொரி.15:29 போன்ற வசனங்களை வைத்து, மரித்தபின்னும் இரட்சிக்கப்படுகிறதற்கு தருணம் உண்டு என்று சிலர் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்தது தான் ரோமன் கத்தோலிக்கர் போதிக்கும் உத்தரிக்கிறஸ்தலம் (Purgatory) என்பது. 1 யோ.2:2, 1 தீமோ.4:10; 2:4; யோ.4:42 போன்ற வசனங்களை வைத்துக் கொண்டு., இரட்சிக்கப்படாத உலகத்தாருக்கும், மரித்த பின் இரட்சிப்பு உண்டு

என்றும் சிலர் போதிக்கின்றனர். இப்படி போதிப்போர் ஆவிக்குரிய சபையார் என்று தங்களை வெளிச்சம் காட்டுகிறார்கள். இந்தக் காரியங்கள் பற்றி, ஆவியானவர் விளக்குவாராக!

வேதத்திலில்லாத ஏதேனும் வெளிப்பாடுகளோ, தரிசனங்களோ கிடைத்தாலும் அது வேத வார்த்தைக்கு ஒத்திருந்தால் மாத்திரமே ஏற்றுக் கொள்ள வேண்டும். (See வெளி.22:18-19) வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனியுங்கள் (Law & Testimony) இந்த வார்த்தையின்படி (ஏசா.8:20) சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து (இயேசுவின்) வெளிச்சமில்லை. மனிதன் ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. 9எபி.9:27) அவனவனுடைய பூமியின் கிரியைகளின்படி இயேசு அளிக்கும் பலன் அவரோடே கூட வருகின்றது. (வெளி.22:12) இந்த பூலோக வாழ்க்கையிலே நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும் (மத். 7:19) என்று வேதம் சொல்கின்றது. பரலோகப் பிதாவின் சித்தப்படி இந்தப் பூமியில் செய்பவர் மட்டுமே பரலோகம் போவர் (மத்.7:21).

லாசரு - ஐஸ்வர்யவான் நிகழ்ச்சியில், பாதாளம் போன ஐஸ்வரியவான், பரதீசு போக சாத்தியம் இல்லாததால்தானே தன் சகோதரர்களும் தன்னைப்போல் வரக்கூடாது என்றெண்ணி, பூமியிலேயே அவர்கள் தேவ வசனத்திற்குள் வாழ்ந்து மரித்து பரலோகம் போக வேண்டுமென்று எண்ணி, லாசருவை மறுபடியும் பூமிக்கு அனுப்ப கேட்டுக் கொண்டானல்லவா (லூக்.16:19-31)! இந்த பூமியில் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் பரலோகம் போக முடியாது என்று இயேசு பழைய ஏற்பாட்டு காலத்திலே சொன்னது பொய்யாகுமா? (யோ.3:3-5) இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட இரட்சிக்கப்பட்ட நீதிமானே, பரலோக வாழ்வை அடையப் போவது அரிது என்று 1 பேது.4:18 சொல்வதை தியானியுங்கள். ஆக, மனிதன் இந்த பூமியிலேயே இரட்சிக்கப்பட்டு, அந்த இரட்சிப்பில் பூமியில் சாகும்வரை இருந்தால்தான் பரலோகம் கிடைக்கும் (மத்.24:13). இவைகளெல்லாம் வேத சத்தியங்கள். ஆமென்.

1 பேது.3:19, 20ஐ வாசியுங்கள் (இதன் விளக்கம் ஆசிரியரின் தெரிந்து கொள்ளுங்கள் என்ற நூலில் வாசிக்கலாம்) இயேசு மரித்தபின் தான் பாதாளம் போனாரே ஒழிய, உயிர்ப்பிக்கப்பட்ட பின் பாதாளம் போகவில்லை என்று முதலில் அறிக. எந்த ஆவியிலே இயேசு கிறிஸ்து உயிர்ப்பிக்கப் பட்டாரோ, அந்த ஆவியிலேதான், நோவா காலத்திலே கீழ்ப்படியாமல் போனவர்களுக்கு பிரசங்கித்திருக்கிறார். இந்த ஆவி, நித்தியம் நித்தியமாய்

இருக்கும் பரிசுத்த ஆவிதான். இந்த பரிசுத்த ஆவியில் தான். நோவாகால மனிதர்களோடு தேவன் போராடி, அவர்கள் கீழ்ப்படியாததினால் அவர்களைப் படைத்த தற்காகவே மனஸ்தாபப்பட்டு ஜலப் பிரளயத்தால் அழித்தார். (ஆதி.6:3,6). இயேசுவை உயிரோடுஎழுப்பின ஆவியிலே பிரசங்கித்த வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தோர். நோவாவின் குடும்பத்தார் மட்டுமே! கீழ்ப்படியாதவர்கள்தான். பிசாசின் கட்டுக்குள், காவலுக்குள், சிறைக்குள் இருந்தவர்கள். இப்படிப்பட்ட ஆவிகளை விடுவிப்பதுதானே தேவசித்தம் (ஏசா.61:1-3) அல்லேலூயா! எனவே பாதாளப் பிரசங்கம் தேவையில்லை. அதனால் இரட்சிப்பும் இல்லை. இரட்சிக்கப்பட, மரித்தபின் இன்னொரு தருணமும் இல்லை. ஆமென். பாதாளத்தில் சரீரம் இல்லை, ஆவியில்தான் இருக்கிறார்கள் என்று உணர்ந்தால், 2 கொரி.5:10ன் படி (சரீரத்திலே அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது கிருபாசனத்திற்கு முன்னே நிற்க வேண்டும்) ஆவியாயிருக்கும் நிலையில் வசனம் பிரசங்கிப்பதோ அல்லது பிரசங்கிப்பதை கேட்பதோ ஒன்றுக்கும் உதவாது என்று உறுதியாய்ச் சொல்லலாம். எனவே இரட்சிக்கப்பட மரித்த பின் தருணமே இல்லை. அப்படியிருந்தால் சரீரத்தில் இருக்கும் போதே இரட்சிக்கப்படாமல் ஜாலியாக இருந்து விட்டு மரித்த பின் இரட்சிக்கப்படலாம் என்று நாமும் இருக்கலாமல்லவா!

1 பேது. 4:6ஐ வைத்துக் கொண்டு மரித்தவர்களும் இரட்சிக்கப்படும் படியாய் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படும் என்கின்றனர். இங்கே சொல்லப்பட்ட மரித்தவர்கள். சரீரத்தில் மரித்தோர் அல்ல என்றும் ஆவியிலே மரித்தோர் என்றும் உணருங்கள் (see எபே.2:1) 1 கொரி.5ல், பாவமனுஷனை, இந்த உலகிலேயே பவுல், பிசாசுக்கு ஒப்புக்கொடுத்து ஆக்கினைக் குள்ளாக்கியது போல, ஆவியிலே மரித்த இரட்சிக்கப்படாதோர் எத்தனையோ பேர் நம் கண் முன்பாகவே மாம்சத்திலே ஆக்கினைக் குள்ளாக்கப்பட்டிருப்பதை காண்கிறோம். இப்படியான மாம்ச ஆக்கினை, மாம்சம் உள்ள பூமியில் தானே இருக்கும், பாதாளத்தில் இருக்காது அல்லவா! எனவே இங்கேயே இரட்சிக்கப்பட்டு பூமியிலே வாழ தேவன் விரும்புகிறார். அதுவே சத்தியம், மேலும், 1 கொரி.15:29ல் பேசப்படுவது மனிதனின் உயிர்த்தெழுதலைப் பற்றி. அதற்கு ஆதாரம் இயேசுவின் உயிர்த்தெழுதல், இயேசு உயிர்த்தெழாவிட்டால் மரித்த இயேசுவை சொல்லி "இயேசு மரித்தார்; அடக்கம்பண்ணப் பண்ணப்பட்டார்; 3ம் நாள் உயிர்த்தெழுந்தார் என்பதற்கு அடையாளமாய்" ஏன் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கிறீர்கள் என்று பவுல் கேள்வி கேட்டு நீங்கள் மரித்தோரை வைத்து எடுக்க வில்லை.

உயிர்த்தோரை வைத்துதான் எடுக்கிறீர்கள்" என்று எழுதுகிறான். (மரித்தோர்களுக்கு ஞானஸ்நானமா? என்ற தலைப்பில் உள்ளதை வாசியுங்கள்) மரித்தபின் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் கொடுப்பதில்லையே!

1 யோ. 2:2, யோ.4:42, 1 தீமோ.4:10, 2:4, போன்ற வசனங்களில் இரண்டு வித இரட்சிப்பு இருப்பதாய் சிலர் போதிக்கின்றனர். "கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, உலக மக்கள் அனைவருக்கும் பாவநிவர்த்தி மற்றும் இரட்சிப்புத் தருபவர் நம் ஆண்டவர். இரட்சிக்கப்பட்ட பின்னும் செய்யும் பாவங்களுக்கு பாவ நிவர்த்தி வேண்டாமா? இறுதி இரட்சிப்பு (மத்.24:13) வேண்டாமா?" என்ற அர்த்தத்தில் தான் அந்த வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. 1000 வருட ஆட்சியில், ஆதாமிலிருந்து இரட்சிக்கப்படாத அனைவரும் (ஹிட்லர் - சதாமுசேன் போன்றவர்களும்) பங்கேற்பர் என்றும், அப்படிப்பட்டவர்கள் அப்போது தவறான யோசனை செய்தாலும், உடனடியாக தேவதூதர்கள் வந்து இரும்பு கரத்தைக் கொண்டு நொறுக்கி அவர்களை இரட்சிப்புக்குள் நடத்தவார்கள் என்றும் அவர்கள் போதிக்கிறார்கள். 1000 வருட அரசாட்சியில் யாருக்குமே இரட்சிப்பு இல்லை. இஸ்ரேலரைத் தவிர (ரோ.11:25- 27). இப்படித்தான் வேதம் போதிக்கிறது, மற்றப்படி வசன ஆதாரமின்றி எதையும் கிறிஸ்தவன் நம்பத்தயாராய் இல்லை.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மரித்தபின் இரட்சிப்புக்கான தருணமே இல்லை என்று ஆணித்தரமாய் விசுவாசி, அதை அப்படியே மற்றவர்களுக்குச் சொல். பிசாசின் ஆவி, கிரியை செய்யும் காலமென்பதால் காதுள்ளன் கேட்கக்கடவன். இந்த காலத்தில்தானே உத்தரிக்கிற ஆத்மாக்கள் திருவிழா, All Saints Day, திவசம் செய்தல், ஆறுகளிலும் கடல்களிலும் அஸ்தி கரைத்தல், ஆத்மா சாந்தியடைய ஜெபம், பிராத்தனைக் கூட்டங்கள், ஏழைகளுக்கு தருமங்கள் செய்தல் போன்றவை நடக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்களால் மரித்த பின்னும் இரட்சிப்புக் கிடைக்க தருணம் உண்டென்றால், பூமியிலிருக்கும் போது நாம் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து, இப்படிப்பட்ட சடங்குகளை மரித்த பின் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டு, பலமிருக்கும் வரைக்கும் பாவங்கள் செய்து விட்டு, மரித்துப் போகலாமல்லவா! இரண்டாவதாய், மரித்தபின் இரட்சிப்பை பெற்றுக் கொள்ளலாமல்லவா! சிந்தியுங்கள்! நாமும் வாழ்ந்து மரித்து 1000 வருட ஆட்சியில் இரட்சிப்பைப் பெறலாமா? 2வது தருணம் பெற்று இரட்சிக்கப்படுவோர்தான் புதிய பூமியில் வாழ்வார்களா? மிருகங்கள், பறவைகள், மச்சங்கள் அங்கே உண்டா? அவைகளை இவர்கள்

ஆளுவார்களா? இவைகளுக்கெல்லாம் வசன ஆதாரம் இல்லையே! வசன ஆதாரம் இல்லாத போதனைகள் எல்லாமே பிசாசின் போதனைகள் தானே!

❖ ❖ ❖

## "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்" – இது சரியா?

யோபு என்ற தேவ மனுஷனின் எருதுகள், கழுதைகள், ஒட்டகங்கள் போன்றவற்றை எதிரிகள் கொள்ளையடித்து விட்டனர். வேலையாட்கள் வெட்டிப் போடப் பட்டார்கள். அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டார்கள். ஆடுகளும் சுட்டெரிக்கப்பட்டன. குமாரரும் குமாரத்திகளும் பெருங் காற்றினால் மடிந்து போனார்கள். இந்த செய்தி யோபுவுக்கு தெரிவித்தபோது, "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" (யோபு.1:21) என்று யோபு சொல்கிறான். இந்த யோபுவின் வார்த்தையை வைத்துக் கொண்டு, கர்த்தரே மேற்கண்ட பொல்லாத காரியங்களைச் செய்தார் அல்லது அனுமதித்தார் என்று பல ஊழியர்கள் பிரசங்கிக்கிறார்கள். இது சரியா? இந்த கருகலான சத்தியத்தை தேவ ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

யோ.10:10ன் படி தேவன் தந்த நமது ஆசீர்வாதங்களையும், வல்லமையையும், மகிமையையும் சாத்தான் தான். திருடுவான், கொல்லுவான், அழிப்பான்; தேவனோ நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் செயல்படுகிறார். நன்மையே அவரின் குணாதிசயம், செய்கை (எபே.2:10, அப்.10:38; யாக்.1:17) தீமை செய்வது - சோதிப்பது - எல்லாமே பிசாசின் குணாதிசயம், செய்கை (யாக்.1:13) உண்மை இப்படியிருக்க, கர்த்தர் கொடுத்தார் என்ற யோபுவின் வார்த்தை சரியே! ஆனால் கர்த்தர் எடுத்தார் என்ற யோபுவின் வார்த்தை சரியல்ல, தவறானது, தேவனைப் பற்றிய வெளிப்பாடு இல்லாமல் சொல்லப்பட்ட வார்த்தை. **"என்னை ஆட்கொண்ட இயேசு உம்மை யாரென்று நானறிவேன். உண்மை உள்ளவரே, என்றும் நன்மைகள் செய்பவரே" என்ற பாடலைப் பாடுகிற ஊழியர்கள்.** யோபு 2:10ல் உள்ள யோபுவின் ஆவியால் ஆட்கொண்டு, "சாத்தானின் கையிலே அவனுக்குண்டான வையெல்லாம் இருக்கிறது, யோபுவின் மேல் கை நீட்ட அவனுக்கு அதிகாரமிருந்தும் அவனுக்கு பாதுகாப்பாய் தேவன் நிற்கிறார்" (யோபு.1:12, 2:6,7) என்ற சத்தியம் புரியாமல், "கர்த்தர் எடுத்தார்; கர்த்தர் கொடுத்தார்" என்று எல்லா

இடங்களிலும் ஏன் கல்லறையிலும் கூடச் சொல்கிறார்கள். யோபு 1:21 என்பது வேதமல்ல, தேவனுடைய வார்த்தையல்ல, இது யோபுவின் சிந்தனையில் உதித்த வார்த்தை என்பதை அறிய வேண்டும். வானத்திலிருந்து பிசாசும் அக்கினியை இறக்குவான் (வெளி.13:13) என்ற அறிவு இல்லாமல், ஆடுகளையும் வேலையாட்களையும் தேவனுடைய அக்கினி சுட்டெரித்தது என்று சொன்ன யேபுவின் வேலைக்காரனைப் போல் நாம் இல்லையல்லவா!

உபா. 32:39ஐ வைத்துக் கொண்டு "கர்த்தர் கொல்லுகிறார், உயிர்ப்பிக்கிறார்" என்று சொல்வது போல யோபு 1:21ஐயும் சொல்கிறார்கள். உபா.32:39ஐ வாசிக்கு முன்னே உபா.32:35 முதல் வாசிக்க வேண்டும். பழிவாங்குபவர் - நியாயத்தீர்ப்பு செய்பவர் நம் ஆண்டவர். இந்த ஆண்டவர் நியாயத்தீர்ப்பிலே கொல்லுகிறார், உயிர்ப்பிக்கிறார். காயப்படுத்துகிறார், சொஸ்தப்படுத்துகிறார் என்ற உள்ளது. இந்த நியாயத்தீர்ப்பு என்பது, **ஆக்கினையில்லாத நியாயத்தீர்ப்பு, சரித்திர நியாயத்தீர்ப்பு, இறுதி நியாயத்தீர்ப்பு** போன்ற பல பிரிவுகள் உண்டு என அறிக. கொல்லுவதும் காயப்படுத்துவதும் ஆக்கினை நியாயத்தீர்ப்பு (ரோ.8:1) இந்த நியாயத் தீர்ப்புகளை தேவன் செய்ய முடியும் என்று தான் வேதம் சொல்லுகிறதே ஒழிய, ஒரே மனிதனையே அவர் கொன்று பிறகு உயிர்ப்பிக்க மாட்டார். காயப்படுத்தி பிறகு சொஸ்தமாக்கமாட்டார், அவர் எல்லோருக்கும் செய்யும் காரியங்கள் இது தான். சத்தியத்தை அறிந்தால்தான், சாத்தானின் கட்டுகளிலிருந்து முழுமையான விடுதலை கிடைக்கும். இந்த வெளிச்சத்தில் 1 சாமு.2:6, 2 ராஜா 5:7 போன்ற வசனங்களையும் தியானியுங்கள்.

தாலந்து பற்றிய நீதிக்கதையில், (மத்.25:14-30) கொடுத்த ஒரு தாலந்தை, பொல்லாதவனும், சோம்பலுமான ஊழியக்காரனிடமிருந்து எஜமான் திரும்ப எடுத்துக் கொண்டான் என்று அறிகிறோம். இதை வைத்துக் கொண்டு சிலர், கொடுக்கிற கர்த்தர் எடுத்துக் கொள்வார் என்றும் நம்புகிறார்கள். அந்தக் கதையை தியானித்தால் நியாயத்தீர்ப்பின் அனுபவமே அதில் வெளிப்படும். மத்,.25:30ஐ வாசித்தால் அவனுக்கு தண்டனை அளிக்கப்படுகிறது என அறிகிறோம். ஆக, இடையிலே, தேவன் கொடுத்ததை திரும்ப எடுக்கவே மாட்டார்; அல்லேலூயா! இடையிலேயே திரும்ப எடுப்பது - பிடுங்குவது - திருடுவது எல்லாமே பிசாசின் வேலையாகும். ரோ.11:29ஐ வாசித்தால் அவர் கொடுத்த கிருபை வரங்கள் மாறாதவை. கொடுத்தது கொடுத்ததுதான். அக்கிரமச் செய்கைக் காரனாய் (Lawlessness) இருந்தாலும் கிறிஸ்தவன் தனக்குக் கொடுத்த வரங்களிலே பெரிதாய் காணப்படுகிறான் என்று மத்.7:21, 22ல் அறிகிறோம். தவறு செய்வதால் வரங்கள் மாறாது....

பாருங்கள். தாவீதைக்கொல்ல தேடும் சவுல், கடைசி வரை தீர்க்கதரிசன வரத்தில் நிலைத்திருந்தான். இயேசுவை சிலுவையிலே தொங்கவிடப் போகும். காய் பாவும், இயேசுவைப்பற்றிய தீர்க்கதரிசன வரத்தில் நிலைத்திருந்தான். விழுந்து போன தூதர்களுக்குக் கூட தேவன் தமது வல்லமையை எடுத்துக் கொள்ளவே இல்லை. கொடுத்த வரங்களும் வல்லமையும் நியாயத்தீர்ப்பிலேதான் பிடுங்கப்படும். நம் தேவன் கொடுப்பதிலே வள்ளல், கொடுத்துக் கொடுத்து சிவந்த கரம் நம் தேவனின் கரம்.

யோபுவுடன் காரியத்தில் கூட, தேவன் கொடுத்ததை - செல்வத்தை, பிள்ளைகளை தெய்வீக ஆரோக்கியத்தை, சமாதானத்தை, விசுவாசத்தை - பிசாசானவன் எடுத்தான் (யோபு.2:7) பிசாசின் சிறையிருப்புக்குள் யோபுவை ஆழ்த்தினான், தேவனோ யோபுவின் சிறையிருப்பை மாற்றி, தான் கொடுத்ததை எடுத்த பிசாசின் நிலைக்கு மாறாக, மறுபடியும் இரண்டு மடங்காய் கொடுத்தார்! (யோபு.42:10) அல்லேலூயா! இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நம் தேவன் "கொடுக்கிற தேவன், கொடுத்ததை எக்காரணம் கொண்டும் எடுக்காத தேவன்" என்பதை மட்டும் மறந்துவிடாதே! ஜீவனைக் கொடுக்கவும் அந்த ஜீவன் பரிபூரணப்படவுமே அவர் வந்தார் (யோ.10:10) ஆமென். தேவனால் கிடைக்கப்பட்ட ஆசீர்வாதங்களெல்லாம் உம்மைவிட்டு எடுபட்டுப் போவதற்கு காரணம் உன் பாவமே! உன் சாபமே! எல்லாவற்றுக்கும் மேலாக சாத்தானே! மாறாக, தேவன் மேல் குற்றம் சாட்டுவது அறியாமை! தேவனைப் பற்றிய அறிவு இல்லாமை! (ஓசி.4:6) தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமை! இந்த ஆமைகள் உனக்குள் புகுந்து கொள்ள இடங்கொடாதே! ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!!

❖ ❖ ❖

## ஆவியானவர் "டிக்டேட்" பண்ணி எழுதப்பட்டதுதான் வேதமா?

வேத வாக்கியங்கள் எல்லாம் இரட்சிக்கப்பட்ட தேவ மனுஷன் தேறினவனாவதற்கு எழுதப்பட்டது. எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியாக்க எழுதப்பட்டது (2 தீமோ.3:16,17). இப்படி நன்மைக்காகவே கொடுக்கப்பட்ட வேத வார்த்தை, அதுவும் விசேஷமாய் பழைய ஏற்பாட்டு வேதவார்த்தை,

முன்னுக்குப்பின் முரணாய்த் தெரிவதால் தேவசித்தம் இன்னதென்று புரிந்து கொள்ள இயலாமல், பல சபைகள் பலவாறாய்ப் போதிக்கின்றன. கேட்கிறவர்களும் ஆராய்ச்சி சிந்தனையோடு கேட்காததால் அனைத்திற்கும் ஆமென் போடுகின்றனர். இதனால் சாத்தான் சந்தோசமடைகிறான். ஆவியானவர் துக்கப்படுகிறார். (எபே.4:30) இப்படிப்பட்ட நிலையிலிருந்து கிறிஸ்தவனுக்கு விடுதலையே இல்லையா? ஆவியானவர் விளக்குவாராக.

பூர்வகாலம் முதல் பங்கு பங்காகவும், வகை வைகயாகவும் தீர்க்கதரிசிகள் மூலம் திருவுளம் பற்றின தேவன், கடைசி நாளில் குமாரன் மூலமாய் திருவுளம் பற்றினார் (எபி.1:1,2) எப்படி திருவுளம்பற்றினார்? 2 தீமோ. 3:16ன் படி தேவ வார்த்தைகள் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டது. (Inspiration) தூக்கிக் கொடுக்கப்படவில்லை அல்லது ஆவியானவரால் வரிக்கு வரி "டிக்கெட்" பண்ணப்படவுமில்லை. ஆவியானவர் கருத்துக்களை கொடுப்பார். எழுத்தாளர்கள் தங்கள் திறனுக்கும், அறிவுக்கும், சிந்தனைக்கும், ஞானத்திற்கும், காலத்திற்கும், சூழ்நிலைக்கும், பண்பாட்டிற்கும் ஏற்றபடி எழுதுவார்கள். இப்படிக் கொடுக்கப்பட்டு எழுதப்பட்ட முறையை 4 விதமாகப் பிரிக்கலாம்:-

(1) தேவனே நேரிடையாய் சொன்ன வார்த்தை (யாத்.32:16, உபா.5:4; 24; மத்.3:17)

(2) பேசுகிறவர்கள் வாயிலே தேவன் வார்த்கைளை போட்டு, ஆவியானவரின் உள்ளுணர்வுடன் வெளிவருகின்ற வார்த்தை - யாத். 4:12,எண்.23:5, எசே.2:7; 3:10;11: அப்.3:21.

(3) ஆவியானவரின் அசைவாடுதலால் அப்போதைக்கப்போது வரும் வார்த்தை - யாத்.34:27, 2 பேது.1:21.

(4) எழுத்தாளர் தம் சொந்தத்தில் எழுதும் வார்த்தை - தானி.12:8:9, லூக்.1:1-4; யோ.20:30,31; அப்.1:1,2.

இப்படி நான்கு விதமாக வேதம் எழுதப்பட்டிருந்தாலும், (வேதம் என்றாலே பொதுவாகவே பழைய ஏற்பாட்டைத் தான் குறிக்கிறது என்று முந்தி அறிக) யோ.1:17ன் படி இயேசு கிறிஸ்துவின் மூலம் தான் கிருபையும் சத்தியமும் வெளிப்பட்டதாக அறிகிறோம். அப்படியானால் அவருக்கு முன் கிருபையும் சத்தியமும் இல்லையா? இருந்தது. ஆனால் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தான் முழுமையாய் தெரிய வந்தது. தகுதியில்லாதவர்களை தகுதிப் படுத்துவது கிருபை; பாவிகளை மன்னித்து இரட்சிப்பது கிருபை. பைத்தியக்காரர்களை ஞானிகளாக்குவது கிருபை. இப்படிப்பட்ட கிருபையால் தேவன் காரியம் செய்ய, அந்தக் காரியத்திற்குரிய சித்தம், விருப்பம் அவரிடம்

இருந்தாக வேண்டும். “நானே சத்தியம்; சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் விடுதலையாக்கும், ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்” என்றெல்லாம் இயேசு சொல்வதால் அந்த சத்தியம் முழுமையாய் வெளிப்பட தேவனுக்கு அதற்குரிய சித்தமும். விருப்பமும் இருக்க வேண்டும். ஆக, இயேசு மூலமாய் முழுமையாய் வெளிப்பட்ட கிருபையும், சத்தியமும் இன்னது என்று அறிய வேண்டுமானால் தேவனின் சித்தமும் விருப்பமும் தேவ வார்த்தை மூலம் முதலில் அறிந்தாக வேண்டும்.

பழைய ஏற்பாட்டு மக்களை, சீயோன் குமாரத்தி, மனைவி என்றெல்லாம் தேவன் அழைத்துப் பார்த்தார். அவர்களோ சிநேகிதர், தாசர் என்ற நிலையிலேயே இருந்தனர். இதனால் மோசே, தாவீது, ஏசாயா, எரேமியா போன்ற எல்லோருக்குமே முழுதேவ சித்தத்தையும் தேவனால் சொல்ல முடியவில்லை. அதனால் தான் அவர்களுக்கு துன்பம் வரும் போது, “தேவனே வாதிக்கிறார். தண்டிக்கிறார். சிறுமைப் படுத்துகிறார். தோல்வி, பஞ்சம், வியாதி, அகால மரணம் எல்லாம் தருகிறார்” என்று எழுதுகின்றனர். இடையிடையே அவர்கள் செய்த குற்றங்களையும், பாவங்களையும் அறிக்கையிடுகிறார்கள். முடிவில், தேவன் நன்மையைத் தருவார் என்று விசுவாச அறிக்கையிடுகிறார்கள். இது முன்னுக்குப் பின் முரணாயிருக்கிறது. **உதாரணத்திற்கு ஒன்றிரண்டைப் பார்ப்போம்** (1) நெகே. 9:26,27ல் நாரதர் பாணியில் தேவன் செயல்படுவதாய் உள்ளது. ஏன் இப்படி? ஆசீர்வாதம், சாபம் போன்ற காரியங்கள் (உபா.11:26, 28: 30, 15,19) நெகேமியாவுக்கு முழுமையாய்ப் புரியவில்லை. இயேசுவின் மூலம் வெளிப்பாட்டை அறியவில்லை. இப்படி எழுதப்பட்டதை மேற்சொன்ன 3வதுமுறைப்படி எழுதியதாக எடுத்துக் கொள்ளலாம். (2) சங்.83ல் எதிரிகளை அழிக்க தாவீது தேவனிடம் சொல்கின்றான். முடிவில் இரட்சிப்பையும் காட்டச் சொல்கின்றான். இங்கே இயேசுவின் மூலம் வெளிப்பட்ட மத்.5:44ன் படியான கிருபையும் சத்தியமும் முழுமையாக அவனுக்கு புரியவில்லை. (3) யோபு.2:10,5:18; 1:21; 19:8-13; 10:18,22 போன்றவைகளில், யோபுவுக்கு இயேசுவின் மூலம் முழுமையாய் வெளிப்பட்ட மத்.19:17; யாக்.1:17; அப்.10:38 போன்றவை வெளிப்பாடில்லை. யோபு.42:2,35ன் படி மனக்கண் திறக்கப்பட வில்லை. இதை மேற்ச்சொன்ன 4வது முறைப்படி எழுதியதாக எடுத்துக் கொள்ளலாம். மட்டுமல்ல, பரிசுத்த ஆவியினால் சத்தியத்தை அறிகிற நம்மவர்க்கும் (யோ.16:13) எண்.16:35ல் அக்கினியால் அழித்தது திருஷ்டாந்தமான தேவனின் சரித்திர நியாயத்தீர்ப்பு என்றும், 1 தீமோ.5:24ஐ வைத்து தியானிக்காமல் “கொள்ளிவாய் சர்ப்பம் வந்தது” போன்ற சாபங்களையும் (எண்.21:6 with உபா.32:24) தேவனே செய்கிறார் என்றும் தவறான

கணிப்பு இருக்கிறது. அறிவு பெருகிப்போன இந்த நாட்களில் வேதத்தை தியானிப்பாரில்லை.


இன்னும் ஏராளம் எழுதிக்கொண்டே போகலாம். இப்படியான வசனங்களை எல்லாம் வாசிக்கும்போது புறஜாதியார் சொல்வது போல, நம் வேதம் தேவனால் கொடுக்கப்பட்டது அல்ல என்று சுலபமாய் சொல்ல வாய்ப்புள்ளது அல்லவா! நன்மையும் அன்புமான தேவனின் பரிபூரண சித்தம் இன்னது என்று புரியாத வரைக்கும், நம் மனம் தினந்தோறும் மறுரூபமாகாத வரைக்கும், பகுத்தறிவு நம்மில் ஆவியானவரால் வளராத வரைக்கும். நம்மனக் கண் பிரகாசமாகாத வரைக்கும். ஆத்மா செழிப்படையாத வரைக்கும் (ரோ.12:2, யூதா.22) மேற்சொன்ன வசனங்கள் நமக்கு விளங்காது. அந்த வசனங்கள் எல்லாம் மேலே சொன்ன 4 முறைகளின்படிதான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற உண்மை வெளிப்படாது. புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கு, தேவசித்தம் முழுமையாய் வெளிப்படுத்தப் பட்டிருப்பதால் புதிய ஏற்பாட்டு வசனங்களில் சத்திய - தேவசித்த மாறுபாடு காண முடியாது.

**அப்படியானால் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து மூலமாய் ஆவியானவரைக் கொண்டு முழுமையாய் வெளிப்படுத்தப்பட்ட ஆதி முதலான தேவசித்தம்தான் என்ன?** (1) பரலோகம் எப்படியோ அப்படியே பூலோகம் எல்லா நன்மைகளோடும் இருக்க வேண்டும். (மத்.6,10) (2) எல்லோரும் சுகமாய் இருக்க வேண்டும் (மத்.8:3). (3) ஒருவனும் கெட்டுப் போகக்கூடாது (மத்.18:14, யோ.3:16, 1 தீமோ.2:4). (4) எல்லோருக்கும் பரிபூரண ஜீவன் தேவை (யோ.10:10). (5) ஒருவரையும் இழந்து போகக் கூடாது (யோ.(6:39). (6) தாவீதைப் போல தேவனுடைய வார்த்தையாகிய உடன்படிக்கைப் பெட்டியாலேதான் ஆசீர்வாதம் உண்டு என்று உணர்ந்து அதற்குரிய முக்கியத்துவம் கொடுத்து அவனைப் போல ஊழியம் செய்ய வேண்டும். (அப்.13:36). (7) வரங்கள் கொடுக்கப்பட வேண்டும் (1 கொரி.12:11, எபி.2:4). (8) நன்மைக்கேற்றபடியான பரீட்சை வேண்டும் (ரோ.5:1-4; யாக்.1:3). (9) பொல்லாத உலகிலிருந்து விடுதலை (கலா.1:4). (10) ஊழியர்களை உருவாக்குவது (எபே. 4:13). (11) புத்திரசு வீகாரம் அளிப்பது (எபே.1:6; யோ.1:12). (12) பரிசுத்தமாக வேண்டும் அதுவும் வசனத்தாலே ஆக வேண்டும் (1 தெச.4:3; யோ.15:13; 17:17). (13) எல்லாக் காரியத்திலும் அவருக்கு நன்றி (வெளி.4:11). (14) நாம் இரட்சிக்கப்படுவது (யாக்.1:18). (15) சகல சிருஷ்டிப்பும் அவர் சித்தம் (வெளி.4;11). (16) நன்மை செய்வதே அவர் சித்தம் (எபே.2:10; 1 யோ.11:

அப்.10:38; யாக்.1:17). (17) நம்மை ஆசீர்வதிப்பதே பிரியமான சித்தம் (எண்.24:1; சங்.149:4). (18) நம் தேசம் வாழப்பிரியம் (ஏசா.62:4). (19) துன்மார்க்கன் கூட பிழைக்கணும் (எசே.18;23). (20) கொடுப்பதில் பிரியப்படுவது (2 கொரி.9:7). (21) விசுவாசமாயிருந்தால் பிரியம் (எபி.11, 12:1). (22) நீதி நியாயத்தின் மேல் பிரியம் (சங்.33:5). இன்னும் ஏராளம் எழுதிக் கொண்டே போகலாம்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வேத வார்த்தைகளின் மூலம் தேவனின் பிரியமும் நன்மையுமான பரிபூரண சித்தம் வெளிப்படுகிறது என்றும், அந்த வார்த்தைகள் நான்கு விதமான முறைகளில் எழுதப்பட்டிருப்பதால் முன்னுக்குப்பின் முரண்போல தெரியுமென்றும், தேவசித்தம் முழுமையாய் இயேசு கிறிஸ்து மூலமாய் வெளிப்பட்டுள்ளது என்றும், பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களால் முழுமையாய் அது அறியப்படவில்லை என்றும் நமக்குள் இருக்கும் ஆவியானவரால் விளக்கப்பட்டதற்காய் தோத்திரம். "வெளியாக்கப்படாத மறைபொருளு மில்லை; அறியப்படாத இரகசியமில்லை" இனிமேல் இந்த கருகலாக்கப்பட்ட சத்தியமெல்லாம் துளிர்விட்டு வளரட்டும்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்.

❖ ❖ ❖




தேவன் ஒருவரே என்பதில் யாருக்கும் ஐயம் இல்லை. ஒரே தேவன் மூன்று ஆள்தத்தவமாயிருக்கிறார் என்று ஒரு கூட்டமும், ஒரே தேவன் இரண்டு பேராய் இருக்கிறார் என்று ஒரு கூட்டமும், ஒரே தேவன் இரண்டு ஆள்வடிவில் வெளிப்பட்டார் என்று ஒரு கூட்டமும், ஒரே தேவன் ஒருவர்தான் என்று ஒரு கூட்டமும் கிறிஸ்தவ வட்டாரத்தில் பலவாறாய் கருத்துக்கள் நிலவி வருகின்றன. இதனால் உபதேச மாறுபாடுகள் உருவாகி, ஆவிக்குரிய சபை - கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட சபை - வளர்ந்து பெருக முடியாமல் நலிந்து போகின்றது. பவுல் அப்போஸ்தலன் சொல்கிறபடி, "இப்படி போதிக்கிற கூட்டங்களில் உத்தமர்கள் இன்னாரென்று வெளியாகும் படிக்கு மார்க்க பேதங்களும்உண்டாயிருக்க வேண்டும்" (1 கொரி.11:19) என்பதால், இந்தக்

கடைசி காலத்தில், உத்தம போதகம் - ஆரோக்கியமான உபதேசம் இன்னதென்று ஆவியானவர் விளக்குவாராக! வேத வசனத்தின் மூலமாய்த்தான் ஆவியானவர் விளக்குவார் என்று நாம் அறிந்திருக்கிறோம் (யோ.16:13-15; 14:26). வேதத்தின் மூலமாய் எது உண்மையென்று பார்ப்போம்! காதுள்ளவன் கேட்கக்கடவன்.

**ஒரே நேரத்தில், ஒரே செயல்பாட்டில் ஒரே வசனத்திலே மூவர்:-** (1) "பின்பு தேவன் (God - ஏலோகிம் - இரண்டிற்கும் மேற்பட்டவர்கள் - பன்மையில் ஒருமை) நமது சாயலாகவும், நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக" (ஆதி.1:26) (2) "அப்பொழுது கர்த்தர் (LORD - தேவன் - God - ஏலோகிம்).... "நாம் இறங்கிப்போய் ஒருவர் பேசுவதை மற்றவர் அறியாதபடிக்கு அங்கே அவர்கள் பாஷையை தாறுமாறாக்குவோம் என்றார்" (ஆதி.11:17). (3) இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, வானத்திலிருந்து பிதாவின் குரல்; பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல் இறங்கி வந்தார் (மத். 3:16,17). (4) ஸ்தேவானைக் கல் எறிந்து கொல்லும்போது பரிசுத்த ஆவியினால் நிறைந்து தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் கண்டான் (அப்.7:55). (5) பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர்; பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் (1 யோ.5:7) (6) நான் பிதாவை வேண்டிக் கொள்ளுவேன். அப்பொழுது என்றைக்கும் உங்களுடனே இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" (யோ.14:16). (7) "என் நாமத்தினால் பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோ.14:26). (8) "ஆகையால்.... பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து..." (மத்.28:19). (9) "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக" (2 கொரி.13:14). (10) "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்" (ஏசா.61:1; லூக்.4:17-20). (11) இப்பொழுதோ கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்" (ஏசா.48:16). இன்னும் ஏராளம் சொல்லிக்கொண்டே போகலாம். வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்.

**ஒரே நேரத்தில், ஒரே செயல்பாட்டில், ஒரே வசனத்திலே இருவர்:-** (1) ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து வாசம் பண்ணுவோம் (யோ.14:23). (2) இரண்டு பேருடைய சாட்சி உண்மை என்று நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறதே. நான் என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவனாய் இருக்கிறேன். என்னை அனுப்பின பிதாவும் என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறார்" (யோ.8:17,18). (3) என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று சொல்லுகிறீர்கள் (யோ.8:54). (4) கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" (ஏசா.53:10). (5) நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக (1 கொரி.1:3). (6) அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாய் இருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (வெளி.11:15). (8) "குமாரனை நோக்கி தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது.... ஆதலால் தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம் பண்ணினார்" (எபி.1:8,9). (9) அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டார்" (மத்.4:1). (10) வார்த்தையான தேவனை மனிதனாய்க் கருவாக வைத்தவர் ஆவியானவர் (மத்.1:18; லூக்.1:35). (11) "இந்த சங்கதிகளைக் குறித்து நாங்கள் அவருக்கு சாட்சிகளாய் இருக்கிறோம். தேவன் தமக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு தந்தருளின் பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள்" (அப்.5:32). (12) "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும்... அறியீர்களா?" (1 கொரி.6:19). (13) நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வாரார் (யோ.16:7). (14) தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோ.3:16). (15) "ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராய் இருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார் (1 யோ.2:1). (16) இவரோ பாவங்களுக்காக ஒரே

பலியை செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்து இனித் தம்முடைய சத்துருக்களை தமது பாதபடியாக்கிப் போடும் வரைக்கும் காத்துக் கொண்டிருக்கிறார்" (எபி.10:12,13; 1:13). இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! ஒரே தேவன், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆள்தத்துவமாய் ஒரே நேரத்தில் - ஒரே காரியத்தில் - செயல்படுகிறார் என்று அறிகிறோமல்லவா! வார்த்தையாகிய தேவனும், பரிசுத்த ஆவியாகிய தேவனும் பூமிக்கு வந்து விட்டார்கள்; பிதாவாகிய தேவன்தான் இன்னும் வரவில்லை. 1000 வருட அரசாட்சிக்குப் பிறகு - வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை கிறிஸ்து ஒப்புக் கொடுப்பார் (1 கொரி.15:24). அந்த ராஜ்யம் புதிய வானம் புதிய பூமியில் உருவாகும்போது பிதா பூமிக்கு வருவார். அப்போது தேவத்துவம் - திரித்துவம் - Trinity - Deity எல்லாமே எல்லாருக்கும் புரிந்துவிடும். ஆமென். நாமோ, மூவரும் ஒன்றாயிருப்பதை ஆவியிலே விசுவாசிக்கிற நாமோ, இரகசிய வருகையில் எடுபட்டுப் போகும் போது பரலோகிலே கண்கூடாய் கண்டு மகிழப்போகிறோம். ஆமென்! அல்லேலூயா! இதை விசுவாசிக்கிற - தியானிக்கிற - தேவ மனுஷனாய் நீயிருந்து இரகசிய வருகைக்கு ஆயத்தமாயிருக்கிறாயா? இயேசு சீக்கிரம் வருகிறார்! அயத்தமாகு!! ஆயத்தமாக்கு!!!

❖ ❖ ❖

## இயேசுவைக் கொல்ல கற்களை தூக்கியது ஏன்?

தேவபிள்ளையே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை கொல்லுவதற்காய் இரண்டு மூன்று தடவை யூதர்கள் கற்களை தூக்கினார்கள் என்றும், இயேசு மறைந்து விட்டார் என்றும் வேதம் கூறுகிறது. கல்லால் அடித்து இயேசுவைக் கொல்லும்படியாய் அவர் என்னதான் பாவங்களை செய்தார்? ஓய்வுநாளில் விறகு பொறுக்கினவள் கல்லால் எறிந்து கொல்லப்பட்டாள். கையும் களவுமாய் பிடிக்கப்பட்ட விபச்சார ஸ்திரி, கல்லால் எறிந்து கொல்லப்படும் நிலைக்கு உட்பட்டாள். ஆனால், இரண்டு மூன்று முறை கல்லெறிய இயேசு என்ன பாவம் செய்தார் என்று யூதர்கள் நிதானித்தார்கள் என்பதை ஆவியானவர் சொல்லக் கேட்போம்.

**முதலாம் முறை:** யோ.8:31-59 வரை வாசியுங்கள். "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் - Before Abraham was, Iam" என்று இயேசு சொன்ன உடனே, அவர்கள் அவர் மேல் கல் எறியும்படி கல்லுகளை எடுத்தார்கள்." Before Abraham was, I was - ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருந்தேன் என்று அவர் சொல்லாமல், "I am - நான் இருக்கிறேன்" என்று சொன்னதால், முட்செடியில் தேவன் சொன்ன வார்த்தை அவர்களுக்கு ஞாபகம் வந்திருக்கிறது (See யாத். 2:14; with யாத்.6:2,3 - யேகோவா). இயேசுகிறிஸ்து தன்னை யேகோவா - I am that I am - Iam - நான் இருக்கிறேன் - என்றதால் தன்னை தேவனென்று சொல்லியதால் யூதர்களால் அதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

**2ம் முறை:** யோ.10:30-33 வரை வாசியுங்கள். "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" என்று இயேசு சொன்னதால், இயேசு மனுஷனாயிருக்க தன்னை தேவனென்று சொல்லி, தேவதூஷணம் சொன்னரென்று யூதர்கள் நினைத்து கல்லெறிய கல்லுகளை எடுத்தார்கள் என்று அறிகிறோம். (See also யோ.11:9).

இயேசுவை மேசியா என்று ஏற்றுக் கொள்ளாமல், அவரை சிலுவையிலறைந்து கொன்ற யூதர்கள், அவர் சொன்ன மேற்கண்ட வார்த்தைகளை உணர்ந்திருக்கிறார்கள்; தன்னைத் தேவனென்று சொல்கிறார் என்று புரிந்திருக்கிறார்கள்; "மனிதன் எப்படி தேவனாக முடியும்? இப்படிச் சொல்வது தேவ தூஷணம்" என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எப்படியென்றால். லேவி 24:10-16 வரை வாசித்தால், நியாயப்பிரமாணச் சட்டப்படி, கர்த்தருடைய நாமத்தை தூஷிக்கிறவன் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்பது முறைமை. ஏசா.7:14; 9:6; ஆதி.3:15; ஏசா.11:1-2; 61 போன்ற பல வசனங்களின் கருத்துக்களை அறிய, யூதர்களின் மனக்கண் குருடாக்கப்பட்டிருந்த படியினால், தேவன் - வார்த்தையாகிய தேவன் - மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதை அறியாதிருந்தார்கள் (See யோ.1;14; 1 தீமோ.3:16). இந்த அறிவு இல்லாமல், நியாயப்பிரமாணச் சட்டத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டு, இயேசுவைக் கொல்ல கல்லுகளைத் தூக்கினார்கள். தேவ அறிவு வேத அறிவு அவர்களுக்கு இல்லாததினாலே யூதர்கள் ஓசி.4:6ன்படி, அன்றும், இன்றும், என்றும் சங்காரமாகிக் கொண்டே இருக்கிறார்கள். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்வோருக்கும் வேத அறிவு இல்லாவிட்டால் சங்காரம்தான்; வேத அறிவு இல்லாத கூட்டம்தான் யூதர்களைப் போல, இயேசுவை, ஒரு மனிதனாக பாவித்து போதிக்கிறார்கள்.

**இயேசு ஏன் 2 முறையும் மறைந்து கொண்டார்?** இது கேள்வி! தீர்க்கதரிசிகள் சொன்னபடி, இயேசு உலகம் முழுவதுக்கும் தெரியும்படியாய் இரத்தம் சிந்தி சிலுவையிலே மரிக்க வேண்டியிருப்பதால் (மத்.20:19; 26:2; யோ.3:14; 12:32-33) அந்த வேளை வரும் வரை தன்னைக் காத்துக்கொண்டு, காத்திருந்தார். ஆமென் (மத்.26:45). நியாயப்பிரமாணச் சட்டப்படியே, இவரை யூதர்களே கல்லால் எறிந்தே கொன்று போடலாமே, பின்னை ஏன் ரோம சர்க்காரின் சிலுவையிலே தொங்கவிட வேண்டும்? இதுவும் ஒரு கேள்வி. இதே கேள்வியைத்தான் பிலாத்து கேட்டான். அதற்கு, "மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகாரமில்லை" என்று யூதர்கள் சொன்னார்கள் (யோ.8:31). இது யூதர்கள் சொன்ன அப்பட்டமான பொய். (லேவி.24:10-16; உபா.21:22,23) ஜனக்கூட்டம் இயேசுவின் பின்னே ஏராளம் இருந்ததால், யூதர்கள் பயந்து, "இயேசு, ராயனுக்கு விரோதமாய் ராஜா நிலையில் கலகம் பண்ணுகிறார்" என்ற ஒரு பொய்க் குற்றச் சாட்டை அவிழ்த்துவிட்டு, அவரை சிலுவை யிலறைய வேண்டிய பொறுப்பை பிலாத்துவிடம் விட்டு, அந்த பிலாத்துவையே மிரட்டினார்கள். இரண்டாம் முறை பிலாத்து கேட்கும்போது "தேவனுடைய குமாரனென்று சொன்னபடியால், நியாயப்பிரமாணப்படி சாகவேண்டும்; இயேசுவோ, தன்னை ராஜா என்று சொல்கிறதால், ரோமராயனுக்கு இவர் விரோதி; அந்த விரோதியை பிலாத்துதான் சிலுவையிலறைய வேண்டும்; அப்படி சிலுவையிலறைய உத்தரவிடாவிட்டால், பிலாத்து, ராயனுக்கு விரோதி" என்று சொல்லி யூதர்கள் பிலாத்துவை பயமுறுத்தினார்கள் (யோ.19:6,7,12,15). தன்னுடைய பதவிக்காய் பயந்த பிலாத்து, மாசில்லாத இயேசுவை சிலுவையிலறைய ஒப்புக் கொடுத்தான் (மத்.27:24-26). இயேசுவை ஒரு கொடூர குற்றவாளியாக்கி, பண்டிகை நாளிலும் விடுதலையாக்க முடியாத கலகக்காரன் என்று ஆக்கி, (யூதர்களுக்குள்ளே அவரை மரத்திலே அவர்கள் தூக்கினால் அவர் நாமம் அந்த அளவுக்கு குறைக்கப்படாது என்று எண்ணி) 4-ம் உலக சாம்ராஜ்யத்தினாலே குற்றவாளி என்று சொல்ல வைத்து ரோம சிலுவையில் சாகடிக்க வற்புறுத்தினார்கள். (மட்டுமல்ல... அவர்கள் ரோம சர்க்காரின் கீழிருந்ததால், மோசேயின் சட்டப்படி ரோம அரசின் குடிமகனை கொல்லவும் பயந்தார்கள்).

ஆக, இயேசுவைக் கல்லால் எறிந்து கொல்ல யூதர்கள முனைந்ததற்கு காரணம், அவர் தன்னை தேவனென்று - தேவ குமாரனென்று - தேவனுக்கு சமமாய் - சொன்னதால் என்று அறிகிறோம். (இந்த தைரியம் அவர்களுக்கு திடீரென்று வந்த அசட்டு தைரியமாகும்). இந்த இயேசுவின் வார்த்தைகள், இரட்சிப்பை ஏற்காத யூதர்கள் மண்டைக்கு புரிந்திருக்க, தற்கால கள்ள

உபதேசக்காரர்களுக்கும், புற மதத்தாருக்கும் புரியவில்லையே என்பது தான் நமது வேதனை! இந்த வேதனைக்கும் விடிவு காலமுண்டு! அல்லேலூயா! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## அந்தி கிறிஸ்து எங்கிருந்து வருவான்?

1 யோ.4:3; 2:8; மத்.24; 24ன் படி, அநேக அந்தி கிறிஸ்துவின் ஆவிகள் இப்பொழுதே கிரியை செய்கின்றன. ஆயினும் அசல் அந்திகிறிஸ்து, 2 தெச.2:6-8ன் படி, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடுகூடிய ஜெபத்திலே நின்று தடை செய்யும் சபையானது இரகசிய வருகையில் எடுபட்ட பின்னரே வெளிப்படுவான். இவன் எங்கிருந்து வருவான்? சிலர் இஸ்ரேலிலிருந்தும், சிரியாவிலிருந்தும், ரோமிலிருந்தும் எழும்புவான் என்று கணிக்கின்றனர். வேதம் சொல்வதைப் பார்ப்போம்.

தானி. 2ல் உள்ள நேபுகாத்நேச்சார் சொப்பனம், தானி.7ல் உள்ள தரிசனம், வெளி.13ல் உள்ள தரிசனம் எல்லாம் முதலில் கவனிப்போம். சரித்திரப்படி, பாபிலோன், மேதிய - பெர்சிய, கிரேக்கம், ரோம் என்னும் நான்கு சாம்ராஜ்யங்கள் எழும்பிவிட்டன. கடைசி ரோமராஜ்யம் கி.பி. 364ல் கிழக்கத்திய ரோம் என்றும், மேற்கத்திய ரோம் என்றும் இரண்டாய் பிரிந்தது. மேற்கத்திய ரோம். கி.பி.471ல் வீழ்ந்து போனது. கிழக்கத்திய ரோம். கி.பி.1453ல் வீழ்ந்து போனது. இதைத்தான் சாவுக்கேதுவான காயம் என்று வெளி.13:3 சொல்கின்றது. இந்த காயம் சொஸ்தமாக்கப்பட்டு பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடு இதைப்பார்த்து பின்பற்றும் காலம் வரப்போகிறது. அதுதான் விழுந்துபோன ரோமராஜ்யம் திரும்பவும் உயிர்மீட்சி அடைவதாகும். இதுகுறித்து வெளி.17:8-11 ஐ வாசித்தால், எகிப்து, அசீரியா, பாபிலோன், மேதிய - பெர்சிய, கிரேக்க என்ற 5பேரும் விழுந்தார்கள். 6வது ரோமராஜ்யம் வெளிப்படுத்தல் விசேஷம் எழுதும்போது இருக்கிறது. 7வது சாம்ராஜ்யம், அதாவது Rivival Rome Kingdom (காயம் சொஸ்தமாகி ஆச்சரியமாய் நிற்கும்) எழும்பப்போகிறது. இந்த புதுப்பிக்கப்பட்ட ரோமராஜ்யம்தான், தானி 2ல் சொல்லப்பட்ட 10 விரல்களுக்கொத்த 10 ராஜாக்கள் இணைந்து இரும்பும் களிமண்ணும்போல எழும்புவதாகும். இதுதான், தானி.9:27ல் சொல்லப்பட்ட 7 ஆண்டுகள் ஆளப்போகும் வரப்போகிற பிரபுவாகிய அந்திக்கிறிஸ்து என்கிற மிருகம். இந்த 10 ராஜாக்களின் கூட்டமைப்பாகிய Rivival Rome Kingdom தான் வெளி.17:16ன் படி போப் மார்க்கத்தையே அழித்துப்போடும். முதல் $3^1/_2$

ஆண்டுகள், இந்த கூட்டமைப்பாகிய ரோம ராஜ்யமாகிய மிருகம் யூதர்களோடு உடன்படிக்கை பண்ணி தேவாலயத்தை கட்ட உதவும்; இரகசிய வருகையில் விடுபட்டுப் போன கிறிஸ்தவர்களை துன்புறுத்தும், கடைசி $3^1/_2$ ஆண்டில், தானி.7:8ல் சொன்ன சின்னக் கொம்பு (10ல் 3ஐ தள்ளி ஒன்று) எழும்பும், இதுதான் 7 ஆவதிலிருந்து தோன்றும் 8வது மிருகம். இதுதான் மகாபயங்கரமான அந்திகிறிஸ்துவாகிய மிருகம். இப்போதுதான் இஸ்ரேலருக்கு இக்கட்டுகாலம் (எரே.30:7); மத்.24:15ல் சொல்லப்பட்ட பாழாக்குகிற அருவருப்பு இதுதான். இந்த நிலையில்தான் இயேசுவாகிய கல் உருண்டு வந்து (தானி.2:44) அவனையும், அவனோடுள்ள ராஜ்யத்தையும் அழித்துப்போடும் (வெளி.19).

ஆக, வேத தீர்க்கதரிசனப்படி, புதுப்பிக்கப்பட்ட 10 ராஜாக்களடங்கிய ரோம ராஜ்யமே வரப்போகும் அந்திகிறிஸ்தென்னும் மிருகமென்றும், அதிலிருந்து எழும்பும் ஒருகொம்புதான் மகா பயங்கரமான அந்திகிறிஸ்து என்றும் அறியலாம். இந்த புதுப்பிக்கப்படட ரோம ராஜ்யத்தில் (Revival Rome Kingdom) நிச்சயமாய் இஸ்ரேல் ராஜ்யம் இருக்காது என்றும், இஸ்ரேல் ராஜ்யத்திலிருந்து அந்திகிறிஸ்து எழும்பப் போவதில்லை என்றும் இந்த அந்திகிறிஸ்து யூதருக்கு ராஜாவாக மாட்டான் என்றும் திட்டமும் தெளிவுமாய் உணர முடிகிறது. தானி.11:36லிருந்து தன்னிஷ்டப்படி செயல்படும் ராஜா எழும்புவானென்றும், தேவ கோபம் தீருமட்டும் அவன் ஆட்சி கைகூடிவரும் என்பதால், இவன்தான் உலக கடைசி ராஜாவாகிய அந்திகிறிஸ்து என சிலர் கருதுகின்றனர். இல்லை... இந்த ராஜா தானி. 8ல் வரும் சின்ன கொம்பு - அந்தியோகஸ் எபிபேன்ஸ் - என்று சரித்திரம் சாட்சி இருக்கிறது. தானி.11:40-45ஐ வாசித்தால், அந்திகிறிஸ்து சிரியா தேசத்திலிருந்து எழும்புவான் என தெரிகிறது. எப்படியென்றால் யுத்தம் வடதிசை சிரியாவுக்கும், தென்திசை எகிப்துக்குமாயிருப்பதால், அந்த வடதிசை ராஜாதான் எருசலேமை நோக்கி வருவானென்றும் அறிகிறோம். வெளி.13:1-2; 17:12-17 வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. 2 தெச.2ல் சொல்லப்பட்டபடியே இவன் பரிசுத்த ஆலயத்திலேயேசிங்காசனம் போடுவான் என்று தானி.11:45 சொல்கின்றது. இவனுக்கு இரண்டாம் வருகையிலே முடிவு உண்டு. (வெளி.9:19-21; தானி.7:11, 26,27; 9;27; 2 தெச.2:8).

எசே.21:25-27ஐ வைத்து இதில் வருபவன்தான் அந்திகிறிஸ்து என்கின்றனர். அல்ல. இவன் இஸ்ரேலிலே எழும்பும் கடைசி ராஜாவாகிய சிதேக்கியாவாகும். அவனுக்குப்பின் தேவனால் ஏற்படுத்தப்படும் யூத ராஜா இயேசு வரும்வரை இஸ்ரேலிலே யாரும் இல்லை. ஆமென். யோ.5:43ஐ

வைத்துக்கொண்டு வேறொருவன் என்று போடப்பட்டது அந்திகிறிஸ்துவாகிய இஸ்ரேல்ராஜா என்கின்றனர். தவறு. அந்த வசனத்தை முழுமையாய்ப் படியுங்கள். முதல்முறையாய், பிதாவின் வல்லமை, மகிமை, மாட்சிமையோடு இயேசு, யூதர்களின் அரசாங்க ராஜாவாய் வரவில்லை; இரட்சகராய் வந்தார். அப்படியே வரப்போகும் வேறொருவனும் "யூதர்களின் அரசாங்க ராஜாவாய்" வரப்போவதில்லை என்பது வெள்ளிடை மலையாகும். அவன் பிசாசின் வல்லமையோடு மகிமையோடு வருவான். மேலும் தானி.11:36-38ல் சொல்லியிருப்பது அந்திகிறிஸ்து என்றும், வசனம் 37ல் **"தன் பிதாக்களின் தேவன்"** என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளதால், நிச்சயமாய் இந்த அந்திகிறிஸ்து யூத குலத்தான்தான் என்றும் சிலர் கணிக்கின்றனர். அலெக்சாண்டரின் ஆதிக்கம் தானி.8:22ன்படி நான்காய் பிரியும்; அதிலுள்ள சிரியா, எகிப்து நாடுகளுக்கிடையயுள்ள யுத்தம் பற்றி தானி.11:5-19 வரை சொல்லப்பட்டுள்ளது. தானி.8:9ல் உள்ள சின்னக்கொம்பாகிய அந்தியோகஸ் எபிபேன்ஸ் என்ற ராஜா செய்யும் அட்டகாசம்தான் தானி.11:20-35ல் சொல்லப்பட்டுள்ளதே தவிர அந்திகிறிஸ்து பற்றி அல்ல. தானி.11:36ல் **"தன் பிதாக்களின் தேவன்"** என்றில்லை. **"தன் பிதாக்களின் தேவர்கள்"** என்று தமிழில் உள்ளது. இஸ்ரேலருக்கு ஒரே தேவன்தான் உண்டு; தேவர்கள் இல்லை. மேலும், இந்த வார்த்தை Scofield Bible ல், "gods of his fathers" என்று பன்மையில் God என்று போடாமல், gods என்று அந்நிய தெய்வங்களை எழுதப்பட்டுள்ளதால் இவன் யூதாவிலிருந்து எழும்பும் அந்திகிறிஸ்து அல்ல என்றும், அவனைப்போலவே அட்டகாசம் பண்ணும், சிரியாதேச அந்தியோகஸ் எபிபேன்ஸ்தான் இவன் என்றும் அறியலாம்.

வரப்போகும் மேசியா ஆவிக்குரிய ராஜாவாய் மட்டுமல்ல; யூதர்களின் ராஜாவாகவும் வெளிப்படுவார் என்று இஸ்ரேலர் நம்பினர். முதல் வருகையில் ஆவிக்குரிய ராஜாவாய் வந்தவர் 2ம் வருகையில் யூதர்களின் ராஜாவாய் வரப்போகிறார். எனவே அதற்குமுன் வரப்போகும் அந்திகிறிஸ்து யூதராஜா அல்ல; புற ஜாதியிலிருந்து எழும்பும் ராஜா. **இப்படியான புறஜாதி ராஜாக்களின் காலம் அர்மெகதோன் யுத்தத்தோடு முடியும் என்று வேதம் சொல்லியிருக்க** (லூக்.21:24; ரோ.11:25-29) **அந்திகிறிஸ்து இஸ்ரேலிருந்து எழும்புவான் என்பது வசனத்திற்கு ஒவ்வாதது.** வரப்போகும் அந்தி கிறிஸ்துவை இஸ்ரேலர், மேசியா என்று ஏற்றுக் கொள்வார்கள் என்று வசனமே இல்லை. ஆமென். எரே.30:20-21ஐ வாசித்தால் இஸ்ரேல் தேசத்தை புறஜாதி ராஜாக்கள் மிதிப்பார்கள் என்றும் இறுதியில் இயேசுவே ஆள்வார் என்றும் அறியலாம். ஆகவே, வரப்போகும் அந்தி கிறிஸ்து, Re-

vival Rome Kingdom - 10 ராஜாக்கள் உள்ள சிரியாவிலிருந்து தான் எழும்புவான் என்று கணிக்க வாய்ப்புள்ளது. மற்றபடி யூதர்களிலிருந்து எழும்புவதாக வசன ஆதாரமே இல்லை எனலாம். இந்த அந்தி கிறிஸ்து ஆட்சியில் நாம் இராத படிக்கு ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்கு வோம்!!! இயேசு சீக்கிரம் வருகிறார்!!!! அல்லேலூயா!

❖ ❖ ❖

## "இடிக்கப்பட்டுப்போகும்" என்று இயேசு சொன்ன தேவாலயம் எது?

யூதர்கள், இயேசு யார் என்று அறிந்து கொள்ள ஒரு அடையாளத்தைக் கேட்டார்கள். "அப்போது, இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்; 3 நாளுக்குள்ளே எழுப்புவேன்" என்றார். "இந்த ஆலயம் கட்ட 46 வருஷம் ஆயிற்றே; எப்படி 3 நாளில் எழுப்புவீர்" என்று யூதர்கள் கேட்டார்கள். எருசலேம் ஆலயத்தைப்பற்றி சொல்லாமல், 3ம் நாளில் உயிர்த்தெழப்போகும் தன் சரீரமாகிய ஆலயத்தைப் பற்றி சொன்னாரென்று அவர்கள் அறியவில்லை (யோ.2:18-22). பிறிதொருமுறை யோனாவின் அடையாளத்தைச் சொன்னார். ஆக, இயேசு, தேவன் என்பதற்கான ஒரே பிரதான அடையாளம் மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்ததுதான் என அறிகிறோம். இதையே விசுவாசிப்போம்; பிரஸ்தாபப்படுத்துவோம்; ஆத்ம ஆதாயம் செய்வோம். அவரின் சரீர ஆலயத்தை இடித்துப்போடுங்கள் என்று சொன்ன ஆண்டவர், "இந்த ஆலயம் இடிக்கப்பட்டுப் போகும்" என்று மத்.24:2ல் கூறுகிறார். இங்கே தேவன் சொன்ன ஆலயம் தன் சரீரமல்ல, எருசலேம் ஆலயம்தான் என்று நாமறிவோம். இது எந்த எருசலேம் ஆலயம்? சாலமோன் கட்டியதா? அல்லது நெகேமியா, எஸ்றா போன்றோரால் புதுப்பிக்கப்பட்டதா? அல்லது அந்தி கிறிஸ்து ஆட்சியின் போது இஸ்ரேலர்சள் கட்டி பலி செலுத்தப் போகும் ஆலயமா? ஆவியானவர்தாமே வெளிப்படுத்துவாராக!

அன்று, இயேசுவும் யூதர்களும் கண் எதிரே கண்ட ஆலயம்தான் இது. இதிலே எந்த ஒரு ஐயமும் இல்லை. இந்த ஆலயம் கட்ட 46 வருஷமாயிற்று என்று யூதர்கள் சொன்ன ஆலயம்தான் இது (யோ.2:20). இது மத்.24ல் சொல்லப்பட்டபடி, ரோம சர்க்காரால் கி.பி. 70ல் இடிக்கப்பட்டது. இன்றுவரை இஸ்ரேலருக்கு பலியிட, ஆராதிக்க ஆலயமே இல்லை. இஸ்ரேலரின் இந்த ஆலயம்பற்றி கொஞ்சம் பழைய சரித்திரத்தைப் பார்ப்போம்.

எகிப்திலே அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி தேவனை ஆராதிக்கவும், அவருக்குப் பலியிடவும் தேவன் மோசே மூலம் ஏற்பாடு செய்து, ஆசரிப்புக் கூடாரம் உருவாக்கப்பட்டது. மோசே, யோசுவா விற்குப்பின் இதை யாரும் கண்டு கொள்ளவில்லை. நீண்ட நாட்களுக்குப் பிறகு கீரியாத்யாரீமில் ஒபேத்திடம் இருந்த உடன்படிக்கைப் பெட்டியை தாவீது, எருசலேமுக்கு கொண்டுவந்தான். எருசலேம் பட்டணம், கீதரோன் பள்ளத்தாக்கையும் இன்னோம் பள்ளத்தாக்கையும் எல்லையாகக் கொண்டது. இது, சீயோன், ஓபேல், அக்கிரா, பெசெத் என்ற 4 மலைக்குன்றுகள் மேல் உள்ளது. இதை கி.மு.1046ல் எபூசியரிடமிருந்து தாவீது பிடித்து, ஒரு விசேஷ பட்டணமாக்கினான். தாவீது, ஆலயம்கட்ட எண்ணியும் தேவசித்தப்படி, கி.மு.1000ல் சாலமோனே கட்டினான். சீஷாக் என்னும் எகிப்திய ராஜா இதை கி.மு.932ல் பிடித்தபோதும் அழிக்கவில்லை. கி.மு.586ல் நேபுகாத்நேச்சார் இதை அழித்தான். கி.மு.537ல் யூதர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பினபோது மறுபடியும் கட்டினார்கள். பிற்பாடு, நெகேமியா கி.மு.444ல் பழுதுபார்த்து அலங்கத்தையும் கட்டினான். கிரேக்க ஆளுகையிலே கி.மு. 168ல் அந்தியோகஸ் எபிபேனஸ் என்பவன் இதை சேதப்படுத்தினான். மறுபடியும் யூதர்கள் இந்த ஆலயத்தை ஸ்தாபித்தனர்.

ரோமரின் ஆளுகையின்போது ஏதோம் (இதுமேய) சந்ததியாரான அந்திப்பத்தோர் அதிபதியானான் (கி.மு. 47ல்). பிற்பாடு அவன் மகன் பெரிய ஏரோது யூதாவின் அதிபதியாய் ஆனபோது, எருசலேம் தேவாலயத்தைப் புதுப்பித்தான். அந்தப் பணியை கி.மு.20ல் தொடங்கி ஒன்றரை வருடத்தில் முடித்தான். ஆனாலும் புதுப்புது வேலைகள் செய்தபடியால் முழுவேலையும் முடிய 46 வருஷம் சென்றது (யோ.2:20). இயேசு கிறிஸ்துவின் நாட்களில் இருந்த தேவாலயம் இதுதான். "ஏரோது தேவாலயம்" என்று இதைத்தான் வேத வல்லுநர்கள் கூறுகிறார்கள். இதைத்தான் இடிக்கப்பட்டுப் போகும் என்று இயேசு சொன்னார். யூதர்களின் கலகத்தினால், இயேசுவின் வார்த்தைப்படியே கி.பி.70ல் இந்த எருசலேம் தேவாலயத்தை ரோமர் அழித்துப் போட்டனர். ஆகாய் 2:7-9ல் சொல்லப்பட்டபடி, இயேசு இந்த ஆலயத்துக்குள் நுழைந்ததால் இதன் மகிமை பெரியது என்று பல ஊழியர்கள் பிரசங்கம் பண்ணக் கேட்டிருப்பீர்கள். (மத்.21;12, 13) ஆயினும் ஆகாய் சொல்லுகிற ஆலயம், யூதர்கள், அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் கட்டி பலி செலுத்தும் ஆலயம் என்றும் (தானி.9:27; மத்.24:15), 1000 வருட ஆட்சி தேவாலயம் என்றும் (எசே.40-47) பலவாறாக சொல்லப்படுகிறது. எனினும் ஆகாய் சொன்னது 1000 வருட ஆட்சி ஆலயம் என்று சொல்வதே சரியாகும்.

கி.பி. 637ல் Saracenes எருசலேம் பட்டணத்தைப் பிடித்து, தேவாலயம்இருந்த இடத்தில் ஒரு பள்ளிவாசலைக் (Doom of the Rock) கட்டினார்கள். கி.பி.1099ல் இந்தப்பட்டணம் சிலுவை யுத்தவீரரால் (Cursaders) விடுதலையாக்கப்பட்டது. திரும்பவும் எகிப்தியர் இதைப் பிடித்து அழித்தார்கள். இப்படியே புறஜாதிகள் மாறி மாறி இந்தப் பட்டணத்தை ஆண்டார்கள். துருக்கர் கி.பி. 1517 முதல் 1917 வரை ஆண்டனர். அதன் பின் ஆங்கிலேயர் 1948 வரை ஆண்டார்கள். ஆங்கிலேயர் யூதருக்கு விடுதலை கொடுத்தும், யூதருக்கும் அராபியருக்கும் இடையிலே யுத்தங்கள் உண்டாயின. இருவரும் செய்து கொண்ட சமாதான ஒப்பந்தத்தின்படி, புதிய எருசலேம் பட்டணம் மாத்திரம் யூதருக்கு கிடைத்தது. தேவாலயமிருந்து, தற்போது பள்ளிவாசல் இருக்கும் பழைய எருசலேம், அராபியர் கையிலேயே இன்னும் இருக்கிறது. லூக்.21:24ன் படி புறஜாதியாரின் காலம் நிறைவேறும் வரைக்கும், பழைய எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்பட்டிருக்கும். இயேசுவின் 2ம் வருகையில், புதிய தேவாலயம் பழைய இடத்திலேயே - தற்போது இருக்கும் இடத்திலேயே தேவனால் கட்டப்படும். மட்டுமல்ல. இந்த மசூதி அகற்றப்படத்தக்கதான ஒப்பந்தம் அராபியருக்கும் இஸ்ரேலருக்கும் இடையே சமீபத்தில் உண்டாயிருக்கிறதாய்க் கேள்விப்படுகிறோம். எனவே யூதர்கள் இந்த இடத்திலேயே அந்தி கிறிஸ்துவின் நாளில் கட்டி முடிப்பார்கள் என அறிகிறோம் (இந்த ஆலயமும் புறஜாதியரால், அந்தி கிறிஸ்துவால் - அழிக்கப்பட்டுப் போகும்).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே இயேசுவின் கால எருசலேம் ஆலயம் இடிக்கப்பட்டு இன்றுவரை ஆலயமே இல்லாமல் யூதர்கள் வாழ்கின்றார்கள் என்ற அதரிசனமான உண்மையை அறிந்து கொண்டீர்கள். அந்திகிறிஸ்து சீக்கிரமாய் வரப்போகிறான். அப்போது, யூதர்கள் எருசலேமில் பழைய இடத்திலேயே ஆலயத்தைக் கட்டி பலி செலுத்துவார்கள் என்று நிதானிக்கிறோம். அந்த நாள் மிகச் சமீபமே! உலகக் காரியங்களைப் பார்க்கும்போது இது சரியாய் தோன்றுகிறது. அந்த அந்தி கிறிஸ்து வெளிப்படும் முன்னே, இரகசிய வருகையிலே இயேசுவோடு எடுத்துக் கொள்ளப்பட நீ ஆய்ததமா? ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! அல்லேலூயா! ஆமென்!

❖ ❖ ❖

# இயேசு சிருஷ்டிக்கப்பட்டவரா?

தேவன் (God-ஏலோஹிம்) மூன்று ஆட்தத்துவமுள்ள ஒரே தேவன் என்றும், அந்த மூன்றிலொன்றுதான் வார்த்தையாகிய தேவன் என்றும், அவர்தான் இயேசு என்ற பெயரில் மனிதனாய் பிறந்தார் என்றும், வேதம் திட்டமும் தெளிவுமாய் சொல்லியிருக்க, இந்த வார்த்தையானவர் தேவனல்ல என்றும், இவர் ஆவியாய்ப் படைக்கப்பட்டவர் என்றும் சொல்லுகிற கூட்டம் தற்காலத்தில் பெருகிவிட்டது. இவர்கள் ஒரு சில வசனங்களை மேற்கோள் காட்டி தங்கள் கருத்துக்களை நிலை நாட்டுகின்றனர். அவைகளில் ஒருசிலவற்றை ஆவியானவரின் ஒத்தாசையோடு ஆராய்ந்து பார்ப்போம்.

**(1) சங்.2:7:** "நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெனிப்பித்தேன்" வார்த்தையாகிய தேவன் பரலோகிலேயே தேவகுமாரனாய் வெளிப்பட ஆயத்தமானார் (எபி.10:10:5-7; சங்.40:6-8; யோ.6:51). அதனாலேயே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவராய் அப்போதே எண்ணப்பட்டார் (வெளி.13:8). இந்த வார்த்தையானவர் இயேசு என்ற பெயரில் மாமிசமானார் (யோ.1:14); மரித்தார்; உயிர்த்தார். குமாரனாய் ஆக்கப்பட்டு மரித்து உயிர்த்தெழுந்த பின்புதான், பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனானார் (ரோ.1:5). என்றைக்கு குமாரனாயிருக்க பரலோகிலேயே நிர்ணயமாக்கப்பட்டாரோ அன்றைக்கே. மூன்று ஆட்தத்துவமுள்ள ஒரே தேவன். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்று அழைக்கலாயினர் (நீதி.30:4; சங்.2:12). பழைய ஏற்பாட்டு மக்களுக்கு இது முழுமையாய் வெளிப்படாமல், வார்த்தையாகிய தேவன் குமாரனாய் வந்தபிறகுதான் 100க்கு 100 இம் மூன்றும் தெரியப்பட்டது. அந்த வகையில் புதிய ஏற்பாட்டு மக்களாகிய நாம் கொடுத்து வைத்தவர்கள். அல்லேலூயா! சங்.2:7 என்பது பிதாவாகிய தேவனின் தீர்மானம். இது குமாரனாகிய இயேசு கிறிஸ்து மரித்து உயிர்த்தபோது நிறைவேறுகிறது (see அப்.13:32, 33; எபி.5:5; 1:5). "ஜெனிப்பித்தல்" என்பது "சிருஷ்டித்தல்" என்ற அர்த்தமில்லாமல் , "உயிர்ப்பிக்கப்பட்டார்" என்ற அர்த்தத்தில் இருக்கிறது. (இது குறித்து ஆசிரியரின் ஆராய்ச்சிப் புத்தகங்களிலுள்ள செய்திகளை வாசியுங்கள்). இந்த சங்.2:7 வசனத்தை வைத்து அவர் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று எப்படி கூறுவது?

**(2) கொலோ.** 1:15 "அவர் அதரிசனமான தேவனின் தற்சுருபமும் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்". இதிலே முந்தினபேறு என்பதை வைத்து சகல சிருஷ்டிகளுக்கும் முன்னே சிருஷ்டிக்கப்பட்டவர்இயேசு என்கின்றனர். முந்தின பேறு என்றால் First born - prototokos GK - என்று

பொருள். அதாவது, நிலைமையிலே முதன்மை (Priority of position) என்பதாகும். சங்.89:27ஐ வாசித்தால், "நான் அவனை எனக்கு முதற் பேறானவனும், பூமியின் ராஜாக்களைப் பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்" என்பது, தாவீது, முதலிலே சிருஷ்டிக்கப்பட்டான் என்ற அர்த்தத்திலல்ல; பூமியின் எல்லா ராஜாக்களின் நிலைமையிலேயும் உயர்ந்தவனாவான் முதன்மையாவான் என்ற பொருளாகும். அப்படியே, மனுஷசாயலான - சிருஷ்டியான மனித இயேசு (பிலி.2:6-8) சகல சிருஷ்டிகளுக்கும் நிலைமையிலே முதன்மையானவர்; உயர்ந்தவர் என்பதாகும். (பிறப்பிலேயே உயர்ந்தவர். அல்லேலூயா!) எபி.2:6,7ஐ தியானியுங்கள். கொலோ.1:15ல் சொல்லப்படுவது மனிதனாய் வந்த - அடிமையின் சாயலான இயேசுவைப் பற்றி தானே ஒழிய, திரித்துவத்தின் நிலையிலுள்ள வார்த்தையாகிய தேவனைக் குறித்து சொல்லப்படுவது அல்ல. தேவனுடைய (ஏலோஹிம் - திரித்துவ தேவன் - God) தற்சுரூபம் என்பது, பரலோக நிலை அல்ல. எபி.1:3ஐ வாசியுங்கள்: "இவர் (குமாரன்) அவருடைய (திரித்துவ தேவனுடைய) மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமாயிருந்து..". இயேசுவின் மனித வாழ்க்கை Nature & Gloryயான திரித்துவ தேவனின் மகிமை யையும், சொரூபத்தின் தன்மையையும்தான் பிரதிபலிக்கிறது. மேலும், ஆதாமும், தேவதூதர்களும் படைக்கப்பட்டவர்கள்; not first born or begotten; இயேசு ஒருவர்தான் பரிசுத்த ஆவியானவராலே மரியாளின் கர்ப்பத்துக்குள் உருவாக்கப்பட்ட சிருஷ்டிக்கப்பட்ட - வார்த்தையாகிய தேவன் (யோ. 1:14; லூக்.1:35). எனவேதான் இவர் சர்வ சிருஷ்டிகளுக்கும் முதற் பேறானவராயிருக்கிறார். இந்த இயேசுதான் மரித்தோரிலிருந்தெழுந்த முதற் பேறானவர் (கொலோ.1:8) இந்த இயேசுதான் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறவானவர் (ரோ.8:29). ஆக, **முதற்பேறு என்பது சிருஷ்டிக்கப்பட்டதைக் குறிக்கவில்லை என அறிகிறோம்.** மனிதனாய் வந்து, சகல சிருஷ்டிகளின் நிலையிலேயே முதன்மை யாயிருக்கும் இந்த இயேசுதான், வார்த்தையாகிய தேவனாயிருக்கும்போதும் சகல சிருஷ்டிகளுக்கும் பெரியவர்; சிருஷ்டிகர் என்று கொலோ.1:16,17 சொல்கின்றது. அவர் மரித்து உயிர்த்து முதன்மையில் தற்போது இருப்பதால், சகலமும் அவருக்குள் வாசமாயிருக்கிறது என்று கொலோ.1:18:19ல் எழுதப்பட்டுள்ளது. ஆக மனிதனாய் வந்து, தேவனின் மகிமையையும், சொரூபத்தையும் வெளிப்படுத்திய மனித இயேசு ஒருவரே சர்வசிரு டிக்கும் மேலானவர். முந்தின பேறுமானவர் என அறிகிறோம்.

**(3) வெளி.3:14;** தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர்". தேவன் என்றால் God - ஏலோஹிம் - திரித்துவ தேவன்

- என்று நாமறிவோம். வார்த்தையாகிய தேவனைக் கொண்டுதான் சகல சிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப்பட்டன (யோ.1:3; எபி.1:2; கொலோ.1:16). எனவேதான், "the begining of the creationof God" - அதாவது ஆதியாய் இருக்கிறார்" என்று எழுதப்பட்டுள்ளது. மற்றப்படி இவர் ஆதியிலே சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல; இவர் சிருஷ்டி கர்த்தாக்களில் ஒருவர். அல்லேலூயா!

இன்னும் எத்தனையோ கேள்விகளுக்கு பதில் சொல்லலாம்; ஆவியானவர் வேதத்திலிருந்து கற்றுத்தருகிறார். இந்தக் கடைசி நாட்களில், வார்த்தையாகிய தேவன் சிருஷ்டிக்கப்பட்டவர் என்று கூறும் உபதேசங்களை எதிர்த்துப் போராடும் வீரர்களாய் நாமிருப்போம்! வெற்றி நமதே!

❖ ❖ ❖

## அந்தி கிறிஸ்துவின் காலத்தில் இரட்சிப்பு உண்டா?

ரோ.10:9,10; யோ.3:3,5; 1 கொரி.6:13; 1 பேது.1:23; எசே.36:25; 15:9; எபே.5:26; தீத்.3:5 போன்ற பல வசனங்களின்படி, ஜலமாகிய வசனத்தால், ஆவியானவரால் நம்முடைய ஆவியிலே விசுவாசித்து மறுபடியும்பிறக்கிற, புது சிருஷ்டியாகிற, ஆவியிலே விருத்தசேதனம் பண்ணப்படுகிற அனுபவம்தான் இரட்சப்பின் அனுபவமாகும். இந்த அனுபவம் பழைய ஏற்பாட்டிலும் இருந்தது; புதிய ஏற்பாட்டிலும் இருக்கிறது. இப்படி இரட்சிக்கப்படுகிறவர்களைத்தான் கர்த்தர் சபையில் சேர்த்துக் கொள்கிறார் (அப்.2:47). இப்படிப்பட்டதான இரட்சிப்பு, அந்திக்கிறிஸ்துவின் காலத்தில் உண்டா? ஆவியானவர் விளக்குவாராக!

வேத வல்லுநர்கள் இந்த உலக காலத்தை 7 பகுதியாகப் பிரிக்கின்றார்கள். (1) அறியாமையின் காலம் (2) மனச்சாட்சியின் காலம் (3) மனித அரசாங்க காலம் (4) வாக்குத்தத்தத்தின் காலம் (5) நியாயப் பிரமாணக் காலம் (6) கிறிஸ்தவ சபையின் காலம் (7) 1000 வருட அரசாட்சி காலம். இதிலேகிறிஸ்தவ சபையின் காலத்திற்கும் 1000 வருட அரசாட்சிக் காலத்திற்கும் இடைப்பட்ட 7 ஆண்டுக் காலம்தான் அந்தி கிறிஸ்துவின் காலம். 1 தெச.4:16-18; 1 கொரி.15:51; யோ.14:2-4 போன்ற வசனங்களின்படி சபையானது இயேசுவின் இரகசிய வருகையிலே எடுத்துக் கொள்ளப்படப் போகிறது. அதன் பின்புதான் தானி.9:27; 2 தெச.2:3; மத்.24:15; போன்ற வசனங்களின்படி அந்திகிறிஸ்துவின் ஆட்சி நடக்கும். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இரட்சிப்பின் சுவிசேஷம் சபையாரால் சொல்லப்படுகின்றது. சபை

எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு இரட்சிப்பின் சுவிசேஷம் சொல்லப்பட யாருமில்லை. கிறிஸ்தவ சபை மத்.16:18ன்படி, இயேசு கிறிஸ்துவாகிய வார்த்தையின்மேல் கட்டப்பட்டது. இந்த இரகசியம் பவுலுக்கு வெளிப்படுத்தப்பட்டது (எபே.12:19-3:3). அதற்கு முன்பு இஸ்ரேல் சபை இருந்தது; அதற்கு முன்பும் சபை என்றில்லாமல், தேவ ஜனங்கள் இருந்தார்கள். அவர்களுக்கெல்லாம், நித்திய சுவிசேஷம், ராஜ்யத்தின் சுவிசேஷம் எல்லாம் சொல்லப்பட்டும், பலி செலுத்துவதின் மூலம் இரட்சிப்பு விளக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்களானார்கள். நமக்கோ பலிக்கு நிஜமான இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதலினாலே இரட்சிப்பின் சுவிசேஷம் நேரிடையாகவே சொல்லப்படுகிறது. "பல்லுக்குப்பல்; கண்ணுக்குகண்" என்ற சட்டரீதியில் இரட்சிப்பு விளக்கப்பட்டது அன்று. இன்றோ - புதிய ஏற்பாட்டுக் காலத்திலோ கிருபையாய், இலவசமாய் இரட்சிப்பின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகின்றது. ஏனெனில், கிருபையும் சத்தியமும் இயேசுக் கிறிஸ்துவின் மூலம் வந்தது (யோ.1:17). சபை இருக்கும்வரை இந்தக் கிருபையின் காலம் இருக்கும். அதன்பின் அந்திகிறிஸ்துவின் அட்டகாசமான ஆட்சி. அலங்கோலமான ஆட்சி. அசிங்கமான ஆட்சி, கொடுங் கோலாட்சி 7 ஆண்டுகள் நடைபெறும். அந்த 7 ஆண்டுகளில் தேவ தூதர்கள்தான், தூதுகளைச் சொல்லிச் செல்வர். வெளி.14:6-12 வசனங்களை வாசித்தால், முத்தூது சொல்லப்படுவதை அறியலாம். (1) நித்திய சுவிசேஷம் எனும் தூது (2) பாபிலோனெனும் அந்தி கிறிஸ்துவின் ஆளுகை விழுந்தது எனும் தூது (3) அந்திகிறிஸ்துவின் முத்திரையை தரித்துக் கொள்கிறவனுக்கு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் எனும் தூது.

இம்மூன்று தூதுகளிலும், இரட்சிப்புக்கு ஒப்புக்கொடுங்கள் என்ற நற்செய்தி இல்லவே இல்லை. மேலும் வெளி.11ஐ வாசித்தால், இரண்டு தீர்க்கதரிசிகள் வரப்போகும் காரியங்களைக் குறித்து 1260 நாட்கள் ($3^1/_2$ வருடம்) தீர்க்கதரிசனம் சொல்வார்கள்; இதிலும் இரட்சிப்புக்கான நற்செய்தி இல்லை. வெளி 7ல் முத்திரை போடப்பட்டு, வெளி.14ல் பரலோகில் காணப்படும் 1,44,000 ஊழியர்களும் இரட்சிப்புக்கான ஊழியம் செய்ததாக இல்லை. யோவேல் 2:28க்கான பின்மாறி ஊற்றப்பட்டும், இரட்சிப்பின் சுவிசேஷம் இல்லை. அப்படியானால் அந்தி கிறிஸ்துவின் நாட்களில் இரட்சிப்பே இல்லையா? கைவிடப்பட்ட கிறிஸ்தவர்கள் மற்றும் உயிரோடு வாழும் இஸ்ரேலர்களின் நிலை என்ன? செம்மறியாடு வெள்ளாடு எனும் புறஜாதி மக்களுக்கு (மத்.25) இரட்சிப்பின் தருணமே இல்லையா? இவைகளெல்லாம் கேள்விகள். ரோ.11ஐ வாசித்தால், இஸ்ரேலரின் அவிசுவாசத் தவறினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது; இது

கிருபையாய் கிடைத்தது. இது சபை எடுத்துக் கொள்ளப்படும் கிருபையின் காலம் வரை! அதன்பின்?!..

அப். 2:16-21ஐ வாசியுங்கள். வசனம் 21ன் படி அப்பொழுதும் இரட்சிப்பு உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. யாருக்கு? இஸ்ரேலருக்கு. எப்படி? ரோ.11:25-27ஐ வாசித்தால், அந்திகிறிஸ்துவின் 7 ஆண்டு இறுதியில், பகிரங்க வருகையிலே ஒலிவ மலையில் கால் வைத்து இறங்கும் (சக.14:4; வெளி.1:7) இயேசுவை காணும் இஸ்ரேலர்கள் அப்பொழுதே மனந்திரும்பி இரட்சிக்கப்டுவார்கள். இது இஸ்ரேலருக்கு கொடுக்கப்பட்ட தருணம். இவர்கள்தான் பாதுகாக்கப்பட்ட இஸ்ரேலர்கள் (வெளி.12:13-17). அதற்கு முன்பே பலியும் காணிக்கையும் ஒழிக்கப்படுவதைக் கண்டு, பாழக்குகிற அருவருப்பு பரிசுத்த ஸ்தலத்திலே நின்று தன்னையே தேவனெனறு வணங்கச் சொல்வதைக் கண்டு, இயேசுவே மேசியா என்று விசுவாசித்திருக்கும் 1,44,000 இஸ்ரேலர்கள் சேதப்படாத படிக்கு பிதாவின் முத்திரைபோட்டு இரட்சிக்கப்படுகிறார்கள்: பாதுகாக்கப்படுகிறார்கள்; பரலோகிற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள் (வெளி.7,14 2 தெச.2). இஸ்ரேல் மக்களுக்கு இப்படியாய் இரட்சிப்பு என்றால், கைவிடப்பட்ட புறஜாதிக் கிறிஸ்தவர்கள் மற்றும் புறஜாதியாரின் நிலை என்ன?

வெளி.15:1-2ஐ வாசித்தால், அந்திக் கிறிஸ்துவின் சொரூபம், முத்திரை, நாமத்தின் இலக்கம் ஆகியவைகளுக்கு உள்ளாகாமல் ஜெயம் கொண்டவர்கள் பரலோகம் போயிருக்கிறார்கள். ஆமென். வெளி.20:4-6ஐ வாசித்தால், அந்தி கிறிஸ்துவின் நாட்களில் இரத்த சாட்சியாய் மரித்தவர்களும், வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் சிங்காசனத்தில் இருக்கிறார்கள். ஆமென். ஆக, இஸ்ரேலருக்கு ஒரு தருணம் தேவன் கொடுப்பது போல, புறஜாத மக்களும் இரத்த சாட்சியாய் மரித்து - அந்தி கிறிஸ்துவுக்கு ஜெயம் கொண்டு பரலோகம் வர தருணம் கொடுக்கிறார். என்னே தேவனின் அன்பு! இதுதான் யோ.3:16! அல்லேலூயா! பகிரங்க வருகையிலே இஸ்ரேலர்கள் இயேசுவைக் கண்டு இரட்சிக்கப்படும் காலம் வரை. ரோ.11:25ன்படி புறஜாதியாருக்கு இரட்சிப்பின் நிறைவு உண்டு. அது இரகசிய வருகை வரை கிருபையாய், இரட்சிப்பின் சுவிசேஷத்தால், இலவசமாய் கிடைக்கும். இரகசிய வருகைக்குப் பின்போ, இரத்த சாட்சி என்ற நிலையில் தான் கிடைக்கும். அப்போதும்கூட இரட்சிப்பின் சுவிசேஷம் சொல்ல சபை இல்லை;

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! "இன்றே இரட்சண்யநாள்; இதுவே அனுக்கிரக காலம்" என்று ஆவியானவர் மூலமாய் சபையார்

மூலமாய் முழங்குவது காதில் விழுகிறதா? (1 கொரி.6:2) காதுள்ளவன் கேட்கக்கடவன்! கிருபையாய் இலவசமாய் இரட்சிக்கப்படுவதை விட்டு, அந்திகிறிஸ்துவின் நாளில் இரத்த சாட்சியாய் மரித்து பரலோகம் போக வேண்டுமா? இயேசு சீக்கிரம் வருகிறார்! அவர் வரும்போது கைவிடப் படாதபடிக்கு உன் ஆவி, ஆத்மா, சரீரம் குற்றமில்லாதிருக்கட்டும்! (1 தெச.5:23). நீங்களும் ஆயத்தமாகுங்கள்! மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள்!

❖ ❖ ❖

## பிதாவின் சித்தம் என்ன?

மத்.7:21ல், பிதாவின் சித்தப்படி செய்கிறவன்தான் பரலோகம் போவான் என்று எழுதப்பட்டிருக்கிறது. மற்றப்படி, "கர்த்தாவே கர்த்தாவே" என்று சொல்பவனோ, இயேசுவின் நாமத்தினால் தீர்க்க தரிசனம் உரைக்கிறவனோ, பிசாசுகளை துரத்துகிறவனோ, அநேக அற்புதங்களை செய்கிறவனோ பரலோகம் போவதில்லையாம்! ஏன்? வரங்கள் உள்ளவன், வல்லமை உள்ளவன், கர்த்தரின் நாமத்தைக் கொண்டு குணமாக்கியவன், கோடிக்கணக்கான மக்களை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்தவன், அக்கிரமச் செய்கைக் காரனாமே! தேவன் அவனை அறியவில்லை யாமே! (மத்.7:22-23). அப்படியானால் எது பிதாவின் சித்தம்? அதன்படி செய்வது எப்படி? இந்தக் கேள்விகளுக்கு ஆவியானவர் பதில் தருவாராக!

1 தெச.4:3ன் படி "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது." தேவனைத் தரிசிக்க வேண்டுமானால் - பரலோகம் போக வேண்டுமானால்- பரிசுத்தம் முழுமுதற் தேவை (எபி.12:14). மத்திய ஆகாயத்திலே இயேசு வரும்போது அவரோடு இணைவதற்கு நம் ஆவி, ஆத்மா, சரீரதம் முழுவதும் பரிசுத்தமாயிருக்க வேண்டும் (1 தெச.5:23). பரிசுத்தம் என்ற வார்த்தைக்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. (1) **Set apart பிரித்தெடுக்கப்படுதல்;** பிரத்யேகம் பண்ணப்படுதல்; தனிமைப்படுத்தப்படுதல். (2) Holyness - தூய்மை. இந்த இரண்டுமே கிறிஸ்தவனுக்கு தேவை என்பது பிதாவின் சித்தம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஆண்டவரென்றும், இரட்சக ரென்றும் இருதயத்திலே விசுவாசித்து வாயினாலே அறிக்கை செய்கிறவன் இரட்சிக்கப்பட்டவன் (ரோ.10:9,10). இப்படி இரட்சிக்கப்பட்டவன். எக்ளிசியா - சர்ச் - பிரித்தெடுக்கப்பட்ட கூட்டமாகிய சபையில் இணைந்து கொள்ள வேண்டும்

(அப்.2:47). இது தான் நீதிமான்களின் சபை; இதிலே பாவிகள் இருப்பதில்லை; (சங்.1:5). இதைத்தான் ஆவிக்குரிய சபை - இரட்சிக்கப்பட்டவர்களின் குழுமம் - என்று சொல்கின்றோம். இந்த சபையிலே நிலைத்திராதவன் பிரித்தெடுக்கப் பட்டவனல்ல; இவன் பரிசுத்தத்திற்கு அப்பாற்பட்டவன்; பிதாவின் சித்தம் இவனிடம் இல்லை.

“ஆற்றிலே ஒருகால்; சேற்றிலே ஒருகால்” என்று இருப்பவன் உலக சிநேகம் உள்ளவன்; இவன் ஆவிக்குரிய விபச்சாரக்காரன்; தேவனுக்கு பகைவன் (யாக்.4:4). எனவே தான் “மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி நம்மைநாமே இரட்சித்துக் கொள்ள வேண்டும்” என்று பேதுரு சொல்கிறான் (அப்.2:40). சத்திய மாறுபாடு; ஜீவிய மாறுபாடுள்ள சந்ததிகளை விட்டு விலக வேண்டும். அந்நிய நுகப்பிணைப்பு கூடாது (2 கொரி.6:14-18). அப்போதுதான் இறுதி இரட்சிப்பு உண்டு - பரலோகம் உண்டு.

**பரிசுத்தத்தின் இரண்டாவது பொருள் தூய்மை.** நம்மைநாமே தூய்மைப்படுத்திக்கொள்ள முடியாது. சமாதானத்தின் தேவன் தாமே முற்றிலும் பரிசுத்தமாக்குவார் (1 தெச.5:23). எப்படி? வியாதியைக் கொடுத்து, வேதனையைக் கொடுத்து, ஏழ்மையைக் கொடுத்து, தோல்வியைக் கொடுத்து புத்திபுகட்டி பரிசுத்தமாக்குவாரா? இந்த பொல்லாத காரியங்களெல்லாம் பிசாசின் கிரியைகள் அல்லவா! இவைகளைத்தானே இயேசு சிலுவையிலே ஒழித்தார் (1 யோ.3:8). தாம் ஒழித்தவைகளையே நமக்கு கொடுப்பா ரென்றால் அவருக்கும் பிசாசுக்கும் வித்தியாசமில்லையே! யோ.15:3ஐ வாசித்தால். இயேசுவின் உபதேசத்தாலேயே நாம் பரிசுத்தமாகின்றோம் (See யோ.17:17; சங்.105:19; 94:13; 50:17). தேவனின் திருவசனத்தைக் கேட்டு அதற்கேற்ற கிரியை செய்கிறவனே பாக்கியவான் (யாக்.1:22-25); அவனே பரலோகத்தின் பிதாவின் சித்தம் செய்கிறவன்; அவனுக்கே பரலோகம் உண்டு. இரட்சிக்கப்படாத புறஜாதிகள்கூட, சுபாவத்தின்படி தாங்கள் அறியாத நியாயப்பிரமாண அன்பை கைக்கொள்ளும் பொழுது (ரோ.2:13, 14; மத். ), இயேசுவின் அன்பை அறிந்த - ருசிபார்த்த நீ, அவரின் புதிய அன்புக் கட்டளைப்படி நடக்க வேண்டாமா? (யோ.13:34). ரோ.6:16-23 வரை வாசித்தால், பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமையான நீ, உனக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிந்தால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும்பலன்; முடிவோ நித்திய ஜீவன் (யூதா.17; மத்.28:18-20; அப்.16:14). ஆமென்! அல்லேலூயா! இதே கருத்தைத்தான் இயேசுவும் மத்.7:24ல் சொல்கிறார்.

ஆக, உலகத்தைவிட்டு பிரித்தெடுக்கப்பட்டு, வசனப்படியான தூய வாழ்க்கை வாழ்ந்து, கறை திரையற்ற பரிசுத்தவானாய் வாழவேண்டும் என்பதுதான் பிதாவின் சித்தம் என்று அறிகிறோம். இதற்காகத் தானே சபையிலே 5 விதமான ஊழியத்தை தேவன் வைத்திருக்கிறார் (எபே.4:11-13). மனிதன் ஏழெழுபது தரம் விழுந்தாலும், வசனத்தைக் கொண்டு பரிசுத்தமாக்குகிற தேவன் நம் தேவனல்லவா! இந்த அடிப்படையில்தான், "அக்கிரமச் செய்கைக் காரரே" என்கிறார். கிரமத்திற்கு எதிர்ப்பதும் அக்கிரமம். அதாவது Lawlessness - வசனமில்லாத, வசனத்தின்படி நடவாத பெயர்க் கிறிஸ்தவர்கள். வசனத்தில்பரிசுத்த மில்லாதவர்கள். அதனால்தான் "அறியேன்" என்கிறார். குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பது, ஆசாரியத்துவம் பின்பற்றுவது, கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான பண்டிகைகளை கொண்டாடுவது, வேதத்திலேயே காணப்படாத பண்டிகைகள், சடங்காச்சாரங்கள் போன்றவற்றை ஆசரிப்பது, பாரம்பரியத்தை நிலைநிறுத்தி தேவனுடைய கற்பனைகளை அவமாக்குவது, ஊழியத்திலும், திருமணத்திலும் அந்நிய நுகப்பிணைப்பு, போட்டோ- சிலை-விக்கிரகம் உருவாக்குதல் மற்றும் வணங்குதல், உலக சிநேகத்தால் வசனத்தை விட்டுக் கொடுப்பது போன்ற பல காரியங்கள் Lawlessness - அக்கிரமச்செய்கை. இவர்கள் கன்மலையாம் இயேசுவின் மேல் வீட்டைக் கட்டாதவர்கள். பரலோக பிதாவின் சித்தப்படி நடக்காதவர்கள்.

வரங்களையோ, அதிகாரத்தையோ, வல்லமையையோ வைத்து எந்த மனுஷனையும் எடைபோடக்கூடாது. வரங்கள் ஆத்ம ஆயத்திற்காக, ஆவியானவர் தமது சித்தத்தின்படி கொடுப்பது (1 கொரி.12); பரிசுத்தமில்லாதவனுக்கும் வரங்கள் கிரியை செய்யும்; தேவன் ஒருமுறை கொடுத்த கிருபைவரம் மாறவே மாறாது (ரோ.11:29). வரங்களை வைத்து பரலோகமில்லை. ஆவியின் கனிகள் சரீரத்தில் வெளிப்படுவதை வைத்துத்தான் நியாயத்தீர்ப்பு. ஆவியின் கனிகள் வசனத்தாலே - வசனக்கிரியையாலே வெளிப்படும். கனிகொடா மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வசனமாகிய கன்மலையின்மேல் வீட்டைக் கட்டினவனாய் இருக்கிறாயா? (மத்.7:24). நீயே பிதாவின் சித்தப்படி செயல்படுகிறவன். பரலோக ராஜ்யம் உனக்கு உண்டு. ஆமென். (மேலும் விபரமறிய "பரிசுத்தத்தின் மூன்று படிகள்" என்ற செய்தியை வாசிக்கவும்).

❖ ❖ ❖

# ஆவிக்குரிய சபையில் சேராதவர்களின் நிலை என்ன?

தேவ பிள்ளையே! தலைப்பைப் பார்த்த உடனே, ஆவிக்குரிய சபை எது என்று அறிய வாஞ்சை வருகிறதல்லவா! அந்நிய பாஷை பேசுகிற சபையோ, அற்புதம் அடையாளம் நடக்கும் சபையோ, நகையில்லாமல் வெள்ளை டிரஸ் உடுத்துகிற சபையோ, திருமணமாகாமல் ஊழியம் செய்யும் சபையோ ஆவிக்குரிய சபை அல்ல என்று பலமுறை எழுதியிருக்கிறேன். ஒருவேளை இவைகளெல்லாம் சபைக்கு மெருகூட்டம் காரியங்களாக இருந்தாலும் இருக்கலாம்; வசனமே வெளிப்படுத்தும். மற்றப்படி, மத்.16:18 எபே.2:19-3:6ன் படி, இயேசு கிறிஸ்துவின் மேல் கட்டப்பட்ட சபையே ஆவிக்குரிய சபை என்றும், அதிலே இருப்பவர்கள் இரட்சிக்கப்பட்ட சீஷர்கள் என்றும் (அப்.2:47). அவர்களே கிறிஸ்தவர்கள் என்றும் (அப்.11:26) வேதம் வெளிப்படுத்துகிறது. ரோ.10:9,10; யோ.3:3,5; 1 கொரி.6:11; யாக்.1:18; 1 பேது. 1:23 போன்ற வசனங்களின்படி, பாவத்திற்கு மரித்து நீதிமான்களாக்கப் பட்டவர்கள்தான் இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும், இவர்கள், வசனமாகிய ஜீவத்தண்ணீரினால் பரிசுத்த ஆவியானவராலே, தங்களுடைய ஆவியில் மறுபடியும் பிறந்து, மனமாகிய ஆத்மாவிலே தினந்தோறும் மறுரூபமாகி, சரீர மீட்புக்காய் காத்திருப்பவர்கள் என்றும் (ரோ.12:2; யாக்.1:21; 1 பேது.1:8, 9; ரோ.8:23) நாம் அறிவோம். இவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாய் ஞானஸ்நானம் பெற்று (கலா.3:27) ஜலத்தினால் ஞானஸ்நானம் எடுத்தவர்கள் என்றும் நாம் அறிவோம். இப்படிப்பட்டோர் அங்கம் வகிக்கும் தற்கால ஆவிக்குரிய சபையின் பெயர் என்ன? அதில் சேராதவர்களின் நிலை என்ன? ஆவியானவர் விளக்குவாராக!

ஆவியிலே எழுதப்பட்ட வசனப்படி நடப்பவர்கள் ஆவிக்குரியவர்கள். இவர்கள் இணைந்திருக்கும் சபைதான் இயேசு உண்டாக்கியது. அது பெந்தெகொஸ்தே நாளில் உருப்பெற்றது. ஆரம்பத்தில் இந்த சபைக்கு தேவனுடைய சபை, கிறிஸ்துவின் சபை, ஜீவனுள்ள தேவனுடைய சபை என்றும் (1 கொரி.1:2; ரோ.6:16; 1 தீமோ.3:15) ஊர்ப் பெயர்களை வைத்து இன்ன ஊர் சபை என்றும் (வெளி.2,3) பல பெயர்கள் இருந்தன. என்ன பெயர்கள் இருந்தாலும் அவைகள் எல்லாம், தேவனுடைய சபைகள் என்றே கருதப்பட்டன (2 தெச.1:4). அப்படியானால், இப்படிப் பெயர்கள் உள்ள சகைளுக்கு ஒரு அடிப்படை மூல உபதேசம் இருக்க வேண்டுமல்லவா! ஆம்.. உண்டு. எபி.6:1,2ல்உள்ள மூல உபதேசப்டி இருக்கிற சபைகள்தான் ஆவிக்குரிய - இயேசுவாகிய கற்பாறையின் மேல்கட்டப்பட்ட சபைகள்.

தற்காலத்தில் இவைகளை பெந்தேகொஸ்தே சபைகள் என்றும், பூரண சுவிசேஷ சபைகள் என்றும்பலவாறாய்ச் சொல்கின்றனர். எப்படியோ இரட்சக்கப்பட்டவர்களின் கூட்டமே எக்ளீசியா - பிரித்தெடுக்கப்பட்டவர்களின் கூட்டமே சர்ச், ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையாகும்; மற்றவைகளெல்லாம் வெறுமனே பெயர்க் கிறிஸ்தவ - பாரம்பரிய - இயேசுவின் முதலாம் வருகைக்கு விரோதமாய் செயல்படும். கிறிஸ்தவப் பெயருள்ள சபைகளாகும். இப்படிப்பட்ட சபையாரெல்லாம், ஆவிக்குரிய சபையில் இணையாதவர்கள். இவர்களும் கிறிஸ்துவை போதிக்கிறார்கள். இவர்களின் நிலை என்ன?

பவுல் அப்போஸ்தலர் காலத்திலேயே பவுல் சொல்வதைப் பாருங்கள்: "சிலர் பொறாமையினாலும் விரோதத்தினாலும், சிலர் நல் மனதினாலும் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள். சிலர் என் கட்டுகளோடே உபத்திரவத்தையும் கூட்ட நினைத்து, சுத்த மனதோடே கிறிஸ்துவை அறிவியாமல் விரோதத்தினாலே அறிவிக்கிறார்கள். சுவிசேஷத்திற்காக உத்தரவு சொல்ல நான் ஏற்படுததப்பட்டவனென்று அறிந்து, சிலர் அன்பினாலே அறிவிக்கிறார்கள். இதனாலென்ன? வஞ்சகத்தினாலாவது, உண்மையினாலாவது, எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார்; அதனால் சந்தோஷப்படுகிறேன்; இன்னமும் சந்தோஷப்படுவேன்" (பிலி.1:15-18). இதே அடிப்படையில்தான் இயேசுவும் கூறியதைப் பாருங்கள். ஒரு சமயம். யோவான், இயேசுவை நோக்கி, ஒருவன் உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளை துரத்துகிறதை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட உம்மைப் பின்பற்றாதவனானபடியால் அவனைத் தடுத்தோம் என்றான். அதற்கு இயேசு, தடுக்க வேண்டாம்; நமக்கு விரோதியாயிராதவன் நமது பட்சத்திலிருக்கிறான் என்றார். "எங்களுடனே கூட உம்மைப் பின்பற்றாதவன்" என்றால், இரட்சிக்கப்பட்ட ஆவிக்குரிய சபையில் இணைந்து இயேசுவின் சீஷனாய் இல்லாதவன் என்று பொருள். "he that is not against us is for us" - அதாவது நமக்கு எதிராய் அவன் இல்லை; ஆனாலும் அவன் நமக்காய் இருக்கிறான் என்கிறார் இயேசு. பார்வேனைக்கூட தம்முடைய நாம மகிமைக்காய் நிலைநிறுத்தினாரே! (ரோ.9:17). இயேசுவின் இதே கருத்தைத்தான். ஆசரிப்புக் கூடாரத்திற்கு வராமல் பாளையத்திலிருந்தே, பரிசுத்த ஆவியால் நிரம்பி தீர்க்கதரிசனம் சொன்ன 2 பேருக்காக மோசே சொன்னான் (எண்.11:26-30). இந்த நிலையில் இருப்பவர்களும், ஆவிக்குரிய சபையில் சேராதவர்கள்தான். இவர்களுடைய காரியத்தைப் பற்றி, "This is one of the greatest sins in the morden church" என்று DAKES பைபிள் விளக்குகிறது. நன்மையான

எந்த ஈவும் தேவனிடமிருந்து வருவதால் (யாக்.1:17), நன்மை செய்வதை தடுக்க வேண்டாம் என்று தேவன் சொல்கிறார்.

அப்படியாய் கிறிஸ்துவுக்கு எதிராய் இல்லாமல், அனுசரணையாய் நன்மை பயக்கும்படியாய் இருந்தாலும், இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டமாகிய ஆவிக்குரிய சபையில் இணைய வேண்டும் என்பது தேவசித்தம். கொர்நேலியுவைப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் கூட்டத்தில் - அல்லேலூயா கூட்டத்தில் - சேராதபோது நன்மைகள் செய்திருந்தும் ஆவிக்குரிய சபையில் இணைந்து பின்பற்ற வேண்டும் என்று பேதுரு சொன்ன வார்த்தையை தியானியுங்கள் (அப்.10:14,35). மட்டுமல்ல.. ஆவிக்குரிய சபைக்கு - கிறிஸ்துவுக்கு எதிரானவர்களும் உண்டு. அவர்களைப்பற்றி இயேசு சொன்னது: "என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்" (லூக்.11:23). **அவருடைய சபையில் இராதவன், நன்மை செய்தாலும் அவனைத் தடுக்காதே! அவனோடும் சேராதே! அவனைப் போல நீயும் இராதே! ஆவிக்குரிய சபையில் இராமல் - நன்மையும் செய்யாமல் இருப்பவன் அவருக்கு விரோதி. அவனோடும் சேராதே! ஐக்கியம் கொள்ளாதே!** (1 கொரி.5:9,10) ஐ இதினிமித்தம் தியானியுங்கள்). ஆக, ஆவிக்குரிய சபையில் சேராத இரு தரப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என அறிகிறோம். **ஒன்று:** இயேசுவின் நாமத்தினாலே பிசாசுகளை துரத்துவோர்; அற்புத அடையாளம் செய்வோர்; நன்மைகளை செய்வோர். **இரண்டு:** இயேசுவுக்கு விரோதியாய் இருப்பவர்கள். அரசியலில்கூட மதமாற்ற தடைச்சட்டம் மற்றும் ஜனவரி 1ஐ அலுவலக நாள் என்று கொண்டு வருவோர் ஒருதரம்; கிறிஸ்தவர்களுக்கு சலுகைகள் செய்து அனுசரணையாய் இருப்பவர் ஒருதரம். இவர்கள் இருவருமே ஆவிக்குரிய சபையில் சேராதவர்கள். இது சம்பந்தமாய் 1 கொரி.3:5-8ல் பவுல் கூறியதையும் தியானியுங்கள்.

**இன்றைக்கு கடைசி காலத்தில் - முதல் வகையிலே இருப்பவர்களைத்தான் ஆவிக்குரிய சபையாரால் அடையாளம் கண்டு கொள்ள முடிவதில்லை.** ஏனென்றால், அத்தகையோர் இரட்சிக்கப்பட்டேன் என்பர்; ஆவிக்குரிய சபையில் ஞானஸ்நானம் எடுத்தேன் என்பர்; அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்றேன் என்பர்; தீர்க்கதரிசனம் சொல்கிறோம் என்பர்; பிசாசுகளை துரத்துகிறோம் என்பர்; ஆனாலும் அவர்கள் சார்ந்திருப்பதோ, பாரம்பரிய - பெயர்க்கிறிஸ்தவ சபைகளில்; பால்மணம் மாறா பச்சிளம் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுத்து, இயேசுவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் அவமாக்கும்

சபையில்; கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான லேவி.23ல் உள்ள பண்டிகைகளை கொண்டாடும்சபையில்; மனுஷர் உண்டாக்கிய பண்டிகைகளை தவறாது கைக்கொள்ளும் சபையில்; இயேசுவால் ஆசாரியத்துவம் மாற்றப்பட்டும் இன்னும் ஆசாரிய முறைமைகளை கைக்கொள்ளும் சபையில். மட்டுமல்ல.. ஆரோக்கியமான உபதேசங்களை தள்ளிவிட்டு, கள்ள உபதேசங்களைப் போதிக்கும் சபையில். இப்படிப்பட்டவர்களோடு, உலகக் காரியங்களிலும் ஊழியத்திலும் சேரக்கூடாது என்பது தேவ கற்பனை (2 கொரி.6:14-18; யாத்.4:24-26). இவர்கள் எலும்புருக்கி நோய் போன்றவர்கள். தாங்களும் கெட்டு, தங்களோடு சேர்ப்பவர்களையும் கெடுத்து விடுபவர்கள். இப்படிப் பட்டவர்களிடத்தில் எச்சரிக்கை தேவை.

1 பேது.4:17, 18ன் படி, ஆவிக்குரிய சபையில் இருக்கும் நமக்கே இறுதி இரட்சிப்பு (மத்.24:14) - அதாவது இயேசுவோடு மத்திய ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படும் இரகசிய வருகை (1 தெச.4:16-18) - அரிதானால், மேலே சொல்லப்பட்ட வேத வசன பக்தியில்லாதவர்களும், இரட்சிக்கப்படாத பாவிகளும் செல்லுமிடம் கண்டிப்பாய் நரகமாகத் தானே இருக்க முடியும்! மத்.7:21-24ஐ வாசியுங்கள். இப்படிப்பட்டவர்களை - அதுவும் முதல்வகை மனிதர்களை (நியாயத்தீர்ப்பில் நன்மை செய்தோம் என்று கெஞ்சினாலும்) **"ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்"** என்று இயேசு சொல்லுவார்! ஆமென்! அல்லேலூயா! இவர்கள் Lawlessness - வசனப்படி செயல்படாத-பாரம்பரிய - பெயர்க்கிறிஸ்தவ சபையார்! கன்மலையாம் இயேசுவின் வார்த்தையின் மேல் அறிந்தோ, அறியாமலோ நிற்காதவர்கள். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இது கடைசி காலம்! **தாயின் இடுப்பில் இருந்து கொண்டே வேடிக்கை காட்டுபவனிடம் ஓடிப்போகும்- ஓடிப்போகத் துடிக்கும் - குழந்தையைப் போலிருக்க வேண்டாம்!** 1 கொரி.3:2ல் பவுல் சொன்னபடி உங்களுக்கு இருக்க வேண்டாம்! பலமுள்ள ஆகாரத்தை உண்போம்! விசுவாசத்தில் உறுதிப்படுவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## விசுவாசம் வெளிப்பட வேண்டுமா? எப்படி?

இயேசுவை - இயேசுவின் வார்த்தையை விசுவாசித்தாலே விசுவாசி என்று பலர் எண்ணி மெச்சிக் கொள்கின்றனர். ஆனாலும் "விசுவாசித்தவளே பாக்கியவதி" என்று மரியாளுக்குச் சொன்னது இவர்களுக்கு பலிக்கவில்லை;

பாக்கியமின்றி, அபாக்கியராய், வியாதி, வறுமை, தோல்வி, அகால மரணம் போன்றவைகளில் மூழ்கி மாள்கிறார்கள். ஏன் இப்படி? "இயேசுவே உன்னதமான தேவனுடைய குமாரனே" என்று பிசாசும் விசுவாச அறிக்கையிடுகின்றது (மாற்.5:7). இதைத்தான் யாக்கோபு, "தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய். அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றனவே" (யாக்.2:19) என்று எழுதுகிறான். அப்படியானால் விசுவாசம் வெளிப்பட்டால்தான் பூமியிலே துன்பங்களோடே நூறத்தனை ஆசீர்வாதமும் மறுமையிலே நித்திய ஜீவனும் உண்டு, இல்லையென்றால் இந்த விசுவாசம் ஜீவனில்லாதது. எப்படி வெளிப்படுவது? "வீணான மனுஷனே! கிரியையில்லாத விசுவாசம் செத்ததென்று நீ அறிய வேண்டுமோ?" என்ற யாக்.2:20ஐ தியானியுங்கள். வசனத்தை விசுவாசித்ததை, அதை நாம் கிரியைகளில் காட்டவேண்டும் என்பது தேவகற்பைன. சொந்த கிரியைகளில் காட்டிவிட்டாலே விசுவாசம் உறுதிப்படுமா? இது கேள்வி. உறுதிப்படாது. அதனாலேயே சமாதானமும், அமரிக்கையும், சுகமும் கிடைக்காது (ஏசா.32:17). இயேசு நமக்காய் செய்துவிட்டுப் போன பணிகளில்தான் அது உறுதிப்பட வேண்டும். "இயேசு பிசாசின் கிரியைகளை ஒழித்தார் (1 யோ.3:8); தரித்திரத்தை சுமந்து ஐஸ்வர்யமாக்கினார் (2 கொரி.8:9)" போன்ற இயேசு நமக்காய் செய்து முடித்த காரியங்களை விசுவாசித்து, அறிக்கையிட்டு அதை அன்றாட வாழ்க்கையில், சொல்லினாலும் செயலினாலும் வெளிப்படுத்தினால்தான் நமது விசுவாசம் உறுதிப்படும். வெற்றி வாழ்க்கை மலரும். ஈசாக்கு மூலமாய் சந்ததி வரும் என்ற வார்த்தையை விசுவாசித்துத்தானே, அவன் மரித்தாலும் மரணத்தினின்று ஜெயம் கொடுப்பவரால் உயிரோடு எழும்புவான் என்றெண்ணி - தேவனின் கிரியையை விசுவாசித்து செயல்பட்டதால் அல்லவோ அவன் விசுவாச மார்க்கத்தின் தகப்பனானான்; ஈசாக்கை திரும்பப் பெற்றான் (எபி.11:17-19). இப்படியாய் இயேசு செய்து முடித்த காரியங்களில், வசனத்தில் சொல்லப்பட்டவைகளில் - உறுதிப்பட்டு, ஆபிரகாமைப் போல விசுவாசமார்க்கத்தார் இருந்தால், கிறிஸ்து இயேசுவினால் எல்லா ஆசீர்வாதங்களும் உண்டாகும். ஆமென். ஆபிரகாம்கூட இயேசு செய்து காட்டப்போகும் உயிர்த்தெழுதலில் விசுவாசித்து உறுதியாய் தன் கிரியையில் காட்டினான். நாமோ இயேசு செய்து முடித்தவை களை விசுவாசித்து உறுதியாய் கிரியையில் காட்ட வேண்டும்! என்னே ஆபிரகாமின் விசுவாசம்!

சீமோன் என்ற பரிசேயன் வீட்டில் இயேசு பந்தியிருக்கும்போது, பாவியாகிய ஸ்திரி, அவருடைய பாதங்களை முத்தம் செய்து, பரிமள தைலத்தைப் பூசினாள். இதைக்கண்ட சீமோனின் மாறுபாடு உள்ளத்தை

இயேசு அறிந்து "அதிகமாய் மன்னிக்கப்பட்டவன் அதிக அன்பு காட்டுவான்" என்பதை விளக்கும்படியாய் ஒரு உவமானம் சொன்னார். பின், அவளின் கிரியைகளை விளக்கி, அவளின் விசுவாசத்தை சீமோன் அறியும்படி செய்தார். ஆனாலும் அவளை சமாதானத்தோடு அனுப்பியபோது, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" (லூக்.7:50) என்றுதான் கொன்னாரே ஒழிய. உன் கிரியை உன்னை இரட்சித்தது என்று சொல்லவில்லை. சீமோனிடம், அவளின் விசுவாசக் கிரியைகளை விளக்கியவர். இப்போது கிரியைகளை சொல்லாமல் விசுவாசத்தை மட்டும் ஏன் சொன்னார்?

இன்றைக்கு பெரும்பாலான கிறிஸ்தவர்கள் "உபவாசமிருந்தால் நடக்கும்; பொருத்தனை பண்ணினால் நடக்கும்; ஜெபித்தால் நடக்கும்; அந்த ஊழியரால் இது கூடும்" என்று தங்களின் கிரியைகளினாலேயே நம்பிக்கை கொண்டு தவறுதலாய் செயல்படுகன்றனர். இயேசு கிறிஸ்து செய்துமுடித்து நமக்கு உறுதிப்படுத்தியதை (assured) நாம் பெற்றுக்கொண்டு வெற்றி வாழ்க்கை வாழ்வோம் என்ற விசுவாசக்கிரியைகளில்லாமல் நடப்பதால் பல காரியங்கள் அவர்களுக்கு கைகூடி வருவதில்லை. இதைவாசிக்கும் தேவபிள்ளையே! அந்த பாவியாகிய ஸ்திரியைப்போல அவருடைய மரணத்தால் கிடைக்கும் இரட்சிப்பை - வெற்றியை - முன்கூட்டியே விசுவாசித்து கிரியைகளிலே காட்டப்பழகு! அப்போது, இயேசு சொன்ன, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது; சமாதானத்துடனே போ" என்ற வார்த்தை உன்னில் பலிக்கும். ஆமென்.

❖ ❖ ❖

## இடுக்கமான வாசல் எது? எப்படி உட்பிரவேசிப்பது?

தேவபிள்ளையே! மத்.7:13, 14; லூக்.13:24 போன்ற வசனங்களில், ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கும் என்றும், கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் ஜீவனுக்குப் போகிற வாசல் எது? அதின் வழியாய் பிரவேசிப்பது எப்படி? இந்தக் கேள்விகளுக்கு ஆவியானவர் தாமே விளக்குவாராக!

நம் எல்லோருடைய நோக்கமும் "பரலோகம் போக வேண்டும், நித்திய ஜீவனை அனுபவிக்க வேண்டும்" என்பதுதான். நோக்கம் - AIM - மாத்திரம் இருந்தால் போதுமா? அதைப் பெற்றுக் கொள்ள முயல வேண்டாமா? மத்.7:14 சொல்லுகின்றது: "அதைக் கண்டுபிடிக்கிறவர்கள்

சிலர்" என்று. அந்த சிலரில் நாமும் ஒருவராய் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இந்தக் கருகலான சத்தியம் மலருகின்றது. அல்லேலூயா! இயேசுகிறிஸ்து சொன்னார்: நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்; அவன் உள்ளும் புறமும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் (யோ.10:9). ஆக, இயேசுவாகிய வார்த்தையே - வார்த்தையாகிய இயேசுவே வாசல். அந்த வார்த்தையின் வழியாய் (நானே வழி சத்தியம் - யோ.14:6) உட்பிரவேசித்தால் இரட்சிப்பு உண்டு. இரட்சிப்பிலே மூன்று வகை உண்டு என்று நான் பலமுறை எழுதியிருக்கிறேன். (1) ஆவிக்குரிய இரட்சிப்பு - ஆரம்ப இரட்சிப்பு (ரோ.10:9,10; 1 கொரி.6:11; யாக்.1:18; யோ.3:5; கலா.3:27). (2) தினந்தோறும் ஆத்மாவிலே - மனதிலே- சிந்தனையிலே - மறுரூபமாய் ஆகிக் கொண்டிருக்கும் ஆத்ம இரட்சிப்பு (ரோ.12:2; யாக்.1:21; 1 பேது.8:9) (3) இயேசுவின் இரகசிய வருகையிலே நடக்கும் சரீர இரட்சிப்பு (ரோ.8:23; 1 யோ.3:22; 1 கொரி.15:53, 54). ஆக, இயேசுவின் வார்த்தை வழியாய் பிரவேசிக்கும்போது, ஆவியிலே இரட்சிக்கப்பட்டு, ஆத்ம இரட்சிப்பை இப்பூமியிலே தினந்தோறும் அடைகிறான். இப்படிப்பட்டவன் மேய்ச்சலைக் கண்டடைவான்; ஆசீர்வாதமாய் வாழ்வான். இதைத்தான், "இம்மையிலே துன்பங்களோடே நூறத்தனை ஆசீர்வாதம்" என்று இயேசு சொன்னார் (மாற்.10:30). நமது விசுவாசத் தகப்பன் ஆபிரகாம் இந்த மேய்ச்சலைக் கண்டு அனுபவித்தான்; அவன் மகன் ஈசாக்கு, பேரன் யாக்கோபு, ஆகிய எல்லோரும் அனுபவித்தனர் (ஆதி.24:35; 26:12, 13; 32:10). இந்த மேய்ச்சல் இயேசுகிறிஸ்துவாகிய வாசல் மூலமாய் இந்த பூமியிலேயே நமக்கு உண்டு (கலா.3:7,9) அல்லேலூயா!

இந்த வாசல் இடுக்கமானதாமே! எப்படி? நம் எல்லோருக்கும் தெரியும் ஆசீர்வாதங்களெல்லாம் நிபந்தனைக்குட்பட்டது என்று (Blessings are conditional - உபா.11:26-28; 30:15, 19). பிசாசின் அதிகாரத்திற்குள் இருக்கும் இந்த பூமியில் வாழும் இரட்சக்கப்பட்டவனுக்கு (யோபு.1:12; 2:6) வசனப்படி நடந்து, ஆசீர்வாதங்களை - மேய்ச்சலை, இந்த பூமியிலும், மறுமையிலும் கண்டடைய முயல்வது இடுக்கமானதாகத் தான் இருக்கும்! இந்த இடுக்கத்திலும் தொடர்ந்து தொய்வின்றி முன்னேறத்தானே வேறொரு தேற்றரவாளரான ஆவியானவர் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறார்! ஆமென்! (1) ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் (லூக்.9:23). இந்த வார்த்தை பலருக்கு இடுக்கமாய் தோன்றலாம். ஆனாலும் சிலர் அதில் பிரவேசிக்கிறார்கள். (2) உங்களில் எவனாகிலும்

தனக்கு உண்டானவை களையெல்லாம் வெறுத்து விடாவிட்டால், அவன் எனக்கு சீஷனாய் இருக்கமாட்டான் (லூக்.14:33). இந்த வார்த்தை பலருக்கு இடுக்கமாய் தோன்றலாம்; ஆனாலும் சிலர் அதில் பிரவேசிக்கிறார்கள். (3) மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன் (1 கொரி.9:27). இந்த உபதேசம் பலருக்கு இடுக்கமானதாய் தோன்றலாம். ஆனாலும் சிலர் மட்டுமே அதில் பிரவேசிக்கிறார்கள். (4) கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக் கிறார்கள் (கலா.5:24). இந்த வார்த்தை பலருக்கு இடுக்கமானதாய் தோன்றலாம். ஆனாலும் சிலர் மட்டுமே அதில் பிரவேசிக்கிறார்கள். (5) மனுஷர் முன்பாக கிறிஸ்தவன் என்று அறிக்கை பண்ண வேண்டும் என்ற வார்த்தை (மத்.10:32,33) பலருக்கு இடுக்கமானதாய் தோன்றலாம். சிலர் மட்டுமே அதில் பிரவேசிக்கிறார்கள். இப்படி ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம் (See 1 தீமோ.6:12; கொலோ.1:29; 4:12). இடுக்கமான வாசல் வழியே நுழைய பிரயாசப்படுங்கள் என்ற வார்த்தையில், "பிரயாசப்படுங்கள் - Strive" என்றதின் மூலபாஷை "AGONIZOMAI" (GK). இதிலிருந்து தான் agoni என்ற ஆங்கில வார்த்தை வந்தது. இந்த வார்த்தை certainly teaches that one must putforth more personal effort than merely take it by faith or casually accept Christ. வெறுமனே இயேசுவை ஏற்றுக்கொள்வதோ அல்லது விசுவாசியாய் மாறுவதோ அல்ல இந்த இடுக்கமான - இயேசுவாகிய வார்த்தையின் வழியே உட்பிரவேசிப்பது.

**இந்த இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க அநேகர் வகை தேடினாலும், அவர்களாலே கூடாமற் போகும் (லூக்.13:34).** ஏன்? (1) தவறான வழியில் அவர்கள் வகை தேடுகிறார்கள் (இரட்சிப்பே இல்லாமல் குழந்தை ஞானஸ்நானம் கொடுப்பது போன்ற வழிகளில்) (2) கதவு மூடப்பட்ட நேரத்தில் (லூக்.13:25) - அதாவது தவறான நேரத்தில் தேடுகிறார்கள் (மத்.7:21) (3) தவறான இடத்தில் இருந்துகொண்டு தேடுகிறார்கள (லூக்.13:25, வெளி.3:20), அப்.2:40). ஆவிக்குரிய சபையில் இருப்பதில்லை. (4) தவறான வாதங்களோடு தேடுகிறார்கள் (லூக்.13:26 மத்.7:22) - கள்ள உபதேசம். தவறான உபதேசம், ஆரோக்கியமில்லாத உபதேசம் (5) தேவனுக்கு தூரமாய் இதயத்தை வைத்துக் கொண்டு வாயினாலே தேடுகிறார்கள் (லூக்.13:26; ஏசா.29:13; மத்.15:8).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ எப்படி இருக்கிறாய்? இடுக்கமான வாசல் வழியாம் இயேசுவாகிய வார்த்தையின் வழியாய்

பிரவேசிக்க, தேற்றரவாளனாம் ஆவியானவரின் ஆளுகைக்கு விட்டுக் கொடு! பிசாசின் உலக ஆளுகைக்குள் வாழ்ந்தாலும், இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்க முடியும்; இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாத மேய்ச்சலைக் கண்டடைய முடியும்; ஆமென்! அல்லேலூயா! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும் ஒன்றா?

மத்.3:11, மாற்.1:8, லூக்.3:16, யோ.1:33, அப்.1:4; 11:16 போன்ற பல வசனங்கள், இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று உள்ளது. இதைத்தான் பெந்தெகொஸ்தே நாளில் 120 பேர் பெற்றனர். ஒரே தேவன் மூன்று ஆட்தத்துவமாய் செயல்படுவது போல ஒரே ஞானஸ்நானம் மூன்று பிரிவுகாளய் இருக்கின்றன. இதைத்தான், கிறிஸ்தவ சபையின்மூல உபதேசத்தில், "ஸ்நானங்களுக்கடுத்த உபதேசம்" (எபி.6:1,2) என்று பன்மையில் போடப்பட்டிருக்கிறது. இதைத் தான் ரோ.6:3; கலா.3:27; கொலோ.2:11,12 போன்ற வசனங்களில் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் என்றும், அப்.2:38; 1 பேது. 3:21; மாற்.16:16 போன்ற வசனங்களில் தண்ணீரினால் ஞானஸ்நானம் என்றும், பெந்தெகொஸ்தே நாள், கொர்நேலியு வீடு (அப்.2,10) போன்றவற்றில் நடந்துள்ளது பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்றும் மூன்று பிரிவுகளாய் வெளிப்படுத்துகின்றது. தண்ணீரினால் - தண்ணீரைக் கொண்டு - ஞானஸ்நானம் தேவ ஊழியர் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியினால் - பரிசுத்த ஆவியானாவரைக் கொண்டு - ஞானஸ்நானம், இயேசு கிறிஸ்து கொடுக்கிறார். அப்படியானால் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் கொடுப்பது யார்? இதற்கு பதில் தெரிந்து விட்டால் இந்தச் செய்தியின் முழுக்கருத்தும் தெரிந்துவிடும். ஆவியானவர்தாமே, இந்த கருகலான சத்தியத்தை வெளிப்படுத்துவாராக!

தண்ணீரினால் ஞானஸ்நானமும், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானமும், கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்றால்தான் பெறமுடியும். அல்லேலூயா! ஞானஸ்நானம் என்றால் மூழ்குதல் (Baptiso - Baptism). கிறிஸ்துவுக்குள் - கிறிஸ்துவாகிய வார்த்தைக்குள் - மூழ்குதல் (Baptiso - Baptism). இதுதான் மறுபடியும் பிறக்கும் அனுபவம் - இருதய

விருத்தசேதனம். இதைத்தான், தேவவசனமாகிய - ஜீவனுள்ள - அழிவில்லாத - வித்தினால் பிறக்கும் அனுபவம் என்று 1 பேது.1:23 சொல்கின்றது. சத்திய வசனத்தினாலே சிருஷ்டிக்கப்படும் அனுபவம் என்று யாக்.1:18 சொல்கின்றது. இந்த மறுபடியும் பிறக்கும் அனுபவம் - இருதய விருத்தசேதனம் - இருந்தால்தான் பரலோகம் உண்டு என்று நிக்கோதேமுவுடன் இயேசு சொன்னாரே! (யோ.3:5) இப்படி இயேசு சொன்ன காலம் பழைய ஏற்பாட்டுக் காலம். அப்போது புதிய உடன்படிக்கை அரங்கேறவில்லை. பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட - ஜலமாகிய வசனத்தால், பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு, இருதயமாகிய ஆவியிலே - மறுபடியும் பிறக்கும் அனுபவம் பழைய ஏற்பாட்டு மக்களுக்கும் உண்டு. அதற்கு முன்னான ஆபிரகாம், நோவா, ஏனோக்கு போன்ற எல்லோருக்கும் உண்டு. (எசே.36:25; 16:9; உபா.10:16; 30:6; எரே.4:4; 6:10; 9:26). இதைத்தான் இரட்சிப்பு என்று சொல்லுகிறோம் (ரோ.10:9,10; 1 கொரி.6:11). இந்த இரட்சிப்பு, வசனத்தால் - வசனத்தைக் கேட்டுவரும் விசுவாசத்தால் - வருகிறது. இபபடி இரட்சிக்கப்படுகிறவர்கள்தான் சபையிலே சேர்த்துக் கொள்ளப்படுகிற மணவாட்டிகள் (அப்.2:47). இதுதான் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம்.

அப்படியானால், இப்படியாய் கிறிஸ்துவுக்குள்ளான - மறுபிறப்பாகிய - இருதயமாகிய ஆவியின் விருத்தசேதனமாகிய - இரட்சிப்புக்குள் நடத்துவது யார்? இது ஒரு கேள்வி. பழைய சரித்திரக் காரியங்களில் பல, நிழலாட்டமாயிருக்கிறது என்று நாமறிவோம். ஆபிரகாம் (பிதாவாகிய தேவன்) தன் ஒரே பேறான ஈசாக்கிற்கு (இயேசுகிறிஸ்து) ரெபேக்காளாகிய மணவாட்டியை தேட (சபையார்), எலியேசரை (பரிசுத்த ஆவியானவர்) அனுப்பினான். ஆக, **பரிசுத்த ஆவியானவர்தான் இரட்சிப்புக்குள் நடத்துகிறார் என்று அறிகிறோம்.** யோ.16:8,9ஐ வாசித்தால், ஆவியானவர் தான், வந்த இயேசுவை- மேசியாவை விசுவாசிக்காதது பாவம் என்று உலகத்தாருக்கு கண்டித்து உணர்த்தி, இரட்சிப்புக்குள் கொண்டு வருகிறார் என்பதை உணரலாம். இதுதான் கிறிஸ்துவுக்குள்ளான - கிறிஸ்துவாகிய சரீரத்திற்குள்ளான - கிறிஸ்துவாகிய வார்த்தைக்குள்ளான ஞானஸ்நானமாகும்; ஜீவ அப்பமாகிய இயேசுவின் சரீரத்தை விசுவாசத்தோடு புசிப்பதாகும்; நமது ஆவியிலே, பரிசுத்த ஆவியானவர் செய்கிற விருத்தசேதனமாகும். ஆக, ஆவியானவர் தான், கிறிஸ்துவுக்குள்ளான முதல் ஞானஸ்நானத்தை நமக்குள்ளே செய்கிறவர் என்று அறிகிறோம். இது நம்மோடு வருகிற (With us) ஆவியானவர் தரும் அனுபவமாகும்.

இதை இன்னும் கொஞ்சம் விரிவாய்ப் பார்க்கலாம். இஸ்ரேல் மக்கள் செங்கடலைக் கடந்தது, கிறிஸ்துவுக்குள்ளான - இரட்சிப்பென்னும் ஞானஸ்நானத்திற்கு நிழலாட்டம் என்றும், யோர்தானைக் கடந்தது. தண்ணீரினால் - தண்ணீருக்குள்ளான ஞானஸ்நானத்திற்கு நிழலாட்டம் என்றும் நாமறிவோம். 1 கொரி.10:1-4ஐ வாசியுங்கள். இஸ்ரேலர், முந்தின மோசே (கிறிஸ்து)க்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் எப்படி? யோ.3:5ல் சொல்லப்பட்டபடி ஜலமாகிய வார்த்தையினால் (சமுத்திரம்) ஆவியானவரைக் கொண்டு (மேகம்) மறுபடியும் பிறப்பிக்கிற நிஜ அனுபவத்திற்கு, நிழலாட்டம் இது. அல்லலூயா! ஆக, ஆவியானவர் நடத்துகிற அனுபவம்தான் - பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்தான் - இரட்சிப்பு - மறுபிறப்பு, கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் என்று புரிகிறதல்லவா? இது ஆவியானவர் பண்ணுகிற ஞானஸ்நானம். அல்லேலூயா! இத்தோடு, 1 கொரி. 12:13ஐ வாசியுங்கள். ஆவியானவர் பண்ணுகிற - கிறிஸ்துவுக்குள்ளான - இரட்சிக்கப்பட்டு சபையில், சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தில் சேர்க்கிற ஞானஸ்நானம்தான் இது.

ஆனால், ஆவியினாலும், அக்கினியினாலும் பண்ணப்படுகிற ஞானஸ்நானம் இதுவல்ல; இது, மேலே சொல்லப்பட்ட 3வது பிரிவைச் சார்ந்த ஞானஸ்நானம் ஆகும். இதை ஆவியானவர் பண்ணுவதில்லை; இதை இயேசு பண்ணுகிறார். இதைப் பண்ணுவதற்கு இயேசு, ஆவியானவரை உபயோகிக்கிறார். அவ்வளவுதான். இதை ஆவியானவர் செய்வதில்லை. இது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமுமல்ல. பரிசுத்த ஆவியானவரால் - ஆவியானவரைக் கொண்டு, இயேசுகிறிஸ்து பெந்தெகொஸ்தே நாளில் ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் பண்ணினார். எனவேதான், அப்.2:2-4ல் உள்ள காரியங்கள் நடந்தன. அக்கினிமயமான நாவுகள் வந்து 120 பேர் மேலும் அமர்ந்ததை அங்கிருந்தவர்கள் கண்டார்கள். இதுவே அக்கினி ஞானஸ்நானம்; பரிசுத்த ஆவியானவராலே நிரப்பப்பட்டு 120 பேரும் வெவ்வேறு பாஷைகளை பேசுகிறதை அங்கிருந்தவர்கள் கண்டார்கள்; கேட்டார்கள் (அப்.2:33). இதுவே ஆவியினால் இயேசுகிறிஸ்து அன்று தந்த ஞானஸ்நானம். இந்த இரண்டு அனுபவமும் பரிசுத்த ஆவியினால் கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்று, இரட்சிக்கப் பட்டவர்களுக்கு மட்டுமே என்றுதான் மத்.3:11; மாற்.1:8; லூக்.3:16 சொல்கிறதே ஒழிய, "அக்கினி ஞானஸ்நானம்" பாவிகளுக்கு என்று சொல்லவில்லை. அக்கினியால் மூழ்கடிக்கப்படுதலை, அக்கினியால் அழிக்கப்படுதலை, அக்கினி ஸ்நானம் என்று வேண்டுமானால் சொல்லலாமே

ஒழிய அக்கினி ஞானஸ்நானம் என்று சொல்லத் தேவையில்லையே! இந்த மூன்று வசனங்களிலும், உங்களுக்கு என்றுதான் உள்ளதே ஒழிய; யோவான் ஸ்நானனிடம் வராதவர்களைப் பற்றி அல்ல என்று அறிக. இவர்கள் எல்லாம் யோவான் ஸ்நானனால் ஞானஸ்நானம் பெற்றவர்கள். **எனவே அக்கினி ஞானஸ்நானம் என்பது பூமியிலுள்ள பாவிகளை அழிப்பதற்கு அல்ல என்று அறிகிறோம்.**

இந்த பெந்தெகொஸ்தே நிகழ்ச்சி, யோவேல் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்ட படி நடந்தது என்று பேதுரு கூறுகிறார் (யோவே.2:28, 29; அப்.2:16-21). இதை விசுவாச மார்க்கத்தார் யாவரும் கிறிஸ்து இயேசுவினால் பெற்றுக் கொள்கிறோம் என்று கலா.3:14ல் சொல்லப்பட்டதால், ஆவியினாலும், அக்கினியினாலும் பண்ணப்படுகிற ஞானஸ்நானம் கிறிஸ்தவர்களுக்கு நிச்சயம் உண்டு. பேதுருகூட இந்த வாக்குத்தத்தம் உலகிலுள்ள எல்லாருக்கும் உண்டு என்று சொல்லுகிறான் (அப்.2:39). ஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படும்போது, நம்மோடு (with us) இருந்து கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தில் நடத்திய ஆவியானவர், நமக்குள் (In us) வருகிறார் அந்நியபாஷை அடையாளத்தோடு. இது புதிய ஏற்பாட்டு மக்களுக்கு மட்டுமே உள்ள அனுபவம். இது கொர்நேலியு வீட்டிலும், எபேசு சபையிலும், சமாரியாவிலும், நடந்ததை அறிகிறோம் (அப்.10,19,8). இந்த ஞானஸ்நானம் பெற்றவன்; ஆவியின் கனிகளைத் தர நடத்தப்படுகிறான்; சகல சத்தியத்தையும் கற்று செயல்பட நடத்தப்படுகிறான்; சில நேரங்களில் ஆவியானவரின் சித்தப்படி வரமாகிய அந்நிய பாஷை போன்ற வரங்களாலும் நிரப்பப்படுகிறான் (1 கொரி.12;11). (இது குறித்து இன்னும் விளக்கமாய் அறிய ஆசிரியரின், தெரிந்து கொள்ளுங்கள் என்ற ஆராய்ச்சி நூலிலுள்ள **"அந்நியபாஷையா? அடையாளமா?"** என்ற செய்தியை வாசியுங்கள்.)

நமக்குள் இருந்து நம் சரீரத்தை தேவனுடைய ஆலயமாக மாற்றிய ஆவியானவர் (1 கொரி.6:19) நம்மேல் (upon us / Filling us) இருக்கிற அனுபவம்தான் அக்கினியால் ஞானஸ்நானம் பண்ணப்படுகிற அனுபவம். இந்த அனுபவம் பெற்றவர்கள் உலகத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களை (Supernatural) செய்வார்கள். இது தான் Signs & Wonders (அதிசயமும் அடையாளமும்) என்று சொல்லப்படுகிறது. இது வரமல்ல. அதனால்தான் பெந்தெ கொஸ்தே நாளில் இந்த அனுபவம் பெற்றவர்கள் தங்கள் ஊழியத்தில் மரித்தவர்களை எழுப்பினார்கள். சிறைச்சாலைக் கதவுகள் திறந்தன; உடைந்தன; நிழல் பட்டால், உருமால் தொட்டால் சுகம் கிடைத்தன. ஆமென்! அல்லேலூயா! அக்கினி என்பது ஆவியானவருக்கு உவமானமாகச்

சொல்லப்படுகிறது வேதத்தில். ஆவியானவரின் பணி, ஆக்கினைத் தீர்ப்பு செய்கிறது அல்ல; நம்மை பக்குவப்படுத்தி, பூரணப்படுத்துகிற பணியும், புறஜாதியாரை இரட்சிப்புகுள் நடத்துகிற பணியும்தான். ஆக்கினைத் தீர்ப்பு கொடுக்கிற பணி இயேசுவுக்கு மட்டுமே! அதுவும் அவரே நேரிடையாக செய்வதாகும். எனவே ஆவியானவரைக் கொண்டு நடத்தப்படும் அக்கினி ஞானஸ்நானம் ஆக்கினைத்தீர்ப்பு அல்ல என்று அறிகிறோம். நம் தேவன் பட்சிக்கிற அக்கினி என்றால், என்ன பொருள்? பாவத்தைப் பட்சிக்கிறார்; தீமையைப் பட்சிக்கிறார்; சாத்தானின் கிரியைகளைப் பட்சிக்கிறார்; உலக முடிவில் ஆக்கினைத் தீர்ப்பும் அளிக்கிறார். அக்கினி என்றால் தேவனின் வல்லமை (Almighty) என்று பொருள். மேலும், "உங்களுக்கு" என்று யோவான் ஸ்நானன் சொல்வதால், அவனக்குப் பின் வருபவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு எப்படித் தருவார்? ஊழியத்திற்கு என்றுதான் "அக்கினி ஞானஸ்நானம்" கொடுக்கப்படுகிறது. (இது குறித்து ஆசிரியரின் இந்த நூலிலுள்ள "அக்கினி அபிஷேகம் தேவையா?" என்ற செய்தியை வாசியுங்கள்).

பெந்தெகொஸ்தே என்னும் நாளைப் போல வேறு எங்கும் இப்படி அக்கினியனால் ஞானஸ்நானம் பெற்ற நிகழ்ச்சி வேதத்தில் இல்லை என்பதால், அது கிறிஸ்தவர்களுக்கு இல்லவே இல்லை என்று சொல்வோரு முண்டு. மத்.28:18-20ல் சொன்னபடி, ஆதி அப்போஸ்தலர்கள், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுத்தார்கள் என்று வசனமே வேதத்தில் இல்லாததால், இயேசு நாமக்காரர்கள் சொல்கிறபடி, இயேசுவின் நாமத்தால் ஞானஸ்நானம் கொடுக்கலாமா? அல்லது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால், கொடுக்காமல் விட்டுவிடலாமா? அப்.2:39ஐ சிந்தியுங்கள். வேத தியானம் மிகவும் முக்கியம். இந்த செய்தியை வாசிக்கும் தேவபிள்ளையே! பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது, உலகத்தாரை இரட்சிப்புக்குள் கொண்டுவர ஆவியானவரே நடத்துவது என்றும், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் என்பது, இரட்சிப்புக்குள் வந்தவர்களுக்கு இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு ஆவியினாலும் அக்கினியினாலும் நடத்தவது என்றும் முந்தி அறிக!

இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# பின்மாரி ஊற்றப்போவது எப்போது?

"நீ உன் தானியத்தையும், திராட்சை ரசத்தையும், உன் எண்ணெயையும் சேர்க்கும்படிக்கு நான் ஏற்றகாலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி.." (உபா.11:14) என்ற வசனத்தின்படி விவசாயத்திற்கு, ஆரம்பத்தில் வேரூன்றி வளர முன்மாரியும், இறுதியில் நன்கு கதிர்விட பின்மாரியும் தேவை என்று அறிகிறோம். இந்தமழை ஆவிக்குரிய வாழ்க்கையிலும் தேவைப்படுகின்றது. இஸ்ரேல் மக்களுக்கு இந்தமாரி உண்டென்று எரே.5:24; ஓசி. 6:3 போன்ற வசனங்கள்மூலம் அறியலாம். அப்படியானால் இந்த ஆவிக்குரிய பின்மாரியும் முன்மாரியும் இஸ்ரேலர்களுக்கு ஊற்றப்பட்டாயிற்றா? அல்லது இனிமேல்தான் ஊற்றப்படுமா? இந்த அனுபவம் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் உண்டா? அது எப்போது? இதுபோன்ற பல கேள்விகளை ஆவியானவர்தாமே விளக்குவாரா!

இதைப் படிக்குமுன்னே, பழைய ஏற்பாட்டில் சபையைப் பற்றிய வெளிப்பாடே இல்லை என்றும், பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்களும், வாக்குத்தத் தங்களும், உடன்படிக்கைகளும் ஆராதனைகளும் இஸ்ரேல் மக்களுக்கு மட்டுமே என்றும் அறியவேண்டும் (எபே.3:3-6; ரோ.9:4,5). மோசே காலத்தில் ஆவியின் வல்லமை ஊற்றப்பட்டபோது, ஆசரிப்புக் கூடாரத்திற்கு வராமல் பாளையத்திலிருந்த இரண்டுபேர் தீர்க்கதரிசனம் சொன்னதை தடைசெய்யச் சொன்ன யோசுவாவிடம், கர்த்தருடைய ஜனங்கள் எல்லார் மேலும் ஆவியின் வல்லமை இறங்க மோசே வாஞ்சித்ததை எண்.11:29ல் வாசியுங்கள். அந்த மோசேயின் வாஞ்சையைத்தான் யோவேல்.2:28 - 29ல் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த தீர்க்க தரிசன ஆசீர்வாதமுள்ள வாக்குத்தத்தம் இஸ்ரேலருக்குரியது. யோவேல் 2:21-32ஐ வாசித்தால், இந்தக் காரியம் இஸ்ரேல் மக்களுக்கு இனிமேல் தான் சம்பவிக்கும் என்று அறிகிறோம். யோவேல் 2:31ன் படி, தேவனின் நியாயத்தீர்ப்பின் நாள் - பெரிதும் பயங்கரமுமான நாள் - நியாயாதிபதியாய் வரும் நாளுக்கு (யோவேல்.3:9-1; ஆமோஸ் 5:18; வெளி.9:19) முன்பதாகவே இது நடக்கும். இதுதான் இயேசு கிறிஸ்துவின் 2ம் வருகை; பகிரங்க வருகை (சக.12:4; எபி.9:27; 28). இன்னும் சபையை எடுத்துக் கொள்ளும் இரகசிய வருகையே நடக்கவில்லை என்பதாலும், அந்திகிறிஸ்துவும் இன்னும் வெளிப்படவில்லை என்பதாலும் (2 தெச.2:7,8), சூரியன் இருளாகவும் சந்திரன் இரத்தமாகவும் மாறி கர்த்தர் பூமிக்கு வருவது

அந்திகிறிஸ்துவின் 7 ஆண்டு ஆட்சியின் இறுதியில் நடக்கும் என்பதாலும், யோவேல் 2:28, 29ல் சொல்லப்பட்டது இஸ்ரேலருக்கு இன்னும் நடக்கவில்லை என்று உணர்கிறோம். (இப்படி நடக்கும் போது உலகிலுள்ள இஸ்ரேலர் இரட்சிக்கப்படுவார்கள் என்று முந்தி அறிக - யோவேல் 2:32).

ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதங்களும் வாக்குத்தத்தங்களும் இயேசுகிறிஸ்து மூலமாய், புறஜாதியிலிருந்து வந்த கிறிஸ்தவர்களுக்கும் உண்டு என நாமறிவோம் (கலா.3:7-9). ஆவியைக் குறித்து அவர்களுக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தமும் விசுவாசத்தினாலே நமக்கும் உண்டு என்று கலா.3:14 சொல்கின்றது. எனவே யோவேல் 2:28, 29 நமக்கும் உண்டல்லவா? நமக்கும் கர்த்தரின் பெரிதும் பயங்கரமுமான நாளுக்கு முன்தான் நடக்குமா? அந்தநாளில் நாம்தான் தேவனோடே பூமிக்கு வரப்போகிறோமே! (யூதா 14,15; சக.14:4,5). அல்லேலூயா! அப்படியானால், நமக்கு எப்போது நடக்கும்? இது கேள்வி. சபை எடுத்துக் கொள்ளப்படும் இரகசிய வருகை எந்த நிமிஷத்திலும் இருக்கலாம் என்பதால், இந்த கடைசி காலத்திலெல்லாம் இந்த வாக்குத்தத்தம் நம்மில் நிறைவேற வேண்டுமல்லவா? மேலும் வாசியுங்கள்.

பெந்தெகொஸ்தே நாளிலே 120 பேர் மத்தியில் பரிசுத்த ஆவியானவர், பூமிக்கு வந்து, அந்த 120 பேரும், பரிசுத்த ஆவியினாலே ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும் பெற்றார்களே (See மத்.3:11, அப்.2) அப்போது பேதுரு கொடுத்த செய்தியை தியானியுங்கள் (அப்.2:16-21). கடைசி நாட்களில் நடக்க வேண்டிய அந்த தீர்க்கதரிசனம் அப்போது நிறைவேறியதாய் பேதுரு சொல்லவில்லை. அப்.2:19-20; யோவேல் 2:30-32 அப்போது நடக்கவில்லை அல்லவா! கலா.3:14ன் படி, கிறிஸ்தவர்கள் அன்று பெற்றதை விளக்கத்தான் யோவேல் 2:28-32 வசனத்தை பேதுரு எடுத்து கையாளுகிறார். இப்படி அவர்கள் அன்று பெற்ற வாக்குத்தத்தம் அன்றைய யூதக் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல... கர்த்தருக்குள் வருகின்ற அனைத்து இனக் கிறிஸ்தவர்களுக்கும் உண்டு என அப்.2:39ல் பேதுரு கூறியதை சிந்தியுங்கள். **எனவே அன்றைக்கு அனுபவித்த அந்த வாக்குத்தத்தத்தை, இயேசுவின் இரகசிய வருகைவரை சபையார் அனுபவிக்கலாம் என்பது உண்மையிலும் உண்மை.** அல்லேலூயா! (அப்.2:39).

கிறிஸ்தவ சபையானது ஸ்தேவான் கல்றெியப்பட்டு மரித்தநாள் முதல் சிதறடிக்கப்பட்டதாலும், எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டு இஸ்ரேலர்கள் சிதறடிக்கப்பட்டதாலும், ஆரம்பத்தில் வல்லமையாய் ஆரம்பிக்கப்பட்டு உலகமெங்கும் பரவிய கிறிஸ்தவ ஊழியம், ரோம சர்க்காரின் உதவியோடு

பக்கவழியாய் நுழைந்து, காயை தங்களுக்கு ஏற்றபடி நகர்த்திய கத்தோலிக்க ஊழியர்களின் அடக்குமுறையால், கள்ள உபதேசத்தால், கிறிஸ்தவ சபை வளர்ச்சியின்றிப் போனது. அப்.2:39ல் சொல்லப்பட்ட யோவேலின் தீர்க்கதரிசன வாக்குத்தத்தம், அங்கொன்றும் இங்கொன்று மாயிருந்த கிறிஸ்தவ குழுக்களின் மூலமாய் முழுமையாய் உலகிற்கு வெளிப்பட வில்லை. இந்தக் காலம் கடைசிகாலமாதலால், கி.பி.1905ல், மேற்கு வங்காளத்தில் இருந்த ரமாபாய் மற்றும் சிலோன், சென்னை போன்ற நகரங்களிலுள்ள ஒருசில கிறிஸ்தவர்களுக்கு ஒரே நேரத்தில், இந்த வாக்குத்தத்த அனுபவம் விசுவாசத்தால் வெளிப்பட்டது; அதன்மூலம் பெந்தெகொஸ்தே மார்க்கம் உருவாகி, இன்றுவரை அந்த வாக்குத்தத்தம் நம்மில்நிறைவேறுகிறது. அல்லேலூயா! இது இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைவரை கிறிஸ்தவர்களுக்குள் தொடரும். ஆமென்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உன்னில் யோவேல் 2:28,29 நிறைவேறட்டும்! அதன் மூலம் ஆத்ம ஆதாயம் பெருகட்டும். இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! இஸ்ரேல் மக்களுக்கோ, தீர்க்கதரிசன வாக்குத்தத்தப்படி, பகிரங்க வருகைக்கு முன்பதாக, அந்தி கிறிஸ்துவின் ஆட்சியின் போது நடந்து, அப்போது யூத ஆத்மாக்கள் பெருகட்டும்! அல்லேலூயா! 1000 வருட அரசாட்சியிலும் இஸ்ரேலருக்கு இது நடக்கும் என்று சில பண்டிதர்கள கூறுகிறார்கள். ஆமென்! 2016ல் நம் எல்லாருக்குள்ளும் இந்த ஆவியின் அபிஷேகமும், அக்கினி அபிஷேகமும் நிறைவேறுவதாக!

❖ ❖ ❖

## அதிசயங்களும் அடையாளங்களும் ஏன் நடக்கவில்லை?

தேவ பிள்ளையே! இந்தக் காலம் கடைசிகாலம் என்கிறோம். இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்கிறோம். ஆனால், ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நடந்ததுபோல Signs & Wonders அதிசயங்களும், அடையாளங்களும், ஆச்சரியங்களும் - நடக்கவில்லையே ஏன்? (மாற்.16:20). சபைகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டு போகின்றன. ஆனால் ஆத்துமாக்கள் பெருகவில்லையே ஏன்? ஆத்துமாக்கள் பிரிந்து போகிறார்களே ஒழிய, பெருகிப் போகவில்லை. புத்தாண்டும் கொண்டாடி விட்டார்கள்; வாக்குத்தத்த அட்டையும் கொடுத்து விட்டார்கள். (அந்த வாக்குத்தத்தம் மட்டும்தான்

நிறைவேறுமோ? யாமறியோம்!) இந்த 2012 ம் ஆண்டும் ஆத்ம ஆதாயத்தில், ஆவிக்குரிய வளர்ச்சியில், வசனம் உறுதிப்படும் அதிசயங்கள் நடக்கும் காரியங்களில், 2015ம் ஆண்டு போலத்தான் இருக்குமா? "பிள்ளை கொடும் இல்லையேல் சாகிறேன்" என்ற ராகேலின் உள்ளம் கொண்ட ஊழியர்கள் எழும்ப மாட்டார்களா? அறியாமைப் பிசாசையும், கீழ்ப் படியாமைப் பிசாசையும் துரத்தியடிக்கும் விசுவாச வீரர்கள் கிளம்ப மாட்டார்களா? கர்த்தரின் சத்தியம் வெளிச்சமாய் அவர்களுக்கு காணப்படாதா? ஆவியானவர் தாமே விளக்குவாராக!

இயேசு கிறிஸ்து சொன்னார்: "என்னிலும் மேலான காரியங்களைச் செய்வீர்கள்" (யோ.14:12) என்று. அவர் மரித்தவர்களை எழுப்பினார்; பிறவிக் குருடர்களை, சப்பாணிகளை, செவிடர்களை குணமாக்கினார்; குஷ்டரோகிகளை குணமாக்கினார்; கடல் மேல் நடந்தார்; தண்ணீரை திராட்சைரசமாய் மாற்றினார்; 5 அப்பம் 2 மீனை 5000 புருஷர்களுக்கு கொடுத்தார்; மீனின் வாயிலிருந்து பணத்தை வரவழைத்தார். இதற்கு மேலும் நாம் செய்வோம் என்று சொல்லிவிட்டுப் போனார். (யோ. 14:12) இந்த செய்தியை வாசிக்கும் தேவ பிள்ளையே! எத்தனை பேரை உயிரோடு எழுப்பியிருக்கிறாய்? எத்தனை பிறவிக் குருடர்களுக்கு பார்வை யளித்திருக்கிறாய்? விரல்விட்டுச் சொல்ல முடியுமா? எத்தனையோ பேர்களுக்கு கண்ணீர் விட்டு ஜெபித்தேன்; தலையிலே கை வைத்து ஜெபித்தேன்; மனதுருகி ஊக்கமாய் ஜெபித்தேன்; எத்தனையோ வியாதிகள் சுகமாயின என்று நீ சொல்ல நினைப்பது என் காதில் விழக் காத்திருக்கிறது. ஜெபத்தால் சுகமாவது அற்புதமுமல்ல; அதிசயமுமல்ல; அடையாள முமல்ல; ஆச்சரியமுமல்ல. நீ வருந்தி, கண்ணிர் மல்க அழுது ஜெபிப்பதைக் கண்டு, உனக்கு எதிரே இருக்கிற வியாதிப்பட்டோரும் அதே நிலையில் இருப்பதையும் கண்டு, ஆண்டவர் காட்டும் இரக்கம் அது; கிருபை அது. **இன்னும் சொல்லப் போனால் பிச்சை அது.** உன் ஜெபத்தால் வியாதிப்பட்டோருக்குக் கிடைத்த விசுவாசத்தின் அளவுப்படி பெறுகிற காரியம் அது. இயேசுகிறிஸ்து தம்முடைய ஊழியத்தில் என்றாவது ஜெபித்து, அற்புதம் - அடையாளம் செய்தாரா? சிந்தியுங்கள். அவர் சொன்னார், ஆயிற்று; கட்டளையிட்டார், ஆயிற்று; தொட்டார், விலகிற்று; அல்லேலூயா! அவரிலும் மேலான காரியங்களை அவரைப் போல் செய்ய விசுவாசித்து செயல்படுங்கள். **இன்றைக்கு தேதியில் ஜெபித்து சுகம் கிடைப்பதையே குணமாக்கும் வரம் என்று சொல்லித் திரிகற ஊழியக்காரர்கள், விசுவாசிகள் உண்டே!**

இந்த கடைசி காலத்தில் அறிவு பெருகிப் போய்விட்டது (தானி.12:4). வயிற்றுவலி, தலைவலி, கர்ப்பப்பை கட்டி, இருதயக்குழாய் அடைப்பு,

இருதயம் - கிட்னி மாற்றுதல் போன்ற காரியங்களில் கிடைக்கும் சுகமெல்லாம் சர்வ சாதாரணமாய் ஆகிவிட்டது. இப்படிப்பட்ட காரியங்கள் நம் ஊழியங்களில் நடந்தாலும்கூட, மருத்துவ விஞ்ஞான வளர்ச்சியினாலே இவைகளைக் கண்டு, உயிர்த்தெழுந்த ஆண்டவரை விசுவாசிக்கும் மக்கள் அதிகம் இல்லை. இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்கள் நடக்கும் போது தான் உலகம் நம்ப வாய்ப்பு இருக்கிறது. இதைத்தான் அதிசயங்கள், ஆச்சரியங்கள் என்கிறோம். மருத்துவத்தால் சுகமாக்க முடியாத கேன்சர், கிட்னி தோல்வி, ஹார்ட் அட்டாக், எயிட்ஸ், முற்றிப்போன சர்க்கரை வியாதி, தினம் தினமும் உருவாகும் புதிய நோய்கள், மருந்தே இல்லாத வியாதிகள். மரணம், பிசாசின்பிடி (ஆவி. ஆத்மாவில்) போன்றவகைளிலிருந்து நடக்கும் விடுதலையைப் பார்க்கும் போதுதான் உலகமே ஆச்சரியப்பட்டு இயேசுவை ஏற்றுக் கொள்ளும், மற்றப்படி, மருத்துவத்திற்கு உட்பட்ட வியாதிகளின் விடுதலையை, ஏழைகள் பாமர மக்கள் வேண்டுமானால் விசுவாசிக்க வாய்ப்பு உண்டு. அதுவும் கூட அந்த விசுவாசம், நிரந்தரமாயிருக்க வாய்ப்பில்லை.

உலகத்திற்கு உட்பட்ட காரியங்கள் நடக்கத்தான் வரங்கள் தேவைப்படுகின்றன (1 கொரி.12:8-10). இந்த வரங்கள் ஆவியானவர் தம்முடைய சித்தப்படி பகிர்ந்து கொடுக்கிறார் (1 கொரி. 12:11). இது நம்முடைய விசுவாசத்தாலும், பரிசுத்தத்தாலும் கிடைப்பது அல்ல; நமக்கு வாஞ்சை இருந்தால், தேவனுக்கும் சித்தமானால் இது நடக்கும். மற்றப்படி அதிசயங்களும், ஆச்சரியங்களும், அடையாளங்களும் நடக்க வேண்டுமானால், உலகத்திற்கு அப்பாற்பட்ட காரியங்கள் நடக்க வேண்டுமானால், வரங்கள் போதாது. இயேசு கிறிஸ்துவால் ஆவியானவரைக் கொண்டு கொடுக்கப்படும் அந்நிய பாஷை அடையாளத்தோடு பெறப் போகும் ஆவியின் ஞானஸ்நானத்திற்குப் பிறகு கிடைக்கும் ஒரு அனுபவம் தான் வரம். ஆனால் இரட்சிக்கப்பட்ட தேவபிள்ளைகளுக்கு அக்கினி ஞானஸ்நானமும் கொடுக்கப்படும். ஆமென் (மத்.3:11; அப்.1:4; அப்.2) ஒரு சிலருக்கு இந்த இரண்டு ஞானஸ்நானங்களும் அப்.2ல் கிடைத்தது போல, ஒன்றாகவே கிடைக்க வாய்ப்புமுண்டு. யோவே 2:28, 29ல் சொல்லப்பட்ட அனுபவம் தான் இது என்றும், இதைத்தான் ஆதி அப்போஸ்தலர்கள் பெற்றார்கள் என்றும் பேதுரு, அப்.2:16ல் கூறுகிறார். இந்த அனுபவம் நமக்கும் உண்டு என்கிறார் (அப்.2:39) **இந்த அக்கினி ஞானஸ்நான அனுபவம் தான் இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை செய்ய வைக்கிறது.**

இந்த அக்கினி அபிஷேகத்தைப் பெற்றுவிட்டால், ஆதி அப்போஸ்தலர்கள் போல, 2016ம் ஆண்டிலே உலகத்தை நம்மால் கலக்கமுடியும்: ஆத்ம ஆதாயம் பெருகமுடியும்: பிசாசின் கோட்டைகள் உடைய முடியும்: இயேசுவின் வருகை சீக்கிரமாக சம்பவிக்க முடியும். அல்லேலூயா! இந்த அக்கினி அபிஷேகமும் ஆவியானவரின் சித்தப்படி, வாஞ்சையுள்ளவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அந்நிய பாஷை அடையாளத் தோடு பரிசுத்த ஆவியயைப் பெற்ற நீ, வரங்களைப் பெற வாஞ்சிக்கா விட்டாலும், இந்தக் கடைசி நாட்களின் ஆவிக்குரிய தேவையை உணர்ந்து, அக்கினி அபிஷேகம் பெற வாஞ்சி! தேவன் நிரப்புவார்! இந்த அக்கினி அபிஷேகம் என்பது ஆவியானவர் 'நம்மோடு' 'நமக்குள்' 'நம்மேல்' (Upon us- Filling us) என்ற மூன்றிலே உள்ள 3வது அனுபவமாகும். இந்த அனுபவம் பழைய ஏற்பாடடில் மரியாள். தாவீது, சிமியோன், 70 இஸ்ரேலர் (லூக்.1:35; 2:25; எண்.11:25) போன்ற பலருக்கு தேவைக் கேற்றபடி இருந்தது. ஆனல் நமக்கோ நிரந்தரமாக இருக்கும்.

இதற்கு தேவனிடமிருந்து விசேஷமான வல்லமை. மகிமை, மகத்துவம், மாட்சிமை, ஞானம், அதிகாரம் போன்ற எல்லாம் தேவை (மத்.17:21). இந்த அக்கினி அபிஷேகத்தைப் பெறுவதற்கு இரட்சிக்கப்பட்டு, அந்நிய பாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்ற தகுதி மாத்திரம் போதாது. பரிசுத்தமான சாட்சி வாழ்க்கை, ஆவியின் கனி, வசனத்தெளிவு, தேவஞானம், தேவ பிரசன்னம், வசன விசுவாச அறிக்கை போன்றவை மிகவும்தேவை. இவைகள் எல்லாமே ஒன்றும் குறையாமல் இயேசுவிடம் இருந்தன; ஆதி அப்போஸ்தலரிடம் இருந்தன. அதனால்தான் அக்கினி அபிஷேகம் நிறைந்தவர்களாய் அதிசயங்களையும் அடையாளங்களையும் செய்தார்கள். நிழல் பட்டால் சுகம்; வஸ்திரம் தொட்டால் சுகம்; மரித்தோர் உயிர்த்தெழல்; சர்ப்பம் கடித்தும் ஜெயம்; எல்லாம் நடந்தது.

இலட்சக்கணக்கில் பணம் செலவழித்து "அக்கினிப் பெருவிழா" அக்கினி முகாம் நடத்தி என்ன பலன்கள் உண்டாயிருக்கின்றன? நடத்துபவர்களுக்கு பேரும் புகழும் ஊழியர் - விசுவாசிகள் மந்தியில் உண்டாகின்றது. அவ்வளவுதான். மற்றப்படி அக்கினி ஞானஸ்நானம் பற்றி வசனத்தெளிவு இல்லாததால், ஏதோ ஆடிப்பாடி அந்நியபாஷைகளைப் பேசி, காலத்தையும் உடல் பலத்தையும், பணத்தையும் வீணாக்குகிறார்கள். இதை வாசிக்கும் தேவபிள்ளையே 2016ல்லாவது வசனத்தெளிவு பெற ஆவியானவருக்கு இடங்கொடு! அக்கினியால் ஞானஸ்நானம் பெற்று, அதிசயங்களையும் அடையாளங்களையும் செய்ய இன்றே வாஞ்சி! தேவன்

உன்மேல் அக்கினி அபிஷேகம் பண்ண வசனத்தின்படி ஆயத்தமாய் காத்திரு! வெற்றி நமதே! வெறுமனே "நிரப்புங்கப்பா - நிரப்புங்கப்பா" என்று பாடிப் பாடியே வீணாய் நாட்களைக் கழிக்காதே! இது கடைசி காலம்.

❖ ❖ ❖

## பரலோகத்திற்கு ஏறினவர் யார்?

இன்றைக்கு கிறிஸ்தவ வட்டாரத்திலே, "பரலோகம் போனேன்; இயேசுவைப் பார்த்தேன்; அவரின் மடியிலே மரித்த சகோதரியைக் கண்டேன்" என்றும், "பரலோகம் போனேன்; அங்குள்ள மூப்பர் குழுவில் நாங்கள் இணைந்துவிட்டோம்; எங்களுக்கு ஆண்டவரே இந்த சி.டியை கொடுத்தார். பழைய மூப்பர் குழு கலைக்கப்பட்டது" என்றும், "பரலோகம் போனேன்; அங்கே மூப்பர் குழு தலைவராக சகோதரர் இருக்கிறார்" என்றும், பலர் பலவாறாய் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். இவர்கள் சொல்வது தரிசனமா அல்லது உண்மையா என்று தெரியவில்லை. நீங்கள் பரலோகம் பற்றியும், அங்கே யார் யார் இருப்பார்கள் என்றெல்லாம் எப்படி நிதானித்து இருக்கிறீர்களோ, அந்த சிந்தனைப்படியேதான் தரிசனம் உங்களுக்கு கிடைக்கும். தரிசனத்தில் காணப்படுபவை எல்லாம் சுயதோற்றமுள்ள பொருளை உடையதாய் இராது (2 பேது.1:20,21). மனுஷருடைய சித்தப்படி, எண்ணப்படி, சித்தனைப்படி தோன்றுவதெல்லாம் சொந்த தரிசனங்கள்; அவைகளில் உண்மையும் இருக்கலாம்; பொய்யும் இருக்கலாம். தேவன் தரும் தரிசனமே தீர்க்கமான தரிசனம்; இதுவும் நமது வேத வசனத்திற்கு ஒத்திருந்தால் மாத்திரமே அது தேவனின் தரிசனம் என்று ஏற்றுக் கொள்ளலாம்; மற்றப்படியான எந்த தரிசனங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல. அப்படியானால் இப்படியாய், பரலோகம் போய்வருவது குறித்த தரிசனங்கள் சரிதானா? பரலோகிற்கு ஏறினவர்தான் யார்? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே வெளிப்படுத்து வாராக!

வேதத்தில் தானாய் பரலோகம்போன மனிதர்கள் ஒருவரும் இல்லை. பவுல் அப்போஸ்தலன்கூட பரதீசுவரைதான் அதுவும் எடுத்துக் கொள்ளப்பட்டான் (2 கொரி.12:2,3). எலியாவும் ஏனோக்கும் பரலோகம் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்ற கருத்து நிலவுகிறது (ஆதி.5:24; 2 ராஜா 2:11). இருவரும் சரீரத்தோடே எடுத்துக் கொள்ளப்பட்டார்கள். 1 கொரி.15:50ன் படி, மாம்சமும் இரத்தமும் பரலோகம் போவதில்லை. அப்படியானால் இவர்கள் எங்கே போனார்கள்? 2 ராஜா 2:16-18 மற்றும் மத்.17 மறுரூப மலைக் காட்சி ஆகியவைகளை வைத்துக் கொண்டு, ஒரு சிலர், "எலியாவை

பரலோகம் கொண்டு போகவில்லை; மோசேயும் பரலோகம் போகவில்லை; உலகின் ஏதோ ஒரு பகுதியில் எலியாவும் மோசே போலவே மரித்திருக்க வேண்டும்" என்று வியாக்கியானம் பண்ணுபவர்களும் உண்டு. ஏனோக்கு தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டான் என்று மட்டும் தான் உள்ளதாகவும், பரலோகத்துக்கோ அல்லது வேறு எங்கேயோ என்று விளக்கமில்லை என்றும் சொல்வோருமுண்டு. அப்படியே எலியாவும், "went up by a whirl wind into heaven" என்ற போடப்பட்டுள்ளதால், "Heaven" என்றால் வானம் - ஆகாயம் என்றும் அர்த்தம் எடுக்கலாமே ஒழிய மோட்சம் - சொர்க்கம் என்று மட்டும் எடுக்க முடியாது என்று வாதிடுவோரும் உண்டு. (See 1 தெச.4:16ல் heaven என்பதற்கு, வானம் என்று தமிழில் போடப்பட்டுள்ளது). மேலும் வேதத்தில் சொல்லப்பட்டபடி, மொத்தம் மூன்று வானங்கள்தான் உள்ளன என்றும், மூன்றாம் வானத்தின் ஆரம்பத்தில்தான் பரதீசு உண்டென்றும், அதற்கு அப்புறம் தான் எபி.12:22-24ல் சொல்லப்பட்டவைகள் உள்ளன என்றும் அறிகிறோம்.

மட்டுமல்ல... யோ.14:2-4ஐ வாசித்தால், இயேசுகிறிஸ்து பரலோகம் போய், நமக்காய் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, மீண்டும் வந்து நம்மை, பிதா இருக்கிற சொர்க்கத்திற்கு கூட்டிச் செல்வார் என்று அறிகிறோம். அப்படியானால் அவர் வரும்வரை ஒருவரும் மோட்சம் போவதில்லை என்று அறிகிறோம். அதுவரை மரித்தவர்களின் உள்ளான மனுஷன், ஒன்று பரதீசுக்கோ அல்லது பாதாளத்திற்கோ போகும் என்று வேதம் சொல்கின்றது. இந்த அடிப்படையில் பார்த்தால். ஒருவரும் பரலோகம் போவதில்லை என்று திட்டமாய் அறிகிறோம். இதினிமித்தம் எடுத்துக் கொள்ளப்பட்ட எலியாவும் ஏனோக்கும், பரதீசில்தான் இருக்க வேண்டும் என்று நிதானிக்க வாய்ப்புண்டு. மேலும் யோவானும் எடுத்துக் கொள்ளப்பட்டான் (வெளி.4:1); அது தரிசனத்தில். ஆமென்!

**பரலோகிற்கு இதுவரை எந்த உலக மனிதனும் போகவில்லை என்பதற்காக அதி முக்கிய ஆதார வசனம் யோ.3:13தான்.** "பரலோகத்திலிருந்திறங்கினவரும், பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷ குமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை". இது யோவான் மூலம் ஆவியானவர் எழுதிய வார்த்தை. வானிலிருந்து நமக்காய் இறங்கிவந்து மரித்து உயிர்த்து பரலோகம் திரும்பிப்போய், பரலோகில்பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்து நமக்காய் பரிந்து பேசிக் கொண்டிருக்கும், மனுஷ குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே அல்லாமல் பரலோகம் ஏறினவன் ஒருவனுமில்லை என்று யோவான் ஆதாரபூர்வாய்

அனுபவித்து எழுதுகிறான். இந்த சுவிசேஷப் புத்தகம் எழுதப்பட்டது கி.பி. 90ல் அதற்கு முன்பே இயேசு பரலோகம் போய் அங்கே இருக்கிறார். அல்லேலூயா! எனவே, இயேசுவைத் தவிர, வேறு யாரும் பரலோகத்திற்கு ஏறினவன் இல்லை என அறியலாம்.

**சிலருடைய கருத்து:** "இந்த வார்த்தை, இயேசு நிக்கோதேவிடம் சொன்னது" என்று சொல்லி. "இயேசு பரலோகிலிருந்து இறங்கி வந்தார்; பூமியில் இருக்கிறார்; ஆனாலும், பரலோகிலும் இருக்கிறார்" என்று போதித்து, பிரன்ஹாம் கொள்கையை - இயேசு நாமக்காரர் (ONLY JESUS) கொள்கையை திணிக்க முயல்கின்றனர். இப்படி இவர்கள் சொல்வதால், "பரலோகத்திலிருக்கிற பிதாவும் இயேசுதான்: பூமிக்கு இறங்கி வந்தவரும் இவர்தான். பிதாதான் இயேசு; இயேசுதான் பிதா; திரித்துவம் என்பது இல்லை" என்று விசுவாசிக்கும் கள்ள உபதேசக்கூட்டம் வளர்கின்றது. இதே கருத்தை, மறைமுகமாக, Angel TV-ல் சகோ. சாது சுந்தர்செல்வராஜ் சொல்லக் கேட்டு நான் அதிர்ச்சியடைந்தேன். இந்த யோ.3:13ஐ வியாக்கினம் பண்ணுபவர்கள். ஆங்கிலத்திலோ மூலபாஷையிலோ உள்ளதை வாசிக்க வேண்டும். And no man hath aseended upto heaven, but he that came down from heaven, even the sonof man which is in heaven. மனுஷ குமாரன் பரலோகத்துக்கு ஏறினதையும் அங்கே வீற்றிருப்பதையும் குறிப்பதால், நிக்கோதேமு காலத்திலோ, இயேசு பூமியிலிருந்த போதோ சொன்னதாக இதை எடுத்துக் கொள்ளவே முடியாது. இயேசு பரலோகம் போனபின்தான் இது சொல்லப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் இது, பூமியிலே இயேசு நிக்கோ தேமுவிடம் சொன்னது அல்ல என்றும், இந்த புத்தகத்தை கி.பி.90ல் எழுதிய யோவான் தான் சொல்லியிருக்கிறான் என்றும் அறியலாம்.

மேலும், யோ.3:1 முதல் நிக்கோதேமுவுடன் நடந்த சம்பாஷனை, வச.12 உடன் முடிந்துவிட்டது. வசனம் 13, And என்று ஆரம்பிக்கிறது. ஆதி.1:1ல், ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று உள்ளது. ஆனால் வசனம் 2, AND என்று ஆரம்பிக்கின்றது. இப்படி ஆரம்பித்தாலே, முதல் வசனக்காரியம் வேறு, AND என்று ஆரம்பிக்கும் வசனக் காரியம் வேறு என்று அறியலாம். தனித்தனியான காரியங்களை பிரிப்பதற்காக "AND" என்று ஆரம்பிக்கப்படும். இப்படி ஆரம்பிக்கப்பட்ட 13 முதல் 21 வரை உள்ள வசனங்களை வாசித்தால், "தன்னை", "அவரை" என்றெல்லாம் இயேசுவைப் பற்றி சொல்லப்பட்டிருப்பதால், இவைகள் யோவானால் எழுதப்பட்டது என்றும் அறியலாம். நிக்கோதேமோடு வசனம்

12உடன் இயேசு சம்பாஷித்த பின், சவிசேஷம் எழுதிய ஆசிரியர், ஆவியானவரால் ஏவப்பட்டு, இந்த கருத்துக்களை நமக்கென்று எழுதுகிறார். அல்லேலூயா!

இது சம்பந்தமாய், பெந்தெகொஸ்தே சபையார் உபயோகிக்கும் DAKES பைபிள் புதிய ஏற்பாடு பக்கம் 95-column 4 (n)ல் உள்ளதை வாசியுங்கள்: "This verse proves that Jesus had already aseended when John wrote this book; that the conversation with Nichode mus ended with v-12; and that Jesus was now in heaven"

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இதுவரைக்கும், இயேசுவே அல்லாமல் ஒருவரும் பரலோகம் போகவில்லை என்றும்; இயேசு தன் இரகசிய வருகையில்தான், பூமிக்கு வராமல் ஆகாயத்தில் இருந்து கொண்டே நம்மை அழைத்துக் கொண்டு பரலோகம் கொண்டு செல்வார் என்றும் (1 தெச.4:16-18) அதுவரைக்கும் யாராவது போய் வந்தேன் என்று சொல்வதெல்லாம் வேதப்புரட்டு என்றும், அவைகளை நம்ப வேண்டாமென்றும் முந்தி அறிந்து கொள்க! இது கடைசி காலம்! மத்.24:24 ஆரம்பிக்கின்ற காலம்! ஜாக்கிரதை! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## பாபிலோன் அழிந்ததா? அழியுமா?

முதலாம் உலகப் பேரரசான பாபிலோன் சாம்ராஜ்யத்தின் தலைநகரமாய் இருந்த பாபிலோன் நகரம், உலகம் இதுவரை கண்டிராத மகா உன்னதமான பட்டணம். நேபுகாத்நேச்சாரின் காலத்தில் அது உயர்ந்த நிலைக்கு வந்தது. உலகின் 7 அதிசயங்களில் ஒன்றான தொங்குதோட்டம் இங்குதானிருந்தது. பாபிலோன் பேரரசுக்குப்பின் வந்த மேதிய பெர்சிய சாம்ராஜ்யத்தாலும் பாபிலோன் நகரம் சேதப்படவில்லை. கிரேக்க நாட்டிலிருந்து வந்த செர்ஸஸ் என்பவர் பாபேல் கோபுரத்தை கைப்பற்றி, கொள்ளையடித்து சேதப்படுத்தினான். ஆனாலும் கட்டுமானத்தை அழிக்கவில்லை. கி.மு.331ல் மகா அலெக்சாண்டர் இதைக் கைப்பற்றி, பாபிலோன் நகரையே தனக்கு தலை நகராக்க தீர்மானித்து செப்பனிடும் பணிகளில் ஈடுபட்டான். அவன் 33ம் வயதிலேயே மரித்ததால் பணிகள் தொடரவில்லை. அவனது தளபதிகளில் ஒருவன் பாபிலோனில் அதிகாரம் செலுத்தியபோது தனக்கென்று ஒரு தலைநகரை பாபிலோனுக்கு அருகிலே

உருவாக்கினான். இந்தப் போட்டி நகரம் படிப்படியாய் பாபிலோன் குடிமக்களை தன் பக்கம் இழுத்துக்கொண்டது. இதனால் அந்த பழைய பாபிலோன் குடியற்ற அவாந்தரமாக மாறியது. இப்படியாய் வீழ்ந்துபோன பாபிலோன் திரும்பவும் எடுப்பித்துக் கட்டப்படுமா என்பது கேள்வி.

ஏசா.13,14 மற்றும் எரே.50,51 அதிகாரங்களில் பாபிலோனின் அழிவைக் குறித்து சொல்லப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்கள் நிறைவேறாமல் இருக்கின்றன. ஏசா.13:30; எரே.51:43; 5:26 போன்ற வசனங்களைச் சொல்லி பாபிலோன் முற்றிலுமாய் வீழ்ந்துவிட்டது என்று வாதிடுவோர் உண்டு. சரித்திரம் படித்தோருக்கு தெரியும், அடிமைத்தளையை பாபிலோனில் விட்ட யூதர்கள், பின்னும் அதிக எண்ணிக்கையுடன் அங்கேயே தங்கி வந்தனர் என அறிகிறோம். மேலும் பேதுரு, கி.பி. 60ல் அந்த யூதர் மத்தியில் ஊழியம் செய்கிறதாகப் பார்க்கிறோம் (1 பேது.5:13). கி.பி.5ம் நூற்றாண்டின் மத்தியில் யூதர்கள் மட்டுமே பாபிலோனில் வாழ்ந்ததாக தியோடொரேட் என்பவர் குறிப்பிடுகிறார். அங்கே அவர்களுக்கு மூன்று பல்கலைக்கழகங்கள் இருந்தன என்றும், "பாபிலோனியன் தல்மூத்" என்னும் யூதர்களது அடிப்படை சட்ட திட்டங்கள் அங்கே உருவாக்கப்பட்டு, உலகமெங்கும் உள்ள யூதர்களால் அங்கீகரிக்கப்பட்டது என்றும் அறிகிறோம். கி.பி.912ல் இபுஹாங்கல் என்பவர் பாபிலோன் கிராமமாகவே காணப்படுகிறது என்கிறார். இன்னும் அது வளர்ந்து கி.பி.1100 ல் "இரு பள்ளிவாசல்கள்" என்றழைக்கப்படும்படி சிறுபட்டணமானது. பின்னும் கோட்டைச் சுவர்களால் சூழப்பட்டு, Hilla என்றழைக்கப்படும் இளைப்பாறுதல் ஸ்தலமாக மாறியது. கி.பி. 1898ல் இந்த ஹில்லாவில் 10,000 குடிமக்கள் வாழ்ந்தனராம்; சுற்றிலும் செழிப்பாய் பூமி இருந்ததாம்; ஐபிராத் நதியின் இருமருங்கும் பேரீச்ச மரங்கள் வளர்ந்து செழித்தனவாம். பாபிலோனின் கட்டுமானங்களிலிருந்துதான் கிரேக்கர், செலூசியாவையும், பார்த்தியர், டெசிபானையும், பாரசீயர், அல்மைதுனையும், காலிபர்கள் கூபாவையும் கட்டியுள்ளனர். ஹில்லாகூட பாபிலோனின் மண், கல் குவியலிலிருந்து எழுப்பப்பட்டது. பாக்தாத் வீடுகள்கூட இப்படியே!

அப்படியானால் ஏசாயாவும், எரேமியாவும் பாபிலோனின் அழிவைப் பற்றி சொல்லப்பட்டவை பொய்யா என்று எண்ணத் தோன்றும். தேவனின் வார்த்தை பொய்யே அல்ல. ஆனால் அவைகள் இதுவரை நிறைவேறவில்லை என்றே பொருள். அல்லேலூயா! எப்போது நிறைவேறும்? ஏசா.13:9ஐ வாசியுங்கள். கர்த்தருடைய நாளாகிய இரண்டாம் வருகையிலேதான் பாபிலோன் பாழக்கப்படும்; தேவ கோபாக்கினை நிறைவேறும் (see ஏசா.13:10; லூக்.21:25-27). பாபிலோனுக்கு ஒரே

நாழிகையிலே ஆக்கினை வருமாம் (வெளி.18:10); பாபிலோன் மகாநகரம் வேகமாய் தள்ளுண்டு இனி ஒருபோதும் காணப்படாமற் போகுமாம் (வெளி.18:21). இந்த நகரம் வெளி.18:8,18ன் படி அக்கினியினால் சுட்டெரிக்கப்படுமாம். இதுகுறித்து ஏசா.13:17 - 19ன்படி பூமியதிர்ச்சியும் உண்டாகி, அக்கினியினாலும் அழிவதால் அப்போது தான் ஏசா.13:20; எரே.5:26; 51:43 நிறைவேறும். இதிலிருந்து நாமறிவது என்ன? அழிந்துவிட்ட பழைய பாபிலோன் நகரம் மறுபடியுமாய் பழைய நிலைக்கு எழும்புவதற்கான சாதத்தியக்கூறுகள் உண்டா? முதலாம் நெப்போலியன் தயாரித்த "பாபிலோனிய புதிய நகரம்" அமைப்புக்கான திட்டவரைபடம் இன்னும் பாரீஸில் உள்ள பிரான்ஸ் தேசயுத்த விவகாரத்துறையின் பதிவேடுக் காப்பறையில் பாதுகாக்கப்பட்டுள்ளது. மெசபத்தோமியா, அசீரியா மற்றும் பாபிலோனியா அடங்கியுள்ள பகுதியை மிகவும் செழிப்புமிக்க பிரதேசமாய் மாற்ற நீர்ப்பாசனத்திட்டம் ஒன்று, 1850ல் ஐப்பிராத்து நதியை நில ஆய்வு செய்ய 1,50,000 டாலர்கள் ஆங்கிலேய அரசால் ஒதுக்கப்பட்டது. பாபிலோன் முன் இருந்தது போல் தானிய விளைச்சல் பகுதியாக மாற்றியமைக்க ஏற்பாடு நடந்தது. இதன் மூலம் பட்டணங்கள் உருவாகவும், சாலை மற்றும் இரயில் பாதை உருவாகவும் சாத்தியமாயிற்று. கடந்த ஜெர்மனி சக்கரவர்த்தி வில்லியம் என்பவர் ஐரோப்பாவை பாபிலோன் மார்க்கமாக இந்தியாவுடனும், சீனாவுடனும் ஆகாய விமானப் போக்குவரத்தால் இணைக்க முயன்றார். இதன் விளைவாக துருக்கி தலைவர் அப்துல்ஹமீத்துடன் தொடர்பு வந்து, ஓர் இரயில்பாதை ஆசிய பாஸ்போரஸ் தொடங்கி, அலப்போ வழியாக திக்ரி நதிவரை அமைக்க சலுகை பெற்றார். மேலும் இரயில் பாதையை தொடர்ந்து பாக்தாத், பாபிலோன் வழியாக குவைத்தில் முடிக்க திட்டமிட்டனர். இதை நாம் பார்க்கும் போது ஐரோப்பிய ஆதிக்கம், பாபிலோனை மீள உயர்த்துவதே என்று அறிகிறோம். இது காலம் வரும்போது நொடிப்பொழுதில் நிறைவேறும். சக.5:5-11ஐ வசித்தால், பாபிலோன் கோபுரம் கட்டப்பட்ட இடமான சிநேயார் தேசத்தில் அதாவது எழும்பப் போகும் பாபிலோனிலேதான் வியாபாரம் பெருகும் என அறிகிறோம். சபை எடுபட்டபின், அந்திகிறிஸ்து வெளிப்படுமுன் பாபிலோன் கட்டப்பட்டுவிடும். பாருங்கள்! சிகாகோ நகரம் 150 வருடத்திற்கு முன்பு சாதாரண சதுப்புநிலம். இன்றோ? உன்னதநகரம், உலகில் சர்வாயுத நாடுகள் வருமுன்னே பாபிலோன் நகரம் உயிர்த்து எழ ஒருசில காலம் போதுமானதே!

வெளி.17ல் சொல்லப்பட்டது பிசாசின் ஆவிக்குரிய பாபிலோன்; போப் மார்க்கம் மற்றும் இரகசிய வருகையில் கைவிடப்பட்ட பாரம்பரிய கிறிஸ்தவர்கள் சார்ந்த சபை. அதன் தலைமை ரோமன் கத்தோலிக்க

சபையாக இருக்கலாம் என்று நிதானிக்கப்படுகிறது. உலகில் எழும்பப் போகும் 10 ராஜாக்களாலே இந்த பாபிலோன் நிர்வாணமாக்கப்பட்டு அழிக்கப்படும் (வெளி.17:16). வெளி.18:1ன் படி, இந்த பாபிலோன் சபைக்குப் பின்புதான், உன்னதமான நகரமாகிய பழைய பாபிலோன் மீண்டும் எடுப்பித்துக் கட்டப்பட்டதற்கு அழிவு வரும் என்று அறிகிறாம். சதாம் உசேன் பூமிக்கு அடியில் கட்டிக்கொண்டிருந்த நகரம் பாபிலோன்தானோ என சிலர் வியக்கின்றனர். சபை எடுபட்டுப் போன சில காலங்களில் வேசியாகிய பிசாசின் ஆவிக்குரிய பாபிலோன் அழிந்து போகும்; அதற்குப் பின் பழைய பாபிலோன் நகரம் திரும்ப எழும்பும், தீர்க்கதரிசனம் சொன்னபடியே அது நியாயத்தீர்ப்பின் நாளிலே அழிந்துபோகும்.

❖ ❖ ❖

## புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் குறைவுள்ளதா?

1 கொரி.13:9ஐ எடுத்துக் கொண்டு, புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் குறைவுள்ளது என்றும், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் நிறைவானது - குறைவில்லாதது என்றும் போதித்து, 2011 செப்டம்பர் 17 முதல் ஒரு புதிய பரிணாமத்திற்குள் கிறிஸ்தவ ஊழிய சகாப்தம் வந்திருப்பதாகவும், இனி பரலோக தூதர்களோடும், பரிசுத்தவான்களோடும் இணைந்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைக் கட்டவேண்டும் என்றும், இந்த வட்டத்திற்குள் நுழைந்த தீர்க்கதரிசிகளின் வாயிலிருந்து. குறைவே இல்லாமல் நிறைவாகவே தீர்க்கதரிசனங்கள் இனி பிறக்கும் என்றும் பிரசங்கிக்கிறார்கள். எபி.1:1, 2ஐ வாசித்தால், பரிமாணங்கள் பங்குபங்காய் இருந்திருக்கலாம்; ஆனால், இயேசு மூலமாய் வந்த பரிமாணமே கடைசி பரிமாணம். இதற்குமேல் வேறே எந்தப் பரிமாணமும் உண்டாகுமென்று வேதம் வெளிப்படுத்தவே இல்லை. நமது இயேசு மூலமாய் வெளிப்பட்ட கடைசிப் பரிமாணம், அவரின் இரகசிய வருகைவரை - சபை எடுத்துக் கொள்ளப்படும்வரை - கிருபையின் காலம் முடியும் வரை தொடரும். அல்லேலூயா! முகமது நபியால் இயேசுவுக்குப்பின் இன்னொரு பரிமாணம் உருவாயிற்று என்று முஸ்லீம்கள் சொல்லி, இயேசுவை மட்டுப்படுத்துவதுபோல, இப்படி ஒரு கூட்டம் இந்த கடைசி நாட்களில் எழும்பியிருக்கிறது. ஜாக்கிரதை! அப்படிப்பட்டவர்கள் கருகலாக்கிய சத்தியங்களை ஆவியானவர் மலரச் செய்வாராக! அல்லேலூயா!

எபி.1:14ன்படி, தேவதூதர்கள் நமக்கு பணிவிடை ஆவிகள். அப்படியிருக்க, தேவாதி தேவன் - ராஜாதி ராஜன் - கர்த்தாதி கர்த்தரின் புத்திர சுவீகாரம் உடைய நாம். வேலைக்கார ஆவிகளோடு சேர்ந்து தேவ ஊழியம்

செய்யவேண்டிய நிலைக்கு தாழ்ந்து விட்டோமா? ஆளப்பிறந்தவன் அடிமையாகலாமா? சிந்தியுங்கள். மட்டுமல்ல... செப்டம்பர் 17, 2011 இவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தது? வேத ஆதாரம் ஏதேனும் உண்டா? பரலோகம் போய், பழைய மூப்பர் பதவிகளை தள்ளிவிட்டு, இவர்களை மூப்பர்களாக்கி, தேவேன கொடுத்த C.D. யோடு பூலோகம் வந்திருக்கிறோம் என்று மார்தட்டிப் பேசும் கூட்டமல்லவா இப்படிப் பேசிக் கொண்டிருக்கிறது! எது எப்படியோ, யார் பேசினாலும், வேதத்தின்படி இருந்தால் நாம் ஏற்றுக்கொள்ள தயாராயிருக்கிறோம்.

தீர்க்கதரிசனம் என்பது ஒரு வரம்; ஆவியானவரால் அளிக்கப்படுகிறது. ஆண்டவர் அளிக்கும் வரம், பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு போன்ற எல்லா காலக்கட்டங்களிலும் மாற்றமே இருக்காது அல்லவா! மனிதனே தீர்க்கதரிசன முகாம்கள் நடத்தி, விசுவாசிகளை பேசவைத்தால், அதிலே கண்டிப்பாய் குறைகள் இருக்கும்; தவறுகள் இருக்கும்; ஆவியானவரே தமதுசித்தத்தின்படி கொடுக்கும்போது (1கொரி.12:11) தவறே இருக்காது. ஆமென். தீர்க்கதரிசனம் சொல்ல வைப்பவர் ஆவியானவர்; சொல்லுவது நாம்! அல்லேலூயா! சொல்லுகிறவரின் அறிவு, ஞானம், பண்பாடு போன்றவைகளின்படி, சொல்லக் கூடிய முறைகளிலே சில குறைகள் இருக்கலாமே ஒழிய, அடிப்படைக் கருத்துக்கள் ஒன்றும் குறைவாய் இருக்கவே இருக்காது. ஒருவேளை, மேற்கண்ட பரிணாமப் போதகர்கள் சொல்லும் தீர்க்கதரிசனங்கள் பல. குறைவுகள் உள்ளதாக இருந்திருக்கலாம்; இவர்கள் வேண்டுமானால் முகாமிலும், தீர்க்கதரிசன கல்லூரிகளிலும் கற்றபடி தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கலாம். ஆனால், ஆவியானவர் தரும் தீர்க்கதரிசனம் குறைகள் உள்ளது அல்லவே அல்ல. புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தில் குறைகள் உண்டென்றால், புதிய ஏற்பாட்டில் இது சம்பந்தமாய் செயல்படும் ஆவியானவர் சரியில்லையா? ஆவியானவரை குறை சொல்ல யாருக்கு உரிமையும் தகுதியும் உண்டு? ஆவியானவரும் தவறுகள் செய்வாரா? சிந்தியுங்கள்.

அப்படியானால் "நம்முடைய அறிவு குறைவுள்ளது; நாம் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது" (1 கொரி.13:9) என்பதன் அர்த்தமென்ன? ஆங்கிலத்தில், "For we know in part, and we prophecy in part" என்று உள்ளது. அதாவது நமது தீர்க்கதரிசனம் குறைவானது என்றல்ல; கொஞ்சமானது. அதாவது in part; Here quantity is mentioned not the quality. **தீர்க்கதரிசன தன்மையை குறைத்து சொல்லவில்லை.** 1 கொரி.13:9-13 வரை வாசித்தால். இப்படியாய் கொஞ்சம் கொஞ்சமாய் ஆவியானவரைக் கொண்டு சொல்லப்படும் - குறைவானதாய் இருக்கும்

தீர்க்கதரிசனமெல்லாம், நிறைவானவர் இயேசு வரும்போது தேவை யில்லாமல் போகும். ஆக, அதுவரை, தீர்க்கதரிசனம் தேவை; அந்நிய பாஷை தேவை; அறிவு தேவை; அன்பும் தேவை. அன்பைத் தவிர மற்றவைகள் இயேசுவின் வருகையோடு தேவையில்லை; ஆனால் அன்பு, விசுவாசம், நம்பிக்கை இம்மூன்றும் என்றென்றும் நிலைத்திருக்கும். இயேசு வரும்வரை தீர்க்கதரிசனம் கொஞ்சம்தான் சொல்லப்படும் என்று சொல்லியிருக்க, செப்டம்பர் 17, 2011க்குப் பின், குறைவுகளோடு இருந்த தீர்க்கதரிசனம், குறையே இல்லாமல் நிறைவாய் இருக்கும் என்று சுயமாய் சொல்லி கிறிஸ்தவர்களை ஏமாற்றும் உபாயத்தை பிசாசானவன் திறந்து விட்டிருக்கிறான் என்பதை அறிந்துகொள்க! வசனமே நமக்கு வெளிச்சம்; வழிகாட்டி.

"பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களில் குறைகள் இல்லை; புதியஏற்பாட்டில்தான் குறைகள்" என்று வாதிடுகின்றனர். தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். **குறைகளே இருக்காது எப்போதும். குறைவுகள் இருக்கலாம்.** இது இரண்டு ஏற்பாடுகளிலும் உண்டு; நிறைவாய் (complete - 100%) சொல்லியது எப்போதுமே இல்லை. **உதாரணத்திற்கு:** (1) எசேக்கியா ராஜா மரித்துப்போவார் என்று ஏசாயா தீர்க்கதரிசி மூலம் தேவன் தீர்க்கதரிசனம் சொல்கிறார். எசேக்கியாவின் விசுவாச வேண்டுதலால், 15 வருடம் கூட்டிக் கொடுக்கப்பட்டது என்ற தீர்க்கதரிசனம் அதே தீர்க்கதரிசியாலேயே சொல்லப்படுகிறது (2 ராஜா 20). இதிலே குறைகள் ஏதும் இல்லை; முதலில் குறைவாய் சொல்லப்பட்டது; பிற்பாடு நிறைவாய் சொல்லப்பட்டது. அவ்வளவுதான். (2) பாகால் வணக்கம் செய்யும் யெரோபெயாமை கண்டிக்க வந்து, ஆவியானவரின் தீர்க்கதரிசனங்களை தவறின்றி - குறைகளின்றி சொன்ன யூதா தீர்க்கதரிசியை இஸ்ரேல் தேச கிழட்டு தீர்க்கதரிசி ஒருவன், தவறான தீர்க்கதரிசனம் சொல்லி நம்ப வைத்து, இஸ்ரேல் தீர்க்கதரிசியை கொல்ல வைத்தான் அல்லவா! (1 ராஜா 13:24). இதிலேகிழட்டு தீர்க்கதரிசி சொன்ன தீர்க்கதரிசனம் குற்றமுள்ளது; தவறானது. இப்படியாய் பொய்யாய் தீர்க்கதரிசனம் சொல்வது பழைய ஏற்பாட்டிலும் உண்டு என்பதை முந்தி அறிய வேண்டும். எந்த ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் சொன்னாலும் ஆவியானவரின் வரத்தினப்டி சொன்னால் அதிலே குறைகளோ, தவறுகளோ இருக்கவே இருக்காது. நிறைவாய் (complete) தீர்க்கதரிசனம் எந்த ஏற்பாட்டிலும் நூற்றுக்கு நூறு - எல்லாமே சொல்லப்பட்டதே இல்லை. அதற்கு உதாரணம்தான் தானியேல் மற்றும் வெளிப்படுத்தின விசேஷப் புத்தக தீர்க்கதரிசனங்கள். இவைகளில் ஒன்றிரண்டு தீர்க்கதரிசனங்கள் வேண்டுமானால் Full ஆக இருக்கலாம்.

மேலும், புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனம் சபைக்குள்ளேதான் - விசுவாசிகளுக்கு அடையாளமாய்த்தான் சொல்ல வேண்டும் (1 கொரி.14:22); பழைய ஏற்பாட்டில் சொன்னதுபோல எங்கும் சொல்ல ஆவியானவர் வரம் கொடுக்கவில்லை என்று அறிக! இந்த கருத்து புரிந்துவிட்டால், T.V.யிலும், பொது மேடைகளிலும், கண்ட இடங்களிலும், சபையாரல்லாதோருக்கு தங்கள் இஷ்டப்படி தீர்க்கதரிசனம் சொல்வோருக்கு மகிமை இருக்காது; சபை பூரணத்திற்குள் கடந்துபோகும்! இயேசு சீக்கிரம் வந்துவிடுவார்! ஆமென்! (2 பேது.3:9)

❖ ❖ ❖

## மனுஷகுமாரன் வரும் போது வானில் காணும் அடையாளங்கள்

தேவனுடைய பிள்ளையே! "அப்போது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது மனுஷ குமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமை யோடும் வானத்தின் மேல் வருகிறதை பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்" (மத்.24:30) என்ற வசனத்தை வைத்துக் கொண்டு, மனுஷ குமாரனுடைய அடையாளம் என்ன என்று ஆவிக்குரிய கிறிஸ்தவ சபையார் பலர் ஆராய்ச்சியில் இறங்கி, தங்கள் தங்கள் உலக அறிவுக்கேற்றபடி விளக்கங்கள் தந்து, சத்தியத்தை மாறுபாடாக்குகிறார்கள். இதனால் விசுவாசிகளின் விசுவாசம் வேத வசனத்தின்படி இல்லாமல் இந்த பெரியவர்களின் (?) வார்த்தைப்படியே மாறி விடுகின்றது. ஆவியானவர் தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

முதலிலே, வருகை இரண்டு உண்டு என்றும், முதலாம் வகை முடிந்து விட்டது என்றும், 2ம் வருகை வரப்போகின்றது என்றும், இந்த இரண்டு வருகையும் இந்த பூமிக்கு இயேசு வருவது என்றும்அறிய வேண்டும் (எபி. 9:28) இந்த 2ம் வருகைக்கு 7 ஆண்டுகளுக்கு முன்பதாக மத்திய ஆகாயத்திலே இயேசு வந்து சபையாரக் கூட்டிக் கொண்டு போகின்ற இரகசிய வருகை Secret Rapture - நடக்கும் என்றும் உணர வேண்டும் (1 கொரி.15:51; தெச.4:16-18). இந்த இரகசிய வருகை பழைய ஏற்பாட்டிலோ, இயேசு கிறிஸ்துவாலோ சொல்லப்படாமல் இரகசியமாய் வைக்கப்பட்டிருந்தது. பவுல் மூலமாய் வெளிப்படுத்தப்பட்டிருப்பதால் (1 கொரி.15:51) மத்தேயு 24, 25 போன்ற அதிகாரங்களில் சொல்லப்பட்ட வருகையெல்லாம் 2ம் வருகை

தான் என்று உணர வேண்டும்.பூமியை நியாயந்தீர்க்க ராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தாவாய், இயேசு கிறிஸ்து வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வருவார் என்றும், அது கண்டு; பூமியிலுள்ளோர் - கைவிடப்பட்டு அந்தி கிறிஸ்து ஆட்சியில் வாழ்வோர் - அழுது புலம்புவார்கள் என்றும் அறிகின்றோம். இந்த விளக்கத் தெளிவோடு மத்.24:30ஐ தியானிப்போம்.

வேதத்திலே மோசேக்கு, கிதியோனுக்கு, எசேக்கியாவுக்கு, யூதர்களுக்கு, யோசுவாவுக்கு என்று பலருக்கும் அடையாளங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. வரப்போகும் அந்தி கிறிஸ்துவின் வருகைக்குக் கூட அடையாளம் உண்டாம்! (2 தெச.2:9) இந்த அடையாளத்தை முழுமையாய் நாம் காணாவிட்டாலும் அவைகளின் முன்னோட்டம் ஒரு சிலவற்றை தற்போது நாம் நேரிடையாகவே பார்ககின்றோம். அது தான் கள்ள உபதேசங்களும், கள்ள தீர்க்கதரிசனங்களும் கள்ள கிறிஸ்துக்களும்; அது தான் குழந்தை ஞானஸ்நானமும், ஈஸ்டர், கிறிஸ்துமஸ் போன்ற பண்டிகைகளும், அது தான் விக்ர ஆராதனைகளும், அந்நிய நுகப்பணைப்புகளும். அப்படியே மனுஷகுமாரன் பூமிக்கு வருமுன்னும் அநேக அடையாளங்கள் நடக்கும். அந்த அடையாளங்களைத் தான் சீஷர்கள் இயேசுவிடம் கேட்டார்கள் (மத்.24:3). அதைத்தான் இயேசு விளக்கமாய் சொல்லி வருகின்றார். மத்.24ல், ஏராளமான அடையாளங்கள் இயேசு கிறிஸ்து சொல்லியிருக்க, மத்.24:30ல் சொன்னதை மாத்திரம் பெரிதுபடுத்தி கிறிஸ்துவ வட்டாரம் பலவாறாகச் சொல்கின்றது. அவைகளில் ஒன்றிரண்டைப் பார்க்கலாம்.

பூமியிலே ஏராளமான அடையளாங்கள் காணப்பட்டாலும், வானத்திலும் அடையாளம் காணப்படுமாம். இயேசு வரும் முன்னாலே வானத்திலே அது தென்படுமாம். ஒரு சில ஆவிக்குரிய சபை பிரசங்கிமார் அந்த அடையாளம் இயேசு தொங்கிய சிலுவை என்றும், அந்த சிலுவையை வானத்திலே காண்பார்கள் என்றும் சொல்கிறார்கள். ஏஞ்சல் டி.வி. சாது சொல்கிறார்:- "இயேசு வரும்போது சிலுவை போல தெரியும். எப்படியெனில் நடுவில் இயேசு நிற்கிறார். வலது புறமும் இடதுபுறமும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும், புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் தனித் தனியே இருப்பர், மேல்பகுதியில் தூதுவர்கள் இருப்பார்கள்". ஆக எல்லாருமே சிலுவைக்கு முக்கியத்துவம் கொடுத்தே விளக்கமளிக்கின்றனர். சிலுவை ஓர் அவமான சின்னம் என்று அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. மகாகொடியவர்களும் மாபாவிகளும் தொங்குகின்ற அந்த சிலுவையில்

தொங்கினதால் தானே இயேசு சபிக்கப்பட்டவரானார்! நாம் தொங்கிய நம் இயேசு கிறிஸ்துவுக்கே மரியாதை கொடுக்க வேண்டும். வீரபாண்டிய கட்ட பொம்மன் தூக்குக்கயிற்றில் தொங்கவிடப்பட்டதால் தியாகியானார். மகாத்மா காந்தி. இந்திரா காந்தி போன்றோர் துப்பாக்கியினால் இரத்தம் சிந்தினர். இரட்சிக்கப்படாத மனுஷன் கூட அந்த தலைவர்களுக்கு மரியாதை கொடுக்கும் போது தூக்குக் கயிறுக்கோ, துப்பாக்கிக்கோ மரியாதை செலுத்துவதில்லை. அவைகளை மேடைகளில் வைப்பதும் இல்லை. அவர்கள் தங்கள் தலைவர்களை மதிக்கும் அளவுக்குக் கூட தேவாதி தேவனாம் நம் இயேசுவுக்கு நம்மவர்கள் மரியாதை தராமல் "சிலுவை ஓர் புனித சின்னம்..." என்று பாடுகிறார்கள். உயிரற்ற, உணர்வற்ற கேவலமான மரக்கட்டையை புனிதமாக்கவா இயேசு இரத்தம் சிந்தினார்? இயேசுவின் இரத்தம் ஆவி-ஆத்மா- சரீரமுடைய நம்மைத்தானே புனித மாக்கும்! இந்த பகுத்தறிவு இல்லாமல் 2ம் வருக்கைக்கான அடையளாம் கூட சிலுவைதான் என்று ஏன் தான் சொல்கிறார்களோ தெரியவில்லை. அம்மா மரியாள் இல்லாமல் இயேசு இல்லை என்று மரியாளுக்கு மகிமை தரும் ரோமன் கத்தோலிக்கரின் ஆவியும், சிலுவைக்கு மகத்துவமும் மரியாதையும் தரும் இவர்களின் ஆவியும் ஒன்றுதானே! சிந்தியுங்கள்.

சிலுவையிலே மரித்து உயிர்த்தெழப்போகும் இயேசுவிடம் வேதபாரகரும், பரிசேயரும், அடையாளத்தைக் கேட்டபோது அவர் சிலுவையைக்காட்டவில்லை. மத்.12:39-41 வாசியுங்கள். யோனா இரவும் பகலும் மீனின் வயிற்றில் 3 நாள் இருந்தது போல, மனுஷகுமாரனும் பூமியின் இருதயத்தில் இருப்பார் என்ற யோனாவின் அடையளாத்தையே கொடுத்தார்! அல்லேலூயா! அவருடைய மரணமும், உயிர்த்தெழுதலும் அவ்வளவு விலையேறப் பெற்றது. அதற்கு அடையாளம் தானே ஞானஸ்நானம் என்பது. மத்.16:1-4ஐ வாசியுங்கள். பரிசேயரும். சதுசேயரும் வானத்திலிருந்து ஓர் அடையாளத்தைக் கேட்டார்கள், வானத்திலிருந்து அடையாளம் கேட்டாலும், யோனா தீர்க்கதரிசியின் அடையாளம் தான் இயேசுவினால் கொடுக்கப்பட்ட தேயன்றி, சிலுவை அடையாளம் கொடுக்கப்படவில்லை. சிந்தியுங்கள்.

மத்.24:30 வானத்தில் மனுஷகுமாரனுடைய அடையாளம் காணப்படும் என்று உள்ளது. தேவன் ஏன் வானத்தில் அடையாளம் காட்ட வேண்டும்? எரே 10:20 வாசியுங்கள். வானத்தின் அடையாளங்களாலே புறஜாதிகள் கலங்குவார்களாம். புறஜாதியாரின் மனநிலை அப்படி! இயேசுவின் 2ம் வருகையின் போது பெரும்பலான உலகமக்கள் புறஜாதியார் தானே!.

எனவே அவர்களை கலங்கடிக்கும்படியாய்,. அந்த நியாயத்தீர்ப்பின் நாளான அந்த கொடியநாளன்று வானத்திலே அடையாளம் காட்டப்படும். கர்த்தருக்கு தோத்திரம்!. அந்த நாளில் நாம் இருக்கப்போவதில்லை, ஆமென்! இப்படிப்பட்ட புறஜாதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஆபிரகாமுக்குக்கூட அவனின் சந்ததி எப்படி இருககும் என்பதைக் காட்ட "வானத்தை அண்ணாந்துபார்; நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு.... உன் சந்ததி இவ்வண்ணமாயிருக்கும்" (ஆதி.15:5) என்று கூறி அவனைப் பிரமிக்கப் பண்ணியதை நினைவு கூறுங்கள். பெரும்பாலும் புறஜாதி மனிதர்கள், காற்று, வான், மழை, நெருப்பு, (இடி, மின்னல்) பூமி போன்ற ஐம்பெரும் பூதங்களைக் கண்டு பயப்படுகின்றனர். இவைகளில் அனைத்துமே ஆகாயம் - வானம்- சம்பந்தப்பட்டவை. வானம் சம்பந்தப்பட்டவைகளை கண்டு கலங்கும் மனிதர்கள் இயேசு வரும்போது வானத்திலே அடையாளம் காணப்பட்டால் - அந்த அடையாளம் கலக்கமடையும் அடையாளமாயிருந்தால் மத்.24:30ல்சொன்னபடி பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும கண்டு புலம்புவார்கள் அல்லவா! அப்படி என்ன தான் அடையாளம் வானத்திலே உண்டாகும்? சிலுவை காணப்பட்டால் அதைக் கண்டு மனுஷன் கலங்குவானா? சிலுவையில் தொங்கிய இயேசுவையே ஏற்றுக் கொள்ளாமல் அசட்டை பண்ணியவனுக்கு சிலுவையைக் கண்டா பயம் வரும்? (இந்த சிலுவையைத்தான் இன்றுவரை காட்டிக் கொண்டிருக்கிறார்களே!)

யோவேல் 2:30, 31ஐ வாசியுங்கள். "வானத்திலும் பூமியிலும் இரத்தம், அக்கினி புகை ஸ்தம்பங்களாகிய அதிசயங்களைக் காட்டுவேன்; சூரியன் இருளாகவும், சந்திரன் அக்கினியாகவும்மாறும்." சுனாமியையும், சூறாவளிக்காற்றையும், நிலநடுக்கத்தையும் கண்டு தினந்தோறும் கலங்கிக் கொண்டிருக்கும் மனிதன். இதுவரை காணாத கேள்விப்படாத - இப்படிப்பட்ட அதிசயங்களை அடையாளங்களைக் காணும் போது எப்படியிருக்கும்? யோசியுங்கள். மட்டுமல்ல.. லூக் 21:11, 25, 26 போன்ற வசனங்களை வாசியுங்கள். "வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும். சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும். வானத்தின்சத்துவங்கள் அசைக்கப்படும். ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இதயம் சோர்ந்து போகும்." இப்போதே சூரியன் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்றும், சூரியனில் ஓட்டை விழுந்திருக்கிறது என்றும் வானத்திலே காணும்போது, மனிதன் என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று கலங்குகிறான் அல்லவா!

இந்தபயங்கரமான புதுமையான நிகழ்வுகள் மாத்திரமல்ல, மத்.24:31ல் சொல்லியபடி தேவதூதர்கள் வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடு வானத்திலிருந்து இறங்கி வருவதையும் மனிதர்கள் காண்பார்கள். இப்படிப்பட்ட அடையாயங்களை கண்டு உலகத்தார் கலங்குகின்ற - புலம்புகின்ற காலம் வரப் போகின்றது. ஆமென். இயேசு கிறிஸ்து மத்.16:2, 3ல் சொல்வதை வாசியுங்கள். உலக மனிதர்கள் வானத்திலே காணப்படும் அடையாளங்களை வைத்து, வரப்போகும் காரியத்தை நிதானிக்கத் தெரிந்தவர்கள் என்று சான்று கொடுக்கிறார். இயேசுகிறிஸ்து, யூதராஜா வாய்ப்பிறந்திருக்கிறார் என்று வானத்தில் காணப்பட்ட நட்சத்திர அடையாளத்தைக் கண்டு தானே சாஸ்திரிகள் அறிந்து வந்தார்கள் (மத்.2:1,2). அவர்கள் வந்தது நன்மையைத் தேடி! அந்த நட்சத்திரம் அன்றைக்குத் தான் படைக்கப்பட்டது அல்ல. தேவன் ஆதியிலேயே (Dataless past) எல்லாவற்றையும் படைத்து முடித்துவிட்டார். பூமியிலிருந்து எவ்வளவு தூரத்தில் அவைகள் உள்ளனவோ அதைப் பொறுத்துஅவைகளின் ஒளி வேகம் பூமியை நோக்கி வரும்; தினந்தோறும் விஞ்ஞானிகள் அப்படித் தோன்றும் நட்சத்திரங்களை காண்பர். இதை வைத்துத் தான் ஜோஷ்யர்கள் கூட நாள் நட்சத்திரம் கணிக்கிறார்கள். இப்படி அன்று காணப்பட்ட நட்சத்திரம் எப்படி அந்த ஞானிகளை மட்டும் கூட்டி வரும்? நமக்கு மேலே உள்ள சந்திரனைப் பார்த்தால், நம் ஒவ்வொருவருக்கும் நேராய் இருப்பது போல தெரியும்; நம் ஒவ்வொருவரோடு நகர்வது போலத் தோன்றும். ஆனால் அந்த நட்சத்திரமோ அவர்களுக்கு நேராய் மட்டும்தான் தென்பட்டது; மட்டுமல்ல... அந்தநட்சத்திரம் சரியாய் இயேசு இருந்த வீட்டின் நேரே நின்றதாமே! இன்றைக்கு நாம் காணும் சந்திரன், இரவிலே காண்கிற ஒவ்வொரு வீட்டுக்கும் மேலே நிற்பதாய்ப் பார்க்கிறோமே! அன்றோ வானத்தில் அப்படி அடையாளம் காணப்பட்டதே! அதிசயம் தோன்றியதே! கடைசி நாட்களில் காணப் போகும் அடையாளங்களோ வரப்போகும் மகாபயங்கரமான நியாயத் தீர்ப்புப்பற்றியது! அந்த நாள் மகா கொடிய நாள்! இந்த பூவிலுள்ளோர் யாவரும் நடுங்கும்நாள்! இந்த நாளில் இயேசு வானில் வருவதை பூமியிலுள்ள அனைவரும் ஒரே நேரத்தில் நேரடியாய்ப் பார்ப்பார்களாம். எப்படி? பூமி உருண்டையாயிருக்கிறது. வானத்திலுள்ள சூரியனையும் சந்திரனையும் கூட உலகிலுள்ள அனைவரும் ஒரேநேரத்தில் காண்பதில்லை. ஒரு பக்கம் பகல் என்றால் ஒரு பக்கம் இரவு. நிலைமை இப்படியிருக்க, வானிலிருந்து வரும் இயேசுவை எப்படி எல்லா மக்களும் காண முடியும்? நம் தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. வானத்தை அதற்கேற்றபடி தேவன் மாற்றி எல்லாரையும்

காணச் செய்ய முடியும். இதுவரை யாரும் காணாத, கேள்விப்படாத இந்த மாற்றங்களை தேவன் வானத்தில் செய்கிற காரியங்களைத்தான் இப்பூமி மக்கள் அதிசயமாய், அடையாளமாய் காண்பார்களோ தெரியவில்லை! (2 பேது.3:10-12ஐ தியானியுங்கள்)

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பிசாசின் வெளிப்பாடுகளையும், அடையாளங்களையும், அற்புதங்களையும், தீர்க்கதரிசனங்களையும் நம்பி, மயங்கிப் போகும் காலமிது (மத்.24:24) எச்சரிக்கையாயிரு! இது கடைசி காலம்! வேதமே உனக்கு வெளிச்சம்! வசனமே உனக்கு வழிகாட்டி! வெளுத்ததெல்லாம் பாலல்ல! ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப் பார்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்.

❖ ❖ ❖

## பரலோகிலுள்ளவைகள் நம்மோடு இணைந்து ஊழியமா?

எபே.1:9, கொலோ.1:20, போன்ற வசனங்களை எடுத்துக் கொண்டு, பரலோகத்திலுள்ள சாமுவேல், தாவீது, ஆபிரகாம் போன்ற பரிசுத்தவான்களும், தேவதூதர்களும் பூமியிலிருக்கிற நம்மோடு சேர்ந்து ஊழியம் செய்கிற காலமிது என்று பலர் தற்காலத்தில் போதிக்கிறார்கள். ஆவி-ஆத்மாவோடு, உள்ளான மனுஷனின் நிலையில் இருக்கும் (எபி.12:23) பரதீசிலுள்ள பரிசுத்தவான்கள் இளைப்பாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று நாமறிவோம் (தானி.12:13). இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது அவர்கள் மறுரூபமாகி பரலோகம் போவார்கள் என்றும் (1 தெச.4:16-18), அதன்பின் 7 ஆண்டுகள் கழித்து அதே மறுரூப நிலையிலேயே நம்மோடு இயேசுவோடு - ஒலிவமலையில் கால் வைத்து இந்த பூமிக்கு வருவார்கள் என்றும் வேதம் திட்டமும் தெளிவுமாய் சொல்லியிருக்கிறது (ஆசிரியரின் "வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்" என்ற நூலை வாசியுங்கள்). உண்மை இப்படியிருக்க, இந்தக் காலத்திலேயே வந்து நம்மோடு இணைந்து அவர்கள் ஊழியம் செய்வார்கள் என்பது சரிதானா? எபே.1:9; கொலோ 1:20 போன்ற வசனங்கள் சொல்வதுதான் என்ன? மட்டுமல்ல.. எபி.1:14 ன்படி, நமக்கு பணிவிடை ஆவிகளாயிருக்கும் தேவ தூதர்களோடு ராஜா வீட்டுப் பிள்ளைகள் சேர்ந்து ஊழியம் செய்யலாமா? அவைகளுக்கு ஊழியம் செய்ய அதிகாரம் எங்காவது கொடுக்கப்பட்டிருக்கிறதா? (மத்.28:18-20). ஆவியானவர் தாமே எல்லாவற்றுக்கும் விளக்கமளிப்பாராக!

கர்த்தர் பூர்வகால முதல் மறைக்கப்பட்டிருந்த இந்த இரகசியம் பவுலுக்கு தற்போது வெளிப்படுத்தியிருக்கிறார் (எபே.1:10). இதுபோல பல இரகசியங்களை புதிய ஏற்பாட்டு மக்களுக்கென்றே தேவன் வெளிப்படுத்தி யிருக்கிறார். அல்லேலூயா! (ஆசிரியரின், "வேதம் வெளிப்படுத்தும் இரகசியங்கள்" என்ற செய்தியை "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சி நூலிலும், ஆடியோ சிடியிலும் காணலாம்). இந்த இரகசியம் ஆதியிலிருந்தே தேவன் தீர்மானித்திருந்த இரகசியம். "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி" இது நடந்தேறும். வேதத்தின் படி மனிதனுடைய காலங்கள் 7 வகையாய் இந்த பூமியில் கணிக்கப்படுகின்றன. (1) அறியாமையின் காலம் (2) மனச்சாட்சியின் காலம் (3) சுய அரசாங்க காலம் (4) குடும்ப தலைமைத்துவ காலம் (5) நியாயப்பிரமாண காலம் (6) கிருபையின் காலம் (சபையின்காலம்) (7) 1000 வருட ஆட்சியின் காலமும் புதிய பூமியும். பவுல் வாழ்ந்த காலம் கிருபையின் காலம். பரலோகத்திலிருக் கிறவைகளும், பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக் குள்ளே கூட்டப்பட வேண்டுமென்கிற சித்தம், கிருபையின் காலத்தில் நடக்கவில்லை. கடந்த 2015 ஆண்டுகளிலும் நடக்கவில்லை. இப்படி நடக்க வேண்டும் என்ற நியமம், காலங்கள் நிறைவேறும் போதுதான் நடக்கும். ஆமென் (see கொலோ. 1:20). காலங்கள் எப்போது நிறைவேறும்?

"ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொருசமயமுண்டு" (பிரச.3:1). அப்படியேதான், "காலம் நிறைவேறின போது" இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்தார் என்று நாமறிவோம் (கலா.4:5). கிருபையின் - சபையின் காலத்தில் நடக்காத இந்தக் காரியம், நிச்சயமாய், ஏழாவது காலத்தில்தான் - அதாவது 1000 வருட ஆட்சியின் காலத்தில்தான் நடக்கும் என்று அறிகிறோம்.

1000 வருட அரசாட்சியில் என்ன நடக்கும் என்பதை முழுமையாய்ப் புரிந்து கொண்டால் தான் இந்த இரகசியம் விளங்கும். அப்போது தான் விழுந்துபோன தாவீதின் கூடாரம் கட்டப்படும் (அப்.15:7); தாவீதுக்கும் அவன் சந்ததிக்கும் கொடுப்பேன் என்று தேவன் சொன்ன ராஜ்யம் கொடுக்கப்படும். (2 சாமு. 7:8, 17; சக.12:8) ஆபிரகாமிடம் சொன்ன ராஜ்யம்தான் இது (ஆதி.15:18-21); இயேசு ஒலிவமலையிலிருந்து பரமேறும்போது இந்த ராஜ்யத்தைத்தான் சீஷர்கள் கேட்டார்கள் (அப்.1:6) இந்த ராஜ்யம், இன்றைக்கு பரலோகில் பரிந்து பேசிக் கொண்டிருக்கிற நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் தலைமையில் தான் இயங்கும். இஸரேலருக்கு - தாவீதின் கூடாரத்திற்கு - கொடுக்கப்பட்ட பூமியின் பரப்பளவு போக,

மீதமுள்ளவைகள், நமக்கு ஆளக் கொடுக்கப்படும். ஓசி.3:15; எரே 30:9; எசே.34:23, 24; 37:24, 15 போன்ற வசனங்களின்படி, தாவீது அரசாளுவார் என்று தெரிகிறது. மொத்தத்தில் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்றோர், இரகசிய வருகையில் மரிக்காமலே எடுத்துக் கொள்ளப்பட்ட அத்தனை பேரும் ஆளுவார்கள் (வெளி.20:4-6; 1 கொரி.15:51). இதிலே முதலாம் உயிர்த் தெழுதலில் பங்கு பெற்றோர்தான் பரலோகத்தில் - (பரதீசில்)- இருக்கிறவர்கள்; மரிக்காமலே எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள் தான் - கிறிஸ்தவ சபையாரும், 1,44,000 பேரும் - பூமியில் இருந்தவர்கள். இந்த இருதிறத்தாரையும் பூமியிலே கூட்டிச்சேர்க்கும் காலம்தான் 7ம் காலம்; 1000 வருட அரசாட்சியின் காலம்; தேவன் இரகசியமாய் வைத்திருந்து பவுலுக்கு வெளிப்படுத்தியது. இந்த இருதரத்தாரும் இணைந்ததுதான் தற்கால ஆவிக்குரிய பரலோக ராஜ்யம். இந்த ஆவிக்குரிய பரலோக ராஜ்யம் பற்றித்தான் இயேசு பல உவமைகளைச் சொல்லி இருக்கிறார் (மத்.13). இந்த ஆவிக்குரிய பரலோக ராஜ்யத்தார் பரலோகில் தேவனோடு இணைந்து, பூமிக்கு வந்து Actual பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்கப் போகிறார்கள. இது இயேசுகிறிஸ்து சிந்திய இரத்தத்தினால் உண்டான பலன் (கொலோ. 1:20). அல்லேலூயா! இந்த பரலோக ராஜ்யம்தான் வர வேண்டும் என்று இயேசு ஜெபம் பண்ண சீஷர்களுக்கு சொல்லிக் கொடுத்தார் (மத்.6:10).

இந்த காலக் கட்டத்தில், தேவதூதர்க்ள நமக்கு பணிவிடை ஆவிகளாகவேதான் செயல்படுவார்களே ஒழிய, நம்மோடு இணைந்து - நமக்கு சமமாய் - ஆளுகை பண்ண மாட்டார்கள். இந்த பூமியிலே ஆளுகை பண்ண அதிகாரம் நமக்கு மட்டுமே! (வெளி.5:10; 2:26; 11:15; ரோ.5:17; தானி.7:18).

இந்தக் காலம் சீக்கிரம் வரப்போகிறது. இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை முடிந்த உடனே அந்திகிறிஸ்துவின் 7 ஆண்டு அட்சி. அந்த ஆட்சி முடிந்தபின், ஒலிவமலையில் இயேசுவோடு, இருதிறத்தாரும் இறங்கி வந்து பூமியை ஆள்வார்கள்; பூமியிலுள்ள செம்மறியாடுகளும் (மத்.25:4), அவர் வரும்போது அவரைக் கண்டு இரட்சிக்கப்பட்ட யூதர்களும் (ரோ.11:26; வெளி. 1:7) இந்த ஆட்சியிலே மக்களாய் வாழ்வார்கள். ஆக, மறுரூப நிலையிலுள்ள பரலோக மக்கள், மனித நிலையிலுள்ள பூலோக மக்களை ஆளப் போவதும், இருதிறத்தாரையும் கூட்டிச் சேர்ப்பதான காரியம் என்றும் கூட எடுத்துக்கொள்ள வாய்ப்புண்டு. அல்லேலூயா! எப்படியோ இந்தக் காலம் மிகச் சமீபம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

# ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும் எதற்கு?

மத்.3:11; அப்.1:4 பேன்ற வசனங்களின் படி, ஆவியினாலும் அக்கினியினாலும் இயேசு கிறிஸ்து பெந்தெகொஸ்தே நாளில் 120 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார் அந்நிய பாஷை அடையாளத்தோடு. இந்த வாக்குத்தத்தம் அவர்களுக்கு மட்டுமல்ல; விசுவாசிகள் எல்லோருக்கும் உண்டு என்று பேதுரு கூறிய படி (அப்.2:39; கலா.3:14), ஆதி அப்போஸ்தல காலத்திலிலேயே விசுவாசிகள் பெற்றுக் கொணடனர் என்று வாசிக்கிறோம் (அப்.8:10,19). அது இன்றும் தொடர்வதை நாமறிகிறோம். கி.பி.1905 முதல் இது பெருகி வருவதை கண்கூடாய்க் காணலாம். அப்.2:38ன் படி, பரிசுத்த ஆவியைப் பெறுவதே ஒரு வரம் என்று நாமறிகிறோம். தேவன் அழைத்த அழைப்பும், கிருபையாய் கொடுத்த வரங்களும் மாறதாதவைகள் (ரோ.11:29). நாமே வேண்டாமென்று உதறித் தள்ளிவிட்டுப் போனால்தான் ஒருவேளை மாறும். ம்ற்றப்படி, நாம் எந்தநிலையில் வாழ்ந்தாலும் அது மாறாது ஆமென். புதிய ஏற்பாட்டில், ஆவியின் ஞானஸ்நானம் - அபிஷேகம் - என்பது அந்நியபாஷை அடையாளத்தோடு தான் நடக்கின்றது. தேவனோடு விசுவாசி மிகவும் அதிகமாக - இணக்கமாக - ஜெபத்திலோ, பாடலிலோ, துதியிலோ எப்போதெல்லாம் இணைகின்றார்களோ, அப்போதெல்லாம் இந்த அடையாளமாகிய அந்நியபாஷை வெளிப்படுகிறது.

**இந்த அந்நியபாஷை அடையாளம் என்பது** (1) பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கு அடையாளமாய் இருக்கிறது (அப்.2,8,10,19). (2) தேவனோடு இரகசியம் பேசுவதாயிருக்கிறது (1 கொரி. 14:2). (3) பக்திவிருத்திக்கு ஏதுவாயிருக்கிறது (1 கொரி.14:4). (**இஃதல்லாமல், வரமாகிய அந்நியபாஷை** அவிசுவாசிகளுக்காக பயன்படுவது என்று “அந்நிய பாஷையா? அடையாளமா?” என்ற செய்தியில் ஆசிரியரின் “தெரிந்து கொள்ளுங்கள்” என்ற நூலில் வாசிக்கலாம்). இந்த ஆவியின் அபிஷேகம் பெருகப் பெருக, ஆவியானவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் (யோ.14:26); ஊழியம் செய்ய வரங்களை தருவார் (1 கொரி.12:11); ஆவியின் கனி, நீதியின் கனிகளில் வளரச் செய்வார்; இந்த சரீரம் தேவனுடைய ஆலயமாக மாறுகிறது (1 கொரி.6:19). ஆவியானவர், நமக்குள் இருக்கும் இந்த “அந்நியபாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெறும் அனுபவம்தான்” - IN US - நமக்குள்ளே அனுபவம். இது புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு மட்டுமே! அல்லேலூயா! நாம் விசேஷித்தவர்கள் (எபி.11:39,

40). அக்கினி ஞானஸ்நானம் - அபிஷேகம் என்பது... உலகிற்கு அப்பாற்பட்ட காரியங்களை (Super Natural things) செய்யவும், அதிசயங்களும் அடையாளங்களும் நடக்கவும் (Signs & Wonders) கொடுக்கப்படுகிறது. இந்த நேரத்தில் ஆவியானவர், தம் வல்லமையினால், மகிமையினால், அதிகாரங்களினால் நம்மேல் நிழலாடுவார்; நம்மை ஆட்கொள்வார்; நம்மை நிரப்புவார். இந்த அக்கினி அபிஷேகம் இயேசு பெற்றதால் தான் (அப்.10:38 - ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்). கடல்மேல் நடந்தார்; மரித்தோரை உயிர்ப்பித்தார்; தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார்; 5 அப்பம் 2 மீன் 5000 பேருக்கு கொடுத்தார்; லேகியோன் பிசாசுகளை விரட்டினார். ஆதி அப்போஸ்தலர்களும் இதை பெற்றிருந்தனர். மட்டுமல்ல.. பழைய ஏற்பாட்டிலும் இந்த அக்கினி அபிஷேகம் உண்டு. கன்னி மரியாள்மேல் (லூக்.1:35), சிமியோன்மேல் (லூக்.2:25), தாவீதின்மேல், 70 இஸ்ரேலர் மேல், சிம்சோன் மேல் செயல்பட்டதை நாமறிவோம். உலகமே கண்டிராத ஆச்சரியப்படத்தக்க காரியம் இந்த அக்கினி அபிஷேகத்தால் நடப்பதால், வசனங்கள் புறஜாதிகள் மத்தியில் உறுதிப்படும்; ஆத்ம ஆதாயம் பெருகும். அக்கினி அபிஷேகம் பெற (1) உபவாசமும் ஜெபமும தேவை (2) பரிசுத்த சாட்சி வாழ்க்கை தேவை (3) ஆவியின் கனி நீதியின் கனி தேவை. (4) வசனத் தெளிவு தேவை (5) தேவ ஞானம் - தேவ பிரசன்னம் தேவை.

ஆவியின் அபிஷேகத்தால், ஆவியானவர் தம்சித்தப்படி, பகிர்ந்தளிக்கும் வரம் என்பது (1 கொரி.12:11) இயற்கைக்கு உட்பட்டது; அது கிருபையால் கிடைப்பது. அனால் அக்கினி அபிஷேகத்தால் நடப்பது என்பது இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களாகும்; இது தகுதியில்லாதவர்களுக்கு கிடைப்பது இல்லை. இந்தக் காலம் கடைசிகாலம்; ஆதி அப்போஸ்தல காலத்திலேயே, யோவேல் 2:28ன் வாக்குத்தத்தம் நிறைவேறி நடந்தது போல நடந்தாக வேண்டும். அக்கினி அபிஷேகம், அறிவு பெருகியிருக்கும் இந்நாட்களில் நடந்தால், அரசாங்கங்களும், உலக மக்களும், இயேசு பக்கம் திரும்புவார்கள். எலியாக்கள், எலிசாக்கள், மோசேக்கள், எழும்ப வேண்டிய காலமிது! அல்லேலூயா! இதுசிந்திக்கும் காலம்! செயல்படும் நேரம்! மௌனமாய் இருக்காதே! வசன தெளிவுபெற ஆவியானவருக்கு இடங்கொடு! வெறுமனே, "நிரப்புங்கப்பா.." "ஊற்றுமையா.." "வல்லமை தேவை தேவா" போன்ற பாடல்களைப் பாடியே நாட்களைத் கழிக்காதே! அக்கினி அபிஷேகத்திற்காய் காத்திரு! வெற்றி நமதே! ஆமென்!

❖ ❖ ❖

# அந்நியபாஷை எப்போது ஓய்ந்துபோம்?

அப்.2ம் அதிகாரத்தில், பெந்தெகொஸ்தே நாளில் 120 பேர் மேல் ஆவியானவர் அக்கினி நாவுகளாய் இறங்கி வந்து அமர்ந்தபோது. அந்நியபாஷை வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுக்குப் புரிந்தது. உள்ளூர் யூதர்களுக்குப் புரியவில்லை. அப்.8,10,19 போன்ற அதிகாரங்களில், அப்போஸ்தலர்களின் ஊழியப் பாதையிலே ஆவியானவர் சமாரியா விசுவாசிகள் மேலும், கொர்நேலியு வீட்டார் மேலும், எபேசு சபையார் மேலும் இறங்கியதைப் பார்க்கிறோம். அப்போதும் அந்நிய பாஷை பேசப்பட்டது; தீர்க்க தரிசனங்கள் சொல்லப்பட்டன. மேலும் 1 கொரி.14:2, 4,22 போன்ற வசனங்களை வைத்து தியானிக்கும் போது, அந்நிய பாஷையை, பரிசுத்த ஆவியைப் பெற்றதற்கான அடையாளமாகிய அந்நிய பாஷை என்றும், ஆத்ம ஆதாய ஊழியத்திறகென்று பேசப்படும் வரமாகிய அந்நியபாஷை என்றும் இருவகையில் பிரிக்கலாம் என்றும் அறிகிறோம். (ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் உள்ள "அந்நிய பாஷையா அடையாளமா?" என்ற செய்தியை தயவுசெய்து வாசியுங்கள்). 1 கொரி.13:8-10 வசனங்களை வைத்து, "தற்காலத்திலே அந்நியபாஷை கிடையாது, ஓய்ந்து போய் விட்டது என்றும், ஆதி அப்போஸ்தல காலத்திற்குரியது அது" என்றும் பலர் பலவாறாய் பேசுகிறார்கள். "சபையிலே ஆராதனை நடக்கும் போது பேசுவதும், பின் தேவ செய்தி கொடுக்கும்வரை இருந்து, பிறகு சபையிலேயே ஓய்ந்துபோகும்" என்றும் சிலர் போதிக்கிறார்கள். அப்படியானால், "இந்த அந்நியபாஷை ஒழிந்து போயிற்றா? இனி தான் ஒழியுமா? எப்போது ஒழியும்?" என்ற கருகலான காரியத்திற்கான மாறுத்தரம் ஆவியானவர் மூலம் கிடைக்கட்டும். ஆமென்!

1 கொரி.12,13,14 அதிகாரங்களை தியானித்தால், கொரிந்து பட்டணத்திலே இருவிதமான அந்நிய பாஷைகள் பேசப்பட்டன என்றும், அவைகள் முறையாக பேசப்பட வேண்டும் என்றும் பவுல் கூறுவதை அறியலாம். இன்றைய தேதியில் அறிவு பெருத்துப் போனதால். (தானி.12:4) உலக மெங்கும் ஏற்றுக்கொள்ளப்படும் ஆங்கிலம் என்ற அந்நிய பாஷை பெரும்பாலான மக்களுக்கு தெரியும் என்பதாலும், ஒருவர், தாய்மொழி தவிர இதர மொழிகளிலும் பரிட்சயப்பட்டிருப்பதாலும், அப்படி பல பாஷைகள் பெரும்பாலோர்க்கு புரியும் என்பதாலும், சுவிசேஷத்தை - சத்தியத்தை சொல்லி ஆத்ம ஆதாயம் செய்ய, வரமாகிய உலக அந்நிய பாஷைகள் தேவையில்லாத நிலையாகிவிட்டது. ஆனால் தேவனோடு இரகசியங்களைப் பேசவும், பக்திவிருத்தி உண்டாகவும் (1 கொரி. 14:2,4), அந்நிய பாஷை

அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்று இந்த சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்று உலகத்திற்கு வெளிக்காட்டவும் (1 கொரி.6:19), அடையாளமாகிய அந்நிய பாஷை கண்டிப்பாய் தேவைப்படுகிறது. 1 கொரி.13:8-10ன் படி, அந்நிய பாஷையானது எப்போது ஓய்ந்துபோம்?

இந்த வசனங்களை தியானித்தால், அன்பு ஒருக்காலும் ஒழியாது என்று திட்டமும் தெளிவுமாய் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், தீர்க்கதரிசனங்களும், அந்நிய பாஷைகளும் அறிவும் ஒழிந்துபோகும் என்று சொல்லப்பட்டுள்ளது. சிலர் சொல்லுகிறபடி, தீர்க்கதரிசனங்களோ, அந்நிய பாஷைகளோ ஒழிந்து போயிற்று என்றால், அறிவும் ஒழிந்து போயிருக்க வேண்டுமல்லவா? தற்காலத்தில் அறிவு பெருகிப் போயிருக்கிறதே! அப்படியானால் தீர்க்கதரிசனங்களும் அந்நிய பாஷைகளும் கூட ஒழியவில்லை என்றுதானே பொருள். நமது சபையின் காலத்தில், தீர்க்கதரிசனம் சபையாரை நல்வழிப்படுத்தி, வருகைக்கு தயார்படுத்த தேவை என்றும், வரமாகிய அந்நிய பாஷையானது இரட்சிக்கப்படாத புற ஜாதிகளை ஆதாயப்படுத்த தேவை என்றும், 1 கொரி.14:22ல் சொல்லப்பட்டிருப்பதால், சபை, பூமியில் இருக்கும்வரை இவைகள் ஒழிந்து ஓய்ந்து - போகாது என்று அறிகிறோம். "For we know in part, and we prophesy in part, but when that which is perfact is come., then that which is in part shall be done away" தற்போது அறிவு, தீர்க்கதரிசனம், அந்நியபாஷை எல்லாமே குறைவுள்ளதுதான். That is in quantity not in quality. (இது குறித்த விளக்கத்தை இந்த நூலில் உள்ள "புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் குறைவுள்ளதா?" என்ற செய்தியை படிக்கவும்). நிறைவானது வரும்போது, குறைவானது ஒழிந்து போகுமாம். சிலர் சொல்வது, நிறைவான இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவர் நம்மோடு வாசம் பண்ணும் போது இவைகள் ஒழிந்துபோகும் என்கின்றனர். அப்படியானால் இந்த தீர்க்கதரிசன வரமும், அந்நிய பாஷை வரமும், அறிவும், இரட்சிக்கப்படாதற்கு முன் தான் மனிதனிடம் செயல்படுமா? அல்லவே! இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்றவனுக்குத்தானே ஆவியானவர் இப்படிப்பட்ட வரங்களை தமது சித்தத்தின்படி பகிர்ந்தளிக்கிறார் (1 கொரி.12:1). எனவே நிறைவான இயேசுவை கண்ட பிறகுதான் இவைகள் வெளிப்படும் என்று அறிகிறோம்.

உண்மை அதுவானால், 1 கொரி.13:10ல் சொல்லப்பட்ட நிறைவானது எது? 1 கொரி.13:11, 12ஐ வாசித்தால் ஆவியானவர் வெளிப்படுத்துவார். ஆமென். இப்போது சபையாராகிய நாம் தேவனை, தேவனுடைய ராஜ்யத்தை, பரம எருசலேமை, மறுரூபமாகி மரணக்கூர் இடிபடுவதை, தேவ

சாயலாய் மாறப்போவதை, அவரோடுகூட நியாயந் தீர்க்கப்போவதை, ஆளப்போவதை (இன்னும் ஏராளமான காரியங்களை) கண்ணாடியிலே - வசனமென்னும் கண்ணாடியிலே - நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். ஒருநாள், இவைகளை முகமுகமாய் - முழுமையாய்ப் பார்ப்போம்; இப்போது நமக்கு குறைந்த அறிவு; குறைந்த தீர்க்கதரிசனம்; குறைந்த அந்நியபாஷை வரம். நிழலாட்டமாய்ப் பார்க்கிற அந்த காரியங்களை, நிஜமாய் நிறைவாய் பார்க்கும்போது, அல்லேலூயா! தீர்க்கதரிசன வரம் தேவையில்லை - அது ஒழிந்து போகும். அந்நிய பாஷை தேவையில்லை - அது ஒழிந்து போகும். (அங்கே ஒரே பாஷை. ஆமென்) நமது உலக அறிவு தேவையில்லை - அது ஒழிந்து போகும் (அங்கே நிறைவான தேவ அறிவு நம்மை ஆட்கொள்ளும்). **எப்போது இந்த நிஜம். நிறைவு வரும்?** 1 தெச.4:16-18; 1 கொரி.15:51-54ன் படியான இரகசிய வருகையிலே மத்திய ஆகாயத்திலே நிற்கும் இயேசுவோடு, சபையாராகிய நாம் எடுத்துக்கொள்ளப்பட்டு, யோ.14:2,3 ன் படி சொர்க்கத்தில் சேரும் போது தான் இந்த நிறைவு வரும். அல்லேலூயா! அதுவரை அந்நிய பாஷையோ, தீர்க்கதரிசனமோ, அறிவோ ஓயாது. ஆமென். ஆனால் 1 கொரி.13:1-7 வரை சொல்லப்பட்ட தெய்வீக அன்பானது (Divine Love) ஒருக்காலும் அழியாது; என்றென்றும் நிலைத்திருக்கும். தற்போது இந்த அன்பை நாடுங்கள்; ஞான வரங்களையும் விரும்புங்கள் (1 கொரி.13:13; 14:1) அந்நிய பாஷைகளைப் பேசுங்கள்; தடை பண்ணாதிருங்கள் (1 கொரி.14:5,39). இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## நித்திய சுவிசேஷமும் ராஜ்யத்தின் சுவிசேஷமும் ஒன்றா?

தேவபிள்ளையே! வெளி.14:6,7ல் "பின்பு வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன். அவன் பூமியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும், அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து, மிகுந்த சத்தமிட்டு; தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும், உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள் என்று கூறினான்" என்று

உள்ளது. இதுதான் ராஜ்யத்தின் சுவிசேஷம் என்றும், இதை தற்காலத்தில் தான் சொல்ல வேண்டும் என்றும் டி.விகளிலும், பிரசங்கங்களிலும் போதிப்பதை கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த நித்திய சுவிசேஷம்தான் ராஜ்யத்தின் சுவிசேஷமா? இதைச் சொல்லும் தருணம் தற்காலம்தானா என்பதையெல்லாம் ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

வெளி.4:1ஐ தியானித்தால், சபைகளுக்குப் பின்பு - சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு (1 தெச.4:16-18; 2 தெச.2:7,8) சம்பவிக்கப் போகிறவைகள்தான் வெளி.4 முதல் 19 வரை சொல்லப்பட்டிருக்கிறது என்றும், சபையின் காலத்தில் நடப்பவை ஒன்றுகூட இல்லை என்றும் விளங்கிக் கொள்ளலாம். அப்படியானால், வெளி.14:6,7 சபையின் காலத்தில் நடக்க வேண்டியவை என்று சொல்லி ஊரெல்லாம் - ஊடகங்கள் எல்லாம், கோயேபல்ஸ் போல சொல்லிக் கொண்டே, சிந்திக்க வேண்டிய விசுவாசி களின் மனக்கண்களை குருடாக்கலாமா? வெளி.14, அந்திகிறிஸ்துவின் காலத்தில் நடப்பவை அல்லவா! அப்போதுதானே மூன்று தூதர்கள் முத்தூது சொல்வதும், அதிலே ஒன்றான நித்திய சுவிசேஷம் சொல்வதும் நடக்கும். கி.பி.1844க்குப் பிறகு முத்தூது சொல்லப்படுகிறது என்று கள்ள உபதேசம் சொன்ன 7ம் நாள்காரர்களின் ஆவிபோல உள்ளது இது!

சுவிசேஷம் - நற்செய்தி - என்றால், தண்டனையைச் சொல்வதல்ல; தண்டனை இல்லாமல் இருப்பதற்கான way - வழியை சொல்வதாகும். 4 விதமான சுவிசேஷங்கள் வேதத்தில் தேவனால் அருளப்பட்டிருப்பதாய் பழைய முழக்கங்களிலும், ஆசிரியரின் ஆராய்ச்சி புத்தகங்களிலும் எழுதியிருக்கிறேன். (1) **நித்திய சுவிசேஷம்** (Eternal Gospel)- இது எப்போதும் சொல்வது. ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தப்படுவது. சிருஷ்டியில் ஆரம்பிக்கப்பட்ட வேதம் (ஆதி.1), புதிய வானம் புதிய பூமி உருவாவதில் முடிகிறதல்லவா! இதன் உட்பொருளை விளக்கிச் சொல்லும் நற்செய்தி தான் இந்த சுவிசேஷம்; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கின வரையே தொழுது கொள்ளச் சொல்வது தான் இந்த சுவிசேஷம். இதுதான் முதல் தூதனால், அந்தி கிறிஸ்துவின் காலத்தில், வெளி.14:6, 7ல் சொல்லப்படும சுவிசேஷம். (2) **இரட்சிப்பின் சுவிசேஷம்** - கிருபையின் சுவிசேஷம் - தேவனுடைய சுவிசேஷம், கிறிஸ்துவின் சுவிசேஷம் (எபே.1:13; ரோ.1:1; 2 கொரி. 10:14; அப்.20:24 - Gospel of Salvation, Gospel of Grace, Gospel of God, Gospel of Christ). இதுதான் நாம் சபைக்கு வெளியே நின்று அறிவித்து, சீஷராக்கி, ஆத்ம ஆதாயம் செய்யும் தற்கால சுவிசேஷம் (மத்.28:18,19;

1 பேது. 2:9). (3) **மகிமையின் சுவிசேஷம்** - சமாதானத்தின் சுவிசேஷம் (2 கொரி.4:4; 1 தீமோ.1:11 எபி.2:10; எபே.6:15- Gospel of Glory; Gospel of Peace). இது சபைக்குள்ளே இருக்கும் 5 விமான ஊழியத்திலே ஒன்றான சுவிசேஷ ஊழியத்தால், சபையாரை வசனத்தால் கட்டப்பட்டு, கறைதிரை அற்ற பூரண புருஷர்களாய் ஆசீர்வாதத்தோடு, மகிமையோடு பூமியில் வாழ்ந்து நித்திய ஜீவனைப் பெற வழிநடத்தும் சுவிசேஷமாகும். இந்தக் காரியத்திலேதான் சபைகளுக்குள்ளே மார்க்க பேதங்கள், ஆரோக்கியமில்லாத தவறான மற்றும் கள்ள உபதேசங்கள் பெருகி, இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட சபையாரை, சாத்தானிடம் நடத்தும் காரியங்கள் பெருகியிருக்கின்றன. (4) **ராஜ்யத்தின் சுவிசேஷம்** (Gospel of Kingdom). இது பரலோக ராஜ்யத்தின் சுவிசேஷம். நம் தேவனின் தலைமையில் இயங்கும் தேவனுடைய பரலோக ராஜ்யம் இந்த பூமியில் ஸ்தாபிக்கப்படுவது பற்றியதான நற்செய்தி. இது 1000 வருட அரசாட்சியில் தான் ஸ்தாபிக்கப்படும். இந்த சுவிசேஷம் பற்றி சற்று விரிவாய்ப் பார்க்கலாம்.

இஸ்ரேலர்கள் அன்றுமுதல் இன்று வரை தங்களுக்கு ஒரு ராஜ்யம் வேண்டுமென்று தாகமாய் இருக்கிறார்கள் (see அப்.1:6). அதைக் கொடுப்பதற்கும் அவர் தயாராய் இருப்பதால்தான், இஸ்ரேலருக்கு சொல்லிக் கொடுத்த ஜெபத்திலேயே, உம்முடைய ராஜ்யம் வருவதாக (மத்.6:10) என்று சொல்லிக் கொடுத்தார். இந்த ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக இயேசு இருப்பார் என்பதும், அவருக்கு Regent ஆக தாவீதின் தலைமையில் மற்ற இஸ்ரேல் தலைவர்கள் இருப்பார்கள் என்றும், இந்த ராஜ்யம் இஸ்ரேலருக்கென்று ஒதுக்கப்பட்ட எல்லையில் (ஆதி.15:18-20) நடக்குமென்றும் வேதம் திட்டமும் தெளிவுமாய் சொல்லியிருக்கிறது (லூக்.1:30-33; தானி.7:13, 14; ஓசி.3:5; எரே.34:23, 24; 37; 24, 25 ஏசா.24:33). இஸ்ரேலருக்கு ஒதுக்கப்பட்ட பூமி எல்லைபோக, மீதமுள்ள பகுதிதான் நமக்கு ஆளக் கொடுக்கப்படும். ஆக, ஆதிமுதல், அடிமைத்தனத்திலேயே தங்கள் பெரும்பாலான சரித்திரத்தைக் கழித்த இஸ்ரேலர்களுக்கான சுவிசேஷமே இந்த ராஜ்யத்தின் சுவிசேஷம். இதைத்தான் யோவான்ஸ்நானனும் இயேசுவும் சொல்ல ஆரம்பித்தார்கள் (மத்.3:1; 4:17). இஸ்ரேலர்கள் இவர்களை ஏற்றுக் கொள்ளாததால், அப்போதே ராஜ்யம் அவர்களுக்கு materialise ஆகாமல், புறஜாதியாராகிய நமக்கு ஆவிக்குரிய ரீதியில் கிடைத்தது (மத்.21:42; மத்.13). Actual பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்காமல், ஆவிக்குரிய பரலோக ராஜ்யத்தை உருவாக்கி, அதிலே கிறிஸ்தவ சபையையும், இஸ்ரேல் சபையையும் இணைத்து, பகிரங்க

வருகையிலே இருதிறத்தாரும் ஒரே மணவாட்டியாய் பூமிக்குவர காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அல்லேலூயா! ஆக, **இந்த ராஜ்யத்தின் சுவிசேஷம் இஸ்ரேலருக்கே பிரதானமானது என்று அறிகிறோம்.** நமக்கு அல்ல.

மத்.24:14ன் படி "ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோக மெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும்." என்ன முடிவு? உலகத்தின் முடிவு - அதாவது Cosmosன் முடிவு - உலக அரசாங்கத்தின் முடிவு வரும் (மத்.24:3). அது எப்போது? அர்மெகதோன் பள்ளத்தாக்கு யுத்தம் முடியும்போது. இந்த முடிவு வருவதற்காகவே ராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும். அதுவும் சாட்சியாகப் (witness) பிரசங்கிக்கப்படும்; அதுதான் அந்திகிறிஸ்துவின் காலத்தில்; வெளி.11ல் இதுதான் இரண்டு சாட்சிகளின் பிரசங்கமாகும் (மல்.4:5,6). அவர்கள்தான் பரலோக ராஜ்யம் வரப்போகிறது என்று சொல்லி, இஸ்ரேலர்கள் மத்தியிலே, $3^1/_2$ ஆண்டுகள் ஊழியம் செய்து, எருசலேமிலே அந்தி கிறிஸ்துவால் கொல்லப்படுவார்கள். உலகம் முழுவதும் அவர்களின் ஊழியத்தையும், இரத்தசாட்சி மரணத்தையும், அவர்களின் உயிர்த்தெழுதலையும் காணும், அந்தி கிறிஸ்துவின் நாட்களில் நடக்க வேண்டியதை சபையின் கிருபையின் காலத்திலேயே பிரசங்கிக்க ஆரம்பிப்பது, வசனத்திற்கு விரோதமான காரியமல்லவா!

சிருஷ்டிகரைத் தொழவேண்டும் என்கிற சுவிசேஷம் எல்லாக் காலத்திற்கும் தேவையானது என்றும், இரட்சிப்பின் சுவிசேஷமும், மகிமையின் சுவிசேஷமும் தற்கால கிருபையின் காலத்திற்கு உரியது என்றும், ராஜ்யத்தின் சுவிசேஷம் அந்திகிறிஸ்துவின் காலத்திற்குரியது என்றும் அறிகிறோம். உலகமே சிருஷ்டிகரைத் தொழவேண்டும் என்ற நித்திய சுவிசேஷத்தை அறிந்திருந்தும், "அந்த சிருஷ்டிகர் யார்? அவர் எப்படி நமக்கு இரட்சகராகிறார்" என்ற சுவிசேஷம் அறியாததினால், உலகம் முழுவதும் இரட்சிப்புக்குள் வராமலிருக்கிறது. உலகத்தாரை இரடசிப்புக்குள் கொண்டு வரும் பணியை விட்டுவிட்டு, உலகத்தாருக்கு உடனடியாக தேவையில்லாத இஸ்ரேலுக்கடுத்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கிப்பது அறிவீனம் அல்லவா! சாத்தானின் தந்திரமல்லவா ! சிந்தியுங்கள்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# யோசுவாவின் நாட்களில் 24 மணி நேரமா கூடியது?

எமோரியரின் ராஜாக்கள் ஐவர், கிபியோனிலே பாளயமிறங்கி இருக்கையில் யோசுவாவும் அவனோடிருந்த யுத்த வீரரும் போருக்குப் போனார்கள். கர்த்தரோ எதிரிகளை கலங்கப்பண்ணினார். அந்நாளிலே யோசுவா ஜெபித்து விட்டு, சூரியனையும் சந்திரனையும் நிற்க வைத்தான். ஒரு நாள் முழுவதும் வானத்தில் அவைகள் நின்றன என்று யோசு.10:12-14 (See in English) சொல்கின்றது. "இதுவெல்லாம் கட்டுக்கதை. எப்படி சூரியன் நிற்கும்? எப்படி சந்திரன் பகலில் காணப்படும்" என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிற காலக்கட்டத்தில் விஞ்ஞானம் என்ன சொல்கின்றது என்று பார்ப்போம். பாபிலோனிய பெர்சிய மெக்சிகோ, அஜ்டெக்ஸ்ஜாதி, சீன எகிப்திய மற்றும் தென் அமெரிக்க இன்காஸ் ஜாதி, ஆகியவற்றிலுள்ள பாரம்பரிய கதைகளிலும் இப்படியாய் பழங்காலத்தில் ஒரு முழு நாள் நீண்டது என்று கதை ஒன்று கூறுப்பட்டுள்ளது.

விஞ்ஞான உலகின் கணக்குப்படி சூரியன், சந்திரன், பூமி எல்லாமே Solar system. இதிலே பூமி தன்னைத்தான் சுற்றுவதால் இரவு பகல் கணக்கும், சூரியனைச் சுற்றுவதால் வருஷக்கணக்கும் வருகிறது. சந்திரன் பூமியை மட்டுமே சுற்றுகிறது. சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று அது பூமிக்குத் தருகிறது. சூரியக்கிரகம், மெர்குரி, வீனஸ் போன்ற மற்ற கிரகங்களைப்போல தனக்கு நியமிக்கப்பட்டிருக்கிற கோட்டில் சுற்றி வருகிறது. ஒவ்வொருகிரகங்களும் தங்களுக்குள்ளே உள்ள ஈர்ப்புச் சக்தியினால் தங்களின் வழியிலேயே செல்கின்றன. எல்லாவற்றிற்கும் தலையாய ஈர்ப்பு சக்தி ஒவ்வொரு சிஸ்டத்திலும் சூரியனிடமே உள்ளன. சூரியன் நின்றால் அதோடு கூடிய அத்தனை கிரகங்களின் பெயர்ச்சியும் (Movement) அல்லது ஓட்டமும் நின்றுபோகும். யோசுவா சூரியனை நில் என்று சொன்ன உடனே சூரியன் மட்டுமல்ல அதோடு கூடிய பூமியும் நின்றிருக்க வேண்டும். சந்திரனும் நிறுத்தப்பட்டது. பூமியும் சந்திரனும் நின்றதால் இரவு வந்திருக்காது. நாள் நீண்டிருக்க முடியும். பூமியை மாத்திரம் நிறுத்தியிருந்தால் இரவு வந்திருக்கலாம். Solar சிஸ்டத்தின் அடித்தள சூரியனையே யோசுவா நிறுத்தினான் என்றால் அவன் வான சாஸ்திரம் அறிந்திருக்கிறன்; அல்லது அதற்கேற்றபடி செயல்பட தேவன் ஞானத்தைக் கொடுத்திருக்கிறார் என்று பொருள். வான சாஸ்திரி ஆபிரகாமின் பரம்பரை அல்லவா யோசுவா! அல்லேலூயா!

இதைக் குறித்து வேத ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்தார்கள். கிபியோன் என்னப்பட்ட ஊர் மத்திய ரேகையிலிருந்து வடக்கே 32 டிகிரியில் உள்ளது. ஆயலோன் பள்ளத்தாக்கு கிபியோனிலிருந்து 17 டிகிரி வடமேற்கே உள்ளது. இதனால் சூரியனும் சந்திரனும் தென்பட்ட அந்த நேரம் சூரியன் அஸ்தமித்து சந்திரன் வெளிவரும் நேரம். சூரியன் அஸ்தமிக்காமல் இருக்க யோசுவா கட்டளையிட்டபடியே, சூரியன் அஸ்தமிக்க வில்லை. வான சாஸ்திர கணக்குப்படி, தேதியை கணக்கெடுக்கும் போது அந்த நாள் ஜுலை 22ம் தேதி என்று முடிவெடுத்தார்கள். கல்தேயர் சூரிய கிரகணங்களை வைத்து கணக்கெடுத்து அந்தநாள் செவ்வாய்கிழமை என்று கணக்கெடுத்தார்கள். பின்பு, தற்கால சூரிய கிரகணப்படி, கணக்குப் பார்த்தால் அந்த யுத்தநாள் புதன்கிழமை என்று வருகிறது. திருப்பித் திருப்பி கணக்குப் பார்த்தும் இதேவிடைதான் வந்தது. எனவே செவ்வாய்க் கிழமையையும், புதன் கிழமையையும் ஜுலை 22ம்தேதி என்று கருதப்படுகிறது. இப்படி யெல்லாம் கணக்குப் பார்த்த காலத்தில் கம்ப்யூட்டர் உருவாகவில்லை.

தற்காலத்தில் கோள்களை கிரகங்களுக்கு அனுப்ப கம்ப்யூட்டரைத் தான் பயன்படுத்துகின்றார்கள். அப்போது ஒரு குறிப்பிட்ட நாளில் கிரகங்கள் எந்தெந்த இடங்களில் இருந்திருக்கும் என்றும், பூமியின் சுழற்சியைப் பற்றியும் பல தகவல்களை சேகரித்துக் கொண்டிருக்கும் போது, ஒரு இடத்தில் வந்து கம்ப்யூட்டர் இயங்க மறுத்துவிட்டது. என்ன கோளாறு என்று விஞ்ஞானிகள் பார்க்கும்போது ஒருகால கட்டத்தில், ஒருநாள் விடுபட்டுப் போயிற்று என்று கண்டார்கள். இது எப்படி இருக்க முடியும் என்று குழம்பி இருக்கும் நிலையில் ஒரு வாலிபன், "யோசுவாவின் காலத்தில் ஒருநாள் சூரியன் நின்று போனதாக ஞாயிறு பள்ளியில் போதிக்கப்பட்டது" என்று சொன்னான். உடனே யோசு.10:12-14 வசனங்களின் தகவலின்படி கணிக்க ஆரம்பித்தனர். அந்த நாளில் "23 மணி 20 நிமிடம்" நின்று போயிருக்கிறது என்று கண்டார்கள். அப்படியானால் ஒருநாளுக்கு அதாவது 24 மணிக்கு இன்னம் 40 நிமிடம் தேவைப்படுகிறதே என்று யோசிக்கும் போது அந்த வாலிபன் ஏசா.38:7,8 ஐப் புரட்டிக் கொடுத்தான். அதுதான் எசேக்கியா ராஜாவுக்கு தேவன் கொடுத்த அடையாளம். அதாவது சூரிய கடிகாரத்தில் 10 பாகை என்றால் ஒரு டிகிரி நகர 4 நிமிடங்கள் ஆகும். ஆக, 40 நிமிடங்கள் பின்னிட்டுத் தள்ளினார் தேவன். இந்த 40 நிமிடமும் சேர்ந்தால் மொத்தம் "24 மணி நேரம்" காலம் சரித்திரத்தில் நின்று போயிருக்கிறது. இந்த இரண்டையும் கம்ப்யூட்டர் கண்டு சரியாக தன் கணக்கை செய்ய ஆரம்பித்ததாம்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வேதத்திலே சொல்லப்பட்ட எந்தக் காரியங்களும் விஞ்ஞான, சரித்திர, பூகோள ஆய்வுகளுக்கு இணைந்தே காணப்படுகின்றது என்றும், எதுவும் கட்டுக்கதைகள் அல்ல என்றும் அறிவோமாக! அவைகள் எல்லாமே உண்மையாய் நடந்த நிகழ்ச்சிகளே! அல்லேலூயா! கர்த்தருடைய வேதம் குறைவற்றது.

❖ ❖ ❖

## இயேசு அந்நிய பாஷை பேசினாரா?

தேவபிள்ளையே! இந்த கடைசி நாட்களில், "அந்நியபாஷை அடையாளத்தோடு பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொன்னால், "எபே.1:13ன் படி, இரட்சிக்கப்பட்ட போதே பரிசுத்த ஆவியைப் பெற்றுவிட்டேன்; 1 கொரி.13:8 - 10ன் படி அந்நிய பாஷை ஒழிந்து போய் விட்டது; பரிசுத்த ஆவியை இயேசு பெற்ற போது அந்நியபாஷை பேசினாரா?" என்று ஏராளமான கேள்விகள் கேட்கப்படுகின்றது. இவைகளுக்கெல்லாம், வேத ஆதாரத்தோடு, பழைய முழக்கங்களிலும், "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சி புத்தகத்திலும் விளக்கமாக எழுதியிருக்கிறேன். இன்றைக்கு, "இயேசு அந்நிய பாஷை பேசினாரா?" என்பதை ஆவியானவர்தாமே விளக்குவாராக.

இயேசு வாழ்ந்த காலம் பழைய ஏற்பாடு. புதிய ஏற்பாடு உருவானது இயேசுவின் இரத்தத்தால் - கல்வாரிச் சிலுவையிலே (மத்.26:28); பழைய ஏற்பாடு உருவானது காளையின் இரத்தத்தால் - சீன் வனாந்திரத்திலே (யாத்.24:1-8). பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் யோவான் ஸ்நானனால் கொண்டுவரப்பட்டது. அது "மனந்திரும்புதலுக்கென்று" கொடுக்கப்பட்டது. அதாவது "மேசியா வருவார்; அவரை விசுவாசிப்போம்; மனந்திரும்புவோம்" என்று அறிக்கையிட்டு, எடுக்கப்படும் ஞானஸ்நானமாகும் (see அப்.19:1-4). புதிய ஏற்பாட்டில், மனந்திரும்பி - நமக்காய் வந்து சிலுவையில் மரித்த மேசியாவை விசுவாசித்து - பாவ மன்னிப்புக்கென்று, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் கொடுக்கப்படும் ஞானஸ்நானமாகும் (அப்.2:38; மத்.28:18-20). மனந்திரும்புதலுக்கென்று ஞானஸ்நானம் கொடுத்த யோவான் ஸ்நானன் சொன்னதைப் பாருங்கள்: "மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார்; அவருடைய பாதரட்சைகளை சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த

ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" (மத்.3:11). இயேசு வாழ்ந்த $3^1/_2$ ஆண்டு ஊழியத்திலே, இயேசு தண்ணீர் ஞானஸ்நானம்கூட கொடுக்கவில்லை (யோ.4:3); அப்படியானால், ஆவியினால் ஞானஸ்நானமும், அக்கினியினால் ஞானஸ்நானமும் எப்போது கொடுத்தார்? யாருக்குக் கொடுத்தார்?

பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு, "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக் கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும்" என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்த படியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (யோ.7:37-39). ஆக, விசுவாசிகளுக்கு அதுவும் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு இயேசு வாழ்ந்த காலம் வரை பரிசுத்த ஆவி அருளப்படவில்லை என்றும், அவர் மகிமைப்பட்ட பிறகுதான் - அதாவது மரித்து உயிர்த்தெழுந்து பரலோகம் போய் பிரதான ஆசாரியராய் பிதாவின் வலது பக்கமிருந்து நமக்காக பரிந்து பேச ஆரம்பித்த பிறகுதான் - பரிசுத்த ஆவியானவர் பூமியிலுள்ள சபையாருக்கு அருளப்பட்டார் என்றும் அறிகிறோம். இதைத்தான் இயேசுகிறிஸ்து, "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்திற்கு வரார்; நான் போவேனேயாகில், அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்" (யோ.16:7) என்றார். இதைத்தான், ஒலிவமலையிலிருந்து பரலோகம் போகும்போது சீஷர்களிடம் சொன்னார்: "யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால், நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள்" (அப்.1:4, 5) இது எப்போது நிறைவேறியது? இயேசு பரலோகம் போய் 10 நாட்களுக்குப் பிற்பாடு வந்த பெந்தெகொஸ்தே நாளின்போது, ஆவியானவர் பூமிக்கு இறங்கினார் (அப்.2). அந்நியபாஷை அடையாளத்தோடு 120 பேர் பெற்றனர். 17 நாட்டு மக்களுக்கு அந்த பாஷை புரிந்தது. உள்ளூர் யூத ஜனங்களுக்கோ அந்த பாஷைகள் புரியவில்லை (அப்.2:11-13). பூமிக்கு வந்த ஆவியானவர் அதற்குப் பின்பு வாஞ்சையுள்ள ஒவ்வொருவருக்குள்ளும் வந்து தங்கினார் அந்நியபாஷை மற்றும் தீர்க்கதரிசன அடையாளத்தோடு

(அப்.10,19,8, பவுலிடம்). இன்றும் அது தொடர்கிறது; (லூக்.11:9-13). இயேசுவின் இரகசிய வருகைவரை இது தொடரும்.

பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறவேண்டும் என்ற வாக்குத்தத்தம் யோவேல் 2:28 - 32ல் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. அதுவும், கர்த்தரின் நியாயத்தீர்ப்பின் நாள் - பெரிதும் பயங்கரமுமானநாள் - வருமுன்னே உள்ள அந்திகிறிஸ்துவின் காலத்தில் இஸ்ரேலருக்கு ஆரம்பமாகும். அது 1000 வருட ஆட்சியிலும் தொடரும். அது கலா.3:14ன்படி, ஆவியைக் குறித்த வாக்குத்தத்தம், கிறிஸ்தவர்களுக்கு அப்.2ல் பலிக்க ஆரம்பித்தது (அப்.2:16); இந்த வாக்குத்தத்தம் அன்றோடே முடிந்து போகாமல், அப்.2:39ன்படி, நமக்கும், நம்முடைய பிள்ளைகளுக்கும் கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் இன்னும் இருக்கிறது. ஆமென். அல்லேலூயா! இஸ்ரவேலரின் ஆசீர்வாதங்களை எல்லாம் வாக்குத்தத்தம் என்று தவறாய் கணக்கிட்டு வாராவாரம், மாதாமாதம், வருஷாவருஷம் ஒவ்வொரு வாக்குத்தத்தங்களை அட்டைகள் போட்டு தொங்கவிடும் கிறிஸ்தவன், இந்த ஆவியின் ஞானஸ்நானத்தை மட்டும் ஏன் வாக்குத்தத்தம் என்று கண்டு கொள்ள மறுக்கிறான்? 2 கொரி.4:4ன்படி அவர்களின் மனக்கண்களை பிசாசானவன் குருடாக்கி விட்டானா? சிந்தியுங்கள்.

இயேசு சொன்ன "எப்பத்தா" "தலித்தாகூமி", "ஏலி ஏலி லாமா சபக்தானி" என்ற வார்த்தைகளைக் காட்டி இயேசு அந்நிய பாஷை பேசினார் என்கிறார்கள் சிலர். இவைகள் அவர் அறிந்த அரமாய்க் மொழி. எனவே இது அவர் அறியா அந்நிய பாஷை அல்ல. **ஆவியின் ஞானஸ்நான வாக்குத்தத்தம் புதிய ஏற்பாட்டு சபையாருக்கும், அந்தி கிறிஸ்துவின் கால இஸ்ரேலருக்கும் உரியது என்பதாலே இயேசு கிறிஸ்து, மகிமைப்படாத அந்த இயேசு கிறிஸ்து - பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த இயேசுகிறிஸ்து, அந்நிய பாஷை அடையாளத்தோடு ஆவியின் ஞானஸ்நானம் பெறும் வாக்குத் தத்தத்துக்கு உரியவரல்லர்.** எனவே அவர் அந்நியபாஷை பேசவில்லை என்பது உறுதி. ஆனால். ஆவியானவர், அவர்மேல்இறங்குவார் என்ற தீர்க்கதரிசனம் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது (ஏசா.61; யோ.1:33). அவருக்கு மாத்திரமே கொடுக்கப்பட்ட அந்த பிரத்யோக தீர்க்கதரிசனம் அவருக்குள்ளே நிறைவேறியது. அதானாலேதான் யோவான்ஸ்நானன் அவரை சாட்சியாய் அறிவிக்கிறான் (யோ.1:34). இது எப்படி நிறைவேறியது தெரியுமா? ஞானஸ்நானம் பெறும்போது அல்ல; இயேசுவும் மற்றவர்களைப் போல ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர் மேல் இறங்கினார் (லூக்.3:21, 22) இதை வாசிக்கும் தேவபிள்ளையே!

அவருக்குரிய தீர்க்கதரிசனம் அவருக்குள் நிறைவேறியது; உனக்கும் எனக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் - அந்நியபாஷை அடையாளத்தோடு ஆவியின் ஞானஸ்நானம் பெறும் அனுபவம் - அப்.2ம் அதிகாரம் முதல் நிறைவேறட்டும்! விட்டுக் கொடுங்கள்; பெற்றுக் கொள்ளுங்கள். நம்முடைய சரீரம் ஆவியானவர் தங்கும் ஆலயமாக மாறட்டும் (1 கொரி.6:19). ஒருவன் இந்த ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பாரே! ஆமென்! சரீரப்பிரகாரமான ஆசீர்வாதம் வந்து சேரட்டும்! இயேசு பரலோகம் போகும் போது சொன்னதை - புதிய ஏற்பாட்டு மக்களைப் பற்றி சொன்னதைப் பாருங்கள்:- "விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன.... நவமான பாஷைகளைப் பேசுவார்கள்" (மாற்.16:17) இது நமக்கு மட்டுமே!

"இயேசு பேசவில்லை; நானும் பேசமாட்டேன்" என்கிறவர்கள் உண்மை நிலையை உணர்ந்திருப்பீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். மேலும், **இன்னும் அப்படியாய் அடாவடியாய் பேசுகிறவர்களுக்கு என்னுடைய கேள்விகள்:** (1) இயேசு ஞாயிற்றுக்கிழமை கோயிலுக்குப் போகவில்லை; ஓய்வு நாளான சனிக்கிழமை தான் போனார். நீங்கள் ஏன் ஞாயிறன்று போகிறீர்கள்? (2) இயேசு திருமணம் முடித்தாரா? நீங்கள் ஏன் முடிக்கிறீர்கள்? (3) இயேசு இஸ்ரேல் நாட்டுக்குள்ளேயே ஊழியம் செய்தார். நீங்கள் ஏன் பல தேசங்களுக்குப் போகிறீர்கள்? (4) இயேசு அங்கி, ஜிப்பா போட்டிருந்தார். பேண்ட், சர்ட் போட்டிருந்தாரா? ஏன் போடுகிறீர்கள்? (5) இயேசு யோர்தானில் ஞானஸ்நானம் பெற்றார்; நீங்கள் ஏன் அப்படிப் பெறுவதில்லை? (6) இயேசு சிலுவையில் இரத்த சாட்சியாய் மரித்தார்; நீங்கள் ஏன் அப்படி மரிப்பதில்லை? இப்படி ஏராளமான - தேவையில்லாத - கேள்விகளை கேட்டுக்கொண்டே போகலாம்; நமக்கு வேதத்தில் கொடுக்கப்பட்டது என்ன? அதையே விசுவாசிப்போம்! அறிக்கையிடுவோம்! செயல்படுவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! சகல சத்தியத்திற்குள்ளும் நடத்தும் ஆவியானவரை அந்நிய பாஷை அடையாளத்தோடு பெற்றுக் கொண்டு ஆயத்தமாகு! மற்றவர்களையும் ஆயத்தமாக்கு!

❖ ❖ ❖

## விசுவாசமா? கிரியையா? எது தேவை?

### (புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாடும்)

பழைய ஏற்பாட்டிலும் அதே தேவன்தான்; புதிய ஏற்பாட்டிலும் அதே தேவன்தான். தேவனுடைய அடிப்படைக் கொள்கை - சத்தியம் - உபதேசம் - எல்லாமே அன்றும் இன்றும் அதேதான். தேவன் நேற்றும் இன்றும் என்றும்

மாறாதவராயிருக்கிறார் (எபி.13:8), தன் உள்ளத்திலே வைத்திருந்த ஒரே எண்ணம், "ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைய வேண்டும்" என்பதுதான் (யோ.3:16). இந்த தேவன். பழைய ஏற்பாட்டு மக்களுக்கு கிரியை தேவை; புதிய ஏற்பாட்டு மக்களுக்கு விசுவாசம் மட்டும் போதும் என்பாரா? கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று யாக்.2:20 சொல்லியிருக்க, கிரியை நமக்கு தேவையில்லையா? ஆனால், பவுலின் நிருபங்களைப் பார்த்தால், கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டுதான் எல்லாமே; கிரியைகளினால் ஒன்றுமில்லை என்று சொல்வதுபோல் தோன்றகிறது (see எபே.2:8,9). இதுகுறித்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே விளக்குவாராக!

இது குறித்து பழைய முழக்கங்களில் எழுதியிருக்கிறேன். இன்னும் அதிகமாய் இதைப் பார்ப்போம். ஆதிமுதல் தேவன் விரும்புவது விசுவாசமே; அதுவும் வசன விசுவாசமே. விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபி.12:6). ஆதாம் ஏவாள் விசுவாசிக்கவில்லை; சாபமும் தண்டனையும் மனுக்குலத்திற்கு வந்து சேர்ந்தது. ஆபிரகாம் விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. ஆபேல் விசுவாசத்தினாலே நீதிமானென்று சாட்சி பெற்றான் (எபி.11:4). எபி.11ஐ வாசித்தால் ஏனோக்கு. நோவா, தாவீது, சிம்சோன் என்று ஏராளமான விசுவாசிகள் பட்டியலைப் பார்க்கலாம். இவர்கள் எல்லாரும் விசுவாசத்திலே நற்சாட்சி பெற்றவர்கள் (எபி.11:39). விசுவாசத்திலே நற்சாட்சி பெறுவது எப்படி?

பவுலின் கருத்துப்படி, இரட்சிக்கப்பட. தேவனின் கூடாரத்துக்குள் வந்துசேர, பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவை விசுவாசம் மட்டுமே! விசுவாசித்தாலே நீதிமானாகிறான் ஆபிரகாம் போல (ரோ.3:23, 24; ஆதி.15:6). ஆதாமுக்கு மட்டும் இந்த இரட்சிப்பு என்பது விதிவிலக்கு; ஏனெனில் அவன் தேவனின் கூடாரத்துக்குள்ளேயே பிறந்தவன்; நன்மையை மட்டுமே அறிந்தவன்: தீமையை அறியாதவன்; பரிசுத்த வானாகவே தேவனால் உண்டாக்கப்பட்டவன் (லூக்.3:38). நாமெல்லாரும் ஆதாமின் பாவ ஜாதியில் பிறந்து, நன்மை தீமை அறியத்தக்கவர்களாகி (ஆதி.3:22). ஜலமாகிய வார்த்தையை ஆவியானவரின் ஒத்தாசையோடு இருதயமாகிய ஆவியிலே விசுவாசித்து இருதய விருத்தசேதனம் பண்ணப்பட்டிருக்கிறோம்; மறுபடியும் பிறந்திருக்கிறோம்; நீதிமானாக்கப் பட்டவர்களாயிருக்கிறோம் (1 பேது.1:23; யோ.3:5; 1 கொரி.6:11; யாக்.1:8). இந்த நிலை, நியாயப்பிரமாணம் சீனாய்மலையில் கொடுக்கப்படும் முன்னும்

இருந்தது; நியாயப்பிரமாண காலத்திலும் இருந்தது; இன்றைய கிருபையின் காலத்திலும் இருக்கிறது. ஆமென். (உபா.10:16; 1 பேது. 3:15; எரே.4:4; 6:10; 9:26) இப்படியாய் விசுவாசத்தினால், தேவனுடைய பிள்ளையாய் மாறிய இரட்சிக்கப்பட்டவனுக்கு, அடுத்த காரியம் அன்றைக்கு என்ன? இன்றைக்கு என்ன?

நியாயப்பிரமாணத்திற்கு முற்பட்ட காலங்களில், தேவன் அவர்களோடு, அவர்களின் குடும்ப, கோத்திர தலைவர்களோடு, நேரிடையாய் பேசுவார். அதன்படியே அவர்கள் விசுவாசித்து செயல்பட ஆரம்பித்தார்கள். ஆக, அவர்கள் பெற்ற இரட்சிப்பில் அவர்கள் நிலைத்திருகக, அவர்களுக்கு கிடைத்த வசன விசுவாசத்தை கிரியைகளிலே காட்ட ஆரம்பித்தார்கள். **உதாரணத்திற்கு** யோசேப்பை எடுத்துக் கொள்ளுங்கள். போத்திபாரின் மனைவி தவறான காரியத்திற்கு அழைத்தபோது, "இது தேவனுக்கு விரோதமான பொல்லாத காரியம்" என்ற தேவனால் வாய்மொழியாய் கிடைக்கப்பட்ட வசனத்தை, கிரியையிலே காட்டி, இரட்சிப்பை - விசுவாசத்தைக் காத்துக் கொண்டான் (அதி.39:9). அல்லேலூயா! இந்த கிரியை இல்லாமல் வெறுமனே விசுவாசம் மட்டும் அவனிடமிருந்திருந்தால் அது வீண். அப்படியே, ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலியிட்டபோது, வசனவிசுவாசம் அவனுடைய கிரியைகளோடே முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டது (யாக்.2:21-26). இப்படியாய் முடிவு பரியந்தம் நாம் கொண்ட விசுவாசத்தில், பெற்ற இரட்சிப்பில் நிலைத்திருந்தால் தான். இறுதி இரட்சிப்பு, நித்திய ஜீவன் நமக்கு உண்டு (மத்.24:13). அல்லேலூயா!

அதேபோல நியாயப்பிரமாண காலத்திலும், விசுவாசமுள்ள - இரட்சிக்கப்பட்ட இருதய விருத்தசேதனமுள்ள தேவஜனம், தங்களுடைய நியாயப்பிரமாண விசுவாசத்தை (பலிமுறைகள், ஆசாரியத்துவம் etc) கிரியைகளினாலே காட்ட வேண்டும்: இப்படி சவுல் காட்டாததால் தானே சவுல் சாபத்துக்குள்ளானான்; (1 சாமு.13:13) ராஜ்யபாரம் எடுபட்டுப் போயிற்று; எபி.11ல் உள்ள விசுவாச வீரர்கள் பட்டியலில் அவன் அன்றைக்கு இல்லை. இஸ்ரேல் மக்களெல்லாம் பலிமுறைகள், உபவாசம், பண்டிகைகள், ஆராதனைகள் போன்றவற்றில் நிஜமாகிய மேசியாவை விசுவாசித்து அதற்கேற்ற கிரியைகளை அன்றைக்கு வெளிப்படுத்தவில்லை. இதனால் பெரும்பாலான மக்கள், கிரியையில்லாமல், கிருபையால் வசன விசுவாசத்தைக் கொண்டு பெற்ற இரட்சிப்பை, இழந்து போனார்கள்; பரம கானான் அவர்களுக்கு சொந்தமில்லாமற் போயிற்று. இப்படியாய் நியாயப்

பிரமாண விசுவாசத்தை கிரியையிலே காட்டியோர் பட்டியல்தான் எபி.11ல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பட்டியலில் பெரும்பாலோர் இல்லாமறபோனது, சிலர் சொல்வது போல் நியாயப்பிரமாணத்தால் அல்ல; நியாயப்பிரமாணம் ஆவிக்குரியது (ரோ.7:14). இஸ்ரேலர்களால் கைக்கொள்ள முடியாத நியாயப்பிரமாணத்தை தேவன் கொடுத்தார் என்று தேவன்மேல் பழிபோடுவோரும் தற்காலத்தில் உண்டு. நியாயப்பிரமாணத்தை முழுமையாய் மனிதனாய் வந்த இயேசு நிறைவேற்றிக் காட்டினாரே எப்படி? (மத்.5:17) மனிதனுக்கு, மாதிரியாய் தானே வாழ்ந்து காட்டினார்! அவர் எல்லாவற்றுக்கும் பிதாவை சார்ந்திருந்த படியால் அவரால் கிரியையிலே காட்ட முடிந்தது. இஸ்ரேலர்களோ ஆரம்பத்திலிருந்தே சுயத்தை அல்லவா சார்ந்திருந்தார்கள் (யாத்.19:5-8; 24:7). சுயத்தை சார்ந்தால் விசுவாசமும் மறைந்து போகும்; விசுவாசக் கிரியைகளும் வெளிப்படாது. ஆக நியாயப்பிரமாண காலத்திலும், நியாயப் பிரமாண விசுவாசக்கிரியை கண்டிப்பாய் தேவையானதாகும்.

இந்தக் கால சபையாருக்கும் விசுவாசிகளாகி இரட்சிக்கப்பட்டோருக்கும் வசன விசுவாசக் கிரியை தேவை. எந்த வசனம்? எபே.2:14, 15; கொலோ.2:14-17 போன்ற பல வசனங்களின்படி நியாயப் பிரமாணம் நம்மை ஆள்வதில்லை: (ஆபிரகாமையும் அது ஆளவில்லை என்று முந்தி அறிக) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோ.10:4) நியாயப் பிரமாணத்திலே வாழ்ந்த இஸ்ரேலர்கூட, இயேசுவை ஏற்றுக் கொண்டபிறகு, நியாயப்பிரமாணத்திற்கு மரித்தவரானார்கள் (ரோ.7:4). அப்படியானால் தற்காலத்தில் எந்த வசனவிசுவாசக் கிரியைகள் நம்மில் வெளிப்பட வேண்டும்? மத்.28:20; ரோ.6:17; யூதா.17 போன்ற வசனங்களின் படி, இயேசுகிறிஸ்துவின் உபதேசத்தையும், அப்போஸ்தலர்களின் உபதேசத்தையும் விசுவாசித்து செயலில் காட்ட வேண்டும். இப்படிப்பட்ட விசுவாசகிரியை உடையவனே கிறிஸ்தவன்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! மேசியாவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும், ஆதிமுதல் இருதயத்திலே விசுவாசிக்கிறவன் இரட்சிக்கப்பட்டவன் என்றும், அதற்குப்பின் அவரவர்களின் காலங்களில் வெளிப்பட்ட வசனங்களை விசுவாசித்து கிரியையிலே காட்டவேண்டும் என்றும், இப்படிப்பட்ட கிரியை உள்ளவனே இம்மையிலே நூறாத்தனையான ஆசீர்வாதத்தையும் மறுமையிலே நித்திய ஜீவனையும் பெறுவான் என்றும் அறிகிறோம். அவரவர்களின் காலங்களில் வெளிப்படும் அனைத்து வசனங்களின் ஆதிமூலம், "இயேசுகிறிஸ்துதான் மேசியா" என்று முந்தி அறியவேண்டும். ஆக, பழைய ஏற்பாடாய் இருந்தாலும் சரி, புதிய ஏற்பாடாய்

இருந்தாலும் சரி, ஆரம்ப இரட்சிப்பு விசுவாசத்தால்தான்; இறுதி இரட்சிப்பும் அதே விசுவாசத்தை சார்ந்து வெளிப்பட்ட வசனவிசுவாசக் கிரியைகளால்தான். ஆமென். இதோ இயேசு சீக்கிரமாய் வருகிறார். அவனவனுடைய கிரியைகளின்படி அவனுக்கு அவர் அளிக்கும் பலன் அவரோடுகூட வருகிறது (வெளி.22:12). சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி.5:10). வசன விசுவாசக்கிரியை இல்லாதிருந்தால் உனக்கு வெளிப்பட்ட வசனமே பிரமாணமே - உன்னை நியாயந் தீர்க்கும் (யோ.12:48). ஆமென்.

❖ ❖ ❖

## நித்திய ஜீவன் இயேசுவில்தான் உண்டு என்பதற்கு சாட்சிகள் உண்டா?

இந்த உலக வாழ்க்கை நிரந்தரமானதல்ல; நித்திய - நிரந்தர ஜீவன் வாழ்க்கை இயேசுவில்தான் உண்டு. இயேசுவை விசுவாசிக்கிறவன் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்கிறான். இப்படி நாம் விசுவாசிப்பது, ஏனோதானோ என்று அல்ல; சாட்சிகளின் அடிப்படையில்தான். இதற்கான சாட்சிகள் பரலோகிலும் உண்டு பூலோகிலும் உண்டு என்று 1 யோ.5:6-11 தெரிவிக்கின்றது. இது குறித்து விரிவாய்ப் படிப்போம்.

**பரலோகிலே சாட்சி:** இந்த வசனம் தமிழில் அடைப்புக்குறிக்குள் இருப்பதால், மூலபைபிளில் இல்லை என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், ஆங்கில வேதாகமத்தில் அடைப்புக் குறிக்குள் இல்லையே! மூலபைபிளில் இல்லை என்றால், எப்படி அந்த வசனங்கள் நமது பைபிளில் பிரிண்ட் ஆகலாம் என்பது கேள்வி அல்லவா! மூலபைபிளில் இல்லை என்பதற்கு ஆதாரமில்லை. ஒருசில early MSS-ல் இல்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். கார்த்தேஜ் பிஷப் சிரியன் என்பவர் (கி.பி.250-258). தனது Ante-Nicene - Fathers என்ற நூலில் (Vol V page 418, 423). யோவானால் எழுதப்பட்ட வாசகம் தான் இது என்று கூறுகிறார்.அப்படியே, தாப்சஸ் உடைய விஜிலியஸ் என்பவரும் (5ம் நூற்றாண்டு) இந்த வசனங்களை குறிப்பிட்டுள்ளார். The Codex montfortil and the Vulgateல் இவைகள் உள்ளன. எனவே இந்த வசனங்களை ஆதாரமாய் எடுத்துக் கொள்வதில் தவறில்லை. ஆக, நித்திய ஜீவன் இயேசுவால்தான் உண்டு என்ற பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவியானவர் ஆகியோரின் வசனங்களே சாட்சியாகும் (See யோ.8:17,18; 15:26; 5:37 etc).

**பூலோகத்தில் சாட்சி:** ஆவி, ஜலம், இரத்தமாகும். இயேசு முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கும்போது ஆவியானவர் புறா வடிவில் இறங்கினார் (மத்.3:13-1); யோ.5:6 also) **ஜலம் மூன்று விதமாய் சாட்சியிடுகிறது:** (1) நமது தண்ணீர் ஞானஸ்நான, அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகீயவைகளைக் குறிக்கிறது. (2) ஜீவத்தண்ணீராகிய தேவனின் வார்த்தை. இயேசுவுக்கு சாட்சியாயிருக்கிறது (ஏசா.7:14; மத்.1:23; யோ.3:5). (3) குமாரன் மனிதனாய் வந்து சிலுவையில் மரித்தார் என்பதற்கு அவரை விலாவில் குத்திய போது வந்த தண்ணீரே சாட்சி (யோ.19:34). மட்டுமல்ல.. இயேசுவின் இரத்தம் அவர் குமாரன் என்றோ, மனிதனானார் என்றோ மட்டுமல்ல, பாவத்திலிருந்து விடுதலை உண்டு என்பதால் சாட்சியா யிருக்கிறது (மத்.26:28; அப்.20:28; எபே.1:14)

மேலே சொன்ன இரண்டு விதமான சாட்சிகளினாலே, இயேசுவால்தான் நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்று அறிகிறோம். மற்றப்படி, வேதமே தெரியாத - புரியாத மக்களுக்கு, இயேசு சொன்னபடியே பிறந்து, சொன்னபடியே மரித்து (தானே) மரணத்தை ஜெயித்தவர் என்பதால் அவர் தேவன் என்று உறுதியாக்கப்பட்டதால், (ரோ.1:5), இப்படி மரணத்தை ஜெயித்த சரித்திரப் புருஷர் இவரைத் தவிர யாரும் இல்லை என்பதால் இவரே தேவன். இவராலே தான் நித்திய ஜீவன் என்று ஆணித்தரமாய் விவரித்துச் சொல்லலாம்! ஆக, நமது நம்பிக்கை, கற்பனையிலோ கட்டுக் கதையிலோ உருவானது அல்ல என்றும், ஆணித்தரமான - அசைக்க முடியாத - சாட்சிகளால் உருவானது என்றும் அறிகிறோம். ஆமென்.

❖ ❖ ❖

## நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?

சீனாய் மலையில் மோசே மூலமாய், இஸ்ரேல் மக்களுக்கு, பத்துக் கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு, பழைய உடன்படிக்கை நிறைவேறியது. பழைய உடன்படிக்கையின் ஷரத்தே நியாயப் பிரமாணம்தான். அதிலே இஸ்ரேலர்கள் நிலை நிற்காததால் தான், புது உடன்படிக்கை இயேசுவின் மூலமாய் கல்வாரி சிலுவையிலே, அதே இஸ்ரேலருக்கு ஏற்கனவே தேவன் தீர்க்கதரிசனமாய் சொன்னபடியே நிறைவேறியது (எரே.31:33). மற்றப்படி முதலாம் உடன்படிக்கை பிழையல்ல; இஸ்ரேலர்கள் அதைப் பிழையாக்கினார்கள் (See எபி. 8:7-10). பழைய உடன்படிக்கையே பிழை என்றால், பிழையானதை நம் தேவன்

கொடுப்பாரா? சிந்தியுங்கள். இந்தப் பழைய உடன்படிக்கை - நியாயப் பிரமாண ஷரத்துள்ளது - ஏன் இஸ்ரேலருக்கு கொடுக்கப்பட்டது? ஆவியானவர் தாமே விளக்குவாராக!

**முதலில் தற்கால, உலகத்தில் பிரபல மாக்கப்பட்ட ஊழியர்கள் சொல்வதை ஆராய்வோம்:**

(1) **"முழு மனித இனமும் தேவனுடைய நீதியின் தரத்தை அடையவே முடியாது என்பதைக் காண்பிக்கத்தான் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது" என்கிறார்கள்.** இது முற்றிலும் தவறான கணிப்பு; மனுக்குலத்தை தேவன் படைத்ததன் நோக்கத்தை அறியாதவர்களின் கருத்து இது (மல்.2:15). தேவசித்தம் என்ன தெரியுமா? "நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவி.11:45; 19:2; 20:26). நம்மை பரிசுத்தவான்கள் என்றழைக்கும் தேவனின் எண்ணத்தைப் பாருங்கள் (சங்.30:4; 31:23 34:9; 116:15; 89:5; மத்.27:52). இயேசுவின் வாஞ்சை என்ன தெரியுமா? "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்" (மத்.5:48). தேவன் உன்னையும் என்னையும் முன்னறிந்ததே, அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கத்தான் என்ற ரோ.8:29 பொய்யாகுமா? சிந்தியுங்கள். நாம் தேவனைப் போலாக வேண்டும் என்பதே அவரது சித்தம்; சட்டம் (see 1 தெச. 5:23) ஆமென்.

(2) **"நியாயப்பரிமாணப்படி நடப்பதால் ஆசீர்வாதம் கிடைக்காது. அவருடைய நன்மையான குணத்தினாலேதான் கிடைக்கும் என்பதைக் காட்டவே நியாயப்பிரமாணத்தைத் தந்தார் என்று சிலர் சொல்கின்றனர்."** அப்படியானால் உபா. 28:1-15 போன்ற வசனங்களில் நியாயப் பிரமாணப்படி நடந்தால்தான் ஆசீர்வாதம் உண்டு என்று சொன்னது தவறா? உபா.11:2, 27; 30:15, 19 போன்ற வசனங்களில் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்கு முன் வைத்திருக்கிறேன்; சுதந்தரித்துக் கொள் என்று தேவன் இஸ்ரேலருக்கு கட்டளையிட்டது தவறா? சிந்தியுங்கள்.

(3) **"இஸ்ரேலர்கள் எல்லாம் பாவிகள் என்று காட்டத்தான் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது என்றும், பரிசுத்தமாக்க கொடுக்கப்படவில்லை" என்றும் சிலர் போதிக்கிறார்கள்.** இது தவறு. நியாயப் பிரமாணம் பரிசுத்தமுள்ளது; அது நீதியாயும் நன்மையாயும், ஆவிக்குரிய தாயும் இருக்கிறது (ரோ.7:12, 14). பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணம்தான் வெளிப்படுத்துகிறது (ரோ.17:7). உண்மை இப்படியிருக்க, இப்படிப்பட்ட நியாயப் பிரமாணம் பரிசுத்தமாக்காதா?

ரோ.3:20ஐ வைத்துக் கொண்டு, நியாயப்பிரமாணம் நீதிமானாக்காது என்று விளக்குகின்றனர். முதலில், பவுல், ரோமர் புஸ்தகத்தில், யாருக்கு எழுதுகிறான் என்று அறிய வேண்டும். பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாண மக்களுக்கு அல்ல; புதிய ஏற்பாட்டில் இயேசுவை விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட இஸ்ரேலிய கிறிஸ்தவர்களுக்கு எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டுக்குள் வந்தபின்னும் இயேசுவால் நிறைவேற்றப்பட்டு முடிந்துபோன நியாயப் பிரமாணத்தை மறுபடியும் கைக்கொண்டு நீதிமானாக்கப்படுவதில்லை என்றுதான் பவுல் எழுதுகிறான். (மத்.5:17,18; ரோ.10: கலா.4:21; ரோ.7:1-6). மற்றப்படி நியாயப்பிரமாண காலத்தில், நியாயப்பிரமாண கிரியைகளால் நீதிமானாகவில்லை என்று பவுல் எழுதவில்லை. அப்படியானால், எபி.11ல், சொல்லப்பட்ட விசுவாச வீரர்கள் - நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்ட மோசே, சிமியோன், தானியேல், தாவீது போன்றோர் நீதிமான்களில்லையா? அவர்களின் பலிமுறைகள், பண்டிகைகள், ஆசாரியத்துவம் எல்லாம் எதற்கு? சிந்தியுங்கள்.

(4) **“நியாயப்பிரமாணம் விசுவாசத்தை புறக்கணிக்கிறது; அது விசுவாசத்திற் குரியதல்ல” என்று கலா.3:12க்கு விளக்கம் கொடுத்து தவறாய் போதிப்போரும் உண்டு.** நித்திய ஜீவனைத் தரும் வேத வாக்கியங்களை - நியாயப்பிரமாணத்தை - ஆராய்ந்து பார்த்தால் என்னைக் குறித்த விசுவாசம் வரும் என்று இயேசு யோ.5:38, 39, 44, 46, 47ல் சொன்னதால், நியாயப் பிரமாணம் எப்படி விசுவாசத்தைப் புறக்கணிக்கும்? நியாயப்பிரமாணமே விசுவாசம் அல்ல. Law is not of faith. நியாயப் பிரமாணத்தை அறிந்து - ஆராய்ந்து செயல்படும்போது விசுவாசம் வருகிறது. அப்படிப்பட்ட விசுவாசம் உள்ளவர்கள்தான் எபி.11ல் உள்ளவர்கள். விசுவாசத்தோடு கூடிய நியாயப்பிரமாண செயல்கள் தான் முக்கியம் (கலா.3:17). ஆபகூக் 2:4ல் சொல்லப்பட்ட நீதிமான் யார்? நியாயப்பிரமாண நீதிமான்தானே! அதிலே சொல்லப்பட்ட விசுவாசம் எது? நியாயப் பிரமாண பலிமுறை, பண்டிகை, ஆசாரியத்துவம் போன்றவற்றால் அன்றும், இன்றும், என்றும் பிறக்கும் விசுவாசம் தானே! எபி.12:1ன் படியான தேவன், விசுவாசத்தைப் புறக்கணிக்கும் சட்டத்தைத் தருவாரா? சிந்தியுங்கள்.

(5) **“ரோ.5:20ஐ வைத்துக் கொண்டு மீறுதல் பெருகும்படிக்கு நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது” என்கின்றனர்.** அப்படியானால் பாவம் பெருக வேண்டும் என்று நினைத்து, அதற்காய் பிரமாணத்தைக் கொடுப்பவர் தேவனாயிருக்க முடியுமா? சிந்தியுங்கள். ரோ.5:13 ன்படி, நியாயப் பிரமாணம் கொடுக்கும் முன்னும் பாவம் இருந்தது; ஆனால் சட்டம் இல்லாததால் அது எண்ணப்படாமல் சைபர் ஆகவே இருந்தது. சட்டம் வந்த பின்பு ஒவ்வொன்றாக

எண்ணப்பட்டதால் பாவ எண்ணிக்கை பெருகியது. அவ்வளவு தான், மற்றப்படி, பாவம் பெருக வேண்டி சட்டம் கொடுக்கப்படவில்லை.

இன்னும் ஏராளமான காரியங்களை சொல்லிக்கொண்டே போகலாம். நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட உண்மையான நோக்கம்தான் என்ன?

யாத்.19:5,6 வசனங்களை வாசியுங்கள். இஸ்ரேலரை தேவன் தம் சொந்த சம்பத்தாகவும், ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் ஆக்கவும்தான், நியாயப் பிரமாணம் கொடுத்து பழைய உடன்படிக்கை பண்ணினார். அல்லேலூயா! இதை அவர்கள் விசுவாசித்து நிலை நிற்கவில்லை. எனவே புது உடன்படிக்கையை அவர்களுக்குத்தான் தந்தார்; நமக்கல்ல. அவர்கள் அதையும் ஏற்றுக் கொள்ளாததால் அது நமக்கு வந்தது. புது உடன்படிக்கையிலும் இதே காரியத்துக்காகத்தான் நம்மையும் தெரிந்து கொண்டார் (see 1 பேது.2:9). அல்லேலூயா! தேவன் நேற்றும் இன்றும் என்றும் ஒரே சித்தம், கொள்கை உடையவராயிருக்கிறார். அல்லேலூயா! அன்றும் இருதய விருத்தசேதனம் - மறுபிறப்பு- இரட்சிப்பு உண்டு. அன்றும் வரப்போகிற மேசியா பற்றிய விசுவாசம்; இன்றும் வந்த மேசியா பற்றிய விசுவாசம்; அன்றும் விசுவாசத்தோடு நியாயப் பிரமாணங்களை கைக்கொள்ள வேண்டும்; இன்றும் விசுவாசத்தோடு, இயேசுவின் உபதேசத்தையும், அப்போஸ்தலர்கள் உபதேசத்தையும் கைக்கொளள் வேண்டும்; அன்றும் இன்றும் என்றும் கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. (இது குறித்து "கருகலான சத்தியம்" செய்தியைப் படியுங்கள்). நியாயப்பிரமாணக் காரர்களுக்கு அன்றும், இன்றும், விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுவதற்கு, நியாயப் பிரமாணம் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாகும். கிறிஸ்து வந்த பின்பு உபாத்தி அவர்களை ஆளாது. ஆமென்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தைக் கொடுத்த தேவனின் சித்தத்தை அறிந்தோமானால், அதன் தாற்பரியத்தையும் நாம் அறிவோம். **வேதத்திலுள்ள 66 புத்தகங்களுக்கும் அடிப்படை நியாயப் பிரமாண சத்தியம் தான்.** உலக அரசாங்கச் சட்டங்களும் அப்படியேதான் உள்ளன. புதிய ஏற்பாட்டு மக்களாகிய நாம் அதிலும் மேன்மையான சட்டங்களை இயேசுவின் மூலமும் அப்போஸ்தலர்கள் மூலமும் பெற்று அதையே கைக்கொண்டு, நித்திய ஜீவனைப் பெற காத்திருக்கிறோம். அவனவனுடைய கிரியைகளுக்கேற்ற பலன் இயேசுவோடு வருகிறது (வெளி.22:12; 2 கொரி.5:10). அல்லேலூயா! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்த மாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

# இயேசு தன்னை தேவனென்று சொன்னாரா?

தேவபிள்ளையே! இது சர்வ சாதாரணமாய் எல்லாரும் கேட்கின்ற கேள்வி. அதிலும் விசேஷமாய் யோகோவா விட்னஸ்காரர்கள் மற்றும் முஸ்லீம்கள் கேட்கும் கேள்வி. இந்த கேள்விக்கு "இல்லை" என்று பதில் சொல்வோர்தான் ஏராளம். சிலர் "ஆம்" என்று பதில் சொன்னாலும், நேரடியாக அவர் தன்னை தேவனென்று சொல்லாமல் மறைமுகமாய் சொல்லியிருக்கிறார் என்கிறார்கள். இப்படிப் பதில்கள் வருவதாலே, யோகோவா சாட்சிகள் போன்ற கள்ள உபதேச சபையார், "இயேசு தெய்வமில்லை; அவர் சிருஷ்டிக்கப்பட்டவர்" என்றும், முஸ்லீம் சகோதரர்கள், "இயேசு ஒரு நபி" என்றும் சொல்கின்றனர். இப்படிப்பட்டவர்களின் மனக்கண்களை வேதவசனத்தின் மூலமே திறக்க முடியும். ஆவியானவர் தாமே, இந்த செய்தியின் மூலமாய், திறப்பாராக! ஆமென்! இவர்கள் எதிர்பார்ப்பதும் வேத ஆதாரம் தானே!

"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்," "நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிற தில்லையா?", "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம், என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான்" போன்ற பல வசனங்களை (யோ.14:9,10; 10:30; 12:45) இயேசு சீஷர்களிடமும், கிரேக்கர்களிடமும், இஸ்ரேலர் களிடமும் சொன்னார். பிதாவை தேவனென்று விசுவாசிக்கும் இஸ்ரேலர்; அவர்மேல் கல்லெறியும்படி, கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள் (யோ.14:31). "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்" (யோ.10:30) என்ற வார்த்தை லேவி. 26:13-16ன் படி தேவதூஷணமென்று அவர்கள் எண்ணினார்கள். இயேசுவும், "எந்த கிரியையினிமித்தம் என் மேல் கல்லெறிகிறீர்கள்?" என்று விளக்கம் கேட்டார். அவர்களோ, நீ மனுஷனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவ தூஷணம் சொல்லுகிறபடியால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்" (யோ.10:33). ஆக, இயேசு தன்னை தேவனென்று நேரிடையாகவே சொல்லியிருக்கிறார் என்று அறிகிறோம்.

மேலும், யோ.8:58ல், "Before Abraham was I am - ஆபிரகாம் உண்டாகிதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்று இயேசு சொன்னார். இப்படிச் சொன்ன உடனே, அவர்மேல் எறியும்படி இஸ்ரேலர் கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள். ஏன்? "நான் இருக்கிறேன் I am" என்ற வார்த்தை யாத். 3:14ல் மோசேயிடம் தேவன் சொன்ன யேகோவா என்னும் நாமமாகும் (see யாத்.6:2,3). இந்த நாமம் தனக்கும் உரியது என்று இயேசு அதை

சொந்தமாக்கிக் கொண்டு, தன்னை யோகோவா என்றே இயேசு சொன்னதால், அவர்கள் கல்லெறியத் தொடங்கினார்கள். மட்டுமல்ல... யோ.8:24, 28 போன்ற வசனங்களில், நானே அவர் என்று தமிழிலும், I am he என்று KJV லும் உள்ளது. கத்தோலிக்க பைபிளில், "நான் இருக்கிறேன்" என்று மொழி பெயர்க்கப்பட்டு, அதற்கு விளக்கமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. **"அதாவது நானே இருக்கிறேன் - நாமே இருப்பவர் என்று கடவுள் ஆதியில் மோயீசனுக்கு வெளிப்படுத்தினார். முழு நிறைவுடன், எக்குறைவுமின்றி இருப்பவர் கடவுள் (உபா.32:39; இசை.43:10 காண்). கடவுள் தமக்குரியதென வெளிப்படுத்தின பெயரை, இயேசு தமதாக்கிக் கொள்கிறர். ஆகவே, தாமும் உண்மைக் கடவுள் என்று கூறுகிறார்"** என்று விளக்கியிருக்கிறார்கள். இயேசு தன்னை தேவனென்று தேவனுடைய பெயரை வைத்தே சொல்லியதை கத்தோலிக்கர் நம்புகிறார்கள். ஆனால் ஆவிக்குரிய பல கிறிஸ்தவர்களுக்கு கூட இன்னும் விளங்கவில்லையே! அப்படிப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம்.

இன்னும் சில காரியங்களை சிந்தனைக்குச் சொல்கிறேன் வாசியுங்கள்; தியானியுங்கள்:

(1) பரிசேயர் மத்தியில் இயேசு பேசும் போது, "தாவீது, கிறிஸ்துவை ஆண்டவர் (Lord, ADONAI) என்று சொல்லியிருக்கிறானே" (மத்.22:41-46; சங்.110:1) என்று சங்கீத ஆதாரத்தோடு, தன்னை தேவனென்றே வெளிப்படுத்துகிறார். வேதமறிந்த பரிசேயர் மாறுத்தரம் சொல்ல முடியவில்லை.

(2) லூக்.18:19ல் "நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனுமில்லையே" என்றார் இயேசு. அப்படியானால், நல்லவராகிய இயேசு தன்னை தேவனென்று தானே அறிமுகப் படுத்துகிறார்! இயேசு ஒருவர் மாத்திரமே நல்லவர் என்பதற்கு, "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்? Which of you convinceth me sin?" என்கிறார். மட்டுமல்ல... நீதிபதி பிலாத்தாலும், காட்டிக் கொடுத்த யூதாசாலும், வெளியிலிருந்த நூற்றுக்கதிபதி யோசேப்பாலும் "பாவமில்லாத நல்லவர்" என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறாரே! அல்லேலூயா! (மனிதனாய் வந்த இயேசுவைத் தவிர மற் எல்லா மனுஷருக்கும் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்; சத்தியம் நமக்குள் இராது - 1 யோ.1:8).

(3) உயிர்த்தெழுந்த இயேசுவைப் பார்த்து, "என் ஆண்டவனே! என் தேவனே! - My Lord My God" என்றான் தோமா (யோ.20:28). இயேசு,

தேவன் இல்லை என்றால் இந்த மகிமையை ஏற்றுக் கொண்டிருப்பாரா? இங்கே தேவன் என்ற மகிமைக்கு உரியவர் என்று தன்னை வெளிக்காட்டுகிறார் இயேசு! தேவன் தன்னுடைய மகிமையை யாருக்கும் கொடுக்க மாட்டாரே! (ஏசா.42:8; 48:11).

(4) கெத்சமனே தோட்டத்தில், யாரைத் தேடி வந்தீர்கள்? என்று கேட்ட இயேசுவுக்கு, நசரேயனாகிய இயேசுவைத் தேடி வந்தோம் என்று வந்தவர்கள் சொன்னபோது, இயேசு சொன்ன பதிலென்ன? "நான்தான்" (யோ.18:5) I am. இது முட்செடியிலே மோசேயுடன் சொன்ன வார்த்தை. இந்த மகிமை - வல்லமை நிறைவார்த்தை வெளிப்பட்ட உடனே, அவர்கள் எல்லாரும் பின்னிட்டு தரையிலே விழுந்தார்கள் (யோ.18:6). அல்லேலூயா! ஆக, இயேசு என்பவர் தேவனே என்று அறிகிறோம். (ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" ஆராய்ச்சிப் புத்தகத்தில், "பிதா, இயேசு பரிசுத்த ஆவி" என்ற செய்தியை வாசியுங்கள்).

(5) யோசேப்பு மூலம் இயேசு என்று பெயரிட தேவதூதன் சொன்னான். Jesus என்பது, கிரேக்க வார்த்தை. எபிரேய வார்த்தை, "Jehoshua" என்பதாகும். இதன் பொருள்:- "Jehovah is salvation." ஆக, இயேசு என்ற பெயரிலேயே அவர் யேகோவா என்னும் இரட்சகர் என்று அறியமுடிகிறது. மேலும் ஏசா.7:14ல், இம்மானுவேல் என்று சொல்லப்பட்டது. இது எபிரேய பதத்திலே ஒரு பெயராக வராமல், குணாதிசயமாக (character) வருகிறது. அதாவது God with us - தேவன் நம்மோடு என்பதாகும். எனவே இதை அப்படியே பெயரிடாமல், இந்த குணாதிசயத்திற்கு ஒத்தபடி, தேவதூதன் சொன்ன இயேசு - Jesus என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. ஆக அவர் பெயரே அவரை தேவன் என்று பறைசாற்றுகிறது.

(6) இயேசுவை நீ தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா? என்று பிரதான ஆசாரியன் கேட்டபோது, "நீர் சொன்னபடிதான்" என்று பதில் சொன்னார் (மத்.26:63, 64) "கிறிஸ்து" என்பவர் தேவனே என்று இஸ்ரேலர் எல்லாருக்கம் தெரியும் ("பழைய ஏற்பாட்டு மக்களுக்கு கிறிஸ்துவை பற்றி தெரியுமா?" என்ற செய்தியை இதே நூலில் வாசியுங்கள்). தன்னை இயேசு, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று வெளிப்படையாக சொன்ன உடனே பிரதான ஆசாரியன், வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு, இவன் தேவதூணம் சொன்னான்" என்றான் (மத்.26:65). ஆக, லேவி.24;14 - 16ன் படி தன்னை தேவனென்றே வெளிப்படுத்தினார். தேவகுமாரன் என்பதன் அர்த்தம் இஸ்ரேலருக்கே புரிந்திருக்கிறது. அல்லேலூயா! (தேவ குமாரன் என்றால், தேவனின்

Nature & Glory உள்ளவர் என்று பொருள். தேவன் தன் மகிமையை யாருக்கும் கொடுக்க மாட்டார் என்ற ஏசா.42:8ஐ தியானியுங்கள் - இது குறித்த விளக்கமறிய ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் வாசியுங்கள்).

(7) "தம்மை தேவனுக்கு சமமாக்கின படியினாலே யூதர்கள் அவரைக் கொலை செய்யும்படி அதிகமாய் வகை தேடினார்கள்" என்று யோ.15:8 சொல்வதை தியானியுங்கள். ஆக, இயேசு தன்னை தேவனுக்கு சமமாக்கி தேவதூஷணம் சொன்னார் என்று இஸ்ரேல் மக்களுக்கு தெரிகிறது. நம்மவர்களுக்கு தெரியவில்லை.

(8) யோ. 13:13; மத். 21:3ல் தன்னை "Lord" தேவன் என்கிறார்.

(9) மத். 7:22ல் தன்னை "கர்த்தர்" என்கிறார்.

(10) மத். 12:6ல் தன்னை தேவாலயத்திலும் பெரியவர் என்கிறார்.

இன்னும் ஏராளம் எழுதிக் கொண்டே போகலாம். இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இயேசு தன்னை தேவனென்று வெளிப்படுத்திய காரியங்களை ஆவியானவரின் ஒத்தாசையோடு வாசித்து தியானியுங்கள்! தேவன்தாமே இன்னும் அதிகமாய் விளக்குவாராக! ஆமென்!

(குறிப்பு: இதுகுறித்து ஆசிரியரின் "இஸ்லாமியரின் கேள்விகள்" என்ற நூலில் வாசியுங்கள்).

❖ ❖ ❖

## குழந்தை பிறப்பது ஆசீர்வாதமா? பிறக்காதது சாபமா?

தேவன் தம்முடைய படைப்பை 6 நாளிலே முடித்து, 7ம் நாள் ஓய்ந்திருந்தார். அதன்பின் கடந்த 6015 ஆண்டுகளில் அவர் படைத்தது ஒன்றே ஒன்று. அதுதான் புதியமனுஷனாக சிருஷ்டிக்கப்பட்ட கிறிஸ்தவ சபை (எபே.2;14, 15) அப்படியானால், உலகிலுள்ள மக்களை சிருஷ்டித்தது யார்? மல்.2:15ன்படி ஒரே மனிதனைப் படைத்த ஆண்டவர், அவனிலிருந்து ஏவாளையும் உண்டாக்கி, "பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" (ஆதி.1:28) என்று அதிகாரம் கொடுத்ததினால், மனிதனே பிள்ளைகளை உருவாக்குகின்றான். ஆனாலும் ஒரு சிலருக்கு பிள்ளைகள் பிறக்கின்றன. ஒரு சிலருக்கு பிறப்பதே இல்லை. காரணம் என்ன? தேவன் அதிகாரம் கொடுத்தும் ஏன் அதைமனிதன் செயல்படுத்தி வெற்றி பெற முடியவில்லை?

தேவன் மனிதனுக்கு கொடுத்தது அதிகாரமா? ஆசீர்வாதமா? இந்தக் கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே விளக்குவாராக!

ஆசீர்வாதம் என்றால் conditional; நிபந்தனைக்குட்பட்டது. நீங்கள் இதைச் செய்தால், நான் இதைச் செய்வேன் என்று கண்டிஷன் போட்டு பெற்றுக் கொள்வதாகும். ஆசீர்வாதத்தை தேவனே நமக்கு முன்னே வைத்திருக்கிறார். அதை நாமே சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்று உபா.11:25-28; 30:15, 19 போன்ற வசனங்களில் தேவன் சொல்லியிருக்கிறார். ஆனால் "பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று தேவன் சொன்னது, எந்த நிபந்தனையும் இல்லாமல். எல்லா மனிதனுக்கும் - இரட்சிக்கப்பட்டவர்கள், இரட்சிக்கப்படாதவர்கள் போன்ற அனைவருக்கும் தேவன் கொடுத்த அதிகாரமாகும் (authority), இந்த அதிகாரம் எல்லாருக்கும் இருப்பதால் எல்லோருமே பிள்ளைகளைப் பெற முடியும். இப்படிப்பட்ட அதிகாரம் எல்லோருக்கும் சுதந்திரமாய் கொடுக்கப்பட்டிருப்பதால் தான், இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம் என்று சங்.127:4 சொல்கின்றது. **இது ஆசிர்வாதமாயிருந்தால், சுதந்திரமாய் - தானாய் - நிபந்தனை இல்லாமல் கிடைக்காது என்று முந்தி அறிக.**

அப்படியானால் ஏன் ஒரு சிலருக்கு குழந்தை பிறக்கிறது? ஒரு சிலருக்கு இல்லை? ஆணும் பெண்ணும் இணையும் போதுதான், ஆணிடமுள்ள உயிரணுவும். பெண்ணிடமுள்ள ஓவமும் இரண்டறக் கலந்து, குழந்தை உருவாகிறது. இந்த உயிரணுவும் (sperm), சினை முட்டையும் (ovum) போதுமான அளவு, போதுமான வேகத்தில், ஜீவனோடு இணைந்தால்தான் கருத்தரிக்கும். இந்த கருத்தரிப்பு என்பது, கற்பழிப்பிலும், மாம்சீக இச்சையிலும், தெய்வ பக்தி இல்லாத நிலையிலும், தேவ பிள்ளையாய் இருக்கும்போதும் நடக்கும். எனவே கருத்தரிப்பு என்பது தேவ ஆசீர்வாதமாக இருக்க முடியாது. உலகத்து சீதோஷ்ண நிலை, உணவு வகைகள், பரம்பரை நிலைகள், சரீரத் தன்மைகள் போன்றவற்றைப் பொறுத்துத் தான், உயிரணும், சினைமுட்டைகளும் உருவாகின்றன. இதை மருத்துவ விஞ்ஞானமும் ஒத்துக் கொள்கின்றது. லேயாள், மாதவிலக்கு நின்றுபோன பிறகும்கூட, தூதாயீம் கனிகளை சாப்பிட்டு, மேலும் இசக்கார், செபுலோன் என்ற இரு மகன்களையும், தீனாள் என்ற மகளையும் பெற்றாள் என்று நாமறிகிறோம் (ஆதி.30:14-20). இப்படித்தான் தற்காலத்திலே குழந்தை இல்லாதவர்கள், டாக்டரிடம் போய் மருந்து எடுக்கிறார்கள். அப்படி சிகிச்சை பெற்றும் குழந்தை இல்லாமல் போனவர்கள் பலருண்டே! தேவன் மனிதனுக்கு அதிகாரங்கள் கொடுத்தும் அதைப் பயன்படுத்தி வெற்றியை காண முடியாத நிலை வருகிறதே காரணமென்ன?

தேவன் காட்டுகிற வெற்றிக்கு எதிர்த்து நின்று முட்டுக்கட்டை போடுபவன் சாத்தான் என்று நாமறிவோம். அவன் அந்தகாரலோகாதிபதி; வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் தலைவன் (எபே.6:12). எனவே மனிதன் உபயோகிக்கும் ஐம்பெரும் பூதங்கள் மூலமாயும், மாசுபடுத்தி, இப்படிப்பட்ட தோல்வி நிலைக்குக் கொண்டு வருகின்றான். பக்தியுள்ள சந்ததி பெறவே தேவன் மனிதனைப் படைத்தார்; சாத்தானோ திருடவும், கொல்லவும், அழிக்கவும் காத்திருக்கிறான் (யோ.10:10). அப்படியானால் தேவன் கர்ப்பத்தை அடைப்பதில்லையா? இது கேள்வி. பிறப்பிக்க அதிகாரம் கொடுத்தவர் அடைப்பாரா? பிரசவிக்கப் பண்ணுகிறவராகிய தேவன் பிரசவத்தைத் தடுப்பாரா? (ஏசா.66:9); மலடாயிருந்த ரெபேக்காளுக்கும் எலிசபெத்துக்கும், அமலேக்கியனுக்கும் பிள்ளைகளைக் கொடுத்தவர் தடுப்பாரா? (ஆதி.25:21; லூக்.1:7,13). நன்மை செய்வதே அவருடைய செய்கையாயிருக்க, இப்படியான பொல்லாத காரியத்தை தேவன் செய்வாரா? (எபே.2;10; அப்.10:38). கர்ப்பம் விழுகிறதும் மலடும் மனிதன் தேடிக் கொள்ளும் சாபம் (யாத்.23;26); கர்ப்பம் விழாமல் குழந்தை பிறப்பதும், மலடு இல்லாமலிருப்பதும் மனிதன் தேடிக் கொள்ளும் ஆசீர்வாதம். இவைகளை தேவன் முன்னின்று செய்வதில்லை. இவைகளை தேவனே செய்தார்என்று யார் சொன்னாலும் அது தேவனைப் பற்றிய அறியாமையினாலே தான் (see ஆதி.30;2). ஆக, உயிரணுவும், சினை முட்டையும் இல்லாதிருப்பதும் - அதாவது மலடாய் இருப்பதும் - அவைகள் இருந்தும், போதுமானவைகளாய் இல்லாதிருப்பதும், பொல்லாத காரியம்; சாபக்காரியம்; பிசாசின் காரியம்; ஆசீர்வாதக்குறைவான காரியம். ஆமென். இவைகளுக்கு விடுதலை நமது இயேசு கிறிஸ்துவின் வார்த்தை மேல் உள்ள விசுவாசம்தான் (கலா.3;13).

**மலட்டுத்தன்மை இல்லாமல், எல்லாவற்றிலும் சரியாயிருக்கும் சிலருக்கு, எவ்வளவோ மருத்தவ சிகிச்சைக்குப் பின்னும் குழந்தை இல்லையே ஏன்?** நம் தேவனை அறிந்தவர்களாய் இருந்தால், சங்.127:1ஐ விசுவாசித்து அறிக்கையிட்டால், கர்த்தர் வீட்டைக் கட்டிவிடுவார்; குழந்தை பிறக்கும். அப்படி விசுவாசித்தும் தேவன் தந்த அதிகாரத்தை செயல்படுத்தியும், பலருககு குழந்தை இல்லையே ஏன்? **இங்குதான் ஒரு முக்கியமான காரியத்தை ஆவியானவரின் ஒத்தாசையோடு உணர வேண்டும்.** கிறிஸ்தவ குடும்பத்தில் பிறக்கும் குழந்தை எப்படி இருக்க வேண்டும் என்று தேவன் முன்னறிந்திருக்கிறார் (Fore knowledge); அதன்படி, அந்தக் குழந்தை தேவநாமத்தை, அதள பாதாளத்தில் தள்ளும் நிலைக்குப் போகிறவனாயிருந்தால், அல்லது அவன் சந்ததி மூலமாய் தெய்வீகமே

இல்லாத நிலை உருவாகும் என்றால், சாட்சிக்கேடாய் இருக்கும் என்றால், தேவனே தமது நன்மைக்கும்-வரும் மனித சந்ததியின் நன்மைக்கும் ஏதுவாய் பிறக்க விடாமல் செய்துவிடுவார்; குழந்தை இல்லை என்பதால் வருத்தப்படுபவன் உலகத்தான். தேவனுக்கடுத்தவைகளை சிந்திப்பவர் களுக்கு இதுபற்றி கவலையே இல்லை. குழந்தை பிறப்பதால் தேவனைச் சார்ந்து வாழும் மனிதனுக்கு ஏதும் பிரயோஜனமில்லை; தேவனுக்குத் தான் ஒரு சந்ததி அதிகமாகிறது. அவரே அந்த நஷ்டத்தை ஏற்றுக் கொள்ளும் போது, இது எப்படி நமக்கு ஆசீர்வாதம் குறைவாகும்? உலக ஆசீர்வாதத்திற் காகவோ.. ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்காகவோ குழந்தைகள் பிறப்பிக்கப் படுவதில்லை என்று முதலில் அறிய வேண்டும். **தாவீது பாடுகிறான்:** "உலக மக்கள் புத்திர பாக்கியத்தால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளைத் தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள். நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன். நான் விழிக்கும்போது உமது சாயலால் திருப்தியாவேன்" (சங்.17; 14,15). குழந்தை பிறப்பினால் அல்ல நம் திருப்தி; இயேசுவின் வருகையில் கிடைக்கும் தேவ சாயலின் வருகையில் கிடைக்கும் தேவ சாயலாலே தான் நம் திருப்தி. ஆமென். அதனால் தான் தேவன் சொன்னார்: "பிள்ளை பெறாத மலடியே, மகிழ்ந்து களிகூறு; கார்ப்ப வேதனைப்படாதவளே களிப்பாய் எழும்பி ஆர்ப்பரி; புருஷனுள்ளவளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரிக்கே அதிக பிள்ளைகளுண்டு" (கலா.4:27). மலடிக்கே இப்படி மகிழ்ச்சியை தேவன் தந்தால், மலட்டுத் தன்மையே இல்லாமல் நல்ல நிலையில் உள்ளவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி கிடைக்கும்! அல்லேலூயா!

ஆக, கர்த்தர் தந்த அதிகாரத்தை விசுவாசித்து, கர்த்தருக்கென்ற பக்தியுள்ள சந்ததி வேண்டுமென்று, கர்த்தர் நம்முடைய வீட்டைக் கட்ட விட்டுக்கொடுத்தால், அவர் தமது முன்றிவின்படி நமக்கு பலனளிப்பார். (Reward) எப்படி? கர்ப்பத்திலிருந்து கனியாகக் கொடுப்பார். இதைத் தான் சங்.127:4 சொல்கின்றது. மற்றப்படி, தேவன் மனிதனுக்குத் தந்த அதிகாரத்தை, தானே - சுயமாய் செயல்படுத்தும்போது, பிசாசை சார்ந்து, அறிந்தோ அறியாமலோ பிசாசு காட்டும் வழியில் செயல்படும்போது, காய்கள் பிறக்கின்றன. 1 யோ.3:12ஐ வாசித்தால், காயீன், பிசாசினால் உண்டானவன் என்றும், அவன் தேவன் அளித்த பலனாகிய கனியல்ல என்றும், அவன் காய் என்றும் அறியலாம். விசுவாச மார்க்கத்தின் தகப்பன் ஆபிரகாமுக்கு, சாராளின் சுயத்தால் - பிசாசின் உந்துதலால் - இஸ்மவேல் என்ற காய் பிறந்தது (ஆதி.16:2. (ஆபிரகாம் அப்போது தேவன் தந்த அதிகாரத்தைத்தான் பயன்படுத்தினான்). ஆனால் தேவனின் சித்தத்தால் - தேவன் அளித்த

பலனாகிய ஈசாக்கு, ஆபிரகாமுக்கு கனியானான். அப்படியே தேவமனுஷன் ஈசாக்கு, ஏசா என்ற காயையும், யாக்கோபு என்ற கனியையும் பெற்றான். (யாக்கோபு ஆரம்பத்தில் காய்போல தோன்றினாலும் அவன் கனியாவான் என்று முன்னறிந்தே நம் ஆண்டவர் அவனை கொடுத்தார்). தேவன் கொடுத்த கனிகள் ஒருநாளும் காயாகாது. பிசாசை சார்ந்து வந்த காய்கள் வேண்டுமானால், ஒருவேளை தேவனின் முன்னறிவால் தீர்மானத்தால் கனிகளாக வாய்ப்புண்டு.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உனக்கு கனி மட்டுமே பிறக்க வேண்டும்; காயாக காணப்பட்டால் கர்த்தரிடம் கேள். யாக்கோபைப் போல மாற வாய்ப்புண்டு. பாவியாகிய பார்வோன் மூலமாகவும் தேவன் தம் நாமத்தைப் பிரஸ்தாபப் படுத்தியது போல, இந்தக் காய்கள் மூலமாகவும் ஏதாவது நடக்கலாம் (யாத்.9:16; ரோ.9:17). யூதாஸ் என்னும் காயும், ஊழியத்துக்கு பிரயோஜனப்பட்டது அல்லவா! ஆனாலும் காய்களுக்கு பரலோகமில்லை. எனவே, குழந்தை பிறக்க வேண்டுமென்பது தேவ சித்தம்; அது கனியாயிருக்க வேண்டுமென்பதும் தேவ சித்தம். இந்த சித்தம் நிறைவேற பாடுபடுவோம்! மற்றப்படி, காயோ, கனியோ பெற்றுக் கொள்ள தேவ அதிகாரம் நமக்குண்டு. அதற்கு தடை செய்ய பிசாசும் உண்டு; காய்களைப் பெற வழிவகுக்க பிசாசு உண்டு; கனிகளைப் பெற, பலன்தர கர்த்தருண்டு. தடை செய்ய கர்த்தரில்லை. நீ யாரைச் சார்ந்திருக்கிறாய்? உன்னுடைய திருப்திபிள்ளை பெறுவதால் அல்ல; இது உலகத்தானின் விசுவாசம். உன்னுடைய திருப்தி தேவ சாயலாய் இயேசுவைக் காண்பதே! பிள்ளை பெற உள்ள தேவன் தந்த அதிகாரத்தை செயல்படுத்தும் போது தடை செய்யும் பிசாசை ஜெயிப்பதே ஆசீர்வாதம்! அல்லேலூயா! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## பாதாளத்திலுள்ள ஆவிகளுக்கு இயேசு பிரசங்கித்தாரா?

1 பேது.3:18-20; 4:6; மத்.13:24-30 போன்ற வசனங்களை வைத்துக் கொண்டு, நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மரித்தபின் பாதாளம் போய் அங்கே காவலிலுள்ள நோவா காலத்து ஆவிகளுக்குப் பிரசங்கித்ததால், "நோவா காலத்திற்கு முன்பு தேவநீதியைப் பிரசங்கித்தவர்கள் அதற்குரிய பலனை அடைந்தார்கள்" என்று பொதுவாக, பெரும்பாலான

பெந்தெகொஸ்தே வட்டாரத்தில் சர்வ சாதாரணமாக பிரசங்கிக்கப்படுகிறது. இதுகுறித்து பலமுறை முழக்கத்தில் எழுதியிருக்கிறேன். மறுபடியும் ஆவியானவரின் ஏவுதலால் இந்த கருகலான சத்தியத்தை மீண்டும் விளக்கமாய்ப் பார்ப்போம்.

மனிதன் ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாத்தீர்ப்படைவதும் எல்லா மனுஷருக்கும் நியிமிக்கப்பட்டிருக்கிறது (எபி.9:27). அவனவன் மனிதனாய் வாழ்ந்தபோது செய்த கிரியைகளுக்கேற்ற பலன், நியாயத்தீர்ப்பில் வருகிறது (வெளி.22:12; 2 கொரி.5:10). மரித்தபின், ஆதாம் முதல் யாருக்குமே இரட்சிப்பும் இல்லை; பாதாளத்திலுள்ளோருக்கு, கிரீடங்களே கொடுக்கப்படுவது மில்லை என்பதை உணர வேண்டும். மேலும், பெற்ற இரட்சிப்பில் நிலைத்திருப்போர் (மத்.24:13). மரித்தபின் பரதீசுக்கும் (சிலுவைக் கள்ளன் ஓர் உதாரணம்).மற்ற பாவிகள் பாதாளத்திற்கும் (ஐஸ்வர்யவான் ஓர் உதாரணம்) போவார்கள் என்பது வேதம் தரும் சத்தியம். இயேசுகூட, நமது பாவங்களை சுமந்து நமக்காக பாவமாக்கப்பட்டு (2 கொரி.521) பாவியாய்த் தொங்கி சிலுவையிலே மரித்ததால், அவர் பாவிகள் இருக்கும் பாதாளம் போனார்; பாதாளத்தில் பிசாசுகள் இருப்பதாகவோ, பாதாளத்திலுள்ள பாவிகள் காவலுக்குள் இருப்பதாகவோ, காவல் பண்ணுவது பிசாசுகளோ அல்லது தேவதூதர்களோ என்றெல்லாம் வேதம் எங்குமே சொல்லவில்லை. பாதாளத்தில் பரிசுத்தவான்கள் இல்லை என்றும், பரதீசில்தான் அவர்கள் ஆபிரகாமோடு லாசரு இருந்தது போல இருக்கிறார்கள என்றும் வேதம் வெளிப்படுத்துகிறது. வேதம்தரும் இந்த வெளிச்சத்தில், மேற்கண்ட வசனங்களை ஆராய்வோம். ஆமென்.

**1 பேது.4:6ஐ வாசியுங்கள்.** இங்கே சொல்லப்பட்ட மரித்தோர் என்பவர்கள், ஆவியிலே மரித்தவர்கள்; அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்கள் (எபே.2:1) இரட்சிக்கப்படாதவர்கள். இவர்களுக்கு மாம்சத்திலே ஆக்கினை இந்த பூமியிலே இருக்கிறதாம் (compare 1 தீமோ.5:24). இவர்கள் மாம்சத்தில் மரித்தவர்களானால், ஆவி, ஆத்மாவில்தான் பாதாளத்தில் வேதனை கிடைக்கும்; சரீரம், பாதாளம் போகாதல்லவா! சிந்தியுங்கள். இப்படி ஆவியிலே மரித்துப்போய் (எபே.2:13) இந்தபூமியிலே அல்லோலகல்லோப்பட்டுக் கொண்டிருக்கும், இரட்சிக்கப் படாதவர்களுக்குத்தான், சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது என்று இந்த வசனம் கூறுகிறதே ஒழிய, சரீரத்தில் மரித்துப் பாதாளத்திலிருக்கும் பாவிகளுக்கு அல்ல! (1 பேது.4:1 முதல் வாசியுங்கள்).

**மத்.13:24 வாசியுங்கள்.** ஆவிக்குரிய பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை (மத்.13:11) இயேசுகிறிஸ்து, பல உதாரணங்களுடன்

விளக்குகிறார். உண்மையான - actual - பரலோக ராஜ்யம் பூமிக்கு வரப்போகிறது என்றும் (மத்.6:10) இந்த பூமியிலே நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் தலைமையில் அது 1000 ஆண்டுகள் நடக்குமென்றும், அதன்பிறகு இந்த ராஜ்யம் பிதாவிடம் ஒப்படைக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யமாய் மாறுமென்றும் நாமறிவோம் (1கொரி.15:24). இது குறித்து ஆசிரியரின் இதே புத்தகத்திலுள்ள "பரலோக ராஜ்யமும் தேவனுடைய ராஜ்யமும், கிறிஸ்தவ சபையும் ஒன்றா?" என்ற செய்தியை வாசியுங்கள். இந்த பரலோக ராஜ்யம், இப்போது ஆவிக்குரிய ரீதியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த ராஜ்யத்தில் இணைய வேண்டும் என்றுதான் மத்.6:33 கூறுகின்றது. இந்த ராஜ்யத்தில், இயேசு கிறிஸ்துவாகிய கற்பாறையின்மேல் கட்டப்பட்ட (petra-மத்.16:18) கிறிஸ்தவ சபையும், இஸ்ரேல் சபையும் அங்கத்தினர்கள் என்று முந்தி அறிக. இந்த ஆவிக்குரிய ராஜ்யத்தில் சாத்தானால் விதைக்கப்பட்ட களைகளும், தேவனுடைய வார்த்தையாகிய விதையினால் முளைத்த நல்ல விசுவாசிகளும் இருப்பார்கள் என்றும், அப்படிப்பட்ட சாத்தான் பிள்ளைகள் அறுப்புக் காலத்தில்தான் சுட்டெரிக்கப்படுவார்கள் என்றும் சொல்லி, தற்கால சபைகளிலே உள்ள அங்கத்தினர்களின் நிலைமையை இயேசு விளக்குகிறார். மற்றப்படி, இது மரித்தபின் நடக்கின்றவைகளைக் குறித்து அல்ல என்பதை முதலில் அறியுங்கள். கிறிஸ்துவுக்கு நிழலாட்டமான பஸ்காவுக்கு அடுத்தபுளிப்பில்லாத அப்பப் பண்டிகையில், புளிப்பில்லாத - குற்றமில்லாத - பாவமில்லாத இயேசுவின் சரீரமாகிய அப்பம்தான் படைக்கப்படுகின்றது; ஆனால், பரிசுத்த ஆவியானவர் இறங்கி, கிறிஸ்தவ சபை ஸ்தாபனம் ஆனதற்கு நிழலாட்டமான பெந்தெகொஸ்தே பண்டிகையின் போது, புளிப்பில்லாத அப்பமும், புளிப்புள்ள அப்பமும் படைக்கப்படுகின்றது. இதன் தாற்பரியம் என்ன? இயேசுவால் உருவாக்கப்பட்ட சபையில் களைகளும் உண்டு; கோதுமை மணிகளும் உண்டு. இதை விளக்கத்தான் இயேசு இந்த வசனங்களைச் சொன்னாரே ஒழிய மற்றப்படி பாதாளத்தில் இருப்போரைப் பற்றி அல்ல. ஆமென்! அல்லேலூயா!

இப்போது தலைப்புக்கு வருவோம்! "அந்த ஆவியிலே அவர்போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்" என்று 1 பேது.3:19 சொல்கின்றது. ஏற்கனவே நாம் பார்த்தோம்:- மரித்த எந்த ஆவிகளும் காவலில் வைக்கப்படவில்லை என்று. அப்படியானால் இந்த ஆவிகள் - மனித ஆவிகள் - மனித ஆத்மாக்கள் - மனிதர்கள், மரிக்காமல் மாம்சத்தோடு பூமியிலே வாழ்பவர்கள் ஆவார்கள். இவர்கள் எப்படி காவலில் இருப்பார்கள்? இது கேள்வி. ஏசா.61:1-3 வசனங்களை வாசியுங்கள். இயேசு இதே

வசனத்தைத்தான் லூக்.4ல் வாசித்தார். அவர் பூமிக்கு வந்தபிரதான நோக்கமே, சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலையும் தருவதற்கே! பூமியில் யார் கட்டுண்டவர்கள்? யார் காவலில் இருப்பவர்கள்? யாருக்கு விடுதலை தர வேண்டும்? யோபுகூட பிசாசின் சிறையில் - காவலில் இருந்து விடுவிக்கப்பட்டான் என்று யோபு.42:10 சொல்கின்றது; இஸ்ரேல் மக்களே, வேத வசன அறிவில்லாமல் பிசாசின் சிறையில், காவலில் இருக்கிறார்கள் என்று ஏசா.5:13சொல்கின்றது. ஆக, தேவ வசன அறிவின்றி, தான்தோன்றித்தனமாய், துன்மார்க்கமாய் வாழ்கின்ற பாவிகள் எல்லாருமே பிசாசின் controllக்குள் - கட்டுப்பாட்டுக்குள் காவலில் இருப்பவர்கள் என்று அறிகிறோம்! அப்படியானால் 1 பேது.3:19ல் சொல்லப்பட்டவர்கள் யார்? 1 பேது. 3:20ஐ வாசியுங்கள். பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்த நோவாவின் controllக்குள் வராமல் (2 பேது.2:5), பிசாசின் பிடிக்குள் காவலுக்குள் வாழ்ந்தமனிதர்கள்தான் அவர்கள்; அந்த மனிதர்களின் ஆவியாகிய இருதயத்திற்குத்தான் வசனம் விதைக்கப்பட்டது. ஏதேன் தோட்டத்தில் விதைக்கப்பட்ட தேவனின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் (ஆதி.2:17) போன ஆதாம் - ஏவாளைப் போன்ற,. அக்கிரமத்திற்கு (கிரமம் X அக்கிரமம் - Lawlessness - வசனமில்லாத தன்மை) துணைபோன மனிதக் கூட்டங்கள் அவர்கள். இப்படிப் பட்ட பொல்லாத ஆவிக் கூட்ட மனிதர்களை பூமியில் உண்டாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; விசனப்பட்டார் (ஆதி.6:6) ஜலப்பிரளயத்தால் அவர்களை நிக்ரஹம் பண்ணினார் (ஆதி.6:7) அதிலே பாதுகாக்கப்பட்டவர்கள் நோவாவின் குடும்பத்தார் 8 பேர் மாத்திரமே! அதுவும் தேவன் ஏற்பாடு செய்த பேழையால் பாதுகாப்பு தண்ணீரிலிருந்து! ஆம்! தேவபிள்ளையே! தேவன் ஏற்பாடு செய்த பேழையாகிய இயேசுவால் - சிலுவை மரணத்தால் - இரத்தத்தால் அழிவினின்று, நரக அழிவினின்று நமக்குப் பாதுகாப்பு. அல்லேலூயா! இதற்கு ஒப்பனை யாகத்தான், கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானமாகிய, வசனமாகிய இயேசுவின் பேழைக்குள் வந்து, தண்ணீரினால் முழுக்கு ஞானஸ்நானம் எடுக்கிறோம்! ஆமென்! (கலா.3:27; யாக்.1:8; 1 பேது.1:23; 1 கொரி.6:11 யோ.3:5)

பூமியிலே வாழ்ந்த நோவாகால மக்களுக்கு, மரித்த இயேசு, கிட்டத்தட்ட 2500 ஆண்டுகளுக்குப்பின் பிறந்த இயேசு எப்படி போதிக்கமுடியும்? இது கேள்வி. மரித்த இயேசு பாதாளம்போய் போதித்தார் என்று வசனமே இல்லை; அப்படி பிரசங்கிப்பது வேதம் சொல்லாத கள்ள உபதேசம் என்று ஏற்கனவே பார்த்தோம். 1 பேது.3:18, 19ஐ வாசியுங்கள். இயேசு மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்.

**“ஆவியிலே” என்றால் ஒன்று:** பரிசுத்த ஆவியானவராலே - பரிசுத்த ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்; (ரோ.8:11) **இரண்டு:** ஆவி என்றால் வல்லமை, அதிகாரம் என்று பொருள். அதிகார வல்லமையோடு உயிர்ப்பிக்கப்பட்டார் (மல்.2:15ஐ தியானி; 2 ராஜா 2:9). **மூன்று:** மண்ணான சரீரத்தில் மரித்தவர், உயிர்த்து, ஆவியின் சரீரமாகவே மறுரூபமானார். அவர் உயிர்த்தெழுந்ததை ஒருவரும் பார்க்கவில்லை அல்லவா! அவர் உயிர்த்தபிறகு காட்சி தந்ததுதான் மனிதரூபம். இப்படிப்பட்ட ஆவியிலே, தான் உயிர்த்தபிறகுதான். (மரித்த உடனே அல்ல), பலர் பிரசங்கிக்கிறபடி, பாதாளத்திலுள்ளவர்களுக்கு இயேசு போதித்திருக்க வேண்டும். உயிர்த்தபிறகு அவர் பாதாளம் போகவில்லையே! அப்படியானால் 1 பேது.3:19ன் விளக்கமென்ன? மேலே சொன்ன ஆவியிலே என்பதற்கான மூன்றாவது காரியம் இந்த விஷயத்தில் ஏற்கப்படாது. மற்ற இரண்டின்படி, வல்லமை, மற்றும் அதிகாரத்தால், இயேசுவின் ஆவியிலே, பிசாசின் காவலில் இருந்த நோவா காலத்து மக்களுக்கு பிரசங்கம் பண்ணப்பட்டிருக்கிறது (see ரோ.8:9). இதை அறியுமுன்னே, வார்த்தையாகிய தேவன். ஆதிமுதல் மனுஷர்களிடம், தூதனாக, கர்த்தராக, யேகோவாவாக, சேனையதிபராக, அதிசயமானவராக, நித்திய பிதாவாக வெளிப்பட்டிருக்கிறார் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ஆதி.1:1 முதல் 2:3 வரை தேவன் - ஏலோஹிம் என்ற மூன்று ஆள்தத்துவமுள்ள ஒரே தேவன், “தேவன்” என்றே வெளிப்பட்டிருக்க, அதற்குப்பின் “தேவனாகிய கர்த்தர்” என்று ஒருமையில் வெளிப்படுவதைப் பாருங்கள். இவர்தான் வார்த்தையாகிய தேவன்; இயேசுவாகிய தேவன்; ஆவியாகிய வல்லமையோடு, அதிகாரத்தோடு செயல்பட்ட தேவன்.

இந்த தேவன், ஆதி.6:3ல், “கர்த்தர்: என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே; அவன் இருக்கப்போகிற நாட்கள் 120 வருஷம் என்றார்.” ஆக, அவர், எப்படிப்பட்ட எந்த ஆவியிலே, வல்லமையிலே, மரணத்தை ஜெயித்து உயிர்த்தாரோ, அதே வல்லமையிலேயே, நோவாகாலத்தில், பிசாசின் சிறைக்குள், கட்டுக்குள் - காவலுக்குள் இருக்கும் கீழ்ப்படியாமல்போன உயிரோடுள்ள மக்களுக்கு போதித்திருக்கிறார். ஆமென். நேரடியாக அல்ல... நோவா மூலமாய். அவர்களில் 8 பேர் மட்டுமே இரட்சிக்கப்பட்டனர். அப்படியே தற்காலத்திலும் அதே ஆவியிலே, அதிகாரவல்லமையிலே, பிசாசின் கட்டுக்குள் இருந்த நம்மோடு, நோவா போன்ற தேவ மனுஷர்கள் மூலமாய் பேசினார். நாம் கீழ்ப்படிந்தோம்; இரட்சிக்கப்பட்டோம்; ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம். அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! மரித்த யாருக்கும் என்றுமே போதிக்கப்படுவதில்லை என்றும், பாதாளத்தில் நீதிமான்களே இருப்பதில்லை என்றும், நீதிமான்களுக்கு, இரத்த சாட்சிகளுக்கு, கிரீடங்கள் இரகசிய வருகைக்குப் பின் பரலோகில் நடக்கும் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்தில்தான் கிடைக்கும் என்றும், இயேசு பாதாளம் போய் பிரசங்கிக்கவில்லை என்றும் முந்தி அறிய வேண்டும். இப்படி அறியாமல், தவறாய் பிரசங்கிப்பதால், மரித்த பாவிகளுக்கும் 1000 வருட அரசாட்சியில் இரட்சிப்பு உண்டு என்ற கள்ள உபதேசம் பெருகுகிறது. ஜாக்கிரதை! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## இயேசு மாம்ச சரீரத்தோடு பூமிக்கு வருவாரா?

தேவபிள்ளையே! "1 பேது.3:18ன் படி, இயேசு மாம்சத்தில் கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்; அவருடைய சரீரம் நமக்காய் பலியானதால் (எபி.3:11; 9:12; மத்.20:28) சரீரத்தில் உயிர்ப்பிக்கப்படவில்லை; எனவே அவர் ஆவிக்குரிய மேனியோடுதான் வெளிப்படுவார்; நம்முடைய கண்களை அவர் திறந்து அவரைக் காண வைப்பார் (அப்.7:55, 56; 2 ராஜா 6:17; அப்.1:3; 1 கொரி.5:5-8); அவர் பூமிக்கு வரமாட்டார். "வானத்தின் மேல் மேகங்களுடனே வருகிறார்" என்பதில் மேகம் என்பது பொதுவாக தேவபிரசனத்தையே வெளிப்படுத்துகிறது (எண்.14:4; மத்.17:2-6; 24:30; 1 தெச.4:16). அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும்போதும் மேகங்களின் நடுவில் தான் நியாயாதிபதியாய் காண்போம் (மத்.7:22, 23; 25:31-46). 1000 வருட ஆட்சியிலும் பரலோகிலிருந்து தான் ஆட்சி நடத்துவார் (தானி.2:33, 34)" **என்று ஒரு கூட்டம் இன்றைக்கு பகிரங்கமாய் பயங்கரமாய் போதித்து,** கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் நம்ப வைக்கிறார்கள. இவர்கள் சொல்வது வேதத்தின்படி சரிதானா? இந்த கருகலான காரியத்தை ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

**முதலில் பூமிக்கு வருவாரா என்று பார்ப்போம்:** "இயேசுவின் இரகசிய வருகை" என்ற செய்தியை ஆசிரியரின், "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் வாசியுங்கள். வருகையிலே இரண்டு பிரிவுகள் உள்ளன என்பது புரியாத வரைக்கும், இப்படி பல வசனங்களை எடுத்துக்கொண்டு குழப்பும் பணி உருவாகிக் கொண்டுதான் இருக்கும்.

(1) 1 கொரி.15:51; 1 தெச.4:16-18ல் பவுல் சொல்வது என்ன? மேகங்கள் மேல் வருவார்; பரிசுத்தவான்களோடு பரலோகம் செல்வார்; பூமியில்இறங்கார். பூமியில் உள்ள கைவிடப்பட்டவர்கள் யாரும் பார்ப்பதாக வசனம் ஏதுமில்லை. (இதை சபையை எடுத்துக் கொள்ளும் இரகசிய வருகை என்று சொல்கிறோம்)

(2) அப்.1:11; சக.14:4ன்படி, இயேசு இந்த பூமியிலுள்ள ஒலிவமலையில் பரிசுத்தவான்களாகிய நம்மோடு பூமியில் இறங்குவார்; ஒலிவமலை இரண்டாய்ப் பிளக்கும்; பூமியிலுள்ளோர் எல்லோரும் பார்த்துப் புலம்புவார்கள் (மத்.24:30; வெளி.1:7). பூமியிலுள்ள அர்மெகதோதன் பள்ளத்தாக்கிலே அந்திகிறிஸ்துவும், கள்ள தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே உயிரோடே தள்ளப்படுவார்கள் (வெிள.19:11-21; 16:15,16). இது மகா உபத்திரவ காலத்திற்குப் பின் நடப்பது (மத்.24:29); இப்போதுதான் இஸ்ரேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (ரோ.11:25-27; சக.12:10); உயிரோடிருககும் புறஜாதிகளை வெள்ளாடு, செம்மறியாடு என்று நியாயந்தீர்த்து, செம்மறியாடுகளை பூமியில் நடக்கும் 1000 வருட அரசாட்சிக்குள் அனுப்புவார் (மத்.25:34). இந்த பூமியில் கிறிஸ்துவுடனேகூட பரிசுத்தவான்களாகிய நாம் 1000 வருடம் பிசாசை கட்டி வைத்துவிட்டு, அரசாளுவோம் (வெளி.5:10; 20:4-5). அதன்பின் பிசாசை அவிழ்த்து விட்டதால் கோகேமாகே யுத்தம் உருவாகி, பூமியை அக்கினியால் அழிப்பார் (வெளி.20:7-9) அதன்பின் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, மரித்தவர்களை உயிர்த்தெழ வைத்து நடக்கும்; பின் புதிய வானம் புதிய பூமியில் பிதாவுக்கு ராஜ்யம் ஒப்படைக்கப்படும் (1 கொரி.15:24).

ஆக, அவர்கள் சொல்வதுபோல், சபையை எடுத்துக் கொள்ளும் இரகசிய வருகையில்தான் இயேசு பூமிக்கு வருவதில்லை. மற்றப்படி, பகிரங்க வருகையில் - அனைவரும் கண்டு புலம்பும் வருகையில் - இயேசு பூமிக்கு வருகிறார் என்று அறிகிறோம். இதுதான் 2ம் வருகை. இதுதான் எபி.9:27, 28ல் சொல்லப்பட்டது. முதல் வருகையில் பூமிக்கு வந்தவர், 2ம் வருகையிலும் சொன்னபடியே பூமிக்கு வருவார். வருகை என்றாலே பூமிக்கு வருவதுதானே! ஆமென்.

**இரண்டாவதாய் மாம்ச சரீரத்தோடு வருவாரா என்று பார்ப்போம்:** 1 கொரி.15ஐ வாசித்தால், உயிர்த்தெழும்போது, சரீரம்தான் உயிர்த்தெழும் (see மத்.27:52); ஆனால், அந்த சரீரம் இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்படும். இது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு மட்டுமே! மறுரூபமாக்கப்பட்டதைத்தான் ஆவிக்குரிய மேனி என்கிறோம். இப்படித்தான்

இயேசு உயிர்த்தார். இதைத்தான் ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார் என்று வேதம் சொல்கின்றது. இப்படி அவர் உயிர்த்ததை யாரும் பார்க்கவில்லை. இந்த ஆவிக்குரிய மேனியை நமது மாம்சக் கண்களால் காண முடியாது என்பதால், உயிர்த்த இயேசு தன்னைக் காட்ட, விவசாயியாய், வழிப்போக்கனாய், மனிதனாய் வந்த இயேசுபோல, 40 நாளளவும் காட்சி தந்தார். Outward appearance was manly figure but actually he was in spirit internally. (அவர் முற்றும் மனித நிலையுமல்ல; முற்றும் ஆவி நிலையுமல்ல என்பதை முதலில் உணரவேண்டும்) இந்த மனித தோற்றத்தோட தான் ஒலிவ மலையிலிருந்து, கிட்டத்தட்ட 500 மனிதர்கள் காணும்போது பரலோகத்திற்கு ஏறினார். அவர் ஆவிக்குரிய நிலையில் இருந்ததால்தான் அவரால் வானில் ஏற முடிந்தது. இதே மனித தோற்றத்தோடுதான் அவர் மறுபடியும் இதே ஒலிவ மலையில் கால் வைத்து இறங்குவார் என்று அப்.1:11ல் தேவ தூதர்கள் சொன்னார்கள். அதே மனித தோற்றத்தோடுதான் சக.14:4ல் பூமிக்கு வரப்போகிறார். பூமியிலுள்ள அனைவரும் கண்டு புலம்பப் போகிறார்கள் (மத்.24:30; வெளி.1:7). ஆமென். அவரைக் காண்பது தரிசனம்போல் அல்ல; actual தான். அதைக்காண நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்பட வேண்டியதில்லை. அவரே நம் கண்களுக்கு தேவையான தோற்றத்தைக் காட்டுகிறார்.

**இந்த மனித தோற்றத்தோடு ஏன் இருக்கிறார் என்பது ஒரு கேள்வி?** "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனை கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப்.17:31) என்ற வசனமே அதற்குப் பதிலாய் அமைந்திருக்கிறது (see 1 பேது.1:17; யோ.5:22). ரோ.5:16-19ஐ வாசித்தால் ஒரே மனிதனாம் ஆதாமல் பாவமும், தண்டனையும் உண்டானது என்றும், அதிலிருந்து விடுதலை கொடுக்கவே வார்த்தையாகிய தேவன் கிருபையாய் மனிதனாய் வந்து, நமக்காய் பலியானார் என்றும், அறிகிறோம். அந்த மனிதனாலே மனுஷர்களுக்கு நியாயத் தீர்ப்பு கொடுக்கவே அவர் மனித தோற்றத்தோடு இருக்கிறார் என்றும் விளங்கிக் கொள்கிறோம். அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! இயேசு மாம்ச சரீரத்தோடு பரலோகம் போகவில்லை என்றும், ஒருவரும் மாம்சக் கண்களால் காணக்கூடாத தன்னுடைய ஆவிக்குரிய மேனியை மட்டும் மனித தோற்றத்திற்கு - தன்னுடைய பழைய தோற்றத்திற்கு - மாற்றி, காட்சி தந்து,

பரலோகம் போனார் என்றும், அதே நிலையிலேதான் திரும்பி வருவார் என்றும் நாமறிகிறோம். மேலும் சபையைக் கூட்டிக்கொண்டு போகவரும்போதுதான் (யோ.14:1-3; 1 தெச.4:16-18) ஆகாயத்து மேகங்களிலேயே இருந்து பூமிக்கு வராமல், நம்மை மறுரூபமாக்கி அழைத்துச செல்வார் என்றும் அறிகிறோம். மற்றப்படி முதலாம் வருகைபோல 2ம் முறை வரும்போது (எபி.927, 28) கண்டிப்பாய் ஒலிவ மலையில் காலடிவைத்து, பரிசுத்தவான் களாகிய நம்மோடு இந்த பூமிக்கு வருவார் என்றும் அறிந்திருக்கிறோம். ஆவியானவர்தாமே நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துவாராக! (யோ.14:23) கள்ள உபதேசங்களைவிட்டு விலகுவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## எதை நிலைநிறுத்த எதை நீக்கிப் போட்டார்?

எபி.10:9 சொல்கின்றது: "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு, முதலாவதை நீக்கி போடுகிறார்." இதிலே முதலாவதான காரியம் என்ன? இரண்டாவதான காரியம் என்ன? "தேவனே" என்று வார்த்தையாகிய தேவன், பிதாவாகிய தேவனிடம் சொல்கிறார்: இது பரலோகில் நடந்த காரியம்; வார்த்தையானவர் மனிதனாய்ப் பிறக்கு முன்னே "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி"''' (வெளி.13:8) என்று முத்திரை பரலோகில் குத்தப்படும்போது நடந்த காரியம். எபி.10:4-10 வசனங்களையும் வாசியுங்கள்.

சங்.40:6-8ம் இதற்கு ஒத்திருக்கிறது. பவுல் அப்போஸ்தலன் செப்டுவாஜித் என்ற கிரேக்க மூலத்தை உபயோகிப்பதால், எபிரேய பாஷையிலிருந்து கிடைக்கப் பெற்ற கருத்திலிருந்து, ஒரு விசேஷித்த கருத்து எபி.10:5ல் கிடைத்திருக்கிறது. அது என்ன வெனில், இயேசுவின் சரீரம், பரலோகத்திலேயே தேவனால் உண்டாக்கப்பட்டது என்பதாகும். இது உண்மையிலும் உண்மை. பரிசுத்த ஆவியானவர் கன்னி மரியாள்மேல் நிழலாடும்போது, இயேசுவின் சரீரத்திற்கான வித்து பரலோகிலிருந்து மரியாளின் கர்ப்பப்பைக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. அல்லேலூயா! **இதற்கு ஆதாரமாக** (1) "நானே வானத்திலிருந்து இறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் மாம்சமே என்றார்"

(யோ.6:51). (2) "முந்தின மனுஷன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்" (1 கொரி.15:47). (3) அல்லாமலும் காளை வெள்ளாட்டுக்கிடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே... இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்த சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம்" (எபி.10:4, 10) போன்ற பல வசனங்களை எடுத்துக் கொள்ளலாம். இந்த சரீரம்தான் நமக்காய் பிய்க்கப்பட்டது; காயப்பட்டது; இன்று தழும்புகளாக்கப்பட்டிருக்கிறது. இந்த சரீரத்தின் இரத்தம்தான் நமக்காய் சிந்தப்பட்டது; விலையேறப் பெற்றது; சகல பாவங்களையும் நீக்கி சுத்திகரிக்கின்றது. அல்லேலூயா!

எபி.10:9,10ஐ மறுபடியும் வாசித்தால், தேவனுடைய சித்தத்தின்படி செய்ய, வார்த்தையானவர் வருவதாக (வந்ததாக) உள்ளது. எபி.10:7லும் அப்படியே உள்ளது. அவருடைய சித்தம்தான் என்ன? எபி.10:4ன் படி, காளை வெள்ளாட்டுக்கிடா இவைகளின் இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யாததால், பாவங்களை நிரந்தரமாய் நிவிர்த்தி செய்ய, இயேசுகிறிஸ்துவினுடைய சரீரப்பலி தேவைப்படுகிறது. அதற்காய் சரீரம் ஆயத்தம்ப ண்ணப்பட்டது; பலியாக்கப்பட்டது; பரிசுத்தம் உண்டாக்கப் பட்டது (எபி.10:10). இந்த ஆதிமுதலான தேவனின் பரிபூரண சித்தம்நிறைவேறும் வரை - வார்த்தையானவர் மாம்சமாகி (யோ.1:14) பலியாகும் வரை - அதற்கு நிழலாட்டமான பலிமுறைகள் ஆதிமுதலே தேவனால் உருவாக்கப்பட்டன; காலக்கட்டத்தில் நியாயப் பிரமாண சட்டத்திலும் இணைக்கப்பட்டன. இந்தப் பலிமுறைகளால்மனிதன், பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெறாமல் நாடோறும், வருடந்தோறும் பலி செலுத்துவதை தேவன் விரும்பாமல் இயேசுவின் சரீரப்பலியை விரும்பினார். இந்த இயேசுவின் சரீரப்பலிதான், இயேசுவின் 2ம் வருகைவரை நிலைத்து நிற்கும். (இதற்கு அடையாளமாய்த் தான் நாம் திருவிருந்து பண்டிகை கொண்டாடுகிறோம்) இந்த நிலையான - விலையேறப் பெற்ற பரலோகில் உருவாக்கப்பட்ட சரீரப்பலியை, நிழலாட்டமான காளை - வெள்ளாட்டுக் கடாவின் பலிக்கு நிஜமான பலியை தேவன் நிலைநிறுத்தினார். ஆதிமுதல், இயேசுவரை இருந்த நிழலாட்டமான பலிமுறைகளை தேவன் நீக்கிப் போட்டார் (கொலோ.2:16,17) எப்படி? இயேசுவின் சரீரம் சிலுவையில் மரிக்கும்போதே அவரோடு கூட இவைகள் எல்லாம் அழிந்துபோயின (எபே.2:14, 15; மத்.5:17,18; ரோ.10:4); தேவன் அழிக்கவில்லை; அல்லேலூயா!

❖ ❖ ❖

# திரித்துவமா? திரியேகமா?

2014 மே.22, 23 வருடாந்திர விசுவாசக் கருத்தரங்கில், "திரித்துவம் உண்டா? இல்லையா?" என்ற தலைப்பில் நடந்த பட்டிமன்ற முடிவில், "திரியேக தேவன்" நமக்கு உண்டு என்று நான் சொன்னதில் சிலருக்கு சில கேள்விகளும், சந்தேகங்களும் எழும்பியிருக்கின்றன. ஆவியானவர் தாமே அந்த கருகலான காரியத்தை விளக்குவாராக!

திரித்துவம் என்றால் மூன்று ஆள்தத்துவம் - Three personalities - என்று பொருள். நம் தேவன் திரித்துவ தேவன் என்று சொல்லும்போது, இயேசு நாமக்காரர்கள், யோகோவா விட்னஸ் போன்றோர், நமக்கு மூன்று தேவர்களா என்று கேட்பார்கள். முஸ்லீம்களும், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று மூன்று தேவனா என்பார்கள். இந்துக்கள், ஆக்கும் தேவன், காக்கும் தேவன், அழிக்கும் தேவன் என்று சொல்வது போல (பிரம்மா, விஷ்ணு, சிவன்) கிறிஸ்தவர்களும் சொல்கிறார்கள் என்று புறஜாதியார் சிலர் கூட கூறுகிறார்கள். GOD என்ற ஆங்கில பதத்திற்கு, Generator, Operator, Destroyer என மூன்று செயல்பாடுகள் என்று சொல்வோரும் உண்டு. வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.

ஆதி.1:1ல் தேவன் என்ற வார்த்தைக்கு மூலபாஷையில், "ஏலோகிம்" என்று உள்ளது. ஏலோஹிம் என்றால் எபிரேய பாஷையில் more than two - இரண்டிற்கும் மேற்பட்ட பன்மையில் உள்ளதை ஒருமையில் சொல்லப்படுவதாகும். ஆக, படைப்பின் போதே நம் தேவன் - மூன்று ஆட்தத்துவமாய் வெளிப்படுகிறார் (ஆதி.1:26, 27; 3:22). இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, வானத்திலிருந்து பிதாவின் குரல் கேட்டது; பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல் இறங்கி வந்தார். இங்கேயும் மூன்று ஆட்தத்துவம் காணப்படுகின்றது. இயேசு, பிதா - குமாரன் - பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கச் சொன்னாரல்லவா! (மத்.28:19). அங்கேயும் மூன்று ஆட்தத்துவம் காணப்படுகின்றது. 1 யோ.5:7ன்படி, பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பதால், மூன்று ஆட்தத்துவம் காணப்படுகின்றது. மேலும், ஆதி.20:13; 35:7ன் ELOHIM என்ற வார்த்தை, பன்மையிலேயே - இரண்டுக்கும் மேற்பட்ட ஆள்தத்துவத்திலேயே - மூல பாஷையில் போடப்பட்டுள்ளது. சக.1:7-2:17; சங்.110:1 போன்ற பல வசனங்களில் இரண்டு ஆட்தத்தவமுள்ளவர்கள் உரையாடுகின்றனர்; பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் நமது ஆண்டவர் வீற்றிருப்பதால் வித்தியாசமான ஆட்தத்துவத்தை உணர்கிறோம். ரோ.1:20ன் படி, தேவத்துவம் - திரித்துவம் - உலகப்

படைப்புக்களிலிருந்தே அறிந்து கொள்ளலாம். பவுல் அப்போஸ்தலன், 2 கொரி. 3:14ல் வாழ்த்துதல் கூறி முடிக்கும்போது மூன்று ஆட்தத்துவங்களை கூறுவதைப் பார்க்கலாம்; ஸ்தேவான் பரிசுத்த ஆவியானவரால் ஆட்கொண்டு, சாகும்போது பரலோகில் பிதாவையும், இயேசு கிறிஸ்துவையும் காண்பதால் மூன்று ஆள்தத்துவம் வெளிப்படுகிறது (அப்.7:55, 56). பரிசுத்த ஆவியானவர் நமக்கு ஜெபிக்க உந்துவதாலேயே அவர் ஆட்தத்துவமானவர் (ரோ.8:26) இன்னும் ஏராளம் வேதத்திலிருந்து சொல்லலாம்.

என்ன சொன்னாலும், "இயேசு தேவனல்ல; அவர் சிருஷ்டிக்கப் பட்டவர்" எனறு ஒரு கூட்டமும், "பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆட்தத்துவ மானவர் அல்ல; அது ஒரு சக்தியே" என்று ஒரு கூட்டமும் சொல்லி, "தேவன் மூன்று ஆட்தத்துவமாய் இல்லை; திரித்துவம் என்ற ஒன்று இல்லை" - என்று வாதிடுகின்றனர். இயேசு சர்வ வல்லமையுள்ள தேவன் என்று ரோ.9:6; வெளி.1:8; 4:8; 11:17; 16:14; ஏசா.9:6,7; யோ.1:1; எபி. 1:8; யோ.20:28; 13:13; 1 தீமோ.3:16 போன்ற வசனங்கள் கூறியிருக்க, அவர் தேவனல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்? பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று, அப்.2:4; 5:34; ஆதி.1:2; ஏசா.611; யோ.14:17, 16,26; 15:26; 2 கொரி.3:17 போன்ற பல வசனங்கள் கூறியிருக்க அவர் தேவனல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்? அப்படியானால் பிதா ஒரு தேவன், குமாரன் ஒரு தேவன், பரிசுத்த ஆவியானவர் ஒரு தேவனா? கிறிஸ்தவர்களுக்கு மூன்று தேவனா? இது கேள்வி - ஆட்தத்துவத்தில் மூன்று என்பதில் ஐயமே இல்லை. இதைத்தான் திரித்துவம் - Trinity என்று சொல்கின்றோம். திரித்துவம் என்ற வார்த்தை வேதத்தில் இல்லை என்பதாலே இந்தஉண்மை பொய்யாகுமோ? ஜெபமே ஜெயம், முழுக்கு ஞானஸ்நானம், இரகசிய வருகை போன்ற வார்த்தைகள் இல்லை என்பதால் அவைகள் எல்லாம் பொய்யாகிவிடுமா? வேதமே வெளிச்சம். ஆமென்.

ஆனால் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். இதுதான் சத்தியம். 1 யோ.5:7 அப்படித்தான் சொல்கின்றது. ஒருசில மூலப்பிரதிகளில் இந்த வசனம் இல்லை; ஒருசில மூலப்பிரதிகளில் இது உண்டு. வேதத்தின் முதல் வசன, "ஏலோஹிம்" என்ற சொல்லே பன்மையில் ஒருமையில் இருக்கிறது. "தேவன்" என்று எங்கெல்லாம் உண்டோ அங்கெல்லாம் பன்மையில் ஒருமையையே காட்டுகின்றது. (தேவன் என்றால் பிதாவைக் குறிக்கிறது என்ற concept - எண்ணம் - எப்போது மறைகிறதோ அப்போதுதான் இது விளங்கும்). உபா.6:4ல் The LORD our God is one LORD - நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் என்று உள்ளது. இதற்கான எபிரேய

பதம்தான், ஆதி.2:24ல் உள்ள, "புருசனும் மனைவியும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்பதாகும். புருஷனும் மனைவியும்இரண்டு ஆள் தத்துவமாய் இருக்கிறார்கள் என்றும், Physically, emotionally, Intelectually, Spiritually ஒன்றாய் இருக்கிறார்கள் என்றும் அர்த்தமாம். மத்.28:18-20ல் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமங்களினால் என்று போடாமல் "நாமத்தினால்" என்று ஒருமையில் போட்டிருப்பதை தியானியுங்கள். ஒரே மனிதன், ஆவி, ஆத்மா, சரீரம் என்ற மூன்று பிரிவுகளுடன் இருக்கிறான் அல்லவா! அப்படியே ஒரே தேவன், மூன்று ஆள்தத்துவமாய் செயல்படுகிறார். அதாவது, ஏக-ஒரே தேவன், திரித்துவமாய் செயல்படுகிறார். ஆமென்! இதைத்தான் திரயகேம் என்று சொல்கின்றோம். திரித்துவத்தோடே நாம் நின்றுவிட்டால் மூன்று தெய்வங்களாகிவிடும்; திரியேக தேவன் என்றால், மூன்று ஆட்தத்துவமாய் செயல்படுபவர் என்று ஆகும்.

சிலர் சொல்வது: "பனிக்கட்டியை சூடாக்கினால் தண்ணீராகிறது; தண்ணீரை சூடாக்கினால் ஆவியாகிறது. பனிக்கட்டி, தண்ணீர், ஆவி போலத்தான் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி" என்று. இது மகா தவறான உதாரணம். இயேசு நாமக்காரர்களுக்கு ஏற்றது இது. நாம் சொல்லும் மூன்று ஆட்தத்துவம் என்பது, ஒரே நேரத்தில் மூன்றும் காணப்படுவதாகும். பனிக்கட்டி, தண்ணீர், ஆவி ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் காணப்படுவது அல்ல என்று அறியுங்கள். ஒரே சூரியனிலிருந்து, ஒளியும், வெப்பமும் வருவதுபோல, ஒரே தேவனிடமிருந்து இயேவும், பரிசுத்த ஆவியானவரும் வந்தார்கள். மூன்றும் ஒன்றே என்பது உண்மைதானே! வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, இயேசு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தை பிதாவிடம் ஒப்படைத்த பிறகுதான் (1 கொரி.15:24), "பிதா வார்த்தை பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள்; நம் தேவன் திரியகே தேவன்தான்" என்ற உண்மை நமக்கு முழுமையாய் வெளிப்படும்! அந்த புதிய வானம் புதிய எருசலேம் என்று காண்பேனோ? என்று ஆயத்தமாயிருங்கள்! மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துங்கள்!

❖ ❖ ❖

## "திரித்துவம் உண்டா?" – அது எப்படி இருக்கிறது?

"நம் ஒரே தேவன், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆட்தத்துவத்தில் செயல்படுகிறார் என்றும்" "திரித்துவம் என்ற வார்த்தையே பைபிளில் இல்லை. பரிசுத்த ஆவி என்பது ஆட்தத்துவமல்ல; அது ஒரு சக்தி;

இயேசு சிருஷ்டிக்கப்பட்டவர்; தேவன் ஒருவரே" என்றும், "இயேசுதான் பிதா; இயேசுதான் பரிசுத்த ஆவியானவர்; மூன்று ஆட்தத்துவமே இல்லை; ஒருவரே தேவன்" என்றும் பல வாரியாக கிறிஸ்தவ வட்டாரத்தில் பேசப்படுகின்றன. எப்படிப் பேசினாலும், அவர்கள், "ஒரே தேவன்" என்பதில் கிறிஸ்துவர்கள் உறுதியாய் இருக்கிறார்கள். இது குறித்து ஆராய்ச்சிப் புத்தகங்களிலும், பழைய முழக்கங்களிலும், DVD களிலும் நான் வெளிப்படுத்தியிருக்கிறேன். இந்தக் கடைசி நாட்களில், இதுகுறித்த இன்னும் அதிகமான வேதத்திற்கு ஒத்த சிந்தனையை ஆவியானவர் இந்த செயதி மூலமாய் விளக்குவதற்காய் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். வெளி.22:18,19; உபா.12:32 போன்ற வசனங்களின்படி, தேவன் வேதத்தை விட வேறு எந்த ஒரு புதிய கருத்தையும் யாருக்கும் சொல்லமாட்டார்; எதைச் சொன்னாலும், விளக்கினாலும், வேத வசனப்படிதான் சொல்லுவார் என்று ஒரு நிச்சயத்தோடு தொடர்ந்து வாசியுங்கள்.

யோ.1:1,14ன் படி ஆதியிலே இருந்த வார்த்தையாகிய தேவன், இயேசு என்ற பெயரில் மாம்சமாய் வெளிப்பட்டார் என்று அறிவோம் (1 தீமோ.3:16; பிலி.2:6-8). 2 கொரி.2:17; அப்.5:3,4; 24; ஆதி.1:2; ஏசா.11:2; 61:1; 1 பேது.1:2; யோ.14:17,16,26; 15:26 போன்ற பல வசனங்களின்படி, பரிசுத்த ஆவியானவர் ஆட்தத்துவமான தேவன் என்றும் அறிவோம். வேதத்திலே ஆதிமுதல் பிதா என்றும், பிதாவாகிய தேவன் என்றும், சொல்லப் பட்டிருப்பதாலும், மனித நிலையில் இருந்த இயேசுவால் அடிக்கடி அப்படி அழைக்கப்பட்டதாலும், பிதா என்பவர் ஆட்தத்துவமானவர் என்றும் அறிவோம். (இது குறித்து ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் "பிதா-இயேசு-பரிசுத்தஆவி" என்ற செய்தியை வாசியுங்கள்). இந்த மூன்று identityஐ வைத்துத் தான் திரித்துவம் என்று சொல்கின்றோம். இதிலே வார்த்தையாகிய தேவன் பூமிக்கு வந்துவிட்டுப் போய்விட்டார்; ஆவியானவர் பூமிக்கு வந்து கிரியை செய்து கொண்டிருக்கிறார். ஆனால் பிதா என்பவர்தான் பூமிக்கு வரவே இல்லை. மட்டுமல்ல... இயேசு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் பெறும்போது ஒரே நேரத்தில் மூவரும் வெளிப்பட்டனர் (மத்.3:16,17)., ஸ்தேவான் சாகும் தருவாயில் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் இருக்கும்போது, மூவரும் வெளிப்பட்டனர் (அப்.7:55,56). பரலோகத்தில் சாட்சி கொடுப்பவர் மூவர் என்பதால், (1 யோ.5:7) இம்மூவரும் ஒரே நேரத்தில் வெளிப்பட்டிருக்கிறார்கள். அப்படியானால் இம்மூவரும் இணைந்ததுதான் தேவனா? இது கேள்வி. இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவர்போல், பிதாவும் ஒரு தனிப்பட்ட ஆளா? இதுவும் கேள்விதான்.

**தேவன் ஒருவரே என்ற உபா.6:4க்கான விளக்கம் என்ன?**

இதை அறியுமுன்னே ஒரு காரியம் புரிந்தாக வேண்டும். உலகிலுள்ள எத்தனையோ கடவுள் கொள்கைகளில், நம் கொள்கை மாத்திரமே, தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவை, அப்பா-பிள்ளை என்ற நிலையில் வெளிப்படுத்துவதாகும். இதை ஆதி முதலே நாம் அறியலாம். உலகிலே உறவு வேறு; அன்பு வேறு. ஒவ்வொரு உறவுக்கும் ஒவ்வொரு விதமான அன்பு உண்டு. **உறவு நிரந்தரமாகாது.** (வீடு வரை உறவு; வீதி வரை மனைவி; காடு வரை பிள்ளை!...) **ஆனால் அன்போ நிரந்தரம்.** அதிலும் அன்பிலே பிரதானமான தாயன்பு-தந்தையன்பு (பெற்றோர் அன்பு) என்றென்றும் நிரந்தரம். இந்த அன்புதான் நம் தேவனிடம் உண்டு. "ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை இறப்பாளோ? அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை" (ஏசா.49:15); "என் தகப்பனும் என் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார்" (சங்.27:10)., இப்படிப்பட்ட அன்பைத்தான், "பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்று உலகம் சொல்கின்றது. இந்த தாயன்பு- தந்தையன்பு உள்ள தேவனை ஆதிமுதல் வேதம் காட்டுவதைப் பார்ப்போம்.

ஆதாமை படைத்த பெற்றெடுத்த தேவன் அவன் பாவம் செய்த அன்றேதேடி வந்தார்; யாரும் எந்த புகாரும் கொடுக்குமுன்னே தானே விடுதலை சொல்கிறார் (ஆதி.3:15); தானே தோலுடை கொடுத்து அவனைக் காக்கிறார்; மறைக்கிறார்; அவர்களுக்கான மீட்பின் வழிகளை தானே அப்போதே தீர்மானிக்கிறார் (வெளி.13:8); அந்த தீர்மானம் நிறைவேற பரலோகிலேயே பூமிக்குரிய சரீரத்தை ஆயத்தமாக்குகிறார் (எபி.10:5). பரலோகிலேயே மரணம் - உயிர்த்தெழுதலை முடிவு செய்கிறார் (சங்.2:7); பரலோகிலேயே இவர்களுக்கென்று பரம எருசலேம் கட்டிவிட்டார் (யோ.14:2). மட்டுமல்ல... ஏதேனைவிட்டு விரட்டியும்கூட மறக்காதவராய் இருப்பதால் தானே, கெட்டகுமாரன் (Prodical son) கதையே வருகிறது. இதுதான் அப்பா-அம்மா அன்பு. அம்மா என்றாலே அன்பு என்றுதான் பொருள். உலகிலுள்ள ஜீவராசிகள் சொல்லும் முதல் வார்த்தை அம்மாதான். உலகமே அப்படிப்பட்ட அன்புக்காய் ஏங்கிக் கிடக்கிறது.

ஆதாமுக்குப்பின், ஆபேல்-காயீன் இருவர் மேலும் தாயன்பை, தந்தையன்பையே தேவன் காட்டினார். கொலைசெய்யும் முன்பே, காயீனுக்கு சாபமும் தண்டனையும் வரக்கூடாது என்று அறிவுரை கூறுகிறார் (ஆதி.4:6,7). கொலை நடந்த பின்னும், ஆபேலின் சத்தம் கேட்டு, கொலைகாரன் காயீனுக்காகவும் வானிலிருந்து தேடி வந்தார்; தண்டனை

தருகிறார்; கொலைகார மகனானாலும் அவன்மேல் அன்பு வைத்து, பாதுகாப்பு தருகிறார் (ஆதி.4:15); இதுதான் தாய் தந்தை அன்பு. இதனால்தான் இஸ்ரேல் மக்களை, குமாரன் - குமாரத்தி என்று அழைக்கிறார் (ஏசா.22:4; எரே.4:31; புல.1:6: 3:48). இஸ்ரேலரோ அந்த அன்பை உணரவில்லை. குடுகுடுப்பைக்காரன் - வேடிக்கைக் காட்டுபவன் - பக்கம் போகும் பிள்ளைகளைப்போல, தேவனின் தாயன்பை ருசிக்கத் தெரியாதவர்களாய் அவர்கள் மாறிவிட்டார்கள். தேவ அன்பை ருசித்து, உலகத்தோடு இணையாமல், அந்நிய நுகப்பிணைப்பைவிட்டு விலகி வாழ்பவன்தான் தேவனக்கு குமாரனும் குமாரத்தியும் என்று 2 கொரி.6:17,18 சொல்கின்றது.

**என்றைக்குமே நம் தேவன் அப்பா ஸ்தானம்தான்;** இந்த அன்பைக் காட்டும் ஒரே வேதம் நம் வேதந்தான். இந்த தேவனின் தாயன்பைப் புரிய வைக்கவே, வார்த்தையாகிய தேவன், குமாரனாகி பூமிக்கு வந்து, "இவ்வளவாய்" உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோ.3:16). நாம் அறிந்த படி தாவீதின் இருதயமும், நம் தேவனின் இருதயமும் ஒன்றாம் (அப்.13:22). **உதாரணத்திற்கு ஒன்றிரண்டைப் பார்ப்போம்:** தாவீதின் மகன் அம்னோன், சகோதரி தாமாரைக் கெடுத்தான். கெடுத்தவனை தாவீதின் மகன் அப்சலோம் கொன்றான். இதைக் கேள்விப்பட்ட தாவீதின் நிலையைப் பாருங்கள் (2 சாமு.13:36,39). தாயன்பு வெளிப்படுகிறது. 3 பேரும் குமாரர்கள்; பாவிகள் மேல் நேரடியாய் தண்டனையைக் கொடுக்க முடியவில்லை; முழுமையாய் ஆதரிக்கவும் இயலவில்லை. இதுதான் நம் தேவனின் இருதயம். மட்டுமல்ல... மகன் அப்சலோம் தாவீதின் மறுமனையாட்டிகளைக் கற்பழித்தான். ராஜ்ய பாரத்தையே பிடுங்க முயற்சித்தான். முடிவோ... மரித்துப் போனான். பாவி மகனின் மரணச் செய்தி கேட்டு பதறும் அப்பா தாவீதின் நிலையைப் பாருங்கள் (2 சாமு.18:33; 19:4) இதுதான் தாயன்பு; மனித தாயன்பே இப்படியானால், தேவனின் தாயன்பு எப்படியிருக்குமென்று ருசித்துப் பாருங்கள் (சங்.27:10).

வார்த்தையாகிய தேவன், பூமிக்கு மனிதனாய் வந்துதான், புரியாத இஸ்ரேலருக்கு. தேவன் எத்தன்மையுடையவர் என்று வெளிப்படையாகவே காட்ட தேவனை, அடிக்கடி "பிதா-FATHER" என்று அழைத்தார். கற்றுக்கொடுத்த ஜெபத்தில் கூட "பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே" (மத்.6:9) என்று அழைக்கக் கற்றுக் கொடுத்தார். மத்.7:11ல் எந்த அளவுக்கு தாயன்பை இயேசு மக்களுக்கு வெளிப்படுத்துகிறார் பாருங்கள். பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு, நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திருக்கிற உங்கள் பிதா,

தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா? இந்த பிதாதான் தேவன் (யோ. 8:41; 1 கொரி. 8:6). இதைத்தான் GOD-ELOHIM என்று அழைக்கப்படுகிறது. இதுதான் DEITY - GODHEAD - கர்த்தத்துவம். இந்த பிதாவாகிய தேவனிடமிருந்து வெளிவந்தவர்தான் இவரோடிருந்த வார்த்தையாகிய தேவன் இயேசு; இந்த பிதாவாகிய தேவனிடமிருந்து வெளிவந்தவர்கதான் ஆவியாகிய தேவன். இந்த இருவரும், பிதா என்பவரும் சேர்ந்த மூவரும் ஒரே தேவனல்ல; திரித்துவம் என்று வேண்டுமானால் சொல்லிக் கொள்ளலாம்.

**ஆனால், அந்த ஒரே தாய் - தந்தை அன்புள்ள பிதாவாகிய தேவனுக்குள்ளிருந்து இவர்கள் இருவரும் பூமிக்கு வந்தவர்கள்.** எனவே தற்காலத்தில் பலர் சொல்லுகிறபடி. (1) 1 (பிதா)+1 (இயேசு) + 1 (ஆவியானவர்) = 1 (தேவன்) என்பதோ, (2) 1 (பிதா) x 1 (இயேசு) x 1 (ஆவியானவர்) = 1 (தேவன்) என்பதோ ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று. இப்படிப்பட்ட கொள்கைகளெல்லாம் கத்தோலிக்கரிடமிருந்து வந்தவை.

(1) **(தேவன்)** → (2) **இயேசு**
→ (3) **ஆவியானவர்**

- இப்படிப்பட்ட TRINITY - திரித்துவத்தைத்தான் வேதம் விளக்குகிறது. இதை ஒரு சிறு உதாரணத்தில் விளக்கலாம். ஒரே ஒரு சூரியன் (பிதாவாகிய தேவன்); அதிலிருந்து ஒளியும் (இயேசு) வெப்பமும் (ஆவியானவர்) பூமிக்கு வெளிவருகிறது. இப்படித்தான் நான் விசுவாசிக்கும் கர்த்தத்துவம். இதிலே, ஒளியும் வெப்பமும் பூமிக்கு வந்தாலும், சூரியனில் அவை இருக்குமா? சிந்தியுங்கள். கண்டிப்பாய் இருக்கும். அதனால்தான் 1 யோ.5:7ல், "பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர். பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்" என்று உள்ளது. இது எப்படி? இந்த வசனம் எழுதும்போது ஆவியானவர் பூமியில் இருக்கிறார். இயேசு பரலோகம் போய்விட்டார்; பிதாவாகிய தேவன் அங்கேயே இருக்கிறார். இதுதான்-

**SUN** → **Heat**
→ **Light இந்த தத்துவம்போல.**

மட்டுமல்ல.. இயேசு மரிக்கும்போது, "ஏலி ஏலி லாமா சபக்தானி (என் தேவனே.. என் தேவனே.. ஏன் என்னைக் கைவிட்டீர்) என்றாரே,

"இயேசுவாகிய தேவன்தான் பூமியிலிருக்கிறாரே" என்று கேள்வி கேட்போரும் உண்டு. இவர்களுக்கும் இதே தத்துவம்தான்.

ஆக, "பிதா" என்றால் அது ஒரு ஆட்தத்துவமல்ல என்றும், பிதா=தேவன்=Deity = ஏலோகிம் = GOD HEAD - தெய்வீகம் என்றும் முதலில் உணர்ந்தால், இந்த பிதாவாகிய ஏலோகிம் தேவனிலிருந்துதான், நம்முடைய இரட்சிப்புக்காய், வார்த்தையானவரும், ஆவியானவரும் பூமிக்கு ஆட்தத்துவமாய் வந்தார்கள் என்றும் அறியலாம். இந்த பூமியின் இரட்சிப்பு நிறைவேறியபின், இவர்கள் இருவரும் Deity - GOD - தேவனுக்குள் ஒன்றாகி விடுவார்கள். ஆமென். அப்.7:55, 56ஐ தியானித்தால் சத்தியம் புரியும். ஸ்தேவானோடு ஆவியானவர் பூமியில் இருக்கிறார்; வானத்திலே பிதா என்ற ஒரு ஆட்தத்துவமல்ல, தேவனுடையமகிமை - Deity - God Head - Glory - காணப்படுகிறது. அருகிலே இயேசு ஆட்தத்துவமாய் நிற்கிறார். அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! நம்மவர்கள் நினைப்பது போல் பிதா என்பவர் ஒரு முதியவர் போன்ற ஆட்தத்துவமானவர் அல்ல; இயேசுவும் ஆவியானவரும் ஆட்தத்துவமான இளைஞர் நிலையிலல்ல. பிதா என்பது தேவன் - Deity - God Head - ஏலோகிம் - கர்த்தத்துவம். அதிலிருந்து வந்தவர்கள் இவர்கள்; ஒரு பெரிய தங்கக்கட்டியிலிருந்து, வந்த சிறு கட்டிகள். இவைகளும் தங்கமே! மாம்சத்திலே வந்திருந்தாலும் தங்கத்தின் தரம் குறையாது. ஆமென். எதற்கு வந்தனர்? தாயன்பை வெளிக்காட்டி, அப்பா - பிள்ளை உறவை பலப்படுத்தி, நம்மை சொர்க்கத்திற்கு கொண்டு செல்லவே! அல்லேலூயா! இந்த தாயன்பை மனிதனாய் வந்த இயேசு மூலம் அறிந்தால் ஆசீர்வாதம் பெருகும்; வெற்றி வாழ்க்கை மிளிரும்; இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆமென்!

❖ ❖ ❖

## இஸ்ரேலருக்கு தேவன் ராஜ்யத்தை கொடுத்து விட்டாரா?

1948 மே 14ல் இஸ்ரேலருக்கு தேவன் ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டார் என்று பலர் பிரசங்கிக்கிறார்கள். அப்படி தேவன் கொடுத்து விட்டாரென்றால் 1000 வருட ஆட்சி எதற்கு? அப்போதுதான் விழுந்து போன தாவீதின் கூடாரம் (Tent of David) கட்டப்படும் என்று சொல்வது எதற்கு? இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர் தாமே வெளிப்படுத்துவாராக!

வேதம் சொல்வதைப் பார்ப்போம்:

(1) ஆமோஸ்.9;12ல், "அந்நாளில் விழுந்து போன தாவீதின் கூடாரம் கட்டப்பட்டு..." என்று உள்ளது. **அது எந்நாளில்?** (2) அப்.15:17ல், "இதற்குப் பின்பு விழுந்து போன தாவீதின் கூடாரம் கட்டப்படும்" என்று யாக்கோபு கூறுகிறாரே **அது, எதற்குப் பின்பு?** அதன் தொடர்ச்சியாக வாசித்தோமானால், "நான் திரும்பி வந்து..." என்று சொல்லப்பட்டுள்ளது. ஆக, இயேசு வந்துதான் இஸ்ரேலருக்கு ராஜ்யம் கிடைக்கும். ஆமென், அதுவும் இயேசு 2ம்முறை பூமிக்கு வரும்போது, இஸ்ரேலர் எல்லாரும் இரட்சிப்புக்குள் வந்தபின்தான் நடக்கும் (ரோ.11:21-27; வெளி.1:7; சக.12:10). அப்படியாய் இஸ்ரேலருக்கு ராஜ்யம் கொடுக்கும்போது அதன் சக்கரவர்த்தி இயேசுதான் என்று லூக்.1:30-33; தானி.7:13,14 போன்ற வசனங்கள் சொல்கின்றன. அப்போது தாவீது, இயேசுவுக்கு கீழிருந்து ராஜப்பணி செய்வார் (prince) - ஓசி.3:5; எரே.30:9; எசே.34:23, 24; 37:24, 25. இயேசுவின் 2ம் வருகையும் நடக்கவில்லை; (இரகசிய வருகையே நடக்கவில்லையே!) இஸ்ரேலரெல்லாரும் இரட்சிக்கப்படவில்லை; இயேசுகிறிஸ்து சக்கரவர்த்தியாய் 1000 வருட ஆட்சியை தொடங்கவுமில்லை; தாவீது ராஜப்பணி செய்யவுமில்லை. அப்படியிருக்க 1948ல் இஸ்ரேலருக்கு ராஜ்யம் தேவனால் எப்படி கிடைத்திருக்கும்? சிந்தியுங்கள்.

இந்த ராஜ்யம் இஸ்ரேலருக்கு உண்டு என்று இஸ்ரேல் சந்ததி உருவாகு முன்னமே ஆபிரகாமிடம் தேவன், எல்லையோடு விபரமாய் சொல்லியிருக்கிறார் (ஆதி.15:18-21). இந்த எல்லைக்குட்பட்ட கானான் தேசத்தைத்தான் எகிப்திலே அடிமையாயிருந்த இஸ்ரேலரை விடுதலையாக்கி தேவன் அப்போது தந்தார். அந்த கானான் தேசத்தில்தான், ராஜாவாய் இருந்து அவர்களை ஆள வேண்டுமென்பது தேவசித்தம். ஆனாலும், அவர்கள் சாமுவேல் தீர்க்க தரிசியை தள்ளிவிட்டு (1 சாமு.8:7), தங்களுக்குள்ளிருந்து ஒரு ராஜா வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். விட்டுக்கொடுத்து, தன்னுடைய சித்தத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்ட தேவன், சவுலை ராஜாவாக்கினார். அதன்பின் யூதா கோத்திர தாவீது, சாலமோன் போன்றோர் ராஜாவாயினர். சாலமோனுக்குப்பின் ராஜ்யம் இரண்டாய் உடைந்தது. ரெகோபெயாம் என்ற யூத சாலமோனின் மகன் யூதாவை ஆண்டான். எருசலேமை தலைநகராய்க் கொண்ட யூதா தேசத்தை, யோகாக்கிம் ராஜா முடிய யூதா கோத்திர தாவீதின் குடும்பம்தான் ஆண்டது. 10 கோத்திரங்களை உடைய இஸ்ரேல் ராஜ்யம் கி.மு.722ல் அசீரியரால் வீழ்ந்து போனது. இரண்டு கோத்திரங்களை உடைய யூதா ராஜ்யம் - தாவீதின் கூடாரம் - கி.மு.586ல் பாபிலோனியரால் வீழ்ந்தது. பாபிலோனியர் யூதர்களை

சிறைப்பிடித்து கொண்டு போனார்கள். 70 வருஷத்துக்குப் பின், எரேமியாவின் தீர்க்கதரிசனப்படி, எஸ்றா காலத்தில் யூதர்கள் தங்கள் தேசத்தில் குடியேற ஆரம்பித்தார்கள். இடிந்துபோன அலங்கங்களைக் கட்டி, எருசலேம் தேவாலயத்தைப் புதுப்பித்து, முன்பு போலவே பலிமுறைகள் செய்ய ஆரம்பித்தனர். ஆனாலும் ராஜரீகம் கிடைக்கவில்லை. விழுந்துபோன தாவீதின் கூடாரம் எடுப்பித்து கட்டப்படவுடமில்லை.

உலகின் முதல் சாம்ராஜ்யமான பாபிலோன்கீழ் இருந்த யூதர்கள். அதன்பின் 2ம் ராஜ்யமான மேதிய பெர்சிய, 3ம் ராஜ்யமான கிரேக்கம், 4வது ராஜ்யமான ரோம ராஜ்யம் ஆகிய ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர். இந்த ரோமராஜ்ய காலக் கட்டத்தில் தான் இயேசு பிறந்தார். அவருக்கு ஓசன்னா பாடி, ராஜாவாக ஆக்க யூதர்கள் விரும்பியும், அவர் ராஜாவாகவில்லை.. லூக்.1:30-33ல் சொல்லப்பட்ட பாதி தீர்க்கதரிசனம்தான் அப்போது நிறைவேறியது. கி.பி.70ல் யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டனர். இன்னும் தாவீதின் வம்சத்துக்கு ராஜரீகம் கிடைக்கவில்லை. 1948ல் கிடைத்த ராஜ்யம், பிரிட்டிஷ் பேரரசால், நன்றிக்கடனாய் கொடுக்கப்பட்டது; இது யூதர்களின் சுயமுயற்சியால் (Self Effort) கிடைத்தது; தேவனால் அல்ல. அதுவும் யூதா வம்சா வழியினர் ஆளும்படியும் அல்ல; ஆபிரகாமிடம் சொன்னபடியான முழு நிலப்பரப்பும் கிடைத்தபாடில்லை. அந்த நாள் முதல் வந்த இஸ்ரேல் பிரதமர்கள் எல்லாருமே யூதா வம்சத்தார் அல்ல; மேலும், பெண்கள் யாரும் ராஜாவாக - பிரதமராக யூதா வம்சத்தில் இருக்கக்கூடாது என்ற மரபுக்கு மாறாய் அங்கே நடந்திருக்கிறது. தேவாலயம் இருந்த இடமே கிடைக்காமல் இன்றுவரை பலி செலுத்தப்படுவதே இல்லை.

இப்படியாய், யூதர்கள் தங்கள் சொந்த முயற்சியினால் பெற்று, தாங்களே ராஜாவாக ஆளுகின்ற இந்த ராஜ்யம் கிடைத்ததை, மத்.24:32, 33க்கு சமப்படுத்தி பலர் போதிக்கின்றனர். "அத்திமரத்தினால் உவமையைக் கற்றுக் கொள்ளுங்கள். அதிலே இளங்கிளை தோன்றி, துளிர் விடும்போது, வசந்தகாலம் சமீபமாயிற்று என்று அறிவீர்கள். அப்படியே இவையெல்லாம் நீங்கள் காணும்போது அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்." இது தீர்க்கதரிசனமல்ல; இது உவமானம். இது தீர்க்கதரிசன மானால் அத்திமரம் என்பது அரசியலமைப்பைக் குறிப்பதாய் எடுத்துக் கொள்ளலாம். இதை உவமானமாக எடுத்துக் கொள்ளலாம். இதை உவமானமாக எடுத்துக் கொண்டு தான் நாம் தியானிக்க வேண்டும். அத்திமரத்தில் இளங்கினை தோன்றினால், வசந்தகாலம் சமீபமாகும். அப்படியே இவைகள் சம்பவிக்கும்போது, அதாவது மத்.24:4-26 வரையிலான

காரியங்கள் சம்பவிக்கும் போது, **இயேசு வருகிறார் - வசந்த காலம் வருகிறது** - என்று அறியலாம். இன்னும் கொஞ்சம் விளக்கமாய் அறிய லூக்.21:29ஐ வாசியுங்கள். **அத்திமரம் மட்டுமல்ல.. மற்றெல்லா மரங்களையும் பாருங்கள் என்று உவமானமாய் சொல்லப்பட்டிருக்கிறது.** (அந்த தேசத்தில் அத்திமரம் அதிகமென்றும், பிரபலமான தென்றும் நாம் அறிவோம்.) எனவே அத்திமரமும் மற்ற மரங்களும் துளிர்விடல் என்பது 1948ல் ராஜ்யம் கிடைத்தது அல்ல; இயேசு சொன்ன மத்.24:4-26 வரையிலான காரியங்கள் சம்பவிக்கிறதை காணும்போது இயேசுவின் பகிரங்க வருகை சமீபம். அப்போதுதான் யூதருக்கு இரட்சிப்பு; யூதருக்கு ராஜ்யம்.

தேவன் இஸ்ரேலருக்குச் சொன்ன 3 உடன்படிக்கைகளும் இன்னும் நிறைவேறவில்லை என்பதை வசனப்படி அறிந்தால், இந்த கருகலான சத்தியம் புரிந்துவிடும். (1) உபா.30:3-5ல் சொல்லப்பட்ட எல்லையோடு கூடிய நிலப்பரப்பை இஸ்ரேலருக்குத் தருவேன் என்று மோசே காலத்திலேயே தேவன் சொன்ன பாலஸ்தீன் உடன்படிக்கை. (2) ராஜ்யம் கொடுக்கப்படும் என்ற தாவீதின் உடன்படிக்கை (2 சாமு.7:16) இதுதான் தானி.2:44ல் சொல்லப்பட்ட இயேசுவாகிய கல்லால் உண்டாகப்போகும் ராஜாங்கம். (3) இஸ்ரேலர்கள் இதுவரை ஏற்றுக் கொள்ளாத நாம் ஏற்றுக் கொண்ட புதிய உடன்படிக்கையை அவர்கள் ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படல் (எபி.8:8; எரே.31:31-33; தானி.9:24).

இம்மூன்றும் பகிரங்க வருகையில் நடக்கும்போதுதான், அப்.1:5-7ன் சம்பாஷணைக்கான முழு விளக்கமாய் - தீர்வாய் இருக்கும். இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இன்னும் இஸ்ரேலருக்கு ராஜ்யத்தை தேவன் கொடுக்கவில்லை என்றும், அவரின் பகிரங்க வருகையில்தான் அது நடக்குமென்றும் திட்டமும் தெளிவுமாய் அறிந்து கொள்வோம்! மற்றவர்களுக்கும் அறிவுறுத்துவோம்!

❖ ❖ ❖

## ஜெயம் தருவது ஜெபமா? விசுவாசமா?

2012 மே 29, 30 விழுப்புரம் விசுவாசக் கருத்தரங்கில், இதே தலைப்பில் பட்டி மன்றம் நடந்ததை நீங்கள் அறிவீர்கள். ஜெபத்தை ஒதுக்கி வைத்துவிட்டு விசுவாசத்தை மாத்திரமே உயர்த்திப் பிடிக்கும் ஒரு கூட்டமும், விசுவாசத்தை ஒதுக்கி வைத்துவிட்டு ஜெபத்தை மாத்திரமே உயர்த்திப் பிடிக்கும் ஒரு கூட்டமும், சபையில் பெருகி வருகிறது. ஆட்களை - ஆட்களின்

போதகங்களைப் பார்க்காமல், ஆவியானவர் வேதத்தின்படி நமக்கு கற்றுக் கொடுத்து உணர்த்துவது என்ன என்பதை முதலில் அறிய வேண்டும். வேத வசனமில்லாத கிறிஸ்தவ வாழ்க்கை விசனமான வாழ்க்கை; கண்ணைக் கட்டி காட்டில் விடுவது போன்றதாகும். சங்.1-ன் படி வசன தியானமனிதனே பாக்கியவான்.

"ஆபிரகாம் ஜெபிக்கிறவன் அல்லவாம்; விசுவாசிக்கிறவனாம்; ஜெபத்தால் அல்ல, விசுவாசத்தால்தான் நீதிமானாக்கப்பட்டானாம்" - இப்படியும் போதனைகள். "யோபு தன் சிநேகிதருக்காக ஜெபம் செய்தான்; கர்த்தர் அவனது சிறையிருப்பை மாற்றினார்; விசுவாச மார்க்கத்தின் தகப்பன் ஆபிரகாம், தான் ஜெபித்து எதையும் பெற்றுக் கொளளவில்லை" - இப்படியும் போதனைகள். சிநேகிதருக்காக யோபு ஜெபித்ததாலா ஆசீர்வதிக்கப்பட்டான்? இல்லை... யோபு.42:5ன் படி, யோபுவின் மனக்கண், தேவனின் வார்த்தையால் திறக்கப்பட்டு ஒளிர் விடுகிறது; அதனால் மனஸ்தாபப்பட்டு உபவாசமிருந்து வல்லமையைப் பெறுகிறான்; யோபு, ஆசாரியன்போல நண்பர்களுக்காக ஜெபிப்பான் என்று தேவன் சொன்னபடி அவன் ஜெபித்தான்; ஜெபித்ததால் சிறையிருப்பு மாறவில்லை; யோபு ஜெபித்த சமயத்தில்தான் (when he prayed) மாறியது. **ஆபிரகாம் ஜெபித்து எதையும் பெறவில்லையா?**

**முதலில் ஜெபம் என்றால் என்ன?** என்று தெரிய வேண்டும். ஜெபம் என்றாலே communication with God" - தேவனோடு கொள்ளும் தொடர்பு. இந்தத் தொடர்பு, கண்ணை மூடி, முழங்காலிட்டு அவரை நோக்கிப் பேசுவதாகவும் இருக்கலாம்; வேண்டுவதாகவும் இருக்கலாம்; பரிந்துரைப்பதாகவும் இருக்கலாம்; துதித்து ஸ்தோத்தரித்து ஆராதிப்பதாகவும் இருக்கலாம்; நேருக்கு நேர் வழக்காடுவதாகவும் இருக்கலாம். எல்லாமே தேவனோடு தொடர்புதான்; ஜெபம்தான். தேவனோடு பேசாமல் - ஜெபிக்காமல் - இருப்பவன் communication cut ஆனவன் - தொடர்பு துண்டிக்கப்பட்டவன்; ஆவியிலே மரித்தவன்; ஆதி.2:17ன்படி, ஆதாமைப்போல் ஆனவன்; ஆக, ஜெபமில்லாதவன், ஆவியிலே மரித்தவனாகிறான்.

இயேசு சொன்னார்: "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்;" "நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்கு செய்யப்படும்." "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்கு கொடுக்கத்தக்கதாக.." "கேளுங்கள் அப்பொழுது உங்கள்

சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக் கொள்ளுங்கள்" (யோ.4:13; 15:7, 16; 16:24). ஆக, கேட்கும்போது - ஜெபிக்கும்போது தான் கிடைக்கும், ஜெயம் பெறுவோம். எப்படிக் கேட்பது என்பதுதான் பிரச்சனை.

மாற்.9ல் ஊமையான ஆவி பிடித்தவனின் அப்பா இயேசுவிடம் பேசுவதை, ஜெபிப்பதை பாருங்கள். "உம்முடைய சீஷர்களால் முடியவில்லை; நீர் ஏதாகிலும் செய்யக் கூடுமனால் எங்கள் மேல் மனதிரங்கி, எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்" என்றான். இயேசுவோ, "நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும்" என்றார். அவனோ, விசுவாசிக்கிறேன் ஆண்டவரே; என் அவிசுவாசம் நீங்கும்படி, உதவி செய்யும்" என்றான். அவனின் விசுவாசமுள்ள வேண்டுதல், சுகம் கொடுத்தது. இதைத்தான் யாக்.5:14 சொல்கின்றது. வெறுமனே ஜெபமோ, வெறுமனே விசுவாசமோ பிரயோஜனம் இல்லை. விசுவாசமுள்ள ஜெபம்தான் ஜெயம் தரும். விசுவாசத்தோடு கூடிய ஜெபம் - வார்த்தை - சொல்லுதல், வெற்றியைத் தரும் (மாற்.11:23). இதைத்தான் இயேசு, "நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய், ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை யெல்லாம் பெறுவீர்கள்" என்றார் (மத்.21:22). இதே கருத்தைத்தான் 1 யோ.5:14,15ல் சொல்லப்பட்டுள்ளது. தேவனின் சித்தம் அவரது வசனத்திலிருக்கிறது. அந்த வசனத்தை விசுவாசித்து கேட்கும்போது நிச்சயம் தேவன் நம் ஜெபத்திற்கு பதில் கொடுக்கிறார். ஆமென். விசுவாசம் மாத்திரம் இருந்தால் போதாது. விசுவாசம் கிரியையில் வெளிப்பட வேண்டும் (யாக்.2:20). **அந்த கிரியையிலே பிரதானமானது,** விசுவாசித்ததை தேவனிடம் சொல்வது - அறிக்கையிடுவது ஜெபிப்பது; **இரண்டாவது:** அதை மனிதர்களிடம் அறிக்கையிடுவது; செயல்களில் காட்டுவது. அப்போதுதான் வாழ்வில் ஜெயம் உண்டு. எபி.11ல் சொல்லப்பட்டவர்கள் எல்லாருமே வசன விசுவாச வீரர்கள்தான். ஆனாலும் அதை கிரியைகளிலே காட்டினார்கள்; எப்போதும் தேவனோடே உறவு தொடர்பு - communication - Prayer - கொண்டிருந்தார்கள். இயேசுவின் வாழ்க்கையும் அப்படித்தானே!

பர்திமேயு என்ற குருடனிடம், இயேசு விசுவாசத்தைத்தான் விரும்பினார் என்கிறார்கள் சிலர் (மாற்.10:51, 52). விசுவாசத்தோடு, மேல் வஸ்திரத்தை எறிந்துவிட்டு, அவன் சொன்னதைப் பாருங்கள்: "நான் பார்வையடைய வேண்டும்." அவனின் விசுவாச ஜெபம் அவனை பார்வையடையச் செய்தது. ஆமென். இயேசு, ஜெபித்தாயா? என்று கேட்காமல் விசுவாசித்தாயா? என்றுதான் கேட்டாராம். யாரிடம் கேட்டார்? தன்னைத் தேடி வந்து, தன்னிடம் பேசியவர்களிடம் - தொடர்பு

கொண்டவர்களிடம் - ஜெபித்தவர்களிடம் - தன்னோடு பேசினவர்களிடம் மட்டுமே! ஆக, விசுவாசமுள்ள ஜெபமே ஜெயம் தரும்.

இப்போது ஆபிரகாமைப் பார்க்கலாம்: ஊர் என்ற தேசத்தில் அவனை அழைத்த நாள் முதற்கொண்டு, மரிக்கும்வரை தேவனோடு பேசிக் கொண்டே இருந்தவன் ஆபிரகாம்; ஆபிரகாமோடே பேசிக் கொண்டே இருந்தவர் நம் தேவன். (தேவனோடே சம்பாஷணையே Communication - Prayer,) ஆபிரகாம் தேவனை விசுவாசித்து, தொழுது கொள்கிறவன் - ஆராதிக்கிறவன் - உறவு கொள்பவன் (ஆதி.12:7,8; 13:4, 18; 15:9-17 றவை ஆதி.15:6; ரோ.4:3,8; கலா.3:9). "ஆபிரகாம் ஜெபித்தான்; அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று வேதம் கூறவில்லை; ஆபிரகாம் விசுவாசித்தான்; அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (ஆதி.15:6) என்றுதான் உள்ளது. எனவே விசுவாசமே போதும்" என்பவர்கள் கிறிஸ்தவத்தில் உண்டு. இவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்: நீதி ஜெபத்தால் வராது; விசுவாசத்தால்தான் நீதி வரும்; ஆனால் அந்த நீதியின் பலனை அனுபவிக்க அல்லது பலன் வெளிப்பட தேவை விசுவாச அறிக்கை - கிரியை; அதிலும் பிரதானமான கிரியையாகிய தேவனிடம் பேசுவதாகும். நமது ஆரம்ப இரட்சிப்புக்கு இலக்கணமே இதுதானே! (ரோ.10:9,10). இதைத்தானே யாக்.2:20-24ல் ஆபிரகாம் பற்றி விளக்கப்பட்டிருக்கிறது. விசுவாச வீரர்கள் தாவீது, தானியேல் ஆகியோரின் ஜெபமெல்லாம், ஆபிரகாமைப் போன்ற விசுவாசத்தோடே கூடிய ஜெபம் என்று ஏன் பலர் உணர்வதில்லை? வேதமே வெளிச்சமாகட்டும்!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! ஜெபம் என்றாலே, கண்ணை மூடி முழங்கால் போட்டு, முட்டி தேய்த்து பண்ணுவதுதான் என்றிருக்கும், பெந்தெகொஸ்தே concept எப்போது மாறுபடுகிறதோ அப்போதுதான் இந்த சத்தியம் புரியும். ஜெபம் என்றாலே Communication தொடர்பு - என்று புரியாத வரைக்கும் ஜெபத்திற்கு எதிரிகள் எழும்புவது சகஜம்தான். விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதால் வரும். அந்த வசன விசுவாசத்தோடு நாம் தேவ சித்தமறிந்து கேட்டால்தான் தேவனிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியுமே தவிர, வெறுமனே விசுவாசம் மட்டும் கிரியைகளில்லாமலிருந்தால் எதையும் பெற்றுக் கொள்ளவே முடியாது. விசுவாசக் கிரியையிலே பிரதானம் தேவனோடு தொடர்பு - ஜெபம் Prayer. எனவே நாமெல்லாம் விசுவாசமுள்ள ஜெபத்தில் தொடர்ந்து நிலைத்திருப்போம்; ஜெயத்தைப் பெற்றுக் கொள்வோம் ஆமென்!

❖ ❖ ❖

# 3ம் ஆபத்து எப்போது நடக்கும்? என்ன நடக்கும்?

வரப்போகிற 7 ஆண்டு அந்தி கிறிஸ்துவின் காலத்தில், 3 ஆபத்துகள் நடக்கும் என்று வேதம் கூறுகின்றது (வெளி. 8:13). மனிதனுக்கான இவ்வுலக உரிமைப் பத்திரத்தை (Title Deed) பிசாசின் கையிலிருந்து இயேசு பிடுங்கிக் கொண்டார். அந்தப் பத்திரம் 7 முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருக்கிறது. இரகசிய வருகையிலே நாம் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு, பரலோகிலே இந்த 7 முத்திரைகளையும் ஒவ்வொன்றாக நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து- யூத ராஜசிங்கம் - உடைப்பார் என்றும், அப்போது பூமியிலே அசம்பாவிதங்கள் - ஆபத்துகள் - உண்டாகுமென்றும், வெளிப்படுத்தின விசேஷம் சொல்கின்றது. பூமியிலே உள்ள கைவிடப்பட்ட கிறிஸ்தவர் களுக்கும், இரட்சிக்கப்படாத (குழந்தை ஞானஸ்நானம் பெற்ற) பாரம்பரிய பெயர்க் கிறிஸ்தவர்களுக்கும், புறஜாதி மக்களுக்கும் வானத்திலிருந்து தேவ கோபாக்கினையும், அந்திகிறிஸ்துவால் உபத்திரவமும் உண்டாகும். பரலோகில் 7வது முத்திரை உடைக்கும்போது 7எக்காளம் ஊதப்படும்; 7வது எக்காளம் ஊதப்படும் போது 7 கலசங்கள் ஊற்றப்படும். இந்தக் காலக் கட்டத்தில் தான் பூமிக்கு 3 ஆபத்துக்கள். 5வது எக்காளம் ஊதும் போது (வெளி.9) 1ம் ஆபத்தும், 6வது எக்காளம் ஊதும்போது (வெளி.11) 2ம் ஆபத்தும், 7ம் எக்காளம் ஊத ஆரம்பித்தது முதல் கடைசி வரை 3ம் ஆபத்தும் பூமியில் உண்டாகும். இந்த ஆபத்து, இயேசுவின் 2ம் வருகைவரை நடக்கும். இதுகுறித்து இன்னும் ஆவியானவர் விளக்குவாராக!

7வது எக்காளம் ஊதும்போது, எருசலேம் ஆலயம் இஸ்ரேலர்களால் கட்டப்பட்டு பலிமுறைகள் நடக்கும். (கி.பி.70 முதல் இன்று வரை யூதர்கள் நியாயப் பிரமாண பலிமுறைகள் செய்யவில்லை என்றும், அதற்கான ஆலயம் இல்லை என்றும், அந்த ஆலயம் இருந்த இடத்தில்தான் மசூதி கட்டப்பட்டு தொழுகை நடக்கிறது என்றும், அந்த இடத்தை இஸ்ரேலருக்கு கொடுக்க பாலஸ்தீனியர்கள் சம்மதித்து விட்டார்கள் என்றும், அதுவரை அந்த இடத்திலே முஸ்லீம்களும், யூதர்களும் தொழுது கொள்ள அனுமதி கோரப்பட்டுள்ளது என்றும் நாமறிவோம்). அப்போது, எருசலேமில் 10ல் ஒருபங்கு இடிந்து விழும்படி பூமியதிர்ச்சி நடக்கும். 7000 பேர் மரிப்பர் (வெளி.11:13). 2ம் வானில் தலைமையிடமாக கொண்டு பூமியை ஆளும் சாத்தான் கீழே தள்ளப்படுவதால் (வெளி.12:12) இந்த பூமியிலுள்ளோருக்கு ஐயோ! 7வது எக்காளத்தோடு 7கலசம் வாதை ஊற்றப்படும். 1,2,3,4,5 கலசம் ஊற்றப்படும் போது கொப்பளங்கள் உருவாகும்; கடல், நதி, போன்றவை இரத்தமாக மாறும்; மகா உஷ்ணமும் அந்தகாரமும் உண்டாகும் (வெளி.16).

6வது கலசம் ஊற்றும்போது, ஐபிராத்து நதி வற்றும்; இஸ்ரேலர் தாயகம் திரும்புவது முடியும்; கிழக்கு தேச ராஜாக்கள் அர்மெகதோன் வருவார்கள்; புறஜாதி ராஜாக்களை 3ஆவிகள் கூட்டிச் சேர்க்கும்; அங்கே அர்மெகதோன் யுத்தம் உண்டாகும் (வெளி.16:17). 7வது கலசம் ஊற்றும் போது, மகா பூமியதிர்ச்சி உண்டாகி, பாலஸ்தீனா வரைபடமே மாறும். நேப்பிள்ஸ், லண்டன், பாரிஸ், கான் ஸ்டாண்டி நோபிள் போன்ற நரங்கள் அழிந்து போகும்; இயேசு பூமியை நியாயந் தீர்க்க பூமியில் கால் வைப்பார் (சக.14:4,5; 12:3; யூதா.14,15).

இதற்கிடையிலே, அந்திகிறிஸ்துவின் அட்டகாசம் பூமியில் நடக்கும். வெளி.17ன் படி, போப் தலைமையில், மத சம்பந்தமான ஒன்றும், வெளி 18ன்படி, அரசியல் சம்பந்தமான பாபிலோன் ஒன்றும் பூமியில் உருவாகும். **மத சம்பந்தமான பாபிலோன்** மூலமாய், அந்திகிறிஸ்து, யூத பரிசுத்தவான்களுக்கு எதிராய் எழும்புவான் (தானி.7:24; வெளி.13:6,7; 12:4,6). யாக்கோபின இக்கட்டுக் காலம் நடக்கும் (எரே.30:7).தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்காருவான்; பலியை ஒழியப் பண்ணுவான் (மத்.24:5; 2 தெச.2:4; தானி.9:27). தேவாலயத்தில் நுழைந்து இஸ்ரேலரை கொன்று குவிப்பான்; கர்ப்பவதிகளுக்கும், பால் கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ! (மத்.24:16-22). **அரசியல் சம்பந்தமான பாபிலோன்** மூலமாய், அக்கிரமம், அநியாயம் பெருகும் (ஏசா.13:19; வெளி.18:8-10; 18). மிருகத்தின் முத்திரை, அல்லது நாமம், அல்லது நாமத்தின் இலக்கம் குத்தப்படும் (வெளி.13:11-18). சமாதானமிராது; யுத்தங்கள் பெருகும். கள்ளத்தீர்க்கதரிசி எழும்பி, மிருகத்திற்கு சொரூபம் செய்து, வணங்காதவர்களை கொல்ல வைப்பான். வானத்திலிருந்து அக்கினியையே இறக்கி பெரிய அற்புதங்களை செய்து காட்டுவான் (எலியாவுக்கு முன்னாலே அன்று அக்கினியை இறக்க முடியவில்லை என்று அறிக). தப்பிப் பிழைக்க ஓடும் இஸ்ரேலருக்கு ஏதோமில் தேவன் அடைக்கலம் தருவார்! (வெளி.12:6; 13-17; ஏசா.16:1-5; எசே.20:33-37; ஓசி.2:14-23.) என்னே தேவ அன்பு!

இயேசு ஒலிவமலையில் கால் வைக்கும் போது ஒலிவமலை இரண்டாய்ப் பிளக்கும். பூமி 2ம் முறை அதிரும் (ஆகாய் 2:6; with எபி.12:26). அர்மெகதோன் யுத்தத்தில் அந்தி கிறிஸ்துவும் கள்ள தீர்க்கதரிசியும் பிடிக்கப்பட்டு உயிரோடே நரகத்தில் தள்ளப்படுவர் (வெளி.19:20). அந்திகிறிஸ்துவை சார்ந்தவர்களை இயேசு தன் வாயின் சுவாசத்தால் அழித்துப் போட்டு பறவைகளுக்கு விருந்தாக்குவார் (வெளி.19:17,18). "பிணம் எங்கேயோ கழுகு அங்கே வந்து கூடும்" என்ற வார்த்தை நிறைவேறும்.

இவ்வளவு பெரிதான ஆபத்திலிருந்து தப்பும்படி உன்னையும் என்னையும் காப்பேன் (வெளி.3:10) என்று சொன்ன தேவன், "சொல்லுகிறதை செய்கிறவர்; செய்கிறதை மாத்திரமே சொல்லுகிறவர்." அந்த தேவனின் இரகசிய வருகை அதிசீக்கிரம்! அதிலே எடுத்துக்கொள்ள ஆயத்தமா!

❖ ❖ ❖

## மோசேக்குமுன் நியாயப்பிரமாணம் இருந்ததா?

யோ.1:17ன் படி, நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின. இதன்படி, இயேசுவுக்கு முன்னால் கிருபையும் சத்தியமும் இல்லையா? (கலா.4:21-24). இது கேள்வி. ரோ.5:13ன்படி, "நியாயப் பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப் பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்பட மாட்டாது" என்பதால், நியாயப்பிரமாணம் ஆதி முதல் இல்லையா? ரோ.2:14ன்படி, நியாயப் பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப் பிரமாணப்படி எப்படி செய்கிறார்கள்? போத்திபாரின் மனைவியிடம், "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி?" என்று யோசேப்பு கேட்டதால் (ஆதி.39:9), மோசேக்கு முன் வாழ்ந்த யோசேப்புக்கு இந்தக் காரியம் பாவம் என்று எப்படித் தெரியும்? கலா.3:17ன் படி, ஆபிரகாமுக்கு 430 வருஷத்திற்குப் பின்தான் நியாயப் பிரமாணம் வந்ததாமே! இப்படி ஏராளமான காரியங்களை கேட்டுக் கொண்டே போகலாம். ஆவியானவர்தாமே இந்த கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

ஆதிமுதலே கிருபையும் சத்தியமும் இருந்தது. கிருபை இல்லையென்றால், ஆதாம் பாவம் செய்தபோது அவனைத் தேடி தேவன் வரத் தேவையில்லை. இதிலே ஒரு பெரிய காரியம் என்னவென்றால், இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்த பிறகுதான் நூற்றுக்கு நூறு கிருபையும் சத்தியமும் தெரியப்பட்டது. அல்லேலூயா! அதனால் தான் இந்தக் காலத்தைகிருபையின் காலம் என்று கணிக்கிறோம். அப்படியே, நூற்றுக்கு நூறு பத்துக்கற்பனைகளடங்கிய நியாயப்பிரமாணம் சீனாய் மலையில்தான் கொடுக்கப்பட்டது (யாத்.20-24). அதற்கு முன்பு அங்கொன்றும் இங்கொன்றுமான ஒருசில வசனக் காரியங்கள், தேவனாலும், தேவ மனுஷர்களாலும் தேவைப்படும் போதெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்வளவு தான். 100க்கு 100 நியாயப் பிரமாணம் கொடுக்கப்படாததால்தான்,

தண்டனைகளும் நிர்ணயிக்கப்படாத தால்தான், பாவம் உலகில் இருந்தும்கூட, அவைகள் எண்ணப்படவில்லை; கணக்கில் வைக்கப்படவில்லை. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபிறகு, பாவம் எண்ணப்பட்டதால், பாவத்தின் எண்ணிக்கை கூடியது. ஆமென். நியாயப்பிரமாணத்தின் அடிப்படைச் சத்தியமே, "தேவனிடத்தில் அன்புகூறு; உன்னைப்போல் பிறனையும் நேசி" (மத்.22:36-40). இந்த அன்பு மட்டும், நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாததற்கு முன்னும், இன்றும்கூட புறஜாதிகள் மத்தியிலும் சுபாவமாய் - அதாவது இயற்கையாகவே இருந்தது; இருக்கிறது என்று நாமறிவோம். ஆதி.39:9ஐ வாசித்தால், பிறருடைய பொருட்களை இச்சிக்கக்கூடாது என்ற பிரமாணம், யோசேப்புக்கு இயற்கையாகவே இருந்திருக்கிறது என அறியலாம். ஆக, மோசேக்கு முன்னதாக 100க்கு நூறு நியாயப் பிரமாணம் யாரிடமும் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறோம்.

7ம் நாள் சபையார் சொல்வது போல, ஆதியிலிருந்தே நியாயப்பிரமாணம் வாய்மொழியாய் 100க்கு 100 முழுமையாய் கொடுக்கப்பட்டது என்பதை வாதத்திற்கு எடுத்துக் கொண்டால், நிறைய காரியங்கள் தவறுதலாய் போகும். அதில் ஒன்றிரண்டு சொல்கிறேன் கேளுங்கள்:

(1) ஆதி.20:12ன் படி, மனைவி சாராள் ஆபிரகாமின் சகோதரி, அதே நேரத்தில் ஆபிரகாமின் தகப்பனுக்கு குமாரத்தி; ஆனாலும் தன் தாய்க்கு மகளல்ல. இது உண்மையானால், லேவி 18:9,11; 20:17ன் படி இப்படியாய் திருமணம் முடிப்பது, நியாயப்பிரமாணத்திற்கு முரணானது. ஆபிரகாம் காலத்திலேயே, நியாயப்பிரமாணம் முழுவதுமாய் வாய்மொழியாய் கொடுக்கப்பட்டிருந்தால், ஆபிரகாம் நியாயப் பிரமாணத்தை மீறினவனாகிறானே! அவன் எப்படி நீதிமானாவான்? ஒன்றிலே தவறினாலும் குற்றவாளிதானே! (யாக்.2:10). அப்படியானல், மோசேக்கு முன்பு நியாயப்பிரமாணம் முழுமையாய்க் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறோம். (2) ஆதி.29:16-31ஐ வாசித்தால், யாக்கோபு தன் முதல் மனைவியாகிய லேயாளின் சகோதரி ராகேலை மணந்தான். இது லேவி.18:18ன் படி, நியாயப்பிரமாணத்தை மீறிய பாவம். நியாயப்பிரமாணம் மோசேக்கு முன் கொடுக்கப்பட்டிருந்தால், யாக்கோபு இப்படி செய்திருப்பானா? சிந்தியுங்கள். (3) விபச்சாரிகளிடம் உடலுறவு கொள்வது பாவம் என்று யூதா காலத்திலேயே நியாயப்பிரமாணம் சொல்லப்பட்டிருந்தால், தன் மருமகள் தாமாரை வேசியென்று நினைத்து சயனித்திருப்பானா? (ஆதி.38:15,16). (4) அந்நிய நுகப்பிணைப்பு பாவம் என்று நியாயப் பிரமாணம் மூலம்

அறிந்திருந்தால், மோசே, புறஜாதி - மீதியானிய சிப்போராளை மணந்திருப்பானா? (யாத்.4: 24-26ஐ தியானியுங்கள்) யோசேப்பு எகிப்து தேசத்தாளை மணந்திருப்பானா? ஆபிரகாம் ஆகாரிடம் சேர்ந்திருப்பானா? ஏசா போன்ற வாலிபர்கள் அந்நிய பெண்களை மணந்திருப்பார்களா? எழுத்து வடிவில்நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாததால்தானே நோவாவிற்கு முன்பிருந்தே தேவனுடைய பிள்ளைகள், இரட்சிக்கப்படாத பெண்களை மணந்தனர்! (ஆதி.6:2) (5) 10 கற்பனையிலுள்ள 7ம் கற்பனை கொடுக்கப்பட்டிருந்தால், ஆதாம், காயீன் மற்றும் அவனது ஆரம்ப பிள்ளைகள் எப்படி மணம் முடித்து பிள்ளைகளைப் பெற்றிருக்க முடியும்? சிந்தியுங்கள். (6) நியாயப் பிரமாணம் முழுமையாய் கொடுக்கப்பட்டிருந்தால், விசுவாசத் தகப்பனாம் ஆபிரகாம் முதற்கொண்டு பலர், ஒன்றுக்கும் மேற்பட்டவர்களை மனைவிகாளக வைத்திருப்பார்களா? (7) லேவி.23ல் உள்ள 8 பண்டிகைகளை, யாராவது மோசேக்கு முன்னால் ஆசரித்தார்களா? பஸ்கா பண்டிகை எகிப்தை விட்டு வெளியேறும் போதும், ஓய்வுநாள் கைக்கொள்வது மன்னாகொடுத்த போதும்தானே இஸ்ரேலருக்கு சீனாய் மலைக்கு முன்னாலே தெரிவிக்கப்பட்டது! (8) பலதரப்பட்ட பலிமுறைகளும், ஆசாரிய முறைமைகளும் சீனாய் மலைக்கு முன்னால் இருந்தனவா? (9) ஆபிரகாம் ஈசாக்குக்குப் பெண்கொண்டது நியாயப் பிரமாணப்படியா? அல்லவே. தன் சுபாவப்படியேதான் செய்தான் (ஆதி.24:3,4). (10) நியாயப்பிரமாணம் இருந்திருந்தால், லோத்தின் மகள்கள் தகப்பனோடு உடலுறவு கொண்டு பிள்ளைகளைப் பெற்றிருப்பார்களா? (11) குடியும் வெறியும் பாவம் என்று பிரமாணத்தை அறிந்தா நோவா பாவம் செய்தான்? (12) நியாயப்பிரமாணப்படி லேவி கோத்திரமல்லாத மெல்கிசேதேக் எப்படி ஆபிரகாமின் ஆசாரியனானான். சிந்தியுங்கள்.

இன்னும் ஏராளம் சொல்லிக் கொண்டே போகலாம். ஏதேன்முதல், அறியாமையின் காலம், மனச்சாட்சியின் காலம், மனித அரசாங்க காலம், வாக்குத்தத்தத்தின் காலம், நியாயப்பிரமாண காலம், சபையின் காலம், தெய்வீக ராஜ்யத்தின் காலம் என்று இந்த பூமியின் காலத்தை வேதத்தின்படி, வேத வல்லுநர்கள் பிரித்திருப்பதை நாமறிவோம். அப்படியிருக்க, ஆதிமுதல் நியாயப் பிரமாணக்காலம் இருந்தது என்று சொல்வதில் அர்த்தமே இல்லை அல்லவா! இதை வாசிக்கும் தேவபிள்ளையே! சீனாய் மலையில்தான் நியாயப்பிரமாணம் முழுமையாய் மோசே மூலம் கொடுக்கப்பட்டது என்றும், அதற்குமுன் வாய்மொழியாக ஒரு சில காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்றும் அறிகிறோம். இப்படிச் சொல்லப்பட்ட ஒருசில விதிகளையும் கற்பனைகளையும், நியமங்களையும், பிரமாணங்களையும்தான் ஆபிரகாம்

கைக்கொண்டான் என்று ஆதி.26:4 சொல்கின்றது. மற்றப்படி முழு நியாயப் பிரமாணமும்மோசேக்குமுன் கொடுக்கப்படவே இல்லை. ஆமென். ஆவி நிலையிலுள்ள பரலோகவாசிகளான தேவதூதர்கள், நான்கு ஜீவன்கள், தேவ புத்திரர் போன்றோருக்காக நியாயப் பிரமாணத்தின் பழைய உடன்படிக்கையின் - ஷரத்தான 10 கற்பனைகள் பரலோகிலே இருக்கின்றன என்று கூறும் பொய்யர்கள் விதைக்கும் காரியம்தான், 10 கற்பனை களடங்கிய நியாயப் பிரமாணம் முழுவதும் மோசேக்கு முன்பாகவே இருந்தது என்பதாகும். வேதமே நமக்கு வெளிச்சமாகட்டும். இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தப்படுத்துவோம்!!

❖ ❖ ❖

## வேதம் சொல்லும் கலப்புத் திருமணம்

தற்கால முறைமைப்படி கலப்புத் திருமணம் என்றால், இரண்டுவிதமான ஜாதியார் செய்துகொள்ளும் திருமணமாகும். அதிலே விசேஷமாய் தாழ்ந்த ஜாதியாரும், உயர்ந்த ஜாதியாரும் செய்யும் திருமணமாகும். இதைத்தான் தமிழ்நாட்டில் பெரியார் முதல் பல தலைவர்கள் ஊக்குவித்து வந்தனர். அதையொட்டி, கலப்புத் திருமண தம்பதிகளுக்கு பலதரப்பட்ட சலுகைகளும் தமிழக அரசால் அளிக்கப்படுகின்றன. இந்தத் திருமணத்தால், நாட்டிலுள்ள ஜாதி சம்பிரதாயங்கள் ஒழிந்து "எல்லோரும் ஓர் குலம்" என்றநிலை வரும் என்று தலைவர்கள் நினைத்தனர். ஆனால் இன்றுவரை சாதிகள் ஒழியவே இல்லை; சாதிச் சண்டைகள்தான் பெருகிக் கொண்டிருக்கின்றன. இந்த ஜாதிப் பிரிவுகள் மனிதர்களால் உருவாக்கப்பட்டு கேடு விளைவிப்பவை. இந்த ஜாதிகள், பொருளாதார உயர்வு தாழ்வால்தான் உருவானது என்று சொன்னாலும், எல்லா ஜாதிகளிலும் பொருளாதாரம் வளர்ந்துவிட்ட இன்றைய நிலையிலும் இன்னும் ஏற்றத் தாழ்வுகள் மாறவில்லை. காரணம்... இந்த சாதி ஏற்றத்தாழ்வு பொருளாதார அடிப்படையில் மட்டுமல்ல; சமுதாய நிலைமையிலும் உருவானவை. Not only economically but also socially. இந்த ஏற்றத்தாழ்வை மாற்ற, மனமாற்றமே மிகவும் தேவை. அது மனிதனின் முயற்சியால் ஒருக்காலும் முழுமையாய்க் கிடைக்காது.

**வேதம் சொல்லும் கலப்புத் திருமணம், சாதிக்கலப்பு பற்றியது அல்ல;** ஒருவன் கிறிஸ்தவனாய் மாறிவிட்டாலே அவனுக்குள் சாதியில்லை; அனைவரும் சமம். ஆனால் இன்றைய கிறிஸ்தவ வட்டாரத்தில் இன்னும்

சாதி வேறுபாடுகள் தலைதூக்கி நிற்பதால், கிறிஸ்தவத்தின் மகிமை நம்மவர்களாலேயே இழந்து போகிறது. வேதம் சொல்லும் வசன வாழ்வு இல்லாததினாலே இப்படிப்பட்ட விசனமான காரியங்களை சந்திக்க வேண்டியிருக்கிறது. இது போன்ற சாதி உணர்வுகள் உள்ளவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லர்; அவர்கள் அக்கிரம செய்கைக்காரர்கள் (Lawlessness); அவர்களை அறியேன் என்று தேவன் சொல்லுவார் (மத்.7:22, 23). **சாதி வித்தியாசம் ஒழிய விடைதரும் மார்க்கம் கிறிஸ்தவமே!** அல்லேலூயா!

**சாதி சம்பந்தமில்லாத, வேதம் சொல்லும் கலப்புத் திருமணம் எது?** இன்றைக்கு உலகிலே எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. ஆனால், கிறிஸ்தவம் என்பது மதமல்ல; மனிதர்கள் வாழத் தேவையான மார்க்கம். இது ஜீவமார்க்கம் (அப்.2:28; 7:38). இந்த மார்க்கம் இம்மையிலே நூறத்தனை ஆசீர்வாதமும் மறுமையிலே நித்திய ஜீவனும் தருகிற மார்க்கம் (மாற்.10:29,30). இந்த மார்க்கத்தின் வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு கிறிஸ்துவே! இது மனமாற்றத்தைக் கொடுக்கிற மார்க்கம் என்பதால் (2 கொரி.5:17; ரோ.10:9,10; 1 கொரி.6:11) உலகத்திலே உள்ள சாதி - பொருளாதார - உயர்வு தாழ்வுகளை மாற்றும் வல்லமையுள்ளது. மரணத்தையே ஜெயித்தவர் உருவாக்கிய மார்க்கமல்லவா! இந்த மார்க்கத்தைச் சேர்ந்தவன், கிறிஸ்தவமல்லாத வேறு எந்த மதத்தோடோ சம்பந்தம் கலந்தால், அதுதான்வேதம் சொல்லும் கலப்புத் திருமணம். **இப்படிப்பட்ட கலப்புத் திருமணத்தை வேதம் அடியோடு வெறுக்கிறது.** இதைத்தான் அந்நிய நுகப் பிணைப்பு என்று வேதம் சொல்கின்றது (2 கொரி.6:14-17; அப்.2:40).

மத்.11:28-30ஐ வாசித்தால், இயேசு தரும் நுகம் ஆத்மாவிற்கு இளைப்பாறுதல் தரும்; ஆத்மா செழிப்பாவதால் (Thou shalt be prospersous and be in good health) (3 யோ.2), இந்த ஆசீர்வாதம் இம்மையில் தொடங்கி, மறுமை வரை செல்லும். இயேசுவின் நுகம்தான் அவரது வார்த்தை. வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு. இந்த வார்த்தையாகிய நுகமுள்ளவன் கிறிஸ்துவை தரித்திருக்கும் கிறிஸ்தவன், இந்த நுகத்தில் உள்ளவன், உலகிலுள்ள வேறுமத - மார்க்க நுகங்களோடு இணைவதுதான் அந்நிய நுகப்பிணைப்பு; கலப்புத்திருமணம். இந்த அந்நிய நுகப்பிணைப்பு-கலப்புத் திருமணம் ஊழியத்திலும் கூடாது; திருமணத்திலும் கூடாது. யாத்.4:24-26ஐ வாசித்தால், ஊழியத்திற்கு, அந்நிய நுகத்தாளாகிய தன் மனைவியோடு வந்ததற்கே தேவன் மோசேயை கொல்லப் பார்த்தாரல்லவா! நமது காலம் கிருபையின் காலமாய் இருக்கிறபடியினால், இப்படியாய்

ஊழியம் செய்வோர் உயிரோடு இருக்கிறார்கள். முடிவோ.. பரிதாபம். இயேசுகிறிஸ்து மற்றும் அப்போஸ்தலர்களின் நுகத்திற்கு - வார்த்தைக்கு விரோதமாய் போகும் மார்க்கமோ, சபையோ, இயக்கமோ, மதமோ எல்லாமே அந்நிய நுகம்தான். சிலர் நினைப்பது:- இந்து, முஸ்லீம் போன்றோர்தான் அந்நிய நுகம் என்று, அவர்கள் மட்டுமல்ல.. பாவமறியா பச்சிளம் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, இயேசுவின் மரணம் - உயிர்த்தெழுதலை அவமாக்குகிறவர்களும் அந்நிய நுகத்தார்தான். லேவி.23ல் சொல்லப்பட்ட நிழலாட்டமான பண்டிகைகளை, நிஜமாகிய இயேசு வந்தபின்பும் விசுவாசிக்காமல் (கொலோ.2:16,17) கொண்டாடுகிறவர்களும். அந்நிய நுகத்தார்தான்; ஆசாரியத்துவம் இயேசுவால் மாற்றப்பட்டும் இன்னும் ஆசாரிய முறைமைகளான அங்கி, கச்சை, தூபவர்க்கம், குத்துவிளக்கு, பலிபீடம் போன்றவற்றை கைக்கொள்பவர்களும், அந்நிய நுகத்தார்தான்; நியாயப் பிரமாணமாகிய சனிக்கிழமையாகிய ஓய்வுநாள் இயேசு வந்தபின் ஒழிந்துபோன பின்னும், அதைக் கைக்கொள்பவர்களும்; அந்த சனிக்கிழமை ஓய்வுநாளை ஞாயிற்றுக் கிழமைக்கு (Sun Day-சூரிய தேவதையின் நாள்) மாற்றி ஆசரிப்பவர்களும், மேசியாவை மறுதலிக்கிற - அவமதிக்கிற - அந்நிய நுகத்தார் தான். ஈனச்சிலுவையை, புனித சின்னம் என்று சொல்லி, அதற்கு துண்டு போட்டு, மாலை அணிவித்து, விக்கிர மாக்குவதும், சிலைகளை உருவாக்கி வணங்குவதும், புறாவைப்போட்டு ஆவியானவர் என்று மரியாதை தருவதும், மரியாள் வணக்கமும், அந்நிய நுகத்தாரின் பணிதான். செத்தவர்களின் ஆத்மாவிற்காக ஜெபிப்பவர்களும், விசுவாசிகளின் பாவங்களை மன்னிக்கிறவர்களும், இயேசுவோடு சிலுவையில் ஒழிந்த 10 கற்பனைகளடங்கிய நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்பவர்களும், இயேசுவின் உருவத்தை உருவாக்குபவர்களும், மதிப்பவர்களும், மொத்தத்தில் வசனத்திற்கு விரோதமான மார்க்கத்தார் எல்லாருமே அந்நிய நுகத்தார்தான். அவர்களோடு கலவாதிருக்க வேண்டுமென்பது வேதக் கட்டளை.

இஸ்ரேல் மக்கள் வனாந்திரத்திலும், கானானிலும், எவ்வளவோ பாவங்கள் செய்தாலும், நம் தேவன் அருவருத்த மிகப் பிரதான பாவம் அந்நிய நுகப்பிணைப்புதான். அன்றைக்கு கானான் தேச 7விதமான ஜாதியாரிடமிருந்து அது வந்தது; இன்றோ சபையிலே பக்கவழியாய் பலர் நுழைந்திருக்கிறார்கள்; இவர்கள் காயீன்கள், பிலேயாம்கள், கோராகுகள், யேசபேல்கள் (யூதா.4,11, வெளி.2:20). இதனால்தான், ஆதியிலேயே, சத்திய மாறுபாடு, ஜீவிய மாறுபாடுள்ள சந்ததியை விட்டு விலகி, இரட்சிப்பை காத்துக்கொள்ள பேதுரு, அப்.2:40ல் கூறுகிறான்.

நமது விசுவாச தகப்பனைப் பாருங்கள். ஈசாக்குக்கு அந்நிய ஸ்திரிகளைத் தேடாமல் (ஆதி.24:3) தன் மார்க்கத்தானாகிய நாகோர் வம்சத்திலேயே தேடினான் (ஆதி.31:53) ("ஆபிரகாம் தன் ஜாதியில்தான் பெண் எடுத்தானா?" என்ற செய்தியை ஆசிரியரின் "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற நூலில் வாசியுங்கள்). அப்படியே ஈசாக்கும் யாக்கோபுக்கு செய்தான் (ஆதி.28:1,2). இந்த ஆதிப்பிதாக்களின் செயல்பாடுகள் நமக்கு திருஷ்டாந்தமாய் இருக்கின்றன. சாலமோனைப் பாருங்கள்; அந்நிய நுகப்பிணைப்பாலே விசுவாசிகள் பட்டியலில் பெயர் இல்லாமல் போனான் (1 ராஜா 11). பெற்றோர்கள் சொல்லியும் கேளாமல் பெலிஸ்தியாளை மணந்த சிம்சோனைப் பாருங்கள் (நியா.14,15). அந்நிய ஸ்திரிகளை மணந்த மோசே, யோசேப்பு போன்றோரையும் பாருங்கள். அவர்கள் தங்கள் மனைவிமார்களை தங்கள் மார்க்கத்திற்கு - நுகத்திற்கு கொண்டு வந்துவிட்டார்கள் அல்லவா! இன்றைக்கு இப்படியாய் கொண்டுவந்து விடுவேன் என்று திருமணம் முடிப்போர், சாலமோன் போலத்தான் ஆகிவிடுகிறார்கள். **இப்படிப்பட்ட பாவங்களை செய்கிற விசுவாசிகளை, காணிக்கைக்காகவும், கூட்டத்திற்காகவும் போதகர்களே கண்டு கொள்வதில்லை.** ஊழிய விஷயத்திலும், அந்நிய நுகத்தான் தரும் பணத்துக்காக, பதவிக்காக, ஜாதி கௌரவத்திற்காக, பகட்டுக்காக, அவர்களுக்காக - அவர்களோடு ஊழியம் செய்யும்போது, கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கிறார்கள்; கலப்பு ஊழியத்தை நடத்துகிறார்கள். C.S.I., R.C. பாப்டிஸ்ட், மெதடிஸ்ட், E.C.I., F.M.P.B. இல்லந்தோறும் நற்செய்தி, இயேசு அழைக்கிறார். இயேசு விடுவிக்கிறார், I.M.S. போன்ற பல ஊழியங்களின் நுகத்தோடு இணைந்து ஊழியம் செய்கிறார்கள். இஃதெல்லாம் பார்வைக்கு இனிமையாய் தெரியும்: முடிவோ பரிதாபமாகும். 1 தீமோ.5:24 இப்படிப்பட்டவர்களுக்காகத்தான்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! வரப்போகும் காலங்களிலாவது, ஊழியத்திலும் திருமணத்திலும் அந்நிய நுகப்பிணைப்பை அடியோடு ஒழிப்போம்! வேதம் அருவருத்துச் சொல்லும் இந்த கலப்புத் திருமணம் - கலப்பு ஊழியம் - நமக்கு வேண்டாம்! நமது மார்க்கம் இயேசுவின் மார்க்கம்! நமதுவழி இயேசுவின் வார்த்தை! உலகத்திலே சாட்சியாய் வாழ்வோம்! ஆக்கினைத் தீர்ப்புக்கு தப்பிக் கொள்வோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

# திறப்பின் வாசலும், திறந்த வாசலும்

திறப்பு என்றால் ‘Gap’, அதாவது, சந்து விழுதல், ஓட்டை விழுதல், வெடிப்பு, கீறல் ஏற்படுதல் என்பதாகும். திறந்த என்றால் ‘open’, அதாவது திறந்திருக்கின்ற, "பூட்டப்படாத - மூடப்படாத" என்பதாகும். இந்த இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல், ஆவிக்குரிய கிறிஸ்தவ வட்டாரம் யார் பின்னாலேயோ போய்க் கொண்டிருக்கின்றது. என்னதான் பாலூட்டி, தாலாட்டி, கண்விழித்து வளர்த்தாலும், ஒரு குடுகுடுப்பைக்காரன் வந்த உடனே அந்தத் தாயை விட்டுவிட்டு, மடியிலிருந்து அவனிடத்தில் தாவும் குழந்தையைப் போலிருக்கிறது இது. இதுகுறித்து ஏற்கெனவே ஆவியானவர் வெளிப்படுத்திய கருகலான சத்தியத்தை மீண்டும் கேட்டு, அதை அப்பியாசிக்கிற பாக்கியவான்களாய் மாறுவோம் (வெளி.1:3). ஆமென்!

பெரிய அணையோ, ஏரியோ, ஆறோ, அதன் கரையில் வெடிப்பு அல்லது ஓட்டை விழுந்து, அது உடையும் நிலையில், திறக்கும் நிலையில் இருக்கும்போது, அந்தத் திறப்பின் வாயிலில் நின்று அணைபோட்டுத் தடுத்தால்தான் பக்கத்து கிராமங்களை அழிவிலிருந்து காக்க முடியும். இது உலகக் காரியம். ஆவிக்குரிய நிலையிலும் அழிவை உண்டாக்கும் திறப்பின் வாசலை அடைக்க வேண்டியதிருக்கிறதே! அது என்ன? மனிதர்களின் அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் சாபங்கள் பெருகிப் போனதால் தேவ தண்டனை தானாய் இறங்கிவரும் வேளையில் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அன்று, நோவாவின் காலத்தில், மனுஷனை முதற்கொண்டு, மிருகங்கள், ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள் பரியந்தமும் உண்டாயிருக்கிறவைகளை நிக்கிரகம் பண்ணுவேன்" (ஆதி.6:7) என்றெண்ணி, ஜலப்பிரளயம் என்ற தண்டனை, மடை திறந்த வெள்ளமாய் பூமியின் மேல் வரும் போது, அதைத் தடுக்க யாரும் முன்வரவில்லை. தேவனே, நோவாவைக் கண்டுபிடித்து, ஒரு பேழையை உண்டாக்கச் சொல்லி, 8 பேரை காப்பாற்றினார். அந்த பேழைதான் - இயேசுவாகிய பேழைதான் - அன்றும் இன்றும் என்றும் திறப்பின் வாசல் வழியாய் பீறிட்டெழும் கோபாக்கினைகளிலிருந்தும், மகா உபத்திரவங்களிலிருந்தும் நம்மைப் பாதுகாக்கும். அல்லேலூயா!

ஆபிரகாம் காலத்தில், சோதோம் கோமோராவுக்கு நேராய், தேவ கோபாக்கினை உண்டாயிற்று. அந்த திறப்பை Gapஐ - எப்படி அடைப்பது என்று, ஆபிரகாம் ஜெபிக்கிறான் தேவனிடம். எத்தனை பதில் கிடைத்தாலும் முடிவானதாய் ஏதும் இல்லாமல் போனதால், திறப்பு திறப்புத்தான்; அழிவு அழிவுதான் ஆயிற்று (ஆதி.18:23-33). என்ன ஜெபம் பண்ணினாலும் சரி.

எத்தனை நீதிமான்கள் இருந்தாலும் சரி, சாபமும் தண்டனையும் திறந்துவிட்ட நிலையில் அதைத் தடுக்கும்படியாய் ஒரு ஆளையோ, ஒரு காரியத்தையோ செய்ய தேவனே அனுப்பாத வரையில், விடிவு காலமே இல்லை. ஆமென்!

ஒரேபிலே, விக்கிரக ஆராதனை செய்த மக்கள் அனைவரையும் அழிக்க தேவன் எத்தனித்த போது, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, அவருக்கு முன்பாக திறப்பின் வாயிலிலே நின்றான் மோசே, "தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும். இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப் போடும் என்றான்" (யாத்.32:32). தன் ஜீவனையே கொடுக்க ஒப்புக் கொடுத்தான். அழிவு நிறுத்தப்பட்டது. சங்.106:23ஐ வாசியுங்கள்: "ஆகையால் அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார். அப்பொழுது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும் பொருட்டு, அவருக்கு முன்பாக திறப்பின் வாயிலிலே நின்றான்." உயிர் போனாலும் கவலையில்லை; எப்படியோ மக்கள் காக்கப்பட வேண்டும். இப்படி நிற்பதுதான் திறப்பின் வாயிலில் நிற்பது. இதனால் ஓட்டை - திறப்பு - வெடிப்பு - பிளவு அடைபடுகிறது. அப்படி ஜீவனைக் கொடுக்க நின்றவன்தான் மோசே! இதனாலேயே அன்று விடுதலை கிடைத்தது இஸ்ரேலருக்கு! இப்படியாய் ஜீவனைக் கொடுத்து காப்பாற்றுவதுதான் திறப்பின் வாயிலில் நிற்பது.

காலங்கள் போகப் போக, இஸ்ரேலருக்கு அழிவு சடிதியில் வரும்போது, இஸ்ரேலன் ஒருவன் தன் ஜீவனை அர்ப்பணித்து அந்த திறப்பானதை அடைப்பான் என்று தேவன் நம்பினார் (ஏசா.58:12). தேவன் தேடினார்.. தேடினார்... ஒருவனும் அகப்படவில்லை. "நான் தேசத்தை அழிக்காத படிக்கு திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன். ஒருவனையும் காணேன்" (எசே.22:30). "நீங்கள் கர்த்தருடைய நாளிலே யுத்தத்தில் நிலைநிற்கும்படிக்குத் திறப்புகளில் ஏறினதுமில்லை; இஸ்ரேல் வம்சத்தாருக்காக சுவரை அடைத்ததுமில்லை" (எசே.13:5) என்று தேவனே சொல்லியிருக்கிறார். அன்றைக்கு வனாந்திரத்திலே திறப்பின் வாயிலில் நின்ற மோசேயைப் போல பிந்தின மோசேயாய் வார்த்தையாகிய தேவனே வெளிப்பட்டார் (உபா.18:18;அப்.3:22, 23;7:37). தன் ஜீவனையே கொடுத்து, நித்திய அழிவாகிய நரகத்தினின்று மீட்டு இரட்சித்தார் (யோ.3:16). இது பரலோகத்திலேயே, நமக்காய் திறப்பின் வாயிலில் நிற்க தேவனே எடுத்த முடிவு (சங்.40:6-8; எபி.10:5-7). அல்லேலூயா!

கிறிஸ்துவுக்குப் பின்னாலே, அழிவிலிருந்து காக்க, திறப்பின் வாயிலில் நின்று ஜீவனைத்தர வேறொரு மனிதன் இதுவரைக்கும் எழும்பவுமில்லை; எழும்பப்போவதுமில்லை; தேவையுமில்லை (எபி.1:1,2). உண்மை இப்படியிருக்க, இன்றைக்கு ஊர் ஊராய் "திறப்பின் வாசல் ஜெபம்" என்று சொல்லி, இயேசு, திறப்பின் வாசலில் நின்று மரணத்திற்குள்ளானதை விசுவாசித்து அறிக்கையிடாமல், தாங்களும் இயேசுவைப்போல் செய்கிறோம் என்று, தேவனாம் இயேசுவுக்கு தங்களை சமமாக்கி, அறிந்தோ அறியாமலோ கொடரமான பாவத்தைச் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இன்னாரென்று கிறிஸ்தவ வட்டாரம் தெரிந்துகொள்ள வேண்டாமா? ஜெபம் செய்வது வேறு; திறப்பின் வாசலில் நின்று ஜீவனைக் கொடுப்பது வேறு என்று புரிந்துகொள்ள வேண்டாமா? ஆபிரகாம் ஜெபித்தான்; திறப்பின் வாசலில் நிற்கவில்லை. மோசே திறப்பின் வாசலிலே நின்றான். இப்படி நிஜமாக இயேசு தன் விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தி திறப்பின் வாசலில் நின்றதை விசுவாசித்து செயல்படுவோம்! தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வோம்! **இயேசுவின், திறப்பின் வாசலில் நின்றபணியே தேவனின் கடைசிக்கால இறுதிப்பணி.** அல்லேலூயா!

இயேசு மரித்தார்; திரைச்சீலை இரண்டாய் கிழிந்தது. தைரியமாய் நாமெல்லாரும் கிருபாசனத்தண்டையில் சேரவாசல் திறந்திருக்கிறது - opened. (எபி.4;16). இயேசுவாகிய அந்த வாசல் வழியாய் ஆத்மாக்களை அழைத்துக் கொண்டு போவதுதான் நம்பணி. அதற்காக உன்னையும் என்னையும் தெரிந்து கொண்டிருக்கிறார் (மத்.28:18-20) இதனால் இரக்கம், கிருபை, ஆசீர்வாதம் கிடைக்கிறது: இம்மையிலே நூறத்தனையும் மறுமையிலே நித்திய ஜீவனும் கிடைக்கிறது (மாற்.19,29,30). இந்த திறந்த வாசலின் நேராய் ஆத்மாக்கள் வர ஜெபியுங்கள்; பிரயாசப்படுங்கள். தேவைப்பட்டால் இரத்த சாட்சியாய் மாறவும் தயாராகுங்கள்.

இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! இயேசு முடித்த காரியத்தை விசுவாசித்து செயல்படாமல், அதையே தானும் செய்கிறேன் என்று சொல்லும் மாறுபாடுள்ள சந்ததிகளோடு சேராமல் (அப்.2:40), அவர் சொல்லிவிட்டுப் போன செயல்களை மட்டுமே கைக்கொள்வோம்! திறப்பின் வாசசலில் இயேசு நின்ற இரட்சிப்பின் சுவிசேஷத்தை சொல்லி, ஜனங்களை, திறந்த வாசலுக்குள் நடத்துவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!! வெளுத்ததெல்லாம் பாலென்று நம்பியது போதும்! இனிமேலாவது புதுமையாய் வசனப்படி செயல்படுவோம். ஆமென்!

❖ ❖ ❖

## தாவீது ஜெபித்தது சரியா?

தேவனின் இருதயத்திற்கேற்ற தாவீது (அப்.13:22) பிரதானமாய் தேவனின் இரண்டு பிரமாணங்களை மீறினான். (1) உரியாவின் மனைவியை கற்பழித்தான் (2) உரியாவைக் கொன்று போட்டு பத்சபாளை தன் வசமாக்கினான். இந்த பாவங்களுக்காய் தீர்க்கதரிசியிடமும் தேவனிடமும்மன்னிப்புக் கேட்டான் (2 சாமு.12:12). இது சம்பந்தமாய் 51ம் சங்கீதமே பாடினான். அதிலே 11ம் வசனத்தில் "உமது சமுகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும்" என்று ஜெபிக்கிறான். இப்படியாய் தாவீது வேண்டியது சரியா? இது பயத்தால் வந்த ஜெபமா? ஆவியானவர்தாமே இந்த கருகலான காரியத்தை விளக்குவாராக!

**இதிலே இரண்டு காரியம் சொல்லப்பட்டிருக்கிறது.** (1) பாவியை சமூகத்தை விட்டுதள்ளுவார். (2) பரிசுத்த ஆவியை, வல்லமையை பாவியிடமிருந்து எடுத்துக் கொள்வார்.

**1. பாவியை தேவ சமூகத்தை விட்டு தள்ளுவாரா?:** தேவ சமூகத்தைவிட்டு பாவியை தள்ளிவிடுவார் என்று, விசுவாசிப்பது. ஏதேனில் பாவம் செய்து பயந்து ஒளிந்துகொண்ட ஆதாம் - ஏவாளின் ஆவியாகும் (ஆதி.3:8). நம் தேவன் அன்புள்ளவர், நாம் பாவிகளாயிருக்கையில் நமக்காய் ஜீவனைத் தந்தார் (ரோ.8:5). இப்படிப்பட்டதான தேவ அன்பு (Agappe) தேவனிடம் உண்டு என்ற விசுவாசம் இல்லாததால் இன்றைக்கு பல கிறிஸ்தவர்களை பயத்தின் ஆவி வாட்டுகிறது. அதனால் தான் அவர் வேதம் முழுவதும், "பயப்படாதே; கலங்காதே; திகையாதே" என்ற தைரிய வார்த்தையை அடிக்கடி சொல்கிறார். இதனால்தான் ஆதாமைத் தேடியே வந்தார்; ஒளிந்திருந்த அவனைக் கூப்பிட்டார். நீ நிர்வாணி என்று சொன்னவன் யாரென்று கேட்டார் (ஆதி.3:9-11). ஆதாமுக்கு ஆறுதல் இப்படியாய் சொல்லி, அவன் வாயிலிருந்து விசுவாச வார்த்தைகளை எதிர்பார்த்தார். கிடைக்கவில்லை.

அதுபோல மோசே எகிப்தியனைக் கொலை செய்தான். பார்வோனுக்குப் பயந்து மீதியானுக்கு ஓடியே போனான். ஆனாலும் தேவன் அந்த கொலைகாரப் பாவியை தேடிப்போய் சந்தித்து, தன் பக்கம் இழுத்துக் கொண்டார். அல்லேலூயா! 1 யோ.1:7-9 வசனங்கள் எதற்கு? அவர் மறக்கிறவர்; மன்னிக்கிறவர் என்பதால் தானே! தேவனைப் பற்றி சங்.103:8-18ஐ எழுதிய தாவீதே, இந்த சங்.51:11ல் உமது சமூகத்தைவிட்டு என்னைத்

தள்ளாதேயும் என்கிறான். பாவம் செய்த உடனே விசுவாசம் தளர்ந்துபோய், வேறுவிதமாய்ப் பேசுகிறான். இது பிசாசின் செயல். பழைய ஏற்பாட்டில் பாவ நிவிர்த்தி - பாவ நிவாரணம் செய்யப்பட்டு, நம் பாவங்கள் மூடப்படுகின்றது. புதிய ஏற்பாட்டிலே, இயேசுவின் மரணத்தாலே பாவங்கள் Erazed- அழிக்கப்படுகின்றன. ஏசா.43:25; 44:22ஐ தியானியுங்கள். யோசுவாவிடம் தேவன் சொன்னது என்ன? "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; கை விடுவதுமில்லை" (யோசு.1:5). பரலோகம் போகும்போது சீஷர்களிடம் சொன்னது என்ன? "பூமியின் கடைசி பரியந்தம் நான் உங்களோடு இருப்பேன்" (மத்.28:20). **நம் தேவன் சொல்லுகிறதை செய்கிறவர்; செய்வதை மாத்திரமே சொல்லுகிறவர்.**

உலகத்திலே 3விதமான ஆவிகள் உள்ளன. (1) மனித ஆவி (2) பிசாசின் ஆவி (3) தேவ ஆவி (1 கொரி.2:11,12). மனிதன் பாவம் செய்தால், மனிதனின் ஆவி குற்ற உணர்வைக் கொடுக்கும் (conviction); சாத்தானின் ஆவி நம்மை கண்டனம் பண்ணும் (condemnation); தேவ ஆவி நம்மைத் தேற்றும் (comfort). ஆமென். நம் தேவன் நம்மோடு வடவே இருந்து ஆற்றுவார்; தேற்றுவார் ஒரு தாயைப் போல. கெட்ட குமாரன் (Prodicalson) கதையைப் பாருங்கள். அவன் பாவம் செய்தாலும் அவனைத் தகப்பன் தள்ளவில்லை; மாறாக எப்போது திரும்பி வருவான் என்று காத்துக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட தேவன் நம்தேவன். அப்படியே "காணாமல் போன ஆடு" கதையைப் பாருங்கள். அந்த ஒரு ஆட்டின்மேல் எவ்வளவு அன்பு கொண்ட மேய்ப்பனைக் காண்கிறோம். அப்படித் தான் நம் தேவனும், நிறையப்பேர் பாவம் செய்தாலே சர்ச்சுக்கே வருவதில்லை; ஜெபமே செய்வதில்லை. Fear is the reverse gear of faith. நமது ஊழியர்கள் பலரும், விசுவாசி ஒருவன் தனக்குள்ளேயே பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்று வந்தாலும்கூட, இராப்போஜனம் அவனுக்கு கொடுப்பதில்லை. யூதாஸ் இராப்போஜனம் பெற்றதை யாரும் சிந்திப்பாரில்லை.

2. பரிசுத்த ஆவியை - வல்லமையை எடுத்துக் கொள்வாரா?: கொடுக்கிற வள்ளலான நம்தேவன் ஒருபோதும் கொடுத்ததை எடுக்கவே மாட்டார். அவருடைய கிருபை வரங்கள் மாறாதவை (ரோ.11:29). "கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்" என்று சொல்வது யோபுவின் அறியாமையின் ஆவி (யோபு.42:2). தேவனின் வாக்குறுதி என்ன தெரியுமா? யோ.14:16ஐ ஆங்கிலத்தில் வாசியுங்கள். என்றென்றும் ஆவியானவர் நம்மோடு இருப்பார். எபே.4:30ஐ வாசித்தால், நாம் பாவம் செய்யும்போது நமக்குள்ளே இருந்து துக்கப்படுவார்; விலகமாட்டார் - No divorce. இந்த விசுவாச

வெளிப்பாடெல்லாம் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு முழுமையாய் தெரியவில்லை (யோ.1:17). நாமோ விசேஷித்தவர்கள் (எபி. 11:39,40). அல்லேலூயா! பரிசுத்த ஆவியானவர் எடுபடாததால்தான். வாரம் முழுவதும் புதிய ஏற்பாட்டு விசுவாசி, பாவம் செய்தாலும், ஆராதனையின் போது, அந்நிய பாஷையில் பேசி ஆவியில் நிறைகிறான். Holy spirit will abide with us for ever என்ற வெளிப்பாடு தெரியாததால்தான் பலர் பல மாதிரி இது குறித்து கேள்வி கேட்கிறார்கள்.

ஆக, தேவபிள்ளையே! நாம் பாவம் செய்தாலும் தேவ பிரசன்னம் இருக்கும்; ஆவியானவர் இருப்பார். எப்படியோ, தாவீது, தான் அறிந்த அளவிற்கு யோபுவைப் போல் உண்மையுள்ளவனாய் இருந்தான். அவன் பாவம் மனனிக்கப்பட்டது. அதனால்தான் தேவனே அவனைப்பற்றி 1 ராஜா 15:15ல் சாட்சி கொடுக்கிறார். **பாவம் மன்னிக்கப்பட்டிருந்தும், அதனால் வரும் சாபத்தைப் பற்றி தாவீதுக்கு முழு அறிவு இல்லை;** அதை அறிக்கையிட்டு விடுதலை பெற அவன் நினைக்கவில்லை. அதனாலேயே சாபத்தாலேயே அலைக்கழிக்கப்பட்டான். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் எல்லோருக்கும் இந்த விஷயத்திலே முழுமையான வெளிப்பாடு இல்லை.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உண்மைச் சத்தியத்தை உணர்ந்து செயல்படுவோம்! பாவம் செய்தாலும், பயப்படாமல், தேவனோடு இருந்து பாவ மன்னிப்பு பெற்று, சாபமெல்லாம் விலகியது என அறிக்கையிட்டு செயல்படுவோம்! வெற்றி நமதே! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## இரட்சிப்பும் மீட்பும்

ரோ.10:9,10ன்படி, இருதயமாகிய ஆவியிலே விசுவாசித்து, வாயினாலே அறிக்கை பண்ணினால் இரட்சிப்பு உண்டாகிறது. ஆனால், மாற்.16:16ன்படி ஞானஸ்நானம் பெற்றால்தான் இரட்சிப்பு என்று உள்ளது. மத்.24:13ன் படி முடிவுபரியந்தம் நிலைத்து நிற்பவனே இரட்சிக்கப்படுவான் என்றிருக்கிறது. இவைகளையெல்லாம் பார்க்கும் போது இரட்சிப்பு என்பதை கிறிஸ்தவன் அடைந்து விட்டானா அல்லது இனிமேல்தான் அடையப் போகிறானா என்ற ஒரு சந்தேகம் வருகிறது. அதேபோல, எபே.4:30ன் படி, மீட்கப்படும் நாள் என்று ஒன்று உண்டு என்றும், அப்போதுதான் சரீர மீட்பு உண்டு என்றும் ரோ.8:33ல் எழுதப்பட்டிருப்பதால், கிறிஸ்தவன் இன்னும்

மீட்கப்படவில்லையா என்று எண்ணத் தோன்றுகிறது. ஆவியானவர் தாமே இந்தக் கருகலான சத்தியத்தை விளக்குவாராக!

இரட்சிப்பு (Salvation) என்றாலே விடுதலை, பாதுகாப்பு, அழிவினின்று காப்பாற்றல், சுகம் கிடைத்தல், முழுமையான நிலை போன்றவற்றைக் குறிக்கிறது. ஆக, இரட்சிப்பு என்பது நீதிமானாக்குதல், மீட்குதல், கிருபைப் பலியாதல், மன்னித்தல், தூய்மைப்படுத்தல், மகிமைப்படுத்தல், குற்றம் அகற்றப்படல், போன்ற பல செயல்களை உட்படுத்தியதாகும். இந்த எல்லாக் காரியத்தையும் இயேசு நமக்காய் செய்து விட்டார் என்பது உண்மைதான். அதனாலேயே அவரை இரட்சகர் என்கிறோம். இந்த இரட்சிப்பின் அனுபவத்தை கிறிஸ்தவன் முழுவதும் பெற்று விட்டானா? **இதற்கு முன்பு "மீட்பு" என்றால் என்ன? என்று பார்ப்போம்.** (1) விலை கொடுத்து வாங்குவது என்று பொருள். இயேசு தம் விலையேறப் பெற்ற இரத்தம்சிந்தி நம்மை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார். (1 கொரி.6:20; 2 பேது.2:1; வெளி.5:9) மட்டுமல்ல. (2) இனி மேலும் விற்கப்படாதபடிக்கு, வாங்குவது என்றும் பொருள். இயேசுவும், பாவத்திலும், சாபத்திலும், மரணத்திலும் இனிமேலும் விழாதபடிக்கே சிலுவையில் மீட்பை அருளினார் (கலா.3:13; 4:4,5) எபே.5:16) (3) அன்றியும் அடிமையினின்று விடுவிப்பது என்னும் இன்னொரு பொருள் உண்டு. இயேசுவும் அடிமைத்தனத்தினின்று மீட்டார் சிலுவையிலே (ரோ.3:24; ரோ.8:15; 1 கொரி.1:20; எபே.1:7,14; எபி.9:15) அப்படியானால் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் தேவனுக்கு சொந்தமாக்கப்பட்டபடியால் பிசாசு அவனைத் தொட முடியாது அல்லவா! பின்பு எப்படி பிசாசு கிறிஸ்தவனுக்கு தொல்லை தருகிறான்? மறுபடியும் விழாத படிக்கே இரட்சிக்கப்பட்டிருக்கும் போது, எப்படி இரட்சிக்கப்பட்டவன் ஏன் விழுகிறான்? அடிமைத்தனத்தினின்று விடுவிக்கப்பட்டிருக்கும் போது எப்படி இன்னும் பாவத்தின் அடிமைக்குள் நுழைகிறான்? சிலுவையிலே எல்லாவற்றையும் முடித்தார். உண்மைதான். ஆனால் இன்னும் கிறிஸ்தவனுக்கு ஏன் எல்லாம் முழுமையாகவில்லை?

**இதை அறியுமுன்னே இரட்சிப்பின் மூன்று நிலைகளை உணர வேண்டும்.** (1) கிறிஸ்தவன் பாவத்தண்டனைக்கும், குற்றத்திற்கும் நீங்கலாக்கி இருக்கிறான் (லூக்.7:50; 1 கொரி.1:18; 2 கொரி.2:15; 2 தீமோ.1:9). அப்படியனால் அவனுக்கு நியாயத்தீர்ப்பு இல்லையா? நிச்சயம் உண்டு (1 பேது.4:17,18). நியாயாசனத்திற்கு முன்பாக நாம் நின்றே ஆக வேண்டும் (2 கொரி.5:10). அங்கே நமக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோ.8:1). அல்லேலூயா! அதுவரைக்கும் நாம் அனுபவிக்கிறது ஜாமீனில் வெளியே

கொண்டு வரப்பட்ட குற்றவாளி, "தனக்கு தண்டனையே இங்கில்லை; விடுதலையே உண்டு" என்று நம்பி தைரியமாய் நடப்பது போல! ஆமென். இந்த தைரியத்தைக் கொடுக்கவே அவர் இரத்தம் சிந்தி மீட்டார்; ஜாமீன் தந்தார்; இப்போது பரிந்துபேசும் வழக்கறிஞராய் இருக்கிறார். நம் பாவங்களுக்குரிய தண்டனையை அவர் பெற்று விட்ட குற்றவாளியாய் இருப்பதால் நியாயாதிபதியாய் இருந்து நமக்கு நிரந்தர வெற்றி தருவார். அந்தநாள்தான் மீட்கப்படும் நாள். அதுவரை எந்தக் குற்றமும் செய்யாமல், சாத்தானாகிய போலீஸ் கையில் விழாது, ஜாமீனில் வெளி வந்த ஆளைப்போல நாமிருக்க வேண்டும். (2) பாவப் பழக்கத்திலிருந்தும் பாவம் நிறைந்த ஸ்தலத்திலிருந்தும் (Habit and dominion of sin) தினந்தோறும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறான் (ரோ.6:14; 8:2; கலா.2:19-30; 1 கொரி.3:18). (3) இயேசுவின் வருகையில் பாவத்தினால் வந்த பாதகங்களிலிருந்தும், பாவ உலகிற்கு வரும் சகல ஆக்கினையிலிருந்தும் விடுவிக்கப்பட்டு இயேசுவோடு இணைந்து இரட்சிக்கப்படுவான். பாவ ஆக்கினை இல்லை (ரோ.8:18-23; 1 கொரி.15:42-44; எபி.10:36).

இந்த இரட்சிப்பின் முதல் நிலையில் தான், இன்றைக்கு ஆரம்பத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் இருக்கிறோம். இதனால் தான் "இரட்சிக்கப் பட்டோம்" என்று எதிர்காலத்தில் நடக்கப் போவதையும் விசுவாசித்து சொல்கிறோம் (ரோ.10:9,10). இந்த நிலையில் நிலைத்திருந்து தினந்தோறும் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறுவது தான் இரண்டாம் நிலை. இப்படி நிலைத்திருந்தால்தான் மூன்றாம் நிலையான இரட்சிப்பு கிடைக்கும் (மத்.24:13; மாற்.16:16) இதை இன்னும் கொஞ்சம் விபரமாய் சொல்லலாம். (1) **முதல் நிலை** (ரோ.10:9,10; யோ.3:3,5; 1 பேது.1:23) இரட்சிப்படைவது. (2) **2ம் நிலை** (ரோ.12:1-2). இரட்சிப்புக்குள் வாழ்வது; வளர்வது. (3) **3ம் நிலை:-** உலகை விட்டு வெளியேறி அவரோடு இணைத்திருப்பது. இந்த மூன்று நிலைகளையும் சேர்த்துத்தான் இரட்சிப்பு என்று சொல்கிறோம். ஜாமீனில் வந்திருப்பதைப் போல இரட்சிக்கப்பட்டிருக்கும் முதலாம் நிலையிலுள்ள நமக்கு, இறுதி நாளில் முழுமையான - முடிவான இரட்சிப்புக்கு வழி நடத்தவே ஆவியானவரை நாம் பெற்றிருக்கிறோம் (எபே.4:2,30). ஆக, ஜாமீன் நிலைபோல இந்த பாவ பூமியில், பிசாசின் பிடியிலுள்ள பூமியில், பாவ ராஜ்யம் மத்தியில், பிசாசின் நடமாட்டம் மத்தியில் வாழும் நாம், பெறப்போகும் முழுமையான இரட்சிப்புக்காய், இயேசு எல்லாம் செய்து முடித்து விட்டார் என்ற விசுவாசத்தோடு தைரியமாய் ஜீவிக்க ஆவியானவரின் வழி நடத்துதலில் வாழ்வோம்! நிச்சயமாய் மீட்பின் நாளில், நியாயத்தீர்ப்பின் (சபைக்கான) நாளில், இயேசுவின் இரகசிய வருகை நாளில் - சிலுவையில்

தேவன் எல்லாம் நமக்காய் முடித்துவிட்டதால் பரிபூரண இரட்சிப்பைப் பெற்று நித்திய நித்தியமாய் வாழ்வோம்! முதலாம் நிலை இரட்சிப்பில், நிலைத்திருப்போம்! ஜாமீன் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்! பரிபூரண விடுதலையை அளிக்கப் போகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். முழுமையாய் மீட்கப்படும் போது, இரட்சிப்பு முழுமையாய் நிறைவேறும். ஆமென்.

❖ ❖ ❖

## கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி என்ன?

ரோ.4:4: "கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி, கிருபை என்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்". இந்த வசனத்தை வைத்துக்கொண்டு, சில தற்கால நவீன பிரசங்கியார்கள் "நமக்கு தேவை கடனல்ல, கிருபைதான். எனவே கிரியை தேவையில்லை" என்று போதிக்கிறார்கள். கிரியை செய்வதால் கிருபை வராது என்பது வேதம் படித்த அவனவருக்கும் தெரியும். கிருபை என்பது தேவன் அளிக்கும் ஈவு (எபே.2:8). ஆங்கிலத்தில் "Grace". பரீட்சைகளிலே கிரேஸ்மார்க் போடுவார்கள். எதற்கு? அந்த மாணவன் பரீட்சையிலே நன்றாக எழுதின கிரியைக்கா? இல்லை. அவன் நன்றாய் எழுதாமல், பெயில் மார்க் வாங்கிவிட்டானே; அவன் எப்படியாவது பாஸ் பண்ண வேண்டுமே என்று போடுகிற மார்க்தான் Grace. இது எப்பொழுதும், கிடையாது. நம் தேவனோ, 1தெச.5:23ன்படி, தேவனுக்கு முன்பாக குற்றமில்லாதிருக்க வேண்டுமே என்று, நமக்கு வீழ்ச்சி - சரிவு - விசுவாசக் குறைவு அல்லது செத்த விசுவாசம் வரும் போதெல்லாம் நம்மை கிருபையால் தாங்குகிறார். அதற்கும் நமக்குத் தேவை தாழ்மையே (யாக்.4:6). இன்றோ கிரியை செய்கிறவனுக்கான கூலி பற்றி ஆவியானவர் விளக்குவாராக!

ரோ.4ஐ வாசித்தால், ஆபிரகாம், விசுவாசத்தினால் கிருபையாய் நீதிமானாக்கப்பட்டான் என்று அறிகிறோம் (ரோ.4:3; ஆதி.15:6). அப்படியாய் நீதிமானாக்கப்பட்ட ஆபிரகாமோடு 86 வயது முதல் 99 வயது வரை தேவன் பேசவே இல்லை (ஆதி.16:16 - 17:1). 99ம் வயதில் அவர் பேசியதைப் பாருங்கள்: "நான் சர்வ வல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு." ஆபிரகாமின் கிரியை உத்தமமாய் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கிறார் (ஆகாரோடு போன கிரியையை கண்டிக்கிறார்). கிருபை அவன்மேல் இருந்ததால், அவனது அந்த தவறான கிரியைக்கான கூலியை - தண்டனையை - அப்போதே தேவன் கொடுக்கவில்லை. ஆமென். "Grace" கிருபையுள்ள தேவன், அவன்

கிருபையாய், விசுவாசத்தால் பெற்ற நீதிமானென்ற பட்டத்தை - நீதியை - அவனது கிரியையினால் பூரணப்படுத்தினார் என்பதை வாசியுங்கள். "நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தின்மீது செலுத்தினபோது கிரியை களினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து, கிரியை களினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே" (யாக்.2:21,22). இப்படித்தான், கிரியை இல்லாமல், கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்ட நீ, நீதிமானாக்கப்பட்ட நீ, பூரணப்பட வேண்டுமென்றால் கிரியை தேவை அல்லவா! சிந்தியுங்கள்.

இப்படியாய் வசன விசுவாசக் கிரியை செய்து, உன் நீதியை பூரணப்படுத்தினால் அதற்கு கூலி உண்டு. **அந்தக் கூலிதான் தேவன் உனக்குக் கொடுக்க வேண்டிய கடன்.** நமக்குத் தெரியும்: (1) ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திருப்பிக் கொடுப்பார் (நீதி.19:17). இது ஒரு கிரியையினால் கிடைப்பது (see யாக்.1:27). (2) "நான் நட்டேன்; அப்பொல்லோ நீர் பாய்ச்சினான், தேவனே விளையச் செய்தார். நடுகிறவனும், நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக் கிறார்கள். அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய் கூலியைப் பெறுவான்" 1 கொரி.3:6-8). இது ஒரு கிரியையினால் கிடைப்பது. (3) கிரியைக்கேற்ற கூலியை நாம் பரலோகத்தில் பொக்கிஷமாக சேர்த்து வைக்கிறோம் (ஏசா.33:6; மத்.6:20). கிரியையில்லாத விசுவாசம் இரட்சிக்கப்பட்டவனுக்கு செத்ததாயிருக்கிறது (யாக்.2:20) என்ற உண்மை புரிந்தால், கிரியைக்கு விரோதமாய் பேசவே மாட்டோம். இந்த நம் வசனவிசுவாசக் கிரியைகளினால் தேவன் என்ன கடனாளியாயிருக்கிறார்? தேவன், நம் விசுவாசக் கிரியையால் சேர்த்து வைக்கும் பொக்கிஷத்தால் என்ன நமக்கு தருவார்? பார்ப்போம்.

"இதோ சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி, அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடு கூட வருகிறது" (வெளி.22:12). ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது, தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும் (2 கொரி.5:10). சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்கு கீழ்ப்படியாமல், அநியாயத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிற வர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும் (ரோ.2:7,8).

அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல; நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள். அதை மனுஷ குமாரன் உங்களுக்குக் கொடுப்பார். அவரைப் பிதாவாகிய தேவன் முத்தரித்திருக்கிறார் (ரோ.6:27)." ... அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்... கோணலும் மாறுபாடுமுள்ள சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடமற்றவர் களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும், தர்க்கமில்லாமலும் செய்யுங்கள் (பிலி.2;15-17). நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல. அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும், அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான். அவன் தன்னைத் தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான் (யாக். 2:22-24).

இன்னும் என்ன சொல்லுவோம்? வசன விசுவாசக் கிரியையினாலேதான் நமகது நித்திய ஜீவனும், அதன்பின் கிரீடங்களும், ஆளுகையும், மகிமையும், கனமும் கிடைக்கப் போகிறது என்று முந்தி அறியுங்கள். ஆரம்ப இரட்சிப்பு கிரியை யினானலல்ல என்றும், கிருபையினால்தான் என்றும், இறுதி இரட்சிப்பு - மீட்பு (மத்.24:13) நமது விசுவாசக் கிரியையினால்தான் கிடைக்கும் (கடன்-கூலி) என்றும் அறியாத பட்சத்தில், இரட்சிக்கப்பட்டு கிறிஸ்தவனாயிருப்பது வீண். இப்படிப் பட்டவர்களின் மனக்கண்கள், நவீன உபதேசங்களால் - பிசாசால், அன்றைக்கு ஏதேனில் ஆதாம் ஏவாளுக்கு திறந்ததுபோல திறந்திருக்கின்றன (ஆதி.3:7). இவர்களின் மனக்கண்கள் யோபுவுக்குப் போல, ஆகாருக்குப் போல, கேயாசுக்குப் போல தேவனால்திறக்கப்பட ஜெபிப்போம் (யோபு 42:5; ஆதி.21:19; 2 ராஜா. 6:17); திறப்பது மாத்திரமல்ல, திறந்த மனக்கண்கள் பிரகாசமடையவும் ஜெபிப்போம் (எபே.1:19).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! பெறப்போகும் நித்திய ஜீவனுக்காக, பரலோக மகிமைக்காய், வசன விசுவாசக்கிரியை களால் தேவன்தரும் கூலியை - தேவன் கொடுக்கும் கடனை - பரலோகிலே பொக்கிஷமாய் சேர்த்துவை! அதனால் இம்மையிலும் ஆசீர்வாதம் உண்டு என்பதையும் மறவாதே! (உபா.28; மாற்.10:29,30). இல்லையேல், அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு - 2ம் மரணத்திற்கு - உன்னை

அறியாமலே ஆயத்தமாகிறாய் என்று எண்ணிக்கொள்! கிரியையில்லாமல், கிருபையினாலேயே இம்மைக்குரிய ஆசீர்வாதமும் நித்தியமும் கிடைக்குமென்றால், ஆரம்ப இரட்சிப்பே போதுமே! சபை தேவையில்லையே! 5 விதமான ஊழியம் தேவையில்லையே! ஆராதனை வேண்டாமே! சாட்சி வாழ்க்கை வேண்டாமே! தேவபிள்ளையே! பிசாசின் பொல்லாத பிடிக்குள் மாட்டிக் கொள்ளாதே! ஆவியானவர்தாமே உன்னை வழிநடத்த ஒப்புக்கொடு! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## "கிறிஸ்தவ சபை" பற்றிய தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாட்டில் உண்டா?

கிறிஸ்தவ சபை என்பது இஸ்ரேல் சபையின் மறுமலர்ச்சிசபை அல்ல. எபே.2;14, 15ன்படி, புதிய மனுஷனாக சிருஷ்டிக்கப்பட்ட, புதிய ஏற்பாடு சபை இது. இந்த சபை அப்.20:28ன்படி தேவன் தமது சுயரத்தத்தினால் சம்பாதித்தது. இந்த சபை உருவாவது சம்பந்தமாக பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனங்கள் உண்டா? சிலர் சொல்கிறார்கள்; "ஏசா.2:2-3ன் படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது" என்று, மட்டுமல்ல, "மத்.3:1-2ன்படி சபைக்கான முன் ஆயத்தம் செய்யப்பட்டது" என்றும் சொல்கிறார்கள். இது சரிதானா? ஆவியானவர் விளக்குவாராக!

தேவன் ஆதாமைப் படைத்ததே ஒரு பக்தியுள்ள சந்ததி உருவாக வேண்டும் என்பதற்காகவே (மல்.2:15). இந்த சந்ததி எது? ஆபிரகாமின் மூலமாகவே ஒரு சந்ததி வெளிப்படும் என்று முன் அறிந்த தேவன், ஆசீர்வாதமுள்ள வாக்குத்தத்தங்களை அந்த சந்ததிக்கு ஆபிரகாம் மூலமே கொடுத்திருக்கிறார் (ஆதி.13:14-17; 22:17,18). அந்த சந்ததி கிறிஸ்துவேஎன்று கலா.3:16 சொல்கின்றது. ஆக கிறிஸ்துவாகிய ஆபிரகாமின் சந்ததிக்கு, அவனுக்குத் தந்த ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்கள் வந்து சேரும் என்பது உண்மையே! இது இஸ்ரேலருக்குத்தானா? கலா.3:7, 9,14ன்படி இந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புறஜாதிகளுக்கும் உண்டு. அதாவது கிறிஸ்துவ சபையாருக்கு - கிறிஸ்துவுக்குள் வாழ்வோருக்கு உண்டு. ஆக, கிறிஸ்தவ சபை உருவாக வேண்டும் என்று தேவனுக்கு சித்தம், படைப்பிலேயே வெளிப்பட்டிருந்தும், அது தீர்க்கதரிசனமாக யார் மூலமாக வாவது பழைய ஏற்பாட்டில் வெளிப்பட்டதா? இது கேள்வி.

சிலர் சொல்லுகின்ற ஏசா.2:2-3ஐ வாசியுங்கள். இது 1000 வருட அரசாட்சியில் நிறைவேறப் போகிற தீர்க்கதரிசனமாகும். "கர்த்தருடைய ஆலயம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்படுகிறது," "அது யாக்கோபின் தேவனின் ஆலயம்", "சீயோன்"/ "எருசலேம்" போன்ற வார்த்தைகளை எல்லாம் தியானியுங்கள். இது கிறிஸ்தவ சபையைப் பற்றிய தீர்க்க தரிசனம் அல்ல. மேலும் பரலோக ராஜ்யத்துக்கான ஆயத்தம்தான் மத்.3:1-2ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாய் இயேசுவே எருசலேமிலிருந்து இந்த பூமியை ஆளுவார். பலவந்தம் பண்ணப்படுகிற இந்தப் பரலோக ராஜ்யத்தை (மத்.11:12) யூதர்கள் ஏற்றுக் கொள்ள மனதாயிருந்தால், வருகிறவனாகிய எலியா, யோவான் ஸ்நானன்தான் என்று இயேசு சொன்னார் (மத்.11:14) அவர்கள் ஏற்றுக் கொள்ளாததால் பரலோக ராஜ்யம் ஸ்தாபிக்கப்படவில்லை. (They rejected morally - மத்.11:20. They rejected officially -மத்.21:42-43). இதனால் பரலோக ராஜ்யம் பூமியில் ஸ்தாபிப்பது தள்ளிப் போடப்பட்டது; அதனால் அவர் ஆவிக்குரிய பரலோக ராஜ்யத்தின் இரகசியங்களை விவரிக்கத் தொடங்கினார் (மத்.13). இந்த ஆவிக்குரிய பரலோக ராஜ்யம் இப்போது நிழலாக உள்ளது. நிஜமான பரலோக ராஜ்யம் 1000 வருட அரசாட்சியில் ஸ்தாபிக்கப்படும். இந்த ராஜ்யம்தான் யூதர்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் ராஜ்யம் (அப்.1:6,7). இதுதான் தாவீதின் உடன்படிக்கை (2 சாமு.7:8-17). நிஜமான ராஜ்யத்துக்காய் காத்திருக்கும் இஸ்ரேலரும், கிறிஸ்தவ சபையாரும் இந்த ஆவிக்குரிய ராஜ்யத்தில் அங்கம் வகிக்கின்றனர். இந்த பரலோக ராஜ்யத்தில்தான் இஸ்ரேலரும் கிறிஸ்துவ சபையாரும் ஆளுவோம். இப்படி ஆளப்போகும் கிறிஸ்தவ சபை உருவாவது பற்றி ஒரு தீர்க்கதரிசியும் முன் கூட்டியே சொல்லவில்லையே! இயேசு பிறப்பார்; மரிப்பார்; உயிர்ப்பார்; ஆளுவார் என்றெல்லாம் சொன்ன தீர்க்கதரிசிகள், சபை உருவாகும் என்று சொல்லவே இல்லை.

இயேசு தான் மத்.16:18ல் "இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன்" என்று முதன் முதலாக, தன் மூலமாய் தன்மேல், கிறிஸ்தவ சபை கட்டப்படும் என்று சொன்னார். இதைப்பலரும் - சீஷர்கள்கூட அதிகமாய் உணரவில்லை; சிந்திக்கவில்லை. "பரலோகம் போகும்போது என் ஆடுகளை - ஆட்டுக் குட்டிகளை மேய்ப்பாயா?" என்று பேதுருவிடம் இயேசு கேட்ட போதுகூட (யோ.21:14-16) கிறிஸ்தவ சபை உருவாகப் போவதை யாரும் அறியவில்லை. பூர்வ காலமுதல், இரகசியமாய் வைக்கப்பட்டிருந்த பல காரியங்களை பவுல் மூலமும், யோவான் மூலமும் தேவன் புதிய ஏற்பாட்டுக் காலத்தில் வெளிப்படுத்தினார்; பழைய ஏற்பாட்டில்

மறைவானவைகளாய் இருந்தவை புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப் பட்டாயிற்று (உபா.29:29; லூக்.8:17).

அப்படித்தான், ஒருவருக்கும் வெளியரங்கமாகாமல், இருந்த சபையைப் பற்றிய இரகசியத்தை, பவுல் மூலம் தேவன் வெளிப்படுத்தினார். அல்லேலூயா! புறஜாதியாரையும் இஸ்ரேலரையும் ஒரே ஆவியினாலே ஒரே புதிய சரீரமாகிய கிறிஸ்தவ சபைக்குள்ளே தேவன் இணைத்து, ஆபிரகாம் சந்ததிக்கானவாக்குத்தத்தத்துக்கும் பங்காளிகள் என்று ஆக்கிய இரகசியம், பவுல் மூலமே வெளியாயிற்று (எபே.2:18-3:6; 1 கொரி.2:13). **"இந்த இரகசியம் இப்பொழுது தேவனுடைய பரிசுத்த அப்போஸ்தலருக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் ஆவியான வராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை"** என்று பவுலே எபே.3:6ல் சொல்வதைக் கேளுங்கள்.

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! யாராயிருந்தாலும், எவ்வளவு பெரிய ஆளாயிருந்தாலும் வசனத்தின்படி சொல்லாவிட்டால் நம்பாதே! "கட்டளையே விளக்கு; வேதமே வெளிச்சம்" (நீதி.6:23) என்பதை மறவாதே! பவுலுக்குமுன் ஒருவருக்குமே நம் சபையைப் பற்றிய வெளிப்பாடு இல்லை என்பதே உண்மை. பவுல் வரைக்கும் இரகசியமாய் வைக்கப்பட்டிருந்த கிறிஸ்தவ சபை, ஒரு நாள் இரகசியமாகவே எடுத்துக் கொள்ளப்படப் போகிறது! அல்லேலூயா! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்! பூமிக்கு வராமல் மத்திய ஆகாயத்திலிருந்து அழைக்கும் இயேசுவோடு இணைவோம்! (1 தெச.4;16-18) ஆமென்!

❖ ❖ ❖

## கிறிஸ்தவ சபைதான் மணவாட்டியா?

யோ.1:12; ரோ.8:15 போன்ற வசனங்களின்படி நாம் பிதாவாகிய தேவனுக்கு புத்திராயிருக்கிறோம். எனவே ரோ.8:29ன் படி நமக்கு இயேசு கிறிஸ்து மூத்த சகோதரர், நாமெல்லாரும் அவருடைய தம்பிமார், தங்கைமார். இப்படியிருக்க நாம் எப்படி இயேசுவுக்கு மணவாட்டியாவோம்? இதுதான் இன்று சில ஆவிக்குரிய சபைகளிலும் கேள்வியாயிருக்கிறது. இந்த கருகலான சத்தியத்தை ஆவியானவர்தாமே விளக்குவாராக!

இயேசுகிறிஸ்து நமக்கு மூத்த சகோதரர்தான். ஆனால் அவர் நம்மை **நண்பர்** என்கிறாரே எப்படி? (யோ.5:14); யோ.13:35ன் படி நம்மை அவரைப் பின்பற்றும் **சீடர்கள்** என்கிறாரே எப்படி? யோ.21:5ல் நம்மைப் **பிள்ளைகளே**

(Children) என்கிறாரே அதெப்படி? எபி.8;1,2ன்படி அவர் **பிரதான ஆசாரியராயிருக்கிறாரே** எப்படி? அவர் **நமக்கு ராஜாவாய், நியாயாதிபதியாய், தேற்றரவாளனாய், எஜமானனாய்** இருக்கிறாரே எப்படி? மொத்தத்தில் அவர் எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருக்கிறார். உங்களுக்கு எந்த நிலையில் அவர் இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அந்த நிலையில் அவரைக் காணலாம்; உணரலாம்; ருசிக்கலாம். ஆவிக்குரியவர்கள் மட்டுமே இப்படிப்பட்டதான ஆவிக்குரியவைகளை நிதானிக்க முடியும் தெளிவடைய முடியும். உலகத்தில் எத்தனையோ உறவுகள் உள்ளன. ஆனால் கணவன் மனைவி போன்ற ஒரு உறவு எதுவுமே இல்லை. இப்படிப்பட்ட ரத்தத்தில் ரத்தமான, எலும்பில் எலும்பான உறவு முறையைத்தான், "மணவாட்டி" என்று சபையை அழைப்பதினால் ஏற்படுத்த தேவன் விரும்புகிறார்.

இயேசுகிறிஸ்து தன்னை மணவாளனாக யோ.3:29ல் சொல்கிறார். அவரின் வருகையைப்பற்றி சொல்லும்போதுகூட மத்.25ல் மணவாளனுக்காக காத்திருந்த 10கன்னிகைகள் கதையைச் சொல்கிறார். மத்.22:1-14ஐ வாசித்தால் பரலோக ராஜ்யம் தன் குமாரனுக்கு திருமணம் செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறதாம். குமாரனாகிய கிறிஸ்து மணவாளனானால், மணவாட்டி யார்? வேதத்திலே சபையை ஸ்திரி என்றே காட்டப்பட்டுள்ளது. எபே.5:22-27 வரை வாசித்தால் புருஷனுக்கு கிறிஸ்துவையும், மனைவிக்கு சபையையும் ஒப்புமைப் படுத்தி சொல்லப்பட்டதை அறியலாம். முதல் ஆதாமுக்கு மனையாட்டி இருந்தது போல, 2வது அல்லது கடைசி ஆதாமாகிய இயேசுவுக்கு (ரோ.5:14; 1 கொரி.5:47) ஒரு மனையாட்டி இருக்குமல்லவா! ஆதாமிற்கு அயர்ந்த நித்திரை உண்டுபண்ணி, ஏவாளாகிய மணவாட்டியை தேவன் உருவாக்கினார் (ஆதி.2:18,21-14). அப்படியே பிந்தின ஆதாமாகிய இயேசுவின் மரணத்தினாலே ஏவாளாகிய மணவாட்டி சபை உருவாயிற்று. எபே.5:29-33ன்படி ஆதாமும் ஏவாளும் போல கிறிஸ்துவும் சபையும் உள்ளது என அறியலாம். அப்படியே ஈசாக்கு தன் மனைவியைப் பெற்ற விபரத்தையும் பார்த்தால் இன்னும் விளக்கம் புரியும். பரிசுத்த ஆவியானவராகிய எலியேசர், பிதாவாகிய ஆபிரகாமால், இயேசுவாகிய ஈசாக்குக்கு, சபையாகிய ரெபேக்காளைப் பிடிக்கப்போனது போல பெந்தெகொஸ்தே நாளிலே ஆவியானவர் பூமிக்கு வந்துவிட்டார். அவர் மணவாட்டியாகிய சபையை - ஜீவத்தண்ணீர் ஊற்றும் நம்மை ஆயத்தம் பண்ணுகிறார். பின் மணவாட்டியாகிய ரெபேக்காளை எலியேசர் கூட்டிக் கொண்டுபோய் ஈசாக்கிடம் சேர்த்ததுபோல, ஆவியானவர் மணவாட்டியாகிய

சபையை மணவாளன் இயேசுவிடம் இரகசிய வருகையிலே கொண்டு போய் சேர்ப்பார் (1 தெச.4:16,17; 1 கொரி.15; 51,52). (இரகசிய வருகை என்ற செய்தியை ஆசிரியரின், "தெரிந்து கொள்ளுங்கள்" என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தில் வாசியுங்கள்)

மணவாட்டியாகிய சபையின் கல்யாண விருந்துதான் பரலோகில் நடக்க உள்ளது. இதற்குத்தான் நாம் ஞானஸ்நானம் மூலமாய் நிச்சயதார்த்தம் (Betrothel) பண்ணி உள்ளோம் (1 பேது.3:21). அதற்காகத்தான் மாப்பிள்ளை அழைப்பு போல மணவாளன் வருகிறார் (1 தெச. 4:16,17). இஸ்ரவேலர் வழக்கப்படி பூமியிலே திருமணம் முடிந்துவிட்டது என்றும் பரலோகில் கல்யாண விருந்து மட்டும்தான் என்றும் சிலர் சொல்கின்றார்கள். திருமணம்முடிந்து எத்தனை வருஷம் கழித்து விருந்து வரும்? ஆட்டுக்குட்டியானவரின் திருமணம் ஒருமுறைதான் நடக்க வேண்டும். பூமியில் அது நடக்குமென்றால் ஒவ்வொரு விசுவாசியோடும் ஒவ்வொரு நாளும் நடக்குமா? அப்படியல்ல. 2 கொரி.11:2ன் படி, சபையானது கற்புள்ள கன்னிகை; கிறிஸ்து என்னும் ஒரே புருஷருக்காக ஒப்புக் கொடுக்க நியமிக்கப்பட்டிருக்கிறாள். ஆமென். எனவே புதிய ஏற்பாட்டு சபையார் கிறிஸ்துவுக்கு மணவாட்டிதான். சந்தேகமே இல்லை. இவ்வளவு பெரிதான உறவை, ஒன்றுக்கும் உதவாத நமக்கு தேவன் கொடுத்திருப்பது நம் புத்திக் கெட்டாத காரியமல்லவா! அவருக்கு நம் மீதுள்ள அன்பை எண்ணிப் பாருங்கள்.

பழைய ஏற்பாட்டு மக்களை தேவன் மனைவியாக வைத்திருந்தார் (ஏசா.54:5-8) அவர்கள் அவிசுவாசத்தினாலே சோரம் போனார்கள! (ஏசா.54:1-10; ஓசி.2:1-17). இவர்களிலே எபி.11ல் சொல்லப்படும் விசுவாச வீரர்கள் அனைவரும் நம்மோடு இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களே ஆட்டுக்குட்டியானவரின் தோழர்கள்; கல்யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் (வெளி.19:9; யோ.3:29). ஆனால் விருந்து முடிந்து வரும்போது அனைவருமே ஒன்றாய் வருகிறோம் (சக.4:5; கொலோ.3:4; யூதா.14). அவர்கள் தாவீதின் உடன்படிக்கை (2 சாமு.7:16), மற்றும் பாலஸ்தீனாவின் உடன்படிக்கை (உபா.30:3; ஆதி.15:18-21)ன்படி பாலஸ்தீனாவை ஆள்வார்கள். நாமோ உலகையே ஆளவோம். பின்பு புதிய வானம் புதிய பூமி உருவாகும். அப்போதுபுதிய எருசலேமாய் இருதரத்தாரும் காட்சியளிப்போம். பழைய மனைவியாகி, இஸ்ரேலும், புதிய மணவாட்டியாகிய நாமும் தேவனின் முன்னே ஒரே ஸ்திரியாய் காட்சியளிப்போம். இதைத்தான் வெளி.21:9ல்

"ஆட்டுக்குட்டியானவருடைய மணவாட்டி" என்று எழுதப்பட்டுள்ளது. இப்போதும், அப்போதும், எப்போதும் நாம் தேவனின் மணவாட்டி என்பதால் பரிசுத்த அலங்காரமாய் அழகாய் இருப்போம் (வெளி.21:2). ஆமென்.

❖ ❖ ❖

## ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணம் எப்போது?

"ஆட்டுக்குட்டியானவர் மணவாளன்; மணவாட்டி கிறிஸ்தவ சபை" என்று சென்ற செய்தியில் பார்த்தோம். அப்படியானால் இந்தக் கல்யாணம் நம்முடைய கல்யாணம். உண்மை இப்படியிருக்க, "ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள்" (வெளி.19:9) என்ற வசனத்தை சொல்லி, நம்மை விருந்துக்கு அழைக்கிறார்களே பல ஊழியர்கள், அது சரிதானா? மட்டுமல்ல.. கல்யாணம் பரலோகில் நடக்கப் போவது என்று சொன்னால், அது நடப்பதற்கான வசனம் எங்கே? பெந்தெகொஸ்தே சபையார் அதிகமாய் உபயோகிக்கும் DAKES பைபிளில், கிறிஸ்தவ சபையை மனைவி என்று விளக்கப்பட்டிருக்கிறதே, பின்பு எப்படி மறுபடியும் திருமணம் நடக்கும்? இந்த திருமணம் இஸ்ரேலர்களுக்கும் உண்டா? இப்படிப்பட்டதான கேள்விகளுக்கான பதிலை ஆவியானவர் விளக்குவாராக!

கர்த்தரோடு இருக்கும் அன்பு, ஐக்கியம், அதிகாரம், பொறுப்பு போன்றவைகளை ஆழமாய் பதிய வைக்க, உலகப்பிரகாரமான "திருமணம்" என்றசொல்லை வேதம் பயன்படுத்துகிறது. ஓசியா 2ம் அதிகாரம் வாசித்தால், இஸ்ரேல் சபை, தேவனால் மணமுடிக்கப்பட்ட மனைவியென்றும், அது சோரம் போயிற்று என்றும், ஒருநாள் அது மனம்மாறி திரும்பி வரும்போது, தேவன் அதை நித்திய விவாகத்திற்கென்று நியமித்துக் கொள்வார் என்றும் அறிகிறோம். இப்படிப்பட்ட கணவன் - மனைவி உறவு முறைகிறிஸ்தவ சபைக்கு இபபோது இல்லை என்பதால், இயேசு, மணவாட்டியை உடையவரென்றும் (யோ.3:29), அந்த மணவாட்டிதான் 2 கொரி.11:2ன்படி, கற்புள்ள கன்னிகையாக, கிறிஸ்து என்னும் ஒரே மணவாளனுக்கு நியமிக்கப்படுகிறது என்றும் அறிகிறோம். ஆக, கிறிஸ்தவ சபை, தற்போது கிறிஸ்துவுக்கு மணவாட்டி என்றும், அவரின் திருமணம்தான் இனிமேல் நடக்கப்போகிறது என்றும் நாம் விளங்கிக் கொள்கிறோம். ரோ.7:1-6ல், கிறிஸ்துவின் விசுவாசியானாலே, கிறிஸ்து என்னும் புருஷனுக்கு மனைவியாகிவிட்டதாக பவுல் கூறுவதாய் DAKES பைபிள் கூறுகிறது. அப்படியல்ல... அந்த ரோமர் 7ம் அதிகாரம்,

நியாயப்பிரமாணமாகிய புருஷனின் ஆளுகையில் இருந்த இஸ்ரேலர், இயேசுவை விசுவாசிக்கும்போது, கிறிஸ்துவின் ஆளுகைக்கு - புருஷனின் ஆளுகை போல - வந்து விட்டதாக, இஸ்ரேல் மக்களுக்காக எழுதப்பட்டதே ஒழிய, அனைத்து கிறிஸ்தவர்களுக்காகவும் அல்ல. அப்படி இஸ்ரேலர்கள், திருந்தி - திரும்பி - கிருபையின் காலத்திலேயே வந்துவிட்டால், ஓசி.2:19ன் படி நம்மைப்போல, திருமணத்திற்காய் ஏற்கப்பட்டவர் களாவார்கள். எபே.5; 1 கொரி.12 போன்றவற்றில், சபையையும், கிறிஸ்துவையும் கணவன் - மனைவிக்கு ஒப்புமையாய் எழுதப்பட்டுளளதால், கிறிஸ்தவ சபையானது மனைவியாயிருக்கிறது என்று DAKES பைபிள் கூறுவதும் சரியல்ல. **எப்படியெனில், எல்லாவற்றிலும் உவமானங்கள் முழுமையாய் உண்மையாகாது; ஒத்துவராது.**

வெளி.19:17ல் உள்ள, "ஆட்டுக் குட்டியானவருடைய கல்யாணம் வந்தது" என்ற கிரேக்க வார்த்தையின் உண்மையான அர்த்தம். ஆட்டுக் குட்டியானவரின் கல்யாண விருந்து வந்தது" என்பதாகும். **திருமணம் அல்லது திருமண விருந்து என்றால் அதற்கு மூன்று படிகள் உள்ளன.** (1) நிச்சயதார்த்தம் - அதுதான் சபையாராகிய நாம் இரட்சிக்கப்பட்டு தண்ணீர் ஞானஸ்நானம் எடுப்பது (1 பேது.3;21). (2) மணவாளன் வருதல் - அதுதான் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகை (1 கொரி.15:51-53; 1 தெச.4:16:18). (3) கல்யாண விருந்து - அதுதான் பரலோகிலே 7 ஆண்டுகள் நடக்கப்போவது, **இதிலே நமது பண்பாட்டுப்படி, திருமணநாள் என்ற ஒன்று வைத்து, மாலை மாற்றுவது, தாலி கட்டுவது போன்ற காரியங்கள் இஸ்ரேலிலே கிடையாது.** நிச்சயதார்த்தம் பண்ணிய உடனேயே, மணவாளனும், மணவாட்டியும் இணைந்து கொள்வார்கள். (இப்படித்தான் யோசேப்பும் மரியாளும் சேர்ந்தார்கள்). வசதியில்லாதவர்கள் இத்தோடு வாழ்க்கையை நடத்துவார்கள்; திருமண விருந்தும் கிடையாது. ஆனால் வசதியுள்ளவர்கள் கல்யாண விருந்து என்ற ஒன்று வைத்து, இணைந்த மணமகனையும், மணவாட்டியையும் அலங்காரம் பண்ணி கொண்டு வருவார்கள். இந்த விருந்து ஒருநாளோ, ஒரு வாரமோ, ஒரு மாதமோ அவரவர் தகுதிக்கேற்ப நடக்கும். இதை மாப்பிள்ளை வீட்டார்தான் நடத்துவார்கள். சிம்சோன்கூட 7நாள் விருந்து வைத்தான் என்று அறிகிறோம் (நியா.14). இப்படித்தான் மணவாளன் இயேசு, பரலோகில் கல்யாண விருந்து வைப்பதாய் அறிகிறோம்.

பெண் பார்ப்பது, மணவாளனோடு இணைவது, போன்றவை களெல்லாம், ஈசாக்குக்கு பெண் பார்க்கிற காரியத்திற்கு நிஜமாகிறது. ரெபேக்காள் எப்படி காணாத மணவாளனை நம்பி, எலியேசரோடு தேசத்தைவிட்டுப் பிரிந்து போகிறாளோ, அப்படியே கிறிஸ்தவ சபையானது

(இரட்சிக்கப்பட்ட நிச்சயத்தோடு betrothel) ஆவியானவரின் வழிநடத்தலால், இந்த உலகைவிட்டு இயேசுவை நோக்கிப் போகும். ஈசாக்கு சமவெளியில் நின்றிருந்ததுபோல, இயேசு ஆகாயத்தில் நிற்பார்; ரெபேக்காள் ஈசாக்கைக் கண்டதுபோல, சபையாகிய மணவாட்டி அவரைக் காணும். உடனே ஈாசக்கு ரெபேக்காளைத் தன் தாய் சாராளுடைய கூடாரத்திற்கு அழைத்துக் கொண்டுபோய், அவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டான் (ஆதி.24:67). நாம் நினைப்பதுபோல திருமணச் சடங்குகள் ஏதும் நடக்கவில்லை. அதேபோலத்தான், நாம் ஆகாயத்தில் இயேசுவோடு இணைவோம். அப்போதே மனைவியாகிறோம். அல்லேலூயா! எந்த ஒரு திருமணச் சடங்கும் இல்லை. ஆமென்.

ஆனால், நம் ஆண்டவர் ஐஸ்வர்யமுள்ளவராயிற்றே (2 கொரி.8:9; பிலி.2:6). எனவே கல்யாண விருந்து அங்கே நடத்துகிறார். மணவாட்டி அல்லாத - கிறிஸ்தவ சபை அல்லாத - பரலோகம் சென்ற மற்றவர்கள் எல்லாரும் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்துக்கு அழைக்கப் பட்டவர்கள். அவர்கள் நம்மோடு இரகசிய வருகையில் எடுத்துக் கொள்ளப்பட்ட, ஆபேல் முதல் கிறிஸ்தவ சபை ஆரம்பிக்கும் வரையிலான பரிசுத்தவான்கள்; பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களை மணவாளனின் தோழர்கள் என்று யோ.3:29ல் சொல்லப்பட்டவர்களே இதில் அடங்குவர் (see.மத்.9:15). இவர்களெல்லாரும் பூமியிலே மனைவியாக்கப்பட்டிருந்ததால் (ஓசி.2:23) பரலோகிலே திருமணம் கிறிஸ்தவ சபைக்கு மட்டுமே! அந்தக் கல்யாண விருந்தில் என்ன நடக்கும்? கிரீடங்கள் கொடுக்கப்படும். ஆதாம் - ஏவாளால் பிசாசுக்கு ஒப்புவிக்கப்பட்ட (லூக்.4:6) நம் பூமிக்கடுத்த பத்திரம் - title deed - (சிலுவை மரணத்தால் சுதந்தரிக்கப்பட்டது - see கொலோ.2:13-15) திறக்கப்பட்டு அது நமக்கு ஒப்புவிக்கப்படும் (see வெளி.5:1 முதல்). தேவ பக்திக்குரிய இரகசியம் முழுவதும் நமக்கு புரிந்துவிடும் (வெளி.10:6; 1 தீமோ.3:16); 1000 வருட ஆளுகைக்காக பயிற்சியும், நியாயத்தீர்ப்பு செய்யத்தக்கதான ஞானமும் நமக்கு அளிக்கப்படும். இன்னும் ஏராளம் நடக்கும். அல்லேலூயா! மணவாளன் தரும் கல்யாண விருந்து கிறிஸ்தவ சபையாகிய மனைவியாகிய மணவாட்டிக்கும் உண்டு.

**இப்போது, வெளி.19:7; 21:29; 22:17 போன்றவசனங்களின் விளக்கங்களைப் பார்பபோம்.** நான் ஏற்கனவே சொன்னதுபோல, வெளி.19:7ல் ஆட்டுக்குட்டியானவரின் கல்யாண விருந்திலே பங்குகொள்ள - கல்யாண மண்டபத்திற்கு வர, கிறிஸ்துவின் மனைவி ஆயத்தமாகிறாள். இவள்தான் ஆகாயத்திலே இரகசிய வருகையிலே இணையும்போதே,

ரெபேக்காளைப்போல மனைவியாகவிட்டாளே! அவளுக்கு தரிக்கப்பட்ட அலங்கார வஸ்திரம், அவளுடைய கிரியையினால் வந்த நீதிகளே! (வெளி.19:8). 'கிரியை வேண்டாம்; கிருபையே போதும்' என்று சொல்லும் பொல்லாத உபதேசக்காரர்கள் சிந்திக்கட்டும்! யோ.14:1-3ல் தேவன் ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிற அந்த ஸ்தலம்தான். புதிய எருசலேமாய் - பரம எருசலேமாய், "1000 வருட ஆட்சி, கோகேமாகே யுத்தம், அக்கினியால் அழிப்பு, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு" போன்றவை முடிந்து, வெளி.21:2ல் இறங்கி வருவதாகும். வெளி.17:5ல் சொல்லப்பட்ட "மகா பாபிலோன்" என்பது, எப்படி இரகசிய வருகையில் கைவிடப்பட்ட சபைகளின் போப் தலைமையிலான கூட்டமைப்பு போன்றதோ, அப்படியே இந்த புதிய எருசலேம் என்பதும், கிறிஸ்துவின் மனைவியாகிவிட்ட புதுப் பெண்ணை, புதுமணவாட்டியைக் குறிக்கிறது. ஏற்கனவே நாம் பார்த்ததுபோல, சோரம் போய் மறுபடியும் மனந்திரும்பி விசுவாசிகளின் பட்டியலில் வந்திருக்கும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் (எபி.11ல் உள்ளோர். அந்திகிறிஸ்துவின் காலத்து இரத்த சாட்சிகள், பரலோகம் வந்து சேர்ந்த 144000 பேர் போன்றவர்கள்) அனைவரும் ஓசி.2ல் சொல்லப்பட்டபடி, மறுபடியும் மனைவியாய் ஏற்றுக் கொள்ளப்பட்டு கிறிஸ்துவின் சபையாகிய மனைவியோடு இணைந்து ஒரே மனைவியாய் கூட்டமாய், குழுவாய் - புதிய எருசலேம் என்ற பெயரில் இறங்கி வருவார்கள். ஆமென். வெளி.21:2,9ல் சொல்லப்பட்டது இந்த, மனைவி அந்தஸ்துள்ள ஒரே கூட்டமாகும். (இது குறித்து, "தேவனுக்கு இரண்டு மணவாட்டியா?" என்ற செய்தியை, இதே ஆராய்ச்சிப் புத்தகத்தில் வாசியுங்கள்).

வெளி.22:17ல் சொல்லப்பட்ட மணவாட்டி என்பது இன்னும் திருமணமாகாதிருக்கும் - அதாவது இரகசிய வருகையில் எடுபடாதிருக்கும் - தற்கால கிறிஸ்தவ சபையைக் குறிக்கிறது. இந்த நமது கிறிஸ்தவ சபை, ஆவியானவரின் ஒத்தாசையோடு செய்கிற இரட்சிப்பின் சுவிசேஷ மற்றும் மகிமையின் சுவிசேஷப் பணியை இந்த வசனம் காட்டுகிறது. இதுதான் இன்று நாம் செய்யும் ஜீவத்தண்ணீராம் இயேசுவை பரப்பும் ஊழியமாகும். ரெபேக்காள், அன்று எலியேசர் முதலான ஒட்டகங்களுக்கு தண்ணீர் கொடுத்த காரியத்திற்கு நிஜமாய் இது இருக்கிறது அல்லவா! இதை வாசிக்கும் தேவ பிள்ளையே! ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணத்திற்கு ஆயத்தமாவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! மற்றவர்களையும் ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## பின்மாரி இனிமேல்தான் சபையில் ஊற்றப்படுமா?

விவசாய காரியங்களில், விதைக்கும் போது மழை பெய்யும்; இது முன்மாரி. பயிர்கள் வளர்ந்து அறுவடைக்கு தயாராகும்போது ஒரு மழை பெய்யும். அது பின்மாரி. இந்த அடிப்படையில்தான், ஆவிக்குரிய ரீதியில் பெய்யக் கூடிய மழையைப் பற்றி வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யோவேல் 2:28-32ல் சொல்லப்பட்டது கடைசி நாட்களில் ஊற்றப்படும பின்மாரியைப் பற்றியது என்று பேதுரு, அப்.2:16-21ல் விளக்குகிறார். மேலும் யோவேல் 2ம் அதிகாரம் வாசித்தால், சிதறிப் போன இஸ்ரேலர்கள் மீண்டும் தாயகம் சேருவார்கள். "அதற்குப் பின்பு" இது நடப்பதாகும் (யோவே.2:28). இது அந்திகிறிஸ்துவின் காலத்தில் நடக்கும். அப்போதுதான் வானத்திலும் பூமியிலும் அதிசயங்கள் நடககும்; சூரியன் அந்தகாரப்படும்; சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும் (யோவேல் 2:30,31; மத்.24:29,30). அந்த காலக்கட்டம்தான் இரண்டாம் வருகை சம்பவிக்கும் காலம்; அப்போதுதான் இஸ்ரேலருக்கு இரட்சிப்பு உண்டு (யோவேல்.232; அப்.2:21). இது இஸ்ரேலருக்கு தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்ட பின்மாரிக்கான வாக்குத்தத்தம். இதிலே மாரி - மழை - என்றால், மத்.3:11ல் சொல்லப்பட்ட, ஆவியினாலும் அக்கினியினாலும் பெறப்போகும் ஞானஸ்நானமாகும். அதாவது, ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும் பெறுவதாகும் (இதுகுறித்து, "ஆவியினால் ஞானஸ்நானமும் ஆவியினால் நிரப்பப்படுதலும் ஒன்றா?" என்ற செய்தியையும், "ஆவியினாலும், அக்கினியினாலும் ஞானஸ்நானம் என்றால் அர்த்தமென்ன?" என்ற செய்தியையும் இதே நூலில் வாசியுங்கள். "ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்" என்ற ஆசிரியரின் கருத்தரங்கு செய்தி DVD யும் கேளுங்கள்) இந்த பின்மாரி ஊற்றுதல், இஸ்ரேலர்களுக்கு, அநதிகிறிஸ்துவின் மாக உபத்திரவ காலத்தில் ஆரம்பித்து (எரே.30:7) 1000 வருட ஆட்சியிலும் தொடரும். ஆமென்.

கிறிஸ்தவ சபையைப் பொறுத்தவரை. ஆபிரகாமுக்கு - ஆபிரகாம் சந்ததியான இஸ்ரேலருக்கு - உண்டான அத்தனை ஆசீர்வாதங்களும், வாக்குத்தத்தங்களும் கிறிஸ்து இயேசுவினால் நமக்கு வந்து சேருகிறது. அல்லேலூயா! (கலா.3:7-9). அப்படியே இந்த பரிசுத்த ஆவி சம்பந்தப்பட்ட வாக்குத்தத் ஆசீர்வாதமும் கிறிஸ்தவ சபைக்கு உண்டு என்று கலா.3:14 சொல்கின்றது: "ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்பயாகவும், ஆவியைக் குறித்து சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று." அப்படியானால், இது நமது சபையில் நிறைவேறிவிட்டதா?

அல்லது இனிமேல்தான் நிறைவேறுமா? அல்லது முன்மாரி முடிந்துவிட்டது; இனி பின்மாரிதான் ஊற்றப்படப் போகிறதா? இந்தக் கேள்விகளுக் கெல்லாம் ஆவியானவர்தாமே பதில் தருவாராக!

சபை சிருஷ்டிக்கப்பட்டது சிலுவையிலே (எபே.2;15); அது நிறுவனம் ஆனது (Established) ஆதி பெந்தெகொஸ்தே நாளிலே (அப்.2). ஆவியானவர் வானிலிருந்து இறங்கி வந்தார்; ஆவியின் அபிஷேகமும், அக்கினி அபிஷேகமும் அங்கிருந்த 120 பேரும் பெற்றனர். இந்த செயல்பாட்டை கிண்டல் செய்த உள்ளூர் யூதர்கள் மத்தியில்தான் பேதுரு. கடைசி நாட்களில் நடைபெறும் என்று யோவேல் சொன்னது நிறைவேறுகிறது என்று சொல்கிறான் (அப்.2:16,17). **அதாவது யோவேல் சொன்ன பின்மாரி, அன்றே ஊற்றப்பட்டாயிற்று என்று அறிகிறோம்.** 120 யூதர்களுக்குள் ஊற்றப்பட்ட பின்மாரி. கொர்நேலியு வீட்டிலுள்ள புறஜாதிகளுக்கும் ஊற்றப்பட்டது (அப்.11:44-48). இப்படியாய் பின்மாரி ஊற்றப்படும் நிலை உலகமெங்கும் தொடரும் - நடக்கும் என்று பேதுரு சொல்வதைப் பாருங்கள்: “இந்த வாக்குத்தத்தமானது உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது” (அப்.2:39). இந்தப் பின்மாரி அனுபவம் அப்போஸ்தல நடபடிகள் முழுவதும் தொடர்வதை நாம் காண்கின்றோம். புதிய ஏற்பாட்டிலுள்ள எல்லாப் புத்தகங்களும் “ஆமென்” என்று சொல்லி முடிக்கப் பட்டிருக்கும். ஆனால் அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் மாத்திரம் ஆமென் என்று முடிக்கவில்லை. காரணம் என்ன தெரியுமா? அன்றைக்கு பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பித்த அப்போஸ்தல ஊழியம் இன்னும் தொடர்கிறது; அது சபை எடுத்துக் கொள்ளப்படும் இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகைவரை தொடரும். அல்லேலூயா!

உண்மை இப்படியிருக்க, இன்றைக்கு பல ஊழியர், “இனிமேல்தான் பின்மாரி ஊற்றப்படப் போகிறது; ஆயத்தமாயிருங்கள்” என்று பிரசங்கிக்கிறார்கள். அப்படியானால் அன்றைக்கு பேதுருவின் பிரசங்கம் விருதாவா? சபையைப் பொறுத்தவரை ஆத்ம அறுவடை இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையின் போதுதானே! இந்த வருகையே, ஆதி அப்போஸ்தல காலத்திலிருந்தே அனைவரும் எதிர்பார்த்த ஒன்றுதானே! இதை வைத்துத்தானே தெசலோனிக்கேயா சபையில் குழப்பம் வந்தபோது பவுல். 2தெச. 2ம் அதிகாரம் எழுதி இன்னும் சபை எடுபடவில்லை என்று விளக்குகிறான். ஆக, ஆதியிலிருந்தே, வருகைக்காய் சபை காத்திருப்பதால் அப்போதிருந்தே பின்மாரி ஊற்றப்பட்டுக் கொண்டே இருக்கிறது என்று

அறியலாம். அப்.2:38ன் படி வாஞ்சையுள்ள இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள், அன்றும், இன்றும், என்றும் பெற்றுக் கொள்ள முடியும். இல்லையென்றால், ஏன் காத்திருப்புக் கூட்டம், பரிசுத்த ஆவியின் அபிஷேகப் பெருவிழா, அக்கினி அபிஷேகப் பெருவிழா என்றெல்லாம் ஆதியிலிருந்தே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்? சிந்தியுங்கள். ஆதியிலே சீஷர்கள் ஸ்தேவான் முதல் சிதறடிக்கப்பட்டதாலும், ரோம சர்க்காரின் ஆட்சியிலே, கத்தோலிக்க சபையால் பெருத்த இடையூறுகள் சபைக்கு ஏற்பட்டதாலும், சத்தியம் மறக்கப்பட்டு மறைக்கப்பட்டு - பின்மாரி பற்றிய உணர்வுகூட இல்லாத நிலை ஆகிவிட்டது. 1905ல் பண்டித ராமாபாய் போன்றோரின் ஊழியம் முதல் பின்மாரி ஊற்றப்படுவது உணர்த்தபபட்டதால், ஆதி அப்போஸ்தல கால நிலை தொடர ஆரம்பித்தது. (முன்மாரி, என்ற பேச்சுக்கே சபையில் இடமில்லை என்பதை முதலில் அறியவேண்டும்; அப்.2ம் அதிகாரம் முன்மாரி என்றால்தான் தற்கால பிரங்கியார் சொல்வது போல, பின்மாரி இனி வருகிறதாயிருக்கலாம்).

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! நீ பின்மாரியின் காலத்தில்தான் இருக்கிறாய். முதலாம் நூற்றாண்டு சபைக்கே, வருகைக்கான கடைசிகாலம் என்னும் போது, 21ம் நூற்றாண்டு அதனிலும் அதி சமீபமல்லவா! இன்றே அக்கினி அபிஷேகம் பெற்றுக்கொள்! இயற்கைக்கு அப்பாற்பட்ட காரியங்களை உன்மூலம் நடப்பிக்க தேவன் அப்.2லேயே தயாராக இருக்கிறார்! அன்று ஆரம்பித்த அப்போஸ்தலர் நடபடிகள், சபை எடுபடும்வரை தொடரட்டும்! வருகை தாமதமானால், உன் வாழ்நாளில் உன் பங்கு என்ன? ஆத்மாக்களோடு தேவனை சந்திக்க ஆயத்தமா? (ஆமோஸ்) இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## அக்கினியால் உலகம் அழியுமா? அப்போது என்னென்ன நடக்கும்?

2பேது.3:5-7 வசனங்களின்படி, பூர்வ காலத்தில் உலகம் ஜலப்புரளயத்தால் அழிக்கப்பட்டது என்றும், நாம் வாழும் இந்த உலகம் அக்கினியால் அழிக்கப்படும் என்றும் அறிகிறோம். இது எப்போது நடக்கும்? எப்படி நடக்கும்? என்னென்ன நடக்கும்? ஆவியானவர்தாமே விளக்குவாராக!

இந்தக் காலம் சபையின் காலம். இரகசிய வருகையிலே சபை எடுத்துக் கொள்ளப்படும். அதன்பின் பூமியிலே அந்தி கிறிஸ்துவின் ஆட்சி; மற்றும் தேவனின் கோபாக்கினை. 7 ஆண்டு முடிவில், இயேசுவோடு கூட

ஒலிவமலையில் நாம் பூமிக்கு இறங்கப் போகிறோம். அதுதான் 2ம் வருகை (எபி.9:27,28). அப்போது, அர்மெகதோன் பள்ளத்தாக்கிலே இஸ்ரேலரைச் சார்ந்த ஒரு கூட்டமும், அந்திகிறிஸ்துவை சார்ந்த ஒரு கூட்டமும் போரிட்டுக் கொண்டிருக்கும். இயேசு, இஸ்ரேலருக்காகப் போராடி அந்திகிறிஸ்துவையும் கள்ள தீர்க்கதரிசியையும் பிடித்து, அக்கினியும் சந்தகமும் எரிகிற கடலிலே தள்ளுவார்; அவனுடைய ஆட்கள் அழிக்கப்படுவர் (வெளி.19:11-21). மேசியாவைக் காணும் உயிரோடுள்ள இஸ்ரேலர் இரட்சிக்கப்படுவார்கள் (வெளி.1:7; மத்.24:30,31; ரோ.11:25,26). புறஜாதிகளோ வெள்ளாடு, செம்மறியாடு என்று இரண்டாய்ப் பிரிக்கப்படும் (மத்.25). ஆயிரம் வருட ஆட்சி ஆரம்பமாகும். சாத்தான் அதல பாதாளத்தில் கட்டி வைக்கப்படுவான் (வெளி.20:2). இஸ்ரேலருக்குரிய கானான் தேசம் அவர்களுக்கு தரப்பட்டு, மறுரூபமான நிலையிலுள்ள தாவீது, தானியேல், 1,44,000 பேர் போன்றோர் ஆள்வார்கள். இயேசுவைக் கண்டு இரட்சிக்கப்பட்ட - மனித நிலையிலுள்ள இஸ்ரேலர்கள் அவர்களுக்கு குடிமக்களாய் இருப்பார்கள். நாமோ மீதமுள்ள உலகை. செம்மறியாடுகளை குடிமக்களாய்க் கொண்டு ஆள்வோம். அப்போது மரணமும் உண்டு. 1000 வருட முடிவில் சாத்தான் அவிழ்த்து விடப்படுவதால், அவன் கோகேமாகே பகுதி மக்களோடு சேர்ந்து, பரிசுத்தவான்களின் பாளையத்தையும் பிரியமான நகரத்தையும் சூழ்ந்து கொள்வான்; தேவன் அக்கினியால் அவர்களை அழிப்பார் (வெளி.20:7-8; மல்.4:1). அதன்பின் வானமும் பூமியும் மாறிப்போம்; அந்த நிலையில், வெள்ளை சிங்காசன நியாயத் தீர்ப்பு நடக்கும்(வெளி.20:11-15). அதன்பின் புதிய வானம் புதிய பூமி உண்டாகும். புதிய எருசலேமிலே நாமிருந்து புதிய பூமியில் உள்ளோரை நாம் வழிநடத்துவோம் (வெளி.21,22).

**இந்த நிலையில் பல காரியங்களை நம் சொந்த அறிவோடு அல்ல; வேத வசனத்தோடு ஒப்பிட்டு புரிந்துகொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம்.** 2 பேது.3:5-7ல் சொல்லப்பட்டபடி ஜலப்பிரளயத்தால், உலகம் அழிந்தது; ஆனால் பூமி இல்லாமல் போகவில்லை; உலகமும் (commos) உலகத் திலுள்ளவைகளும்அழிந்தன; உலகமோ புதுமையாக்கப்பட்டது; புதிதாய் சிருஷ்டிக்கப்படவில்லை. ஆதி.1:1ன்படி ஆதியிலே (Dateless past) உலகைப் படைத்த தேவன் அதற்குப்பின் புதிதாய் படைக்கவே இல்லை. நோவாவின் ஜலப்பிரளயத்தில்கூட பூமி அழிக்கப்பட்டு புதிதாய் சிருஷ்டிக்கப்படவில்லை. அப்படியானால், "வானங்கள் மடமடவென்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம்; பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2 பேது.3:10) என்றும், பின்பு, நான்

புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன் முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின; சமுத்திரம் இல்லாமல் போயிற்று" (வெளி.21:1) என்றும் இருக்கிறதே அவைகளின் பொருளென்ன? இப்படியெல்லாம் கேள்விகள் வரும்பேது, Approved King James Versionக்கோ மூலபாஷைக்கோ போய்த்தான் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். முந்தின வானமும் (First Heaven) முந்தின பூமியும் (First Earth) ஒழிந்து போயின என்பதற்கு ஆங்கிலத்தில், "pass from one condition to another" என்றும், கிரேக்க பாஷையில், "PARERCHOMAI" என்றும், உள்ளது. அதாவது, ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு (change of state) மாற்றப்படும் என்றுதான் பொருளே ஒழிய, அழிக்கப்பட்டு புதியதாய் சிருஷ்டிக்கப்படும் என்று அர்த்தமல்ல.

**அடுத்த கேள்வி: "அக்கினியால் அன்றையதினம் உலகிலுள்ள அத்தனை பேரையும் அழிப்பாரா?"** வானத்திலிருந்து இறங்கிய அக்கினி, கோகே மாகே யுத்தத்தில் ஈடுபட்ட பிசாசின் செயலுக்கு ஒப்புக்கொடுத்த பாவிகளைத்தான் பட்சித்துப் போடும் (வெளி.209). மல்.4:1ம் அப்படியே சொல்கின்றது. அப்படியானால் அந்த காலக்கட்டத்தில் பரிசுத்தவான்களும் இருப்பார்களா? அவர்களின் நிலை என்ன? இந்த கோகேமாகேயுத்தமே, "பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொள்வது" என்று வெளி.20:9 சொல்வதால் பரிசுத்தவான்கள் நிச்சயம் இருக்கிறார்கள் என்று அறிகிறோம். இந்தப் பரிசுத்தவான்களும், கோகே-மாகே யுத்தம் செய்யும் பாவிகளும் எங்கிருந்து வந்தார்கள் என்பது ஒரு கேள்வி. 1000 வருட அரசாட்சியிலே சன்மார்க்கமாய், இஸரேலருக்கு ஆதரவாய் வாழ்ந்த (மத்.25:40) செம்மறியாடுகளும், 2ம் வருகையிலே இரட்சிக்கப்பட்ட, மனிதநிலை இஸ்ரேலர்களும் குடிமக்களாய் வாழ்கிறார்கள். 1000 வருட முடிவில் உயிரோடிருக்கும் இவர்களில் பலர் பிசாசோடு சேர்ந்து (யாக்.1:14,15) கோகேமாகே யுத்தம் செய்யும் பாவிகளாவார்கள். **மீதமுள்ளோர் மனித நிலையிலிருக்கும் நீதிமான்கள் - பரிசுத்தவான்கள்.** அவர்களுக்குள் இரட்சிப்பின் அனுபவம் உருவாகியிருக்கலாம்; ஆரம்பித்திருக்கலாம்; பல இஸ்ரேலர் இரட்சிப்பின் நிலையிலேயே கூட இருக்கலாம். இப்படிப்பட்டவர்களுக்கு அந்த அக்கினியால் அழிவில்லை; அவர்கள் பாதுகாக்கப்படுவர்.

**ஒரு கேள்வி: உலகமே எரியும்போது இவர்கள் எப்படி பாதுகாக்கப்படுவார்கள்?** நோவாவின் கால ஜலப்பிரளயத்தில் உலகமே அழியும்போது, நீதிமான் நோவாவும் அவனோடு சேர்நத நல்லவர்கள்

7பேரும் எப்படி பாதுகாக்கப்பட்டனரோ அப்படியே இவர்களும் தேவனால் பாதுகாக்கப்படுவார்கள். சோதோம் - கோமோரா பட்டணம் எரியும்போது, நீதிமான் லோத்தும் அவன் குடும்பத்தாரும் பாதுகாக்கப்பட வில்லையா? அந்திகிறிஸ்துவின் சோதானைக் காலத்திற்கு நம்மை இரகசிய வருகையிலே பாதுகாக்கப் போவதில்லையா? (வெளி.3:10; 1 தெச.1:10). **"கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிர மக்காரரை, ஆக்கினைக்குள்ளானவர்களாக, நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்"** (2 பேது.2:9). அல்லேலூயா! **மேலும் சிந்தனைக்கு...** அந்த காலத்தில் மறுரூப நிலையிலிருக்கும் நம்மை தேவன் எப்படி எங்கே பாதுகாத்து வைப்பார் என்று யோசித்தீர்களா? மத்.17-மறுரூப மலையில் வந்த, எலியாவும், மோசேயும் எங்கே பாதுகாப்பாய் வைக்கப்பட்டனர் என்று வெளிப்பாடு இல்லையே!

அடுத்து, வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வரும்போது, வெளி.20:11ன்படி வானமும் பூமியும் இல்லையெனில், மரித்து உயிர்த்தெழுந்த - மனித நிலையில் உள்ளவர்கள் எங்கே நிற்பார்கள் என்று கூட சிந்திக்கலாமே! அப்போது, மத்.12:41, 42ன் படி, பக்தியுள்ள தென்தேசத்து ராஜஸ்திரி எல்லோரும், பாவி இஸ்ரேலருக்கு விரோதமாய் குற்றம் சுமத்துவார்களாமே! மட்டுமல்ல.. அப்.17:30ன் படி அறியாமையின் காலங்களில் வாழ்ந்த பக்தியுள்ள நீதிமானாய் - சன்மார்க்கனாய் வாழ்ந்த நம்முடைய மூதாதையர்கள் அப்போது இருப்பார்களே! மேலும் 1000 வருட ஆட்சியில் வாழ்ந்த, அக்கினியினின்று பாதுகாக்கப்பட்டவர்களும் இருப்பார்களே! இவர்கள் எல்லோரும் நரகத்திற்கு அனுப்பப்பட வேண்டியவர்களா? இவர்கள் தேவானலே உயர்த்திப் பேசப்பட்டவர்கள் அல்லவா! சிந்தியுங்கள். இவர்களெல்லாம் எங்கே போவார்கள்? இப்படிப்பட்டவர்கள் போகுமிடம்தான் புதியபூமி என்றும், மறுரூப நிலையிலிருக்கும் ஆசாரியர்களும் ராஜாக்களுமாகிய நாம், புதிய எருசலேமில் இருப்போம் என்றும் வேதம் வெளிப்படுத்துகிறது. **எப்படி?**

புதிய எருசலேம், புதிய பூமியைப் பற்றி சொல்லப்பட்ட வெளி. 21:10-22:5 வசனங்களை ஆவியானவரின் ஒத்தாசையோடு தியானித்தால் சத்தியம் புரிந்துவிடும். ஆமென். மறுரூப நிலையிலே, புதிய எருசலேமில் நாம் இருப்போம் என்பதிலே யாருக்கும் எந்த ஐயமுமில்லை (வெளி.21:9,10). அதிலே சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக் குட்டியானவரும்தான் ஆலயம் என்பதால் (வெளி.21:22), அதுவே சீயோன். அல்லேலூயா! வெளி.21:24ல் "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின்

வெளிச்சத்தில் நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டு வருவார்கள்" என்று உள்ளதே. இதிலுள்ள, "இரட்சிக்கப்படுகிற ஜனங்கள், பூமியின் ராஜாக்கள்" போன்றோர் யார்? அவர்கள்தான் புதிய பூமியில் வாழ்பவர்கள். "அதின் வெளிச்சம்" "அதற்குள்ளே" என்று உள்ளதே அது என்ன? அதுதான் புதிய எருசலேம். வெளி.21:26ல் உள்ள, "உலகத்தாருடைய" என்பது யாரைக் குறிக்கிறது? அவர்கள் தான் புதிய பூமியிலுள்ள உலகத்தார். மட்டுமல்ல.. புதிய எருசலேமில் ஜீவ விருட்சத்தின் கனிகள் எண்டு என்றும், **இலைகள் ஜனங்களின் ஆரோக்கியத்திற்கு ஏதுவாயிருக்கும் என்றும் வெளி.22:2ல் சொல்லப்பட்டிருப்பதால், அந்த ஜனங்கள், புதிய பூமியில், மனித நிலையில் வாழும் மேலே சொல்லப்பட்ட மக்கள்தான் என்றும் அறிகிறேதாம். ஆமென்.**

ஆக, புதிய பூமியில் வாழும் மனிதர்களுக்கு சாத்தானின் பிரச்சனை இல்லையென்றும், நாம் அவர்களைக் கண்காணித்துக் கொள்வோம் என்றும், சாத்தான் இருந்த இடம் நம்மால் நிரப்பப்படுகிறதென்றும், புதிய பூமியானது ஏதேனைப்போல இருக்குமென்றும் அங்கே உள்ளவர்கள் ஆதாம் ஏவாளுக்குள்ள ஆதி.1:28ல் கொடுக்கப்பட்ட அதிகாரத்தோடு வாழ்வார்கள் என்றும், வெளி.22ல் ஜீவவிருட்ச இலைகள் - ஆரோக்கியம் என்றெல்லாம் சொல்லப்பட்டிருப்பதால், அங்கே மரணம் இருக்கலாம் என்றும் யூகிக்கப்படுகிறது. உபா.7:9ன்படி, இஸ்ரேலருக்கு மட்டும் என்பதால், (1000 x 35 வருஷம் / தலைமுறை = 35000 வருஷம்) புதிய பூமி கிட்டத்தட்ட 30000 வருஷத்திற்குமேல் இருக்கும் என்று யூகிக்கப்படுகிறது. அதற்குப்பின் நிலை என்ன? புதிய பூமியில் என்ன நடக்கும்? நகரவாசிகளின் முடிவு என்ன? வேதத்தில் வெளிப்பாடு இல்லை. தேவஜனமே! முதலில் இரட்சிப்புக்கடுத்த வேத வெளிப்பாட்டை அறிந்து கொள்வோம்! தியானிப்போம்! செயல்படுவோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! ஆயத்தமாக்குவோம்!

❖ ❖ ❖

## கொல்லுகிற எழுத்து எது?
## உயிர்ப்பிக்கிற ஆவி எது?

"புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரிய தாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது,ஆவியோ

உயிர்ப்பிக்கிறது" (2 கொரி.3:6) என்ற வசனத்தை எடுத்துக் கொண்டு, பழைய உடன்படிக்கையாம் - கற்களில், எழுத்துக்களால் பதிக்கப்பட்டிருந்த, "நியாயப்பிரமாணம், கொல்லுகிறது" என்றெல்லாம் ஒருசில ஊழியர்கள் சொல்கிறார்கள். இப்படிக் கூறுவதால், இஸ்ரேல் மக்களுக்கு நம் தேவன் அந்த நியாயப்பிரமாணத்தைக் கொடுத்ததே தவறு என்றும்; தவறானதை நம் தேவன் செய்துவிட்டாரென்றும், சொல்ல வேண்டிய நிலை வருவதால், அதனால் தேவநாமம் தூஷணப்படுகிறது என்று அவர்கள் அறிவதில்லை. தேவன் தந்த பழைய உடன்படிக்கை கொல்லுகிறதா? உயிர்ப்பிக்கிறது எது? என்பதை ஆவியானவர் சொல்லக் கேட்போம்.

**ரோ.7:10,12,13,14 போன்ற வசனங்களின்படி, நியாயப் பிரமாணம் ஜீவனுக்கேதுவானது; பரிசுத்தமுள்ளது; நன்மையானது; ஆவிக்குரியதாயிருக்கிறது.** இதை ஆவிக்குரிய ரீதியில் கைக் கொண்டு நடந்தவர்கள்தான் எபி.11ல் சொல்லப்பட்ட பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள். பலர், அதை அறியாமையினாலும், கீழ்ப்படியாமையினாலும் (ஓசி.4:6) தங்கள் பிழையை மறந்து, நியாயப்பிரமாணத்தை பிழையாக்கினார்கள். எனவேதான் புது உடன் படிக்கை தேவைப்படுகிறது (எபி.8:7).

பவுல் ரோ.7:14ல் "ஆவிக்குரியது", மாம்சத்துகுரியது என்று எழுதுகிறான். அந்த வார்த்தைகளை அவன் தன் நிருபங்களில் பல இடங்களில் கையாளுகிறான் (see 1 கொரி.3:1,4). மாம்சத்திற்குரியது என்றால், இயற்கை மனிதனாய் - ஆதாமிய மனிதனாய் - புது சிருஷ்டியாகாத மனிதனாய் - ஜென்ம சுபாவத்தில் வாழ்வது ஆகும் (1 கொரி.2:14). ஆவிக்குரியது என்றால், மறுபடியும் பிறந்த - இரட்சிக்கப்பட்ட - ஆவியானவரால் வழி நடத்தப்படுகிற வசனப்படி வாழ்வதாகும் (1 கொரி.3:1; கலா.6:1). ஆவியானவர், இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளை நம் இருதயத்தில் எபதி வைத்துப போதிப்பார் (யோ.14:26; எபி.8:10).

இப்போது நமது செய்திக்கு வருவோம். 2 கொரி.3:6ல் "எழுத்து கொல்லுகிறது" என்ற உடனே, எழுதப்பட்ட நியாயப்பிரமாணத்தை பலர் எண்ணுகிறார்கள். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடையமனுஷன் தேறினவனாகவும்,. எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்துதலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோ. 3:16,17) என்று சொல்வது, நியாயப் பிரமாணமாகிய பழைய ஏற்பாட்டைத்தானே? நியாயப்பிரமாணம் கொல்லுகிறதா? அப்படியனால் இந்த

வசனம் பொய்யா? அந்த நியாயப்பிரமாணம், கடிந்து கொள்ளுகிறது; குற்றப்படுத்துகிறது; பாவி, பாவி, மரணம் - மரணம் என்றே எச்சரிக்கிறது. இந்த அளவுக்குத்தான் இஸ்ரேல் மக்கள் அதை அறிந்திருந்தனர். எனவே அது அவர்களைக் கொல்லுவது போலிருந்திருக்கிறது; முன்னே நியாயப் பிரமாணத்தில் வாழ்ந்த, இரட்சிக்கப்படாத பவுலுக்கு இதே நிலைதான் இருந்திருக்கிறது என்று ரோ.7ல் எழுதுகிறான். இந்த நியாயப் பிரமாணம், "சீர்திருத்துதலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும்" உரியதாயிருப்பது எப்படி என்று இஸ்ரேலர் அறியவில்லை; அவர்களின் ஊழியத் தலைவர்களும் முழுமையாய் பூரணப்பட்டு இதை போதித்து நடத்தவில்லை (எபி.1:39,40). எனவேதான் இயேசு வந்தார்; கிருபையும் சத்தியமும் அவர் மூலமாய் முழுமையாய் வெளிப்பட்டது; விளக்கப்பட்டது. அல்லேலூயா! (யோ.1:17; எபி.1:2).

**பவுலுடைய பாணி:-** "The letter"- "எழுத்து" என்றால் நியாயப் பிரமாணச் சட்டமாகும்; "Spirit" - ஆவி என்றால், இயேசுகிறிஸ்துவுக் குள்ளாக வரும்புதுவாழ்வுக்கான வல்லமையும், உறவுமாகும் (ரோ.2:29; 7:6). இந்த வல்லமையும், உறவும், ஜீவனும், இயேசுகிறிஸ்துவின் வார்த்தையினாலே வருகிறது ஆவியானவர் மூலமாய் (யோ.6:63). இதுவும் எழுதப்பட்டுத்தான் பைபிளில் இருக்கிறது; **எழுதப்பட்டதால் கொல்லுவது அல்ல என்பதை முதலில் உணர வேண்டும்.** ஏற்கனவே நான் சொல்லியபடி, சட்டதிட்ட நியாயப்பிரமாணத்தைக் கண்டு, புது சிருஷ்டியாகாமல் இயற்கை மனிதனாகவே, மாம்சத்துக்குரியவனாய் இருந்து, மடிகிறவன் புது சிருஷ்டியாக வேண்டாமா? (யோ.3:3,5; 1 பேது.1:@3; 1 கொரி.6:11; யாக் 1:18). ஆவிக்குரியவனாய் ஆக வேண்டாமா?

பவுலால் "எழுத்து" என்று வர்ணிக்கப்படுகிற, நியாயப் பிரமாணத்தின் பரிபூரணத் தன்மையை உணராமல், மேலோட்டமாய் கண்டு, மிரண்டு, ஆவியிலே மடிகிற மக்களை மீட்டெடுக்கவே, அந்த உடன்படிக்கை மாற்றப்பட்டது; இயேசு ஆண்டவரின், ஆவியாயும் (புதுப்பிக்கிறதாயும்), ஜீவனாயும் (கொல்லுவதாய் தோன்றாததாயும்) இருக்கிறவசனங்களை, இருதயமாகிய ஆவியிலே, ஆவியானவராலே எழுத வைத்து நடத்தப்படவே புது உடன்படிக்கை ஊழியம்! அல்லேலூயா! தேவன் தம்முடைய பரிபூரண சித்தத்தை நிறைவேற்ற, விட்டுக்கொடுத்து (permissive) செயல்படுத்தும் சித்தம் உள்ளவர் என்று உணர்ந்தோமானால், இந்தக் காரியம் திட்டமும் தெளிவுமாய் புரிந்துவிடும்.

அப்படியானால், பழைய உடன்படிக்கையால் - நியாயப் பிரமாணத்தால் - கொல்லப்படுவது போன்று, ஜென்ம சுபாவத்திலே இருந்த

இஸ்ரேலருக்கு, புது உடன்படிக்கையில் எப்படி ஜீவன் - ஆவி - கிடைக்கிறது? **நியாயப்பிரமாணத்தின் பிரதான கற்பனை:** (1) தேவனிடத்தில் அன்பு கூறு (2) உன்னைப் போல் பிறனிடத்தில் அன்பு கூறு (மத்.22:36-40; உபா.6:4; லேவி.19:18). இதன் அடிப்படை தாற் பரியம்புரிந்திருந்தாலே, அது கொல்லுவது போல அவர்களுக்கு தெரிந்திருக்காது.

**புது உடன்படிக்கையின் பிரதான கற்பனை:** "நான் உங்களில் அன்பாயிருந்தது போல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோ.13:34).

"நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல, நீங்களும் ஒருவரிலொரவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" (யோ.15:12).

இயேசுவின் அன்பு சாதாரணமானது அல்ல; AGAPE - பதிலை எதிர்பார்ககாத அன்பு; நம்மைப்போல பிறனை நேசிக்கிற அன்பல்ல; நாம் கீழான நிலையிலிருந்தாலும் - கண்ணீர் கவலையில், ஆதரவற்ற நிலையில் இருந்தாலும் - இயலாமையில் இருந்தாலும் அன்பு காட்ட வேண்டும். "நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம் மேல்வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோ.5:8). மரண இருளின் பள்ளத்தாக்கில், அவமானச் சிலுவையிலே, காயங்களோடும், இரத்தங்களோடும், சபிக்கபட்டவரைப் போல் தொங்கவிடப்பட்டிருந்தும், "இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்; இவர்கள் பாவத்தை மன்னியும்" என்று சொன்ன அந்த இயேசுவின் அன்பை ருசிக்கும் யாருக்கும், எவ்வளவு பெரிய பாவியாயிருந்தாலும், அவருடைய வார்த்தை, நியாயப்பிரமாணம் போல கொல்வது போல் தோணாது; அது புதுப்பிக்கும்; ஜீவனைத் தரும். அல்லேலூயா! அந்த ஆவியாயும் ஜீவனாயும் உள்ள இயேசுவின் வார்த்தையை விசுவாசித்து வளர்வோம்! வெற்றி வாழ்க்கை வாழ்வோம்! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்! அயத்தமாக்குவோம்! ஆமென்!

❖ ❖ ❖

## மன்னிக்கும் அதிகாரம் நமக்குண்டா?

கப்பர்நகூமில் ஒரு வீட்டில் இயேசு பிரசங்கித்துக் கொண்டிருக்கும் போது, நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனை சுமந்துகொண்டு வந்தார்கள். ஜனக்கூட்டத்தினிமித்தம் அவரிடம் சேரக்கூடாமல் இருந்ததால், வீட்டின் மேற்கூரையைப் பிரித்து, திமிர்வாதக்காரனை படுக்கையோடு

இறக்கினார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக் காரனை நோக்கி, "மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றார். அங்கிருந்த வேதபாரகர். "இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றி, பாவங்களை மன்னிக்கத் தக்கவன் யார்" என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக் கொண்டிருக்கிறதை இயேசு கண்டு, "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும்" என்று சொன்னார் (மாற்.2:1-12). **தேவனுக்கான அதிகாரம் இயேசுவுக்கு உண்டென்றால் இயேசு தேவன்தானே!** அல்லேலூயா! இதைத்தான், "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக வாசமாயிருந்தது" என்று கொலோ.2:9 சொல்கின்றது. இயேசு மனிதனாய் வந்த தேவன் (1 தீமோ.3:16) என்பதால், நூற்றுக்கு நூறு மனிதனாகவே வாழ்ந்தவர். ஆனால் தேவத்துவத்தின் பரிபூரணம் - தெய்வீகம்- பிதாவின் சித்தப்படி அவ்வப்போது சரீரப்பிரகாரமாக வெளிப்படும். அப்படித்தான் இங்கே வெளிப்பட்டு, பாவங்களை மன்னித்து, பாவத்தினால் வந்த வியாதியிலிருந்து விடுதலை தந்தார். இந்த அதிகாரம் அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு உண்டா? ஆவியானவர் வெளிப்படுத்துவாராக!

உயிர்த்தெழுந்த ஆண்டவர், சீஷர்களிடம், "எவர்களுடைய பாவங்களை மனனிக்கிறீர்களோ, அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும. எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும்" என்றார் (யோ.20:23). "இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை" (எபி.9:22) என்றும், பாவங்களை அறிக்கையிட்டால் மன்னித்து தேவன் சுத்திகரிக்கிறார்" (1 யோ.1:9) என்றும் வேதம் சொல்வதால், நாம் பாவங்களை மன்னிக்க முடியாது. **யோ.20:23ல் மன்னிப்பது என்பது இப்படிப்பட்ட தேவனின் மன்னிப்பை பற்றி சொல்லவில்லை.** இது தேவனின் மன்னிப்பு போன்றதென்று எடுத்துக் கொண்டுதான். ரோமன் கத்தோலிக்க சபையில், பாவ மன்னிப்பை - பாவ சங்கீர்த் தனம் என்ற ஒன்றை ஏற்படுத்தி, அந்த பாதிரியார் பாவ மன்னிப்பைத் தருகிறார். இது தேவனுக்கு சமமாய் நம்மை பாவித்து செயல்படும் தேவதூஷணமாகும். யோ.20:23ஐ ஆங்கிலத்தில் வாசிக்கலாம்: "Whosoever's sins ye remit, they are remitted unto them and whosoover sins you retain they are retained". இங்கே 'Forgiveness, அல்ல; 'remit'' - அதாவது விட்டுவிடுதல் என்பதாகும். நமக்கு விரோதமாய் ஒருவன் செய்யும் தவறை நாம் மனதார விட்டுவிட்டால், அந்த தவறு நமக்கும் அவனுக்கும் இல்லாதது போலாகி விடும். நமக்குள்ளே

வைத்துக் கொண்டே இருந்தால், அது வெறுப்பு - பகைமை - காழ்ப்புணர்ச்சி போன்ற பொல்லாத காரியத்துக்கு ஏதுவாகும். ஆக, மன்னிக்கும் அதிகாரமல்ல; மன்னிக்கும், மறக்கும், விட்டு விடும் மனப்பாங்கு, மனப்பக்குவம் நமக்குத் தேவை. இதற்குத்தான் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள் என்று யோ.20:23ல் இயேசு சொல்கிறார். இந்த கருத்தில் தான், "மறப்போம்; மன்னிப்போம்" என்று யோ.20: 22ல் இயேசு சொல்கிறார். இந்த கருத்தில் தான், "மறப்போம்; மன்னிப்போம்" என்று பேரறிஞர் அண்ணாகூட சொல்லியிருக்கிறார்.

இயேசு நமக்கு கட்டவும், கட்டவிழ்க்கவும் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களாகிய ஆசீர்வாதமுள்ள வாக்குத்தத்த வசனங்களை தந்திருக்கிறார் (மத்.18:18; 16:19). அவைகளால் நன்மைகளை வருவித்துக் கொள்ள முடியும் என்கிறார். அப்படியே, இந்த திறவுகோலாம் யோ.20:23ஐக் கைக்கொண்டு, அடுத்தவர்களின் தப்பிதங்களை விட்டுவிட்டால் - மறந்துவிட்டால், ஆசீர்வாத வாக்குத்தத்தங்கள் நமக்கு பெருகும்; சமாதானம், சந்தோஷம், உறவு, ஐக்கியம், அன்பு பெருகும். பரலோகம் போகும் வாசல் இருவருக்குமே இலகுவாயிருக்கும். எப்படி என்றால், மத்.6:14,15ஐ வாசித்தால் புரியும். "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்; மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்." என்னே தேவன் தந்த சாவியாம் யோ.20:23ன் மகிமை! அல்லேலூயா! ஜீவனுக்குப் போகும் வாசல் எவ்வளவு நன்மையாயிருக்கிறது பாருங்கள்! இதைத்தான் கொலோ.3:13ல் பவுல் அப்போஸ்தலன் கூறுகிறான்: "ஒருவரை ஒருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." கிறிஸ்துவின் சிந்தையைப் பாருங்கள்: "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்" (சங்.103:12). இப்படியாய் நாமும் விலக்க வேண்டும். இதனால் நமக்கும் ஆசீர்வாதம்; தப்பிதம் செய்தவனுக்கும் நன்மை-மாற்றம்! ஆமென்.

மத்.18:23-35ஐ வாசியுங்கள். 14000 தாலந்து கடன்பட்டவன் மீது மனதிரங்கி, ராஜா - ஆண்டவன் - கடனை மன்னித்துவிட்டான். ஆனால் மன்னிக்கப்பட்டவனோ, தன்னிடம் 100 வெள்ளிப்பணம் மட்டுமே கடன் பெற்றவனின் செயலை மறக்கும் - மன்னிக்கும் மனப்பாங்கு இல்லாமல் அவனை காவலில் போட்டான். இந்த விபரம் ராஜாவுக்கு தெரிந்து, "நான்

உனக்கு இரங்கியது போல, நீ இரங்க வேண்டாமோ?" என்று கேட்டு, அவனுக்கு தண்டனை அளிக்கப்பட்டது. இதுகுறித்து இயேசு சொல்வதைப் பாருங்கள்; "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்."

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! உன் பாவங்கள் தேவனால் மன்னிக்கப்பட்டு, நீ பரலோகம் இலகுவாய் போக வேண்டுமானால், உனக்கு எதிராய் யார் என்ன தப்பிதம் பண்ணினாலும், அதை, உன்னைவிட்டு, போக்கடிக்கும்- விட்டுவிடும் - நீக்கும் மனப்பாங்கு உனக்கு வரட்டும்! மறப்போம் - மன்னிப்போம் என்றநிலை வரட்டும்! இதுதான் கிறிஸ்துவின் சிந்தை! இந்த சிந்தை வளர, பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்டு, அவரின் வழிநடத்துதலுக்கு ஒப்புக்கொடு! இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்தமாக்குவோம்!!!

❖ ❖ ❖

## சைவமும் வைணவமும் கிறிஸ்தவமா?

கிறிஸ்துவின் உபதேசம் - சத்தியம் - நற்செய்திதான் கிறிஸ்தவம். இதை ஏற்று கைக்கொள்பவர்கள்தான் ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள். மற்றவர்கள் எல்லாம் பாரம்பரிய, பெயர்க் கிறிஸ்தவர்கள்; போலிக் கிறிஸ்தவர்கள்; கிறிஸ்தவர்கள் என்ற கூட்டத்தில் சேராதவர்கள்; பக்க வழியாய் நுழைந்தவர்கள (யூதா.4,11). முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு, கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது (அப்.11:26). இயேசுவின் மரணம் உயிர்த்தெழுதல்தான் அன்றும் இன்றும் என்றும் நற்செய்தி - சுவிசேஷம் (1 கொரி.15:1-4). இப்படியாய் நற்செய்தியை சொல்லி, சீஷர்களாக்கி, கிறிஸ்தவத்தை ஸ்தாபிக்க தோமா முதலாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்தார் (மத்.28:18-20). தோமாவின் ஊழிய விளைவு பற்றி "சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே" என்று பிரசங்கிப்போரின் கருத்தை முதலில் பார்ப்போம்:

"தோமாவின் நற்செய்தியைக் கேட்டு, 5 லட்சம்பேர் இயேசுவை நேரடியாக ஏற்றக் கொண்டார்கள். மீதமுள்ள ஜனங்கள், "கடவுள் ஒருவரே; அவர்திரித்துவமாக இருக்கிறார்; அவர் நம்மை மீட்க மனிதனாய் அவதரித்தார்; அவரை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில், மோட்சம், கைலாசம், வைகுண்டம் கண்டிப்பாக போகலாம்" என விசுவாசித்து, அக்கொள்கைகளை

அடிப்படையாகக் கொண்ட, சைவ வைணவ மதங்களை ஸ்தாபித்து, இறைவனை தொழுது கொண்டார்கள். இதுதான் நடந்த சரித்திர உண்மை."

இவர்களின் இந்த கூற்றுப்படி, நேரடியாக ஏற்றுக் கொண்டவர்கள் கிறிஸ்தவர்கள்; மற்றப்படி, சைவ, வைணவ மதங்களை ஸ்தாபித்தவர்கள் கிறிஸ்தவர்களா? திரித்துவத்தை நம்புவோர், இயேசுவை விசுவாசிப்போர் ஏன் கிறிஸ்தவர்களாக நம்மைப் போல் ஆகவில்லை? தோமாவின் சுவிசேஷத்தை நேரடியாக ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஸ்தாபித்த மதங்கள் கிறிஸ்தவ மதமாகுமா? சிந்தியுங்கள். இங்குதான் பிசாசின் செயல் வெளிப்படுகிறது. ஏற்கனவே தங்கள் இறைவனை வணங்கி வந்த மனிதர்கள், கிறிஸ்தவர்களாய் மாறிவிடக்கூடாது என்பதற்காக, அவர்களை தக்க வைத்துக் கொள்ள இப்படியாய் ஒருசில நமது சத்தியங்களை எடுத்துக் கொண்டு, சைவ வைணவ மதங்களை ஸ்தாபித்திருக்கின்றனர். இப்படி ஸ்தாபித்தவர்கள் திராவிடர்களில் பெரும்பாலானோர் என்றாலும், ஐம்பெரும் பூதங்களை வணங்கி வந்ததிராவிடர்களுக்கு, ஏதோ ஒரு இறைக் கொள்கையை, சரியாகவோ, தவறாகவோ புகுத்தியவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள்தான். அவர்களின் ரிக், யஷுர், சாமம், அதர்வணம் வேதம்தான் பலிமுறைகள் பற்றியும், இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை என்பது பற்றியும், ஆசரிப்புக் கூடாரம் பற்றிய தொழுகை ஸ்தலங்கள் பற்றியும் கற்பித்து நடத்தியது. **(ஜனங்களை ஆளுகிற பிரஜாபதி தன்னுடைய ஜனங்களின் பாவம் போக்கும்படியாக தன்னோட சொந்த சரீரத்தையே பிராயச்சித்த பலியாக கொடுத்து, யக்ஞம் செய்வார்"** - சாமவேதம் - பாகம் ஐஐ - தாண்டீய மஹா பிரமாணம்). **ஆரியரின் நான்கு வேதங்களை அறிந்த மக்கள், தோமாவின் நற்செய்தியையும் கேட்டு, உண்மைச் சத்தியத்தை உணர்ந்து, கிறிஸ்தவர்களாய் மாறிவிடக்கூடாது என்பதற்காய் உருவானதே சைவ, வைணவ மதங்கள்.** அதேபோலத்தான். பூத்தர்களுக்குள்ளும் ஒரு நடுக்கம் உண்டாகி, புத்தருக்கு, தர்மகயா, சம்போககாயா, நிர்மாணகாயா என்ற திரித்துவப் பெயரை வைத்ததினால், மகாயானம், ஹுனயானம் என்று இரண்டு பிரிவுகளாய் மாறின. **அதனால், மகாயானமும் கிறிஸ்தவம் என்று சொல்ல முடியுமா?** அப்படியே தோமாவின் போதகத்தால், சமணமதமும் ஸ்வேதாம்பார், திகம்பரர் என்ற இரண்டு பிரிவுகளாய் மாறின என்பதால் அவைகளும் கிறிஸ்தவம் என்று சொல்ல முடியுமா? தங்கள் தங்களின் கடவுள் கொள்கையை தக்க வைக்க இப்படியாய் மாற்றங்கள் - பிரிவினைகள் - தோற்றங்கள் நடந்திருக்கின்றன. மற்றப்படி தோமாவின் சத்தியத்தை ஏற்போர் அப். 2:40ன்

படி, மாறுபாடுள்ள சந்ததியை விட்டுவிலகி, கிறிஸ்தவர்களாக அல்லவோ மாறியிருக்க வேண்டும்! சிந்தியுங்கள்!

பிதாவையும், குமாரனையும் பரிசுத்த ஆவியானவரையும் ஒருவன் விசுவாசித்தால், அதே நாமத்தில்தான் விசுவாசிக்க வேண்டும்? அதை விடுத்து, பிதாவை சிவன் என்றும், பரிசுத்த ஆவியானவரை சக்தி, விஷ்ணு என்றும் அழைக்க - வணங்க தோமா போதித்தாரா? வினைதீர்க்கும் விநாயகர், அழுக்குண்டை பிள்ளையார், மரித்து உயிர்த்தெழுந்த பிள்ளையார், வேழமுகப் பிள்ளையார். தண்ணீரில் கரைக்கும் பிள்ளையார், சூரபத்மனை வென்ற குமரக் கடவுள். வள்ளியை தேடிவந்த தெய்வம், ஆறுமுகன், 12கரத்தான், ஐயப்பன், பிராணலிங்கம். நான்முகன், விக்கிரக வழிபாடு, காவடி எடுத்தல், அரிஹரன், அர்த்தநாரீஸ்வரர், சூலாயுதம், நடராஜனின் ஆனந்த நடனம், தேங்காய் உடைப்பு. மிருக வழிபாடு, அமாவாசை - பௌர்ணமி, கிருத்திகை ஆசரிப்பு, சாமிக்கு முடி காணிக்கை, சந்தனம், குங்குமம், விபூதி இடுதல், கன்றுக்குட்டி வாகனம், நந்தி, ஸ்தல விருட்சம், தூபம் காட்டுதல், பிரசாதம் - எண்ணெய் விளக்கு ஏற்றுதல் என்பதான வழிபாட்டு முறைகளை தோமாவா சொல்லிக் கொடுத்தார்? **சைவ வைணவ மதங்களில் இவைகள் இருப்பதை நம் வேதம் ஏற்குமா? இப்படிப்பட்ட பிசாசின் கிரியைகள் உள்ள மதங்களும் கிறிஸ்தவமும் ஒன்று என்று எப்படிச் சொல்ல மனச்சாட்சி இடங்கொடுக்கிறது?**

அப்படி "சைவமும் வைணவமும் கிறிஸ்தவம்தான்" என்றால், சைவர்களும், வைணவர்களும் கிறிஸ்தவர்களாக மாறத் தேவை யில்லையே! இந்த போதனைக்காரர்கள். ஏன் அங்கிருந்து நமக்குள் வந்தார்கள்? வந்து குழப்புகிறார்களா? அங்கேயே இருந்திருக்கலாமே!

மேலே சொன்ன பூஜைகளும், ஆசரிப்புகளும், நிழலாட்டமானவை என்று வாதிடும், பக்கவழியில் நுழைந்து, கிறிஸ்தவப் போர்வையில் நிற்போர், பழைய ஏற்பாட்டு நியாயப் பிரமாண நிழலாட்ட காரியங்களெல்லாம் இயேசுவாகிய நிஜம் வந்தபின் முடிந்துவிட்டது என்று உணரவில்லையா? (கொலோ.2:16,17). நிழலுக்கான நிஜம் வந்திருப்பதை விசுவாசிக்க தோமா போதித்திருப்பாரே! அதை விசுவாசிக்காமல், தாங்களே தங்களின் சுயசித்தப்படி காரியங்களை செய்து, நிஜமான இயேசுவை மறுதலிக்கிறவர்களும், அவர்களை தூக்கிப் பிடித்து, ஆதரவு தெரிவிப்பவர்களும் துரோகிகள் அல்லவா! **நிழலாட்டமாய் செய்கிறார்கள் என்றால், ஏன் சைவ வைணவ மதங்கள் பலி செலுத்துவதில்லை?** இரத்தப்பலி இயேசுவுக்கு நிழலாட்டம்தானே! இதை எதிர்ப்பவன் பிசாசுதானே!

இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை என்று ஏன் இவர்கள் செய்து காட்டவில்லை? முஸ்லீம்களும் இந்த விஷயத்தில்தானே மகா எதிர்ப்பு!

"ஒரு நல்ல, உயர்ந்த, உன்னதமான நோக்கத்தோடே தான் நம் முன்னோர்கள், இதை எல்லாம் உவகப்படுத்தினார்கள். உண்மையான கடவுளை இழிவு படுத்தணும்கிற நோக்கத்தில் அல்ல; கொஞ்ச காலம் இந்த உருவங்களை தியானித்து, பின்பு நிழலைவிட்டு நிஜத்தைப் பிடித்துக் கொள்வதற்காக இதைச் செய்தார்கள்" என்கிறார்கள் இந்த மேதாவிகள். **இந்த எண்ணத்திலா தோமாவின் பிரசங்கம் இருந்தது? தோமாவின் ஊழியத்திற்குப்பின் உருவான மதங்கள் என்றால், இவைகள் கிறிஸ்தவத்திற்கு விரோதமானவைகள்தானே!** யேகோவாவை வணங்கும், இயேசுவை ஏற்காத நியாயப்பிரமாண இஸ்ரேலரையே, கிறிஸ்தவர்கள் அல்லர்- மனமாற்றம் வராதவரை அவர்களுக்கு பரலோகம் இல்லை - என்று நாம் கூறும்போது, 2000 ஆண்டுகளாய் இப்படி வழிபடுபவர்களும், அவர்களை தூக்கிப் பிடிப்போரும் எப்படிப்பட்டவர்கள் என்று சிந்தியுங்கள். இஸ்ரேலருக்குக்கூட 2ம் வருகையில் இரட்சிப்பு உண்டே (வெளி.1:7; சக.12:10; ரோ.11:25-27; எரே.23:5,6). இந்தமதங்களுக்கு, அவைகள் உருவாகும்முன்னமேயே தோமாவால் இரட்சிப்பு சொல்லப்பட்டதே! சொல்லப்பட்டதற்கு விரோதமானது கிறிஸ்தவமா? சிந்தியுங்கள். சைவ - வைணவ மதத்தாரின் கொள்கையில் இயேசுதான் தெய்வம் என்று வெளிப்படையாய் பெயர்போட்டு சொல்கிறார்களா? ஏன் சொல்லவில்லை? தோமாவின் போதகத்தை ஏற்காதவர்கள் இவர்கள்! **"சகோ.தாயப்பன் மட்டுமல்ல, ஒரு காலத்தில் சகோ.சாது செல்லப்பாவும் இப்படிப்பட்ட புராண ஆராய்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டவர். இப்போது ஓரளவு தெளிவு பெற்றுள்ளார். இப்படி பலர் இப்போது சரியான உபதேசத்தில் வந்து கொண்டிருக்கின்றனர்" என்ற Dr.புஷ்பராஜ். ஜாமக்காரன் அவர்களின் வார்த்தையோடு முடிக்கிறேன்.**

❖ ❖ ❖

## பின்னிட்டு விழும் கலாச்சாரம்... ஜாக்கிரதை!

ஊதி விழவைப்பது, கையை காட்டி விழவைப்பது, நெற்றிக்கு இருபுறமும் உள்ள பொட்டுக்களை பிடித்து அழுத்தி விழ வைப்பது, தலையையோ, நெற்றியையோ பிடித்து பின்னிட்டு தள்ளி விழ வைப்பது போன்ற பல காரியங்கள். இன்றைக்கு கிறிஸ்தவ வட்டாரத்தில் ஒரு

கலாச்சாரமாய் மாறிவிட்டது. **இதை செயல்படுத்துபவர்கள் "பெரியவர்கள்" ஆக்கப்படுகிறார்கள்.** இது ஒரு "ஹிப்னாட்டிசம்' போல தொடர்கிறது. ஒருமுறை இதிலே கலந்து, கீழே விழுந்தவன், தொடர்ந்து இதிலேயே ஈடுபட்டு விழுகிறான். இதனால் இவனுக்கு வியாதியிலிருந்து, கடன் பிரச்சனையிலிருந்து, சமாதானக் குறைவிலிருந்து விடுதலை கிடைத்திருக்கிறதா? பிசாசின் சோதனைகளிலிருந்தும் கட்டுககளிலிருந்தும் நிரந்தர விடுதலை வந்திருக்கிறதா? எல்லாவற்றுக்கும் மேலாக, தேவனுடைய வல்லமையாவது இவனில் பெருகி இருக்கிறதா? கீழேவிழும் முன் என்ன நிலையோ, அதே நிலைதான் விழுந்தபின்னும் அவனுக்கு இருக்கிறது. எந்த மாற்றமும் இல்லை. ஆனால் ஒரு மாற்றம் உண்டு. அந்த ஊழியரைக் கண்ட உடனே பயமும் திகிலும் அவனை அறியாமலே மூடிக் கொளகிறது. தைரியமாய் கிருபாசனத் தண்டையிலே சேர வேண்டியவன் (எபி.4:16), இன்றைக்கு, ஹீரா குகையிலே, ஜிப்ரியேல் தூதனைப் பார்த்த முகமதுவின் நிலைக்கு மாறிவிட்டான். கிருபையையும், இரக்கத்தையும் பெறவேண்டியவனை, ஏதோ ஒரு ஆவி ஆட்கொண்டதுபோல உணர்கிறான். இது உண்மைதானா? ஏன் இந்த நிலை? ஆவியானவர் விளக்குவாராக!

இந்த ஊதும் ஊழியத்திற்கு மூலகர்த்தாவே சகோ. பெனிகின்தான். அமெரிக்காவிலே ஊதும் ஊழியத்தில் பெயர்போன இவர், தனது ஊழியம் தவறானது என்று தேவனால் உணர்த்தப்பட்ட உடனே, அதை விட்டுவிட்டாராம். அப்படி அவர் விழவைப்பது தவறு என்றும் சபையில் பிரசங்கித்தாராம். இதன் விளைவாக அவர் சபையில் ஆத்மாக்கள் குறைய ஆரம்பித்ததாம். நம்மில் பெரும்பாலான சபையார் உண்மையை உணரமாட்டார்கள் அல்லவா! இதனால் சபை வருமானம் குன்றியது; அவர் மிகவும் வேதனைப்பட்டாராம். சபையாரின் வாஞ்சைக்கேற்றபடி மறுபடியும் தனது ஊதுகிற ஊழியத்தை ஆரம்பித்தாராம். கூட்டம் பழையபடி சபையில் நிறைந்ததாம். என்னே கிறிஸ்தவர்கள் உணர்வு! அந்த ஊழியர் தமிழகம் வந்தபோது ஊதுகிற காரியத்தை செய்யக்கூடாது என்றே வந்தாராம்; அதன் படியே செய்யாமலே போனார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சீஷரால் கால் மிதிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட தமிழகத்தின் கிறிஸ்தவ சத்தியத்தில், ஹிப்னாட்டிசத்தை நுழைக்கக் கூடாது என்பதிலே உறுதியாயிருந்த அவரைப் பாராட்டுகிறேன். இது அவரின் உறுதியா அல்லது பயமா? தேவனுக்கே வெளிச்சம்!

அந்த ஊழியரின் இந்த நல்ல எண்ணத்திற்கு மாறாக பிசாசானவன் இப்படிப்பட்ட ஆவியை விதைத்து விட்டதால், இன்றைக்கு தமிழ்நாட்டில், இது

T.V. முதற்கொண்டு எல்லா இடங்களிலும் தலைவிரித்தாடுகிறது. நம் எல்லாருக்கும் தெரியும்: "பாம்பு ஆடும்" என்று. யாருக்காவது பாம்பிற்கு காது கேட்காது என்று தெரியுமா? அது பூமியில் ஊர்ந்து போவதால், பூமியின் அதிர்வுகளை சரீரத்தில் உணர்ந்துதான் செயல்படுகின்றது என்பது தெரியுமா? (நான் ஏதேன் தோட்டத்து பாம்பைப் பற்றிக் கூறவில்லை; சபிக்கப்பட்டபின் ஏற்பட்ட பாம்பின் நிலையை எழுதுகிறேன்). அப்படியானால் அந்தப் பாம்பு எப்படி ஆடுகிறது? அவனின் ஊதுகுழலோடு கூடிய அவனது actionஐ வைத்து ஆடத்தக்கதாய் அவன் பழக்கி வைத்தபடியே ஆடுகிறது. ஆறறிவு உள்ள மனிதனின் நிலையும் இப்படித்தான், பிசாசினால் மனதில் (ஆத்மாவில்) Tune பண்ணப்பட்டு, ஊதும் ஊழியரின் நிலைக்கேற்ப சரீரம் செயல்படுகின்றது. இதைத் தான் ஹிப்னாட்டிசம் என்கிறோம். குடிவெறியினால் மனது மாறி, அதற்கேற்றபடி மனிதனின் செயல்பாடுகள் மாறுவதும் இதோடு சேர்ந்ததுதான். அனிச்சைச் செயலின் உச்சகட்டம் இது. ஆண்டவரோடு அன்றாடம் அந்நியோந்நியமாய் பழகிய ஏவாளையே, தன் வசப்படுத்தும் வார்த்தையினால், மயங்க வைத்து, வஞ்சித்த பிசாசு இன்றும் ஜீவிக்கிறானே! (1 தீமோ.2:14).

**வேதத்தில் இரண்டு இடத்தில் தேவன் ஊதியிருக்கிறார். ஒன்று:** ஏதேன் தோட்டத்தில், தேவன் மண்ணினால் மனுஷனை உருவாக்கி, ஜீவ சுவாசத்தை, அவன் நாசியிலே ஊதினார் (ஆதி.2:7). தேவன் ஊதியதின் விளைவு என்ன தெரியுமா? அவன் ஜீவாத்மாவானான். அவன் மல்லாக்கவோ, குப்புறவோ கீழே விழவில்லை. ஆனால், இன்றோ, ஊதும் ஊழியம் செய்வோர், ஊதும்போது இரட்சிக்கப்பட்ட சபை மனுஷன் கீழே விழுகிறான். அதுவும்மல்லாந்து- பின்னிட்டு விழுகிறான். காரணம் என்ன என்று கேட்டால், தேவனின் வல்லமை, தேவனின் மகிமை, இறங்குகிறது என்கிறார்கள். அன்றைக்கு ஏதேனிலே இறங்கவில்லையோ! சாலமோனின் தேவாலயத்தில் தேவனின் மகிமை இறங்கும் போது யாரும் மல்லாந்து விழவில்லையே! முகங்குப்புறத்தானே விழுந்தார்கள். தேவ வல்லமைக்குள் மூழ்கும் போது - **வேதத்திலே தேவ மனுஷர்கள், முகங்குப்புற விழுந்ததாகத்தான் பார்க்கிறோம்.** ஆனால், கெத்சமனே தோட்டத்தில் பாருங்கள்: "நான்தான்" (I am யோ.18:6) என்று இயேசு சொன்ன உடனே, (யாத்.3:14ல், முட்செடியில் தேவன் மோசேயிடம் சொன்ன இதே வார்த்தையை தியானியுங்கள்) கைது செய்ய வந்த யூதப்பாவிகள், யேகோவா என்றதேவநாம வல்லமையை, மகிமையை தாங்க முடியாமல் பின்னிட்டு தரையில் வியந்தார்கள் என்று பார்க்கிறோம். அப்படியானால் தற்கால ஊதும் ஊழியத்தில் பின்னிட்டு விழுவோரெல்லாம் இரட்சிக்கப்படாத பாவிகளா?

அல்லது ஊதுவோரின் ஆவிக்குள் சாத்தான் புகுந்திருக்கின்றானா? பாம்பாட்டியும் பாம்பும் போன்ற நிலையாகிறதா? சிந்தியுங்கள். தெளிவு பெறுங்கள் (1 நாளா.21:1; அப்.5:3; யோ.13:27).

**இரண்டாவது இடம்:** இயேசு உயிர்த்தெழுந்தபின், யோ.20:22ல் சீஷர்கள்மேல் ஊதினார். இதன் விளைவு என்ன தெரியுமா? சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள காத்திருந்து, பெற்றுக் கொண்டார்கள். இதிலிருந்து நாமறிவது என்ன? பரிசுத்த ஆவியை உலகத்தார் பெற முடியாது; பரிசுத்த ஆவியானவரால், மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட (யோ.3:5) இரட்சிக்கப்பட்டவன்தான் பெறமுடியும். இதைத்தான் இயேசு யோ.14:17ல் சொன்னார் (ஆங்கில மொழி பெயர்ப்பில் வாசியுங்கள்). அன்றைக்கு சீஷர்களோ, தங்களோடிருக்கும் பரிசுத்த ஆவியை உணராமல், தேவ வசனத்தை விசுவாசிக்காமல், இயேசுவின் உயிர்த்தெழுதலைக் கண்டும் நம்பாமல், மறுபடியும் தங்கள் உலகத் தொழிலுக்கே போனார்கள். காரணம், அவர்கள் செத்த ஆத்மாக்களாகி விட்டார்கள் (எபே.2:1). அவர்களை ஆதாமைப் போல ஜீவாத்மாவாக்க வேண்டும் என்று எண்ணி, அப்படி ஆக்கினால்தான் (அதாவது இரட்சிப்பின் நிலையிலிருந்தால்தான்) ஆவியினாலும் அக்கனியினாலும் ஞானஸ்நானம் பெறுவார்கள் என்று உணர்ந்து (மத்.3:11; அப்.1:8), அன்றைக்கு சீஷர்கள் மேல் ஊதினார். இன்றைக்கு நாம், அழைத்த அழைப்பில் தொடர்ந்து போக, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ள, அன்றுபோல் இயேசு வந்து ஊதமாட்டார். மாறாக, அவரது ஜீவனுள்ள வார்த்தைகளாலே நாம் ஊதப்படுகிறோம்; ஜீவாத்மாவாகிறோம்; பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்கிறோம்! அல்லேலூயா! இந்த ஊதுதலைத்தான் ஓதுதல் என்று இந்துக்களும் முஸ்லீம்களும் சொல்கிறார்கள். இப்படி ஊதியபோது அன்றைக்கு சீஷர்கள் பின்னிட்டு விழவில்லையே! பதிலாக, விசுவாசம் பெருகுகிறது. ஜீவாத்மாவானார்கள். அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவபிள்ளையே! **இப்படியாய் பின்னிட்டு விழ வைக்கும் கலாச்சாரம் பிசாசினுடையது;** எச்சரிக்கையாயிரு! கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக, பிசாசு செய்யும் மறைமுகமான பொல்லாத காரியமிது (மத்.24:24). இதிலே நீ லயித்து, மயங்கிவிட்டால், உன்னை மிகவும் சுலபமாய் பிசாசானவன் தன் வழிக்கு கொண்டு செல்ல எத்தணிப்பான்! அப்படியாய் பின்னிட்டு தள்ளி விழவைக்கும் பிசாசின் கிரியைகளையுடைய கள்ளக் கிறிஸ்துக்களை - அவர்கள் எவ்வளவோ பெரிய அற்புதங்கள், அடையாளங்கள் செய்தாலும் -

வசனத்தின்மூலம் எடைபோடு! வசனமே வழிகாட்டி! பரிசுத்தமுள்ள தேவ ராஜ்யத்தில் பரிசுத்தமாய் பழகு! என்றும் ஆனந்தமே!

❖ ❖ ❖

## நோவா, ஆபிரகாம் போன்றோரின் பலி எதற்கு?

வேதத்தின்படி, "காணிக்கை" (OFFERINGS) என்பதிலே பலி செலுத்துவதும் ஒருவிதமான காணிக்கையாகும். ஆதி.4:3-5ஐ வாசித்தால், ஆபேலும் காயீனும் காணிக்கை கொண்டு வந்தார்கள் என்று இருக்கும். எபி.11:4ஐ வாசித்தால், "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை செலுத்தினான். அவனுடைய காணிக்கை களைக் குறித்துதேவனே சாட்சி கொடுத்தார்" என்று உள்ளது. ஆக, காணிக்கைகளில் எல்லாம்பிரதானமானது "பலி" காணிக்கைதான் என்று அறிகிறோம். ஏன் பலிக்கு அவ்வளவு முக்கியத்துவம் வேதம் தருகின்றது? ஆவியானவரே விளக்குவாராக!

நியாயப் பிரமாண சட்டப்படி, சர்வாங்க தகனபலி (Burnt offering), பாவ நிவாரண பலி (sin offering), குற்றநிவாரண பலி (Trepass offering), போஜன பலி (Meat offering), சமாதான பலி (peace offering), போன்றபலிகள் உள்ளன. இவைகள் எல்லாமே, லேவி.17:11; 19:22; 4:16; யாத்.29:36; எபி.9:22 போன்ற பல வசனங்களின்படி, பாவநிவர்த்திக்காக - இரத்தம் சிந்துதலைக் குறிக்கிறது; அது வரப்போகும் மேசியாவைக் குறிக்கிறது (மத்.26:28; யோ.3:16). சர்வாங்க தகனபலியும், சமாதான பலியும் நாம் விரும்பி (voluntary) செய்ய வேண்டியதாகும். இவைகள் ஒன்றோடொன்று இரண்டறகலந்தவை. (மற்றவைகள் கட்டாயமானவை - compulsary). சர்வாங்க தகனபலியில், பலியிடுகிறவனும், பலிமிருகமும் ஒன்று என்றநிலை உருவாக்கப்படும். பலியான மிருகம்போல் பாவத்திற்கு மரித்து இரட்சிக்கப் பட்டவன், பரிபூரணமடைய வேண்டும்; அதற்கு நிழலாய்த்தான், பலியான மிருகம் தகனபலிபீடத்தில் வைத்து அக்கினியால் தகனிக்கப்படும். அதோடு போஜன பலியும் இணையும்போது, இரட்சிக்கப்பட்டவன், தேவனுக்கேற்ற சுகந்த வாசனையாய் மாறுகிறான் (எபி.5:2 in English with கலா.2:20; 5:24; ரோ.12:1). இவைகளோடு இணைந்த சமாதானபலி என்பது, "ஒப்புரவாக்குதலின் பலியாகும்". இந்தபலிமுறையில் ஆசாரியனுக்கும், பலி செலுத்துபவனுக்கும் பலியின் மாம்சம் கிடைப்பதற்கு அடையாளமாய் நாம் திருவிருந்து ஆசரிக்கிறோம் (யோ.6:53-56; மத்.26;26-29; 1 கொரி.1:23-26).

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னமேயே - அதாவது சீனாய் மலைக்கு முன்னமேயே - காணிக்கை, பலி செலுத்துதல், விருத்தசேதனம், தசமபாகம் போன்றபல காரியங்கள் அனுசரிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப் பின்பு, நியாயப்பிரமாணத்திற்கு முன்பிருந்த பலி செலுத்துதல், விருத்தசேதனம் போன்றவை ஒழிந்து போயிற்று என்றும், காணிக்கை, தசமபாகம் போன்றவைகளுக்கு மாற்று ஒன்றுமில்லாததால் தொடர்கிறது என்றும் அறிகிறோம்.

முதன்முதலில் ஆபேல் செலுத்திய பலி தகனபலி என்றே அறிகிறோம். எப்படியெனில் தேவனே அதை அங்கீகரித்தார் என்றால் (ஆதி.4:4) அது எப்படி? அப்படி அங்கீகரித்ததை, காயீனும் கண்டானென்றால் அது எப்படி? வானத்திலிருந்து அக்கினி வந்து அந்த பலியை பட்சித்திருக்கம் என்று நிதானிக்கிறோம். அப்படியே நோவா பேழையைவிட்டு இறங்கி வந்ததும், பலிபீடம் கட்டி, பலி செலுத்தினான். அதுவும் தகனபலிதான் (ஆதி.8:20). ஆபிரகாமும், மோரேயிலும், பெத்தேலிலும், மம்ரேயிலும் பலிபீடம்கட்டி, பலி செலுத்தினான் (ஆதி.12:7,8; 13:18). ஆதி.15ல், ஆபிரகாம் பலியிட்டான் (ஆதி.15:10,17) அதுவும் தகனபலிதான். இந்த மூன்று பலிகளும், இரத்தம் சிந்தப்பட்டதால் பாவ மன்னிப்புக்கென்றும், வரப்போகும் மேசியாவின் விலையேறப்பெற்ற இரத்தத்திற்கு நிழலாட்டமாய் விசுவாசித்து செய்யப்பட்டதென்றும், அதனாலேயே இம்மூவரும் எபி.11ல் விசுவாச வீரர்கள் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். இவர்கள் தகனபலியும் செலுத்தியதால், இவர்கள் தேவனுக்கேற்றசுகந்த வாசனையாய், பரிபூரண - பரிசுத்த - வாழ்க்கை வாழ்வார்கள் என்பதை உறுதிப்படுத்தி யிருக்கிறார்கள் என்றும், அதன்படியே நீதிமானாய் வாழ்ந்து மரித்தார்கள் என்றும் அறிகிறோம். அல்லேலூயா!

நோவாவின் தகனபலியிலும், ஆபிரகாமின் தகனபலியிலும் ஒரு விசேஷித்த காரியத்தை ஆவியானவர் நமக்கு விளக்குகிறார். இரண்டிலுமே தேவன் ஒரு உடன்படிக்கை பண்ணுகிறார். இந்த உடன்படிக்கைக்காக மட்டும் இவர்கள் பலி செலுத்தவில்லை என்றும் பாவ நிவாரணத்திற்காகவும், பரிசுத்த வாழ்விற்காகவும் அடையாளமாய் பலி செலுத்தினார்கள் என்றும் முதலில் அறிய வேண்டும். இந்த அடிப்படை காரியம் புரியாமல், தற்காலத்தில், தங்களை பெரிய ஊழியர்கள் என்று சொல்லிக் கொள்வோர் (?!) இயேசுவால் வரும் பாவ மன்னிப்பை. பரிசுத்தத்தை மறைக்கும் - மறுக்கும் - பிசாசின் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்! ஜாக்கிரதை! இது கடைசி காலம்! நோவா பலி செலுத்திய பிறகு, தேவன் இனி ஜலப்பிரளயத்தால்

அழிப்பதில்லை என்று உறுதியிட்டார் (ஆதி.8:21,22). அதுவும் பலியின் சுகந்த வாசனையை நுகர்ந்தபின்தான்! அல்லேலூயா! அதேபோல, ஆபிரகாம் காரியத்திலும் ஆதி.15:17ன் படி, அக்கினி ஜுவாலையால் தகனபலியாக்கப்பட்ட பிறகுதான், தேவன் ஆபிரகாமின் சந்ததிக்கு கொடுக்கப் போகும் கானான் தேச எல்லையையே உறுதிப்படுத்துகிறார் (ஆதி.15:18-21). ஆபிரகாம் தனக்கு சந்ததி வேண்டுமென்றுதான் கேட்டான்; அது வானத்து நட்சத்திரம் போலிருக்கும் என்றார்; அவன் விசுவாசித்து நீதிமானானான். பின்னும் அவர், இந்த தேசத்தை உனக்கு சுதந்திரமாய் தருவேன் என்று சொன்னதற்காகத்தான், அவனை பலி செலுத்த சொல்கிறார்; அதன்படியே அவன் கீழ்ப்படிந்து, பாவ மன்னிப்புக்கும் - பரிசுத்தத்திற்கும் - நிழலாய் பலி செலுத்தியதால், தேவன் தன் வார்த்தையை, தேச எல்லையோடு விவரித்துச் சொல்லி உறுதிப்படுத்துகிறார்! அல்லேலூயா!

இதை வாசிக்கும் தேவஜனமே! நியாயப்பிரமாண காலமோ, அதற்கு முற்பட்ட காலமோ, புதிய ஏற்பாட்டுக் காலமோ, எதுவாயிருந்தாலும், **நாம் விசுவாசித்து செயல்பட வேண்டியது;** (1) இயேசுவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் (1 யோ.1:7); பாவ மன்னிப்பின் நிச்சயமே பிரதானம் (2) பாவ மன்னிப்பு பெற்று இரட்சிக்கப்பட்டவன், தன் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் தகன பலியாக்கி, தேவனுக்கேற்றசுகந்த வாசனையாய் மாற்றவேண்டும் (கலா.5:24; 2:20; எபே.5:2 in English). அப்போதுதான் தேவன், நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் செய்வார் (எபே.3:20). நோவாவும், ஆபிரகாமும் நமக்கு சாட்சிகளாய் நிற்கிறார்கள். வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; அப்போதுதான் விடியற்காலத்து வெளிச்சமாம் இயேசுவின் ஒளி நம்மேல் விழும் (ஏசா.8:20). இயேசு சீக்கிரம் வருகிறார்! ஆயத்தமாவோம்!! ஆயத்மாக்குவோம்!!!

❖ ❖ ❖

**இயேசு சீக்கிரம் வருகிறார்!**
**ஆயத்தமாவோம்!!**
**ஆயத்தமாக்குவோம்!!!**

**இந்த மாத**
**"விசுவாச முழக்கம்"**
**வாசித்தீர்களா?**

## ஆசிரியரின் நூல்கள்

- தெரிந்து கொள்ளுங்கள் (பாகம் I & II)
- கருகலான சத்தியம் - பாகம் I
- கருகலான சத்தியம் - பாகம் II
- விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்! (பாகம் I & II)
- வியாதியா?! மரணமா?!
- கதைகள் அறுபது
- சிறுவர் வேதாகமப்பள்ளி (கதையும் பாடலும்)
- வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
- "இஸ்லாமியர்களின் கேள்விகள்"
- "உங்களுக்குத் தெரியுமா?"
- கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

**"End Time Deliverence Ministry Trust"**

Savings Bank Account no : 10372388517

State Bank of India, Chennai - 600 054.

(IFS Code : SBIN0004675)

(வங்கியில் அனுப்பிய உடனே எங்களுக்குத் தெரிவியுங்கள்)

# ஆசிரியரின் வெளியீடுகள்

## ஆராய்ச்சிப் புத்தகங்கள்

★ கருகலான சத்தியம் - பாகம் I
★ கருகலான சத்தியம் - பாகம் II
★ தெரிந்து கொள்ளுங்கள்
★ வியாதியா? மரணமா?
★ விசுவாசித்தேன்! ஆகையால் பேசுகிறேன்!
★ வெளியரங்கமாகாத தீர்க்கதரிசனங்கள்
★ கதைகள் அறுபது
★ சிறுவர் ஊழியம்
★ இஸ்லாமியரின் கேள்விகள்
★ உங்களுக்குத் தெரியுமா?
★ கள்ள உபதேசக்காரர்களின் கேள்விகள்

## பாடல் சி.டி

★ ஆடியோ : ரூ. 50; வீடியோ : ரூ. 75
★ (ஆடியோ சி.டி. Vol. I, II, IV, VI மற்றும் DVD சி.டி. Vol. III, V)

## தீர்க்கதரிசன விளக்கவுரைகள் DVD

★ வெளிப்படுத்தின விசேஷம் (3 சி.டி)
★ தானியேல் (3 சி.டி)
(ஒரு செட் ரூ. 200/-)

## கருத்தரங்கு செய்திகள் DVD (ஒவ்வொன்றும் ரூ. 75/-)

★ இனி சம்பவிக்கப் போகிறவைகள்
★ குரான் சொல்லும் ஈசா தேவனா?
★ இயேசு ஏன் வரவில்லை?
★ வேதம் விஞ்ஞானத்திற்கு ஒத்திருக்கிறதா?
★ ஆவியின் அபிஷேகமும் அக்கினி அபிஷேகமும்
★ கள்ள உபதேசமும் கள்ள தீர்க்கதரிசினமும்
★ மாறுபாடுள்ள சந்ததி எது?
★ வேதம் பற்றி முஸ்லீம்கள் சொல்வது சரியா?
★ குரானில் குளறுபடிகள் உண்டா?
★ வேதத்தில் குளறுபடிகளா? பொய்த்தகவல்களா?
★ இயேசுபற்றி முஸ்லீம்களின் கருத்தென்ன?

**அரை மணிநேர DVD செய்திகள்** (ஒவ்வொன்றும் ரூ. 50/-)

★ இயேசு வருவாரா?

★ அந்தி கிறிஸ்து எப்போது வெளிப்படுவான்?

★ எது தேவசித்தம்?

★ வியாதி தேவனின் சிட்சையா?

★ திரித்துவம் உண்டா?

★ அந்நிய பாஷை

★ எது ஆவிக்குரிய சபை?

★ படைப்பின் இரகசியம்

★ மரணத்திற்குப் பின் நிலை என்ன?

★ தெய்வீக சுகம்

★ எது விசுவாச ஊழியம்? எது விசுவாச வாழ்க்கை?

★ இயேசுவின் இரத்தம்

★ பண்டிகைகள் தேவையா?

★ வரமும், கனியும், வல்லமையும், அதிகாரமும்

★ ஆசீர்வாதமும், சாபமும், வாக்குத்தத்தமும், தண்டனையும்

★ இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானமா?

★ இயேசு சர்வவல்லமையுள்ள தேவனா?

★ சபைக்குள்ளே நிறைவேறுகிற - நிறைவேறப்போகிற தீர்க்கதரிசனங்கள்

★ நியாயப்பிரமாணம் ஏன் கொடுக்கப்பட்டது?

★ நிறைவேற வேண்டிய உடன்படிக்கைகள்

★ யார் அந்த இரண்டு சாட்சிகள்?

★ யார் அந்த 1,44,000 பேர்?

★ 70 வார தீர்க்கதரிசனம்

★ 2300 இராப்பகல் தீர்க்கதரிசனம்

❖ ❖ ❖

# வேதப் பொன்மொழிகள்

- ★ ஆட்களைப் பாராதே! ஆண்டவனைப்பார்!
- ★ வசனமுள்ள வாழ்வு வளமான வாழ்வு!
- ★ விசுவாசம் வெற்றியைத் தரும்
- ★ Where there is vision there will be provision
- ★ போதக சிட்சையே ஜீவ வழி
- ★ பரிசுத்தமாக்குவது வசனமே
- ★ கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
- ★ Have positive confession
- ★ பூமியிலே நூறத்தனை ஆசீர்வாதம் உண்டு
- ★ இரகசிய வருகைக்கு ஆயத்தமா?
- ★ வேதத்தை விதை! விளையச் செய்பவர் தேவன்
- ★ பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு
- ★ திக்கற்றவர்களையும், விதவைகளையும் விசாரிப்பதே மாசற்ற பக்தி
- ★ ஆசீர்வாதமும் சாபமும் மனிதனே சுதந்தரிக்க வேண்டும்
- ★ வாக்குத்தத்தம் ஒன்றல்ல; இரண்டல்ல; ஏராளம்
- ★ மூல உபதேசம் இல்லாத சபை கிறிஸ்தவ சபையல்ல
- ★ பரிசுத்த ஆவி பெற்றதற்கு அடையாளம் அந்நிய பாஷை

## நமது ஊழியங்கள்

1. "விசுவாச முழக்கம்" பத்திரிக்கை ஊழியம்
2. "விடுதலை கிறிஸ்துவின் சபைகள்"
3. "சேவியர் இறையியல் பயிலகம்" - பைபிள் காலேஜ் ஊழியம்
4. விசுவாசக் கருத்தரங்கு ஊழியம்
5. வசன விளக்கம் எப்போதும் (காலை 10 மணி முதல் இரவு 11 மணி வரை)
6. வெப்சைட், சி.டி. ஆராய்ச்சி புத்தகங்கள், Facebook, you tube, Whatsapp ஊழியம்
7. கஸ்தூரிபாய் ஆசிரமம்.

இன்னும் பல .......

## ஆசிரியர் அழைத்தால் வரத் தயார்

ஞாயிறு ஆராதனைக்கு...
வேதபாடம் நடத்த...
வசன விளக்கம் கொடுக்க...
சுவிசேஷக் கூட்டம் நடத்த
கருத்தரங்குகள் வைக்க...
முஸ்லீம்கள், இந்துக்கள், நாத்திகர்கள்
ஆகியோரோடு கலந்துரையாட...
பைபிள் காலேஜில் போதிக்க...
உபவாசம், முழு இரவு ஜெபம்
போன்ற எல்லா கூட்டங்களுக்கும்

## Rev. Dr. A. Xavier (Author)



## ஆசிரியரைப்பற்றி,,,,,,,

1951ம் ஆண்டு மே மாதம் 16ஆம் நாள், தமிழ்நாடு, திருச்சிமாவட்டம் மணப்பாறை அருகே உள்ள சின்ன உடையாபட்டி என்ற குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் ரோமன் கத்தோலிக்க சபையை சார்ந்த பெற்றோருக்குமகனாய் பிறந்தவர்தான் Rev. Dr. A. சேவியர்.

குழந்தை பருவம் முதல் பக்தியோடு வளர்க்கப்பட்டவர். B.Sc., (கணிதவியல்) படிப்பை திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் முடித்து. தொலைபேசி துறையில் பணியில் சேர்ந்து, படிப்படியாய் பதவி உயர்ந்து, டிவிஷனல் இன்ஜீனியராக ஆனார். கல்லூரியில் படிக்கும்போதே நாத்திகனாய் மாறி இயேசுவுக்கு எதிராளியாய் மாறினார். இந்நிலையில் நெல்லை மாவட்டம் குலசேகர பட்டினத்தை சார்ந்த C.S.Iசபை பெற்றோரின் மகள் கஸ்தூரிபாய் என்பவரை 16.06.1976 அன்று மணந்தார். பக்தியுள்ள மனைவியின் நடக்கையாலும், ஜெபத்தாலும், ஆசிரியருக்குள்ளே ஒரு மாற்றம் உருவானது.

1981–ல் நடந்த ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏற்பட்ட மூளை முறிவிலிருந்து 1985–ல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கிடைத்த விடுதலையால் ஒரு பெருத்த மாற்றம் உண்டாகி, 1986 நவம்பரில் இரட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய கிறிஸ்தவரானார். பெந்தகோஸ்தே சபையில் நுழைந்தவர்,செவென்த்டே அட்வென்டிஸ்ட் சபையினரால் ஈர்க்கப்பட்டு சபை மாறியதால் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்து, அந்த சபையிலிருந்து வெளியேறி, ஆவிக்குரிய விசுவாசியாய் மாறினார். விசுவாச விதையை தமிழகத்தில் விதைத்த தேசத்தின் தீர்க்கதரிசி ஜஸ்டின் பிரபாகரனின் போதனையால் விசுவாசத்தில் பெலப்பட்டு, ஊழியத்தில் நுழைந்தார். அநேக குக்கிராமத்தில் சுவிசேஷ ஊழியம் செய்தார். டிராக்ஸ் ஊழியம், தெருப்பிசங்கம், “எப்போதும் வசன விளக்கம்” போன்றவையெல்லாம் இவருக்கு தேவன் தந்த வரம். மிகவும் சிறிய சபைகளுக்கும் சென்று சத்தியத்தை பரப்பினார். “கடைசிகால விடுதலை முழக்கம்” என்ற மாத இதழை ஆரம்பித்து அதன்பின் “வசன முழக்கம்” என்ற பத்திரிக்கையை நடத்தினார். “விசுவாசம் வெற்றியைதரும்” என்ற தாரக மந்திரத்தை போதித்தார். வாரந்தோறும், மாதந்தோறும், வருடந்தோறும், சென்னையிலும், மாவட்ட தலைநகரங்களிலும் கருத்தரங்குகள் நடத்தி கிறிஸ்தவ சபைகளில் பெரிய எழுப்புதலை உருவாக்கினார். எந்த ஊழியத்திற்கும் யார் அழைத்தாலும் எதையும் பார்க்காமல் உடனே ஒத்துக்கொள்ளும் சுபாவம் உள்ளவர். தேவனின் தரிசனப்படி கஸ்தூரிபாய் ஆசிரமம், சேவியர் இறையியல் பயிலகம், விடுதலை கிறிஸ்துவின் சபை, விசுவாச கருத்தரங்குகள், ஊழியர் கருத்தரங்குகள், மற்றும் இணையதளம், தொலைக்காட்சி, முகப்புத்தகம் போன்ற பல ஊடகங்கள் மூலம் இணைந்து ஊழியம் செய்து வருகிறார். தற்போது “விசுவாச முழக்கம்” என்ற மாதஇதழ் கௌரவ ஆசிரியராகி ஒரு வசனப்புரட்சி செய்து வருகிறார். அன்னாரின் ஊழியம் விரிந்து பரவ அநேக ஆத்துமாக்களை வருகைக்காய் ஆயத்தமாக்க ஜெபியுங்கள்.


endtime deliverance ministry

endtimetrust xavier

9444979822

revdrxavier@gmail.com